# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து
நடைமுறைப்படுத்துவதற்கானது)

## தரம் 13



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
www.nie.lk

# வரலாறு

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 13

**(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**சமூக விஞ்ஞானத்துறை**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**
**இலங்கை**

**இணையத்தளம்: www.nie.lk மின்னஞ்சல் : info@nie.lk**

**வரலாறு**
தரம் - 13
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2018

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :***
***தேசிய கல்வி நிறுவகம்***

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி, கலாநிதி மாபுள்கொட சுமணரதன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக்குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

கல்விசார் அலுவல்கள் சபை — தேசிய கல்வி நிறுவகம்

**பாட ஒருங்கிணைப்பு**

டீ.எச்.சந்திமா நிஷானி தர்மபால — சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

**பாடநிபுணத்துவ சேவை**

| | |
|---|---|
| பேராசிரியர் ஹங்குரன்கெத்த தீரானந்த தேரர் | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர். மாலனி அந்தகம | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். இந்திராணி முணசிங்க | கொழும்பு பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். யூ.பீ. கருணானந்த | களனிப் பல்கலைக்கழகம் (தகைசார் பேராசிரியர்) |
| பேராசிரியர். கே.எம்.பீ. குலசேகர | களனிப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர். எம். சோமதிலக | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| பேராசிரியர். பத்மசிரி கன்னங்கர | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் |
| கலாநிதி. என்.ஆர். தேவசிறி | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி. ஆர். தசநாயக | பேராதனைப் பல்கலைக்கழகம் |
| கலாநிதி. ஏ. தேவிவித்தியாலங்கார | கொழும்புப் பல்கலைக்கழகம் |
| விரிவுரையாளர் ஆர்.எம். சத்தியகுமார் | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |

**எழுத்தாளர் குழு (வெளிவாரி)**

| | |
|---|---|
| அருட் சகோதரி மேரி டொனேட்டா | அதிபர் சேவை (ஓய்வு நிலை) புனித அந்தோனியார் தேசிய பாடசாலை, வத்தளை |
| திருமதி. ஆர்.டபிள்யூ.எஸ். தால எதிரிவீர | ஆசிரியர் சேவை (ஓய்வு நிலை) |
| திருமதி. டபிள்யூ.டீ.கே.டீ. பிட்டிகல | அதிபர் சேவை (ஓய்வு நிலை) |
| திருமதி. நந்தா மனம்பேரி | ஆசிரியர் சேவை (ஓய்வுநிலை) |
| திரு. யூ.எல்.என். பசீர் | ஆசிரியர் சேவை (ஓய்வு நிலை) |
| திரு. யூ.எல். சிபார்தீன் மரிக்கார் | சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் வலயக் கல்விப் பணிமனை, வத்தேகம |
| திரு.பீ.எல்.ஏ.யூ.ஜி. பெரேரா | சதர்வோதய பிரிவெனா, தேவாலகம |
| திரு. எச்.எம். நளின் பண்டார | ஆசிரியர் சேவை, குருவிட்ட மத்திய மகா வித்தியாலயம், குருவிட்ட |
| திரு. ஜீவன சுரங்க கமகே | வலல்லாவிட்ட மகாவித்தியாலயம் |
| திரு. சமந்த பியதாச | ஸ்ரீபுத்த ஜயந்தி மத்திய கல்லூரி, பலாங்கொடை |

**நிகழ்ச்சித்திட்டக் குழு**

திருமதி. டீ.எச்.சீ. நிஷானி தர்மபால - சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை
திருமதி. டபிள்யூ.எஸ்.எஸ். குணவர்தன - உதவி விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை

**மொழிச் செம்மையாக்கம்**

திரு. த. முத்துக்குமாரசுவாமி — தேசிய கல்வி நிறுவகம்

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைக் கலைத்திட்டத்தில் மையப்பாடங் களுள் ஒன்றாக இருந்துவரும் வரலாறு எனும் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-9 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகளும் 10-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு மூன்று பாடவேளைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10-11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காகத் தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக இருபத்து மூன்று தேர்ச்சிகளின் கீழ் வரலாற்றுப்பாடக் கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப் பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டி பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'வரலாறு' எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும் போது பாடங்களும், அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இது தொர்பாக ஆசிரியரின் பணி/ கருமங்களை இலகுபடுத்தும் பொருட்டு, பாடத்திட்டத்தின் இரு பகுதிகள் உள்ளடங்குமாறு மாதிரிச் செயற்பாடுகள் இங்கு தரப்பட்டுள்ளன. தமது ஆக்கியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவையின்படி, இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். வரலாறு எனும் இப்பாடத்தின் குறிக்கோள்களை அடையத்தக்க வகையில் குறைந்த பட்சம் 50 சதவீதமேனும் செயன்முறைச் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் பாடங்களைப் பயில்வதில் மாணவரை வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

அதற்கமைய 'வரலாறு' எனும் பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க, புதிய உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இது தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும், முன்மொழிவுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் வேண்டுகிறோம்.

**- கலைத்திட்டக்குழு -**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | v |
| கலைத்திட்டக்குழு | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | vii |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | ix - xxxviii |
| **கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்** | |
| இலங்கை வரலாறு | 1 - 78 |
| இந்திய வரலாறு | 79 - 140 |
| ஐரோப்பிய வரலாறு | 141 - 201 |
| உலக வரலாறு | 202 - 261 |

# வரலாறு

# பாடத்திட்டம்

# தரம் 13

**(2018 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

**சமூக விஞ்ஞானத்துறை**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மஹரகம**

## அறிமுகம்

2018 புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பின் கீழ் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைக்குரிய வரலாறு பாடப் பாடத்திட்டம், நான்கு பகுதிகளைக் கொண்டது.

- இலங்கை வரலாறு (பண்டு தொட்டு கி.பி. 1978 வரையில்)
- இந்திய வரலாறு (பண்டு தொட்டு பிரித்தானியர் ஆட்சி முடிவு வரையில்)
- ஐரோப்பிய வரலாறு (கிரேக்க, உரோம நாகரிக காலத் தொடக்கம் கி.பி 1989 வரையில்)
- நவீன உலக வரலாறு (கி.பி. 1500 தொடக்கம் கி.பி. 1989 வரையில்)

இலங்கையின் தற்போதைய நிலையைக் கருதுகையில் பண்டு தொட்டுத் தனிமையாகவன்றி, பல்வேறு பூகோளத் தாக்கங்களுக்கு உட்பட்டவாறு சுதேசத்துவமடைந்து போசிப்புப் பெற்று வளர்ச்சியடைந்துள்ளமையைக் காண முடிகின்றது. அவ்வாறான போக்குகளையும் அவற்றின் தாக்கங்களையும் இனங்காண்பதற்காக இலங்கை வரலாற்றுடன் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, நவீன உலக வரலாறு ஆகிய பாடவிடயங்களும் க.பொ.த. உயர்தர வரலாற்றுப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.



க.பொ.த. உயர்தர வரலாறு பாடத்தைத் தெரிவு செய்யும் மாணவர்க்குக் கட்டாயமாக இலங்கை வரலாறு எனும் பகுதியைப் பயில வேண்டும். அத்துடன் இந்திய வரலாறு, ஐரோப்பிய வரலாறு, நவீன உலக வரலாறு ஆகிய மூன்று பகுதிகளுள் ஒன்றைத் தமது விருப்புக்கேற்பத் தெரிவு செய்து கொள்ளலாம்.

2017 இல் நடைமுறைக்கு வரும் இப்பாடத்திட்டத்திற்கமைய கற்றல் கற்பித்தற் செயன்முறையையும் விடய உள்ளடக்கம் தொடர்பான குறிக்கோள்களை அடைதலையும் இலகுபடுத்துவதற்காக கற்றற் பேறுகள் வகுக்கப்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றைக் கட்டியெழுப்பும் போது அது சார்ந்த பூகோள போக்குகள் இனங்காணப்பட்டதோடு வரலாறு தொடர்பாக அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டவிதத்துக்கமைய, விடய உள்ளடக்கத்தில் சிற்சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

**இலங்கை வரலாறு:**

- வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடர்பாக, முன்னைய பாடத்திட்டத்தின் இருந்ததைவிட கூடுதலான அளவு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.
- மூலாதார வகைப்பாட்டிற்காக சமகால விதந்துரைப்புக்கள் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன.
- புதிய பாடத்திட்டத்தில் எமது பண்டைய தொழினுட்பம் எனும் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது.

**இந்திய வரலாறு:**

- முன்னைய பாடத்திட்டத்தில் கி.பி. 1206 வரையிலேயே கவனஞ் செலுத்தப்பட்டது. புதிய பாடத்திட்டத்தில் இந்திய சுதந்திரம் வரையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த இந்திய வரலாற்றின் அண்டிய இலங்கை மீது செல்வாக்குச் செலுத்திய நிகழ்வுகள் தொடர்பாகக் கூடுதலான கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**ஐரோப்பிய வரலாறு:**

- பூகோள ரீதியில் செல்வாக்குச் செலுத்திய, பூகோளச் சக்திகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**நவீன உலக வரலாறு:**

- உலகில் இடம்பெற்ற பூகோள ரீதியான போக்குகள் குறித்துக் கூடுதலான கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

இப்பாடத்திட்டம் 12 ஆம், 13 ஆம் தரங்களுக்குரியது. அதற்கமைய அந்தந்தத் தரத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக விடய உள்ளடக்கத்தை ஒழுங்குபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்கு தனிநபருக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும், தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

i. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

ii. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

iii. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

iv. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

v. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

vi. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

vii. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

viii. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

## (I) தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



## (II) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

## (III) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV). வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**(V). சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்



**(VI).ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

**(VII)"கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(மூலம் : தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003)

## வரலாறு - பாட நோக்கங்கள்

6 ஆம் தரத்திலிருந்து 13 ஆம் தரம் வரை கலைத்திட்டத்தினைக் கற்பதன் மூலம் கீழ்வரும் நோக்கங்களை மாணவர்கள் அடைவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. வரலாற்றுப் போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல்.
2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதன் மூலம் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும்.
3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல்.
4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல்.
5. ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல்.
6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல்.
7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல்.
8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல்.
9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல்.
10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல்.

# தேசிய பொது இலக்குகளுக்கும் பாட குறிக்கோள்களுக்குமான தொடர்பு

| பாட குறிக்கோள்கள் | தேசிய பொது இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | **i** | **ii** | **iii** | **iv** | **v** | **vi** | **vii** | **viii** |
| 1. வரலாற்றுப் போக்கு, வளர்ச்சி என்பன பற்றி விளங்கி வரலாறெங்கிலும் இடம்பெற்ற மாற்றங்களைப் புரிந்து கொள்ளல். | √ | √ | √ | | | | √ | |
| 2. கடந்தகாலம் தொடர்பாகப் பயிலுவதன் மூலம் பெறும் விளக்கத்தின் அடிப்படையில் நிகழ்காலத்தைப் புரிந்துகொள்ளலும் எதிர்கால நிலைமைகளைக் கண்டறிதலும். | √ | √ | √ | | | √ | √ | |
| 3. தேசிய தனித்துவத்தினை இனங்கண்டு, தேசிய அருஞ்செல்வங்களைப் பாதுகாத்து நாட்டுப்பற்றுள்ள பிரசையாக உருவாதல். | √ | √ | √ | | | | | √ |
| 4. தேசிய பிரச்சினைகளை ஒப்பீட்டு ரீதியாக நோக்குதல். | √ | √ | √ | | | | | |
| 5. ஏனைய கலாசாரங்களுக்கு மதிப்பளித்தல். | √ | √ | √ | | | | | |
| 6. கால ஒழுங்கு, மூலாதார விமர்சனம், காரண காரியத் தொடர்புகள் என்பன மூலம் கட்டி எழுப்பப்படும் பகுத்தறிவு ரீதியான கல்வியறிவை நடைமுறை வாழ்க்கையில் பயன்படுத்துதல். | | | | | √ | | | |
| 7. முக்கிய வரலாற்று மாந்தர்களின் சரிதைகளை முன்மாதிரியாகக் கொள்ளல். | | | | | √ | | | |
| 8. வரலாற்று ரீதியான உலகப் போக்குகள் இந்நாட்டு வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பாக விளங்கி உலகின் போக்குகளை எதிர்கொள்ளும் ஆற்றலைப் பெறல். | √ | √ | √ | | | | √ | |
| 9. காலம், வெளி ஆகியன தொடர்பான அறிவை வளர்த்துக் கொள்ளல். | | √ | | | | | | |
| 10. வரலாற்றுத் தகவல்களின் ஊடாக இடங்களை அறிந்து கொள்ளல். | | √ | | | | | | |

## பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைகளுக்கமைய வகுத்துக் கொள்வதற்கான உத்தேச திட்டம்

| தரம் | தவணை | இலங்கை வரலாறு | இந்திய வரலாறு | ஐரோப்பிய வரலாறு | நவீன உலக வரலாறு |
|---|---|---|---|---|---|
| 12 | தவணை 1 | 1.1, 1.2, 1.3, 2.1, 2.2, 3.1, 3.2, 4.1, 4.2, 4.3, 5.1 | 1.1, 2.1, 2.2, 3.1 | 1.1, 2.1 | 1.1, 1.2, 1.3, 2.1 |
| | தவணை 2 | 5.2, 5.3 | 4.1, 5.1 | 2.2, 3.1, 3.2, 3.3, 4.1, 4.2 | 3.1, 3.3, 3.4, 4.1 |
| | தவணை 3 | 6.1, 6.2, 6.3 | 5.1, 6.1 | 5.1, 6.1, 6.2, 7.1 | 5.1, 6.1, 7.1 |
| 13 | தவணை 1 | 7.1, 7.2, 8.1 | 7.1, 8.1 (முதல் பகுதி இரண்டும்) | 8.1, 9.1, 9.2, 10.1 | 8.1, 9.1, 9.2 |
| | தவணை 2 | 9.1, 10.1 | 8.1 (பகுதி இரண்டு), 9.1 | 11.1, 12.1, 13.1 | 10.1 |
| | தவணை 3 | 11.1, 11.2, 11.3 | 10.1, 11.1, 11.2 | 13.2, 14.1, 14.2 | 11.1, 12.1 |


xvi

# பாடத்திட்டம்

# தரம் 13

## க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டம்
## இலங்கை வரலாறு (ஆதி காலம் தொடக்கம் கி.பி. 1978 வரை)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் போக்குகள் என்பன தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 7.1 இறுதி சுதேச இராசதானி பற்றி நுணுகியாய்வார். | 7. 16 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை இலங்கை<br>7.1 கண்டி இராசதானி | • கண்டி இராசதானியின் ஆரம்பமும் வளர்ச்சியும் பற்றி விபரிப்பார்.<br>• கண்டி இராசதானியின் முக்கிய ஆட்சியாளர்களைப் பாராட்டுவார்.<br>• கண்டி இராசதானியின் வரலாற்று ரீதியான இடங்களை இலங்கைப் படமொன்றில் குறிப்பார். | 30 |
| | 7.2 கரையோரப் பிரதேசத்தில் போர்த்துக்கேயரதும், ஒல்லாந்தரதும் செயற்பாடுகளைத் தேடியறிவார். | 7.2 கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆட்சி | • கரையோரப் பிரதேசங்களைப் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் கைப்பற்றிய விதத்தை விபரிப்பார்.<br>• கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயரதும் ஒல்லாந்தரதும் ஆட்சியை விபரிப்பார்.<br>• போர்த்துக்கேயரினதும் ஒல்லாந்தரினதும் கட்டுப்பாட்டின்கீழ் இருந்த பிரதேசங்களை இலங்கைப்படத்தில் குறித்துக்காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 8.0 இலங்கையில் வெளிநாட்டவரின் ஆதிக்கம் தொடர்பாகக் கற்றறிந்து தமது நாட்டின் இறைமையைப் பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பார். | 8.1 பிரித்தானியரது ஆட்சி இலங்கையில் நிலை நாட்டப்பட்ட விதத்தைத் தெளிவுபடுத்துவார். | 8. இலங்கையில் பிரித்தானியரது ஆட்சியதிகாரம் நிறுவப்படல்<br>8.1 அதிகாரத்தினை நிலை நாட்டல்<br>• 1796 ஆம் ஆண்டு கரையோரப் பிரதேசங்கள் கைப்பற்றப்படல்<br>• 1815 ஆம் ஆண்டு கண்டி இராச்சியம் கைப்பற்றப்படல்<br>• 1818 ஆம் ஆண்டு சுதந்திரப் போராட்டம்<br>• 1833 கோல்புறுாக் சீர்திருத்தம்<br>• 1848 சுதந்திரப் போராட்டம் | • பிரித்தானியரது ஆட்சி இலங்கையில் நிறுவப்பட்டமைக்கு ஏதுவாகிய காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• சுதேசிகளின் எதிர்ப்புக்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் பகுத்தாய்வார்.<br>• இறைமையைப் பாதுகாக்கத் தோள்கொடுத்த சுதேசத் தலைவர்களைப் பாராட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 வெளிநாட்டுப் பண்பாட்டுப் பிரவாகங்கள், சுதேச சமூகத்தினர் இணைந்த விதம் பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார். | 9.1 பிரித்தானியரது ஆட்சியின் கீழ் இலங்கைச் சமூகத்தில் இணைந்த புதிய அம்சங்களைத் தெளிவுபடுத்துவார். | 9. பிரித்தானியரின்கீழ் பொருளாதார, சமூக மாற்றங்கள் (1948 வரை)<br>9.1 பொருளாதார, சமூக மாற்றங்கள்<br>• பெருந்தோட்டப் பொருளாதார வளர்ச்சி<br>• போக்குவரத்தும் தொடர்பாடலும் சாதனங்களும்<br>• உள்நாட்டுக் கைத்தொழில்கள்<br>• கல்வி<br>• சமூக மாற்றங்கள் | • பிரித்தானியரின்கீழ் இந் நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• பிரித்தானியரது பொருளாதாரத்திற்கு அமைய இந்நாட்டுச் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றத்தை எடுத்துக் காட்டுவார்.<br>• பிரித்தானியரது பொருளாதார நடவடிக்கைகளால் இந்நாட்டுப் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் ஏற்பட்ட சாதகமான மாற்றங்களை மதிப்பார்.<br>• பிரித்தானியரது பெருளாதாரச் செயற்பாடுகள் காரணமாக மங்கிய சுதேச தனித்துவம் பற்றி எடுத்துக் காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 9.2 வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் தேசியத் தலைவர்கள் செயற்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவார். | 9.2 சுதேச சமய, பண்பாட்டு எழுச்சி | • உள்நாட்டுச் சமய, கலாசார எழுச்சியைத் தெளிவுபடுத்துவார்.<br>• நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாக்கத் தோள்கொடுத்த தலைவர்களை மதிப்பார்.<br>• வெளிநாட்டுச் சக்திகளின் முன்னிலையில் நாட்டின் தனித்துவத்தைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுத்தல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுவார். | |
| 10.0 இலங்கையில் வெளிநாட்டு ஆதிக்கம் தொடர்பாகக் கற்றறிந்து தமது இறைமையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 10.1 பிரித்தானியரின் ஆட்சி மற்றும் சுதேசத் தலைவர்களின் செயற்பாடுகள் பற்றி நுணுகியாய்வார். | 10. அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களும் தேசிய இயக்கங்களும்<br>• 1910, 1920, 1924 அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்கள்<br>• டொனமூர் அரசியலமைப்பு<br>• சோல்பரி அரசியலமைப்பு<br>• சுதந்திரம் பெறல் | • பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் இடம்பெற்ற அரசியல் சீர்திருத்தங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• அரசியல் சீர்திருத்தங்களின் பின்னர் இலங்கையின் தேசிய இயக்கத்தின் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• வெளிநாட்டு ஆதிக்கத்தின் முன் உள்நாட்டுத் தலைவர்கள் செயற்பட்ட விதத்தினை எடுத்துக்காட்டுவார். | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0 இலங்கை வரலாற்றின் அரசியல் வளர்ச்சி மற்றும் போக்குத் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார். | 11.1 இறைமையுள்ள ஓர் அரசுக்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அரசியல் யாப்புகளை நுணுகியாய்வார். | **11. சுதந்திரத்தின் பின் இலங்கை**<br>11.1 அரசியல் யாப்பின் வளர்ச்சி<br>- 1972<br>- 1978 | • 1972, 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்புகளை விபரிப்பார்.<br>• 1972, 1978 ஆம் ஆண்டு யாப்புகளைத் தர்க்க ரீதியாகப் பகுப்பாய்வு செய்வார். | 60 |
| | 11.2 இறைமையுள்ள ஓர் அரசாகத் தேசிய முன்னேற்றத்தின் பொருட்டு நடைமுறைப்படுத்திய கொள்கைகள் மற்றும் வேலைத்திட்டங்களை நுணுகியாய்வார். | 11.2 அபிவிருத்திச் செயற்பாடு<br>• பொருளாதார அபிவிருத்தி<br>- அரச முயற்சியாண்மைகள்<br>- விவசாயம்<br>- கைத்தொழில்கள்<br>• சமூக நலனோம்பல்<br>- கல்வி<br>- சுகாதாரம்<br>- பங்கீட்டு முறை<br>- தொடர்பாடல் | • சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி உத்திகளை விபரிப்பார்.<br>• சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைப் பாராட்டுவார்.<br>• அபிவிருத்தி உத்திகளின் விளைதிறனைப் பகுத்தாய்வார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
| --- | --- | --- | --- | --- |
| | 11.3 இறைமையுள்ள ஓர் அரசு என்ற வகையில் வெளிநாட்டு அரசுகளுடன் செயற்பட்ட விதம் பற்றி விசாரனை செய்வார். | 11.3 வெளிநாட்டுக் கொள்கை | • சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையைப் பகுத்தாய்வார்.<br>• இலங்கையானது வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்த்தமைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• இலங்கையுடன் நட்புறவைப் பேணிய நாடுகளை உலகப் படத்தில் குறித்துக் காட்டுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 7.0 இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 7.1 இந்திய வரலாற்றில் வெளிநாட்டு அரசுகள் ஏற்படுத்திய தாக்கங்கள் தொடர்பான தகவல்களைப் பகுத்தாய்வார். | 7. **பிந்திய மௌரிய யுகமும் வெளிநாட்டு அரசியல் தாக்கமும்**<br>• சுங்கத் தலைமுறை<br>• இந்தோ-கிரேக்க சாகர், பல்லவர் ஆட்சியும் அவர்களது பண்பாடும்<br>• குஷாண யுகமும் இந்திய வரலாற்றிற்கு அவர்களது பங்களிப்பும்<br>• சாதவாகன யுகமும் அவர்களது பண்பாடும் | • இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய வெளிநாட்டு அரசுகள் தொடர்பான தகவல்களை விபரிப்பார்.<br>• வெளிநாட்டு அரசுகளின் தாக்கங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• மௌரியருக்குப் பிற்பட்ட காலத்தை தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 40 |
| 8.0 இந்திய வரலாற்று வளர்ச்சி போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 8.1 இந்திய வரலாறு கட்டியெழுப்பப்படுவதில் குப்த பேரரசின் பங்களிப்பைப் பகுத்தாய்வார். | 8. குப்த பேரரசின் தோற்றம்<br>• குப்த பேரரசின் பரம்பல்<br>• குப்த ஆட்சியாளர்களின் செயற்பாடும் இந்திய மானிட சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும்<br>• குப்தர் கால சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள்<br>• குப்த பேரரசின் வீழ்ச்சியும் ஹூணர்களின் ஆக்கிரமிப்பும் | • குப்த பேரரசின் தோற்றம் அதன் எழுச்சி, வீழ்ச்சி என்பவற்றை விபரிப்பார்.<br>• குப்தர்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் இந்திய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• குப்த பேரரசின் பரவலைத் தேசப்படத்தில் குறிப்பார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 இந்திய வரலாற்றின் வரலாறு ரீதியான போக்குகள் என்பன வளர்ச்சி தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 9.1 குப்த பேரரசின் பின்னர் பிரதேச ஆட்சி அதிகாரம் வளர்ச்சியடைந்த விதத்தினை எடுத்துக் காட்டுவார். | **9. குப்த காலத்திற்குப் பின்னர் வட இந்தியாவின் அரசியல் போக்குகள்**<br>• பிரதேச அதிகாரம் மீண்டும் தோற்றம் பெறல்<br>- கன்னோசியின் அதிகார வளர்ச்சி<br>- ஹர்ஷவர்த்தன மன்னன்<br>• பிரதேச அரசியல் அலகுகளின் அதிகாரம் மீண்டும் நிறுவப்படல்<br>• பாலர், கூர்ஜர பிரதிகாரர், இராஷ்ரகூடர் ஆகியோரின் ஆட்சி அதிகாரமும் கன்னோசியும்<br>• பிரதேச அரசுகளின் கீழ் அப்பிரதேசங்களில் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நடவடிக்கைகள் | • குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் இருந்த வலிமை வாய்ந்த பிரதேச அரசுகள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.<br>• பிரதேச அரசுகள் இந்திய வரலாற்றில் ஏற்படுத்திய தாக்கத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட கால இந்தியாவை இந்தியத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 10.0 இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் என்பன தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 10.1 இந்தியாவில் பாரிய மாற்றம் ஏற்படுவதற்கு முஸ்லீம்களின் ஆக்கிரமிப்பு அடிப்படையாக அமைந்த விதத்தினை விபரிப்பார். | **10. அராபியர்களதும், துருக்கியர்களதும் ஆக்கிரமிப்பும் இந்திய அரசியலும்**<br>• அராபிய, துருக்கிய ஆக்கிரமிப்பு<br>• சமகால இந்தியாவின் அரசியல் நிலை | • இந்தியா மீதான அராபிய - துருக்கிய ஆக்கிரமிப்புக்களை விபரிப்பார்.<br>• அராபிய - துருக்கிய ஆக்கிரமிப்புக்கள் இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய விதத்தினை எடுத்துக் காட்டுவார்.<br>• அராபியரும், துருக்கியரும் கைப்பற்றிய பிரதேசங்களை இந்திய தேசப் படத்தில் குறித்துக்காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0 இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் என்பன தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 11.1 தென்னிந்திய பிரதேச அரசுகள் இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | **11. தென்னிந்திய அரசியல் பின்னணி**<br>11.1 தென்னிந்திய அரசியல்<br>• அரசியல் செயற்பாடுகள் ஆரம்பமாதல்<br>• பல்லவ, பாண்டிய, சோழ, சாளுக்கிய ஆட்சியாளர்களின் கீழ் இந்தியாவின் புதிய போக்குகள்<br>• தென்னிந்திய சமூக, பொருளாதார, பண்பாட்டு இயல்புகளும் அவற்றின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியவைகளும் | • தென்னிந்தியாவின் எல்லைகளையும் பிரதேச அரசுகளையும் தேசப்படத்தில் குறிப்பார்.<br>• தென்னிந்திய அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலைமைகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• தென்னிந்தியாவின் போக்குகள் இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய விதத்தினை விபரிப்பார். | 20 |
| | 11.2 தென்னிந்திய அரசியல் நிலைமை இலங்கை மீது தாக்கம் செலுத்திய விதத்தினைப் பகுத்தாய்வார். | **11.2 தென்னிந்தியாவும் இலங்கையும்**<br>• தென்னிந்தியாவின் தாக்கமும் இலங்கையும் | • இலங்கை மீது தென்னிந்தியா தாக்கம் செலுத்தியமைக்கான காரணங்களை எடுத்துக் கூறுவார்.<br>• இலங்கை மீது தாக்கம் செலுத்திய அரசுகளையும் அவற்றின் தாக்கங்களையும் விபரிப்பார். | |

# ஐரோப்பிய வரலாறு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 8.0 முக்கியமான வரலாற்று நபர்களின் வீர செயற்பாடுகள் வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த விதத்தினைப் பரீட்சிப்பார். | 8.1 நெப்போலியனின் சீர் திருத்தங்கள் பிரான்சின் தேசியத்தைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்புச் செய்த விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | **8. நெப்போலியன் போனபாட்டும் அவரது பேரரசும்**<br>• நெப்போலியன் பிரான்சின் அதிகாரம் பெறல்<br>• நெப்போலியனின் சீர் திருத்தங்கள்<br>• நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கையும் பிரான்சின் அதிகாரப் பரம்பலும்<br>• நெப்போலியன் தோல்வி அடைந்தமைக்கான காரணங்கள் | • நெப்போலியன் வலிமை வாய்ந்த பேரரசைக் கட்டியெழுப்பிய விதத்தை விபரிப்பார்.<br>• பலம் வாய்ந்த பேரரசு வீழ்ச்சியுறுவதற்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• நெப்போலியனது பேரரசைத் தேசப்படமொன்றில் அடையாளமிடுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 ஐரோப்பாவின் அதிகார சமநிலையைப் பாதுகாக்கும் பொருட்டு இனங்களுக்கிடையே ஒற்றுமை நிலவ வேண்டியதன் முக்கியத்துவத்தை விமர்சிப்பார். | 9.1 ஐரோப்பாவில் சமாதானம் நிலவச் செய்வதில் வியன்னா மகா நாட்டின் பங்களிப்பினைப் பரீட்சிப்பார்.<br><br>9.2 பல்வேறு குழுக்கள் ஒன்றிணைந்து ஒற்றுமையுடன் செயற்படுவதன் முக்கியத்துவத்தை விமர்சிப்பார். | 9. வியன்னா மகாநாடு<br>• வியன்னா மகாநாடு அறிமுகம்<br>• வியன்னா மகாநாட்டைக் கூட்டுவதற்கான காரணங்கள்<br>• வியன்னா மகாநாடு பின்பற்றிய செயற்பாடுகள்<br>• வியன்னா மகாநாட்டின் விளைவுகள் | • ஐரோப்பாவின் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கு வியன்னா மகாநாடு மேற்கொண்ட நடவடிக்கைகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மகாநாட்டின் முக்கித்துவத்தினைத் தர்க்க ரீதியாகத் தெளிவுபடுத்துவார்.<br>• வியன்னா மகாநாட்டின் பின்னர் இருந்த ஐரோப்பாவைத் தேசப்படமொன்றில் குறிப்பார். | 15 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 10.0 நவீன உலகில் பல்வேறு அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் செயற்பட்ட விதத்தினைப் பரீட்சிப்பார். | 10.1 லிபரல் வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் வளர்ச்சியினைத் தெளிவுபடுத்துவார்.<br><br>லிபரல் வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் சிந்தனைகளை நடைமுறையில் செயற்படுத்திய விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | **10. தாராண்மை வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் வளர்ச்சி**<br>• தாராண்மை வாத, தேசிய வாத சிந்தனைகளின் வளர்ச்சி<br>• தாராண்மை வாத, தேசிய வாத இயக்கங்களின் வளர்ச்சி<br>• 1848 புரட்சி<br>• சக்திகள்<br>• இத்தாலிய ஐக்கியம்<br>• ஜேர்மனிய ஐக்கியம் | • அரசியல் சிந்தனையின் வளர்ச்சியுடன் புரட்சிகரச் சக்திகள் வெளிப்பட்ட விதத்தினை விவரிப்பார்.<br>• லிபரல்வாத, தேசிய வாத அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் பயன்பட்ட விதத்தினை எடுத்துக் காட்டுவார். | 25 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0 உலக யுத்தங்களின் அழிவுகளை விளங்கிக் கொண்டு சமாதானம் நிலவச் செய்திட நடவடிக்கை எடுப்பார். | 11.1 முதலாம் உலக யுத்தம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br><br>11.2 உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் முயற்சியாக அமைப்பொன்றினைத் தோற்றுவிப்பதன் அவசியம் | **11. முதலாம் உலக யுத்தம்**<br>• யுத்தத்திற்கான காரணங்கள்<br>• யுத்தத்தின் முக்கிய கட்டங்கள்<br>• விளைவுகள்<br>• சர்வதேச மன்றம்<br>  • ஆரம்பம்<br>  • கட்டமைப்பு<br>• சர்வதேச சங்கத்தின் வெற்றி, தோல்விகள் | • உலக யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• முதலாம் உலக யுத்தத்தை விபரிப்பார்.<br>• மனித இனத்திற்கு முதலாம் உலக யுத்தத்தால் ஏற்பட்ட தாக்கத்தினை விமர்சிப்பார்.<br>• சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார்.<br>• பேச்சுவார்த்தைகளின் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதே பொருத்தமானது என்பதனை எடுத்துக்காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 12.0 மனித இனத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான சமவுடைமைக் கொள்கைகளை அடையாளங்கண்டு அவைகளைப் பாதுகாக்கும் பொருட்டுச் செயற்படுவார். | 12.1 ரஷ்யப் புரட்சிக்கான காரணங்களையும் புரட்சி நிகழ்ந்த விதத்தினையும் தெளிவுபடுத்துவார்.<br>12.2 உலக நாகரிக வளர்ச்சிக்கு ரஷ்யப் புரட்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற முன்மாதிரி தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார். | 12. ரஷ்யப் புரட்சி<br>• ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்<br>• ரஷ்யப்புரட்சியின் முக்கிய கட்டங்கள்<br>• ரஷ்யப்புரட்சியின் முக்கியத்துவம் | • புரட்சியொன்று ஏற்படுவதற்கான காரணங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• ரஷ்யப் புரட்சியைத் தெளிவுபடுத்துவார்.<br>• ரஷ்யப் புரட்சியின் மூலம் மனித உரிமைகள் காப்பாற்றப்பட்டதனைத் தெளிவுபடுத்துவார்.<br>• சமவுடைமைக் கொள்கையையும் அதன் பரவலையும் எடுத்துக் காட்டுவார். | 15 |
| 13.0 உலக யுத்தங்களின் அழிவுகளை விளங்கிக் கொண்டு சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார். | 13.1 இரண்டாம் உலக யுத்தம் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பார்.<br>13.2 உலக சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகளைத் தெளிவுபடுத்துவார். | 13. இரண்டாம் உலகப் போர்<br>• காரணங்கள்<br>• பரவல்<br>• விளைவு<br>ஐக்கிய நாடுகள் சபை<br>• நோக்கமும் ஆரம்பமும்<br>- கட்டமைப்பு<br>- உப பிரிவுகள்<br>- முக்கியத்துவம்<br>- எதிர்நோக்கிய சிக்கல்கள் | • இரண்டாம் உலக யுத்தம் ஏற்படுவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• இரண்டாம் உலக யுத்தத்தினால் ஏற்பட்ட அழிவுகளை எடுத்துக்காட்டுவார்.<br>• ஐக்கிய நாடுகள் சபை தொடர்பாக விபரிப்பார்.<br>• உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாட்டினைத் தெளிவுபடுத்துவார். | 35 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 14.0 நவீன உலகை உருவாக்கிய உலகளாவிய சக்திகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | 14.1 பலம் வாய்ந்த அணிகள் உலக அரசியலில் ஏற்படுத்திய தாக்கத்தினைத் தெளிவுபடுத்துவார். | 14.1 இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகம்<br>• வல்லரசு அணிகள்<br>• முதலாளித்துவம் - நேட்டோ<br>• சமவுடைமை -வோர்சோ வாதம்<br>• அணிசேரா வாத நாடுகள் | • தற்போதைய உலக அரசியல் நிலையில் தாக்கம் செலுத்திய காரணங்களை எடுத்துக் காட்டுவார்.<br>• அணிகளின் அரசியல், பொருளாதார, சமூக நிலைகளை விமர்சிப்பார்.<br>• அணிகள் பிரிக்கப்பட்டிருந்த விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | 25 |
| | 14.2 பனிப்போர் காலத்தில் பலம் வாய்ந்த அணிகளிடையே ஏற்பட்ட மோதல்களை விமர்சிப்பார். | 14.2 பனிப்போர்<br>• கருத்து மோதல்கள்<br>• அணிகள் வீழ்ச்சியுற்றமை | • பனிப்போரைத் தெளிவுபடுத்துவார்.<br>• தமது அணியைப் பலப்படுத்துவதற்கு வல்லரசு அணிகள் செயற்பட்ட விதத்தினைத் தெளிவுபடுத்துவார். | |

## க.பொ.த (உயர்தரம்) பாடத்திட்டம்
## நவீன உலக வரலாறு (கி.பி. 1500 ஆம் ஆண்டு தொடக்கம்)

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 8.0 அதிகாரம் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகள் அழிவினை ஏற்படுத்தும் என்பதனை விளங்கி, சமாதானத்தைப் பாது காக்க நடவடிக்கை எடுப்பார். | 8.1 முதலாம் உலக யுத்தத்தின் அழிவுகளை எடுத்துக் காட்டுவார். | 8. முதலாம் உலக யுத்தம்<br>• யுத்தம் ஏற்படுவதில் தாக்கம் விளைவித்த வரலாற்றுப் பின்னணி<br>• புதிய பேரரசுக் கொள்கை<br>• ஆபிரிக்கா தொடர்பான போட்டி<br>• போல்கன் பிரச்சினை<br>• ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிந்தமை<br>• யுத்தத்தின் முக்கிய கட்டங்கள்<br>• யுத்தத்தின் விளைவுகள்<br>• வேர்சேல்ஸ் உடன்படிக்கை<br>• ஐரோப்பிய தேசப்படம் மாற்றமடைதல்<br>• சர்வதேச மன்றம் ஏற்படுத்தப் பட்டமை | • உலக யுத்தம் நடைபெற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• உலக யுத்தத்தின் விளைவுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• உலக யுத்தத்துடன் தொடர்புடைய இடங்கள், நாடுகள் என்பவற்றைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 9.0 அதிகாரம் தொடர்பாக ஏற்படும் முரண்பாடுகள் அழிவினை ஏற்படுத்தும் என்பதனை விளங்கி, சமாதானத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 9.1 இரண்டாம் உலக யுத்தத்தின் அழிவுகளை எடுத்துக்காட்டுவார். | 9. இரண்டாம் உலக யுத்தம்<br>9.1 யுத்தம்<br>• யுத்தத்தின் ஆரம்பம்<br>• யுத்தத்தின் பரவல்<br>• யுத்தத்தின் முடிவும் விளைவுகளும் | • இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தையும் பரவலையும் தெளிவுபடுத்துவார்.<br>• இரண்டாம் உலகப் போரின் விளைவுகளைப் பகுத்தாய்வார்.<br>• இரண்டாம் உலகப் போர் கால மற்றும் அதற்குப் பிற்பட்ட கால உலகைப் புறவுருவப்படமொன்றில் குறித்துக் காட்டுவார். | 35 |
| | 9.2 உலகில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டுச் சமாதானத்துடன் செயற்படுவதின் முக்கியத்துவத்தினைப் பரீட்சிப்பார். | 9.2 ஐக்கிய நாடுகள் சபை<br>• நோக்கம்<br>• கட்டமைப்பு<br>• தொழிற்பாடு | • ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துவார்.<br>• இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகில் சமாதானத்தை ஏற்படுத்தும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைத் தெளிவுபடுத்துவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 10.0 தேசிய சுயாதீனத்தின் பெறுமானத்தை விளங்கி, தேசிய தனித்துவத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார். | 10.1 சுயாதீனத்தை வென்றெடுப்பதற்காக ஆசிய, ஆபிரிக்க நாடுகள் செயற்பட்ட விதத்தினை விசாரித்தறிவார். | 10. குடியேற்றவாதம்<br>• ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் தேசியப் போராட்ட இயக்கங்கள் | • ஆசியா, ஆபிரிக்காக் கண்டங்களிலுள்ள மேற்கு நாடுகளின் குடியேற்றங்களைத் தேசப் படத்தில் குறித்துக் காட்டுவார்.<br>• ஆசிய, ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெற்றுக் கொள்ளும் பொருட்டு முன்னெடுத்த போராட்டங்களை விபரிப்பார்.<br>• சுயாதீனத்தை வென்றெடுப்பதற்குத் தோள்கொடுத்த தலைவர்களை உயர்வாக மதிப்பார். | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| 11.0 தற்கால உலகப் போக்குகள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | 11.1 தற்கால உலகில் செயற்படும் அரசியல் சக்திகள் தொடர்பாகத் தெளிவுபடுத்துவார். | 11. உலகம் அதிகார முகாம்களாகப் பிளவுறல்<br>- பனிப்போர்கள்<br>- அணிசேரா நாடுகள்<br>- சோவியத் நாட்டின் வீழ்ச்சி | • உலகம் அதிகார முகாம்களாகப் பிளவுற்ற விதத்தினைத் தெளிவுபடுத்துவார்.<br>• சோவியத் நாடு வீழச்சியுற்றதுடன் ஏற்பட்ட நிலைமைகளைப் பகுத்தாய்வார்.<br>• உலக அதிகார முகாம்களையும் அவற்றிற்குரிய நாடுகளையும் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார். | 30 |
| 12.0 பல்வேறு சவால்களின் முன்னிலையில் நாடுகள் முன்னேற்றமடைந்த விதத்தினை முன்னுதாரணமாகக் கொண்டு நாட்டின் முன்னேற்றத்தின் பொருட்டுச் செயற்படுவார். | 12.1 இருபதாம் நூற்றாண்டில் துரித வளர்ச்சியடைந்த ஆசிய நாடுகள் தொடர்பாகப் பகுத்தாய்வார். | 12. ஆசியாவின் எழுச்சி<br>- சீனப் புரட்சியும் சீனாவின் எழுச்சியும்<br>- இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் யப்பானின் எழுச்சி | • சீனாவும் யப்பானும் உலகில் அபிவிருத்தி அடைந்த நாடுகள் என்ற நிலைக்கு வந்த விதத்தினை விபரிப்பார்.<br>• சீனா, யப்பான் ஆகிய நாடுகளிடமிருந்து பெறத்தக்க முன்மாதிரிகளை எடுத்துக் காட்டுவார். | 20 |

## (இ) பாடசாலைக் கொள்கைகளும் வேலைத்திட்டங்களும்

வரலாறு பாடப் பாடத்திட்டத்தில் அடங்கியுள்ள பாட விடயங்களை வெற்றிகரமாகவும் விளைதிறனுள்ளவாறும் கற்பதற்காகவும், அதன் மூலம் கற்றல் அனுபவங்களைப் பெறுவதற்காகவும் மாணவரது ஈடுபாடு அதிகரிக்கும் வகையில் பாடசாலை வேலைத்திட்டங்களைத் திட்டமிட்டுக் கொள்வது பெரிதும் பயனுடையதாகும்.

அவ்வாறான சில பாடசாலை வேலைத்திட்டங்கள் மாத்திரமே இங்கு முன்வைக்கப்பட்டுள்ளன. பொருத்தமான வேறு ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களையும், கொள்கைகளையும் திட்டமிட்டுப் பயன்படுத்தும் சுதந்திரம் வரலாறு கற்பிக்கும் ஆசிரியருக்கு உண்டு என்பதைக் கவனத்தில்கொள்ளுங்கள்.

- ‘‘வரலாறு’’ சங்கமொன்று அமைப்பதன் மூலம் மாணவரது அறிவை விருத்தி செய்வதற்கான கலந்துரையாடல்கள், விவாதங்கள், கருத்தரங்குகள், கண்காட்சிகள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடத்துவதற்கும் சஞ்சிகை, சுவரேடு போன்ற ஆக்கபூர்வமமான கருமங்களில் ஈடுபடுவதற்கும் வழிப்படுத்தலாம்.
- வருடத்தில் குறைந்த பட்சம் ஒரு தடவையேனும் முக்கியமான ஓர் இடத்துக்கு அல்லது பிரதேசத்துக்குக் கல்விச்சுற்றுலா செல்ல ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். வகுப்பறையில் பெற்ற அறிவை உறுதிப்படுத்துவதற்காகவும், மேலும் விருத்தி செய்து செய்து கொள்வதற்காகவும் துணையாகுமாறு நேரகாலத்துடன் திட்டமிட்டு, கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.
- கருத்தரங்குகளை ஒழுங்கு செய்து நாட்டின் தலை சிறந்த வரலாற்றாசிரியர்களைப் பாடசாலைக்கு அழைத்து, அவர்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளச் சந்தர்ப்பமளித்தல்.
- பிரதேசத்தில் தொல்பொருளியல் முக்கியத்துவமுள்ள நினைவுச்சின்னங்கள் பற்றித் தேடியறிவதோடு அவற்றைப் பாதுகாப்பதற்காகப் பாடசாலை மட்ட மற்றும் சமுதாய மட்ட வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- வரலாற்றுப் பாட விடயங்களுடன் தொடர்புடைய ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல் வேலைப்பாடுகள், ஏனைய அரும்பொருள்களை அவதானிப்பதற்கும் அவதானிப்பு அறிக்கைகளைத் தயாரிப்பதற்குமாக அரும்பொருட்காட்சிச்சாலைகள் சார்ந்த வேலைத்திட்டங்களை ஒழுங்கு செய்தல்
- வரலாற்றுப் பாட விடயங்களுடன் தொடர்புடையதாக இணையத்தளங்கள் மூலம் தகவல்கள் திரட்டுதல்

## (ஈ) கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் மூலம் எதிர்பார்க்கப்படும் கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், மாணவர் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தை இனங்காண்பதற்குமான வகுப்பறையில் இலகுவாக நடைமுறைப்படுத்தத்தக்க இடைத்தொடர்புகளைக் கொண்ட இரண்டு வேலைத்திட்டங்களாகக் கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றைக் குறிப்பிடலாம். கணிப்பீடு சரியாக நிகழுமெனனின் வகுப்பில் கற்கும் மாணவர்கள் எதிர்பார்க்கும் தேர்ச்சிகளில் கிட்டிய பாண்டித்திய மட்டத்தை எட்டுவது ஒரு கடினமான காரியமாகாது. மாணவன் அடைந்துள்ள பாண்டித்திய மட்டம் யாது என்பதை இனங்காண்பதே மதிப்பீடு என்பதால் கருதப்படுகின்றது.


கணிப்பீட்டில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் தமது மாணவர்கள் தொடர்பாக இரண்டு விதமான வழிகாட்டல்களை வழங்கலாம். அவ்வழிகாட்டல்கள், பொதுவாக பின்னூட்டல் (Feed Back) எனவும் முன்முகவூட்டல் (Feed Forward) எனவும் அழைக்கப்படும். மாணவரது நலிவுகளைக் கண்டறிந்தவிடத்து, அவர்களது கற்றல் சார்ந்த பிரச்சினைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்காகப் பின்னூட்டலையும் மாணவரது இயலுமைகளையும் வலிவுகளையும் இனங்கண்டவிடத்து அத்திறன்களை மேலும் விருத்தி செய்துகொள்வதற்காக முன்முகவூட்டலையும் வழங்குவது ஆசிரியரின் பணியாகும்.



கற்றல் - கற்பித்தல் செய்முறையின் வெற்றிக்காக, பாடத்தேர்ச்சிகளுள் எத்தேர்ச்சிகளை எந்தெந்த மட்டத்தில் அடைய முடிந்தது என்பதை மாணவர்கள் இனங்கண்டு கொள்வது அவசியமாகும். மதிப்பீட்டு வேலைத்திட்டத்தின் வழியே மாணவர்கள் அடைந்துள்ள பாண்டித்திய மட்டத்தைத் தீர்ப்புச் செய்வதே இங்கு ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இப்பாடத்திட்டம், மாணவர் மைய, தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட மற்றும் செயற்பாடுகள் சார்ந்த அணுகுமுறையை உள்ளடக்கியுள்ளது. செயற்பாட்டுக் கற்றலின்பால் (Active Learning) மாணவரை ஆசிரியர் வழிப்படுத்துதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கும் வேளைகளிலும் செயற்பாடுகளின் இறுதியிலும் கணிப்பீடு, மதிப்பீடு ஆகியவற்றை நடத்தலாம்.

கணிப்பீடு மற்றும் மதிப்பீட்டை இலகுவாக நடத்தத்தக்கவாறாக பொது நியமங்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது என விதந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த ஐந்து நியமங்களுள் முதல் மூன்று நியமங்களும் குறித்த தேர்ச்சியைக் கட்டியெழுப்புவதற்காக ஒருங்கு சேர்ந்துள்ள அறிவு, திறன் மனப்பாங்குகளை முதன்மையாகக் கொண்டு தயாரிக்கப்பட வேண்டும். மீதி இரண்டு நியமங்களையும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களை வளர்த்துக் கொள்ளத்துணையாகும் வகையில் தயாரித்துக் கொள்ளல் வேண்டும். வகுப்பறையில் மாணவர்கள் செயற்படும் போது இந்நியமங்கள் தொடர்பான நடத்தை மாற்றங்களை இனங்காண ஆசிரியர் முயற்சி செய்தல் வேண்டும். கூடவே கணிப்பீட்டின் ஊடாக அந்நடத்தைகளை மேலும் வலுப்படுத்துவதிலும், மதிப்பீட்டின் ஊடாக அவற்றை அளந்தறிவதிலும் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். இவற்றோடு, வகுப்பறையில் எழுத்துச் சோதனைகள், செயற்றிட்டங்கள் போன்றவற்றிலும் மாத இறுதியிலும், தவணை இறுதியிலும், ஆண்டிறுதியிலும் நடத்தப்படும் பாடசாலை மட்ட, வலய மட்டப் பரீட்சைகளிலும் மாணவரை ஈடுபடுத்தலாம்.



# இலங்கை வரலாறு

# 7. பதினாறாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரை இலங்கை

## அறிமுகம்

பதினாறாம் நூற்றாண்டாகும்போது இலங்கை கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் வன்னிச் சிற்றரசுகள் எனும் ஆட்சி அலகுகளாகப் பிரிந்து காணப்பட்டது. அவற்றுள் ஆரம்பத்தில் கோட்டை இராச்சியம் மிகவும் பலமான இராச்சியமாக மிளிர்ந்தது. அதன் பின் கண்டி இராச்சியம் பலம் பொருந்தியதாக மாறியது. கி.பி. 1469 இல் சேனாசம்மத விக்கிரமபாகு இளவரசன் கண்டியை சுயாதீனமான இராச்சியமாக உருவாக்கினார். இயற்கை அரண்களைக் கொண்டமைந்த இவ் இராச்சியம் முதலாம் விமலதர்மசூரிய மன்னரின் கீழ் உறுதியான அரசொன்றாக உருவானது. இறுதி உள்நாட்டு இராச்சியமாக, மேலைத்தேய மற்றும் சுதேச சக்திகளுடன் மோதி தமது நிலைப்பாட்டை தக்கவைத்துள்கொள்ள இங்கு ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் கடமையாற்றினர். அதன்பின் கண்டி இராச்சியத்தில் ஆட்சிக்கு வந்த திறமையான ஆட்சியாளர்களின் செயற்றிறன் போலவே கண்டி இராச்சியத்தின் பொருளாதார, சமூக பெறுமதிகளுக்கு இவ்வத்தியத்தில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பதினாறாம் நூற்றாண்டில் இலங்கையின் கரையோரம் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்ட மையானது இலங்கை வரலாற்றைப் பாதித்த முக்கியமான சம்பவமாகும். முதலில் கோட்டை இராச்சியத்தைத் தந்திரமாகத் தமது ஆட்சிக்குட்படுத்திய போர்த்துக்கேயர், பின்னர் யாழ்ப்பாண இராச்சியத்தையும் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். அதன் பின் ஒல்லாந்தர் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றினர். போர்த்துக்கேயரைப் போன்றே ஒல்லாந்தரும் கண்டி இராச்சியத்தைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டுவருவதற்குப் பலமாக முயற்சித்தனர். அவர்களின் அம்முயற்சிகளை முறியடிப்பதற்கு கண்டி ஆட்சியாளர்களுக்கு இயலுமாயிருந்த போதும், கரையோரப் பிரதேசத்தில் அரசியல், வர்த்தக மற்றும் கலாசார மாற்றங்கள் பலவற்றை மேற்கொள்ளப் போர்த்துக்கேயராலும் ஒல்லாந்தராலும் இயலுமாயிருந்தது. அவ்விடயங்கள் இப்பாடப்பரப்பில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன.

**தேர்ச்சி** : • இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியான வளர்ச்சி மற்றும் போக்குகள் என்பன தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 இறுதி சுதேச இராசதானி பற்றி நுணுகியாய்வார்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :
- கண்டி இராச்சியத்தின் ஆரம்பம் மற்றும் வளர்ச்சியை விளக்குவார்.
- கண்டி இராச்சியத்தின் சிறப்பான ஆட்சியாளர்களை மதிப்பாகக் கருதுவார்.
- கண்டி இராச்சியத்தின் வரலாற்று இடங்களைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.


**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## கண்டி இராச்சியம்

- கி.பி. 1415 இல் ஆறாம் பராக்கிரமபாகு கோட்டை அரசனாகக் கடமையேற்ற காலகட்டத்தில் கண்டி இராச்சியத்துக்கு உரித்தான பிரதேசங்கள் கோட்டை இராச்சியத்தின் கீழ் இருந்தமை.
- கி.பி. 1469 இல் சேனாசம்மத விக்கிரமபாகு இளவரசன் முதன்முறையாகக் கண்டி இராச்சியத்தை சுயாதீனமான அரசாக ஆரம்பித்தமை.

- சேனாசம்மத விக்கிரமபாகு அரசன் கண்டி இராச்சியத்தை ஆரம்பித்த காலப்பகுதியாகும்போது அதற்குக் கீழ்வரும் பிரதேசங்கள் உரித்தாக இருந்தமை.
  - கம்பளை
  - சிதுறுவான
  - தெநுவர (உடுநுவர, யடிநுவர)
  - மாத்தளை
  - பன்சியப்பத்துவ
  - ஊவா
- கண்டி இராச்சியத்தின் அரசாட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் அதனை விஸ்தரிப்பதற்கு எப்போதும் பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றியமை.
- கண்டி இராசதானி மலைகளாலும், மகாவலி நதியின் மூலமும் காடுகளாலும் பாதுகாக்கப்பட்டமை.
- சிறப்பான காலநிலை மற்றும் வளமான நிலப்பரப்பைக் கொண்டமைந்த பிரதேசம் கண்டி இராச்சியத்தின் கீழ் இருந்தமை.

**கண்டி இராச்சியத்தின் ஆரம்பகால பிரதேசங்கள் பிரிக்கப்பட்டமையைக் காட்டும் வரைபடம்**



# கண்டி இராசதானியின் குறிப்பிடத்தக்க ஆட்சியாளர்கள்

## முதலாம் விமலதர்மசூரியன் (1592-1604)

- **அரசியல் பணிகள் (சேவைகள்)**
  - வீரசுந்தர பண்டார எனும் பிரபுவின் மகன் கோணப்பு பண்டார எனும் பெயருக்குரியவர்.
  - சீதாவாக்கை ராஜசிங்க மன்னன் மலைநாட்டைக் கைப்பற்றிய வேளையில் போர்த்துகேயரிடம் தஞ்சமடைந்து ஒஸ்டீரியாவின் தொன் ஜுவான் எனும் பெயரில் கிறிஸ்தவனாகி அவர்களின் கீழ் யுத்த வித்தைகளை முதன்மையாகக் கொண்ட கலைகளைக் கற்றுக்கொண்டமை.
  - தொன் பிலிப் எனும் பெயரில் கிறிஸ்தவனாகி போர்த்துக்கேயரின் பாதுகாப்பின் கீழ் வளர்ந்த மலையக இராச்சியத்தின் உரிமையாளரான யமசிங்க பண்டாரவை ஆட்சியில் நிறுத்தப் போர்த்துக்கேயர் முன்னெடுத்த போராட்டத்தை தலைமை தாங்கிய கோணப்பு பண்டாரவால் தொன் பிலிப்பை மலையக அரசனாக்குவதற்கு முடிந்தமை.
  - அரசனாகி சிறிது காலத்தில் தொன் பிலிப் (யமசிங்க பண்டார) காலமான பின் கோணப்பு பண்டார ஆகிய ஆஸ்ரியாவின் தொன் ஜுவான் சிம்மாசனத்தைக் கைப்பற்றியமை.
  - போர்த்துக்கேயரின் கீழ் இருந்த மற்றுமொரு இராச்சிய உரிமையாளரான குசுமாசன தேவி (தொனா கதரீனா)யை சிம்மாசனத்தில் அமர்த்தப் போர்த்துக்கேயர் மலைநாட்டின் மீது முன்னெடுத்த ஆக்கிரமிப்புகளைத் தோற்கடித்த கோணப்பு பண்டார குசுமாசன தேவியைக் கைது செய்து அவளைத் திருமணம் செய்து கொண்டமை.
  - அதன் பின் போர்த்துக்கேயரை விரட்டியடித்து கி.பி. 1592 இல் முதலாம் விமலதர்மசூரியன் எனும் பெயரில் முடிசூடி குசுமாசன தேவியை திருமணம் செய்ததன் மூலம் மலையக இராச்சியத்தின் சிம்மாசனத்துக்குரிய உரிமையை உறுதிப்படுத்த முடிந்தமை.
  - மலையகத்தைப் போர்த்துக்கேயரின் ஆட்சியிலிருந்து விடுவித்து சுயாதீன அரசாக்கியமை.
  - பஞ்ச மலைநாடு எனும் ஐந்து பிரதேசங்களுக்குள் எல்லைப்படுத்தப்பட்டிருந்த கண்டி இராச்சியத்தை மேலும் விரிவுபடுத்தியமை.
  - மலைநாட்டிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட போர்த்துக்கேயரை கரைநாட்டிலிருந்தும் விரட்டியடிப்ப தற்குச் செயற்பட்டதுடன், அம்முயற்சி தோல்வியடைந்தாலும் போர்த்துக்கேயரைக் கரைநாட்டிற் குள்ளேயே மட்டுப்படுத்த இவரால் முடிந்தமை.
  - சீதாவாக்கை இராச்சியத்தின் கட்டுப்பாட்டிலிருந்தும் கண்டி இராச்சியத்தை விடுவித்தமை.
- **சமயப் பணிகள்**
  - ரோமன் கத்தோலிக்க மதத்தை விட்டுப் பௌத்த தர்மத்தை ஏற்றுக்கொண்டமை.
  - விமலதர்மசூரியன் எனப் பௌத்த பெயரை உபயோகித்தமை.
  - போர்த்துக்கேயரிடமிருந்து பாதுகாப்பதற்காகத் தெல்கமுவ விகாரையில் மறைத்து வைத்திருந்த புனித தந்ததாதுவைக் கண்டியில் பிரதிஷ்டை செய்தமை.
  - பர்மாவிலிருந்து உபசம்பதாவிற்காக பிக்குகளை வரவழைத்தமை.
  - லங்காதிலக்க விகாரை, ரிதீ விகாரை, கடலாதெனிய உட்பட பல விகாரைகளைப் புனர்நிர்மாணம் செய்தமை.
  - புனித தந்ததாதுவைத் தனதாக்கியதன் மூலம் முழு நாட்டிற்கும் அரசனாக அங்கீகாரம் கிடைத்தமை.
- **பொருளாதாரப் பணிகள்**
  - இரும்புக் கைத்தொழில் முன்னேற்றத்திற்காக 170 தொழிற்பட்டறைகளை உருவாக்கியமை.
  - விவசாயத்தை முன்னேற்றுவதற்காகச் செயற்பட்டமை.
  - பருத்திப் பயிர்ச்செய்கையை மேம்படுத்தியமை.
  - மலையக இராச்சியத்துக்குரிய பகுதிகளில் வெடி மருந்திற்கான உப்பைப் பெற்றுக்கொள்ளும் கைத்தொழிலை மேம்படுத்தியமை.

## செனரத் மன்னன் (1604 - 1635)

- முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் மறைவின் பின்னர் அரசாட்சிக்கு வந்த செனரத், 1 ஆம் விமலதர்மசூரியனின் ஒன்றுவிட்ட சகோதரனாவார்.
- செனரத் மன்னனும் தன் அரசாட்சியை உறுதிப்படுத்திக்கொள்ள குசுமாசன தேவியைத் திருமணம் செய்தமை.
- அரசாட்சியேற்ற ஆரம்ப காலத்தில் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டி ஏற்பட்டமை.
- தனது ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயரினால் இராச்சியத்துக்கு வந்த அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தியமை.
- இலங்கையின் கிழக்குப் பிரதேசங்களுக்கு இராச்சியத்தை வியாபித்தமை.
- தனதும், தனது சகோதரனான விமலதர்மசூரிய மன்னனதும் புத்திரர்களான மூன்று இளவரசர் களுக்கும் இராச்சிய உரிமையைப் பிரித்துக் கொடுத்தமை.

  உதாரணம்: கண்டி - மகா ஆஸ்தான (இராஜசிங்க) இளவரசன்
  மாத்தளை - விஜயபால இளவரசன்
  ஊவா - குமாரசிங்க இளவரசன்

## இரண்டாம் ராஜசிங்க மன்னன் (கி.பி. 1635 - 1687)

- செனரத் மன்னனின் முயற்சியால் மகா ஆஸ்தான குமாரன் இரண்டாம் ராஜசிங்க எனும் பெயரில் அரசனானமை.
- போர்த்துக்கேயரால் இராச்சியத்துக்கு வந்த அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தியமை.
- கி.பி. 1664 இல் அம்பன்வெல ராலயின் தலைமையின் கீழ் தனக்கு எதிராக ஆரம்பமான புரட்சியை மட்டுப்படுத்தியமை.
- போர்த்துக்கேயரை இந்நாட்டிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தரின் உதவியைப் பெற்றுக்கொண்டமை. (கி.பி. 1638 ஒப்பந்தம்)
- ஒல்லாந்தரின் தலையீட்டைக் குறைப்பதற்கு தந்திரோபாயமாகச் செயற்பட்டமை.
- திரி சிங்களாதீஷ்வர எனும் பட்டப்பெயரின் மூலம் இவர் அழைக்கப்பட்டமை.

## இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் (கி.பி. 1687 - 1707)

- இரண்டாம் ராஜசிங்க மன்னனின் புத்திரனான இவர் அமைதியான ஆட்சியாளராவார்.
- பெரியளவில் சுறுசுறுப்பான ஆட்சியாளராக காணப்படாமையினால் இவரின் ஆட்சிக்காலத்தில் மலையகப் பிரபுக்களின் பலம் அதிகரித்தமை.
- ஒல்லாந்தரின் அச்சுறுத்தல்களைக் கட்டுப்படுத்தி அவர்களுடன் சமாதானமாகச் செயற்பட்டமை.
- பர்மா தேசத்திலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதாவை மீண்டும் உயிர்ப்பித்தமை.
- இரண்டாம் இராஜசிங்க மன்னன் விஸ்தரித்திருந்த கண்டி இராச்சியத்துக்குட்பட்ட பிரதேசங்களை அவ்வாறே பாதுகாத்துக் கொண்டமை.

## ஸ்ரீ வீர பாராக்கிரம நரேந்திரசிங்க மன்னன் (கி.பி. 1707 - 1739)

- இரண்டாம் விமலதர்மசூரிய மன்னனின் பின்னர் மலையக சிம்மாசனத்தை ஏற்றமை.
- பலவீனமான அரசாட்சியினால் பிரபுக்களின் பலம் மேலும் வளர்ந்தமை.
- தனது பட்டத்து ராணியாக தென்னிந்திய நாயக்கர் வம்ச இளவரசி ஒருவரைத் திருமணம் செய்து கொண்டமை.
- 1709 இல் மன்னனுக்கு எதிராகக் கண்டி சிங்களப் பிரதானிகள் சூழ்ச்சி செய்தமை. அது வெற்றியளிக்காத போதும் பிரதானிகளின் பலம் அதிகரித்தமை.

- கி.பி. 1739 இல் நரேந்திரசிங்க மன்னனின் இறப்பின் பின்னர் மன்னனுக்குப் புதல்வர்கள் இல்லாமையினால் நாயக்கர் வம்ச சம்பிரதாயத்துக்கு அமைவாக மனைவியின் சகோதரரான ஸ்ரீ விஜய ராஜசிங்கன் அரசாட்சியேற்றமை.
- இதன் மூலம் ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திர சிங்க மன்னரின் ஆட்சியோடு சிங்கள அரச பரம்பரை முற்றுப்பெற்று நாயக்கர் பரம்பரை கண்டி இராச்சியத்தின் சிம்மாசனத்தை ஏற்றமை.

## நாயக்கர் அரச பரம்பரை

- சிங்கள அரச பரம்பரை ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கனுடன் முற்றுப்பெற்றதன் பின்னர் நாயக்கர் வம்சம் ஆட்சிக்கு வந்தமை.
  - ஸ்ரீ விஜய ராஜசிங்கன் (கி.பி. 1739 - 1747)
  - கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (கி.பி. 1747 - 1782)
  - ராஜாதி ராஜசிங்கன் (கி.பி. 1782 - 1798)
  - ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் (கி.பி. 1798 - 1815)
- நாயக்கர் வம்சத்தினர் இந்து பக்தர்களாக இருப்பினும், கண்டி மக்களின் மதிப்பையும் ஆதாரவையும் பெற்றுக்கொள்வதற்காகப் பௌத்த கலாசாரத்தைக் கடைப்பிடித்தமை.

## ஸ்ரீ விஜய ராஜசிங்கன் (கி.பி. 1739 - 1747)

- நாயக்க அரச வம்சத்தின் முதல் ஆட்சியாளன். பௌத்த சமயத்தைத் தழுவி நீண்ட காலம் பௌத்த பிக்குமாருடன் வாழ்ந்த இவன் அரசனான பின்னர் பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்குப் பணியாற்றியமை.
- இம்மன்னனும் நாயக்க வம்ச இளவரசியைத் திருமணம் செய்துகொண்டான். இளவரசியுடன் வருகை தந்த நாயக்கர் உறவினர்களால், அரச சபையில் நாயக்கரின் அதிகாரம் அதிகரித்தமை.
- வர்த்தகத் தொடர்பு காரணமாக ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஒல்லாந்தருடன் பிரச்சினை ஏற்பட்டமை.
- வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரின் ஆலோசனைப்படி பர்மாவிலிருந்து உபசம்பதாவிற்காகப் பிக்குமாரைத் தருவிக்கும் முயற்சி தோல்வியடைந்தமை.

## கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் (கி.பி. 1747 - 1782)

- ஸ்ரீ விஜய ராஜசிங்கனுக்கு வாரிசு இல்லாத காரணத்தால் அவனது மனைவியின் சகோதரரான கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் 16 வயதில் ஆட்சி பீடமேறியமை.
- மன்னனின் தந்தையான நரநாயக்கர் ஆட்சிக் கருமங்களை மேற்கொண்டமை.
- வீழ்ச்சியடைந்து காணப்பட்ட பௌத்த சமயத்தின் எழுச்சிக்காக வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரின் ஆலோசனைப்படி செயற்பட்டமை.
- வெலிவிட்ட சரணங்கர தேரருக்கு சங்கராஜ எனும் பதவியை வழங்கியமை.
- சீயம் (தாய்லாந்து) நாட்டின் உதவியுடன் உபசம்பதா சடங்கை நடாத்தியமை.
- பிக்குமாருக்கான ஒழுக்கநெறிக் கோவையை அமைத்தமை.
- விகாரைகள் பலவற்றையும் புனருத்தாரணம் செய்தமை.
- கண்டிய சிங்களப் பிரதானிகளின் சூழ்ச்சிக்கு முகங்கொடுக்க நேரிட்டமை. (1760)
- ஒல்லாந்தரை விரட்டுவதற்கு ஜோன் பைபஸ் எனும் தூதுவன் மூலம் மேற்கொண்ட முயற்சி தோல்வியுற்றமை.

## ராஜாதி ராஜசிங்கன் (கி.பி. 1782 - 1798)

- கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கனின் சகோதரனான இவனது காலத்தில் கண்டி இராச்சியம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தமை.
- கண்டிய சிங்களப் பிரதானிகளுக்கும், நாயக்கர் பிரதானிகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடு வலுவுற்றமை.
- எனவே கண்டியின் நிர்வாக நடவடிக்கைள் பலவீனமடைந்தமை.
- ஒல்லாந்தரை விரட்டுவதற்காக ஆங்கிலேயரினதும், பிரான்ஸியரினதும் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தமை.
- கி.பி. 1796 இல் அரசனின் உதவியின்றி ஆங்கிலேயர் கரையோரத்தைக் கைப்பற்றிக் கொண்டமை.

## ஸ்ரீ விக்ரம ராஜசிங்கன் (கி.பி. 1798 - 1815)

- இராஜாதி ராஜசிங்கனின் மறைவின் பின்னர் பிலிமத்தலாவை மகா அதிகாரத்தின் விருப்பப்படி கண்ணுசாமி எனும் இளவரசன் அரசனாக்கப்பட்டமை.
- நாயக்கர் பிரதானிகளின் ஆலோசனைப்படி இம்மன்னன் செயற்பட்டமை.
- அரசனுக்கும் சிங்களப் பிரதானிகளுக்குமிடையிலான கருத்து வேறுபாடு மேலும் வலுவுற்றமை.
- கி.பி. 1803 இல் ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்பை முறியடிப்பதற்குக் கண்டி மக்களின் உதவி கிடைத்தமை.
- ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனின் இறுதிக் காலப்பகுதியில் மேற்கொண்ட செயற்பாடுகள் காரணமாக பொதுமக்களின் உதவியும் அரச விசுவாசமும் அற்றுப்போனமை.
- மன்னனைக் கொலை செய்வதற்கு சூழ்ச்சி செய்தமையால் பிலிமத்தலாவை மகா அதிகாரம் சிரச்சேதம் செய்யப்பட்டமை.
- எஹலபொல மகா அதிகாரத்தின் குடும்பத்தினர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமை.
- தலதா மாளிகை முன்னால் உள்ள தேவசங்கித எனுமிடம் கொலைக் களமாகப் பயன்படுத்தப் பட்டமை.
- மன்னனை எதிர்த்த சிங்களப் பிரதானிகள், பௌத்த பிக்குமார்கள், பொதுமக்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டமை.
- 1815 இல் ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்தை ஆக்கிரமித்தபோது மன்னனுக்கு மக்களின் உதவி கிடைக்காமையால் பிரித்தானியருக்கு அடிபணிய நேர்ந்தமை.
- இலங்கையின் அரசாட்சி முறையின் முடிவு 1815 கண்டி ஒப்பந்தத்துடன் நிகழ்ந்தமை.
- கண்டி ஒப்பந்தத்தின் பிரதான வாசகங்கள்.

## கண்டி இராச்சியத்தின் சமூக, பொருளாதார, கலாசார அமைப்பு

### ஆட்சி முறை

- கண்டி இராச்சிய ஆட்சி நிர்வாகத்தின் உச்ச அதிகாரமுடையவன் எனும் வகையில் அரசனிடம் பல அதிகாரங்களும் காணப்பட்டமை.
- அரச மாளிகை அதிகாரிகள், அரச சபை அதிகாரிகள், அதிகாரம் எனும் அமைச்சர்கள் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றமை.
- பிரதேச நிர்வாகம், பத்த எனும் வரிவசூலிப்புத் திணைக்களம், விகாரை - தேவாலய சொத்து நிர்வாகம் எனும் வகையில் நிர்வாக அலகுகள் பிரிக்கப்பட்டிருந்தமை.
- கண்டி இராச்சியத்திற்கே உரிய நீதிமன்றத் தொகுதியொன்று செயற்பட்டமை.
- மரபு ரீதியாகப் பின்பற்றப்பட்டு வந்த உள்நாட்டுச் சட்டம் பின்பற்றப்பட்டமை.

## சமயம்

- **பௌத்த சமயம்**
  - பொதுமக்களுள் பெரும்பான்மையானோர் பௌத்த சமயத்தவர்களாகக் காணப்பட்டமை.
  - முதலாம் விமலதர்ம சூரிய மன்னனால் பௌத்த மறுமலர்ச்சி ஆரம்பிக்கப்பட்டமை.
  - இடையிடையே பர்மா, தாய்லாந்து (சீயம்) நாடுகளின் உதவியுடன் உபசம்பதா நடாத்தப் பட்டமை.
  - வெலிவிட்ட சரணங்கர தேரர் பௌத்த மறுமலர்ச்சியின் முன்னோடியாகச் செயற்பட்டமை.
  - பிரிவெனாக் கல்வி முறை வளர்ச்சியடைந்தமை.
  - ஆட்சிக்குவந்த அரசர்கள் அனைவரும் பௌத்த சமய வளர்ச்சிக்குப் பாடுபட்டமை.
    உதாரணம்: முதலாம் விமலதர்ம சூரிய மன்னன் கண்டியில் தலதா மாளிகையை அமைத்து தெல்கமுவையிலிருந்த புனித தந்ததாதுவைக் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்தமை.



***தலதா மாளிகையின் பத்திரிப்பு (எண்கோண மண்டபம்)***
*( Source: http://wonderfulwanderings.com/temple-of-the-tooth-relic-kandy-sri-lanka)*

- **இந்து சமயம்**
  - கண்டி இராச்சியத்தில் நாயக்கர் வம்சத்தவர் ஆட்சி பீடமேறியமையால் இந்து சமயம் பரவலடைந்தமை.
  - நாயக்கர் மன்னர்கள் பௌத்த சமயத்தைத் தழுவிய போதிலும் இந்து சமயக் கடவுளர்களையும் வணங்கி வழிபட்டமை.
  - விகாரைகளுடன் இந்து தேவாலயங்களும் அமைக்கப்பட்டமையும் நான்கு இந்து தேவாலயங் களும் தலதா பெரஹரா ஊர்வலத்தில் பங்கேற்றமை.



***கண்டி நாத ஆலயம்***
*( source http://amazinglanka.com/wp/asgiri-viharaya/)*

- **கிறிஸ்தவ சமயம்**
  - ஒல்லாந்தரின் அழுத்தங்களுக்கு ஆளான கரையோரக் கிறிஸ்தவர் கண்டிப் பிரதேசம் நோக்கிக் குடிபெயர்ந்தமை.
  - யோசேப் வாஸ் முதலிய கத்தோலிக்க சமய குருவானவர்கள் கண்டி இராச்சியத்திற்கு வருகை தந்து சமயப் பிரசாரப் பணியில் ஈடுபட்டமை.

- **இஸ்லாம் சமயம்**
  - வர்த்தக நோக்கத்திற்காக வருகை தந்த முஸ்லிம்களைப் போலவே போத்துக்கேயரின் அழுத்தங்களால் கண்டி இராச்சியம் வந்த முஸ்லிம்களாலும் இஸ்லாம் சமயம் பரவியமை.
  - முஸ்லிம் பள்ளிவாயில் ஒன்று கண்டியில் இருந்ததாக ரொபட்நொக்ஸ் குறிப்பிடுகின்றமை.
  - கரையோரப் பகுதியிலிருந்து புலம்பெயர்ந்த முஸ்லிம்கள் கண்டி இராச்சியத்தில் பாதுகாப்புடன் குடியமர்ந்தமையால் முஸ்லிம் மக்கள் தொகை வேகமாகக் கூடியதுடன் இஸ்லாம் சமயமும் பரவியமை.

## பொருளாதார அமைப்பு

- நுகர்வை அடிப்படையாகக் கொண்ட விவசாயப் பொருளாதாரம் நிலவியமை.
- மலைப்பாங்கான பிரதேசம் என்பதால் படிமுறை அமைப்பில் மழை நீரை நம்பி நெல் விவசாயம் மேற்கொள்ளப்பட்டமை.
- சேனைப் பயிர்ச் செய்கைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டதுடன், அதில் தானிய வகைகள் உட்படப் பல பயிர்ச் செய்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.
- கால்நடை வளர்ப்பிற்கும் முக்கிய இடம் வழங்கப்பட்டதுடன் பசுமாடுகள், காளை மாடுகள் வளர்க்கப்பட்டமை.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகம் இடம் பெற்றமை.

- உள்நாட்டு வர்த்தகமானது பெருமளவில் பண்டமாற்று அடிப்படையிலும் சிறியளவில் பணப் பயன்பாட்டின் அடிப்படையிலும் நடைபெற்றமை.
- ஒன்றுடனொன்று தொடர்புபட்ட வகையில் மலையகக் கிராமங்கள் ஊடாக அமையப் பெற்றிருந்த பாதைகளின் அருகில் துணிகள், உப்பு, புகையிலை, வெங்காயம் மற்றும் மட்பாண்டங்கள், மருந்துப் பொருட்கள், உலோகப் பொருட்கள் போன்றன விற்கப்படும் சிறு கடைகள் இருந்ததாக ரொபட் நொக்ஸ் குறிப்பிட்டுள்ளமை.
- வெளிநாட்டு வர்த்தகத்தில் முஸ்லிம்கள் இடைத்தரகர்களாகச் செயற்பட்டமை.
- வெளிநாட்டு வர்த்தகம் அதிகளவில் இந்தியா, போர்த்துக்கல், ஒல்லாந்து போன்ற நாடுகளுடன் இடம் பெற்றமை.
- பிரதான ஏற்றுமதிப் பொருட்களாக யானை, யானைத் தந்தம், முத்து, மாணிக்கம், பாக்கு உட்பட ஏனைய பலசரக்குகள் முக்கியம் பெற்றிருந்தமை.
- கண்டி மன்னர்கள், வர்த்த நடவடிக்கைகளுக்காகக் கற்பிட்டி, கொட்டியாரம் போன்ற பகுதிகளைப் பெருமளவில் பயன்படுத்தியமை.

**சமூக அமைப்பு**

- நாட்டின் அனைத்து நிலங்களுக்கும் உரிமையாளனாக மன்னன் ஏற்றுக்கொள்ளப்பட்டமை.
- நிலத்தின் உரிமை மற்றும் உபயோகப்படுத்தலை அடிப்படையாகக் கொண்டு கபடாகம், நிந்தகம், விகாரகம், தேவாலகம், பரவேனிகம் எனப் பல பிரிவுகளாகக் காணப்பட்டமை.
- குடியானவன் தான் உபயோகப்படுத்தும் நிலத்துக்காக ஏதேனும் ஒரு சேவையை அல்லது பொருளைக் கொடுத்தமை.
- சமூகத்தின் பிரதான அலகாக குடும்பம் இருந்தமை.
- குல முறையை அடிப்படையாகக் கொண்ட கிராமிய சுயதேவைப் பூர்த்திச் சமூகம் நிலவியமை.
- அந்தந்த குலத்துக்கென வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளைக் காண முடிகின்றமை.
- ஒத்த குலங்களிடையில் திருமணங்கள் நடைபெற்றமை.
- திருமணமானது தீக திருமணம் (மனைவி கணவன் வீட்டில் வசித்தல்), பின்ன திருமணம் (கணவன் மனைவி வீட்டில் வசித்தல்), பல புருஷ திருமணம் எனும் மூன்று முறைகளில் செயற்பட்டமை.
- அத்தம் முறைப்படி விவசாய நடவடிக்கைள் இடம்பெற்றதுடன் கிராமத்தவர் அனைவரினதும் ஒத்துழைப்புடன் ஒவ்வொருவரதும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டமை.
- விகாரையுடன் ஒன்றிணைந்த பண்பட்ட சமூகமாகக் காணப்பட்டமை.

**கல்வி**

- கண்டி இராச்சியத்தில் உருவாகியிருந்த சீரற்ற அரசியல் நிலை காரணமாக முற்பாகத்தில் கல்வியில் பின்னடைவினைக் காண முடிகின்றது.
- கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனது அனுசரணையின் கீழ் வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரின் மாணவ பிக்குகள் இராச்சியம் முழுவதிலும் கல்வி மறு மலர்ச்சி உருவாகப் பங்களித்தமை.
- விகாரையை மையமாகக் கொண்ட கல்வி நிலையங்கள் பல வளர்ச்சியுற்றமை. (அஸ்கிரிய, கங்காராமய, சுதுஹு"ம்பொல, அம்பிட்டிய, தித்தவெல, போயமலு விகாரை, எம்பெக்க அருகில் நியமகன்த பிரிவெனா)



பழைய அஸ்கிரி விகாரை

*( source http://amazinglanka.com/wp/ asgiri-viharaya/)*

## இலக்கியம்

- வெலிவிட்ட சரணங்கர தேரர், திப்பொட்டுவாவ புத்தரக்கித தேரர், கொரதொட தம்மாநந்த தேரர் போன்ற கல்வி கற்ற பிக்குமார் அதிகளவில் தோற்றம் பெற்றமை.
- இந்தப் பிக்குகளினால் மொழிக்கலையில் பயிற்றப்பட்ட இராஜாதிராஜசிங்க போன்ற ஆட்சியாளர்கள் நூலுருவாக்கத்தில் ஈடுபட்டமை.
- பல்வேறு இலக்கிய நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டமை.
  - புகழ் காவியங்கள் : ராஜசிங்க வர்ணனை, இங்கிரிஸி ஹடன, ராஜசிங்க சிரித
  - கதைச் செய்யுள்கள்: வெஸ்ஸந்தர ஜாதக, தேவதர்ம ஜாதக, சுமுகுதாகவா, தெருவன்மாலா, முத்துகுமாரி கதாவ (கதை)
  - வேறு : பேசஜ்ஜ மஞ்ஜுசாவ சன்னச, சதரபணவர சன்னச, சத்தர்மாவவாத, பத்தினி ஹேல்ல, கணதெவி ஹேல்ல. வெலிவிட்ட சரணங்கர தேரரின் மாணவர்களின் மாணவர்களான திக்வல்ல ஸ்ரீ புத்தரக்கித தேரர், பரண கணிதயா, சாலி எலே வனரத்ன தேரர் முதலிய கல்விமான்கள் நூல்கள் எழுதியமை.
- பிற்காலத்தில் இலங்கையில் தெற்கே (மாத்தறை இலக்கிய யுகம்) உண்டாகிய இலக்கிய மறுமலர்ச்சிக்கு இது பின்னணியாகக் காணப்பட்டமை.

## கலை

- மரம் கருங்கல், யானைத்தந்தம், செம்பு, பித்தளை, தங்கம், வெள்ளி போன்ற பல மூலகங்களால் செய்யப்பட்ட பல்வேறு நிர்மாணங்கள் காணக்கிடைக்கின்றமை.
- கண்டி தலதா மாளிகை, ரிதி விகாரை, கண்டி நூதனசாலை, எம்பக்க இந்து தேவாலயம் போன்ற இடங்களில் இவை மிகுதியாக உள்ளமை.
- சித்திரக் கலையின் வளர்ச்சிக்கு அரசின் ஆதரவு தொடர்ச்சியாகக் கிடைத்தமை.
- ஜாதகக் கதைகள் மற்றும் புத்த அனுட்டானங்களை ஓவியமாக்குதல் அதிகளவில் இடம்பெற்றமை.
- பல்வேறு தாவரங்கள், பாறை வகைகள், பிசின் வகைகள் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட வெள்ளை, கறுப்பு, மஞ்சள், சிவப்பு போன்ற வர்ணத் தீந்தைகளை ஓவியம் வரைய பயன்படுத்தியமை.
- தம்புள்ள குகை விகாரை, மற்றும் தலதா மாளிகை என்பவற்றில் உள்ள சித்திரங்கள் இந்த யுகத்திற்குரிய உன்னத படைப்புக்களாக முக்கியம் பெற்றமை.



தலதா மாளிகையின் ஓவியங்கள்

*(source http://www.descoperalocuri.ro/vacante-in-afara-tarii/destinatii-exotice-din-*asia.html)

**தேர்ச்சி மட்டம்** : 7.2 கரையோர பகுதிகளில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரது நடவடிக்கைகளைக் விபரிப்பர்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :
- கரையோர பகுதிகளைப் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் கைப்பற்றிய விதத்தினை விளக்குவார்.
- கரையோரப் பகுதிகளில் நிலவிய போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரது பரிலான முறைகளை விளக்குவார்.
- போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரின் கீழிருந்த பிரதேசங்களை இலங்கைத் தேசப்படத்தில் குறிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**

பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

- இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்ட விதம்.
- போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் இலங்கையின் சுதேச அரசுகளுடன் செயற்பட்ட விதம்.
- போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரது பொருளாதார, சமய கொள்கைகள்.
- கடற்கரையோரப் பகுதிகளில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரது ஆட்சிக் காலங்களில் ஏற்பட்ட சமூக மற்றும் கலாசார செல்வாக்குகள்.

## போர்த்துக்கேயரின் இலங்கை வருகை

- போர்த்துக்கேயர் கிறிஸ்தவ சமயப் பிரசார மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக கீழைத் தேயத்துக்கு வருகை தந்தமை.
- லோரன்ஸோத அல்மேடா, தலைமையில் வந்த போர்த்துக்கேய கப்பல் குழுவொன்று கி.பி. 1505 இல் காலி துறைமுகத்திற்கு வருகை தந்தமை.
- போர்த்துக்கேயர் இலங்கை வரும்போது இங்கு கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் வன்னி சிற்றரசுகள் எனும் இராச்சியங்கள் காணப்பட்டமை.
- இலங்கைத்தீவு கறுவா உட்பட வாசனத்திரவியங்களுக்குப் பெயர் பெற்றிருந்தமையினால் போர்த்துக்கேயர் தாம் பெற்ற இவ்வாய்ப்பு பெரும் வெற்றி என்று எண்ணிச் செயற்பட்டமை.

## போர்த்துக்கேயர் கோட்டையில் அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொண்டமை

- கோட்டையில் 8ஆம் வீர பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேயர் வருகை வந்தமை. கி.பி. 1490 - 1509 காலத்தில் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் இருந்த வர்த்தக அதிகாரத்தைத் தம் கைவசப்படுத்த செயற்பட்டமை.
- கி.பி. 1521 இல் இடம்பெற்ற 'விஜயபாகு கொள்ளை' எனும் சம்பவத்தால் போர்த்துக்கேயருக்கு சாதகமான சூழலொன்று கோட்டையில் உருவானமை.
- விஜயபாகு கொள்ளையின் பின்னர் கோட்டை இராச்சியம் மூன்று பிரிவுகளாக பிரிவுற்றமை. (கோட்டை, சீதாவாக்கை, றைகம)
- சீதாவாக்கை ஆட்சியாளனான மாயாதுன்னை மன்னன் முஸ்லிம்களது உதவியுடன் போர்த்துக்கேயரை கோட்டை இராச்சியத்திலிருந்து விரட்டியடிக்க எடுத்த முயற்சிகள் தோல்வி யடைந்தமை.
- போர்த்துக்கேயரால் கோட்டை மன்னர்கள் மீது செல்வாக்குச் செலுத்த முடிந்தமை.
- 7ஆம் புவனேகபாகு மன்னனின் பின்னர் ஆட்சிக்கு வந்த தர்மபால மன்னனது பலவீனத்தால் போர்த்துக்கேயரது ஆதிக்கம் வலுவடைந்தமை.
- இறுதியில் தர்மபால மன்னனால் நன்கொடை உயில் மூலமாக கோட்டை இராச்சியம் போர்த்துக் கேயருக்கு வழங்கப்பட்டமை.

## சீதாவாக்கை இராச்சியமும் போர்த்துக்கேயரும்

- 1521 விஜயபாகு கொள்ளையின் பின் சீதாவாக்கையில் ஆட்சிக்கு வந்த மாயாதுன்னை மன்னன் போர்த்துக்கேயருக்கு எதிரான கொள்கைகளை முன்னெடுத்திருந்தமை.
- மாயாதுன்னையை எதிர்த்துப் போர்த்துக்கேயர் பல தடவை சீதாவாக்கையை ஆக்கிரமிக்க முயன்றமை.
- கி.பி. 1562 இல் போர்த்துக்கேயர் சீதாவாக்கை மீது நடாத்திய ஆக்கிரமிப்பு மாயாதுன்னையின் மகனான டிகிரி குமாரனால் (முதலாம் ராஜசிங்கன்) தோற்கடிக்கப்பட்டமை.
- மாயாதுன்னையின் இறப்புடன் டிகிரி குமாரன், முதலாம் ராஜசிங்கன் எனும் பெயரில் ஆட்சியேறியதுடன் போர்த்துக்கேயருக்கு எதிரான அச்சுறுத்தல் அதிகரித்தமை.
- முதலாம் ராஜசிங்க மன்னன் கி.பி. 1586 இல் கொழும்பு கோட்டையைச் சுற்றி வளைத்துப் போர்த்துக்கேயரை விரட்ட எடுத்த முயற்சி தோல்வியடைந்தமை.
- சீதாவாக்கை இராச்சியம் முதலாம் ராஜசிங்க மன்னனது மறைவுடன் போர்த்துக்கேயர் மற்றும் முதலாம் விமலதர்மசூரிய மன்னனால் கைப்பற்றப்பட்டமை.

## போர்த்துக்கேயரும் யாழ்ப்பாண இராச்சியமும்

- போர்த்துக்கேயர் வரும்போது ஆரியச் சக்கரவர்த்தி மன்னர் பரம்பரையில் பரராஜசேகரன் என்பவன் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தமை.
- ஆரம்ப காலகட்டங்களில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண ஆட்சியாளர்களது அரசியல் உரிமைப் போட்டிகளில் தலையிட்டமை.
- கத்தோலிக்க சமய பிரசாரத்துக்கு யாழ்ப்பாண ஆட்சியாளர்கள் காட்டிய எதிர்ப்பு நடவடிக்கைகள்.
- வர்த்தக அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணம் மீது ஆக்கிரமிப்புக் கொள்கையைப் பின்பற்றியமை.
- யாழ்ப்பாண இராச்சியத்தில் நிலவிய அரசியல் உரிமைப் போட்டி காரணமாக போர்த்துக்கேயரது அதிகாரம் மேலும் உறுதிப்படுத்தப்பட்டமை.
- இறுதியில் கி.பி. 1619 இல் பிலிப் த ஒலிவேரா தலைமையில் நடாத்தப்பட்ட படையெடுப்பில் போர்த்துக்கேயர் இரண்டாம் சங்கிலி மன்னனின் ஆட்சியைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றியமை.



போர்த்துக்கேயரால் கட்டுவதற்கு ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாணக் கோட்டையின் இன்றைய நிலை

*source:https://jaffna.city/jaffna-fort-portuguese-dutch/)*

# கரையோரப் பகுதிகளில் போர்த்துக்கேயர் ஆட்சி

## பரிபாலன முறைகள்

- சமய மற்றும் வர்த்தக நோக்கை அடிப்படையாகக் கொண்ட நிர்வாக முறையைக் கட்டியெழுப்பி இருந்தமை.
- நிர்வாக நடவடிக்கைகளுக்கான உயர்மட்ட பதவிகளில் போர்த்துக்கேய நிர்வாகிகளையும் ஏனைய பதவிகளுக்குச் சுதேச அதிகாரிகளையும் நியமித்தமை.
- சுதேச நிலவுரிமை முறையை நடைமுறைப்படுத்தியமை.

  உதாரணம்: போர்த்துக்கேய அரசன், கோவாவில் பிரதியரசன், கரையோரப் பகுதியில் கப்பித்தான் ஜெனரல்.

  திசாவணிகளில் கோறளைமார், அத்துகோறளைமார், கம்பதி எனும் கிராமத் தலைவர்.
- கரையோரப் பகுதியில் முன்பு நிலவிவந்த உள்நாட்டு நிர்வாக முறையில் கப்பித்தான் ஜெனரலின் கீழ் ஆட்சிவந்தமை.
- ஆட்சி மையத்தளமாக கொழும்பைக் கொண்டிருந்தமை.

## பிரதேச நிர்வாகம்

- கோட்டை இராச்சியத்தில் முன்னர் காணப்பட்ட பிரதேச நிர்வாகக் கட்டமைப்பு முறையை அப்படியே பின்பற்றியமை.
- நான்கு திசாவைகளாகப் பிரித்து நிர்வாகம் செய்தமை. (மாத்தறை, சப்ரகமுவ, ஏழு கோரளை, நான்கு கோரளை)
- நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்பட்ட பிரதேச நிர்வாக முறையினை/கட்டமைப்பினைப் பேணியமை.

  உதாரணம்: திசாவைகள் - கோறளைகள் - பற்றுகள் - கிராமங்கள்
- திசாவைகளுக்குப் போர்த்துக்கேய அதிகாரிகளைச் திசாவைகளாக நியமித்தமை.
- சுதேச வரி முறைமையை முன்பு போலவே நடைமுறைப்படுத்தியமை.

## போர்த்துக்கேயரது பொருளாதாரக் கொள்கை

- பிரதான பொருளாதார நோக்கமாக ஐரோப்பாவில் அதிக பெறுமதிமிக்கனவாகக் காணப்பட்ட வாசனைத் திரவியங்கள் உட்பட வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக்கொள்வது.
- அதற்காக அராபியா, சீனா, மலபார் போன்ற ஆசிய நாட்டு வர்த்தகர்களிடம் இருந்த வர்த்தக உரிமையை அபகரித்துக்கொள்வதற்காகச் செயற்பட்டமை.
- போர்த்துக்கேய அரசியல் தலைமையால், பொருளாதார நடவடிக்கைள் மேற்பார்வை செய்யப் பட்டமை.
- சுதேச சமூக, பொருளாதார நிறுவனங்களைப் பயன்படுத்திக் கொண்டமை.

  உதாரணம்: நிலவுரிமை முறை, சாதி முறை, கட்டாய சேவை, இராச காரிய முறை, வரி முறை
- சில வர்த்தகப் பொருட்கள் மீது ஏகபோக உரிமையைக் கைக்கொண்டமை. (கறுவா, யானைத் தந்தம், மாணிக்கம், முத்து)
- மலையக இராச்சியத்தில் உள்ளூர் வர்த்தகத்தில் ஈடுபட்டமை.
- ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தை நடைமுறைப்படுத்தியமை.
- ஆசிய வர்த்தக வலையமைப்புடன் இணைந்து கொண்டமை.

## போர்த்துக்கேயரது சமயக்கொள்கை

- போர்த்துக்கேயரது காலனித்துவ நிர்வாகத்தில் ஒரு பிரதான நோக்கமாக ரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல் காணப்பட்டது.
- பிரதான இரு இலக்கை அடிப்படையாகக் கொண்டு சமயக்கொள்கையை நடைமுறைப் படுத்தியமை.
  - போர்த்துக்கல் அரசுக்கு விசுவாசமான குழுவினரை உருவாக்கிக்கொள்ளல்.
  - போர்த்துக்கல் அரசு மற்றும் கோட்டை இராச்சியத்தை இணைக்கும் பாலமாக விளங்கிய பிரதானிகளை தம் சமயத்திற்கு மதமாற்றம் செய்வதன் மூலம் அரசியல் இலாபங்களைப் பெறுதல்.
- இயேசு சபை, பிரான்சிஸ்கன் சபை, டொமினிகன் சபை போன்ற மிஷனரி நிறுவனங்களின் மூலம் சமயப் பிரசாரம் செய்தமை.
- யாழ்ப்பாண இராச்சியத்திலும் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பியமை.
- சமயப் பிரசாரத்திற்காகப் பல்வேறு வழிவகைகளைக் கையாண்டமை.
  - கல்வி
  - பிரசங்கங்கள் நடாத்துதல்.
  - வெகுமதிகள், விருதுகள் மற்றும் பதவிகளை வழங்கியமை.
  - வரிகளில் இருந்து விலக்களித்தமை.
  - நீதிமன்ற நடவடிக்கைகளில் சலுகைகள் வழங்கியமை.
  - அரசு அனுமதித்த சமயங்களை மட்டும் பின்பற்ற அனுமதி வழங்கியமை.
- முஸ்லிம்கள் தொடர்பாக மிகவும் இறுக்கமான கொள்கையினைப் பின்பற்றியமை.
- சில பௌத்த, இந்து புனித நிலையங்களைக் கத்தோலிக்க புனிதத் தேவாலயங்களாக்கியமை.
- இவற்றால் இந்நாட்டில் காணப்பட்ட சமய சகிப்புத்தன்மை மற்றும் ஏனைய சமயங்களுக்கு மதிப்பளிக்கும் கொள்கைகள் வீழ்ச்சியுற்றமை.

## போர்த்துக்கேயரால் சமூக மற்றும் கலாசாரத் துறைகளுக்குக் கிடைக்கப் பெற்ற பங்களிப்பு

- பரிஸ் (பங்கு) பாடசாலைகளை நிறுவி எண் கணிதம், இலத்தின் மொழி, மேலைத்தேய சங்கீதம் போன்ற பாடங்களைக் கற்பித்தமை.
- ''எஸ் பிரிடல்'' என அறியப்பட்ட சிறிய ஆசுப்பத்திரிகைகளை (வைத்தியசாலைகளை) ஆரம்பித்தமை.
- 'மடம்' எனப்பட்ட தேவாலயத்துடன் தொடர்புபட்ட சமூக சேவை நிலையங்களை அறிமுகப் படுத்தியமை.
- இலங்கைச் சமூகத்தில் போர்த்துக்கேய பெயர்கள் இணைந்தமை.
  உதாரணம்: சீமன், மெண்டிஸ், சில்வா, பெரேரா, யுவன், கெதரின், அல்மேடா, ஜோன், டி வாஸ் என்பன அத்தகைய சில பெயர்கள் ஆகும்.
- போர்த்துக்கேய உடை அலங்காரம் - கமிசை, களிசான், சட்டை, பாவாடை (சாயா), கைநீளச் சட்டை போன்றன.
- போர்த்துக்கேய உணவு - சம்பல், அச்சாறு, வினாகிரி, சலாது, பாண், வைன்
- மேடை நாடக முறை, பைலா, கபிரிஞ்ஞா நடனம் போன்றவற்றை அறிமுகப்படுத்தியமை.
- அன்னாசி, ஈரப்பலா, தூரியன், ரம்புட்டான் போன்ற பயிர்களை அறிமுகப்படுத்தியமை.



போர்த்துக்கேயரின் ஆடைகள்

*(source: http://www.sundaytimes.lk)*

**ஒல்லாந்தர் இலங்கைக்கு வருகை தருதல்**

- ஒல்லாந்தர் பொருளாதார நோக்கை அடிப்படையாகக் கொண்ட காலனித்துவக் கொள்கையை செயற்படுத்தியதுடன் சமயத்திற்கு இரண்டாவது இடத்தைக் கொடுத்தனர்.
- ஒல்லாந்து மன்னனது அனுமதியின் படி நிறுவப்பட்ட ஒல்லாந்து கிழக்கிந்திய கம்பனி மூலம் நிர்வாக நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டமை.
- இலங்கையில் கறுவா வர்த்தக ஏகபோக உரிமையைப் பெற்றுக்கொள்ள ஒல்லாந்தர் விசேட கவனம் செலுத்தியமை.
- போர்த்துக்கல் ஆட்சியின்போது மலையக மன்னர்களுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் உறவுகளைப் பேணிக்கொள்ள முயற்சித்தமை.

**ஒல்லாந்தரது நிர்வாகக் கொள்கைகள்**

- குறைந்த செலவில் கூடிய இலாபம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் நிர்வாகக் கொள்கைகளைச் செயற்படுத்தியமை.
- முடியுமான அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சுதேச நிர்வாக முறையைக் கையாண்டமை.
- கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் தலைமையில் நிர்வாக வலையமைப்பைக் கட்டியெழுப்பி இருந்தமை.
- உயர்மட்ட சபையாக கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் முகாமைச் சபை காணப்பட்டமை.
- பத்தேவியாவின் ஆளுநரும் அவரது ஆலோசனைச் சபையும் காலியின் ஆளுநரும் அவரது ஆலோசனைச் சபையும்
- கொமாண்டரி முறை ஆரம்பித்தமை.
- கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் என மூன்று கொமாண்டரிகளாகப் பிரித்து அவற்றைக் கொமாண்டர்மாரின் கீழ் நிர்வகித்தமை.
- சுதேச நீதிமன்றக் கட்டமைப்பின் சில விடயங்களையும் பயன்படுத்தி புதிய நீதிமன்ற கட்டமைப்பை அறிமுகப்படுத்தியமை.

  ராத் வென் ஜெஸ்டிட் - மேல் நீதிமன்றம்
  லேன்ட் ராத் - நிலம் தொடர்பான நீதிமன்றம்
  சிவில் ராத் - சிவில் நீதிமன்றம்
- கரையோரத்தவருக்கு வாசிகளுக்கு ரோமன்-டச்சுச் சட்டமும், யாழ்ப்பாணத்தவருக்கு தேச வழமைச் சட்டமும் முஸ்லிம்களுக்கு இஸ்லாமிய சட்டத் தொகுப்பையும் அறிமுகம் செய்தமை.

## ஒல்லாந்தரது பொருளாதாரக் கொள்கை

- கறுவா போன்ற விலையுயர்ந்த வர்த்தகப் பொருட்களை இங்கிருந்து பெற்றுக்கொள்வதுடன் வர்த்தக உரிமையைப் பெற்றுக்கொள்வதும் ஒல்லாந்தரது பிரதான பொருளாதார நோக்கமானது.
- ஒல்லாந்த கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி மூலம் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்காணித்தமை.
- சுதேச நிலவுரிமை முறை, குல முறை அடிப்படையிலமைந்த சமூக அமைப்பு மற்றும் மரபு முறைகள் மூலம் குறைந்த செலவில் இலாபம் பெறல்.
- சில வர்த்தகப் பொருட்கள் தொடர்பாக ஏகபோக உரிமைகளைப் பேணியமை. (கறுவா, யானைத்தந்த வர்த்தகம், மாணிக்கம் அகழ்தல் மற்றும் விற்றல், முத்து விற்பனை)
- பிரதான வருவாய் தரும் பொருளாக பாக்கு முக்கியத்துவம் பெற்றமை.
- மலையக இராச்சியத்துடன் உள்நாட்டு வர்த்தகத்தைப் பேணியமை.
- உப்பு, கறுவா போன்றவற்றை மலையகத்திற்கும் அங்கிருந்து மிளகு, வெற்றிலை, கராம்பு, ஏலம், தேன் உட்பட பல திரவியங்களைக் கரையோரத்திற்கும் தவளம் முறை ஊடாகப் போக்குவரத்துச் செய்வித்தமை.
- ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தைப் பேணியமை.
- ஆசிய வர்த்தக வலையமைப்புடன் இணைந்து கொண்டமை.
- ஒல்லாந்து அரசின் செலவைக் குறைத்திடும் நோக்கில் வரையறுக்கப்பட்ட அளவில் உள்நாட்டு விவசாயத்துறை வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

  உதாரணம்:
  - முத்துராஜவலயில் பயிரிடல்.
  - பல குளங்களைப் புனரமைப்புச் செய்தமை. (யோத வாவி, கந்தளாய், கிரம மற்றும் ஊறுபொக்க)
  - கரும்பு, இன்டிகோ, பருத்தி போன்றவற்றைப் பயிரிட்டுச் சீனி உற்பத்தி, ஆடை நெய்தல் மற்றும் துணிகளுக்குச் சாயமிடல் போன்ற கைத்தொழில் களை விரிவுபடுத்தியமை.
- வரி அறவிடுதலை ஒழுங்கமைக்கத் தோம்புகளை உருவாக்கல்.
- வரி அறவிடும் உரிமைமைய ஏலத்தில் விடும் முறையை ஆரம்பித்தமை.
- மொரட்டுவையில் தச்சுத் தொழிலை விரிவுபடுத்தியமை.
- உச்ச அளவில் இலாபம் பெறும் நோக்கில் யுத்தச் செலவைக் குறைத்துக் கொண்டமை.

## ஒல்லாந்தரது சமயக் கொள்கை

- புரட்டஸ்டன்ட் (புரட்டஸ்தாந்து) சமயத்தைப் பரவச் செய்தமை.
- 1656 இல் சமயப் பரப்பலை மேற்கொள்ள பிலிப் பல்தியஸ் பாதிரியார் இலங்கைக்கு வந்தமை.
- பௌத்த, இந்து மற்றும் கத்தோலிக்க மக்களைப் புரட்டஸ்தாந்து சமயத்திற்கு மதமாற்றம் செய்திட மதகுருமார் நடவடிக்கை எடுத்தமை.
- புரட்டஸ்தாந்து சமயத்தை ஏற்காத எவருக்கும் அரசின் உயர் மட்டப் பதவிகளை வழங்காமை.
- புரட்டஸ்தாந்து கிறிஸ்தவத்தை ஏற்போருக்கு உயர் பட்டம், பதவிகள், பரிசுகள், பரிந்துரைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- 'இஸ்கூல்' ஆரம்பிக்கப்பட்டு அதனைச் சமயப் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டமை.
- ஏனைய சமயப் பிள்ளைகளை (ஞானஸ்நானத்தின்) பின்னர் பாடசாலைகளுக்கு உள்வாங்கியமை.
- ஐரோப்பிய பிள்ளைகளுக்கு 'கொழும்பு செமினரி' என வேறாக பாடசாலைகளை ஆரம்பித்தமை.
- ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கக் கொழும்பு நகரில் 'நோமல் பாடசாலை' ஆரம்பித்தமை.
- கற்றல் நடவடிக்கைகளைக் கொலாச் கொமிசன் சபையொன்றின் மூலம் நிர்வகித்தமை.
- 1739 இல் சிங்கள அச்சு இயந்திரத்தை அறிமுகப்படுத்தி சிங்களத்தில் பைபிளை அச்சிட்டுப் பிரசுரித்தமை.

## ஒல்லாந்தரது சமூக மற்றும் கலாசாரச் செல்வாக்கு

- உரோமன்-டச்சுச் சட்ட முறையை அறிமுகப்படுத்தியமையால் இந்நாட்டில் நிலவிய (பலதார மணத்திற்குப்) பதிலாக ஒருதார விவாக முறைச் சட்டம் உட்பட சமூக மாற்றங்கள் பல இடம்பெறல்.
- சுதேச மக்களைத் தமது சமயத்திற்குள் உள்வாங்கப் பல்வேறு வழிகளினை மேற் கொண்டமையால் சாதி முறையை அடிப்படையாகக் கொண்ட இலங்கையின் சமூக முறை மாற்றமுற்று, சாதி முறையில் மாற்றங்கள் ஏற்பட்டமை.
- போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தரிடையில் கலப்புத் திருமணம் இடம்பெற்று பறங்கி எனப்படும் கலப்பு இனத்தவர் இந்நாட்டுச் சமூகத்துள் இணைந்தமை.
- சுதேச மொழிகளுக்குள் பல்வேறு சொற்கள் இணைந்தமை மற்றும் அவர்களது உணவு, ஆடை அலங்காரம் என்பவற்றிற்குப் பழக்கப்பட்டதால் சுதேச சமூகத்தில் அதிக மாற்றங்கள் இடம்பெற்றமை.

  உதாரணம்: ஒல்லாந்து சொற்கள்: இஸ்தோப்பு, சொல்தர், ஓர்லோசு, விறாந்தை
  ஒல்லாந்து உணவுகள்: கொகிஸ், அச்சாறு
- ஒல்லாந்துக் கட்டடக்கலை முறைப்படி அமைக்கப்பட்ட இடப்பட்ட தூண்கள் மற்றும் உயர்ந்த வாயிற்படிகள் (கதவுநிலை) உடன் கூடிய வீடுகள் உருவாக்கம்.

  உதாரணம்: ஆதுருப்பு வீதியில் உள்ள ஆலயம் மற்றும் பாடசாலையில் ஒல்லாந்து முறைப்படி செய்த அலுமாரி, பெட்டகம், கதிரை, கட்டில், மேசை போன்ற தளபாடங்கள்.
- மேலைத்தேய வைத்தியச் சேவையொன்றை ஆரம்பித்தமை.
- அச்சு இயந்திரத்தை அறிமுகப்படுத்தியமை.
- குஷ்ட நோய்க்கு நிவாரணம் வழங்க குஷ்டரோக வைத்தியசாலைகளை அறிமுகப்படுத்தியமை.



ஒல்லாந்தரால் காலியில் அமைக்கப்பட்ட வைத்தியசாலை (ஆஸ்பத்திரி)

*(source :https://commons.wikimedia.org/wiki/File:Galle-Old_Dutch_Hospital_Building.jpg)*




ஒல்லாந்தரின் மரத்தளபாடங்கள்
*(source :http://www.christies.com)*

**இலக்கம் 01 - 02 வரையிலான ஒவ்வொரு வினாவுக்கும் முறையே ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஏதோவொரு காரணத்தால் ஏனையவற்றுடன் பொருந்தாது. அவ்வாறு பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. பேரோ லோபேஸ் த சூசா 2. ஜெரனிமோ த அசவேது
2. கொன்ஸ்தான்தீனுத நோரென் ஞா 4. லோரேன்ஸ்ஸோ த அல்மேடா
5. தியோகோத மெலோ கெஸ்திரோ (...........)

02. 1. செமினமரி 2. சிவில் ராத்
3. ராத் வேன் ஜஸ்டிட் 4. லேண்ட் ராத்
5. ரோமன் டச்சு சட்டம் (...........)

**இல. 03 தொடக்கம் 04 வரையில் ஐந்து சோடிகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சோடி பொருத்தமற்றது. அந்தச் சோடிக்குரிய இலக்கத்தை முன்னுள்ள அடைப்பினுள் எழுதுங்கள்.**

03. 1. தர்மபால - தொன் யுவான்
2. கரல்லியத்த பண்டார - தொன் யுவான் த கஸ்திரோ
3. யமசிங்க பண்டார - தொம் பிலிப்
4. குசுமாசன தேவி - தோனா கதரினா
5. கோணப்பு பண்டார - ஒஸ்டிரியாவே தொன் யுவான்

(...........)

04. 1. ஜோரிஸ் பன் ஸ்பில் பேர்ஜன் - முதலாம் விமலதர்மசூரிய மன்னன்
2. ஜோன் பைபஸ் - கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன்
3. ஹியூ பொய்ட் - இரண்டாம் இராஜசிங்க மன்னன்
4. ரொபட் என்ட்ரூஸ் - ராஜாதிராஜசிங்க மன்னன்
5. மெக்டோவல் - ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் (...........)

**இல. 05 முதல் 06 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள (A), (B), (C), (D) ஆகிய நான்கு கூற்றுக்களில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவையாகும். சரியான கூற்று அல்லது கூற்றுக்களைத் தெரிவு செய்யும்போது,**

(A) மற்றும் (B) சரியானது ஆயின் (1) எனவும்
(B) மற்றும் (C) சரியானது ஆயின் (2) எனவும்
(C) மற்றும் (D) சரியானது ஆயின் (3) எனவும்
(A) மற்றும் (C) சரியானது ஆயின் (4) எனவும்
கூற்றுக்களுள் ஒன்று அல்லது இரண்டுக்கும் அதிகமானவை சரியானவை ஆயின், (5) எனவும் அடைப்பினுள் எழுதுங்கள்.

05. பதினாறாம் நூற்றாண்டில் கோட்டை இராச்சியம் தொடர்பாகக் கீழே தரப்பட்டுள்ள எந்தக் கூற்று/கூற்றுக்கள் சரியானவையாகும்?
(A) 1521 இல் இடம்பெற்ற விஜயபாகு கொள்ளையின் ஒரு விளைவாக கோட்டை இராச்சியம் மூன்று பிரிவுகளானது.
(B) றைகம் பண்டாரவின் மரணத்தின் பின்னர் அவரது ஆட்சிப் பிரதேசம் ஏழாம் புவனேகபாகு மன்னனால் கோட்டை இராச்சியத்துடன் இணைக்கப்பட்டது.
(C) 1505 இல் போர்த்துக்கேயர் தர்மபால மன்னனைக் கொழும்புக்குக் கூட்டிச் சென்ற பின்னர் அதுவரையில் தலைநகராக இருந்த கோட்டையைக் கைவிட்டுவிட்டனர்.
(D) கத்தோலிக்க சமயத்துக்கு மதம் மாறிய முதல் கோட்டை ஆட்சியாளன் ஏழாம் புவனேகபாகு மன்னன் ஆவான்.
(...........)

06.
(A) தமது பொருளாதார நடவடிக்கைகளுக்குப் போர்த்துக்கேயர் பாரம்பரிய சிங்கள வழி முறைகளைப் பயன்படுத்தவில்லை.
(B) போர்த்துக்கேயரது பொருளாதாரக் கொள்கையில் பிரதான நோக்கமாக கறுவாவைப் பெற்றுக்கொள்வது காணப்பட்டது.
(C) போர்த்துக்கேயர் தோம்புகளை உருவாக்கினர்.
(D) போர்த்துக்கேயர் வர்த்தகப் பயிராக கறுவாவைப் பயிரிட்டனர்.
(...........)

இல. 07 முதல் 10 வரையான வினா ஒவ்வொன்றுக்கும் இரண்டு கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அக்கூற்றுக்களுக்கிடையேயான தொடர்பு பற்றிய சரியான விடையினைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1. | சரி | பிழை |
| 2. | சரி | சரி |
| 3. | பிழை | பிழை |
| 4. | பிழை | சரி |
| 5. | சரி | சரி மற்றும் முதலாவது கூற்றைச் சிறப்புற விளக்குகிறது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 07. | போர்த்துக்கேயர் சில சுதேச சமூக மற்றும் பொருளாதார நிறுவனங்களைத் தமது தனிப் பட்ட பொருளாதார நலனுக்காகப் பயன்படுத் திக் கொண்டனர். | போர்த்துக்கேயர் பாரம்பரிய நிலவுரிமை முறை, சாதி மற்றும் இராஜகாரிய முறை என்பவற்றைத் தொடர்ந்தும் பேணியதுடன் அவற்றைக் கறுவா மற்றும் ஏனைய பொருட் களை விலைக்கு வாங்கப் பயன்படுத்திக் கொண்டமை. (...........) |
| 08. | இலங்கையை லௌகீக மற்றும் ஆன்மீக ரீதியில் வெற்றிகொள்ளல். (The Temporal ad Spiritual Coquest of Ceylon) எனும் பிரசித்தி பெற்ற நூல் பர்னாவோ த குவேரோஸ் பாதி ரியாரினால் எழுதப்பட்டது. | இலங்கையில் கரையோர பிரதேசங்களில் நிலவிய ஒல்லாந்தரது ஆட்சியின் முக்கிய விளைவாக, ரோமன் கத்தோலிக்க சமயத் தினை அறிமுகம் செய்தமை காணப்படு கின்றது. (...........) |
| 09. | சுதேச நிர்வாகக் கட்டமைப்பை அவ்வாறே ஏற்ற ஒல்லாந்தர் அதைத் தமது நோக்கங் களுக்கு ஏற்ற வகையில் ஒழுங்கமைத்துக் கொண்டனர். | ஒல்லாந்தர் அனைத்துத் திசாவைகளிலும் காணப்பட்ட கோறளைகள், பற்றுகள், கிராமங்கள் எனும் பாரம்பரிய பிரிவுகளை அவற்றுக்குப் பொறுப்பாயிருந்த நிர்வாக அதிகாரிகள் முதலிமார், கோறளைமார், அத்துகோறளைமார் உடன் தொடர்ந்தும் செயற்பட்டனர். (...........) |
| 10. | ஒல்லாந்தர் தேசவழமையூடாகத் தமிழர் சட்டம் மற்றும் பழக்க வழக்கங்களை முதல் தடவையாகத் தொகுத்தனர். | 1810 நீதிக் கொள்கை ஊடாக உச்ச நீதி மன்றத்தில் குற்றவியல் வழக்குகளை விசாரிக்க யூரி சபை முறையை அறிமுகப் படுத்தியமை. (...........) |

01. i. போர்த்துக்கேயர் மலையகத்தை ஆக்கிரமிப்புச் செய்யத் தூண்டிய காரணிகளைக் குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

ii. அந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் தோல்வியுற்றது ஏன் என்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

02. இலங்கையில் கரையோரப் பகுதிகளில் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பின்பற்றிய நிர்வாகக் கொள்கைகளைப் பின்வரும் தலைப்புக்களில் ஒப்பிட்டு ஆராய்க.

1. நோக்கம் 2. மத்திய நிர்வாகம் 3. பிரதேச நிர்வாகம்

(14 புள்ளிகள்)

03. 1594 தொடக்கம் 1638 வரையில் போர்த்துக்கேயர் மலையக இராச்சியத்தின் மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்களை விளக்குக.

(14 புள்ளிகள்)

04. போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சியின் காரணமாக இலங்கையின் கரையோரப் பகுதிகளில் கலாசார ரீதியாக ஏற்பட்ட விளைவுகள் யாவை?

(14 புள்ளிகள்)

05. A அல்லது B பகுதிக்கு மட்டும் விடை எழுதுங்கள்.

(A) போர்த்துக்கேயர் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பின்பற்றிய சமயக் கொள்கையின் பிரதான நோக்கங்களைக் குறிப்பிட்டுத் தமது சமயத்தை பரப்புவதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகளை ஆராய்க.

(B) ஒல்லாந்தரால் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கையின் பிரதான பண்புகளை ஆராய்க.

## மதிப்பீடு 02

**இலக்கம் 01 - 02 வரையிலான வினாக்களுக்கு முறையே தரப்பட்டுள்ள 5 சொற்களில் ஒன்று ஏதோவொரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. அச்சொல்லின் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

01. 1. தந்துரைப் போர் 2. வெல்லஸ்ஸ போர் 3. பலன போர்
4. ரன்தெனிவல போர் 5. கன்னொருவ போர் (...........)

02. 1. உடுநுவர 2. யடிநுவர 3. மதுரட்ட 4. தும்பறை 5. ஹேவாஹெட்ட
(...........)

**இல. 03 தொடக்கம் 04 வரையில் வசனச் சோடிகள் ஐந்து வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு சோடி ஒன்றோடொன்று பொருந்தாது. அந்தச் சோடிக்குரிய இலக்கத்தை முன்னுள்ள அடைப்பினுள் எழுதுங்கள்.**

03.
1. 1617 உடன்படிக்கை - செனரத் மன்னன் மற்றும் போர்த்துக்கேயர்
2. 1638 உடன்படிக்கை - இரண்டாம் ராஜசிங்க மன்னன் மற்றும் ஒல்லாந்தர்
3. 1766 உடன்படிக்கை - கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் மற்றும் ஒல்லாந்தர்
4. 1796 உடன்படிக்கை - பிரித்தானியர் மற்றும் இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன்
5. 1815 உடன்படிக்கை - மலையக பிரதானிகள் மற்றும் பிரித்தானியர்

(...........)

04.
1. முல்லேரியா போர் - லோரேன்ஸோ த அல்மேடா
2. தந்துரை போர் - பேரோ லோபஸ்த சூசா
3. பலன போர் - தொன் ஜெரனிமோ த அசவிடோ
4. ரன்தெனிவெல போர் - கொன்ஸ்தன்தைன் த சா
5. கன்னொறுவா போர் - தியோகு த மெலோ கெஸ்ட்ரோ (...........)

**இல. 05 முதல் 06 வரையான வினாக்களுள் பெயர்/கூற்று/காலங்கள் X, Y நிரலில் தரப்பட்டுள்ளன. Y நிரலில் தரப்பட்டுள்ள பெயர்/கூற்று/காலங்கள் X நிரலில் உள்ளவற்றுடன் ஏதோ ஒரு வகையில் பொருந்துகின்றன. ஆனால் அவை பொருந்தும் ஒழுங்கில் தரப்படவில்லை. Y நிரை X நிரையுடன் பொருந்தும் ஒழுங்கில் ஒழுங்கமைக்கப்பட்டபோது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைக் கீழே தரப்பட்டுள்ள 5 விடைத் தொகுதிகளிலிருந்து தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

05.

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | 1562 | A | பலனப்போர் |
| 2. | 1594 | B | கன்னொறுவாப் போர் |
| 3. | 1602 | C | முல்லேரியாப் போர் |
| 4. | 1630 | D | தந்துரைப் போர் |
| 5. | 1638 | E | ரந்தெனிவலப் போர் |

1. EDABC 2. DEACB 3. CBDAE 4. CDAEB 5. BEADC

06.

| | X | | Y |
|---|---|---|---|
| 1. | கொட்டல் வரி | A | யானைகள் தொடர்பானது. |
| 2. | கின்னர வரி | B | வனைதல் தொடர்பானது. |
| 3. | குருவே வரி | C | கலைஞர்கள் தொடர்பானது. |
| 4. | மடிகே வரி | D | நெசவுத்தொழில் தொடர்பானது. |
| 5. | படஹெல வரி | E | போக்குவரத்துத் தொடர்பானது. |

1. BDEAC 2. CDAEB 3. CBDEA 4. AEDBC 5. EBACD

**இல. 07 முதல் 08 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தை முன்னுள்ள அடைப்பினுள் எழுதுக.**

07. இலங்கையின் சிங்கள அரச வம்சாவழியில் கடைசி மன்னன் யார்?
   1. ராஜசிங்க மன்னன்
   2. இரண்டாம் விமலதர்ம சூரிய மன்னன்
   3. ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்க மன்னன்
   4. கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன்
   5. ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னன் (...........)

08. மலையக மன்னர்களைச் சரியான ஒழுங்கில் குறிக்கும் தொகுதி எது?
   1. முதலாவது விமலதர்மசூரியன், இரண்டாம் விமலதர்ம சூரியன், இரண்டாம் ராஜசிங்கன், செனரத், ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்
   2. முதலாவது விமலதர்மசூரியன், இரண்டாம் விமலதர்ம சூரியன், செனரத், இரண்டாம் ராஜசிங்கன், ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்
   3. முதலாவது விமலதர்மசூரியன், செனரத், இரண்டாம் ராஜசிங்கன், இரண்டாம் விமலதர்ம சூரியன், ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்
   4. முதலாவது விமலதர்மசூரியன், இரண்டாம் ராஜசிங்கன், இரண்டாம் விமலதர்ம சூரியன், செனரத், ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன்
   5. முதலாவது விமலதர்மசூரியன், செனரத், இரண்டாம் விமலதர்ம சூரியன், இரண்டாம் ராஜசிங்கன், ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் (...........)

**இல. 09 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் குறித்த தலைப்பிற்குப் பொருந்தாத விடயத்தைத் தெரிவுசெய்து அதற்குரிய இலக்கத்தை முன்னால் உள்ள அடைப்பினுள் இடுக.**

09. மலையக இராச்சியம்
   1. சேனா சம்மத விக்கிரமபாகு மலையக இராச்சியத்தைத் தோற்றுவித்த மன்னனாகக் கருதப்படுகின்றான்.
   2. யமசிங்க பண்டார இளவரசனுக்கு தொனா கதரினா இளவரசியைத் திருமணம் செய்வித்து, தொனா கதரினாவைப் போர்த்துக்கேயர் மலையகத்தின் ஆட்சியில் அமர்த்தினர்.
   3. 1594 இல் பேறோ லோபேஸ் த சூசாவின் தலைமையின் கீழ் நடாத்தப்பட்ட போர்த்துக்கேய ஆக்கிரமிப்பைத் தோல்வியுறச் செய்த விமலதர்மசூரிய மன்னன் மலையக இராச்சியத்தின் அதிகாரத்தை உறுதிப்படுத்திக்கொண்டான்.
   4. ஒல்லாந்தரிடமிருந்து யுத்த ஆதரவைப் பெற்றுக்கொண்ட இரண்டாம் இராஜசிங்க மன்னன் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து விரட்டியடித்தான்.
   5. மலையக இராச்சியத்தில் சிங்கள அரச வம்சாவழியில் இறுதி மன்னன் ஸ்ரீ வீர பராக்கிரம நரேந்திரசிங்கன் ஆவான்.

(...........)

10. இரண்டாம் ராஜசிங்க மன்னன்
   1. 1630 ரன்தெனிவெலப் போரில் மலையக இராணுவத்தை வெற்றிகரமாக வழிநடாத்தியமை.
   2. 1638 இல் ஒல்லாந்தருடன் உடன்படிக்கையொன்று செய்து கொண்டமை.
   3. உபசம்பதா விழாவை நடாத்த சீயத்திலிருந்து பிக்குகளை வரவழைத்தமை.
   4. ஒல்லாந்தரது ஆதரவுடன் இலங்கையின் கடற்கரையோரப் பிரதேசங்களில் இருந்து போர்த்துக்கேயரை விரட்டியடித்தமை.
   5. மலையக இராச்சியத்தில் றொபட் நொக்ஸ் சிறைக்கைதியாக ஆக்கப்பட்டமை.

(...........)

01. "போர்த்துக்கேயரை விரட்டியடிக்கவும் ஒல்லாந்தரது அதிகாரத்தைக் குறைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டமையால், இரண்டாம் இராஜசிங்க மன்னனைச் சிறந்த ஆட்சியாளனாகக் கருதலாம்."
இக்கூற்றைக் கலந்துரையாடுக.

(14 புள்ளிகள்)

02. வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரரினால் புத்த சாசனத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகளைப் பரிசீலிக்குக.

(14 புள்ளிகள்)

03. (i) 1594 முதல் 1638 வரையில் மலையக இராச்சியத்தின்மீது தொடுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை விளக்குக.
   (ii) அந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது மலையக இராச்சியம் தன் சுயாதீனத்தைப் பாதுகாத்துக்கொள்ள உதவிய காரணிகளைக் கலந்துரையாடுக.

(7 x 2 = 14 புள்ளிகள்)

04. இலங்கையின் சுயாதீனத்தைப் பாதுகாத்துக் கொள்ள மலையக மன்னர்கள் எடுத்த முயற்சிகளைக் கீழ்வரும் தலைப்புக்களில் விளக்குக.

   (i) போர்த்துக்கேய மற்றும் ஒல்லாந்தரது ஆக்கிரமிப்புக்களின்போது மலையக இராச்சியத்தைப் பாதுகாத்துக்கொண்டமை.
   (ii) புத்த சாசனத்தைப் பாதுகாத்துக்கொண்டமையும் அவற்றை நிலைநிறுத்தியமையும்

(2 x 7 = 14 புள்ளிகள்)

05. கீழே தரப்பட்டுள்ள தலைப்புக்களில் ஏதேனும் **இரண்டின்** வரலாற்று முக்கியத்துவம் பற்றி சிறுகுறிப்பு எழுதுக.

   (i) வெலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர்.
   (ii) போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண இராச்சியத்துக்கும் இடையிலான தொடர்பு
   (iii) முதலாம் இராஜசிங்க மன்னனது அரசியல் நடவடிக்கைகள்
   (iv) கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன்
   (v) நாயக்க வம்சாவழி
   (vi) போர்த்துக்கேயரது மலையக ஆக்கிரமிப்புக்கள்

(2 x 7 = 14 புள்ளிகள்)

# 8. பிரித்தானியர் இலங்கையில் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளுதலும் வலுப்படுத்திக் கொண்டமையும்

## அறிமுகம்

வர்த்தகம் மற்றும் சமய பிரசார நோக்கில் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொள்வதற்காக பிரித்தானியர் கீழைத்தேயத்திற்கு வருகை தந்தனர். அவர்கள் இந்தியாவில் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொண்டு, நூறாண்டுகளின் பின்னர் இலங்கையின் மீது கவனம் செலுத்தினர். அதன்போது இலங்கையின் கடற்கரையோரப் பிரதேசங்களை ஆட்சி செய்துகொண்டிருந்த ஒல்லாந்தரைத் தோற்கடித்து கி.பி. 1796 இல் ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி தன் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொண்டது. பின்னர் அவர்களது கவனம் மலையக இராச்சியம் மீது திரும்பியது. அதன் விளைவாக மலையகத்தை அடிபணியச் செய்து, முழு இலங்கையையும் தம் குடியேற்ற நாடாக ஆக்கிக் கொண்டனர். தமது சுதந்திரத்தை இழந்த இலங்கையர் 1818, 1848 ஆகிய வருடங்களில் தமது சுதந்திரப் போராட்டங்களை மேற்கொண்டனர். எனினும் அம்முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின. ஏற்கனவே இருந்த நிர்வாக அமைப்பில் மாற்றங்களைக் கொண்டுவந்த ஆங்கிலேயர் தமது பொருளாதார நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு, 1833 இல் கோல்புரூக் கமரன் ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி யாப்புச் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தினர். இவ்வாறு பிரித்தானியர் படிப்படியாக இலங்கையில் தம் அதிகாரத்தை வலுப்படுத்திக் கொண்டமை பற்றி இவ்வலகில் விளக்கப்படுகிறது.

**தேர்ச்சி** : • இலங்கை நாகரிகத்தின் வரலாற்று ரீதியிலான வெளிப்பாடு மற்றும் போக்கு பற்றிய விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 8.1 பிரித்தானிய ஆட்சி இலங்கையில் நிலைநிறுத்தப்பட்ட விதத்தை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற்பேறுகள்** :
- பிரித்தானியர் ஆட்சி இலங்கையில் நிலைநிறுத்தப்பட்டமைக்கான காரணிகளைத் தெளிவுபடுத்துவார்.
- சுதேச எதிர்ப்பு மற்றும் அதன் செயற்பாடு பற்றி விளக்குவார்.
- தம் சுயாதீனத்தைப் பாதுகாத்துக் கொள்ளத் தோள் கொடுத்த தேசியத் தலைவர்களைப் பாராட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### கரையோரப் பகுதிகளில் பிரித்தானிய ஆட்சி ஏற்படுத்தப்படல்

- 1796 கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொள்ளல்.
- 1815 மலையகப் பகுதிகள் பிரித்தானியர் அதிகாரத்தினுள் வரல்.
- 1818 சுதந்திரப் போராட்டம்
- 1833 கோல்புரூக் சீர்திருத்தம்
- 1848 சுதந்திரப் போராட்டம்

### பிரித்தானியரின் கீழைத்தேய வருகை

- முதலாம் எலிசபெத் மகாராணி ஆசியாவின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அரச அனுமதிப் பத்திரம் ஒன்றை வர்த்தகக் கம்பனிக்குக் கொடுத்தமை.

- கி.பி. 1600 இல் பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி ஏற்படுத்தப்படல்.
- தென்கிழக்காசிய பிரதேசங்களுடன் முதலாவதாக வர்த்தக உறவுகளைக் கட்டியெழுப்பிக் கொண்டமை.
- இந்தியாவில் ஜஹாங்கீர் எனும் மொஹலாயப் பேரரசனுடன் வர்த்தக உறவினைக் கட்டியெழுப்பிட முயற்சித்தமை.
- 17 ஆம் நூற்றாண்டின் அரைப்பாகம் ஆகும்போது பம்பாய், சென்னை, கல்கத்தா எனும் பகுதிகளில் வர்த்தக மையங்களை நிறுவியமை.
- பிரான்சியர் பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர் எனும் இடங்களில் வர்த்தக நிலையங்களை நிறுவியமை.
- ஒல்லாந்தர் ஆரம்பத்தில் பிரித்தானியருடன் ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தாலும், பின்னர் அம்பொய்னா தீவில் ஏற்பட்ட சண்டையொன்றினால் எதிரிகளாக்கப்பட்டமை.
- இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துவதில் ஆங்கிலேயர், பிரான்சியர், ஒல்லாந்தர் எனும் இனத்தவரிடையில் போட்டி ஏற்பட்டமை.

## இலங்கை மீது பிரித்தானியரது கவனம் செலுத்தப்படல்

- இலங்கை இந்தியாவின் அருகாமையில் அமைந்திருத்தல்.
- உலகப் புகழ்பெற்ற இயற்கைத் துறைமுகமாகத் திருகோணமலை அமையப் பெற்றிருத்தல்.
- இந்தியா உட்பட வங்காள விரிகுடா வலயத்தில் வர்த்தகம் மற்றும் கப்பல் நடவடிக்கைகளை இலங்கையிலிருந்து சிறப்பாகக் கண்காணிக்க முடியுமாக இருந்தமை.
- கறுவா உட்பட விலையுயர்ந்த வர்த்தகப் பொருட்களுக்கு இலங்கை பெயர் பெற்று விளங்கியமை.
- இலங்கையின் வர்த்தக ஏகாதிபத்தியத்தைப் பிரான்சியருக்கு முன்பாக உரிமையாக்கிக் கொள்ளும் தேவை.

## இலங்கையின் கரையோரப் பகுதிகளில் பிரித்தானியரது ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டமை

- பிரான்சியப் புரட்சியின் விளைவொன்றாக, ஒல்லாந்து பிரான்சிற்கு அடிபணிந்ததுடன் இலங்கையில் ஒல்லாந்தருக்கு உரிய பகுதிகள் பிரான்சியர் வசமாகும் பின்னணி உருவாதல்.
- இலங்கையின் கரையோரப் பகுதிகளை பிரான்சியருக்கு முன் ஒல்லாந்தரிடமிருந்து தாம் கைப்பற்றிக்கொள்ள பிரித்தானியர் செயற்பட்டமை.
- அதில் ஒல்லாந்தரின் கீழிருந்த கரையோரப் பிரதேசங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்குமாறு கோரப்பட்டிருந்தது.
- கொழும்பிலிருந்த ஒல்லாந்த ஆளுனருக்கு ஆணையிடும் கடிதமொன்று பிரித்தானியரது பாதுகாப்பின் கீழிருந்த ஒல்லாந்து ஆட்சியாளர் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது.
- ‘கியூ’ மாளிகையிலிருந்து எழுதப்பட்ட கடிதம் என்பதால் ‘கியூ கடிதம்’ எனப்பட்ட அக்கடிதத்திற்கு ஒல்லாந்த ஆளுனர் கீழ்படியாததனால், ஒல்லாந்தர் மீது தாக்குதல் நடாத்திக் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டமை.
- 1796 இலங்கையின் முழு கரையோரப் பகுதிகளும் ஆங்கிலேயர் வசமானமை.

## கரையோரப் பிரதேசங்கள் ஆங்கிலேய கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் கீழ் நிர்வகிக்கப்படுதல்

- ஆங்கிலக் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி மூலம் இந்தியாவில் சென்னை அரசு செயற்படுத்திய நிர்வாக முறை மற்றும் அதன் அதிகாரிகளை இலங்கையின் கரையோர நிர்வாகத்தில் ஈடுபடுத்தியமை.
- 1796 முதல் 1798 வரை சென்னை நிர்வாகம் செயற்படுத்தப்பட்டமை.
- சென்னை நிர்வாகத்தின் கீழ் ரெசிடன்ட் ஒருவரால் கரையோரம் நிர்வகிக்கப்பட்டமை.
- ரெசிடன்டின் கீழ் கச்சேரிகள் அமைத்து அவற்றிற்கு வருமானம் சேர்க்கக் கலெக்டர்மாரை நியமித்தமை.

- கலெக்டர்மாரின் உதவிக்குச் சென்னையிலிருந்து அழைத்துவரப்படட அவுமில்தார்கள் உட்பட அதிகாரிகளை நியமித்தமை.
- வர்த்தகக் கம்பனி தனது செலவுகளை ஈட்டிக்கொள்ளும் நோக்கில் புதிய பல வரிகளை விதித்தமை. (தென்னை வரி, உப்பு வரி, மீன் வரி, புகையிலை வரி, சாராய வரி)
- இந்த புதிய அதிகாரி முறையும் புதிய வரி முறையும் மக்களுக்கு அதிக இடர்களை ஏற்படுத்தியமை.
- 1797-1798 வர்த்தகக் கம்பனிக்கு எதிராகப் போராட்டம் ஒன்று எழுச்சியுற்றமை.
- கலகத்தை அடக்கி அதற்கான காரணம் அறிய நியமிக்கப்பட்ட மியூரன் ஆணைக்குழு மூலம் பல ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டமை.

## இரட்டை ஆட்சி முறை

- 1798 கரையோரப் பகுதிகளை நிர்வகிக்க ஆளுனர் ஒருவரை நியமித்தமை.
- முதலாவது ஆளுனராக பிரட்ரிக் நோத் நியமிக்கப்பட்டார்.
- கி.பி. 1798 முதல் இலங்கையின் கரையோர நிர்வாக நடவடிக்கைகள் பிரித்தானிய அரசின் கீழ் கொண்டுவரப்படல்.
- வர்த்தக மற்றும் வாணிப நடவடிக்கைகளது நிர்வாக அதிகாரம் மட்டும் வர்த்தகக் கம்பனிக்குக் கொடுக்கப்படல்.
- இவ்வாறு இணைந்து முன்னெடுக்கப்பட்ட நிர்வாகம் இரட்டை ஆட்சி முறை என அறியப்பட்டது.
- இந்த நிர்வாக முறையின் கீழ் ஆளுனர் பிரித்தானிய அரசுக்கும் வர்த்தகக் கம்பனிக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவராகக் காணப்பட்டமை.
- முடிவெடுக்கும்போது வர்த்தகக் கம்பனிக்கும் ஆளுனருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டதால் இரட்டை ஆட்சிமுறை தோல்வியுற்றமை.

## கரையோரப் பிரதேசம் பிரித்தானிய அரசின் கீழ் வருதல்

- ஆளுனர் நோர்த் இரட்டை ஆட்சியின் பலவீனங்களை குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு எடுத்துக்காட்டிய பின் கி.பி. 1802 ஆம் ஆண்டிலிருந்து கரையோரப் பிரதேசங்களின் நிர்வாகம் முழுவதும் பிரித்தானிய முடியின் கீழ் கொண்டுவரப்பட்டமை.
- கரையோரப் பிரதேசங்களில் நிர்வாக மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுனர் பிரித்தானிய அரசுக்குப் பொறுப்புக்கூற வேண்டியிருந்தமை.
- இலங்கைக்கென்று தனியான சிவில் சேவையொன்றை ஆரம்பித்து, உயர் பதவிகளுக்குப் பிரித்தானிய சிவில் சேவையாளரை நியமித்தமை.
- நிர்வாக நடவடிக்கைகளுக்காக பிரித்தானியாவில் இருந்த திணைக்கள முறையை அறிமுகப் படுத்தியமை.
- சென்னையிலிருந்து அதிகாரிகளை வரவழைப்பதைத் தடுத்துச் சுதேச அதிகாரிகளை அப்பதவிகளுக்கு நியமித்தமை.
- நோர்த் ஆளுனரினால் இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை.
- தோமஸ் மெய்ட்லண்ட் ஆளுனரது தந்திரமான நிர்வாகக் கொள்கைகள்.
- கரையோரப் பிரதேசங்களில் பயணித்து முறையான ஆய்வினை மேற்கொண்டதன் பின்னர் இவரால் நிர்வாக நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டமை.
- ஜோன் டொய்லியைக் கொண்டு மலையக இராச்சியம் பற்றிய தகவல்களைச் சேகரித்தமை.
- சுதேச நிர்வாகக் கட்டமைப்பு முழுவதையும் தவிர்க்காது சாமர்த்தியமாக சுதேச அதிகாரிகளின் அதிகாரத்தைப் பலவீனமடையச் செய்தமை.
- ஆளுனர் நோர்த்தினால் நிலவுரிமை மீதான இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்ட நிலையில் கட்டாய சேவை இராஜகாரிய முறையை மீளவும் நிறுவியமை.
- சிவில் சேவையைச் சீர்திருத்தியமை.



மன்னார் அரிப்பு எனுமிடத்தில் உள்ள பிறடறிக் நோர்த் ஆளுநர் மாளிகையின் இடிபாடு
*(source: https://www.youtube.com/watch?v=WLy9Is2Ngl8)*

## கண்டி இராச்சியம் பிரித்தானியர் வசமாதல்

- பிரித்தானியர் மலையக இராச்சியம் மீது கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள்.
- மலையகம் சுயாதீன அரசாக இருப்பது பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்குத் தடையானமை.
- கரையோரப் பிரதேசங்களை வேறு ஐரோப்பியரிடமிருந்தும் மலையக மன்னனிடமிருந்தும் பாதுகாத்துக் கொள்ள பாதுகாப்பு வலயங்கள் இரண்டை ஏற்படுத்த வேண்டி இருந்தமை.
- மலையக மன்னனைக் கரையோர மக்களும் தமது மன்னனாகக் கருதியமை.
- மலையக மன்னன் கரையோரப் பகுதிகளில் எழுச்சியுற்ற பிரித்தானிய எதிர்ப்புக் கலகங்களுக்கு உதவி புரிந்தமை.
- பிரான்ஸியரிடம், மலையக இராச்சியம் ஆதரவைப் பெறுவதற்கு உள்ள வாய்ப்புக்களைத் தடுத்தமை.
- மலையகப் பிரதேசங்களில் இருந்து கறுவா, பாக்கு, வாசனைத் திரவியங்கள் போன்ற வர்த்தகப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளும் போது முகங்கொடுக்க வேண்டியிருந்த தடைகள்.
- கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையில் தரைமார்க்கமான பாதையொன்றின்மையால் முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்ட தடைகள்.
- சுயாதீனமாக இயங்கிய மலையக இராச்சியம் பிரித்தானியரின் கீழிருந்த பிரதேசங்களுக்கு இடையில் சிறிய தரைமார்க்கப் பாதையமைக்கத் தடையாயிருந்தமை.
- அதற்கு மன்னனது அனுமதி கிடைக்காமை.
- கடல் வழியாகக் கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணிப்பது அதிக செலவுடையதாகக் காணப்பட்டமை.

## பிரித்தானியரின் ஆட்சியின் கீழ் மலையக இராச்சியத்தைக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகள்

- ஐரோப்பியர்களது அச்சுறுத்தல்களின் மத்தியில் நீண்ட காலமாகத் தன் சுயாதீனத்தைப் பாதுகாத்துக் கொண்ட மலையக இராச்சியம் 1815 இல் வீழ்ச்சியுற்றது.
- ஆளுனர் ரொபட் பிரௌன்றிக் மிகவும் இலகுவாக மலையகத்தைக் கைப்பற்றிக் கொண்டமை.
- மலையக இராச்சியம் வீழ்ச்சியடைந்ததில் செல்வாக்குச் செலுத்திய உள்ளகக் காரணிகள்.



*(source:https://en.wikipedia.org/wiki/Sir_John_Doyle,_1st_Baronet)*

**ஜோன் டொயிலி**

- ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னனது ஆட்சிக் காலத்தில் மன்னன் மற்றும் பிரதானிகள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் அதிகரித்தமை.
  - ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் பிரதானிகளுக்குப் பதவி கொடுக்கும்போது அவர்கள் மத்தி யில் பிளவுகள் ஏற்படும் வகையில் செயற்பட்டதுடன் தனது உறவினர்களுக்குச் சார்பாக நடந்து கொண்டமை.
  - மன்னனது நடவடிக்கைகள் குறித்துப் பிக்குகள் வெறுப்புற்றிருந்தமை.
  - போகம்பர குளத்தை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளின்போது ஏற்பட்ட கருத்து முரண்பாடு.
  - எஹலபொல குடும்பத்தவருக்கு மனிதாபிமானமற்ற முறையில் தண்டனை வழங்கியமை.
  - அரச விரோதிகளாகச் சந்தேகிக்கப்பட்ட பிக்குகளுக்குக் கொடூரமான தண்டனைகளை விதித்தமை.
- பிலிமத்தலாவ மற்றும் எஹலபொல போன்ற பிரதானிகள் அரசனைத் துரத்திட ஆங்கிலேயரது உதவியைப் பெறும் வகையில் செயற்பட்டமை.
- மன்னன் மீதான அதிக வெறுப்பின் காரணமாக பிக்குகள் மற்றும் மக்கள் ஆங்கிலேயரது ஆக்கிரமிப்பிற்கு எதிராக எழுச்சியடையவில்லை.
- **மலையக இராச்சியம் வீழ்ச்சியடையக் காரணமான புறக்காரணிகள்:**
  - ஆளுனர் தோமஸ் மெய்ட்லண்ட், ஜோன் டொய்லி மூலமாக மலையகத்தின் உட் பாதுகாப்பு பற்றிய தகவல்களைத் திரட்டிக் கொண்டமை.
  - மன்னன் மற்றும் பிரதானிகள் மத்தியில் மேலும் பிளவுகளை ஏற்படுத்தும் வகையில் ஜோன் டொய்லி செயற்பட்டமை.
  - மலையகத்தை இலகுவாகக் கைப்பற்ற முடியும் என்ற நிலையை உருவாக்கியதன் பின்னர் கண்டிப் படையினர் கரையோர வர்த்தகக் குழுவொன்றிற்கு இடையூறு விளைவித்தனர் என்ப தைக் காரணமாக் கூறி மலையகம் மீது பிரித்தானியர் ஆக்கிரமிப்பை மேற்கொண்டனர்.
- 1815 கண்டி உடன்படிக்கை மூலம் ஸ்ரீ விக்ரம ராஜசிங்க மன்னனை ஆட்சியிலிருந்து அகற்றி மலையக இராச்சியத்தை சட்டரீதியாக ஆங்கிலேயர் தமதாக்கிக்கொண்டனர்.

## 1815 கண்டி உடன்படிக்கை

- 1815 மார்ச் 02 செங்கடகலை அரச சபை மண்டபத்தில் மலையகப் பிரதானிகளுக்கும் ஆங்கிலேய ஆளுனருக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டு அம்மாதம் 10, 16 ஆம் திகதிகளில் ஒப்பமிடல் முற்றுப்பெற்ற உடன்படிக்கை கண்டி உடன்படிக்கை ஆகும்.
- ஆளுனர் ரொபட் பிரௌன்றிக் மற்றும் எஹலபொல, பிலிமத்தலாவ, மொனரவில, மொல்லிகொட, ரத்வத்தே, துல்லேவ, மில்லேவ, கலகம, கலகொட போன்ற பிரதானிகள் இதில் கையொப்பமிட்டனர்.
- உடன்படிக்கையின் 12 உறுப்புரைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.
- 1, 2, 3 உறுப்புரைகளில் மலையகத்தில் முடியாட்சியினை ஒழித்தல், மற்றும் நாயக்கர் வம்சத்தவருக்கு இருந்த அனைத்து அரசுரிமைகளையும் ஒழித்தல் பற்றியது.
- 4 ஆம் உறுப்பு: சுதேச நிர்வாக அமைப்பு மற்றும் சமூகப் பாரம்பரியங்களைப் பாதுகாப்பதுடன் பிரதானிகள் வகித்து வரும் பதவிகள் உட்படச் சலுகைகளைப் பாதுகாத்தல் பற்றியது.
- 5 ஆம் உறுப்பு: பௌத்த சமயமும் தேவாலய வழிபாடுகளும் அவற்றிற்குப் பூஜைகள், பூஜை செய்யுமிடங்கள் மற்றும் பிக்குகள் பிரித்தானிய அரசினால் பாதுகாக்கப்படல் பற்றியது.
- 6 ஆம் உறுப்பு: அங்கவீனப்படுத்தல் போன்ற தண்டனைகள் ஒழிக்கப்பட்டமை பற்றியது.
- 7 ஆம் உறுப்பு: ஆளுனரால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இல்லாது எவருக்கும் மரண தண்டனை விதிக்க முடியாது என்பது பற்றியது.
- 8 ஆம் உறுப்பு: மக்களது சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளைத் தீர்க்க ஏற்கனவே நிலவும் முறையிலே பிரதானிகளிடம் ஒப்படைத்தமை பற்றியது.
- 9 ஆம் உறுப்பு: இராணுவ அதிகாரிகள் தொடர்பான வழக்கு இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் விசாரணை செய்வது பற்றியது.

- 10 ஆம் உறுப்பு: வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர இராணுவக் கண்காணிப்புக் காலத்தில் இடப்படும் ஆணைகள் இவ்வொப்பந்தத்தினால் வழக்கொழிவது பற்றியது.
- 11 ஆம் உறுப்பு: மலையகத்தின் வருவாய் ஆங்கிலேய மன்னன் பெயரில் ஆளுனர்களால் பெறப்படுதல் பற்றியது.
- 12 ஆம் உறுப்பு: மலையகத்துக்கும் தாய்நாட்டிற்கும் இடையிலான வர்த்தகத்திற்குள்ள தடைகள் இல்லாதொழிக்கப்படுவது பற்றியும் தேவையான சந்தர்ப்பங்களில் ஆட்சியில் மாற்றங்களைக் கொண்டுவரும் உரிமை ஆங்கிலேய அரசுக்கு உண்டு என்பது பற்றியது.
- இந்த உடன்படிக்கை மூலம் ஆங்கில அரசு வழங்கிய வாக்குறுதிகளைக் கடைப்பிடிக்காது விட்டதனால் 1818 இல் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதந்திரப் போராட்டமொன்று எழுச்சியுற்றது.

## 1818 முதலாவது சுதந்திரப் போராட்டம்

- 1815 முதல் முழு இலங்கையும் பிரித்தானியரது ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த வேளையில் சுதேச ஆட்சியொன்றை நிறுவ எடுத்த முதல் முயற்சியாகக் காணப்படுகின்றமை.
- இந்த சுதந்திரப் போராட்டம் ஏற்படக் காரணங்கள் வருமாறு:
  - மலையக இராட்சியத்தை ஒழித்தமை.
  - நாயக்கரது ஆட்சியை ஒழித்து சுதேச ஆட்சியொன்றை ஏற்படுத்தாமை.
  - பௌத்த சமயம் உட்படச் சுதேச சமயங்களைப் பாதுகாப்பதாக உடன்படிக்கையில் 5ஆவது உறுப்பில் வழங்கிய வாக்குறுதியினை மீறியமை.
  - வாக்குறுதி அளித்ததன்படி பிரதானிகளது அதிகாரங்கள், சலுகைகள் என்பவற்றைப் பாதுகாக்கத் தவறியமை.
  - புதிய நிர்வாகம் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகள் என்பவற்றிற்கு எதிராக ஏற்பட்ட எதிர்ப்பு
- ஊவா வெல்லஸ்ஸ பிரதேசத்தில் போராட்டம் ஆரம்பித்தமை.
- பல தலைவர்கள் போராட்டத்தில் பங்குபற்றியமை. கெப்படிபொல, எல்லேபொல, மடுகல்ல, பிலிமத்தலாவே (இளையவர்), கிவுலேகெதர மொஹட்டால, பூட்டாவே ரட்ட ரால, கொஹுகும்புரே ரட்டே ரால
- ஆங்கிலேயரை விரட்டியடிக்கும் நோக்கில் சாதாரண பொதுமக்கள், பிரதானிகளுடன் தோளோடு தோள் நின்று போராடுதல்.
- புனித தந்ததாது கிளர்ச்சியாளர்கள் வசமானதால் அவர்களது உற்சாகம் அதிகரித்தமை.
- சப்ரகமுவவில் ஒரு பகுதி, மூன்று கோரளை, நான்கு கோரளை தவிர மலையக இராச்சியத்திற்கு உரியதாய் இருந்த அனைத்துப் பிரதேசங்களிலும் போராட்டம் பரவியமை.
- கெரில்லாப் போர் முறை, மலையகத்தின் இயற்கை அமைவிடம், மற்றும் நோய்கள் பரவியமை என்பவற்றால் ஆங்கிலேயர் பாதிப்புற்றமை.
- போராட்டம் மிக உக்கிரம் அடைந்ததால் 1818 ஏப்ரல், மே மாதங்களாகும்போது பிரித்தானியர் மலையகத்தை விட்டுச் செல்ல எண்ணியமை.
- எனினும் பாழ்நிலக் கொள்கை, இந்தியாவிலிருந்து பெருமளவில் படையினரைக் கொண்டு வரல் போன்ற செயன்முறைகளினால் சுதந்திரப் போராட்டத்தை அடக்கியமை.

## 1833 கோல்புரூக் சீர்திருத்தம்

- இலங்கையில் பிரித்தானிய அரசுக்கு 1815 இன் பின்னர் வரவை விட செலவு அதிகரிக்கும் நிலை ஏற்பட்டமை.
- பிரித்தானிய அரசு இந்நிலைக்கான காரணங்களை அறிய 1829 இல் வில்லியம் கோல்புரூக் மற்றும் சார்ல்ஸ் எச் கமரன் ஆகிய ஆணையாளர்களை நியமித்தமை.

- அரசியல் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பது கோல்புரூக்கிற்கு பொறுப்பு அளிக்கப்பட்டதுடன் நீதிமன்ற, சட்டநிலை பற்றி ஆய்வு செய்ய கமரன் நியமிக்கப்பட்டார்.

- **முன்வைக்கப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்கள்**
  - இந்த ஆணைக்குழுவின் ஆலோசனைகள் மூலம் அதுவரை பின்பற்றப்பட்ட குடியேற்றவாதப் பொருளாதாரக் கொள்கையில் பிரதான மாற்றம் முன்வைக்கப்பட்டமை.
  - தனியார் முதலீட்டாளர்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதமாக, அரச தலையிடாக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.

- **முன்வைக்கப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள்**
  - சட்டவாக்க, நிர்வாகக் கழகங்கள் அமைக்கப்பட்டமை.
  - ஆளுனருடைய அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.
  - இலங்கையின் நடவடிக்கைகளைப் பற்றிச் சரியான தகவல்களைப் பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கு ஆளுனருக்கு அடுத்ததாகத் தெரிவிக்கக்கூடிய வகையில் ஒழுங்கமைத்தமை.
  - எதிர்காலத்தில் பாராளுமன்ற முறையொன்றிற்கான ஆரம்பப் பண்புகளை வெளிக்காட்டியமை.

- **முன்வைக்கப்பட்ட நிர்வாகச் சீர்திருத்தங்கள்**
  - மலையகத்தையும் கரையோரப் பகுதிகளையும் ஒன்றிணைத்த நிர்வாக முறையொன்றை அறிமுகப்படுத்தியமை.
  - இலங்கையை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தமை.
  - கட்டாய சேவை ராஜகாரிய முறையை ஒழித்தமை.
  - அரசின் வர்த்தக ஏகபோகத்தை ஒழித்தமை.
  - சிவில் சேவையில் பல சீர்த்திருத்தங்களைச் செய்தமை.

- **நீதித்துறை ஆலோசனைகள்**
  - ஒரே நீதிமன்ற முறையினை அமைக்க நடவடிக்கை எடுத்தமை.
  - சட்டத்தின் முன் யாவரும் சமம் எனும் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த முயற்சி செய்தமை.
  - ஆளுனருக்குள்ள நீதிமன்ற அதிகாரங்களை ஒழித்துச் சுயாதீனமான நீதிமன்ற முறையை அமைத்தமை.
  - சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரம் உடைய மாவட்ட நீதிமன்றங்களை அமைத்தமை.
  - முழு இலங்கையிலும் தாக்கம் செலுத்தும் வகையில் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை வியாபித்தமை.
  - கிராம சபை நீதிமன்ற முறையின் முக்கியத்துவத்தை உணர்ந்திருந்த போதும் முன்வைக்கப்பட்ட நீதிமன்ற அமைப்பு ஒழுங்கில் அதனை உட்சேர்க்காமை.

- **முன்வைக்கப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள்**
  - கட்டாய சேவை இராஜகாரிய முறையை ஒழித்தமை.
  - அரச வர்த்தக ஏகபோகத்தை ஒழித்தமை (கறுவா, உப்பு, முத்து, சாராயம், புகையிலை)
  - நிலங்களை விலைக்கு வாங்குவதற்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த சட்டங்களை இலகு படுத்தியமை.
  - அரசின் நிலங்களை விற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்தியமை.
  - ஏற்றுமதி மூலம் சுங்கவரி அறவிட்டமை.
  - தனியார் விவசாயத்தை உற்சாகப்படுத்தியமை.
  - அரசின் செலவைக் குறைக்க நடவடிக்கை எடுத்தமை.

- அரசின் செலவைக் குறைப்பதன் மூலம் குறுகிய கால பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்தல் மற்றும் நாட்டில் பரவலாக பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதன் மூலமாக அரசின் நீண்டகாலப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வது இச்சீர்திருத்தங்களின் நோக்க மாயிருந்தது.

## 1848 சுதந்திரப் போராட்டம்

- பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக மேற்கொண்ட ஆயுதம் தாங்கிய போரட்டமாக இது காணப்படல்.
- மாத்தளை, குருநாகல் ஆகிய இடங்களில் தீவிரமாகப் பரவிய இது கொழும்பிலும் ஓரளவில் ஏற்படல்.
- இந்தப் போராட்டத்திற்குச் செல்வாக்குச் செலுத்திய காரணிகளை நீண்டகால மற்றும் குறுகிய காலக் காரணிகளாக நோக்க முடிகின்றமை.

- கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்களின் செல்வாக்கு
    - மலையகம் மற்றும் கரையோரத்தை ஒன்றிணைத்ததன் காரணமாக மலையகப் பாரம்பரியத் திற்குப் பாதிப்பு ஏற்பட்டமை.
    - சிவில் சேவையாளர்களுக்குப் பெருந்தோட்டத்தில் ஈடுபட அனுமதி வழங்கியமையினால் நிர்வாகம் சீர்குலைந்தமை.
    - இராஜகாரிய முறையை ஒழித்ததுடன் நிலம் விற்கும் கொள்கை அறிமுகப்படுத்தியதனால் பாரம்பரிய நிலவுரிமை முறையில் மாற்றங்கள் ஏற்பட்டமை.
    - கிராம சபைகளைப் புறக்கணித்தமையினால் கிராம மக்களின் பிரச்சினைகள் அதிகரித்தமை.
    - புதிய நீதிமன்ற முறையினால் மக்கள் பல சிரமங்களுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்பட்டமை.
    - 1840 இல. 12 நிலத்தை உடைமையாக்கும் சட்டத்தினால் விவசாயிகள் தமது பாரம்பரிய நிலங்களை இழந்தமை.
    - ஐரோப்பிய பயிர்ச் செய்கையாளர்கள், தென்னிந்திய தொழிலாளர், கரையோர வியாபாரிகள் என புதியவர்கள் மலையகத்தில் குடியேறியதனால் மலையகப் பிரதேசங்களில் பாரம்பரியமான மக்கள் வாழ்க்கை முறைக்கு தீங்கான விளைவுகள் ஏற்பட்டமை.



மலையகம் நோக்கிப் புலம் பெயர்ந்த ஐரோப்பிய பெருந்தோட்ட முதலாளிமார், தென்னிந்தியத் தொழிலாளர் கரைநாட்டு வர்த்தகர்கள்

*( Source : https://www.pinterest.com/favorceylontea/history-of-ceylon-tea/?lp=true)*

- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காகக் காடுகள் அழிக்கப்பட்டமையால் சுதேச விவசாயம் மற்றும் மக்கள் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடையக் காரணமாயிருந்தது.
  - மலையகத்தில் மதுபான சாலைகள் திறந்தமையால் சமூக சீர்கேடுகள் அதிகரித்தமை.

**குறுகிய காலக் காரணங்கள்**

- அரசின் வருவாயை அதிகரித்துக்கொள்ள ஆளுனர் டொரிங்டன் புதிய வரிகளை விதித்தமை. உதாரணம்: கடை வரி, வண்டி வரி, படகுவரி, ஓடத்துறை வரி, துப்பாக்கி வரி, உடல் வரி, முத்திரை வரி, நாய் வரி.
- அரசிற்கும் சமயத்திற்கும் இடையில் நிலவிய பாரம்பரியமான நெருங்கிய உறவினை வீழ்ச்சியுறச் செய்து புனித தந்ததாதுவின் பாதுகாப்பைப் பிக்குகளிடமும் தியவடன நிலமேயிடமும் பொறுப்பளித்தமை.
- நிலத்தை வெளிநாட்டவர்களுக்கு விற்பதன் கொள்கை காரணமாக மலையகத்தவர் மத்தியில் அவநம்பிகை ஏற்பட்டமை.

**போராட்டத்தின் ஆரம்பமும் பரவலும்**

- அரசின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் பொதுமக்கள் ஒன்றுகூடியமை.
- கொழும்பு, வாரியபொல, குருநாகல் போன்ற பிரதேசங்களுக்குப் பரவியமை.
- பதுளையில் ஒன்றுகூடிய விவசாயிகளுள் சிலர் துப்பாக்கி வரிக்கு தம் எதிர்ப்பைத் தெரிவித்து அரச அதிபரின் முன்னாலேயே துப்பாக்கிகளை நிலத்தில் அடித்து உடைத்தமை.
- மாத்தளை, வாரியபொல, குருணாகல் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆயுதம் தாங்கியவர்களாக அரசின் கட்டடங்கள் மற்றும் நீதிமன்றம் என்பவற்றைத் தாக்கியமை.
- 1848 போராட்டத்தில் மைய நிலையமாக மாத்தளை திகழ்ந்தமை.
- பிரித்தானிய ஆட்சியினால் இடருற்ற சாதாரண மக்கள் மத்தியிலிருந்து கொங்காலே கொட பண்டா, புரன் அப்பு, டிங்கிரால, தீனிஸ் போன்ற தலைவர்கள் தோன்றியமை.
- கொங்காலேகொட பண்டா மன்னனாக முடிசூட்டப்படல். (ஸ்ரீ விக்ரம சர்வசித்தி ராஜசிங்க)
- வரி எதிர்ப்புப் போராட்டமாக ஆரம்பித்து, ஆங்கில ஆட்சியை முறியடிக்கும் நோக்கைப் பிரதானமாகக் கொண்டு போராட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

**1848 சுதந்திரப் போராட்டத்தின் விளைவுகள்**

- மக்கள் எதிர்பார்ப்பை முறியடித்து ஆங்கிலேயர்கள் கொடூரமாகப் போராட்டத்தை அடக்கியமை.
- போராட்டத்தின் தலைவர்கள் ஆங்கிலேயரால் கைதுசெய்யப்பட்டுக் கொடிய தண்டனைகள் நிறைவேற்றப்பட்டமை.
  - குடஹபொல தேரர் சுட்டுக் கொல்லப்பட்டமை.
  - கொங்காலேகொட பண்டாவிற்கு எதிராக வழக்கு விசாரணை செய்யப்பட்டு கசையடி கொடுத்து நாடு கடத்தியமை.
  - புரன்அப்புவிற்கு மரண தண்டனை விதித்தமை.
- போராட்டத்தின் போது கடமையில் இருந்த பிரித்தானிய ஆளுனர் டொரிங்டன், அரச செயலாளர் டெனன்ட் ஆகியோரைப் பிரித்தானியா விற்கு அழைத்துக் கொண்டமை.
- போராட்டத்திற்கான காரணம் கண்டறிய நியமிக்கப்பட்ட சபையின் ஆலோசனைப்படி புதிய வரிகளை நீக்கியதுடன் சீர்திருத்தியமை.
- 1850 இன் பின்னர் அதிகாரத்திற்கு வந்த பிரித்தானிய ஆளுனர்கள் சிலர் விவசாயிகள் மீது அக்கறை கொண்டு விவசாய நடவடிக்கைகள் வளர்ச்சியடைய நடவடிக்கை எடுத்தமை.



1848 போராட்டத்தின் நினைவாக மாத்தளையில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி

*( sourrce: http://www.wikiwand.com/en/ Matale)*

- போராட்டம் தோல்வியுற்றமையினால் பிரித்தானியரது அதிகாரம் மேலும் வலுவுற்றமை.

## மதிப்பீடு

**இலக்கம் 01 - 02 வரையான வினாக்களுக்கு ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் ஏதோ ஒரு காரணத்திற்காக ஏனைய பெயர்களுடன் பொருந்தவில்லை. அப் பெயரின் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

01. 1. ஜோன் டொய்லி 2. ஜோர்ஜ் டர்னர் 3. எட்வட் பான்ஸ்
    4. ஹென்ரி மார்ஷல் 5. இமர்சன் டெனன்ட் (...........)

02. 1. வில்மட் ஹோர்டன் 2. வெஸ்ட் ரிஜ்வே 3. சார்ல்ஸ் கெமரன்
    4. ஜோர்ஜ் என்டர்சன் 5. என்ட்ரூ கெல்டிகொட் (...........)

**இலக்கம் 03 - 04 வரையான வினாக்களில் வசன சோடிகள் ஐந்துவீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடி ஒன்றோடொன்று பொருந்தாது. அவ்வாறு பொருந்தாத சோடிக்குரிய இலக்கத்தை முன்னுள்ள அடைப்பினுள் எழுதுக.**

03. 1. இராஜகாரிய முறையை ஒழித்தமை - பிரட்ரிக் நோர்த்
    2. மலையக இராச்சியம் வீழ்ச்சியடைதல் - ரொபட் பிரௌன்ரிக்
    3. கொழும்பு கண்டிப் பாதை அமைத்தமை - தோமஸ் மெய்ட்லண்ட்
    4. பெரிய நகர சபைகளை அமைத்தமை - ஹர்கியலிஸ் ரொபின்சன்
    5. தானிய வரியை நீக்கியமை - ஆதர் ஹெவ்லொக்

(...........)

04. 1. 1797 - 98 கலகம் - வில்லியம் கிரகரி
    2. 1817 -18 எழுச்சியுற்றமை - ரொபட் பிரௌன்ரிக்
    3. 1848 எழுச்சி - டொரிங்டன்
    4. 1883 கொட்டாஞ்சேனைக் கலவரம் - ஜேம்ஸ் லோஹ்டன்
    5. 1915 சிங்கள - முஸ்லிம் கலவரம் - ரொபட் சாமர்ஸ் (...........)

**இல. 5 - 6 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடை இலக்கத்தைத் தெரிவுசெய்து முன்னால் உள்ள அடைப்பினுள் எழுதுங்கள்.**

05. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதல் பாகத்திலிருந்து பிரித்தானிய ஆளுனர்களைச் சரியான வரிசையில் கொண்டமைந்த தொகுதி கீழ்வருவனவற்றில் எது?
    1. தோமஸ் மெயிட்லண்ட், ரொபட் பிரௌன்றிக், வில்மட் ஹோடன், எட்வட் பான்ஸ், ஸ்டுவர்ட் மெகன்ஸி
    2. ரொபட் பிரௌன்றிக், தோமஸ் மெயிட்லன்ட், ஸ்டுவர்ட் மெகன்ஸி, எட்வட் பான்ஸ், வில்மட் ஹோர்டன்
    3. தோமஸ் மெயிட்லண்ட், ரொபட் பிரௌன்றிக், எட்வட் பான்ஸ், ஸ்டுவர்ட் மெகன்ஸி, வில்மட் ஹோர்டன்
    4. ரொபட் பிரௌன்றிக், தோமஸ் மெயிட்லண்ட், எட்வட் பான்ஸ், ஸ்டுவர்ட் மெகன்ஸி, வில்மட் ஹோர்டன்
    5. தோமஸ் மெயிட்லன்ட், ரொபட் பிரௌன்றிக், எட்வட் பான்ஸ், வில்மட் ஹோர்டன், ஸ்டுவர்ட் மெக்கன்ஸி

(...........)

06. இலங்கையில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட யாப்புச் சீர்திருத்தங் களினைச் சரியான ஒழுங்கில் உள்ளடக்கிய தொகுதி கீழ்வருவனவற்றுள் எது?
1. கோல்புரூக், டொனமூர், மெனிங், மெகலம், சோல்பரி
2. கோல்புரூக், மெகலம், மெனிங், டொனமூர், சோல்பரி
3. மெகலம், கோல்புரூக், மெனிங், சோல்பரி, டொனமூர்
4. மெனிங், மெகலம், கோல்புரூக், டொனமூர், சோல்பரி
5. கோல்புரூக், மெகலம், டொனமூர், மெனிங், சோல்பரி

(...........)

**இலக்கம் 07 - 08 வரையான வினாக்களுக்குச் சரியான விடையின் இலக்கத்தினை முன்னால் உள்ள அடைப்பினுள் எழுதுங்கள்.**

07. 1848 சுதந்திரப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் இங்கிருந்த பிரித்தானிய ஆளுனர் யார்?
1. டொரிங்டன் 2. கெம்பல் 3. எண்டர்சன்
4. வோட் 5. ரொபின்சன் (...........)

08. கரையோரப் பகுதிகளில் ராஜகாரிய முறையை முதலில் நீக்கிய ஆளுனர் யார்?
1. பிரட்ரிக் நோர்த் 2. தோமஸ் மெய்ட்லண்ட் 3. த மியூரன்
4. ரொபட் பிரௌன்றிக் 5. வில்லியம் கோல்புரூக்

(...........)

**இல. 09 முதல் 10 வரையான அனைத்து வினாக்களிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று குறித்த தலைப்புடன் பொருந்தாது. அதனைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை அடைப்பினுள் எழுதுங்க**ள்.

09. 1848 பிரித்தானியருக்கு எதிராக எழுச்சியுற்றமை
1. மக்கள் எழுச்சி இடம்பெற்ற இக்காலத்தில் இலங்கையிலிருந்த பிரித்தானிய ஆளுனர் எமர்சன் டெனன்ட் ஆவார்.
2. இந்த மக்கள் எழுச்சி ஏற்பட தாக்கம் செலுத்திய கிட்டிய காரணமாக அரசினால் புதிய வரிகள் விதிக்கப்பட்டமை காணப்படுகின்றது.
3. இந்த மக்கள் எழுச்சியின் பிரதான மத்திய நிலையமாக விளங்கியது மாத்தளை மற்றும் குருணாகல் ஆகும்.
4. புரன் அப்பு மற்றும் கொங்காலேகொட பண்டா என்போர் இதன் பிரதான தலைவர்கள் ஆவர்.
5. இந்த மக்கள் எழுச்சியின் ஒரு விளைவாக 1850 பின்னர் இலங்கையின் பொதுமக்கள் தொடர்பான பிரித்தானியக் கொள்கையில் மாற்றங்கள் ஏற்பட்டமை.

(...........)

10. கோல்புரூக் - கமரன் குழுவின் ஆலோசனைகள்
1. ஆளுனரது அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை.
2. சட்டவாக்க, நிர்வாகக் கழகங்கள் உருவாக்கப்பட்டமை.
3. கட்டாய சேவை இராஜகாரிய முறையை ஒழித்தமை.
4. ஒரே நீதிமன்ற முறையை உருவாக்கியமை.
5. முழு இலங்கையினையும் ஒன்பது பகுதிகளாகப் பிரித்தமை.

(...........)

## பகுதி 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 1848 பிரித்தானிய எதிர்ப்புப் போராட்டத்தினைத் தூண்டிய காரணங்களை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக.
(14 புள்ளிகள்)

02. ''கண்டி உடன்படிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையினால் மலையக மக்களின் எதிர்பார்ப்பு வீழ்ந்தமை'' 1817-1818 பிரித்தானிய எதிர்ப்புப் போராட்டம் ஏற்படத் தூண்டிய பிரதான காரணி ஆனது.

(i) பிரித்தானியரால் மலையக இராச்சியம் கைப்பற்றப்பட முன்னர் அந்த இராச்சியத்துடன் தொடர்புகளைப் பேணிய ஆங்கிலேய இனத்தவரான அதிகாரி யார்?
(01 புள்ளி)

(ii) கண்டி ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட பிரித்தானிய ஆளுனர் மற்றும் மலையக பிரதானி ஆகியோரின் பெயர்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) கண்டி ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) மேற்கூறிய கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (07 புள்ளிகள்)

03. ''1817-1818 மலையகத்தவர்களது எழுச்சி, இலங்கையரது பிரித்தானியருக்கு எதிரான முதல் சுதந்திரப் போராட்டம் ஆனது'' அப்போராட்டத்தினைத் தூண்டிய காரணிகளினூடாக இக்கூற்றைக் கலந்துரையாடுக. (14 புள்ளிகள்)

04. 1848 பிரித்தானிய எதிர்ப்புப் போராட்டம் ஏற்படத் தூண்டிய பிரதான காரணிகளை விமர்சன ரீதியாக ஆராய்க. (14 புள்ளிகள்)

05. கோல்புரூக் - கமரன் குழுவின் ஆலோசனைகளின்படி 1833 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதார சீர்திருத்தங்களின் முக்கியத்துவத்தை விபரிக்குக.
(14 புள்ளிகள்)

06. மலையக இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான காரணிகளை விமர்சன ரீதியாக ஆராய்க.
(14 புள்ளிகள்)

# 09. பிரித்தானியரின் கீழ் பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் (1948 வரை)

## அறிமுகம்

1796 இல் இலங்கையின் கரையோரத்தைக் கைப்பற்றிய பிரித்தானியர் 1815 இல் மலையகத்தையும் கைப்பற்றி முழு இலங்கையையும் அவர்கள் வயப்படுத்திக் கொண்டனர். அது முதல் 1948 இல் இலங்கை சுதந்திரம் பெறும் வரையில் பிரித்தானிய ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள் இவ் அத்தியாயத்தில் ஆய்வு செய்யப்படுகின்றது.

பிரித்தானியரால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கையினால் இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை பரவலுற்ற விதம் மற்றும் அதனூடாக நாட்டில் நிலவிய சுதேச விவசாயம் வீழ்ச்சியுற்ற விதம் பயிர்ச் செய்கையினால் இந்நாட்டு சமூகம் பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளான விதம் என்பன இங்கு கலந்துரையாடப்படுகிறது. அவ்வாறே பிரித்தானிய ஆட்சியின் ஒரு விளைவாக சிங்கள, முஸ்லிம் என அனைத்து இனங்களிடையிலும் சமய மற்றும் கலாசார ரீதியில் மறுமலர்ச்சியொன்று உருவானதுடன் அது தொடர்பாக தலைமையேற்று நடவடிக்கை எடுத்த சமயத் தலைவர்கள் பற்றியும் கற்கப்படுகின்றது.

**தேர்ச்சி** : • வெளிநாட்டவரது கலாசார அம்சங்கள் சுதேச சமூகத்துள் உள்வாங்கப்பட்ட முறையைப் பற்றிய தெளிவுடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 9.1** : பிரித்தானியரின் கீழ் இலங்கை சமூகத்தில் இணைந்த புதிய அம்சங்களை எடுத்துக்காட்டுவார்.
வெளிநாட்டவரின் ஆதிக்கத்தின் மத்தியில் தேசியத் தலைவர்களது நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற்பேறுகள்** :
- பிரித்தானியரின் கீழ் இந்நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தெளிவுபடுத்துவார்.
- பிரித்தானிய பொருளாதாரத்தின்படி இந்நாட்டில் சமூக ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்காட்டுவார்.
- பிரித்தானிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக இந்நாட்டில் பொருளாதார மற்றும் சமூக ரீதியாக ஏற்பட்ட நன்மையான மாற்றங்களைப் போற்றுவார்.
- பிரித்தானிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாகக் காலங் கடந்தவையான சுதேச தனித்துவங்களை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள்

- **பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும்**

கோல்புரூக் சீர்திருத்தத்தின் செல்வாக்கு, கட்டாய சேவை இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை, அரசின் அன்பளிப்பாக நிலத்தைப் பெற்றுக் கொடுக்கும் முறையை ஒழித்து அதற்குப் பதிலாக நிலத்தை விற்கும் கொள்கையை ஆரம்பித்தமை, ஐரோப்பியருக்கு இலங்கையில் நிலையாகத் தங்குவதற்கும் மற்றும் நிலவுரிமைக்கும் இருந்த வரையறைகளை நீக்கியமை, தனியார் முதலீடுகளை ஊக்குவித்தமை, அரசின் வர்த்தக ஏகபோகத்தை ஒழித்தமை போன்ற காரணங்கள் வர்த்தகப் பயிர்ச் செய்கையின் ஆரம்பத்திற்குக் காரணமாயின.

## பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சி

- கறுவாப் பயிர்ச்செய்கை மற்றும் அதன் வீழ்ச்சி
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை முதலில் கோப்பிப் பயிர்ச் செய்கையுடன் ஆரம்பமானமை.
- சிறியளவில் ஆரம்பமான கோப்பிப் பயிர்ச் செய்கை 1840 அளவில் மலையகத்தில் பெரியளவில் பரவியமை.
- கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்
    - பிரித்தானியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட கோப்பிக்கு அறவிடப்பட்ட சுங்க வரியைக் குறைத்தமை.
    - மேற்கு இந்தியத் தீவுகளில் கோப்பிப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியுற்றமை.
    - கோப்பி மூலம் பெரியளவில் இலாபம் கிடைக்கப் பெற்றமை.
    - வெற்றிகரமாகப் பயிர்ச் செய்கையைத் தொடர முடிந்தமை.
    - குறைந்த சம்பளத்திற்குத் தென்னிந்தியத் தொழிலாளர்களை வரவழைத்தமை.

## கோப்பிப் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சி

- ஹெமிலியா வெஸ்ட்ராடிக்ஸ் எனும் பங்கசு நோய் தொற்றியதால் கோப்பிப் பயிர்ச்செய்கை வீழ்ச்சியுற்றமை.

## ஏனைய பயிர்ச் செய்கை

- கோப்பிப் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சியின் பின்னர் சிங்கோனா மற்றும் கொக்கோ பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டமை.
- விளைச்சல் குறைவினால் அப்பயிர்ச் செய்கையும் கைவிடப்பட்டமை.



***கோப்பிப் பயிருக்கு ஏற்பட்ட பங்கசு நோய்***

*(source:https://en.wikipedia.org/wiki/Hemileia_vastatrix)*


## தேயிலைப் பயிர்ச் செய்கையின் ஆரம்பமும் வீழ்ச்சியும்

- 19ஆம் நூற்றாண்டின் பின் அரைப்பாகத்தில் தேயிலைப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டது.

## 1890 ஆகும்போது தேயிலைப் பயிர்ச் செய்கை வளர்ச்சியடையக் காரணங்கள்

- லண்டன் சந்தையில் தேயிலையின் விலை அதிகரித்தமை.
- அரசாங்கத்தின் நிலக் கொள்கைப்படி தோட்டப் பயிர்ச் செய்கைக்கு இலகுவாக நிலத்தைப் பெற்றுக்கொள்ள முடிந்தமை.
- பிரித்தானிய முதலீட்டாளர்களின் வருகை.
- பசளைப் பாவனையின் அதிகரிப்பு.
- புகையிரதம் மற்றும் ஏனைய போக்குவரத்து ஊடகங்களது வளர்ச்சி.
- கொழும்புத் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டமை.
- தென்னிந்திய உழைப்பாளிகள் அழைத்து வரப்பட்டமையினால் இலகுவாக உழைப்பைப் பெற முடிந்தமை.

*(source: https://en.wikipedia.org/wiki/Tea_production_in_Sri_Lanka )*




***இலண்டன் சந்தைக்காகத் தயாரிக்கப்பட்ட இலங்கைத் தேயிலை***

### தென்னைப் பயிர்ச் செய்கை

- 19ஆம் நூற்றாண்டின் முதல் பாகத்தில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாக ஆரம்பமானமை.
- தென்னைப் பயிர்ச் செய்கைக்காக முதலிட ஐரோப்பியர் ஆரம்பத்தில் ஆர்வம் காட்டாமை.
- தென்னைப் பயிர்ச் செய்கையில் உள்நாட்டவர் ஈடுபட்டமை.
- தேங்காய் உற்பத்தியின் பெரும்பகுதி உள்நாட்டின் நுகர்விற்கு உபயோகப்பட்டமை.
- இறுதியில் தேங்காய் உற்பத்தியில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஈடுபட்டமை.

### இறப்பர் பயிர்ச் செய்கை

- இறப்பர் பயிர்ச் செய்கையின் ஆரம்பமும் வளர்ச்சியும்
- 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இறப்பர் பயிர்ச் செய்கை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- 1890 அளவில் வர்த்தகப் பயிராக இறப்பர் பயிர்ச் செய்கை இலங்கையில் பரவியமை.

### இறப்பர் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள்

- முதலாம் உலகப் போரின்போது இறப்பர் விலை உயர்வுற்றமை.
- ஐக்கிய அமெரிக்கா இங்கிருந்து பெருமளவில் இறப்பரை வாங்கியமை.
- பிரித்தானிய மோட்டார் வாகனக் கைத்தொழில் வளர்ச்சியுற்றமை.

### இறப்பர் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சி

- 1929 உலகப் பொருளாதார பெருமந்தத்தினால் இறப்பர் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டமை.
- 1929 உலகப் பொருளாதார பெருமந்தத்துடன் தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் ஏற்றுமதி குறைவுற்றமை. விலை வீழ்ச்சியுற்றமையினால் வருமானம் குறைந்தமை.

### போக்குவரத்தும் தொடர்பாடலும்

- 19ஆம் நூற்றாண்டின் மூன்றாம் தசாப்தம் அளவில் பெருந்தெருக்கள் தொடங்கப்பட்டமை.
- மலையகத்தின் பிரித்தானிய ஆதிக்கத்தைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக மலையகத்தில் பெருந்தெருக்கள் தொடங்கப்பட்டமை.
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்கும் நோக்கில் இலங்கையின் அனைத்துப் பிரதேசங்களும் தொடர்புபடும் வகையில் பெரும்பாதைகள் ஆரம்பிக்கப்பட்டமை.
- 1831 அளவில் இலங்கையில் பிரதான பாதைகள் சில உருவாகி இருந்தமை.
  - கொழும்பு - கண்டி - மாத்தளை - தம்புள்ளை பாதை
  - அப்பேபுஸ்ஸ - குருநாகல் - தம்புள்ள பாதை
  - குருநாகல் - கண்டிப் பாதை
- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் உற்பத்திகளைக் கொண்டு செல்லும் புகையிரதப் பாதைகள் ஆரம்பிக்கப்பட்டமை. (19 ஆம் நூற்றாண்டின் மத்தியில்)
- கோப்பி, தேயிலை, இறப்பர் என்பன பயிரிடப்பட்ட பிரதேசங்கள் இணைக்கப்பட்டுப் புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டமை.
  - கொழும்பு - கண்டிப் பாதை 1867
  - கண்டி - மாத்தளை பாதை 1880
  - பேராதெனிய - நாவலபிட்டிய பாதை 1880
  - நாவலபிடிய - நானுஓய - பண்டாரவளை 1894
- இந்தியாவில் புகையிரத சேவையுடன் தொடர்புபடுத்துவதற்காகத் தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடி வரையில் படகுச் சேவையொன்றை ஆரம்பித்தமை.
- தேயிலை, கோப்பி உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் நடவடிக்கைகளுக்காகக் கொழும்புத் துறைமுக நடவடிக்கைகளை அபிவிருத்தியுறச் செய்தமை, கொழும்புத் துறைமுகத்தில் கருங்கல் அணையை அமைத்தமை. (1874 - 1886)



***கொழும்புத் துறைமுகம் (1880 இல் எடுக்கப்பட்ட புகைப்படம்)***
*(source: http://lankapura.com/2009/07/colombo-harbour-ceylon-1880-1890/)*

### தொடர்பாடல் நடவடிக்கைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தியமை

- தபால் சேவையை ஆரம்பித்தமை.
- ஆசியாவில் முதற் தடவையாகக் குதிரை வண்டி தபாற் சேவை 1832 பெப்ரவரி 1 ஆம் திகதி கொழும்பு, கண்டிக்கு இடையில் அஞ்சல்களை எடுத்துச் செல்ல ஆரம்பித்தமை.
- 1925 இல் இலங்கைக்கு வானொலியை அறிமுகம் செய்து வைத்தமை.

### உள்நாட்டுக் கைத்தொழில்கள்

#### கறுவா

- கறுவா வர்த்தகத்தை அரசின் ஏகபோக உரிமையாக்கியமை.
- கறுவா உற்பத்தி திணைக்களம் ஒன்றின் கீழ் ஒழுங்குபடுத்தப்பட்டு இருந்தமை.
- கோல்புரூக்கின் ஆலோசனைப்படி 1833 இல் கறுவா ஏகபோக உரிமை நீக்கப்பட்டமை.

#### முத்துக்குளித்தல்

- கறுவா தவிர முத்துக் குளிப்பதனால் பிரித்தானிய அரசு அதிக வருமானம் பெற்றமை.
- முத்துக் குளிக்கும் உரிமையை ஏலத்தில் விடுதல்.
- முத்துச் சிப்பிகள் அழிவுறாது பாதுகாக்க நிலையான அதிகாரி ஒருவரை நியமித்தமை.
- முத்துக் குளித்தல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவரும் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் என்போரது பல்வேறு தேவைகளை நிறைவு செய்ய அரசு மக்களை நிர்ப்பந்தித்ததால் அப்பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் முத்துக்குளிக்கும் காலங்களில் அப்பிரதேசங்களை விட்டு வெளியேறினர். இதனால் கோல்புரூக் இந்தச் சேவைகளையும் படகுச் சேவைகளையும் சுயமாகப் பெற்றுக்கொள்ள ஆலோசனை செய்தமை.

#### உப்புக்கைத்தொழில்

- ஒல்லாந்தரின் கீழ் உப்பு அரசின் ஏகபோக உரிமையாகக் கொண்டிருந்தமை.
- ஆரம்பத்தில் பிரித்தானியர்கள் உற்பத்தியில் ஒரு பகுதியை அரசுக்குக் கொடுக்கும் அடிப்படையில் உப்பு சேர்க்கும் உப்பளங்களை அயல் கிராம மக்களுக்குப் பொறுப்பளித்தமை.

- 1804 இல் உப்பை அரசின் ஏகபோக உரிமையாக்கியமை.
- ஆரம்பத்தில் நாட்டின் தேவை கருதி இந்தியாவிலிருந்தும் உப்பு இறக்குமதி செய்ததுடன் பின்னர் உப்பினால் கிடைக்கப்பெற்ற வருமானம் அதிகரித்து இந்தியாவிற்கு உப்பு ஏற்றுமதி செய்ய முடிந்தமை.
- ஏகபோக சட்டதிட்டங்களினால் உப்பு உற்பத்தி பின்னடைந்தது இதனால் கோல்புரூக் உப்பு ஏகபோகத்தை ஒழிக்க ஆலோசனை வழங்கியமை.

**புகையிலை**

- வடக்கில் பயிர் செய்யப்பட்ட புகையிலை சுமாத்ரா தீவுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதுடன் பெருமளவிலான வருமானம் வெளிநாடுகளுக்குச் சென்றமையினால் புகையிலை வர்த்தகத்தை அரசின் ஏகபோக உரிமையாக்கியமை. (ஆளுனர் பிரௌன்றிக் - 1812)
- அதனூடாக அரசுக்குப் பெருமளவிலான வருமானம் கிடைத்தமை.

**பாக்கு**

- பாக்கிற்கு அறவிடப்பட்ட தீர்வை வரியினால் பெருமளவிலான வருமானம் பிரித்தானியரால் பெறப்பட்டமை. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தத்தில் சுங்கவரி வருமானத்தில் 1/4 பகுதியளவில் பாக்கினால் பெற முடிந்தமை.

**உள்நாட்டு விவசாயம்**

- பிரித்தானியர் தமது கவனத்தைப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மீது செலுத்தியதுடன் உள்நாட்டில் விவசாயம் மீது போதிய கவனம் செலுத்தாமையினால் அது வீழ்ச்சியுற்றமை.
- உள்நாட்டு விவசாயத்தைக் கவனியாது விட்டமையினால் இடருற்ற விவசாய மக்கள் 1848 இல் ஏற்பட்ட ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டத்தில் இணைந்து கொண்டமை.
- புராதன நீர்ப்பாசன இடங்களைப் புனர்நிர்மாணம் செய்தமை.
- ஹென்றி வோர்ட், ஹர்கியூலிஸ் ரொபின்சன், வில்லியம் கிரகரி, ஆதர் கோர்டன் போன்ற ஆளுனர்கள் நீர்ப்பாசன நடவடிக்கைகளை உயர்த்திட நடவடிக்கை எடுத்தமையினால் சீரழிந்து காணப்பட்ட விவசாய நடவடிக்கைகளை மேம்பாடடையச் செய்தமை.
- 1911 இல் கூட்டுறவுக்கடன் வழங்கும் சபைகளை நிறுவி விவசாயிகளுக்கு சேவை வழங்கியமை.

**கல்வி**

**உள்நாட்டுக்கல்வித்துறை**

- பிரிவெனா கல்வி முறை மற்றும் அதன் பண்புகள்
- பிரிவெனா கல்வி முறை வீழ்ச்சியடைந்தமை.
- போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சிக்காலங்களில் கரையோரப் பிரதேசங்களில் பரிஷ் பாடசாலைகளைப் பிரதானமாகக் கொண்ட கல்வி முறை காணப்பட்டமை.

**பிரித்தானிய ஆட்சியின் ஆரம்பகாலக் கல்வி முறை**

- மிஷனரி நிறுவனங்கள் இந்நாட்டின் கல்வியில் கவனம் செலுத்தியமை.
- லண்டன், பப்டிஸ்ட், வெஸ்லியன், சேர்ச், அமெரிக்கன் போன்ற மிஷனரி நிறுவனங்களினூடாக இடம்பெற்ற சேவைகள்.
- சில வகையிலான பாடசாலைகளை உருவாக்கியமை.
- பரிஸ் பாடசாலை, மிஷனரி பாடசாலை, தனியார் பாடசாலை
- மும்மொழிகளிலும் கல்வி பெற்றுக்கொடுக்கப்பட்டமை - சிங்களம், தமிழ், ஆங்கிலம்

## கோல்புருக் ஆணைக்குழுவின் கல்வி ஆலோசனைகள்

- பாடசாலைப் பரிபாலனத்திற்காகப் பாடசாலைச் சபைகளை நியமித்தமை.
- ஆங்கிலமொழி மூல பாடசாலைகள் உருவாக்கியமை - ஆங்கிலமொழியைக் கட்டாயப் படுத்தியமை.
- கொழும்பில் ஆங்கிலக் கல்லூரியொன்றை ஆரம்பித்தமை.
- சுதேச மொழிப் பாடசாலைகள் வீழ்ச்சியுற்றமை.

## மெக்கன்ஸி ஆட்சிக்காலத்தில் உருவான கல்விச் சீர்திருத்தங்கள்

- பாடசாலைச் சபைக்குப் பதிலாக மத்திய பாடசாலைச் சபையை உருவாக்கியமை.
- உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை உருவாக்கியமை.
- சுதேச மொழிகள் மற்றும் இருமொழிப் பாடசாலைகளை உருவாக்கியமை.
- பாடசாலை வலையமைப்புப் பரவலுற்றமை.
- பிரதான நகர்களில் பெண்கள் பாடசாலைகளை நிறுவியமை.
- உயர் தொழில்களுக்காக மாணவர்களைப் பயிற்றுவிக்க 'கொழும்பு அகடமி' எனும் பெயரில் பயிற்சி நிலையம் ஒன்றை ஆரம்பித்தமை.

## 1865 மோர்கன் ஆணைக்குழுவின் கல்வி ஆலோசனைகள்

- கல்விப் பரிபாலனத்திற்காக பிரபலமான கற்பிக்கும் திணைக்களம் நிறுவியமை.
- கல்வி நடவடிக்கைகளின் நிர்வாகத்தினை அரசின் கீழ் கொண்டுவந்தமை.
- ஆரம்பக்கல்வியை தாய்மொழியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தமை.
- பெண்கள் கல்வியைத் தாய்மொழியில் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்தமை.
- மிஷனரி பாடசாலைகளுக்கு அரச அனுசரணை பெற்றுக்கொடுத்தமை.
- சில வகையிலான பாடசாலைகளை அறிமுகம் செய்தமை.
  (கைத்தொழிற் பாடசாலைகள், இருமொழி பாடசாலைகள், மத்திய பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள்)
- 1920 இல் பொதுக் கற்பித்தல்திணைக்களம், கல்வித் திணைக்களம் எனப் பெயரிடப்பட்டமை.
- 1921 இல் பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவியமை.

## இலவசக் கல்வியின் வளர்ச்சி

- 1931 டொனமூர் சீர்த்திருத்த ஆலோசனைப்படி நிறுவப்பட்ட கல்விச் செயற்பாடுகள் தொடர்பான சபையின் கண்காணிப்பில் C.W.W. கன்னங்கர அவர்களால் அனைத்துப் பிள்ளைகளுக்கும் பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரையில் இலவசமாகக் கல்வி பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்து இலவசக் கல்விக்கு வழிகாட்டியமை.
- சுய மொழியில் கல்வியைப் பெற்றுக்கொடுத்தமை.
- ஆசிரியர் பயிற்சிக்காக விசேட நிறுவனங்களை நிறுவியமை. ஆசிரியர்களுக்கு அரசினால் சம்பளம் வழங்கப்பட்டமை.
- கல்வியைச் செய்முறையுடன் தொடர்புபடுத்தியமை.
- பாடசாலை மாணவர்களுக்குப் பகலுணவு பெற்றுக்கொடுத்தமை. பாடசாலையில் சுகாதார சேவையை ஆரம்பித்தமை, முதியோர் கல்விக்காக நடவடிக்கைகளைப் பின்பற்றியமை.
- 5ஆம் வகுப்பு மற்றும் 8 ஆம் வகுப்பில் புலமைப்பரிசில் முறையை ஆரம்பித்தமை.
- சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ், உயர் பாடசாலை சான்றிதழ் பரீட்சைகளை அறிமுகப் படுத்தியமை.
- இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தைக் கற்பித்தமை.
- சமயம் பாடசாலையில் கட்டாய பாடமொன்றாக ஆக்கப்பட்டமை.
- மத்திய கல்லூரிகளை ஆரம்பித்தமை.
- தோட்டப் பாடசாலைப் பிள்ளைகளது கல்வி, தோட்ட நிர்வாகிகளுக்குப் பொறுப்பளிக்கப்பட்டமை.
- பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வியைப் பெற்றுக்கொடுத்தமை.

**சமூக மாற்றங்கள்**

- சமூக வேறுபாடுகள் அடிப்படை மாற்றங்களுக்குள்ளாதல், அதுவரை சாதி அடிப்படையில் இருந்த சமூகத்திற்குப் பதிலாக படிப்படியாக வாழ்க்கைத்தர அடிப்படையிலான சமூகமாக மாற்றமுற்றமை.
- பழைய பிரபுக்களது வகுப்பு மறைந்து புதிய பிரபு வகுப்பொன்று தோன்றியமை.
- கோல்புரூக் ஆலோசனைகளின்படி ஆங்கிலக் கல்வியைக் கட்டாயமாக்கியதன் விளைவாக ஆங்கிலக் கல்வி பரவலுற்றதுடன் ஐரோப்பிய கலாசாரத்தை மதிக்கும் மேற்குலகில் பற்று உடைய உள்நாட்டவர்களது தோற்றம்.
- வரி வசூலிக்கும் உரிமையைக் கொள்வனவு செய்தல் மற்றும் பெருந்தோட்டங்களுக்குத் தேவையான பொருட்கள் சேவைகளை வழங்கியமையினால் இப்புதிய உள்நாட்டுப் பிரபு வர்க்கம் செல்வந்தர்கள் ஆனமை.
- அவர்கள் தமது பிள்ளைகளை உயர் கல்வி மற்றும் வெளிநாட்டுக் கல்வியைப் பெறச் செய்தமை.
- மேற்குலக முறைப்படி நகர்களில் வாழ்கின்ற பணக்கார பிரிவினரின் தோற்றம்.
- கற்ற மத்திய வகுப்பினர் தோன்றியமை.
- புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவானமை.
- குறைந்த சம்பளத்திற்கு உழைப்பைப் பெறத் தென் இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பெற்ற தமிழ் மக்கள் காரணமாகப் பெருந்தோட்டத்தில் உழைப்பாளர் வகுப்பொன்று தோன்றியமை.
- பல்வேறு தேவைகள் காரணமாக நகரத் தொழிலாளர் வகுப்பொன்று உருவானமை. (பொருட்களை சுமத்தல் மற்றும் ஏற்றி - இறக்குதல், தள்ளு வண்டி ஓட்டுதல், துணி துவைத்தல்)
- தொழிற் சங்கங்களது செயற்பாடுகளின் ஆரம்பம்.

# 9.2 உள்நாட்டின் சமய, கலாசார மறுமலர்ச்சி

**தேர்ச்சி மட்டம் 9.2 :** வெளிநாட்டு ஆதிக்கத்தின் மத்தியில் தேசியத் தலைவர்களது நடவடிக்கைகளை எடுத்துக் காட்டுவார்.

**கற்றற்பேறுகள் :**
- உள்நாட்டுச் சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சியைத் தெளிவுபடுத்துவார்.
- தேசியத்தைப் பாதுகாத்திடத் தோள் கொடுத்த தலைவர்களை மதிப்பார்.
- வெளிநாட்டு அதிகாரத்தின் மத்தியில் தேசிய தலைமைத்துவத்தைப் பாதுகாத்திடச் செயற்பட்ட பாங்கினை எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## மிஷனரி செயற்பாடு

- மிஷனரிகளினால் சமயப் பிரசாரத்திற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் பல மிஷனரி நிறுவனங்களால் நாடுபூராகவும் சமய பரப்பலை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தமை.
- பல்வேறு மிஷனரிக் குழுக்கள் மற்றும் அவர்கள் சமயப் பிரசாரம் செய்த பிரதேசங்கள்.
- சமயப் பரப்பலுக்காக மிஷனரி குழுக்கள் பின்பற்றிய செயற்பாடுகள், அறிக்கைகள், உரைகள், ஆய்வுகள்.
  - பல்வேறு செய்தித்தாள்கள் மற்றும் சஞ்சிகைகளைப் பிரிசுரித்து மக்கள் மத்தியில் பகிர்ந்தளித்தமை.
  - மக்கள் கூடும் இடங்களில் வந்து உரைகள் நிகழ்த்துதல் மற்றும் கலந்துரையாடல் மூலம் சமயத்தைப் பரப்பியமை.
  - பாடசாலைகளை ஆரம்பித்து அதன் மூலம் சமயத்தைப் பரப்பியமை.
- கிறிஸ்தவ பக்தர்கள் மற்றும் ரோமன் கத்தோலிக்கர்களுக்கு விசேட சலுகைகளைப் பெற்றுக் கொடுத்தமை.
- இதன் ஒரு விளைவாக பௌத்த, இந்து, இஸ்லாம் சமயங்கள் தொடர்பான உள்நாட்டு கலாசாரங்கள் வீழ்ச்சியுற்றமை.
- கி.பி. 1860 அளவில் தமது சமயம் மற்றும் கலாசாரத்தினை எழுச்சியுறச் செய்ய பௌத்த, இந்து, இஸ்லாம் மக்கள் செயற்பாடுகளை ஆரம்பித்தமை.
- மிஷனரி நிறுவனங்களால் செயற்படுத்தப்படும் சமயப் பரப்பல் விதிமுறைகளைப் பெருமளவில் பின்பற்றிப் பௌத்த, இந்து, இஸ்லாம் சமயத்தவர்களால் அறிக்கைகள், உரைகள் மற்றும் கல்வி ஊடாகத் தமது சமயப் பிரசாரத்தை மேற்கொண்டமை.
- அவற்றுள் பௌத்த சமய மறுமலர்ச்சி நடவடிக்கைகள் குறிப்பிட்டுக் கூறத்தக்கதாகும்.

### பௌத்த சமய மறுமலர்ச்சி

### பௌத்த மறுமலர்ச்சியுடன் தொடர்புபட்ட செயற்பாடுகள் மற்றும் ஒழுங்கமைப்புகள்

- பௌத்த மறுமலர்ச்சிக்கு அடிப்படை அமைத்தவராக வலிவிட்ட ஸ்ரீ சரணங்கர தேரர் காணப்படுகின்றார்.
- பௌத்த மறுமலர்ச்சியில் குறிப்பிட்டுக் கூறத்தக்க தேரர்கள்
  வலானே சித்தார்த்த தேரர்.
  ஹிக்கடுவே சுமங்கல தேரர்
  புலத்கம தம்மாலங்கார சுமனதிஸ்ஸ தேரர்

மிகெட்டுவத்தே குணானந்த தேரர் போன்றோரது சமய சேவைகள்.

- வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவெனாக்களின் தோற்றம்.
- வாத விவாதங்கள் நடாத்தியமை.
  பஞ்ச மகா வாதங்கள்
- ஒல்கொட் அவர்கள் இலங்கைக்கு வந்தமை மற்றும் அவர்களது சமய நடவடிக்கைகள்
  பௌத்த பிரமஞான சங்கத்தை உருவாக்கியமை.
- பௌத்த மறுமலர்ச்சியுடன் தொடர்புடைய தலைவர்கள்
  கர்னல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் அவர்கள்
  அநகாரிக தர்மபால அவர்கள்
  பிரஹ்மசாரி வலிசிங்க ஹரிஸ்சந்திர அவர்கள்
  ஸ்ரீமத் சீ.டீ. ஜயதிலக்க அவர்கள்
  பியதாச சிறிசேன அவர்கள்
  எஸ். மகிந்த தேரர்
- பௌத்த மறுமலர்ச்சிக்குப் பங்களித்த நிறுவனங்கள்
  - பௌத்த பிரம்மஞான சங்கம்
  - மகாபோதி நிறுவனம்
  - பௌத்த இளைஞர் சங்கம்

## கலாசார மறுமலர்ச்சி

- பௌத்த அச்சகங்களை உருவாக்கல்
  லங்காபிநவ விஷ்ரத அச்சகம்
  சரசவி சந்தரெச அச்சகம்
  சுதர்ஷன அச்சகம்
  கவட கதிக அச்சகம்
- பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் நூல்கள் அச்சிடல் அதிகரித்தமை.
  லக்மினி பஹன பத்திரிகை, சரசவி சந்தரெச பத்திரிகை வேறு பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகள்
- பல பிரிவெனாக்களின் தோற்றம்
  பிரிவெனாக்களினூடாக இல்லறத்தவர், துறவிகள் எனப்பல கற்றோரின் உருவாக்கம் மற்றும் அவர்கள் பௌத்த மறுமலர்ச்சிச் செயற்பாடுகளுக்குத் தலைமை தாங்கியமை.
- ஞாயிற்றுக்கிழமை அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்தமை.
- பௌத்த பாடசாலைகளை நிறுவியமை.
- சமய விழாக்களை நடாத்தியமை.
- பௌத்த மறுமலர்ச்சி ஊடாகத் தோன்றிய தேசாபிமான செயற்பாடுகள்
  19ஆம் நூற்றாண்டின் இறுதியளவில் மிஷனரிகளது நடவடிக்கைகளுக்குப் பதிலடி கொடுத்து பௌத்த மறுமலர்ச்சி நடவடிக்கைகள் மேலும் வளர்ச்சியுற்றமை.
- உள்நாட்டவர் மத்தியில் இனப்பற்றை வளர்க்கும் வகையிலான செயற்பாடுகள்.
- பியதாச சிறிசேன, அனகாரிக தர்மபால, வலிசிங்க ஹரிஸ்சந்திர போன்ற இல்லற வாழ்வு வாழ்பவர்களும் பிக்குகளும் அதில் முன்னணி வகித்தமை.
- பௌத்த புனிதத் தலங்களைப் பாதுகாக்கும் செயற்றிட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டமை.
  அனகாரிக தர்மபால இந்தியாவில் புனிதத் தலங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை.
- பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் மதுப்பாவனை வேகமாகப் பரவியமையினால் உருவான சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் மது ஒழிப்புச் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டமை. அனகாரிக தர்மபால, பியதாச சிறிசேனா, ஜோன் த சில்வா, டீ.பி. ஜயதிலக, எப்.ஆர். சேனாநாயக்க, டீ.எஸ். சேனாநாயக்க போன்றவர்கள் தலைமை வகித்தமை.

**இந்துசமய மறுமலர்ச்சி**

- வட பகுதியில் கிறிஸ்தவ மிஷனரி நடவடிக்கைகள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்பட்டமையினால் அப்பிரதேசங்களில் இந்து சமயமத்தவரின் கலாசார மற்றும் பாரம்பரிய பழக்கவழக்கங்கள் வீழ்ச்சியுறத் தொடங்கின. இதனால் தமது சமயம் மற்றும் கலாசாரத்தினைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையில் இந்துக்கள் முன் வந்தமை.
- இதனால் இந்துக்கள் மத்தியில் சமய மறுமலர்ச்சியொன்று உண்டானமை.
- இந்து சமய மறுமலர்ச்சிச் செயற்பாட்டின் ஆரம்பகர்த்தாவாக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் செயற்பட்டமை.
- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களது பங்களிப்புக்கள்
    - யாழ்ப்பாணத்தில் வண்ணார் பண்ணையில் இந்துப் பாடசாலை ஒன்றை ஆரம்பித்தமை.
    - சைவப் பிரகாச சபையை நிறுவியமை.
    - சைவ வித்தியாசாலை எனும் ஆங்கிலமொழி மூலப் பாடசாலையை ஆரம்பித்தமை.
    - இந்துப் பிள்ளைகளுக்காக தன் வீட்டில் வகுப்புக்கள் நடாத்தியமை.
    - இந்துப் பிள்ளைகளுக்காக நூல்கள் எழுதியமை மற்றும் நூல்களைத் தமிழ் மற்றும் ஆங்கில மொழிக்கு மொழிமாற்றம் செய்தமை.
    - இந்து சமயத்தில் மறுமலர்ச்சியொன்றை உருவாக்கியமை.
    - பொன்னம்பலம் இராமநாதன் மற்றும் பொன்னம்பலம் அருணாசலம் இருவரும் சமய செயற்பாடுகளை மேலும் முன்னெடுத்தமை.

**இஸ்லாமிய சமய மறுமலர்ச்சி**

- பௌத்த, இந்து சமய மறுமலர்ச்சி நடவடிக்கைகளுக்குச் சமமாக இஸ்லாம் சமயத்திலும் மறுமலர்ச்சியொன்று ஏற்பட்டமை.
- இஸ்லாம் சமய மறுமலர்ச்சிக்காக சித்தி லெப்பை அவர்கள் தலைமையில் நடவடிக்கை எடுத்தமை.
- கொழும்பு முஸ்லிம் சங்கத்தினை நிறுவியமை.
- கொழும்பு சாஹிரா வித்தியாலயத்தினை ஆரம்பித்தமை.
- அரபு மொழி கற்பித்தலைப் பரவலாக்கியமை.
- ஆங்கிலமொழியைக் கற்க முஸ்லிம் மக்களைத் தூண்டியமை.
- முஸ்லிம் நேசன் பத்திரிகையை ஆரம்பித்தமை.
- சிலோன் இஸ்லாம் ரிவீவ் சஞ்சிகைக்குக் கட்டுரைகள் வரைவதன் மூலம் கல்வியின் முக்கியத்துவத் தினைத் தெளிவுபடுத்தியமை.
- இவ்வாறு பிரித்தானியரது செல்வாக்கிற்கு எதிராக உள்நாட்டுச் சமயங்கள், உள்நாட்டு சம்பிரதாயங்கள், உள்நாட்டுக் கலாசாரங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தேசியத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தமை.



1890 ஆம் ஆண்டு இலங்கையில் அமெரிக்கன் மிஷனரிக் குழுவினர
*(source:http://sangam.org/british-divide-rule-ceylon/)*
.

## மதிப்பீடு

**கீழுள்ள வினாக்களுக்கு A, B, C, D என நான்கு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவை சரியானவையாகும். சரியான கூற்றைத் தெரிவு செய்க. A, B சரியாயின் (1) எனவும், B, C சரியாயின் (2) எனவும், C, D சரியாயில் (3) எனவும் A, D சரியாயின் (4) எனவும் ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கூற்றுக்கள் சரியாயின் (5) எனவும் அடைப்பினுள் எழுதுக.**

01. 1840 ஆம் ஆண்டு தரிசு நிலச் சட்டத்தின் பிரதான நோக்கம் தொடர்பான கூற்றுக்களில்,
   A நெற்பயிர்ச் செய்கையினை வளர்ச்சியுறச் செய்தல்.
   B தானிய வரியை நீக்குதல்
   C அரசின் இடங்களை பாதுகாத்துக் கொள்ளல்.
   D அரசின் நிலங்களைப் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாளருக்கு விற்பதற்காக அவற்றின் உரிமையைத் தமதாக்கிக் கொள்ளல்.

(...........)

02. பிரித்தானிய காலனித்துவ காலத்தில் பெருந்தெருக்கள் மற்றும் புகையிரதப் பாதைகள் அமைத்தல் தொடர்பாகக் கீழ்வரும் கூற்றுக்களில்,
   A பெருந்தெருக்கள் மற்றும் புகையிரதப் பாதைகள் அமைப்பது பெருந்தோட்டப் பொருளாதாரப் பரவலுக்குக் காரணமான பிரதான காரணியாகும்.
   B எட்வட் பான்ஸ் ஆளுனரால் கொழும்பு - கண்டி பாதை அமைக்கப்பட்டது.
   C கொழும்பு - கண்டி புகையிரதப்பாதை இலங்கையின் முதலாவது புகையிரதப் பாதை யாகும்.
   D பெருந்தோட்டப் பொருளாதாரச் செயற்பாடுகளுக்குச் சமமாக உருவான போக்குவரத்து அபிவிருத்தி இலங்கையின் பொருளாதாரப் புரட்சியில் ஒரு முக்கிய மாற்றம் ஆகும்.

(...........)

03. சி.டப்ளியு.டப்ளியூ. கன்னங்கர அவர்களது கல்வி ஆலோசனை தொடர்பான கூற்றுக்களில்,
   A கற்பிக்கும் மொழி தாய்மொழியாக இருத்தல்
   B கிராமங்களிலும் மத்திய கல்லூரிகளை நிறுவுதல்.
   C பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி முறை உருவாக்கியமை.
   D தோட்டப் பாடசாலைகள் உருவாக்கியமை. (...........)

**கீழ்வரும் அனைத்து வினாக்களிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருந்தாத கூற்றினைத் தெரிவு செய்க.**

04. கோப்பிப் பயிர்ச் செய்கை வளர்ச்சி
   1. கோப்பிப் பயிர்ச் செய்கையின் உரிமை பெருமளவில் ஐரோப்பியரிடம் காணப்பட்டது.
   2. கோப்பிப் பயிர்ச் செய்கைக்குத் தேவையான உழைப்பாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டனர்.
   3. கோப்பிப் பயிர்ச் செய்கை வடக்குப் பகுதியிலும் பரவலுறச் செய்யப்பட்டது.
   4. ஃஹெமிலியா வெஸ்ட்ராடிக்ஸ் எனும் இலை வெளிறல் நோயினால் கோப்பிப் பயிர்ச் செய்கை அழிவுற்றது.
   5. கோப்பிப் பயிர்ச் செய்கை பரவியமையினால் நில விற்பனை அதிகரித்தது.

(...........)

05. பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான பௌத்த மறுமலர்ச்சி
1. பௌத்த பிரம்ம ஞான சங்கத்தை ஆரம்பித்தமை.
2. உபசம்பதாவை மீண்டும் நிறுவியமை.
3. பௌத்த கல்வி வளர்ச்சியுற்றமை.
4. பௌத்த கொடி உருவாக்கப்பட்டமை.
5. வெசாக் போயா தினத்தை அரச விடுமுறை தினமாக அறிவித்தமை.

(...........)

06. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துமத மறுமலர்ச்சியில் ஆறுமுக நாவலரின் பங்களிப்பு
1. இந்துமத மறுமலர்ச்சி ஆறுமுக நாவலரினால் கொண்டு நடாத்தப்பட்டது.
2. நாவலர் பௌத்த பிரம்மஞான சங்கத்துடன் நெருங்கிய தொடர்பைப் பேணியமை.
3. சமய மறுமலர்ச்சியை உருவாக்கப் பாடசாலைகளினதும் கல்வியினதும் பெறுமதியை உணர்த்துதல்.
4. 1888 இல் நாவலர் சைவபரிபாலன சபையை நிறுவினார்.
5. 1872 இல் அவரால் ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியாசாலை பிற்காலத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியாக உருவெடுத்தது.

(...........)

**01. கீழுள்ள தலைப்புக்களில் இரண்டினைத் தெரிவுசெய்து பிரித்தானியர் ஆட்சியில் அவை முக்கியம் பெற்ற விதத்தைத் தெளிவுபடுத்துக.**

1. பௌத்த கல்வி
2. விவசாய மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகள்
3. மது ஒழிப்பு இயக்கம்
4. 1915 சிங்கள - முஸ்லிம் கலவரம்
5. இடதுசாரி இயக்கம்

(2x 7 = 14 புள்ளிகள்)

02. இலங்கையில் பிரித்தானியராட்சியின் கீழ் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் விளைவாக உருவான மாற்றங்கள் கீழ்வரும் தலைப்புக்களில் தரப்பட்டுள்ளன. அவற்றுள் நீர் விரும்பிய இரண்டைப் பற்றி ஆராய்க.
1. போக்குவரத்து நடவடிக்கைகள்
2. ஏற்றுமதி - இறக்குமதி வர்த்தகம்
3. நிலவுரிமையும் நிலப் பயன்பாடும்
4. தொழிலாளர் வகுப்பு
5. மலையக சமூகம்

(2x 7 = 14 புள்ளிகள்)

03. (1) 19ஆம் நூற்றாண்டளவில் இலங்கையின் பயிர்ச்செய்கையில் ஏற்பட்ட வளர்ச்சியை விமர்சிக்குக. (08 புள்ளிகள்)
(2) பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை மலையகப் பிரதேசத்தில் விவசாய மக்களில் ஏற்படுத்திய பாதிப்பினைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (06 புள்ளிகள்)

04. இலங்கையில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினால் ஏற்பட்ட பொருளாதாரத்தின் வளர்ச்சியைக் கீழ்வரும் தலைப்புக்களில் ஆராய்க.
(1) கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சி மற்றும் வீழ்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய பிரதான காரணிகள். (07 புள்ளிகள்)
(2) பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் கீழ் உருவான பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள். (07 புள்ளிகள்)

05. ''19ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சி பொருளாதாரத் துறையில் மட்டுமன்றி சமூக ரீதியிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியது''

1. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை விஸ்தரிப்பிற்குக் காரணமாக அமைந்த சீர்திருத்த ஆலோசனைகளை முன்வைத்த ஆணைக்குழுவின் பெயரைத் தருக.

(01 புள்ளி)

2. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய வர்த்தகப் பயிர்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

3. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக நிலங்களைப் பெற்றுக்கொண்ட விதத்தைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

(04 புள்ளிகள்)

4. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையினால் ஏற்பட்ட விளைவுகளைக் கருத்திற்கொண்டு மேற்கொண்ட கூற்றினைக் கலந்துரையாடுக.

(07 புள்ளிகள்)

06. 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாகத்தில் உருவான சமய மற்றும் கலாசார மறுமலர்ச்சியில் குறிப்பிட்டுக் கூறத்தக்க பண்புகளை ஆராய்க.

(14 புள்ளிகள்)

# 10. தேசிய இயக்கமும் யாப்புச் சீர்திருத்தங்களும்

## அறிமுகம்

கி.பி. 1815 இல் கண்டி இராச்சியம் பிரித்தானியரால் கைப்பற்றப்பட்டதுடன் இலங்கையின் சுயாதீனத் தன்மை முற்றுப்பெற்றது. அதுவரை காலம் நிலவி வந்த மன்னராட்சி முறையும் இல்லாதொழிக்கப்பட்டது. அன்றிலிருந்து 1948 இல் சுதந்திரம் அடையும் வரையிலான 133 வருடங்கள் பிரித்தானியர் இலங்கையை ஆட்சி செய்தனர்.

பிரித்தானியரின் ஆட்சிக்கு எதிராக இலங்கையரால் பல்வேறு விதமான கிளர்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டது அதன் பயனாக அடிக்கடி யாப்புச் சீர்திருத்தங்களை பிரித்தானியர் வழங்க நேர்ந்தது. அவற்றால் திருப்தியடையாத இலங்கையர் தொடர்ந்தும் கிளர்ச்சிகளை மேற்கொண்டனர். 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் ஆங்கிலக் கல்வி கற்ற மத்திய தர வகுப்பினர் அக்கிளர்ச்சிகளுக்குத் தலைமை ஏற்றதுடன் பல்வேறு அமைப்புக்களையும் ஏற்படுத்தித் தமது கோரிக்கைகளை முன்வைத்தனர். அதன் விளைவாக 1948 இல் சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள இலங்கையர்களால் முடிந்தது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்கு எதிராக முன்னெடுத்த போராட்ட இயக்கமும் அக்காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றிய தகவல்களை ஆய்வு செய்வதும் இவ்வலகின் நோக்கமாகும்.

**தேர்ச்சி** : • இலங்கையில் அந்நியராட்சிக் காலம் பற்றி ஆராய்ந்து தமது நாட்டின் சுயாதீனத்தைப் பாதுகாப்பதற்குச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 10.1:** பிரித்தானியரின் ஆட்சியும், உள்நாட்டுத் தலைவர்களின் செயற்பாடுகள் பற்றியும் ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற்பேறுகள்** :
- வெளிநாட்டுச் சக்திகளின் மத்தியில் உள்நாட்டுத் தலைவர்கள் செயற்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவார்.
- பிரித்தானியரின் கீழ் அரசியல் யாப்புச் சீர்திருத்தங் களைத் தெளிவு படுத்துவார்.
- அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களுடன் இலங்கை தேசிய இயக்கத்தின் செயற்பாடுகள் பற்றி விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## மத்திய தர வகுப்பினரும் தேசிய இயக்கமும்

- மத்திய தர வர்க்கத்தின் தோற்றம்
  - கோல்புரூக் சீர்திருத்தங்களின் விளைவாக பண்டைய உள்நாட்டுப் பிரபு வர்க்கத்தைத் தாண்டி, கல்வி, செல்வம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட மத்திய தர வர்க்கம் உருவானமை.
  - கோல்புரூக் சீர்திருத்தத்தின் கீழ் ஆங்கிலக் கல்வி பெறும் வாய்ப்பு விரிவாக்கப்பட்டமை.
  - பெருந்தோட்டத்துறைக்கான சேவை வழங்கல், சாராயக் குத்தகை என்பன மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்புக் கிடைத்தமை.
  - கொழும்பு, சிலாபம், குருணாகல் முதலிய பிரதேசங்களில் தென்னந் தோட்டங்கள் இலங்கை யரின் உரிமையாகக் காணப்பட்டமை.

- ஐரோப்பிய பழக்கவழக்கங்களுக்கு அடிமையானமை.
- செல்வந்தரான உள்நாட்டுப் பிரபு வர்க்கத்தினர் தமது பிள்ளைகளைப் பிரித்தானிய பல்கலைக் கழகங்களுக்கு அனுப்பியமை.
- அதனூடாக ஆங்கிலம் கற்ற மத்தியதர வர்க்கம் தோற்றம் பெற்றமை.
- அவ்வகுப்பினருக்கு அரசியல் அதிகாரம் கிடைக்காமை.
- மேற்கத்தைய முறைக்குச் சார்பாக இருந்த இப்பிரிவினர் புதிய சமூக வகுப்பினராகப் பலம் பெற்றமை.
- அரசியல் அதிகாரத்தைப் பெறும் நோக்கில் அவர்கள் அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளில் ஈடுபட்டமை.

## தேசிய இயக்கம்

### தேசிய இயக்கத்தின் ஆரம்பம்

- வெளிநாட்டு ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலை பெறுவதற்காக ஒரு நாட்டின் எல்லா இனக் குழுவினரும் இணைந்து ஒரே நோக்கில் ஒழுங்கமைந்து முன்னெடுக்கும் போராட்டமே தேசிய இயக்கம் எனப்படும்.
- 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் உருவான தேசிய இயக்கங்கள்
    - அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களுக்கான போராட்ட இயக்கங்கள்.
    - இலங்கைச் சீர்திருத்த சங்கம்
    - சிலாபச் சங்கம்
    - யாழ்ப்பாணச் சங்கம்
    - இலங்கை விவசாயச் சங்கம்
    - மது ஒழிப்பு இயக்கம்
    - இலங்கை தேசிய சங்கம்

### தேசிய இயக்கத்தின் நோக்கங்கள்

- யாப்புச் சீர்திருத்தங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல்.
- தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்பல்.
- போராட்ட இயக்கங்களை முன்னெடுத்தல்.
- சமய, கலாசார மறுமலர்ச்சியை ஏற்படுத்தல்.
- பொறுப்புடன் கூடிய அரசியல் யாப்பொன்றைப் பெற்றுக் கொள்வதற்காக முயற்சித்தல்.
- அமைதியான போராட்டங்களுக்கு முன்னுரிமையளித்தல்.
- குறுகிய காலத்தில் அந்நிய ஆக்கிரமிப்பிலிருந்து நாட்டை விடுவித்தல்.

### யாப்புச் சீர்திருத்தங்களைப் பெற்றுக்கொள்வதில் தேசிய இயக்கத்தின் பங்களிப்பு

- இலங்கைத் தேசிய சங்கம் பிரதான இடம் வகித்தமை.
- கிளர்ச்சிகள், போராட்டங்களில் ஈடுபட்டமை.
- பொறுப்புடன்கூடிய யாப்பொன்றைப் பெற்றுக்கொள்வதற்காகச் செயற்பட்டமை.

### யாப்புச் சீர்திருத்தங்களின் முக்கிய சந்தர்ப்பங்கள்

- கோல்புரூக் சீர்திருத்தம் - 1833
    - இதுவரை காலம் செயற்பட்ட ஆலோசனை சபை நீக்கப்பட்டு சட்டவாக்கக் கழகம், சட்ட நிர்வாகக் கழகம் உருவாக்கப்பட்டமை.

- சட்டவாக்கச் சபை உத்தியோகச் சார்பு உறுப்பினர் 9 பேரையும் உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் 6 பேரையும் கொண்டிருந்ததுடன் அவற்றின் தலைவராக ஆளுநர் செயற்பட்டமை.
  - சட்ட நிர்வாகக் கழகம் 06 உறுப்பினர்களைக் கொண்டிருந்தமை.
  - கோரிக்கைகளின் விளைவாக 1889 இல் சட்டவாக்கக் கழகத்தின் உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் தொகை 06 இலிருந்து 08 ஆக உயர்த்தப்பட்டமை.

### குறூ-மக்கலம் சீர்திருத்தம் (1910)

- சட்ட வாக்கக் கழக உறுப்பினர் தொகை 21 ஆக அதிகரிக்கப்பட்டமை.
- முதல் தடவையாகச் சட்டவாக்கக் கழகத்திற்கு 04 உறுப்பினர் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படும் அடிப்படையை அறிமுகம் செய்தமை.
- இனவாரிப் பிரதிநிதித்துவமுறை தொடர்ந்தும் செயற்பட்டமை.
- கல்வி கற்ற இலங்கையர் சார்பில் ஒரு பிரதிநிதிக்கு இடம் வழங்கப்பட்டமை.

### மனிங் சீர்திருத்தம் (1920)

- யாப்புச் சீர்திருத்தக் கோரிக்கைகளின் விளைவாக 1920 இல் இச் சீர்திருத்தம் அறிமுகமானமை.
- சட்டவாக்கக் கழக உறுப்பினர் தொகை 37 ஆக அதிகரிக்கப்பட்டமை.
- உத்தியோகச் சார்பற்ற பிரதிநிதிகளின் தொகை அதிகரிக்கப்பட்டமை.
- உத்தியோகச் சார்பற்ற உறுப்பினர் தொகை 10 இலிருந்து 23 ஆக உயர்த்தப்பட்டமை.
- மாகாணத் தேர்தல் தொகுதி முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- வாக்குரிமை சற்று விரிவாக்கப்பட்டமை.

### டொனமூர் யாப்புச் சீர்திருத்தம் (1931)

- மனிங், டெவன்ஷயர் யாப்பு அதிகாரமும் பொறுப்பும் வெவ்வேறாகக் காணப்பட்ட பலவீனமான யாப்பாகக் காணப்பட்டமையால் அதற்கு எதிரான கிளர்ச்சிகளின் விளைவாக இலங்கைக்குப் பொருத்தமான யாப்பு ஒன்றைச் சிபாரிசு செய்வதற்காக டொனமூர் பிரபு தலைமையிலான ஆணைக்குழு வருகை.
- இவ்வாணைக் குழுவில், டொனமூர் பிரபு, ஜெப்ரி பட்லர், மெதிவ் நேதன், டிரமன்ட சீல்ட் எனும் நால்வர் இடம்பெற்றமை.

### டொனமூர் யாப்பின் சிறப்பம்சங்கள்

- அரசுக் கழகம் அறிமுகம்
- நிர்வாகக்குழு முறை அறிமுகம்
- ஆளுநரின் அதிகாரங்கள் குறைப்பு.
- அரச செயலாளர்கள் மூவர்
- இனவாரிப் பிரதிநிதித்துவ முறை நீக்கம்
- சர்வசன வாக்குரிமை அறிமுகம்
- பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை விரிவாக்கம்

### அரசுக்கழகம்

- சட்டவாக்கக்கழகம், சட்ட நிர்வாகக் கழகம் எனும் இரண்டும் நீக்கப்பட்டு அரசுக்கழகம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
- அரசுக்கழக உறுப்பினர் தொகை 61 ஆகும்.
  - தேர்தல் தொகுதி அடிப்படையில் சர்வசன வாக்குரிமை மூலம் - 50
  - ஆளுனரின் நியமனம் - 08
  - அரச செயலாளர்கள் - 03
- சர்வசன வாக்கின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒருவர் சபாநாயகராக அரசுக் கழகத்தின் தலைமைப் பதவியை வகித்தமை.

- அரசுக்கழகத்தின் அதிகாரங்களும் பணிகளும்
    - சட்டமியற்றும் அதிகாரம்
    - வருடாந்த வரவு, செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.
    - நிர்வாகத் துறைக்கு ஆலோசனை சமர்ப்பித்தல்.
    - நிர்வாகக் குழுக்களின் செயற்பாடுகளைப் பரிசீலித்தல்.

- நிர்வாகக் குழுக்கள் (07)
    - உள்நாட்டலுவல்கள் நிர்வாகக் குழு
    - விவசாயமும் காணியும் நிர்வாகக்குழு
    - உள்ளூராட்சி மன்ற நிர்வாகக்குழு
    - சுகாதார நிர்வாகக்குழு
    - கல்வி நிர்வாகக்குழு
    - தொழில், கைத்தொழில், வர்த்தக நிர்வாகக்குழு
- அரச செயலாளர், சபாநாயகர் தவிர்ந்த அரசுக்கழக உறுப்பினர் 50 பேரும் 07 நிர்வாகக் குழுக்களாக பிரிக்கப்பட்டமை.
- ஒரு நிர்வாகக்குழுவில் கூடிய பட்சம் 09 பேரும் குறைந்தபட்சம் 06 பேரும் இடம்பெற்றமை.
- நிர்வாகக் குழுவின் பெரும்பான்மையோரின் விருப்பப்படி அதன் தலைவர் தெரிவுசெய்யப்பட்டதுடன் அவர் அக்குழு தொடர்பான அமைச்சராவார்.
- நிர்வாகக் குழுக்களின் தலைவர்கள் 07 பேருடன் அரச செயலாளர் 03 பேரையும் கொண்ட அமைச்சரவை ஒன்று செயற்பட்டது.

**ஆளுனர்**
- பிரித்தானிய முடியின் பிரதிநிதி
- பாதுகாப்புத்துறை
- வெளிவிவகார துறை
- குடிவரவு செயற்பாடுகள்
- கப்பல் போக்குவரத்து
- வர்த்தக உடன்படிக்கைகள்
- நிதிச் சேவை நடவடிக்கைகள்
- நீதிமன்றச் செயற்பாடுகள் முதலியவை ஆளுனருக்குரியவை.
- மேற்படி நடவடிக்கைகள் தொடர்பாக ஆளுநர் நேரடியாக குடியேற்ற நாட்டுச் செயலாளருக்கு பொறுப்புச் சொல்ல வேண்டியிருந்தது.

**அரச அதிகாரிகள்**
- பொதுச் செயலாளர்
- நிதிச் செயலாளர்
- சட்டச் செயலாளர்

**பொதுச் செயலாளர்**
- பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள், அரச சேவை என்பவற்றை நிர்வகித்தல்.

**நிதிச் செயலாளர்**
- வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.
- அரச வருமானத்தைத் திரட்டுதலும் பகிர்தலும்.
- வெளிநாட்டுக் கடன் கொடுக்கல், வாங்கலை நிர்வகித்தல்.
- நிதிக் கொள்கை
- அரச திறைசேரியின் பொறுப்பாளர்.

**சட்டச் செயலாளர்**

- அரசுக் கழகத்தால் அனுமதிக்கப்பட்ட ஒவ்வொரு மசோதாவையும் பற்றிய அறிக்கையை குடியேற்றச் செயலாளருக்கு அனுப்பி வைத்தல்.
- நீதிமன்ற நடவடிக்கைகளை நிர்வகித்தல்.

அரசாங்கத்துக்கு சட்ட ஆலோசனை வழங்கல்.
அரசுக் கழகத்திற்கான தேர்தலை நடாத்துதல்.

**சர்வசன வாக்குரிமை**

- படித்தவர் - பாமரர், ஏழை - பணக்காரன், ஆண் - பெண், இனம் - சமயம் எனும் எதுவித பேதங்களுமின்றி 21 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டமை.
- டொனமூர் யாப்பின் கீழ் சர்வசன வாக்குரிமை அறிமுகமானமை.
- இனவாரிப் பிரதிநிதித்துவம் நீக்கப்பட்டமை.
- பிரித்தானியக் குடியேற்ற நாடுகளுள் சர்வசன வாக்குரிமை கிடைக்கப் பெற்ற முதலாவது ஆசிய நாடு இலங்கையாகும்.
- பொதுமக்கள் அரசியலில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தமை.
- டொனமூர் யாப்பு அறிமுகமாகும் போது இலங்கையில் அரசியல் கட்சிகள் இருக்காத போதிலும் அதன் பின்னர் அரசியல் கட்சிகள் உருவானமை.
- நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பான அரச கொள்கை உருவானமை.

**டொனமூர் யாப்பின் குறைபாடுகள்**

- இந்த யாப்பிலும் குறைபாடுகள் இருந்ததாகக் கருத்து நிலவியமை.
- ஆளுநருக்கும் அரச செயலாளர்களுக்கும் அரச அதிகாரங்களும் பிரதான அமைச்சுக்களும் பொறுப்பளிக்கப்பட்டிருந்தமை.
- நிர்வாகக் குழு முறையால் ஆட்சி நடவடிக்கைகள் தாமதமானமை.
- எதிர்காலப் பாராளுமன்றத்தின் கூட்டுப் பொறுப்புத் தன்மை வளர்வதற்குத் தடையாக இருந்தமை.
- ஆளுநரின் அதிகாரங்களைக் குறைக்குமாறும் பிரதான அமைச்சுக்கள் மூன்றையும் உள்ளூர் பிரதிநிதிகளிடம் வழங்குமாறும் இலங்கைத் தலைவர்கள் தொடர்ந்தும் கோரிவந்தமை.

**சோல்பரி யாப்பு**

- சோல்பரி யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டமைக்கான காரணங்கள்
  - டொனமூர் யாப்பின் குறைபாடுகள்
  - இலங்கைத் தலைவர்களின் போராட்டம் (பொறுப்பாட்சி அல்லது டொமீனியன் சுதந்திரம்)
- **சோல்பரி ஆணைக்குழு**

  சோல்பரி பிரபு, ஜே.எப்.ரீஸ். எஸ்.ஜே. பரோஸ் எனும் அங்கத்தவர்கள் 1944 இல் இலங்கை வருகை.
- **சோல்பரி யாப்பின் பிரதான அம்சங்கள்**
  - ஆளுநருக்குப் பதிலாக ஆளுநர் நாயகப் பதவி.
  - பிரித்தானிய முடியின் பிரதிநிதியான ஆளுநர் நாயகம் நிர்வாகியாவார்.
  - பிரதமர் தலைமையிலான அமைச்சரவை.
  - பாராளுமன்றம்.
  - சிறுபான்மையினருக்கான பாதுகாப்பு
  - அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும்

**ஆளுநர் நாயகம் பதவி**

- பிரித்தானிய முடியின் பிரதிநிதியாயிருத்தல்.
- பிரதமரின் சிபாரிசின் பேரில் ஆளுநர் நாயகத்தால் நியமிக்கப்படல்.

- **ஆளுநர் நாயகத்தின் அதிகாரங்களும் பணிகளும்**
  - பிரதமரையும் அமைச்சர்களையும் நியமனஞ் செய்தல்.
  - தலைமை நீதிபதியையும் உயர் நீதிமன்ற நீதிபதிகளையும் நியமித்தல்.
  - பிரதமரின் ஆலோசனைப்படி பாராளுமன்றத்தைக் கூட்டல், கலைத்தல், ஒத்தி வைத்தல்.
  - சிம்மாசனப் பிரசங்க உரை நிகழ்த்துதல்.
  - சமூகப் பணிகளில் பங்குபற்றல்.

- **பிரதமர் தலைமையிலான அமைச்சரவை**
  - பாராளுமன்ற உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரின் விருப்பத்தைப் பெற்றுக் கொள்ளக் கூடிய பிரதமரை ஆளுநர் நாயகம் நியமிப்பார்.
  - அமைச்சரவை (கெபினட்) என்பது பிரதமர், அமைச்சர்களைக் கொண்டது.
  - பிரதமரின் ஆலோசனைப்படி ஆளுநர் நாயகம் ஆளும் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் களிலிருந்து அமைச்சர்களை நியமனம் செய்தல்.
  - பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு இரண்டும் பிரதமரால் நிர்வகிக்கப்பட வேண்டியிருந்தமை.



***1947 இல் சுதந்திர சதுக்கத்தில் இலங்கையின் முதலாவது பாராளுமன்றக்கூட்டம்***
*(source: https://en.wikipedia.org/wiki/Sri_Lankan_independence_movement)*

- **பாராளுமன்றம்**
  - இருசபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை
    - பிரதிநிதிகள் சபை (கீழ்சபை)
    - செனட் சபை (மேல் சபை)
- பிரதிநிதிகள் சபை
  - பாராளுமன்றத்தின் பிரதான சபை இதுவாகும்.
  - அங்கத்தவர் தொகை 101 ஆகும்.
    - தேர்தல் தொகுதிகள் மூலம் 95
    - நியமனம் மூலம் 06
  - பாராளுமன்றத்தின் பதவிக் காலம் 05 வருடங்களாகும்.

- பிரதிநிதிகள் சபையின் அதிகாரங்களும் பணிகளும்
  - எல்லைப்படுத்தப்பட்ட வகையில் சட்டமியற்றும் அதிகாரம்
  - நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்துதல்.
  - வரவு-செலவுத்திட்டம் தொடர்பான நடவடிக்கைகள்
  - அரசியல் யாப்பில் திருத்தங்கள் செய்தல், புதிய யாப்பு உருவாக்கல்.
- செனட் சபை (மூதவை)
  - 30 அங்கத்தவர்களைக் கொண்டது.
  - 15 பேர் பிரதிநிதிகள் சபையாலும் மீதி 15 பேரும் பிரதமரின் ஆலோசனைப்படி ஆளுநர் நாயகத்தாலும் நியமனம் செய்யப்படுவர்.
  - பதவிக் காலம் 06 வருடங்களாகும்.
  - 02 வருடங்களுக்கு ஒரு முறை செனட் சபை உறுப்பினர்களுள் 1/3 பங்கினர் நீக்கப்பட்டு, புதிதாக உறுப்பினர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.
  - அரசியலில் நேரடியாக ஈடுபட விரும்பாத அறிஞர்கள், தொழில் வாண்மையாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்வது இதன் பிரதான நோக்கமாகும்.
  - சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இதன் நோக்கமாகும்.
  - செனட் சபை உறுப்பினர்களிலிருந்து 02 பேர் அமைச்சரவையில் சேர்க்கப்பட வேண்டும். அதில் ஒருவருக்கு நீதி அமைச்சுப் பதவி வழங்க வேண்டும்.
- அதிகாரங்களும் பணிகளும்
  - நிதி மசோதா ஒன்றை 06 மாத காலம் தாமதிக்கச் செய்யலாம்.
  - சாதாரண மசோதா ஒன்றை 01 வருட காலம் தாமதிக்கச் செய்யலாம்.
- சிறுபான்மையினருக்கான காப்பீடுகள்
  - அமைச்சரவை மசோதா மற்றும் யாப்பின் 29ஆவது சரத்துப்படி சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கு நடவடிக்கை மேற்கொண்டமை.
  - பல்லங்கத்தவர் தேர்தல் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டமை.
  - பிரதிநிதிகள் சபைக்கு நியமன உறுப்பினர் 06 பேர் நியமிக்கப்பட்டமை.
  - செனட் சபை அமைக்கப்பட்டமை.
- அரசாங்க சேவையும் நீதிச் சேவையும்
  - சோல்பரி யாப்பின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவும் நீதிச் சேவை ஆணைக்குழுவும் அமைக்கப்பட்டமை.
  - அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம் பதவி உயர்வு, பணி நீக்கம் முதலியன அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டமை.
  - தலைமை நீதிபதியின் தலைமையில் நீதிச் சேவை ஆணைக்குழு அமைக்கப்பட்டமை.
  - நீதிபதிகளின் சம்பளம், இடமாற்றம், பதவி உயர்வு முதலியன நீதிச் சேவைகள் ஆணைக்குழு மூலம் செயற்படுத்தப்பட்டமை.
  - அரசாங்க நிதி நடவடிக்கைகள் தொடர்பாகத் திரட்டிய பொது நிதியம் எனும் பெயரில் அமைப்பொன்று ஏற்படுத்தப்பட்டமை.
- தேசிய சுதந்திரம்
  - தேசிய சுதந்திரம் என்றால் என்ன?
  - சோல்பரி யாப்பின் சில விதிகளுக்கு அமைய இலங்கைப் பாராளுமன்றத்திற்குச் சுயாட்சி கிடைக்கப் பெற்றமை.
  - ஆகையால் 1948 இல் கிடைக்கப்பெற்ற சுதந்திரம் அரைகுறை சுதந்திரமாயிருந்தமை.
  - 1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பின் கீழேயே இலங்கைக்குப் பூரண சுதந்திரம் கிடைக்கப் பெற்றது.

## மதிப்பீடு 01

- **01-03 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள X, Y நிரல்களை இணைக்கும்போது அமையும் சரியான விடையைத் தெரிவு செய்க.**

01.

| X | Y |
|---|---|
| 1. 1833 | A - சோல்பரி யாப்பு செயற்படத் தொடங்கியமை. |
| 2. 1873 | B - சிங்கள - முஸ்லிம் இனக்கலவரம் |
| 3. 1915 | C - கோல்புறூக் யாப்பு |
| 4. 1924 | D - மனிங்-டெவன்டியர் யாப்பு |
| 5. 1947 | E - பாணந்துறை விவாதம் |

1. BCDEA    2. DCEAB    3. DECBA    4. CEBDA    5. ABCDE

(...........)

04.

| x | y |
|---|---|
| 1. கரைநாடு, மலைநாடு இணைக்கப்பட்டமை. | A - டொனமூர் யாப்பு |
| 2. சட்டவாக்கக் கழகத்திற்கு முதற்தடவை வாக்குரிமை மூலம் பிரதிநிதிகள் நியமனம் | B - மனிங் யாப்புச் சீர்திருத்தம் |
| 3. பிரதேசவாரிப் பிரதிநித்துவமுறை அறிமுகம் | C - குறூ-மக்கலம் யாப்புச்சீர்திருத்தம் |
| 4. அரசுக் கழகம் அறிமுகம் | D - சோல்பரி யாப்பு |
| 5. அமைச்சரவை (கெபினட்) அறிமுகம் | E - கோல்புறூக் யாப்பு |

1. CBEAD    2. EDCAB    3. ECBAD    4. BCEDA    5. ABCDE

(...........)

**3ஆம், 4ஆம் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள 5 சொற்களுள் ஒன்று பொருத்தமற்றது. பொருத்தமற்ற சொல்லைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

03. 1. மோர்கன்    2. மக்கலம்    3. மனிங்    4. டொனமூர்    5. சோல்பரி

(...........)

04. 1. அநகாரிக தர்மபால    2. மீ கொட்டுவத்த குணானந்த தேரர்
3. ரத்மலானே தர்மாராக தேரோ    4. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
5. ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கள தேரர்

(...........)

**5ஆம், 6ஆம் வினாக்களின் கூற்றுக்களுள் A, B சரியாயின் (1) எனவும், B, C சரியாயின் (2) எனவும், C, D சரியாயின் (3) எனவும் A, D சரியாயின் (4) எனவும் ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கூற்றுக்கள் சரியாயின் (5) எனவும் அடைப்பினுள் இலக்கமிடுக.**

05. டொனமூர் யாப்புத் தொடர்பான கூற்றுக்களுள் சரியானவை எவை?

A அமைச்சரவை ஆட்சி அறிமுகம்

B அரசுக் கழகம் அறிமுகம்

C சர்வசன வாக்குரிமை அறிமுகம்

D இராசகாரிய முறை நீக்கம்

(...........)

06. 1910-1924 வரை இலங்கை அரசியல் யாப்பு வளர்ச்சி தொடர்பான கூற்றுக்களுள் சரியானவை.
- A மாகாண ரீதியான தேர்தல் அலகுகள்
- B நிர்வாகக் குழு முறை ஏற்படுத்தப்பட்டமை
- C அமைச்சரவை (கெபினட்) முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
- D கற்ற இலங்கையர் ஒருவர் சட்டவாக்கக் கழகத்திற்குத் தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் கிட்டியமை.

(...........)

**7ஆம், 8ஆம் வினாக்களில் ஒரு தலைப்பிற்குரிய 5 கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் பொருத்தமில்லாத கூற்றைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

07. 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் ஏற்பட்ட சமய, கலாசார மறுமலர்ச்சி
1. பௌத்த பிரம்மஞான சங்கம்
2. வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவெனாக்கள்
3. சூரிய மலர் இயக்கம்
4. யாழ்ப்பாண நூல் நிலையத்தை ஆரம்பித்தல்
5. முஸ்லிம் நேசன் பத்திரிகை (...........)

08. கோல்புறூக்- கமறன் சீர்திருத்தம்
1. சட்டவாக்கம், சட்ட நிர்வாகக் கழகங்கள்
2. முழு நாட்டிற்கும் பொது நீதிமன்றம்
3. அரசாங்க சேவையாளர் எண்ணிக்கை குறைக்கப்பட்டமை.
4. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை
5. முழு நாட்டையும் 9 மாகாணங்களாகப் பிரித்தல் (...........)

## பகுதி 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 19ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் ஏற்பட்ட சமய, கலாசார மறுமலர்ச்சியின் சிறப்பியல்புகளை ஆராய்க. (14 புள்ளிகள்)

02. இலங்கையின் சமய கலாசார மறுமலர்ச்சி மற்றும் சுதந்திரத்திற்கான இயக்கம் என்பன தொடர்பில் கவனஞ் செலுத்திப் பின்வரும் தலைப்புக்களுள் இரண்டிற்குக் குறிப்பெழுதுக.
1. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்
2. இலங்கை தேசிய சங்கம்
3. இடதுசாரி இயக்கம்
4. டொனமூர் நிர்வாகக்குழு முறை
5. சேர் பொன்னம்பலம் இராமநாதன்

(7 x 2 = 14 புள்ளிகள்)

03. இலங்கையின் தேசிய, சமய, கலாசார மறுமலர்ச்சி தொடர்பில் பின்வரும் தலைப்புக்களுள் இரண்டு பற்றி விமர்சன ரீதியில் குறிப்பெழுதுக.

1. வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவெனாக்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
2. பௌத்த பிரம்மஞான சங்கம்
3. இந்து கலாசார மறுமலர்ச்சி
4. இஸ்லாமிய கலாசார மறுமலர்ச்சி (7 x 2 = 14 புள்ளிகள்)

04. கோல்புறூக் - கமறன் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட அரசியல் நிர்வாக முறை மற்றும் நீதிமன்ற முறை பற்றி விமர்சன ரீதியான கட்டுரை எழுதுக.

(14 புள்ளிகள்)

05. பின்வரும் தலைப்புக்களில் கவனஞ் செலுத்தி டொனமூர் யாப்பின் சிறப்பியல்புகள் பற்றி விளக்குக.

(i) சர்வசன வாக்குரிமை.
(ii) ஆளுநரின் அதிகாரங்கள்
(iii) அரச செயலாளர் மூவர்
(iv) நிர்வாகக்குழு முறை

(14 புள்ளிகள்)

06. பின்வரும் தலைப்புக்களில் கவனஞ் செலுத்தி, சோல்பரி யாப்பு பற்றி விளக்குக.

(i) ஆளுநர் நாயகம்
(ii) பிரதமரும் அமைச்சரவையும்
(iii) இரு சபைப் பாராளுமன்றம்

(14 புள்ளிகள்)

# 11. சுதந்திரத்தின் பின்னர் இலங்கை

## அறிமுகம்

1948 இல் இலங்கை சுதந்திரமடைந்தது வரலாற்றின் முக்கிய நிகழ்வொன்றின் அடையாளமாகும். அதன் பின்னர் பிரதிநிதித்துவ ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் காலத்திற்குக் காலம் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டதுடன் இலங்கைத் தலைவர்களின் கீழ் அவ்வரசாங்கங்கள் செயற்பட்டன. 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டுகளில் குடியரசு யாப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அரசியல் துறையில் மேலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. சுதந்திரத்தின் பின்னர் கடந்த சில தசாப்தங்களினுள் இலங்கை அரசியல் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள், சுயாதீன அரசொன்றாக பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக நலன்புரி தொடர்பாகச் செயற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் போலவே வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான தகவல்களும் இவ்வத்தியாயத்தில் கலந்துரையாடப் படும்.

**தேர்ச்சி** : • இலங்கை வரலாற்றின் அரசியல் வளர்ச்சி மற்றும் போக்குத் தொடர்பாக புரிந்துணர்வுடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 11.1 சுயாதீன அரசொன்றிற்காக அமைக்கப்பட்ட அரசியல் யாப்புகளை விமர்சனம் செய்வார்.

**கற்றற்பேறுகள்** :
- சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் அவற்றின் பணிகள் என்பவற்றை விளக்குவார்.
- 1972 மற்றும் 1978 குடியரசு யாப்புகளை விமர்சன ரீதியில் விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## பொருளாதார மற்றும் சமூக மாற்றங்கள்

## சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களும் ஆட்சிக்கு வந்த அரசுகளின் பணிகளும்

### 1952 பொதுத் தேர்தல்

- தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட வேண்டிய பிரதிநிதிகளின் தொகை 95 ஆகும். அதில் 54 ஆசனங்களைக் கைப்பற்றி ஐக்கிய தேசியக் கட்சி வெற்றியீட்டி, டட்லி சேனாநாயக்க பிரதமரானமை.
- 1952-1956 காலகட்டத்தில் இடம்பெற்ற முக்கியமான நிகழ்வுகள்
  - 1953 இல் அரிசி உட்பட பொருட்களின் விலை அதிகரிப்பினால் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டமை.
  - சமசமாஜக் கட்சி தலைமையிலான தொழிற்சங்கங்களின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட மேற்படி செயற்பாடு ‘‘ஹர்த்தால்’’ எனப்பட்டமை.
  - பாராளுமன்றத்தினுள் வளர்ந்துவந்த அரசாங்க எதிர்ப்புக் காரணமாகப் பிரதமர் டட்லி சேனாநாயக்க பதவி விலகியமை.
  - வெற்றிடமான பிரதமர் பதவிக்குச் சேர். ஜோன் கொத்தலாவல நியமனம் பெற்றமை.

- ஜோன் கொத்தலாவல அவர்களின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள்
  - 1954 கொழும்புத் திட்ட மாநாடு
  - 1955 இலங்கை ஐ.நா.வில் அங்கத்துவம் பெற்றமை.
  - தென்னிந்திய தோட்டத் தொழிலாளர் தொடர்பில் நேரு - கொத்தலாவல ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டமை.

## 1956 பொதுத் தேர்தல்

- இது இலங்கை அரசியல் வரலாற்றின் திருப்பு முனையாக அமைந்தமை.
- இத்தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி தனித்துப் போட்டியிட்டதுடன் எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டார நாயகா தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி இன்னும் சில இடதுசாரி அரசியல்கட்சிகளுடன் சேர்ந்து மக்கள் ஐக்கிய முன்னணி (மஹஜன எக்சத் பெரமுனை) எனும் பெயரில் போட்டி யிட்டமை.
- பௌத்தமத குருமார், ஆயுர்வேத வைத்தியர்மார், ஆசிரியர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் எனும் ஐம்பெரும் சக்திகளின் உதவியுடன் மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியடைந்து பண்டாரநாயக்கா பிரதமரானமை.
- எஸ்.டப்ளியு.ஆர்.டி. பண்டார நாயகா அவர்களின் அரசாங்கம் செயற்படுத்திய கொள்கைகளும் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களும்.
  - சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டமை.
  - 1947 இல் கைச்சாத்திடப்பட்ட பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார ஒப்பந்தங்கள் இல்லாமலாக்கப் பட்டமை.
  - துறைமுகம் மற்றும் பேரூந்து போக்குவரத்து அரசுடைமையாக்கப்பட்டமை.
  - உள்நாட்டுக் கைத்தொழில், உள்நாட்டு விவசாயத் துறையை மேம்படுத்திட நடவடிக்கை மேற்கொண்டமை.
- 1959 இல் பிரதமர் பண்டார நாயக்கா கொலை செய்யப்பட்டமை

## 1960 மார்ச் மற்றும் ஜூலை பொதுத் தேர்தல்கள்

- மார்ச் மாதம் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிட்டவில்லை. ஐக்கிய தேசிய கட்சி மேலும் சில கட்சிகளை இணைத்துக் கொண்டு டட்லி சேனாநாயகா தலைமையில் ஆட்சியமைத்த போதிலும் பாராளுமன்ற ஆரம்ப சிம்மாசனப் பிரசங்க உரை தோல்வியடைந்ததனால் அவ்வரசாங்கம் கலைக்கப்பட்டது.
- 1960 ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டார நாயக்க தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கமமைத்தது.
- இவ்வாட்சிக் காலப்பகுதியில்
  - பண்டார நாயக்கா அவர்களின் மக்கள் மயப்படுத்தும் திட்டம் முன்னெடுக்கப்பட்டமை.
  - உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான கொள்கை முன்னெடுக்கப்பட்டமை.
  - தென்னிந்திய தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக இந்தியப் பிரதமர் லால் பகதுர் சாஸ்திரி அவர்களுடன் 1964 இல் ஒப்பந்தம் செய்யப்பட்டமை.
  - இலங்கை சமசமாஜக் கட்சி, கொமியூனிஸ்ட் கட்சி எனும் இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து 1964 இல் ஐக்கிய முன்னணி அமைக்கப்பட்டமை.

## 1965 பொதுத் தேர்தல்

- இத்தேர்தலில் எந்தவொரு கட்சியும் பெரும்பான்மை பெறவில்லை. ஆயினும் சமஷ்டி கட்சி மற்றும் சில இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் டட்லி சேனாநாயக மூன்றாவது தடவையாக இலங்கையின் பிரதமரானார்.

## 1970 பொதுத் தேர்தல்

- இத்தேர்தலில் ஸ்ரீமாவோ பண்டாரநாயகா தலைமையிலான ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியதுடன் அவர் இரண்டாவது தடவையாக இலங்கையின் பிரதமரானார். 1972 முதலாம் குடியரசு யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டமை இவ்வரசாங்கத்தின் முக்கிய பணியாக அமைந்தது.

## அரசியல் யாப்பு வளர்ச்சி

## 1972 முதலாம் குடியரசு யாப்பு

- 1972 மே மாதம் 22ஆம் திகதி புதிய யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கை ஜனநாயகக் குடியரசின் முதலாம் குடியரசு யாப்பு எனப்பட்டது.
- 1972 யாப்பின் முக்கிய அம்சங்கள்
  - CEYLON எனப்பட்ட நாட்டின் பெயர் ஸ்ரீலங்கா என மாற்றப்பட்டமை.
  - பிரித்தானியாவுடனான யாப்பு ரீதியான தொடர்பு இல்லாமலாக்கப்பட்டமை.
  - இலங்கை ஒற்றையாட்சிக் குடியரசானமை.
  - அடிப்படை மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டமை.

## 1972 அரசியல் யாப்பின் பிரதான பண்புகள்

1. தேசிய அரச பேரவை
   - செனட் சபை நீக்கப்பட்டமை.
   - 1972 இற்கு முன்னர் இருந்த பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபைக்குப் பதிலாகத் தேசிய அரச பேரவை அறிமுகப்படுத்தப்பட்டமை.
   - தேசிய அரச பேரவையின் அதிகாரங்களும் பணிகளும்
     - சட்டவாக்கம் செய்தல்.
     - பொது நிதியைக் கட்டுப்படுத்தல்.
     - நிர்வாகத் துறையைக் கட்டுப்படுத்தல்.

2. பெயரளவு ஜனாதிபதிப் பதவி
   - சோல்பரி யாப்பின் கீழ் காணப்பட்ட ஆளுநர் நாயகம் பதவிக்குப் பதிலாகப் பெயரளவு ஜனாதிபதி (நாம நிர்வாகம்) பதவி அறிமுகப்படுத்தப்பட்டமை.
   - சோல்பரி யாப்பின் ஆளுநர் நாயகம் (தேசாதிபதி) அவர்களின் அதிகாரங்கள் ஜனாதிபதி பதவிக்கு உரித்தானமை.

3. பிரதமர் தலைமையிலான அமைச்சரவை
   - நிர்வாகத் துறையின் அதிகாரத்தைச் செயற்படுத்துவது பிரதமர் தமைலமையிலான அமைச்சரவைக்குரித்தானமை.
   - தேசிய அரச பேரவை உறுப்பினர்களுள் அதிகமானோரின் நம்பிக்கையைப் பெற்றவர் பிரதமராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டமை.
   - பிரதமரின் சிபாரிசின் பேரில் ஏனைய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டமை.
   - அமைச்சரவையின் தலைவர் பிரதமராவார்.

4. நீதிமன்றத்தொகுதி
   - 1972 யாப்பின் படி நாட்டில் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணும் வகையில் நீதிமன்றத் தொகுதி உருவாக்கப்பட்டமை.
     - உச்ச நீதிமன்றம்
     - உயர் நீதிமன்றம்
     - மாவட்ட நீதிமன்றம்
     - நீதிவான் நீதிமன்றம்
     - அரசியலமைப்பு நீதிமன்றம்

5. அடிப்படை மனித உரிமைகள்
    - 1972 யாப்பின் 18ஆம் அத்தியாயத்தில் அடிப்படை மனித உரிமைகளும் கைது செய்யப்படாமைக்கான சுதந்திரமும் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை.

**1978 இரண்டாம் குடியரசு யாப்பு**

- 1977 பொதுத் தேர்தலில் தேசிய அரச பேரவையின் 168 ஆசனங்களில் 140 ஆசனங்களைக் கைப்பற்றி ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் அமைத்தமை.
- 1978 இரண்டாம் குடியரசு யாப்பு புதிய அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டமை.
- 1978 அரசியல் யாப்பின் பிரதான பண்புகள்
    1. நிறைவேற்று அதிகாரங்கொண்ட ஜனாதிபதிப்பதவி
        - அரசியல் யாப்பின் 30ஆம் வாசகப்படி இலங்கைக் குடியரசின் ஜனாதிபதியானவர் அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும், நிர்வாகத் துறையின் தலைவரும், ஆயுதம் தாங்கிய படைகளின் படைத் தலைவரும் ஆவார்.
        - ஜனாதிபதிப் பதவி என்பது பூரணமான நிறைவேற்று அதிகாரத்துடனான அரசின் அதி உயர் பதவியாகும்.
- ஜனாதிபதியின் அதிகாரங்களும் வரப்பிரசாதங்களும்
    - பாராளுமன்றத்தைக் கூட்டுதல், கலைத்தல், ஒத்திவைத்தல்.
    - பாராளுமன்ற முதல் கூட்டத்திற்குத் தலைமைதாங்கல்.
    - அரசாங்கத்தின் கொள்கைகளைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்.
    - எச்சந்தர்ப்பத்திலும் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்ளல், உரையாற்றல்.
    - பிரதமரை நியமித்தல்.
    - அமைச்சர்களை நியமித்தல்.
    - அமைச்சர்களுக்குரிய பொறுப்புக்களைக் கையளித்தல்.
- ஜனாதிபதியின் நீதித்துறை அதிகாரங்கள்
    - பிரதம நீதியரசர் உட்பட மீயுயர் நீதிமன்ற நீதிபதிகளையும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளையும் நியமனஞ் செய்தல்.
    - நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு மன்னிப்பளித்தல், தண்டனையைக் குறைத்தல்.
    - மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவரை நியமித்தல்.
    - நீதிச் சேவைகள் ஆணைக்குழுவை நியமித்தல்.
    - ஜனாதிபதிக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியாமை.
- அரசின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள்
    - போர் மற்றும் சமாதானத்தைப் பிரகடனப்படுத்தல்.
    - அரச விழாக்களுக்குத் தலைமை தாங்கல்.
    - சர்வதேச மட்டத்தில் இலங்கைக் குடியரசைப் பிரதிநிதித்துவப்படுத்தல்.
    - அரச முத்திரையைத் தனது பொறுப்பில் வைத்திருத்தல்.
    - வெளிநாட்டுத் தூதுவர்களை நியமித்தலும் வெளிநாடுகளின் தூதுவர்களை ஏற்றுக்கொள்ளலும்.
- நிர்வாக அதிகாரங்கள்
    - முப்படைத் தளபதிகளை நியமித்தல்.
    - அரசாங்க உயர் அதிகாரிகளை நியமித்தல்.
    - பிரதமரையும் அமைச்சரவையையும் நியமித்தல்.

2. பாராளுமன்றம்
   - 1972 யாப்பு அறிமுகப்படுத்திய தேசிய அரச பேரவைக்குப் பதிலாக சட்டத் துறையாக பாராளுமன்றம் அறிமுகப்படுத்தப்பட்டமை.
   - பாராளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டது.
   - பாராளுமன்றத்தின் அதிகாரங்கள்
     - சட்டமியற்றல்
     - நிதிக்கட்டுப்பாடு
     - வரவு-செலவுத்திட்டம்
     - அபிவிருத்தித்திட்டங்களைத் தயாரித்தல்.

3. பிரதமரும் அமைச்சரவையும்
   - ஜனாதிபதியால் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து பிரதமரும் அமைச்சர்களும் நியமிக்கப்படுவர்.
   - அமைச்சரவை, பாராளுமன்றத்தில் கூட்டுப் பொறுப்புடன் செயற்படுதல்.
   - அமைச்சரவைக்குப் பொறுப்பளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றல்.
     உதாரணம்:
     - அமைச்சர்களுக்குப் பொறுப்பான பணிகளை நிறைவேற்றல்.
     - பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
     - ஒவ்வொரு அமைச்சுக்குமுரிய வரவு -செலவுத்திட்டங்களையும் இடைக்கால பாதீட்டையும் தயாரித்தல்.

4. நீதித்துறை
   - 1978 யாப்பின்படி சுயாதீனமான நீதிமன்றத் தொகுதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
     - உச்ச நீதிமன்றம் (மீயுயர் நீதிமன்றம்)
     - மேன்முறையீட்டு நீதிமன்றம்
     - உயர் நீதிமன்றம்
     - மாவட்ட நீதிமன்றம்
     - குடும்ப நீதிமன்றம்
     - நீதிவான் நீதிமன்றம்
     - ஆரம்ப நீதிமன்றம்

5. அடிப்படை மனித உரிமைகள்
   - 1978 யாப்பின் 3ஆம் அத்தியாயத்தில் அடிப்படை மனித உரிமைகள் பற்றி விளக்கப் பட்டுள்ளது. 1972 யாப்பை விட அடிப்படை மனித உரிமைகள் பற்றி இதில் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.
   - இந்த யாப்பின் 129ஆம் வாசகத்தின்படி ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பின் மூன்று மாத காலத்துள் வழக்கறிஞர் ஒருவர் மூலம் பாராளுமன்றத்துக்கு முறைப்பாடு சமர்ப்பிக்கலாம்.
   - அரச துறையில் அல்லது கூட்டுத்தாபனம் ஒன்றில் பணி புரியும் ஒருவரின் உரிமை மீறப்பட்டிருப்பின் அல்லது உரிமை எல்லைப்படுத்தப்பட்டிருப்பின் மனித உரிமைகள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்ஸ்மன்) அவர்களிடம் முறையிடலாம்.

**1978 யாப்பு அறிமுகப்படுத்திய புதிய அம்சங்கள்**

1. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை
2. குற்றப் பிரேரணை
3. புதிய தேர்தல் முறை
   - விகிதசமப் பிரதிநிதித்துவ முறை
   - ஜனாதிபதித் தேர்தல்
   - பொதுசன அபிப்பிராயத் தேர்தல்

## மதிப்பீடு 01

- **01-05 வரையிலான வினாக்களுக்கு ஐந்து சொற்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று பொருத்தமற்றது. அச்சொல்லைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

01. 1. டி.எஸ். சேனாநாயகா 2. ஜோன் கொத்தலாவல
3. டப்ளியூ. தஹநாயகா 4. சிரிமாவோ பண்டாரநாயகா
5. டீ.பீ. ஜயதிலக

(..........)

02. 1. ஐக்கிய தேசியக்கட்சி 2. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
3. இலங்கை சமசமாஜக் கட்சி 4. கொமியூனிஸ்ட் கட்சி
5. இலங்கை தேசிய சங்கம்

(..........)

03. 1. ஜே.ஆர். ஜயவர்தன 2. ஆர். பிரேமதாச
3. சிரிமாவோ பண்டாரநாயகா 4. டீ.பீ. விஜேதுங்க
5. சந்திரிகா பண்டாரநாயகா

(..........)

04. 1. தேசிய அரச பேரவை 2. ஜனாதிபதித் தேர்தல்
3. குற்றப் பிரேரணை 4. விகிதசமப் பிரதிநிதித்துவ முறை
5. பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு

(..........)

05. 1. டி.எஸ். சேனநாயக்க 2. எஸ்.ட்ப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயகா
3. என்.எம். பெரேரா 4. பொன்னம்பலம் இராமநாதன்
5. எஸ்.ஏ. விக்கிரமசிங்க

(..........)

**06-10 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

06. சோல்பரி யாப்பின் கீழ் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்குவதற்கான சட்ட மூலம்
1. இலங்கைச் சுதந்திரச் சட்டம் 2. சோல்பரிச் சட்டம்
3. தரிசு நிலச்சட்டம் 4. மாகாண சபைச் சட்டம்
5. மாநகர சபைச் சட்டம்

(..........)

07. 1948 யாப்பின்படி முடியின் பிரதிநிதியாக அமர்த்தப்பட்ட பதவி
1. ஆளுநர் 2. பிரதமர் 3. ஒம்புட்ஸ்மன் 4. ஆளுநர் நாயகம்
5. எதிர்கட்சித் தலைவர்
(..........)

08. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்பத்தலைவர்
1. டட்லி சேனாநாயக 2. சிறிமாவோ பண்டாரநாயகா
3. சந்திரிக்கா பண்டாரநாயக 4. எஸ்.ட்பிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயகா
5. என்.எம். பெரேரா
(..........)

09. 1955 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு அங்கத்துவம் கிடைக்கும்போது ஆட்சியிலிருந்த பிரதமர்
1. சிறிமாவோ பண்டாரநாயக 2. ஜோன் கொத்தலாவல
3. டப்ளியூ. தஹநாயக 4. டட்லி சேனாநாயக
5. டி.எஸ். சேனநாயக்க (..........)

10. நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை அறிமுகப்படுத்திய யாப்பு
1. சோல்பரி யாப்பு 2. முதலாம் குடியரசு யாப்பு
3. டொனமூர் யாப்பு 4. இரண்டாம் குடியரசு யாப்பு
5. குறூ-மக்கலம் யாப்பு (..........)

**11-15 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள சோடிச் சொற்களில் ஒரு சோடி பொருத்தமற்றது. அதனைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

11. 1. ஐக்கிய தேசிய கட்சி - டி.எஸ். சேனாநாயக
2. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக
3. இலங்கை சமசமாஜக் கட்சி - என்.எம். பெரேரா
4. கொமியூனிஸ்ட் கட்சி - எஸ்.ஏ. விக்கிரமசிங்ஹ
5. சமஷ்டிக் கட்சி - சேர். பொன். அருணாசலம்
(..........)

12. 1. சட்டவாக்கக்கழகம் - 1833
2. அரசுக்கழகம் - 1910
3. இலங்கை தேசிய சங்கம் - 1919
4. பாராளுமன்றம் - 1947
5. தேசிய அரசுப் பேரவை - 1972
(..........)

13. 1. ஹென்றிமன்க் மேசன் மூர் - முதலாவது ஆளுநர் நாயகம்
2. வில்லியம் கோபல்லாவை - முதலாவது ஜனாதிபதி
3. ஜே.ஆர். ஜயவர்தன - முதலாவது சபாநாயகர்
4. பிரான்சிஸ் மொலமுரே - முதலாவது சபாநாயகர்
5. சிறிமாவோ பண்டாரநாயக்க - முதலாவது பெண் பிரதமர்
(..........)

14. 1. டி.எஸ். சேனாநாயக - விவசாய குடியேற்றம்
2. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக - மக்கள் மயப்படுத்தல்
3. டப்ளியூ. தஹநாயக்க - தனியார்துறை மயப்படுத்தல்.
4. சிறிமாவோ பண்டாரநாயக - மூடிய பொருளாதாரம்
5. ஜே.ஆர். ஜயவர்தன - திறந்த பொருளாதாரம்

(..........)

15. 1. ஐக்கிய தேசிய கட்சி - 1952 பொதுத்தேர்தல்
2. மக்கள் ஐக்கிய முன்னணி - 1956 பொதுத்தேர்தல்
3. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி - 1960 ஜூலை தேர்தல்
4. ஐக்கிய முன்னணி - 1970 பொதுத்தேர்தல்
5. சமசமாஜக் கட்சி - 1977 பொதுத் தேர்தல்

(..........)

## பகுதி 2

1. 1948 யாப்பிலிருந்து 1972 யாப்பு வேறுபடும் விதத்தை விளக்குக.

2. 1972 முதலாம் குடியரசு யாப்பின் பிரதான பண்புகளை ஆராய்க.

3. 1978 வரை இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளின் செயற்பாடு பற்றிப் பரிசீலிக்குக.

4. 1978 குடியரசு யாப்பின் அடிப்படைப் பண்புகளைப் பரிசீலிக்குக.

5. சுதந்திரத்தின் பின்னர் 1977 வரை ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் முன்னெடுத்த பணிகளை சுருக்கமாகக் கலந்துரையாடுக.

**தேர்ச்சி மட்டம்** : 11.2 சுயாதீன அரசொன்று தேசிய அபிவிருத்திக்காக மேற்கொண்ட கொள்கைகளையும் வேலைத்திட்டங்களையும் ஆய்வு செய்வர்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- சுதந்திரத்தின் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்கான வழிமுறைகளை விளக்குவார்.
- அபிவிருத்திக்கான வழிமுறைகளின் பயன்பாடுகளை முன்வைப்பார்.
- சுதந்திரத்தின் பின்னர் நாட்டின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை மதிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## பொருளாதார அபிவிருத்தி

- அரசதுறை முயற்சிகள்
  - திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அமைக்கப்பட்டமை.
  - அரச கைத்தொழில் வலையமைப்பு ஏற்படுத்தப்பட்டமை. (இது பற்றி கைத்தொழில் எனுந் தலைப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.)
  - துறைமுகம், பேரூந்துப் போக்குவரத்து மக்கள் மயப்படுத்தப்பட்டமை.
  - பெற்றோலிய விநியோகம் மக்கள் மயப்படுத்தப்பட்டமை.
  - இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டமை.
  - இலங்கை வங்கி, மக்கள் வங்கி எனும் வங்கிகள் உருவாக்கப்பட்டமை.

- விவசாயத்துறை
  1. நெல்லுற்பத்தியை அதிகரித்தல்
     - விவசாய குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
       - உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து விவசாய அபிவிருத்தியை ஆரம்பித்தவர் டி.எஸ். சேனாநாயக ஆவார்.
       - டொனமூர் யாப்பின் கீழ் விவசாயமும் காணியும் நிர்வாகக் குழுவின் தலைவரான டீ.எஸ். சேனாநாயகாவின் தலைமையில் விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டமை.
         உதாரணம்: மின்னேரியா, மினிப்பே, பராக்கிரமசமுத்திரம், ரிதிபெந்தி கால்வாய்
       - சுதந்திரத்தின் பின்னர் 1953 வரை புதிய விவசாயக் குடியற்றத்திட்டங்கள் உருவாக்கப்பட்டமை.
         உதாரணம்: கல்லோயா, இரணைமடு, கந்தளாய், சொரபொரவாவி
       - புதிய விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து புராதன குளங்கள், கால்வாய்கள் புனரமைக்கப்பட்டு நீர்பாசனத்துறை மேம்பாடு தொடர்பாக நாட்டில் புத்தெழுச்சி ஏற்பட்டமை.
       - கல்லோயாத் திட்டம் இலங்கையின் முதலாவது பலநோக்கு அபிவிருத்தித்திட்டமாகும்.
     - மகாவலி அபிவிருத்தித்திட்டம்
       - மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் முதல் கட்டம் பொல்கொல்லை அணைக்கட்டின் மூலம் இராசரட்டைப் பகுதிக்கு மகாவலி நீரைத் திசை திருப்புவதாகும்.
       - மிகுதிக் கட்டங்களை 30 வருட காலத்தில் முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்தமை.

- 1977 இல் ஆட்சிக்குவந்த ஜே.ஆர். ஜயவர்தன அதனை 06 வருட காலத்தில் முடித்தமை. (துரித மகாவலி அபிவிருத்தித்திட்டம்)
- 1978 இல் மகாவலி அபிவிருத்தி அமைச்சு ஆரம்பிக்கப்பட்டமையும் 1979 மகாவலி அதிகார சபை உருவாக்கப்பட்டமையும்.
- துரித மகாவலி அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீர்த்தேக்கங்கள் கொத்மலை, விக்டோரியா, ரந்தெனிகல, ரன்டெம்பே, உல்ஹிட்டிய, ரத்கிந்த, மாதுறு ஓயா

- நெல்லுற்பத்தியை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வேறு நடவடிக்கைகள்
  - நெல்லுக்கான உத்தரவாத விலை
  - நெல் ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் புதிய நெல்லினங்கள் அறிமுகம்
    உதாரணம்: பதலேகொட நெல் ஆராய்ச்சி நிலையம் (BG)
  - கமநல சேவை மத்திய நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
  - அரசாங்க வங்கிகள் மூலம் விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டமை.



***கொத்மலை நீர்த்தேக்கம்***

*(Source: https://en.wikipedia.org/wiki/Kotmale_Dam)*

2. வர்த்தக விவசாயத்துறை
   - பிரித்தானியர் அறிமுகப்படுத்திய தேயிலை, தென்னை, இறப்பர் பெருந்தோட்டங்கள் சுதந்திரத்தின் பின்னர் 30 ஆண்டுகளாக நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களாகத் திகழ்ந்தமை.
   - அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மலைநாட்டுத் தோட்ட அபிவிருத்தி சபை என்பன உருவாக்கப்பட்டமை.

3. சிறு ஏற்றுமதிப் பயிர்ச் செய்கை அபிவிருத்தி
   - கோப்பி, கொக்கோ, ஏலம், கராம்பு, சாதிக்காய், மிளகு, கறுவா முதலிய பயிர்ச்செய்கை மேம்படுத்தப்பட்டமை.
   - 1972 மாத்தளையில் சிறு ஏற்றுமதிப் பயிர் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்டமை.

## கைத்தொழில்

- 1952 இல் இலங்கை வந்த உலக வங்கியின் பிரதிநிதிகள் அரச தலையீட்டுடன் மத்தியதர, சிறிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதன் முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டியமை.
- கைத்தொழில் குடியிருப்புகள் உருவாக்கப்பட்டமை.
  உதாரணம்: ஏக்கல, இரத்மலானை

- 1958 - 1968 பத்தாண்டுத் திட்டத்தின் கீழ் இரும்பு, உருக்கு, ஒட்டுப்பலகை, சீனி முதலிய கைத்தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
- 1970 - 1977 மூடிய பொருளாதாரக் கொள்கை மூலம் உள்நாட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி
- 1977 இன் பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் சுதந்திர வர்த்தக வலயங்கள், தைத்த ஆடை ஏற்றுமதி என்பன முக்கியம் பெற்றமை.
  உதாரணம்: கட்டுநாயகா, பியகம, கொக்கல முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்கள்

## சமூக அபிவிருத்தி

- கல்வி
  - கல்விக்காக அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமையால் நாடு முழுதும் அதிகளவில் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.
  - பாடத்திட்டம், ஆசிரிய பயிற்சி என்பன நவீனமயப்படுத்தப்பட்டமை.
  - விஞ்ஞான ஆய்வுகூடம், நூல் நிலைய வசதிகள் விரிவாக்கப்பட்டமை.
  - மதிய உணவு, இலவச பாடநூல், வைத்திய சேவை, பற்சிகிச்சை, இலவச சீருடை முதலிய சேவைகள் வழங்கப்பட்டமை.
  - தொழில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
  - பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
- சுகாதாரத்துறை
  - கிராமப் பிரதேசங்களில் சுகாதார வசதிகள் மேம்படுத்தப்பட்டமை.
  - சுகாதார அமைச்சினால் கிராமிய வைத்தியசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.
  - தாய்-சேய் சுகாதார சேவை மேம்படுத்தப்பட்டமை.
  - நோய்த் தடுப்பூசிகள் வழங்கப்பட்டதுடன் உள்நாட்டு வைத்தியத்துறையும் மேம்படுத்தப்பட்டமை.
- பங்கீட்டு முறை
  - இலவசமாக அரிசி விநியோகிக்கப்பட்டமை.
  - உணவு முத்திரை வழங்கப்பட்டமை.
  - குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீடு கட்டுவதற்கான உதவியும் வீடமைப்புத் திட்டங்களும் வழங்கப்பட்டமை.
- கிராமியப் பிரதேசங்களுக்கான பொது வசதிகள் மேம்பாடு
  - கிராமிய வீதி அபிவிருத்தியும் புதிய பஸ் சேவைகளும்
  - கிராமங்களுக்கு மின்சார வசதிகள்
  - கிராமிய குடிநீர்த் திட்டங்கள்
  - தபால், தொலைபேசி சேவைகள் கிராமங்களுக்கு விரிவாக்கப்பட்டமை.
  - கூட்டுறவு சேவை, வங்கிச் சேவை, கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டமை.



***பாரிய ஆடைத் தொழிற்சாலை***

*(source:https://www.gettyimages.co.uk/photos/sri-lanka-economy-garments)*

## மதிப்பீடு 01

- **01-10 வரையிலான வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடைகளுள் சரியானதைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் இடுக.**

01. புதிய நெல்லினங்களைக் கண்டுபிடிப்பதற்காக 1952 இல் முதலாவது நெல்லாராய்ச்சி நிலையம் அமைக்கப்பட்ட இடம்
    1. லுனுவில  2. பதலேகொட  3. நுவரெலியா
    4. அகலவத்தை  5. தலவாக்கலை

(..........)

02. முப்பதாண்டுத்திட்டமாக இருந்த மகாவலி அபிவிருத்தித் திட்டத்தை 06 வருடங்களில் முடிப்பதற்கு ஆலோசனை வழங்கிய தலைவர்
    1. டி.எஸ். சேனாநாயக்க  2. ஜே.ஆர். ஜயவர்தன  3. டட்லி சேனாநாயக்க
    4. ஜோன் கொத்தலாவல  5. சிறிமாவோ பண்டாரநாயக

(..........)

03. இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்குப் பதிலாக உள்நாட்டிலே பொருட்களை உற்பத்தி செய்வதற்கு முயற்சித்த காலப் பகுதிக்கான கொள்கையின் பெயர்
    1. திறந்த பொருளாதாரக் கொள்கை
    2. இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை
    3. கைத்தொழில் கொள்கை
    4. சுதந்திர வர்த்தகக் கொள்கை
    5. முதலீட்டு ஊக்குவிப்புக் கொள்கை

(..........)

04. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட முதலாவது அணைக்கட்டு
    1. எலஹர  2. மினிப்பே  3. பொல்கொல்ல
    4. கொத்மலை  5. விக்டோரியா

(..........)

05. நீர் மின்சாரத்தை மாத்திரம் நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்ட மகாவலித்திட்ட நீர்த்தேக்கம்
    1. கொத்மலை  2. ரந்தெனிகல  3. விக்டோரியா
    4. ரன்தம்பை  5. உல்ஹிட்டியா

(..........)

06. வித்தியோதய பிரிவெனா என்ன பெயரில் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது?
    1. களனிப் பல்கலைக்கழகம்  2. ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
    3. இலங்கைப் பல்கலைக்கழகம்  4. ரஜரட்ட பல்கலைக்கழகம்
    5. தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

(..........)

07. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பல்கலைக்கழகம்
    1. களனிப் பல்கலைக்கழகம்  2. ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
    3. இலங்கைப் பல்கலைக்கழகம்  4. ரஜரட்ட பல்கலைக்கழகம்
    5. பேராதனைப் பல்கலைக்கழகம்

(..........)

08. இலங்கையில் உருவாக்கப்பட்ட முதலாவது கைத்தொழில் குடியிருப்பு
    1. இரத்மலானை 2. ஏக்கலை 3. பியகம
    4. கட்டுநாயக 5. கொக்கலை

(..........)

09. இலங்கையின் முதலாவது பலநோக்கு அபிவிருத்தித் திட்டம்
    1. மகாவலித்திட்டம் 2. கல்லோயத்திட்டம் 3. மின்னேரியா திட்டம்
    4. மினிப்பே திட்டம் 5. உடவளவ திட்டம்

(..........)

10. சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் உருவாக்கப்பட்ட பாரிய கைத்தொழில்
    1. அசிற்றிக்கமிலம் 2. சவர்க்காரம் 3. நறுமணப் பொருட்கள்
    4. சீனி 5. பீங்கான் கோப்பை

(..........)

## பகுதி 2

01. சுதந்திரத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் உள்நாட்டு விவசாய அபிவிருத்திக்காக மேற்கொண்ட செயற்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுக.

(14 புள்ளிகள்)

02. பின்வரும் தலைப்புகளில் சுருக்கக் குறிப்பு எழுதுக.
    1. சுதந்திர இலங்கையின் கைத்தொழில் கொள்கை

    (07 புள்ளிகள்)

    2. சுதந்திரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட சமூக நலன்புரி நடவடிக்கைகள்

    (07 புள்ளிகள்)

**தேர்ச்சி மட்டம் 11.3 :** சுயாதீன அரசொன்றாக இலங்கை வெளிநாடுகளுடன் செயற்பட்ட விதத்தை ஆய்வார்.

**பாடவேளைகள் :** 15

**கற்றற்பேறுகள் :**
- சுதந்திர இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை விளக்குவார்.
- இலங்கை வெளிநாட்டவரின் கவனத்தை ஈர்ப்பதற்கான காரணங்களை விளக்குவார்.
- இலங்கையுடன் நட்புறவு கொண்ட நாடுகளை உலகப் புறவுருவப் படத்தில் குறிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## வெளிநாட்டுக் கொள்கை

- இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை ஒவ்வொரு காலப்பகுதிக்கும் ஏற்ப செயற்படுத்தப்பட்டமை.
  - 1947 - 1956 வரை பிரித்தானியாவுடன் இணைந்த வெளிநாட்டுக் கொள்கை
  - 1947 முதல் உருவான பனிப்போரின் பின்னணியில் பிரித்தானியாவுடன் நெருங்கிய தொடர்பு பேணப்பட்டமை.
  - இந்தியாவுடனும் அரசியல் தொடர்பு பேணப்பட்டமை.

- 1956 - 1965 வரை அணிசேராக் கொள்கையின் பக்கம் கவனஞ் செலுத்தப்பட்டமை.
  - 1956 இல் எஸ்.டப்ளியு.ஆர்.டி. பண்டார நாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சியமைத்தமை வெளியுறவுக் கொள்கையின் திருப்புமுனையாய் அமைந்தமை.
    - முதலாளித்துவ நாடுகளுடனான இறுக்கமான தொடர்புகள் சாதாரண நட்புறவு நிலையை அடைந்தமை.
    - அதுவரை எவ்விதத் தொடர்புமின்றி இருந்த கிழக்கு ஐரோப்பிய சமவுடமைவாத நாடுகளுடனான தொடர்புகள் விரிவடைந்தமை.
    - இலங்கையின் வெளியுறவுக்கொள்கைக்கு மூன்றாம் உலக ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் அடையாளம் இடப்பட்டமை.
  - பண்டார நாயக்கா அவர்களின் சோவியத் ரஷ்யா, சீனாவுடனான தொடர்புகளின் அம்சங்கள் சில.
    - தூதுவராலயத் தொடர்புகள்
    - வர்த்தகம், கொடுப்பனவு தொடர்பான ஒப்பந்தங்கள்
    - கலாசாரத் தொடர்புகள்
  - சமவுடமை நாடுகளிலிருந்து இலங்கைக்கு வெளிநாட்டுதவிகள் கிடைத்தமை.
  - 1960 இல் ஆட்சிக்குவந்த சிறிமாவோ பண்டார நாயகா அவர்களும் அதே கொள்கையை முன்னெடுத்தமை.

- 1965 - 1970 மேற்குலக முதலாளித்துவ நாடுகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான வெளிநாட்டுக் கொள்கை.
  - இக்காலப் பகுதிகளில் இலங்கையின் நிதிநிலைமையில் ஏற்பட்ட பலவீனமும் அது இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தியமையும்.
  - 1965 முதல் ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான நாடுகளுடன் நட்புறவுடன் செயற்பட்டமை.

- இலங்கை அரசுக்கும், சர்வதேச நாணய நிதியத்திற்கும், உலக வங்கிக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு மேலெழுந்தமை.
- ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான வல்லரசு நாடுகள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை என்பவற்றைத் தீர்மானிக்கும் சக்திகளானமை.
  - 1967 மத்தியிலிருந்து மேற்குலகுடனான நெருக்கம் படிப்படியாகக் குறைவடைந்து சீனாவுடனும் சோவியத் ரஷ்யாவுடனும் சாதாரண நட்புறவு மேற்கொள்ளப்பட்டமை.

- 1970 - 1977 காலப்பகுதி
  - இக்காலப்பகுதியில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, இலங்கை சமசமாஜக் கட்சி, கொமியூனிஸ்ட் கட்சி முதலிய கட்சிகளைக் கொண்ட ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் அதி பாதுகாப்பான வெளிநாட்டுக் கொள்கை முன்னெடுக்கப்பட்டமை.
  - அக்கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்கள்.
  - இக்காலப் பகுதியில் ஐக்கிய அமெரிக்கா, இந்தியா, சீனா போன்ற நாடுகளுடனான உறவுகள் பேணப்பட்டமை



***சீன அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபம்***
*(source: http://www.panoramio.com/photo/2610226)*



***மேற்படி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவதற்கு தயாராகும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக***
*(source:http://www.ft.lk/article/421331/Tribute-to-a-Statesman)*

## மதிப்பீடு

1. சுதந்திரத்தின் பின்னர் 1978ஆம் ஆண்டுவரையிலான வெளிநாட்டுக் கொள்கையின் தன்மை பற்றி கலந்துரையாடுக.

(14 புள்ளிகள்)

2. ‘‘சுதந்திரத்தின் பின்னரான ஆரம்ப காலகட்டத்தில் மேற்கத்திய நாடுகளுக்குச் சார்பான வெளிநாட்டுக் கொள்கையானது, 1970 - 77 காலகட்டத்தில் மிகவும் வேறுபட்டுச் சென்றது.’’ இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

(14 புள்ளிகள்)

# இந்திய வரலாறு



# 7. பிந்திய மௌரிய யுகமும், வெளிநாட்டு அரசியல் தாக்கமும்

## அறிமுகம்

மௌரியப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்னர் குப்த பேரரசின் தோற்றம் வரை மூன்று நூற்றாண்டுகள் உள்ளன. இக்காலப்பகுதியில் இந்தியாவில் சிறிய அரச வம்சங்கள் போலவே வெளிநாட்டு அரச வம்சங்கள் பலவும் ஆட்சியைக் கைப்பற்றியமையைக் காணக்கூடியதாக உள்ளது. எனவே இக்காலப்பகுதி அதுவரை நிலவிய மத்திய மயப்படுத்தப்பட்ட ஆட்சிக்குப் பதிலாக சிறு அரசுகள், எழுச்சிபெற்ற காலப்பகுதியாக உள்ளதென வரலாற்றாளர்கள் கருதுகின்றனர். இக்காலகட்டத்தில் சுதேச அரச வம்சங்களும் வெளிநாட்டு அரச வம்சங்கள் பலவும் ஒருவரை ஒருவர் தோற்கடித்து எழுச்சியடைவதற்கு முயல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. எனினும் இவைகளில் எந்த அரச வம்சத்தாராலும் இந்தியா முழுவதையுமோ அல்லது அதன் ஒரு பகுதியையோ ஒன்றிணைக்க முடியாது போனமை சிறப்பம்சமாகும். இந்த மூன்று நூற்றாண்டுகளில் இந்தியாவில் ஆட்சி செலுத்திய சுங்கர், யவணர், சாகர், குஷாணர், சாதவாகனர் ஆகிய சுதேச, வெளிநாட்டு அரச வம்சங்களைப் பற்றி இந்த அலகில் கவனஞ்செலுத்தப்படுகின்றது.

**தேர்ச்சி** : • இந்திய வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய வெளிநாட்டு அரசுகள் தொடர்பான விடயங்களைப் பகுத்தாய்வார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற்பேறுகள்** :
- இந்திய வரலாற்றில் தாக்கம் செலுத்திய வெளிநாட்டு அரசுகள் தொடர்பான விடயங்களை விபரிப்பார்.
- வெளிநாட்டு அரசுகளின் தாக்கங்களை எடுத்துக்காட்டுவார்.
- மௌரிய யுகத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### சுங்க அரச பரம்பரை (கி.மு. 185-கி.மு. 72)

- மௌரியப் பேரரசின் இறுதி மன்னனான பிருகத்ரதனைக் கொலை செய்து, மகதத்தின் ஆட்சியைக் கைப்பற்றி புதிய அரச வம்சமொன்றைத் தோற்றுவித்த புஷ்ய மித்திரன் (கி.மு. 185-151) சுங்க வம்சத்தவன் என பண்டைய நூல்கள் குறிப்பிடுகின்றன.
- சுங்கர்கள் சுதேசிகளாவர். இந்த அரச வம்சத்தின் ஆரம்பம் பற்றிய பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பிராமணீய நூல்களின்படி அவர்கள் பிராமணர்களாவர்.
- சுங்கர்களின் (அரசர்களின்) பெயரின் இறுதியில் 'மித்ர' எனும் பதம் இருப்பதால் அவர்கள் 'மித்ர' கடவுளை வழிபட்ட ஈரானிய அரச வம்சத்தினர் என சில வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர்.
- புஷ்யமித்ர சுங்கரின் ஆட்சி மகதத்திலிருந்து தெற்கில் நர்மதா ஆறு வரையில் பரவியிருந்ததாக மூலாதாரங்களிலிருந்து வெளிப்படுகிறது.
- பாடலிபுத்திரத்தைத் தலைநகராகக் கொண்டு அயோத்தி, விதிசா முதலான பிரதேசங்களை ஆட்சி செய்தல்.
- புஷ்யமித்ர சுங்கரின் ஆட்சிக்காலத்தில் சில முக்கிய நிகழ்வுகள் இடம்பெற்றன.
  - வடமேற்கில் ஜலந்தர், சியல்கோட் பிரதேசத்தைக் கைப்பற்றல்.
  - தக்கண பிரதேசத்தை மகதத்துடன் இணைத்தல்.
  - கிரேக்க ஆக்கிரமிப்பாளன் ஒருவனை முறியடித்தல்.
  - அஸ்வமேத யாகங்கள் இரண்டினை மேற்கொண்டமை.

பார்ஹுத









*( Source : https://www.commons.wikimedia.org)*

**சாதவாஹனர் காலத்தில் சாஞ்சி தூபியின் படிவரிசையும் கட்டப்பட்ட மதிலும்**

- இவர்கள் பௌத்த மதத்திற்கும் அனுசரணை வழங்கியமையானது சாஞ்சி, பார்ஹுத், புத்தகயா ஆகிய இடங்களிலுள்ள ஸ்தூபிகளை புனர்நிர்மாணம் செய்தமையிலிருந்து தெளிவாகிறது.
- புஷ்யமித்திரருக்குப் பின்னர் அக்னிமித்திரன் ஆட்சிக்கு வந்தான். காளிதாசரின் 'மாளவிகா அக்னிமித்திரம்'என்ற நூலின் பிரதான கதாபாத்திரம் இவனாவான்.
- அக்னிமித்திரனுக்குப் பின்னர் சுஜ்யெஷ்தா, பாகவதர் என்போர் ஆட்சிக்கு வந்ததுடன் சுங்க வம்சத்தின் இறுதி ஆட்சியாளன் தேவபூதியாவான்.

## இந்தோ-கிரேக்கர் (யவணர்) ஆட்சி (கி.மு. 212 - கி.மு. 30)

- பிந்திய மௌரிய காலத்துக்கு முன்னர் இந்திய, கிரேக்கத் தொடர்புகள்.
- மௌரியப் பேரரசின் இறுதிக் காலப்பகுதி தொடக்கம் கிரேக்கர் அடிக்கடி இந்தியாவுக்கு வருகை தரல்.
- மினான்டர் சுங்கர்களின் பிரதேசங்களை ஆக்கிரமித்தல்.
- மௌரியரது காலத்தின் பின்னர் இந்தியாவில் நிலவிய நிலையற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக இந்தியா வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் பலவற்றினை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.
- இந்தியா மீது ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கள் பாரசீகப் பேரரசரான டோரியஸின் பின்னர் கிரேக்கரால் மேற்கொள்ளப்பட்டவையாகும்.
  உதாரணம்: அலெக்சாண்டரின் ஆக்கிரமிப்பு (கி.மு. 4 ஆம் நூற்றாண்டு) செலியூகஸ் நிக்கேடரின் ஆக்கிரமிப்பு
- மௌரியரது ஆட்சி வீழ்ச்சியுற்ற பின்னர் பக்டிரிய, கிரேக்கர்கள் பாதுகாப்பற்ற வடமேற்கு இந்தியாவை ஆக்கிரமித்தமை.
- கி.மு. 250 இன் இறுதி அரைப்பகுதியில் பக்டிரியாவின் முதலாம் டெமிட்ரியஸ் இந்தியாவை ஆக்கிரமித்துத் தனது ஆட்சியைப் பஞ்சாப், பாஞ்சாலம், சாகலம் என்பனவற்றில் நிறுவினான். இந்தோ கிரேக்கரின் கையில் இந்தியா உட்பட்டமையின் ஆரம்பக்கட்டம் இதுவாகும்.
- யூக்ரடைட்டஸ் தக்ஷீலாப் பிரதேசத்தைக் கைப்பற்றியமை.

- இரண்டாம் டெமிட்ரியஸ், சாகேலா எனும் சியல்கோட்டைத் தனது தலைநகராகக் கொண்டு இந்தியாவில் தனது ஆட்சியை முன்னெடுத்துச் சென்றான்.

**மினென்டர் மன்னர்**

- இந்தோ கிரேக்கரின் சிரேஷ்ட ஆட்சியாளன் மினென்டர் மன்னனாவான்.
- கங்கை சமவெளியிலிருந்து பக்டிரியாவில் ஒக்சஸ் நதிவரையிலும் இமய மலையிலிருந்து நர்மதா நதி வரையிலும் கிரேக்கரது ஆட்சியை நிறுவியமை.
- பாடலிபுத்திரம், உஜ்ஜேயினி, மத்திய ஆப்கானிஸ்தான், பஞ்சாப், சிந்து, இராஜஸ்தான், உத்தர பிரதேசம் என்பன அவனது ஆட்சியின் கீழ் வருதல்.
- தலைநகர் சாகேலம் எனும் சியல்கோட் ஆகும்.
- மீர்ஜாபார் எனும் இடத்தில் மாத்திரம் இம்மன்னனுக்கு உரிய நாணயங்கள் 2000 அளவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. காபூல் சமவெளியில் 10000 நாணயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.
- தக்ஷிலா, பெஷாவர், காபூல், பஞ்சாபில் புரோச்சி என்பன துறைமுகங்களாகும்.
  - அதிக அளவிலான நாணயங்களை வெளியிட்ட இந்திய மன்னன் மினாண்டர் எனக் கூறப் படுகின்றது.
  - சியல்கோட் கல்வெட்டுக்கு அமைய வடமேற்குப் பஞ்சாப், சிந்து, இராஜபுதனம், காத்தியவார் உட்பட பரந்த பிரதேசங்களில் அவனது ஆட்சி பரவியிருந்தமை.
  - மினென்டர் மன்னன் பௌத்த மதத்திற்கும் அனுசரணை வழங்கியதாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றது. ‘மிலிந்தாபானா’ எனும் நூலில் மிலிந்த மன்னருக்கும், நாகசேன என்ற பௌத்த பிக்குவுக்கும் இடையே நடந்த சமய உரையாடல் தொகுக்கப்பட்டுள்ளது.




***மன்னர் மினென்டரின் நாணயம்***

*( Source : https://www.wikipedia.org/wiki/History_of_the_Indo-Greek_Kingdo)*

  - பிஜாபூர் கல்வெட்டில் இவன் பௌத்த மதத்திற்குச் செய்த சேவைகள் பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது.
- ஹர்மயோஸ் கிரேக்க வழித்தோன்றலின் இறுதி ஆட்சியாளனாவான்.

**சகர்கள்**

- இவர்கள் பற்றிக் கிரேக்க நூலான ஸ்றாபோ, சீன நூல்களான ஷி-சி ஹானான் சூ, தியென்ஹான் சூ என்பவற்றில் தகவல்கள் காணப்படுகின்றன.
- மத்திய ஆசியாவின் நாடோடிக் குழுக்களான இவர்கள் கி.மு. 1 - 2 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் போலன் கணவாயின் வழியாக இந்தியாவுக்கு வந்தனர்.
- கிரேக்கர்கள் வசமிருந்த வட, வடமேல், மேற்கு இந்தியப் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொள்ளல்.
- பல வழித்தோன்றல்களின் கீழ் இந்தியாவுக்கு வந்து கைப்பற்றிய பிரதேசங்களைச் சத்திரபங்களாகப் பிரித்து ஆட்சி செய்தமையால் ஆளுநர்கள் சத்திரபர் என அழைக்கப்பட்டனர்.
- தட்சசீலத்தைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சியை முன்னெடுத்துச் சென்ற முதலாவது முக்கிய ஆட்சியாளன் மோக என்னும் மௌஸ் ஆவார்.
- கத்தியவாரில் ஆட்சியைப் பரவலடையச் செய்த ஆட்சியாளன் நாகபாணர் ஆவான்.
- நாகபாணருக்குப் பின் காந்தமர் எனும் மற்றுமொரு சக வம்சத்தினர் கத்தியவாரின் ஆட்சியைக் கைப்பற்றினர். அதன் ஆரம்ப ஆட்சியாளன் சஸ்தானா ஆவான்.
- இவர்கள் இந்தியாவினுள் பிரவேசித்ததும், புகழடைந்ததும், பொருளாதார பலமடைந்ததும் சத்திரபர் எனும் பிரதேச ஆட்சியாளர்கள் மூலமாகும்.

- இந்த வம்சத்தின் தலைசிறந்த மன்னன் உருத்திரதாமன் ஆவான். ஜுனாகாத் பாறைக் கல்வெட்டு இவனுடையதாகும். சாதவாகன மன்னன் இவனால் தோற்கடிக்கப்பட்டதாக இதில் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தியாவின் முதலாவது சமஸ்கிருதக் கல்வெட்டு ஜுனாகாத் கல்வெட்டாகும். மேற்கு இந்தியாவில் அவனது ஆட்சி பரவியிருந்தது.
- இந்தியாவில் ஆட்சியைக் கைப்பற்றிய சகர்களின் மத்திய நிலையங்கள் நான்காகும்.
  - தட்சசீலம், மதுரா, உஜ்ஜேயினி, மகாராஷ்டிரம்.
- சக வருட முறை அறிமுகம் செய்யப்பட்டமை. (கி.பி. 78 இல்)
- இக்காலப்பகுதி மேற்குலகுடன் வர்த்தகத் தொடர்புகள்முன்னேற்றமடைந்திருந்த காலமாகும்.
- நாகபாணன் மன்னனின் மருமகனான உசவங்கநாதன் மேற்குக் கரையோரத்தை நிர்வகித்தது வர்த்தகத் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதற்காகும்.
- பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டிய அரசாகக் காணப்பட்டது.
- இது சத்திரபர்களுக்கும் சாதவாகனர்களுக்கும் இடையிலான முரண்பாட்டுக்குக் காரணமாய மைந்தது.

**பார்த்தியர்கள்**

- கி.பி. முதலாம் நூற்றாண்டாகும்போது இந்தியாவின் வடமேற்குத் திசையில் அதிகாரம் பெற்றிருந்த சகர்களுக்குப் பின்னர் தக்ஷிலாவைத் தலைநகராகக் கொண்டு பார்த்தியர்கள் ஆட்சியமைத்தமை.
- வடமேல் இந்தியாவில் பார்த்தியரின் அதிகாரத்தைப் பரப்பிய முதலாவது ஆட்சியாளன் கொண்டோபர்னீஸ் ஆவான்.
- இம்மன்னனின் பின்னர் இராச்சியம் பல பிரிவுகளாகப் பிரிந்து சென்ற பின்னர் படிப்படியாக இந்தியாவினுள் பிரவேசித்த குஷாணர்கள் பாத்திரயர்களின் ஆட்சிப் பிரதேசங்களைக் கைப்பற்றினார்கள்.

**குஷாணயுகமும் இந்திய வரலாற்றுக்கு அவர்களது பங்களிப்பும்**

- இவர்களது பூர்வீகம், சீனாவின் துர்க்கிஸ்தான் பிரதேசமாகும். இவர்கள் யூச்சி (Yuechchi) எனும் இடையர் குலத்திலிருந்து பிரிந்து வந்தவர்களாவர்.
- முதலாவது ஆட்சியாளன் குஜுலா கட்பீசஸ் ஆவான். இவனது மகன் பீமா கட்பீசஸ் குஷாணரது ஆட்சியை இந்தியாவின் பெரும் பகுதியில் பரவச் செய்தான். இவன் ‘சர்வலோகேஸ்வரர்’, ‘ஈஸ்வரர்’, ‘மகேஸ்வரர்’ என்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டான்.
- அண்மையில் ஆப்கானிஸ்தானில் ரபாகன் என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து கனிஷ்கனின் அரச குடும்பத்தைப் பற்றிப் பல தகவல்கள் வெளியாகியுள்ளன.
- கனிஷ்கன் குஷாண மன்னர்களில் தலைசிறந்தவன் ஆவான்.



*ரபாகத் கல்வெட்டு*

*( Source : https://www.wikipedia.org/wiki/History_of_the_Indo-Greek_Kingdo)*

## கனிஷ்க மன்னன் (கி.பி. 78 - 101)

### மூலாதாரங்கள்

- சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுப் பின்னர் திபெத், சீன மொழிகளில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட்ட நூல்களான ''சூத்ராலங்கார'', ''சங்யுக்த ரத்ன பிடக'', ''ஸ்ரீ தர்ம பிடக'', ''நிதான சூத்ர'' ஆகியன இலக்கிய மூலாதாரங்களாகும்.
- கல்பனாமண்டிதிகாவ, ரபகத், சூயி விஹார் செப்பேடு, சீடாவும் மாணிக்கயாலாய ஆவணங்களும் முக்கியமானவைகளாகும்.
- பாஹியனதும் ஹியூங்சாங்கினதும் குறிப்பு
- நாணயங்கள்
- கல்வெட்டுக்கள்

### அரசியல் ஆட்சிப் பரம்பல்


- உத்தர பிரதேசம் முதல் மால்வா வழியாகக் காத்தியவார் வரை அவனது ஆட்சி பரவியிருந்தமை.
- புருஷபுரத்தைத் (பெஷாவார்) தலைநகராகக்கொண்டு பேரரசைக் கட்டியெழுப்பியமை.
- கனிஷ்கனின் கிழக்கிந்திய ஆட்சிப் பரம்பலை நோக்குகையில் திபெத், சீன கல்வெட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதற்கமையப் பாடலிபுத்திரம், வங்காளம், ஒரிசா, பீகார், நேபாளம் வரையில் இவனது ஆட்சி நிலவியதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
- ''பெரிப்பிளஸ் ஒப் த எரித்திரியன் சீ''என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைய சந்தனேஸ் என்னும் மன்னன் மேற்கிந்தியப் பகுதியை வெற்றிகொண்டுள்ளான். சந்தனேஸ் என்பவன் கனிஷ்க மன்னன் என ஊகிக்கப்படுகிறது. மேற்கு இந்தியாவில் பாருகச்ச, காத்தியவார் ஆகிய பகுதிகளில் ஆட்சியைப் பரவலடையச் செய்தல்.
- மத்திய ஆசியப் பிரதேசத்தில் ஆட்சியைப் பரவலடையச் செய்தல்.
  - கனிஷ்க மன்னன் இந்தியாவுக்கு வெளியே மத்திய ஆசியப் பிரதேசத்திலும் தனது ஆட்சியை விஸ்தரிக்க மேற்கொண்ட முயற்சி தொடர்பாக சில சீன மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.
  - மத்திய ஆசியாவில் யார்காண்டு, போட்டான், சித்தியான், கெஸ்கர் வரை இவனது ஆட்சி பரவியிருந்ததாகக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பன மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

### பண்பாட்டு முக்கியத்துவம்

- குஷாணர்கள் வெளிநாட்டவர்களாக இருந்தபோதிலும் இந்தியப் பண்பாட்டுக்குப் பாரிய அளவில் அனுசரணை வழங்கியமை.
- நான்காவது பௌத்த மகாநாட்டைக் கூட்டியமை.
- காஷ்மீரில் குண்டலவன விகாரையில் அல்லது பஞ்சாபில் ஜலந்தரில் நான்காம் பௌத்த மகாநாடு நடைபெற்றமை.
- இந்த மகாநாட்டின் காரணமாக முக்கிய பல விளைவுகள் ஏற்பட்டமை.
  - சூத்ர விபாஷ, வினய விபாஷ, அபிதர்ம விபாஷ என மகாயான திரிபிடகம் தோற்றம் பெற்றமை.
    - மகாயான பௌத்தத்தின் வளர்ச்சியும் பரவலும்
    - பௌத்த எண்ணக்கரு எழுச்சி பெற்றமை.
    - புத்த சிலைகளின் வடிவமைப்பு ஆரம்பமாதல், பௌத்த கட்டிடங்கள், விகாரைகள், தூபிகள் அமைக்கப்படல்.



*( Source : https://www.wikipedia.org/kanishka)*



கனிஷ்க மன்னன் மகாயான பௌத்த மதத்தைத் தழுவுதல.
*( Source : https:// www.wikipedia.org/ kanishka)*



பௌத்த ஜாதக மரபில் வெவ்வேறான சந்தர்ப்பம் (மதுரா மரபு)
*( Source : https:// www.wikipedia.org)*



மதுரா கலைமரபைச் சேர்ந்த போதிசத்துவர் சிலை
*( Source : https:// www.wikipedia.org/ wiki/Bodhisattva)*



பெஷாவரில் அமைந்துள்ள கனிஷ்கனின் தூபி

*( Source : https://www.historyatoz.blogspot.com/2015/07/kanishka-great.html)*

- சமஸ்கிருதத்திற்கு முக்கிய இடம் கிடைத்தல், சமஸ்கிருத மொழியில் நூல்கள் எழுதப்படல்.
  - புத்தர் சரிதம், சூத்ராலங்கார, சாரிபுத்ர பிரகரணய, சௌந்தரானந்த காவியம், நிக்காய சித்தாந்த
- இக்காலத்தில் இருந்த நூலாசிரியர்கள் சிலர் - அஷ்வகோசர், நாகார்ஜுணர், வசுபந்து, பார்ஷுவ, ஆர்யதேவ
- காந்தார, மதுரா கலை மரபுகள் எழுச்சிபெறல்.
- வர்த்தக வளர்ச்சியுடன் மத்திய ஆசியாவில் வர்த்தக நகரங்களுடனான வர்த்தகத்தொடர்பு ஏற்படல், இந்தியப் பண்பாடு இந்தியாவுக்கு வெளியே பரவுதல்.

## சாதவாகனர் யுகமும் பண்பாடும்

### அரசியல் முக்கியத்துவம்

- தென்னிந்தியாவில் கோதாவரிக்கும், கிருஷ்ணா, துங்கபத்ரா நதிக்கும் இடைப்பட்ட பிரதேசம் சாதவாகனர் எனும் ஆந்திரரின் ஆட்சி நிலவிய பிரதேசமாகும்.
- சதகர்ணி, ஸ்வாதகர்ணி, சாதவாகனர், சாந்திவர்ணர் எனும் பெயர்களால் இவர்கள் அறிமுகமாகின்றனர்.
- இவர்களது ஆட்சி மத்திய நிலையம், பிரதிஷ்டானம் ஆகும். இந்த இராசதானி விந்திய மலைத் தொடருக்கு வெளியே தென்னிந்தியாவில் மேலை, தக்கண பிரதேசத்தில் தோற்றம் பெற்ற விசாலமானதும், முதலாவதுமான பேரரசாகும்.
- சுங்கர், கண்வர் அரச வம்சத்தை அடிமைப்படுத்தித் தக்கணத்தின் ஆட்சியை நிலைநிறுத்திய முதலாவது ஆட்சியாளன் சிமுகன் ஆவான்.
- இந்த அரச வம்சத்தின் முக்கிய ஆட்சியாளர்கள்

#### முதலாம் சதகர்ணி மன்னன்

- 56 ஆண்டுகள் ஆட்சி செய்ததுடன் மால்வா பிரதேசம். அனுபா, விதர்ப்பம் ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றி மத்திய, மேற்கு வட தக்கணத்தில் ஆட்சியை வியாபித்தல்.
- இரு அஸ்வமேத யாகங்கள் செய்தமை. 'தக்ஷணாதிபதி' என்ற நாமத்தைச் சூடிக்கொண்டமை.

#### கௌதமி புத்திர சதகர்ணி மன்னன்

- சகர், யவனர், பார்த்திய ஆட்சியைத் தகர்ப்பதில் வெற்றி கண்டமை.
- நாகபாணன் என்ற சக மன்னனைத் தோற்கடித்து அவனது ஆட்சியின் கீழிருந்த அவந்தி, மால்வா, காத்தியவார், அப்பராந்த ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றுதல்.
- இதற்கமைய வடக்கில் மால்வா, காத்தியவார் வரையிலும், கிழக்கில் பெராரில் இருந்து கொங்காணம் வரையிலும் தெற்கில் கிருஷ்ணா நதி தொடக்கம் கோதாவரி நதி வரையிலும் ஆட்சியைப் பரவலடையச் செய்தமை.

#### சிவ சாதகர்ணி மன்னன்

- சகர்களின் ஆட்சியை தக்கணத்திலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தமை.

#### ஸ்ரீ யக்ஞ சதகர்ணி மன்னன்

- மேற்கு இந்தியாவின் கரையோரப் பிரதேசத்தையும் நர்மதா நதிக்கரையையும் தக்கணத்தையும் மத்திய, கிழக்குப் பிரதேசங்களிலும் ஆட்சியைப் பரவலடையச் செய்தமை.
- இவனுக்குப் பின்னர் சதகவாகன அரசு பல பிரிவுகளாகப் பிளவுற்றுப் பலவீனமடைந்தது.

**பண்பாட்டு முக்கியத்துவம்**

- இந்தியாவின் தென்பகுதியில் பண்பாட்டில் எழுச்சியை ஏற்படுத்திய குறிப்பிடத்தக்க அரச வம்சத்தினர் சதவாகனர் ஆவர்.

- **கட்டிடக்கலை**
  - இயற்கையான கற்பாறையைக் குடைந்து சிலைமனை, விகாரை என்பன அமைக்கப்பட்டமை.
  - தக்கணத்தில் உள்ள சிறப்பு வாய்ந்த கட்டிட நிர்மாணத்தைக் காட்டும் குகைகள்: பெத்சா, பாஜா, கார்லே, நாசிக், கன்ஹேரி, அஜந்தா (இலக்கம் 8, 9, 10, 12, 13)



பெத்சா குகை
*(source: http://www.choiceglobal.in/lonavala-and-khandala/)*



பாஜா குகை *(source: http://www.wondermondo.com)*



கார்லே குகை *(source:https://www.commons.wikimedia.org)*

- இக்குகைகளில் பெரும்பாலானவை பௌத்த பிக்குகளுக்குத் தானமாக வழங்கப்பட்டுள்ளதுடன், பிராமணர்களுக்கும் சமண மதத்தவர்களுக்கும் குகைகள் தானமாக வழங்கப்பட்டன.
  - விகாரைகள் (ஆவாச வீடுகள்) பெரும்பாலும் மத்திய சாலைகள், தான சாலைகள், சிறு அறைகள் என்பனவற்றைக் கொண்டிருந்தன. சில குகைகளின் தானசாலைகளில் உணவருந்தும் பொருட்டு கல்லினாலான நீண்ட மேசைகள் அமைக்கப்பட்டிருந்தன. நீர் ஊற்றுக்களிலிருந்து நீரைப் பெறும் பொருட்டுக் கல்லினாலான பொய்கைகள் அமைக்கப்பட்டிருந்தன. உட்புறத்திற்கு ஒளியைப் பெற்றுக்கொடுப்பதற்கு நுழைவாயிலில் சாரளம் அமைக்கப்பட்டிருந்தது.
  - கார்லே குகை சிறப்பு வாய்ந்ததாகும். இங்கு விகாரையின் சுவர் மெல்லிய செதுக்கல் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விகாரையின் உள்ளே கற்களைக் குடைந்து சிறு தூபிகள் அமைக்கப்பட்டிருந்தன.

- **தூபிகள் நிறுவப்படல்**
  - அமராவதி தூபிக்குப் புதிய அங்கம் சேர்த்துப் பெருப்பித்தமை.
  - புதிதாகப் பல தூபிகளை நிறுவியமை.
  - சாஞ்சி தூபியில் வாகல்கட செதுக்கல் வேலைப்பாடுகளை அமைத்தமை.



***அமராவதி தூபி*** *(source:https://www.tourmyindia.com)*

- **சிற்பமும் சித்திரக்கலையும்**
  - குகை விகாரைகளில் பல்வேறு சிற்பங்களையும் சித்திரங்களையும் காணக்கூடியதாக உள்ளது. சிவசாதகர்ணி மன்னனின் சிலை இங்கு காணப்படுகிறது.
  - புத்தரது உருவத்தை வரைதல் - அஜந்தாவின் 10 ஆவது இலக்க விகாரை, நாகர்ஜுன கொண்டா



***அஜந்தாவின் 10 ஆவது குகை***

*(source:https://www.pinterest.com)*



**நாகர்ஜுனா கொண்டா** *(source:https://www.wikipedia.org/wiki/Nagarjunakonda)*

- அஜந்தா குகைகளில் உள்ள ஓவியங்களில் புத்தர் தொடர்பான ஜாதகக் கதைகள் புத்தரின் வாழ்க்கையின் சிற்சில அம்சங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. (விஜயனின் இலங்கை வருகை தொடர்பான ஓவியம் முக்கியமானதாகும்.)
- அந்த ஓவியங்களில் காணப்படுபவை அரச குடும்பத்தவர்கள், பெண்கள், துறவிகள், தொழிலாளர்கள், யாசகர்கள், விவசாயிகள், பல்வேறு மிருகங்கள், பறவைகள் என்பன காணப்படுகின்றன.
- நானாகாட் குகைகளில் அரச குடும்பத்தவரது உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. உதாரணம்: சிமுக மன்னனின் உருவம், முதலாம் சாதகர்ணி மன்னனின் உருவம், நாகனிகா தேவியின் உருவம், முதலாம் சாதகர்னி மன்னனின் மூன்று புதல்வர்களின் உருவங்கள். அதேபோல்
- சாதவாகனர் வெளியிட்டுள்ள நாணயங்களிலும் கலையம்சங்கள் வெளிப்படுவதைக் காணலாம்.



**தானாகாட் குகை** *(source:http://www.vanraivillage.com)*



நானாகாட் குகை (source:http:/ancienttamilkinglist.blogspot.com)

## கணிப்பீடு 01

- **பின்வரும் முறையில் பல்தேர்வு வினாக்களைத் தயாரித்துக் கணிப்பீடு செய்க. பொருத்தமற்ற சோடியைத் தெரிவு செய்க.**

01. 1. சிமுகன் - சாதவாகனர் 2. கொன்டோபர்னஸ் - பார்த்தியன்
3. டெமிட்ரியஸ் - யவனர் 4. நாகபானன் - பக்டெரீயன்
5. சஷ்டன - ஷக (...........)

**இல. 02 தொடக்கம் 04 வரையான வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் குறித்த தலைப்பிற்குப் பொருந்தாத விடயத்தைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தை முன்னாள் உள்ள அடைப்பினுள் இடுக.**

02. சுங்கரது ஆட்சியின் விளைவு
1. பிராமண வழிபாடுகளில் மறுமலர்ச்சி ஏற்படல்.
2. சாஞ்சி தூபியில் சில தோரணங்கள் நிர்மாணிக்கப்படல்.
3. சமஸ்கிருத மொழியில் எழுச்சி ஏற்படல்.
4. பார்ஹுத் பௌத்த தூபி அழிக்கப்படல்.
5. பெறுமதி வாய்ந்த நினைவு நூல்கள் எழுதப்பட்டமை. (...........)

03. கௌதமிபுத்திர சாதகர்ணி மன்னன்
1. ஹரியங்க வம்சத்தைச் சேர்ந்தவன்.
2. பல்லவர்களின் கொலையாளி எனப்படுகிறான்.
3. சாதவாகனரின் எழுச்சி இவனது காலத்தில் ஏற்பட்டது.
4. கௌதமிபுத்திர பாலஸ்ரீயின் நாசிக் கல்வெட்டு இவரைப் பற்றி விளக்கம் அளிக்கிறது.
5. இந்தத் தகவல்கள் ஜுனாகாத் கல்வெட்டு மூலமும் உறுதி செய்யப்படுகிறது. (...........)

04. முதலாம் கனிஷ்க மன்னன்
1. வீமா காட்பீசஸ் மன்னனின் பின்னர் அரசனானான்.
2. குஷாண மன்னர்களில் தலைசிறந்தவன்.
3. கி.பி. 78ஆம் ஆண்டு கனிஷ்க ஆட்சிக்கு வந்தான்.
4. சக அரச வம்சமுறையின் ஆரம்ப ஆண்டு கி.பி. 78 எனக் கொள்ளப்படுகின்றது.
5. இம்மன்னனின் தலைநகர் கன்னோசியாகும்.

(...........)

**05 ஆம் 06 ஆம் வினாக்களுக்கு A, B, C, D எனக் கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் சரியான விடையை அல்லது விடைகளையோ தெரிவு செய்து, A யும் B யும் சரியாயின் 1 எனவும், B யும் C யும் சரியாயின் 2 எனவும் C யும் D யும் சரியாயின் 3 எனவும், A யும் C யும் மாத்திரம் சரியாயின் 4 எனவும் ஒன்றோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

05. சுங்கர்கள்

A - சத்திரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள்

B - இறுதி மௌரிய மன்னனான பிரகத்திரதனைக் கொன்று சுங்க வம்ச ஆரம்ப ஆட்சியாளனான புஷ்யமித்திரன் சிம்மாசனமேறினான்.

C - சுங்கர்களால் மேலும் கிரேக்கர்கள் இந்தியாவினுள் நுழைவது தடை செய்யப்பட்டது.

D - அமராவதி புத்தர்சிலை தொடர்பான செதுக்கல் சுங்கர்களின் காலத்தில் செதுக்கப்பட்ட தாகும்.

(...........)

06. சகர்கள்

A - சாகர்கள் கைபர் கணவாயினூடாக இந்தியாவினுள் நுழைந்தனர்.

B - வங்காளம் வரையில் தமது ஆதிக்கத்தை விஸ்தரிப்பதில் வெற்றி கண்டனர்.

C - இந்தியாவுக்கு வந்த நான்கு சகர் குழுவினர், தட்சசீலம், மதுரா, உஜ்ஜேயினி, மகாராஷ்டிரம் என்பனவற்றை மையமாகக்கொண்டு குடியேறினர்.

D - சாகர்களின் பிரதேச ஆளுனர்கள் சத்ரபர் என அழைக்கப்பட்டனர்.

(...........)

**இலக்கம் 07 தொடக்கம் 12 வரை சரியான விடையைத் தெரிவு செய்க.**

07. கனிஷ்க மன்னனது இராசதானிக்குரிய பிரதான பண்பாட்டு மத்திய நிலையம் எது?

1. பாடலிபுத்திரம் 2. கௌசாம்பி 3. பேஷாவார்
4. தாமிரலிப்தி 5. கபிலவஸ்து (...........)

08. பின்வரும் மன்னர்களுள் வெளிநாட்டுத் தொடர்புடைய மன்னன் யார்?

1. கனிஷ்கன் 2. பிரகத்திரதன் 3. பாகபத்ரன்
4. முதலாம் இராஜேந்திரன் 5. முதலாவது நாகபட்டன்

(...........)

09. மூன்றாவது பௌத்த மகாநாடு எந்த மன்னனின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது?

1. அஜாதசத்ரு 2. காலசோகன் 3. அசோகன்
4. தசரதன் 5. குணாளன் (...........)

10. மத்திய ஆசியாவில் குஷாண இராசதானிக்குரிய மத்திய நிலையமாகத் திகழ்ந்தது பின்வருவன வற்றில் எது?

1. சியல்கோட் 2. கேஷ்கார் 3. ஜலந்தார்
4. சுய்விஹார் 5. பஷாவார் (...........)

11. மிலிந்த பஞ்ஞா என்ற நூலின் ஆசிரியர் யார்?
1. நாகார்ஜுணர் 2. புத்தகோசர் 3. நாகசேனன்
4. வசுபந்து 5. அஸ்வகோசர் (...........)

12. நான்காம் பௌத்த மகாநாட்டின் பின்னர் மகாயான பௌத்த நூல்கள் எம்மொழியில் எழுதப்பட்டது?
1. பிராமி 2. மகதி 3. பிராகிருதம்
4. பாளி 5. சமஸ்கிருதம் (...........)

## கணிப்பீடு 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. (i) சுங்க வம்சத்தவரின் சமயக்கொள்கை
(ii) சாதவாகனர்களின் பண்பாட்டு நடவடிக்கை
(iii) முதலாம் கனிஷ்கப் பேரரசனின் ஆட்சிக்காலம்
மேலே தரப்பட்டுள்ள விடயங்களில் இரண்டினைத் தெரிவு செய்து அவை இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் விதத்தினைத் தெளிவுபடுத்துக.
(14 புள்ளிகள்)

02. சுங்கர்களின் அதிகாரப் பரவலுக்குப் புஷ்யமித்திர சுங்க மன்னரின் பங்களிப்பினை விளக்குக.
(14 புள்ளிகள்)

03. ''குஷாண மன்னர்களில் தலைசிறந்தவன் கனிஷ்க மன்னன் ஆவான்'' தெளிவுபடுத்துக.
(14 புள்ளிகள்)

04. பின்வரும் தலைப்புக்கள் தொடர்பாக வரலாற்றுக் கட்டுரை எழுதுக.
1. சாதவாகனர் காலத் தக்கணத்தின் கலையும் கட்டிடக்கலையும்
2. குஷாணரது ஆட்சியில் பௌத்த பண்பாட்டு வளர்ச்சி
(14 புள்ளிகள்)

05. தக்கணத்தில் முதலாவது பேரரசு சதவாகனர்களால் நிறுவப்பட்டது.

(i) சதவாகன அரச வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளன் யார்? (01 புள்ளி)
(ii) சதவாகனர்களால் தோற்கடிக்கப்பட்ட வட இந்திய அரச பரம்பரை இரண்டினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(iii) சதவாகனரின் கலை, கட்டிடக்கலை என்பன தொடர்பாக சிறு விளக்கம் தருக.
(4 புள்ளிகள்)
(iv) ''தக்கணத்தில் முதல் பேரரசை நிறுவியவர்கள் சதவாகனர்'' எனும் கூற்றை நீர் ஏற்றுக்கொள்கிறீரா அதற்கான காரணங்களை முன்வைக்குக.
(7 புள்ளிகள்)

## கணிப்பீடு 03

06. கீழே தரப்பட்டுள்ள இடங்களை இந்தியப் படத்தில் குறித்துக்காட்டி, அவற்றுள் இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்பு எழுதுக.
சியல்கோட், சாஞ்சி, தக்ஷிலா, உத்தரப் பிரதேசம் நர்மதா நதி, கத்தியவார், ஒரிஸ்ஸா
(14 புள்ளிகள்)

# 8. குப்தப் பேரரசின் தோற்றம்

## அறிமுகம்

குப்தப் பேரரசுக் காலம் இந்திய வரலாற்றில் முக்கியமான காலப்பகுதி எனப்படுகிறது. இந்தோ - கிரேக்கர், சகர், குஷாணர், சதவாகனர் ஆகியோரது ஆட்சிக்காலத்தின் பின்னர் வட இந்தியாவைப் போன்றே தக்கணத்திலும் தமது ஆட்சியை விஸ்தரித்துப் பாரிய பேரரசை உருவாக்கியவர்கள் குப்தர்கள் ஆவர். அவர்கள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட காலம் இந்திய வரலாற்றின் வளர்ச்சியைத் தீர்மானிப்பதல் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தினர்.

வட இந்திய வரலாற்றில் பொற்காலம் எனப்படும் குப்தர் காலம் அரசியல் ரீதியாக மட்டுமன்றி சமூக, பொருளாதாரப் பண்பாட்டுத் துறைகளிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்திய காலமாகும். அவை தொடர்பான விடயங்கள் இந்த அலகில் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

**தேர்ச்சி** : • இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவர்.

**தேர்ச்சி மட்டம்** : 8.1 இந்திய வரலாற்றைக் கட்டியெழுப்புவதில் குப்தப் பேரரசின் பங்கினைப் பகுத்தாய்வர்.

**பாடவேளைகள்** : 40

**கற்றற்பேறுகள்** :
- குப்தப் பேரரசின் ஆரம்பம், வளர்ச்சி, வீழ்ச்சி என்பனவற்றை விபரிப்பர்.
- குப்தர்களின் அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுச் செயற் பாடுகள் இந்திய சமுதாயத்தில் தாக்கம் செலுத்திய விதத்தினைத் தெளிவுபடுத்துவர்.
- குப்தப் பேரரசின் பரவலைத் தேசப்படத்தில் குறித்துக் காட்டுவர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## குப்தர் காலப்பகுதியை அறிந்து கொள்வதற்கான மூலாதாரங்கள்

### இலக்கிய மூலாதாரங்கள்

- பாகியனதும், ஹியுங்சாங்கினதும் குறிப்புகள், இத்சிங்கின் குறிப்பு, தேவி சந்திரகுப்த நாடகம், பிராமணீய புராணங்கள், வாயு புராணம், விஷ்ணு புராணம்
- காளிதாசரின் இரகுவம்சம், சாகுந்தலம், மேகதூதம்
- சூத்திரரின் மிரிச்சகடிகம் நாடகம், கௌமதி மகோற்சவம் (நாடகம்)
- வாத்சல்யனாரின் காம சூத்திரம்
- பரமார்த்தரின் வசபந்துரு சரிதம்
- அல்புரூணியின் பிரயாணக்குறிப்புக்கள்

### தொல்பொருள் மூலாதாரங்கள்

- செதுக்கல், சிற்பம், ஓவியம், நடனம்

- குப்த நாணயங்கள்
- கல்வெட்டுக்கள்: சமுத்திரகுப்தனின் அலஹாபாத் தூண் பிரஸஸ்திக் கல்வெட்டு, கணகானித மன்னரின் பில்சா கல்வெட்டுக்கள், அமர்கார்தமரின் சாஞ்சி கல்வெட்டுக்கள், பிதரி ஆவணங்கள், குமார குப்தரின் ஜுனாகாட் கல்வெட்டு

## குப்த அரச வம்சத்தின் ஆரம்பம்

- குப்த கல்வெட்டுக்களுக்கு அமைய அதன் ஆரம்ப ஆட்சியாளர்கள் ஸ்ரீகுப்தன், ஸ்ரீ கடோத்கவ குப்தன், ஸ்ரீ சந்திர குப்தன் ஆகிய மூவருமாவர்.
- பிரபாவதி குப்தா அரசியின் இரு கல்வெட்டுக்களுக்கும், ரேவா எனுமிடத்தில் கிடைக்கப்பெற்ற கல்வெட்டுக்கும் அமைய கடோத்கச குப்தனே இந்த அரச வம்சத்தின் ஆரம்ப ஆட்சியாளன் ஆவான்.
- இத்சிங்கின் பிரயாணக்குறிப்பின்படி முதலாவது ஆட்சியாளன் ஸ்ரீ குப்தனாவான்.
- வட இந்தியாவிலும், தக்கணத்திலும் ஆட்சியை நிலைநாட்டிய முதலாவது ஆட்சியாளன் கடோத்கச குப்தனாவான்.
- மகாராஜாதிராஜா என்ற பட்டத்தைக் கொண்ட முதலாவது சந்திரகுப்த மன்னன் சந்தேகத்திற்கு இடமின்றி சுயாதீன அரசனாகக் கருதப்படுகின்றான்.
- முதலாம் சந்திரகுப்தன் கி.பி. 320 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்தான்.
- ஆரம்பத்தில் வங்காளமும் அதனைச் சூழவுள்ள சில பிரதேசங்களும் மாத்திரமே குப்த பேரரசுக்கு உரியதாக இருந்தது. முதலாம் சந்திரகுப்தன் விச்சாவி வம்சத்தில் குமார தேவியைத் திருமணம் செய்து அப்பிரதேசத்தை இணைத்துக் கொண்டான்.

## சமுத்திரகுப்த மன்னன் (கி.பி. 335-376)

- இம்மன்னன் தொடர்பாகப் பெறக்கூடிய முக்கிய தகவல்கள் ஹரிசேனரின் அலஹாதூண்பாத் கல்வெட்டில் காணப்படுகின்றது. இவை தவிர ஏரான், காயா ஆகிய இரு இடங்களிலும் முக்கிய கல்வெட்டுக்கள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன.
- அலஹாபாத்தூண் கல்வெட்டுக்கு அமைய அரச சபைக் கூட்டமொன்றின் போதே சந்திரகுப்த மன்னன் தனது மகனிடம் அரசை ஒப்படைத்தான் என அறிய முடிகின்றது.
- அலஹாபாத்தூண் கல்வெட்டுக்கு அமைய சமுத்திரகுப்தன் அரசனாகும்போது குப்த அரசு பிரதேச ஆட்சியை மாத்திரமே உரிமையாக்கி இருந்தது என்பது தெளிவாகிறது.
- பாடலிபுத்திரத்தைத் தலைநகராக்கி, திக் விஜயக் கொள்கையைப் பின்பற்றிய சமுத்திரகுப்த மன்னன், அசாம், வங்காளம், பஞ்சாப், தக்கணம் என்பனவற்றைக் கடந்து தெற்கே காஞ்சி வரையிலும், மேற்கே மால்வா காத்தியவார் வரையிலும் அரசை விரிவடையச் செய்தான்.
- நிலையான பிரதேசங்களை மாத்திரம் பாடலிபுரத்திலிருந்து நிர்வகித்தான். ஏனைய அயல் அரசுகளை காணிக்கை, தூதுத் தொடர்பு, திருமணத் தொடர்பு என்பனவற்றின் மூலம் கீழ்ப்படிவாகவும் நட்பாகவும் நிர்வகித்துக்கொண்டான். (கிரஹண, மோக்ஸ, அனுக்கிரஹக் கோட்பாடு)

- **சமுத்திரகுப்த பேரரசனின் திக் விஜயக் கொள்கை**
  - ஆரியவர்த்த மன்னர்கள் ஒன்பது பேரைத் தன்னடிப்படுத்தல்.

| | | | |
|---|---|---|---|
| 1. அர்ச்சுதர் | - | உத்தர பிரதேச சிற்றரசர் | |
| 2. நாகதத்தர் | - | மதுராவுக்கு அருகில் இருந்த ஆட்சியாளர் | ***ஆரிய வர்க்கத்திற் குட்பட்ட நாகர் வம்சமத்து மன்னர்கள்*** |
| 3. நாகசேனர் | - | பத்மாவதி அரசர் | |
| 4. உருத்திரதேவர் | - | வாகட மன்னர் | |
| 5. கணபதி நாகர் | - | விதிசாவின் ஆட்சியாளர் (பண்டர்காரின் கருத்து) | |
| 6. மடிலர் | - | உத்தர பிரதேச ஆட்சியாளர் | |
| 7. நந்தன் | - | மத்திய பாரதத்தின் ஆட்சியாளர் | |
| 8. சந்திரவர்மர் | - | கிழக்குப் பஞ்சாப் ஆட்சியாளர் | |
| 9. பாலவர்மர் | - | அஸாமின் ஆட்சியாளர் | |

- விந்தியமலை, நர்மதா ஆற்றின் தென் பகுதி என்பனவற்றை ஆக்கிரமித்துப் பன்னிரு ஆட்சியாளர் களைத் தன்னடிப்படுத்தினான். அவை பின்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | மகா காந்தாரத்தின் வியாக்கிரராசன் | 2. | கோசலத்தின் மகேந்திரன் |
| 3. | கோட்டுராவின் சுவாமிதத்தன் | 4. | வேங்கியின் ஹஸ்திவர்மன் |
| 5. | பாலக்காவின் உக்கிரசேனன் | 6. | காஞ்சியின் விஷ்ணு கோபன் |
| 7. | அவமுக்தாவின் நீலராஜன் | 8. | எறத்த பள்ளியின் தமண்ணா |
| 9. | துவரஸ்திராவின் குபேரன் | 10. | பிஸ்தாபுரத்தின் மகேந்திரகிரி |
| 11. | குஸ்தலபுரத்தின் தனஞ்சயன் | 12. | கௌராளயின் மந்தராசன் |

- ஒன்பது எல்லைப்புற அரசுகளைத் தன்னடிப்படுத்துதல்.
  1. சாமநந்தா (வங்காளத்தைச் சூழ்ந்த பகுதி)
  2. தேவகா (வடபகுதி)
  3. காமரூபம் (அசாம்)
  4. நேபாளம் (பீகார்)
  5. காத்திரிபூர் (ஜலந்தர்)

- இவை சிறு கோத்திர அரசுகள் எனக் கொள்ளப்படுகின்றன. கண அரசுகள் ஒன்பதினைக் கைப்பற்றியமை. மானவர்கள், அர்ஜீனாயாணர்கள், யெவ்தேயர்கள், மாத்திரர்கள், அபிரர்கள், காக்கர்கள், பரிகார்கள், கானிகர்கள்.
- அலஹபாத்தூண் கல்வெட்டில் மேற்கு இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் சமுத்திரகுப்த மன்னனுக்குப் பணியாற்றிய சுயாதீன அரசுகள் சில பற்றிக் கூறப்பட்டுள்ளது.
  1. தேவிபுத்திரர் (மேற்குப் பஞ்சாபையும், ஆப்கானிஸ்தானத்தையும் ஆட்சி செய்த குஷாண மன்னர்களாக இருக்கலாம்.)
  2. சகர்கள், முருண்டர்கள் (மேற்கு இந்தியாவை ஆண்ட சக அரசாக இருக்கலாம்.)
  3. சிங்ஹலய - சிங்ஹல என்பது இலங்கையாகும். இக்காலத்தில் இலங்கையின் மன்னனாக இருந்தவன் கீர்த்திஸ்ரீ மேக வர்ணன் ஆவான். அவன் சமுத்திரகுப்தனின் மேலாண்மையை ஏற்றுக் காணிக்கை அனுப்பியமைக்கான சான்றுகள் இல்லை.
- சமுத்திர குப்தனின் பிரதான ஆவணங்கள் மூன்றாகும். (பிரயாக, எராண, கயா)



***காயச் செப்பேடு***

*(source:http://whatisindia.com)*



***அஸ்வமேத யாகம் செய்யும் நாணயம்***

*(source:http://www.columbia.edu)*

- இரண்டு அஸ்வமேத யாகங்கள் செய்ததாகக் கூறப்படுகிறது.
  - அந்தக் கல்வெட்டில் நூறு யுத்தங்களின் வீரர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- பேரரசில் வெளியிடப்பட்ட பல்வேறு நாணயங்கள் அவரது வீரத்தையும் அவர் கட்டியெழுப்பிய அரசியல் ஆதிக்கத்தையும் மட்டுமல்லாது அக்காலத்தில் நிலவிய பொருளாதார சுபீட்சத்தையும் எடுத்துக்காட்டுகிறது.
  - சந்திரகுப்த மன்னன் போர் வீரனைப் போன்று வில்லேந்தி நிற்கும் நாணயங்கள் - 'புவியை வெற்றி கொண்ட இராஜாதிராஜன் நற்செயலால் விண்ணுலகை வெல்லுவார்' என்று இதில் குறிப்பிடப்பட்டுள்ளமை.

- மன்னன் போர் வாளைக் கையிலேந்தி இருக்கும் உருவத்தின் கீழ் முடிசூடியவர்களின் எமன் (எதிரி - அரசர்களை இல்லாதொழிப்பவன்) என்னும் வாசகம் காணப்படுகின்றமை.
- மன்னன் அம்பெய்தியதால் விழுந்த புலியைத் தன் கால்களால் மிதித்துக் கொண்டிருப்பது போன்ற உருவிலான நாணங்களும் கிடைத்துள்ளமை.
    - அஸ்வமேத யாகம் செய்யும் விதத்திலான நாணயங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்த வகை நாணயத்தின் ஒரு பக்கத்தில் தூணில் கட்டப்பட்ட குதிரை உருவமும் மறு பக்கத்தில் மன்னனின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து அஸ்வமேதயாகம் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டுள்ளமை தெரியவருகிறது.
    - சமுத்திர குப்த மன்னன், கல்வியிலும் சிறந்து விளங்கினான். எனவேதான் கல்வெட்டில் அவன் கவிராஜ் எனக் குறிப்பிடப்பட்டுள்ளான்.
    - மன்னன் வீணை வாசிப்பதைச் சித்தரிக்கும் தங்க நாணயம் ஒன்றும் கிடைத்துள்ளது.

*(source:http://coinindia.com/galleries-samudragupta.html)*



## இரண்டாம் சந்திரகுப்த மன்னன் (கி.பி. 376 - 415)

- இம்மன்னன் தொடர்பாகக் கற்பதற்கான மூலாதாரங்கள்
    - மதுரா தூண் கல்வெட்டு, உதயகிரி குகைக் கல்வெட்டு, கடவா கல்வெட்டு, சாஞ்சிக் கல்வெட்டு, மெஹறௌலி தூண் கல்வெட்டு, மந்தசோர தூண்கல்வெட்டு, தன்யதன செப்பேடு, சைகிராம செப்பேடு, மனகுமார ஆவணம்



**உதயகிரி குகைக் கல்வெட்டு** *(source:http://www.cpreecenvis.nic.in/Database/UdayagiriCave)*

**அரசனாதல்**

- தேவி சந்திரகுப்த நாடகத்திற்கு அமைய சமுத்திரகுப்தனுக்குப் பின்னர் இராமகுப்தர் அரசனானதாகக் கூறப்படுகிறது. எனினும் நாணயங்கள், சஞ்ஜான் செப்புத்தகடு, கல்வெட்டுக்கள் என்பன இரண்டாம் சந்திரகுப்தன் அரசனானதை உறுதி செய்கிறது.
- தேவகுப்தன், விக்கிரமாதித்தன், தேவ ஸ்ரீ, பரமபட்டாரக முதலான பட்டங்களை இவன் பயன்படுத்தியதுடன் பிரபாவதி தேவி, குவேர நாக என்ற அரசிகள் இருந்தனர்.
- இவனது காலத்தில் பாகியன் என்ற சீன யாத்திரிகன் இந்தியாவுக்கு வந்து 10 வருடங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. (கி.பி. 400-411)
- தங்கம், வெள்ளி, செப்பு நாணயங்களை வெளியிட்டுத் தனது அதிகாரத்தை நிலைநாட்டியமை.

**குப்த பேரரசை விரிவாக்கும் பொருட்டு இவன் இரண்டு முக்கிய நடவடிக்கைகளை மேற் கொண்டமை.**

### திக் விஜயக் கொள்கை

**1. மேற்கு இந்திய சகர்களின் ஆட்சியை வீழ்ச்சியுறச் செய்தல்.**

- இரண்டாம் சந்திரகுப்தனின் முதலாவதும் முக்கியமானதுமான போர் நடவடிக்கை இதுவாகும். மூன்றாம் உருத்திர சிம்மனைத் தோற்கடித்தமை.
- இந்தப் போர் தொடர்பாகப் பின்வரும் கல்வெட்டுக்கள் மூலம் உறுதிசெய்யப்படுகிறது.
  - உதயகிரி குகைக் கல்வெட்டு (மன்னனின் யுத்த, சமாதான நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சர் வீரசேனசாக என்பவரால் அமைக்கப்பட்டது.)
  - பில்சா கல்வெட்டு
  - அம்ரகாதவனின் சாஞ்சிக் கல்வெட்டு (மன்னனின் படைத்தலைவனால் அமைக்கப்பட்டது.)
- மேற்கு இந்தியாவை வெற்றி கொண்டமை அரசியல் ரீதியாக மட்டுமன்றி, குப்த பேரரசின் பொருளாதார நிலையை உறுதி செய்வதிலும் இப்போர் முக்கியத்துவம் பெறுகிறது. வங்காள விரிகுடாவில் இருந்து அராபியக் கடல் வரையில் செயற்பட்ட குப்த பேரரசுக்கு இரு மருங்கிலும் காணப்பட்ட துறைமுகங்களை நிர்வகிக்கச் சந்தர்ப்பம் கிடைத்தது. இதன் மூலம் வெளி உலகுடன் தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது.

**2. வடமேற்கினை வெற்றி கொள்ளல்.**

சிந்துநதி முகத்துவாரத்தை வெற்றிகொண்டு குவாஹ்லியர்களைத் தோற்கடித்தமை.
பஞ்சாபிற்கு வெளியே இருந்த பிரதேச ஆட்சியாளர்களைத் தன்னடிப்படுத்தியமை.
பக்டேரியா வரையில் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளல்.

**3. வங்காளத்தில் வங்க ஆட்சியாளர் கூட்டணியைத் தோற்கடித்தமை** பற்றி மெஹெரவுல் கல்வெட்டு உறுதி செய்கிறது. இதில் குறிப்பிடப்படும் வங்கதேசம் கிழக்கு வங்காளமாகும்.

**4. இந்துக்குஷ் மலைத்தொடருக்கு வெளியே குவாஹ்லியர் எனும் குழுவினரைத் தோற்கடித்ததாகக் கருத்து நிலவுகிறது**. (தில்லி குத்தூப் மினார் தூண் - கல்வெட்டு)

- சந்திரகுப்தனின் அமைச்சர்களில் ஒருவனான வீர சேனசாப என்பவனின் கல்வெட்டு ஒன்றில் மன்னன் உலகை வெல்வதற்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.
- மன்னனின் தண்டநாயகனான அம்ரகார்தவனின் கல்வெட்டில் மன்னன் பல போர்களை வென்று புகழ் பெற்றான் எனக் கூறப்படுகிறது.

### விவாகத் தொடர்புகள்

- நாக வம்ச குபேராவைத் திருமணம் செய்து கொண்டமை.
- அவள் மூலம் பிறந்த பிரபாவதி குப்தா எனும் மகளை வாகாட மன்னனான இரண்டாம் உருத்திரசேனனுக்குத் திருமணம் செய்து கொடுத்ததாக பூனா செப்பேட்டில் குறிப்பிடப்படுகின்றமை.
  - வாகாட அரசு தக்கண பிரதேசமானதால் சகர்களைத் தோற்கடிப்பதற்கு இது இலகுவாக இருந்தமை.
- கதம்ப வம்ச ஆட்சியாளனான காகுஸ்திவர்மனின் மகளைக் குப்த ஆட்சியாளனுக்குத் திருமணம் செய்து வைத்ததாக அவனது கல்வெட்டு ஒன்றில் குறிப்பிடப்படுகிறது. அந்தக் குப்த மன்னன் இரண்டாம் சந்திரகுப்தன் என அனுமானிக்கப்படுகிறது.





- இரண்டாம் சந்திரகுப்தன் வெளியிட்ட நாணயங்கள் மூலமும் அவனது அரசியல் விரிவாக்கம் தெளிவுபெறுகிறது.
  எடுத்துக்காட்டு: மன்னன் சிங்கத்தைக் கொல்வது போன்று காட்டும் நாணயம் சிங்கங்கள் அதிகமாக வசிக்கும் குஜராத்தை வெற்றி கொண்டமையும், சிங்கவிக்ரமர்களை அடையாளப்படுத்துதலும் மன்னர் போர்க் குதிரை மீது அமர்ந்திருப்பது போன்ற நாணங்கள் மன்னர்வாளின் மீது கையை வைத்திருப்பதுடன் சேவகன் ஒருவன் கொடியை உயர்த்தி வைத்திருத்தல்.
- இரண்டாம் சந்திரகுப்த மன்னனது ஆட்சிக்காலத்தில் கல்வியிலும், இலக்கியத்திலும் பெரும் முன்னேற்றம் காணப்பட்டது. இராஜசபையில் நவரத்தினங்கள் எனப்படும் கவிஞர்கள் இருந்ததாகவும் இவர்களால் இலக்கியத்துறைக்குப் பெரும் பங்களிப்புச் செய்யப்பட்டதெனவும் கூறப்படுகிறது.

## இரண்டாம் சந்திரகுப்தனுக்குப் பின்னரான ஆட்சிக்காலம்

### முதலாம் குமாரகுப்தன் (கி.பி. 415-455)

- அஸ்வமேத யாகம் நடாத்தியதோடு மகேந்திர ஆதித்தன் என்ற பட்டத்தை சூடிக்கொண்டமை.
- புஷ்யமித்திரன் என்ற கோத்திரம் (நர்மதா நதி அருகில் வாழ்ந்தவர்கள்)குப்தரது ஆட்சிக்கு எதிராக செயற்பட்டமை.
- குமாரகுப்த மன்னனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இந்த அச்சுறுத்தலில் இருந்து அரசை மீட்டது அவனது மகனான ஸ்கந்த குப்தனாவான்.

### ஸ்கந்த குப்த மன்னன் (கி.பி. 455-467)

- கோத்திரங்களுடன் போர் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டமை.
- காந்தார பிரதேசத்தில் ஏற்பட்ட ஹூணர்களின் ஆக்கிரமிப்பை முதன் முதல் தோற்கடித்தது ஸ்கந்த குப்தனாவான்.
- ஸ்கந்தகுப்த மன்னன் யுத்த நடவடிக்கைகளைப் போன்றே பொதுநல சேவைகளையும் மேற்கொண்டான்.
  உதாரணம்: கிர்னார் மலைச் சிகரத்தில் அமைந்த ஏரியை பர்ணதத்தர் என்ற பிரதேச ஆட்சியாளர் மூலம் பழுதுபார்த்தமை.

- இவனது காலத்தில் நாடு விரிவடைந்ததே தவிர, நாட்டின் எல்லைகள் குறைவடையவில்லை. வங்காளத்திலிருந்து கத்தியவார் வரை வட இந்தியப் பிரதேசம் இவரது ஆட்சிக்கு உட்பட்டிருக்கலாம் என அனுமானிக்கப்படுகிறது.
- ஸ்கந்த குப்தருக்குப் பின்னர் புருகுப்தர், இரண்டாம் குமாரகுப்தர், புதகுப்தர், விஷ்ணு குப்தர், பானுகுப்தர் ஆகியோர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளமை.

### குப்தரது நிர்வாகம்

- இவர்களது ஆட்சி தொடர்பாக அறிந்து கொள்வதற்குப் பண்டைய நூல்கள், தர்மசாஸ்திர நூல்கள், இலக்கிய நூல்கள், அலஹாபாத்தூண் கல்வெட்டு என்பன துணைபுரிகின்றமை.

- நிர்வாகத்தின் பிரதானி அரசன், அவன் மகாராஜாதிராஜா, பரம ராஜாதிராஜா, ராஜராஜாதிராஜன் போன்ற பட்டப் பெயர்களைக் கொண்டிருந்தமை.
- பரம்பரை ரீதியான முறைப்படி மேற்கொள்ளப்பட்ட ஆட்சிமுறை நிலவியமை.
  அமைச்சர்கள், மகா பாலாதிதிரிகா (போர்த் தலைவன்) தண்ட நாயகா, மகா பிராத்திகாரா, அங்காரக்சக்கா, சாந்திவிக்ரஹிக்க (சமாதானம், போர் தொடர்பான அமைச்சன்)
- அரசு முக்கிய நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை.
  1. மத்திய நிர்வாகம்
  2. புக்தி (பிராந்தியம்)
  3. விஷய (மாவட்டம்)
  4. கிராமம்
- மத்திய நிருவாகத்திலும் பிரதேச நிருவாகத்திலும் இணைப்பாளர்களாக இருந்தவர்கள் குமாரமாத்யா, ஆயுக்த எனும் அலுவலர்கள் ஆவர்.
- பிரதேச நிருவாக அலகு புக்தி என்பபட்டது. நிருவாகிகள் உபரிக்க எனப்பட்டனர்.
- புக்தி மேலும் விஷ்ய நிர்வாக அலகுகளாகப் பிரிக்கப்பட்டதுடன், விஷயபதி, குமாரமாத்ய முதலான அலுவலர்களின் கீழ் நிருவகிக்கப்பட்டமை.
- குப்த பேரரசுக்கு உட்பட்ட அரசுகளில் அரை சுதந்திரம் நிலவியமை.
- நீதி வழங்கும்போது முக்கிய நீதிமன்றமாக விளங்கியது தர்ம நீதிமன்றமாகும். சபை எனப்பட்ட அதற்கு மன்னனின் உதவி கிடைத்தது. நீதிபதிகள், அமைச்சர்கள், புரோகிதர்கள் என்போர் அதனுடன் தொடர்புடையவர்களாக இருந்தனர்.
- நீதிமன்றச் செயற்பாடுகள்,
  தர்மம் (ஒழுக்கநெறி)
  விவகாரம் (பாரம்பரிய முறை)
  சடங்குகள் (சமூக முறை)
  இராஜசாசனம் (அரச கட்டளை)
- தண்டனை வழங்கல். (சாம, பேத, தான, தண்ட)

### குப்தகாலப் பண்பாடு

- குப்தர் காலம் இந்திய பண்பாட்டு வரலாற்றில் முக்கியமான காலமாகும். பேரரசில் நிலவிய அரசியல் ஒருமைப்பாடும், அங்கு நிலவிய ஒழுங்கான ஆட்சி முறையும் வர்த்தக வளர்ச்சியும் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தன. அதனால் குப்தர் காலம் இந்திய வரலாற்றில் பொற்காலம் என வரலாற்றாளர்கள் குறிப்பிடுகின்றனர்.
- குப்தர் கால பண்பாட்டு மலர்ச்சியைப் பின்வரும் தலைப்புக்களில் பகுப்பாய்வு செய்யலாம்.
  - சமய எழுச்சி
  - கட்டிடக்கலை
  - சிற்பக்கலையும் ஓவியக்கலையும்
  - கல்வியும் இலக்கியமும், தத்துவமும்
  - கல்வி வளர்ச்சி
  - அறிவியலும் விஞ்ஞானமும்

### சமய வளர்ச்சி

- இந்து சமயம் பெரிதும் வளர்ச்சியடைந்தமை. இந்து சமயம் முறையாகக் கட்டியெழுப்பப்பட்டது இக்காலத்திலாகும்.
- பிராமணீயத்தில் காணப்பட்ட வேத இலக்கியங்களுக்குப் பதிலாகப் புராணம் எனப்பட்ட இலக்கியங்கள் முக்கிய சமய இலக்கியமாக மாறியமை. பண்டைய நூல்களிடையே பாகவதம், மத்சய, வாயு, கூர்ம, பிரக்மாண்ட, மச்ச புராணம் என்பன இக்காலத்தில் எழுதப்பட்டதாக நம்பப்படுகிறது.

- விஷ்ணுவையும் சிவனையும் மையமாகக்கொண்டு இரு முக்கிய சமயப் பிரிவுகள் தோற்றம் பெற்றிருந்தன.
- வைஷ்ணவ சமயம் வளர்ச்சி அடைந்தமை. விஷ்ணுவின் பத்து அவதார முறை வளர்ச்சியடைந்தமை. அதாவது விஷ்ணு பல அவதாரங்களில் தோற்றமளிக்கிறார் என்பதாகும்.
- பிரம்மா, விஷ்ணு, சிவன் முதலானோரைப் பிரதானமாகக்கொண்டு மும்மூர்த்தி முதலிடம் பெற்றமை.
- குமாரகுப்தன் ஸ்கந்த வழிபாடு செய்தவன் என்பது அவனது நாணயங்களிலிருந்து தெளிவாகிறது. சமுத்திர குப்த மன்னன் கருடக்கொடியை ஏந்தியிருப்பதால் விஷ்ணுவின் (வைஷ்ணவம்) பக்தன் எனத் தெரிகிறது.
- மகாகவி காளிதாசன் சிவ பக்தராவார். அவர் ஸ்கந்தனின் தோற்றத்தை விளக்கும் குமார சம்பவம் என்ற நூலை எழுதியமை.
- சிவனின் உருவம், கோயில்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டமை.
- குப்த மன்னர்கள் புத்த சமயத்திற்கும் அனுசரணை வழங்கினர். மகாயானம் பிரபல்யமடைந்தமை. வசுபந்து, தினாகர், குமாரஜீவ என்னும் ஆசிரியர்கள் மகாயானத்தைப் பிரபல்யப்படுத்த மேற்கொண்ட முயற்சிகள்.
  உதாரணம்: சாரணாத்தில் கிடைக்கப்பெற்ற புத்தரது சிலைகள்.
- இரண்டாம் சந்திரகுப்தனின் சாஞ்சி தூண் கல்வெட்டு - 10 பிக்குகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள்.
- முதலாம் குமாரகுப்தனின் மங்குவார் கல்வெட்டு - புத்தரது உருவம் அமைப்பது தொடர்பானது.
- நாலந்தா பல்கலைக்கழகத்திற்கு அனுசரணை வழங்குதல்.
- முதலாம் குமாரகுப்தனதும் ஸ்கந்த குப்தனதும் ஆட்சிக் காலத்திற்குரிய கல்வெட்டுக்கள் பலவற்றில் சமண முனிவர்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுத் தானமாக வழங்கியமை குறிப்பிடப்பட்டுள்ளன.
- சமண மதத்தில் சுவேதாம்பர, திகாம்பர என்ற இரு பிரிவுகள் இக்காலத்திலேயே நிலையாகக் கட்டியெழுப்பப்பட்டமை.

## கட்டிடக்கலை

- பாறையைக் குடைந்து குகைக் கோயில்கள் அமைக்கும் முறை வளர்ச்சியடைந்தமை.
- இக்குகைக் கோயில்கள் காணப்படும் இடங்கள்
  உதாரணம்: அஜந்தா, எல்லோரா, பாக், அவுரங்காபாத், உதயகிரி, தியோகீர், பிதர்கோன்
- குகைக் கோயில் மரபுகளில் பிரதான கட்டிட அமைப்பு இரண்டினைக் காணக்கூடியதாக உள்ளது.
  - சைத்தியசாலை முறை
  - விஹாரசாலை முறை - ஆராம அல்லது விகாரை முறையில் குகை அமைத்தல்.




(source:*http://www.wondermondo.com)*

***அவுரங்கபாத் விகாரை குகைகள்***

### சைத்திய சாலை முறை

- அஜந்தாவில் காணப்படும் 28 குகைகளில் 23 குகைகள் குப்த யுகத்தைச் சேர்ந்ததாகும். இவைகளில் 19, 26 ஆவது இலக்க குகைகள் சைத்தியசாலைகளாகும்.
- செவ்வக வடிவிலான சிறு குகைகளான இவைகளில் சைத்தியத்துடன் கூடிய மத்திய சாலையும், இரு மருங்கிலும் நடந்து செல்லும் சாலைகள் இரண்டும் உள்ளன.
- விஸ்வகர்ம குகை எனப்படும் எல்லோரவிலுள்ள சைத்தியசாலையொன்றில் சிறு சைத்திய மொன்றிற்குப் பதிலாகக் காணப்படுவது சைத்தியத்தை ஆசனமாகக் கொண்ட புத்தர் சிலையாகும்.
- பிராமணர்களுக்கென அமைக்கப்பட்ட பழைய குகையாக விளங்குவது உதயகிரி குகையாகும்.
- இவை வாகாடக இராச்சியத்தில் இருப்பதால், குப்தரின் அனுசரணையுடன் வாகாடக மன்னர்களால் உருவாக்கப்பட்டவை.



***உதயகிரி குகைகள்*** *(source:https://commons.wikimedia.org)*

### விகாரை சாலை முறை

- இவை பிக்குகள் வாழ்ந்தவைகளாகும். அஜந்தாவில் 21 ஆம் குகை விகாரைகள் இதனைச் சேர்ந்தவையாகும்.
- நடுசாலையையும் இரு பக்கமும் ஆராமை அறைகளுடன் இவை அமைக்கப்பட்டுள்ளன.
- குப்தரது கட்டிடக்கலை இரு முறைகளில் வளர்ச்சியடைந்துள்ளன.
    1. பழைய முறை திட்டமிடப்படாது இயற்கைக்கு முதலிடம் கொடுத்து அமைக்கப்பட்டவை.
    2. கட்டிடங்கள் அமைப்பதற்கு இதுவரை பயன்படுத்தப்பட்ட மரத்திற்குப் பதிலாகச் செங்கற்கள் அல்லது மட்டமாக்கப்பட்ட கருங்கற்கள் பயன்படுத்தப்பட்டமை.
- ஏற்கனவே உள்ள கற்குகைகளுக்கு மேலதிகமாக கடவுளரது உருவங்களை வைக்கும் பொருட்டு விசேட கட்டிடங்கள் அமைந்தமை.
- கட்டிடங்களின் திட்டம், அமைப்பு என்பனவற்றிற்கு அமைய அவற்றை ஐந்தாகப் பிரிக்கலாம்.
    1. சதுரமான சிறு கர்ப்ப அறைகள் அமைத்து முன்னோக்கியவாறு துவார மண்டல கட்டிடம்.
    2. மேற்கூறப்பட்ட சதுர கர்ப்பக்கிரஹத்தைச் சூழ அமர்ந்து வழிபடக்கூடிய மண்டபம்.
    3. மேற்படி சதுரவடிவிலான சிறிய கட்டிடத்தின் மேல் சிகரம் அமைத்தல்.
    4. நீள்வட்ட வடிவிலான கட்டடம்
    5. நான்கு பக்கத்திலும் துவார மண்டபத்துடனான வட்டமான மேடையில் அமைக்கப்பட்ட கட்டிடம்.

- நாகரக, திராவிட முறையிலான இந்துக் கோயில்கள் கட்டப் பட்டமை.
  உதாரணம்: தியோகார்க் தச அவதாரக் கோயில்
- பௌத்த தூபிகள், ஆராமைத் தொகுதிகள் அமைத்தல் இக் காலத்தில் முன்னேற்றம் அடைந் திருத்தமை.
  உதாரணம்: ஆராமை தொகுதி
  - புத்தகயா, நாலந்தா தூபி
  - சாரணாத் தாமெக் தூபி



சாரணாத் தாமெக் தூபி
*(source:http://heritage-traveller.blogspot.com)*

**கலை**
- இந்திய வரலாற்றில் உயர்கலை நிர்மாணம் இடம்பெற்ற யுகமாகும்.
- சிற்பக்கலை, செதுக்கல் கலை, ஓவியக்கலை என்ற பிரிவுகள் காணப்படுகின்றமை.
- அஜந்தா, எல்லோரா, பாக், சாரணாத் போன்ற இடங்கள் தியோகார்க், கோயிலில் கலை நிர்மாணம் காணப்படும் பல இடங்கள்.

**சிற்பம்**
- சாரணாத் தர்மசக்கர சிலை, மதுராவிலுள்ள புத்தரது நிற்கும் சிலை என்பன உயர்நிலையான சிற்பங்களாகும்.
- இராமர், சீதை, அகத்தியர், விஷ்ணு, சிவன், மிருக உருவங்கள் முதலான உருவங்கள் பல கிடைக்கப்பட்டுள்ளமை.
- நாணயங்கள், புத்தகயா, சாரனாத் ஆகிய இடங்களில் கிடைக்கப்பெற்ற போதிசத்வ சிலை மற்றும் உருவங்கள்.
- சாந்தம், மென்மை. முதலான இயல்புகளுக்கு முதலிடம் அளித்து சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டமை.

**ஓவியம்**
- அஜந்தா குகையில் காணப்படும் ஓவியங்கள் இக்கால ஓவியத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகிறது.
- காளிதாசரின் நூல்களில் காணப்படும் எழில், மென்மை, காதல் சோகம் முதலான அம்சங்கள் இந்த ஓவியங்களில் அடங்கியுள்ளமை.
  உதாரணம்: பத்மபாணி போதிசத்துவரின் உருவம்
  - சத்தந்த ஜாதகம்
  - யசோதராவும் ராகுலவும் புத்தரை சந்திப்பதைக் காட்டும் சித்திரம்
  - சகுந்தலை, துஸ்யந்தன் சந்திப்பு

**செதுக்கல்**
- சிவன், பார்வதி செதுக்கல்
- ராஜபுத்தானத்தில் மண்டோரில் கிருஷ்ண, கோவர்தன, தாரண, நாககிரி கதவு சிற்பம்.
- ஹில்சாவுக்கு அருகில் உதயகிரி குகைக் கதவில் செதுக்கப்பட்டுள்ள செதுக்கல்.

**கல்வியும் இலக்கியமும்**

- குப்தர் கால கல்வி தொடர்பான தகவல்கள் பாகியன், ஹியுன்சாங், இத்சிங் முதலானோரின் பிரயாணக் குறிப்புக்கள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.
- பிராமணீய கல்வி தொடர்பான நூல் (இளவரசர்கள் கற்க வேண்டிய பல்வேறு விடயங்கள் தொடர்பாக எழுதப்பட்ட நூல்) போன்ற இலக்கிய மூலாதாரங்களில் தகவல்கள் காணப்படுகின்றன.
- பௌத்த கல்வியானது ஆசிரியர் (குரு), மாணவப் பிக்குகள் எனும் அடிப்படையிலாகும்.
- இற்சிங்கின் அறிக்கையின்படி பிக்குகள் தவிர்ந்த இரு பிரிவினைச் சேர்ந்த இல்லறவாசிகள் இப்பௌத்த ஆராமைகளில் கல்வி கற்றமை.
  - இளம் மாணவர்கள் : துறவற வாழ்வை மேற்கொள்ளும் நோக்கில் கற்றவர்கள்.
  - பிரம்மச்சாரி : சமய மற்றும் லௌகீக பாடங்களைக் கற்ற இல்லறவாசிகள்.
- நாலந்தா, விக்கிரமசீலா, வலபீ, ஜகந்தலா முதலான பல்கலைக்கழகங்கள் இக்காலகட்டத்தில் முன்னேற்றம் அடைந்தமை. அசங்கர், வசுபந்து, தினாகர் முதலான அறிஞர்கள் இப்பல்கலைக் கழகங்களில் கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தமை.



விக்கிரமசீலா
*(source:http://dasdriftwood.com/vikramshila-university.php)*



நாலந்தா *(source:https://www. nalanda-india-yahoo.com)*

- கல்வி வளர்ச்சியுடன் பண்டிதர்களும் இலக்கிய நூல்களும் தோற்றம் பெற்றமை.
- சமஸ்கிருத மொழியில் பாரிய மாற்றம் ஏற்படல். (காவியமொழி)
- இக்காலத்தில் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள்
  - புராணங்கள்
  - தர்ம சாஸ்திரங்கள்

  உதாரணம்: கன்யாயன தர்ம சூத்திரம், தேவால தர்ம சாஸ்திரம், வியாச தர்ம சாஸ்திரம்

- சமய நூல்கள்
  உதாரணம்: ஈஸ்வர கிருஷ்ணனின் சங்கியாகாரிக்கா
  பதஞ்சலியின் யோக தர்ஷனம்
  தர்மகீர்த்தியின் நியாய பிந்து
  ஜைமினயின் விமங்ச சூத்திரம்
- லௌகீக நூல்கள்
  நாடக நூல்கள் - மாளவிகா அக்னிமித்திரம், விக்ரமோர்வஷி, சாகுந்தலம்
  காவிய நூல்கள் - இரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம், ரிதுசம்ஹாரம், கிராதார்ஜ்னி, சிசுபாலவடம்
  அறிவியல் நூல்கள் - அலங்காரம், சோதிடம், கணிதம், தர்க்க சாஸ்திரம் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்ந்த நூல்கள் இக்காலத்தில் எழுதப்பட்டன.

- குப்தர் காலத்தில் இருந்த நூலாசிரியர்கள்
  - காளிதாசர் : சாகுந்தலம், மாளவிகா அக்னிமித்திரம், இரகுவம்சம், விக்ரமோர்வசியம், மேகதூதம், குமார சம்பவம்.
  - பாரவி : இராதாஜுனியம், சிசுபாலவடம்
  - விசாகதத்தன்: முத்ராக்ஷசம், தேவிசந்திரகுப்தன்
  - அமரசிங்கம்: அமரகோஷம்
  - பட்டி : தசமுக்கவடபட்டி காவியம்
  - சூத்ரக : மிரிச்சகடிகம் (கடதாசிப்புலி)
  - பாச : 13 நாடக நூல்களை எழுதியமை
  - வராகமிகிரர் : பிரஹத் சம்ஹிதம் (கணிதம், வானவியல், தாவரவியல், புவியியல் என்பன பற்றி விளக்கப்படுகின்றமை)
  - ஆரியபட்டர் : சூரிய சித்தாந்தம் (வான சாஸ்திரம்)

- இரண்டாம் சந்திரகுப்தனின் அரச சபையில் நவரத்தினம் எனும் கவிஞர்கள் இருந்தமை. தன்வன்தரி, ஷெப்பனிக்கன், அமரசிங்கம், சங்கு, வேதாளபட்டர், கடகர்பரர், காளிதாசர், வராமிகிரர், வரருசி

### பொருளாதாரம்

- விவசாயமே பிரதான பொருளாதார மூலமாகும்.
  - நீர்ப்பாசன நிர்மாணம்
  - நெல், கோதுமை, பார்லி, பயறு, கௌபிப் பயிர்ச்செய்கை
  - பலசரக்குகள் பேரரசின் தெற்குப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டமை.
  - நில உரிமை முறையும் குத்தகைக்குப் பயிரிடும் முறையும் காணப்பட்டமை.

### வர்த்தகம்/வணிகம்

- குப்தப் பேரரசின் பொருளாதார ஆற்றல் வர்த்தகத்தில் தங்கியிருந்தது.
- ஏனைய நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட வியாபாரம்.
  - உரோம்: துணிவகை, வாசனைப் பொருட்கள், ஆடம்பரப் பொருட்கள் இறக்குமதி செய்யப் பட்டமை.
  - தென்கிழக்காசிய நாடுகளுடனான உறவு: புனான், சென்லா, சம்பா, காம்போஜம்
- உற்பத்தியும் விநியோகமும் வகுப்புவாரியாகக் கட்டமைக்கப்பட்டிருந்தமை.
- வர்த்தக வகுப்பினரின் தலைவர்கள் ஜேதக அல்லது பிரதான கைத்தொழிலாளர்கள் என்று குறிப்பிடப்பட்டதுடன், இது முக்கியமான பதவியாகவும் கணிக்கப்பட்டது.

**கைத்தொழில்**
- துணிவகைகளின் உற்பத்தி
- வட இந்தியாவில் பரவலாக இடம்பெற்றமை. பட்டு, பருத்தி, கம்பளி ஆகிய மூலப்பொருட்களைப் பாவித்து துணிகள் உற்பத்தி செய்யப்பட்டமை பற்றி, ஹியூன்சாங், இற்சிங் என்போர் குறிப்பிட்டுள்ளனர்.
- தோல் கைத்தொழில்
- கப்பல் கட்டுந்தொழில்

**குப்த அரச வம்சத்தின் வீழ்ச்சி**
- ஸ்கந்த குப்தருக்குப் பின்னர் குப்தப் பேரரசின் வீழ்ச்சி ஆரம்பமாகியமை.
- குப்தப் பேரரசின் வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் பல காரணங்கள் உள்ளன.
- பலவீனமான ஆட்சியாளர்கள் ஆட்சி பீடமேறியமை.
- ஆட்சி தொடர்பாக எழுந்த உட்பூசல்கள்.
- பிரதேச ஆட்சியாளர்களும் பலமடைந்தமை.
- பொருளாதார ரீதியாக ஏற்பட்ட வீழ்ச்சி (வெளிநாட்டு வர்த்தக வீழ்ச்சி)
- வெளிநாட்டு ஆக்கிரமிப்பு (ஹுணர்கள்)
- சிற்றரசுகள் உருவானமை. (தூர மாகாணங்களில்)

## கணிப்பீடு 01

- **பின்வரும் முறையில் பல்தேர்வு வினாக்களைத் தயாரித்துக் கணிப்பீடு செய்க.**

**இலக்கம் 01 - 08 வரையிலான ஒவ்வொரு வினாவுக்கும் முறையே ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் அவ்வாறு பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. சாரணாத் 2. அஜந்தா 3. எல்லோரா
    4. கார்லே 5. நாசிக் (...........)

02. 1. சாகுந்தலம் 2. ராஜதரங்கனி 3. மேகதூதம்
    4. ருதுசங்காரம் 5. இரகுவம்சம் (...........)

03. 1. உஜ்ஜேனி 2. நாலந்தா 3. விக்ரமஷீலா
    4. ஒதந்தபுரி 5. ஜலந்தலா (...........)

04. 1. மாளவிகாக்னிமித்ரம் 2. மகாபாரதம் 3. ருதுசங்காரம்
    4. சாகுந்தலம் 5. இரகுவம்சம் (...........)

05. 1. உருத்திரதேவன் 2. மிதிலன் 3. விஷ்ணுகோபன்
    4. நாகதத்தன் 5. சந்திரவர்மன் (...........)

06. 1. பாணபட்டர் 2. காளிதாசர் 3. பலபூதி

| | | | |
|---|---|---|---|
| | 4. ஆரியபட்டர் | 5. விசாகதத்தர் | (...........) |
| 07. | 1. உருத்திரதேவன் | 2. மிதிலன் | 3. விஷ்ணுகோபன் |
| | 4. நாகதத்தன் | 5. சந்திரவர்மன் | (...........) |
| 08. | 1. மேகதூதம் | 2. ருதுசங்காரம் | 3. சாகுந்தலம் |
| | 4. மிரிச்சகடிகம் | 5. இரகுவம்சம் | (...........) |

**இலக்கம் 09 - 10 வரையிலான வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து விடயங்களுள் ஒன்று தலைப்பிற்குப் பொருத்தமற்றதாகும். அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

09. இரண்டாம் சந்திரகுப்த மன்னன்
    1. குப்த வம்சத்தின் முதலாவது ஆட்சியாளனாவான்.
    2. அவன் சமுத்திரகுப்த மன்னனின் மகனாவான்.
    3. அவன் தேவகுப்தன் எனவும் அழைக்கப்பட்டான்.
    4. அவன் மேற்கு இந்தியாவில் சகர்களைத் தோற்கடித்தான்.
    5. இவன் விக்கிரமாதித்தன் என்ற பட்டத்தைச் சூடிக் கொண்டான். (...........)

10. ஹுணர் ஆக்கிரமிப்பு
    1. ஹுணர்கள் மிலேச்சர்கள் என சமகாலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.
    2. முதலாவது ஆக்கிரமிப்பு கி.பி. 458 ஆம் ஆண்டளவில் நடந்தது.
    3. ஹுணர்களுக்கு எதிரான யுத்தத்தில் ஸ்கந்தகுப்தன் மரணமடைந்தான்.
    4. இந்தியாவில் முதலாவது ஹுண ஆட்சியாளன் தோரமானன் ஆவான்.
    5. தோரமானன் மகாராஜாதிராஜன் என்ற பட்டப்பெயரால் அறிமுகமானான்.

(...........)

## கணிப்பீடு 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. பின்வரும் தலைப்புக்களின் கீழ் சமுத்திரகுப்த பேரரசனின் செயற்பாட்டை மதிப்பிடுக.
    1. திக் விஜயக் கொள்கை
    2. நிர்வாக முறை (14 புள்ளிகள்)

02. இரண்டாம் சந்திரகுப்த மன்னனின் செயற்பாட்டையும் சாதனைகளையும் மதிப்பீடு செய்க. (14 புள்ளிகள்)

03. குப்தப் பேரரசின் பலத்தைப் பாதுகாத்துக்கொள்வதில் ஸ்கந்த குப்த மன்னனின் முக்கியத்துவத்தை பரிசீலனை செய்க. (14 புள்ளிகள்)

## கணிப்பீடு 2

04. பின்வரும் இடங்களை இந்தியத் தேசப்படத்தில் குறித்துப் பெயரிட்டு, அவற்றில் இரண்டு விடயங்கள் தொடர்பாகச் சுருக்கக் குறிப்பெழுதுக.
    சாஞ்சி, நாலந்தா, பாடலிபுத்திரம், அஜந்தா, இந்துகுஷ், வங்காளம், காத்தியவார், காஞ்சி, சாரணாத், சிராவஸ்தி (14 புள்ளிகள்)

# 9. குப்தர் காலத்திற்குப் பின்னர் வட இந்தியாவின் அரசியல் நிலை

## அறிமுகம்

குப்த பேரரசு வீழ்ச்சியுற்றதுடன் வட இந்தியாவின் அரசியல் மோசமான ஒரு நிலையை அடைந்தது. குப்த பேரரசு காலத்தில் கீழ் நிலையில் இருந்த பிரதேச அரசுகள் பல மீண்டும் எழுச்சி பெறத் தொடங்கின. அவைகளில் தானேஸ்வர புஷ்யபூதி அரச வம்சமும் கங்கை நதிக்கரையில் கனோஜின் மொகாரிகர் அரச வம்சமும் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. இந்த இரு அரசுகளும் இணைந்ததால் கனோஜியை மையமாகக்கொண்டு பலம்வாய்ந்ததும், நிலையானதுமான பேரரசைக் கட்டியெழுப்ப புஷ்யபூதி அரச வம்சத்தைச் சேர்ந்த ஹர்ஷவர்த்தன மன்னனால் இயலுமானதாக இருந்தது. இவ்வாறு பலம்வாய்ந்த அரசாக எழுச்சிபெற்ற கனோஜியின் முக்கியத்துவம் ஹர்ஷவர்த்தனருக்குப் பின்னரும் குறையவில்லை. கனோஜியின் ஆட்சியைக் கைப்பற்றப் பாலர் - கூர்ஜர பிரதிகாரர், இராஷ்டிர கூடர் ஆகியோருக்கிடையே போட்டி ஏற்பட்டது. இதில் பாலர்களின் வலிமை மேலோங்கி இருந்தது. இப்பாட அலகில் புஷ்யபூதி அரச வம்சம் மற்றும் அவ்வம்சத்தைச் சேர்ந்த ஹர்ஷ வர்த்தன மன்னனின் சாதனைகள் என்பனவற்றில் கூடுதலான கவனம் செலுத்தப்படுகிறது. அவ்வாறே பாலர்களின் காலத்தில் பண்பாட்டு முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடப்படுவதுடன் ஏனைய அரச வம்சங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களும் உள்ளடக்கப்படுகின்றன.

**தேர்ச்சி** : • இந்தியாவின் வரலாற்று ரீதியான போக்குகள், வளர்ச்சி தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.1 குப்தர்களின் வீழ்ச்சியின் பின்னர் பிராந்திய அரசுகளின் நிர்வாக அலகுகளின் அதிகாரம் வளர்ச்சியடைந்த விதம் பற்றி எடுத்துக் காட்டுவார்.

**பாடவேளைகள்** : 35

**கற்றற்பேறுகள்** :
- குப்தர் காலத்தின் பின்னர் ஆட்சிக்கு வந்த பிரதேச நிருவாக அலகுகள் பற்றிய தகவல்களை முன்வைப்பார்.
- பிரதேச நிருவாக அலகுகள் இந்திய வரலாற்றில் செலுத்திய தாக்கத்தினை எடுத்துக்காட்டுவார்.
- குப்தர் காலத்தின் பின்னரான பிரதேச அரசுகளை இந்தியப் படத்தில் குறித்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## குப்தர் காலத்தின் பின்னர் வலிமை பெற்ற பிரதேச அரசுகள்

- வல்லபியின் மைத்திரியர்கள்
- கன்னோஜியின் மௌகாரீகர்கள்
- தானேஸ்வரத்தின் புஷ்யபூதி வம்சத்தின்

## கன்னோஜி வலிமை பெறல்

- புஷ்யபூதி பரம்பரையில் பிரபாகாவர்த்தனன் கன்னோஜியின் எழுச்சிக்கு அத்திவாரமிட்டமை.
- அவன் மால்வாவை வெற்றி கொண்டு பரம பட்டாரக்க மகாராஜாதி ராஜா எனும் பட்டத்தைப் பெற்றமை.

- மிகிரகுல என்னும் ஹூண ஆக்கிரமிப்பாளனுடனும் கௌட தேசத்துடனும் போர் செய்தமை.
- மௌகாரிக வம்ச கிரஹவர்மனுக்குத் தனது மகளான ராஜஸ்ரீயை மணம் முடித்து வைத்தல்.
- இதன் மூலம் தானேஸ்வரமும் கன்னோசியும் இணைதல்.
- தானேஸ்வரத்தை மத்திய நிலையமாகக்கொண்டு புஷ்யபூதி அரச வம்சம் வலிமை பெற்றமை.

## ஹர்ஷவர்த்தன மன்னன்

### மூலாதாரம்

- பாணபட்டரின் ஹர்ஷ சரிதம், ஹியுங்சாங்கின் குறிப்பு.

### அரசியல் பணிகள்

- வலபி, கூர்ஜர பாலர்களோடு போரிடல்.
- வாதாபியின் மேற்கு சாளுக்கியருடன் போரிடல்.
- சிந்துப் பிரதேசத்துடன் போரிடல்.
- கிழக்கிந்தியாவில் அவுத், கொங்கோத அரசுகளுடன் போரிடல்.
- அண்டைய நாடுகளான காமரூபம், காஷ்மீரம் ஆகிய நாடுகளுடன் நட்புறவைப் பேணியமை.
- குப்தர் காலத்தின் பின்னர் வட இந்தியாவை ஒன்றிணைத்த இறுதி மன்னன்.
- கன்னோசியை முதன்மையாகக்கொண்டு ஆட்சியை முன்னெடுத்துச் சென்றமை.
- 'சகல உத்திராபாதநாதர்' என ஹர்ஷரைப் பற்றி ஹியூன்சாங் குறிப்பிடுகின்றமை.
- ஒழுங்கமைக்கப்பட்ட அரச நிர்வாக முறையைக் கட்டியெழுப்பியமை.
- சீனாவுடன் தொடர்பினை ஏற்படுத்தியமை.
- பாரிய பணிகளைப் புரிந்த ஒரு மன்னராக இருந்த போதிலும் மூலாதாரங்களின் பற்றாக்குறையினால் வரலாற்றில் அவருக்கு உரிய மதிப்பீடு கிடைக்கப்பெற்றில்லை.

### சமய, இலக்கிய, கல்வி நடவடிக்கைகள்

- ஆரம்பத்தில் இந்து பக்தனாகவும் பின்னர் பௌத்தனாகவும் செயற்படல்.
- சமய சகிப்புத்தன்மைக் கொள்கை.
- கன்னோஜியிலும் பிரயானகயிலும் சமய மகாநாட்டை நடாத்தியமை.
- ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் பெருந்தானத்தை நடத்தியமை. (துலாபாரக் கொடை)
- தூபிகள், விகாரைகள் அமைக்கப்பட்டமை.
- கல்வியாளர்களுக்கு அனுசரணை வழங்கியமை.
- நாட்டு வருமானத்தில் 1/4 பங்கு எழுத்தாளர்களுக்கு வழங்கப்பட்டமை.
- நாலந்தா, தக்ஷீலா, வலபி முதலான கல்வி மத்திய நிலையங்களுக்கு அனுசரணை வழங்கியமை.
- மன்னனும் நூல்களை எழுதியமை. (ரத்னாவலி, பிரியதர்ஷிக்கா, நாகநந்த)
- மன்னனின் அனுசரணையால் கல்விமான்கள் பல இலக்கிய நூல்களை எழுதியமை.
  உதாரணம்: பாணர் - ஹர்ஷ சரிதம், காதம்பரி, சண்டி ஹத்தகய, பார்வதி
  மயுர - சூர்ய சதகய
- ஹர்ஷ சரிதத்தில் அவர் மன்னராகும்வரை விவரிக்கப்பட்டுள்ளது. மன்னரானதுடன் நூல் முற்றுப் பெறுகின்றது. இதனால் இவரைப் பற்றிய தகவல்கள் குறைவாயுள்ளன.

### பாலரது ஆட்சிக்காலத்தில் பண்பாட்டு முக்கியத்துவம்

- இந்தியாவின் இறுதி பௌத்த பேரரசராகும்.
- சசாங்க மன்னனின் மறைவால் பலவீனமடைந்த வங்காளத்தில் பாலவம்சத்து கோபாலனால் ஆட்சி அமைக்கப்பட்டது.
- தர்மபால மன்னனால் பால வம்சத்தவரின் கீழ் வட இந்தியாவில் அரசு ஒன்று கட்டியெழுப்பப்படல்.

- தர்மபால மன்னன் பரமேஸ்வரன், பரம பட்டாரக்க, மகா ராஜாதிராஜா போன்ற விருதுப் பெயர்களால் அறிமுகமானமை.
- முதலாம் மஹிபாலன், இராஜேந்திர சோழன் என்போரால் தோற்கடிக்கப்பட்டதுடன் பாலரது அரசு முடிவுற்றமை.
- எவ்வாறெனினும் இந்த ஆட்சியாளர்களால் பண்பாட்டுக்குப் பாரிய சேவைகள் மேற்கொள்ளப் பட்டமை.
- பால மன்னர்கள் புத்த சமயத்திற்குப் பெரும் அனுசரணை வழங்கியமை.
- கோபால மன்னன் நாலந்தாவில் விகாரையொன்றை நிறுவியமை.



ஒதன்தபுரி *(source:http://www.letsseeindia.com)*

- விக்ரமஷீலா, ஒதன்தபுரி உட்பட பௌத்த கல்வி நிலையங்கள் 50 இற்கும் மேற்பட்டவைகளை நிறுவியமை.
- மதம் பரப்பும் பொருட்டு அடிச என்ற பிக்குவைத் திபேத்துக்கு அனுப்பியமை.
- இவ்வாறு மகாயான புத்த சமயத்தின் சிறப்பினை திபேத்திலும், தென் கிழக்கு ஆசியாவிலும் பரவச் செய்தமை.
- தர்மபால மன்னன் நாலந்தா விகாரைக்குக் கிராமங்களை வழங்கியமை.
- கலை வளர்ச்சி
- சிற்பம், செதுக்கல் என்பன இலங்கை, நேபாளம், திபெத், பர்மா, இந்தோசீனா, இந்தோனேசியா போன்ற நாடுகளின் கலைகளில் தாக்கம் செலுத்தியமை.
- சமஸ்கிருத இலக்கியம் வளர்ச்சியுற்றமை.
- வங்காள மொழியின் எழுச்சி.
- பாவதேவபட்ட, ஜிமுத்தவாஹன முதலான பண்டிதர்கள் தோன்றியமை.
- இந்து சமயத்திற்கு அனுசரணை வழங்கியதுடன் கோயில்கள் அமைத்தல்.

குப்தரது காலத்திற்குப் பின் இந்தியாவின் அரசியல் நிலையைக் காட்டும் படம்

## கூர்ஜர பிரதிகாரர்

- மேற்கு இந்தியாவில் குஜராத், இராஜபுத்தானம் ஆகிய பிரதேசங்களில் ஆட்சியைப் பரவலடையச் செய்தமை.
- ஹரிச்சந்திரன் இதன் ஆரம்ப ஆட்சியாளனாவான்.
- இதன் பின்னர் ஆட்சிக்கு வந்தர்வகளில் முதலாம் நாக பட்டன், வத்சராஜன், இரண்டாம் நாகபட்டன், முதலாம் போஜன், மகேந்திரபாலன், திரிலோச்சனபாலன் என்போர் குறிப்பிடத்தக்கவர்க ளாவர்.
- கன்னோசியின் ஆதிக்கத்தின் பொருட்டு இவர்கள் பாலர், இராஷ்டிரகூடருடன் போரிட்டமை.
- ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்ட காலப்பகுதியில் வட இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தியமை.
- பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட முஸ்லிம் ஆக்கிரமிப்புக்களிலிருந்து வட இந்தியாவைப் பாதுகாத்தமை.
- கஸ்னி முகமதுவின் ஆக்கிரமிப்புப் படையெடுப்புக்கள் காரணமாக திரிலோச்சனபாலனின் ஆட்சிக்காலத்தில் பிரதிகாரரின் வலிமை வீழ்ச்சியடைந்தமை.

## இராஷ்டிரகூடர்

- தந்திதுர்கவின் அரச வம்சம் தோற்றம் பெற்றமை.
- தந்திதுர்க்கன், டிராவன், மூன்றாம் கோவிந்தன், மூன்றாம் இந்திரன், மூன்றாம் கிருஷ்ணன், ஐந்தாம் அமோகவர்ஷன் என்போர் இந்த அரச வம்சத்தின் முக்கிய ஆட்சியாளர்களாவர்.
- கன்னோசியின் ஆதிக்கத்தின் பொருட்டு இந்த ஆட்சியாளர்கள், பாலர், கூர்ஜர பிரதிகாரர் ஆகியோருடன் போரிட்டமை.
- ஐந்தாம் அமோகவர்ஷனின் பின்னர் இராஷ்டிரகூடரின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
- கன்னோசியின் ஆதிக்கத்தின் பொருட்டு கூர்ஜர பிரதிகாரர், இராஷ்டிரகூடர், பாலர் என்போரிடையே ஏற்பட்ட போர்கள்.

## கணிப்பீடு 01

- **பின்வரும் முறையில் பல்தேர்வு வினாக்களைத் தயாரித்துக் கணிப்பீடு செய்க.**

**இலக்கம் 01 - 02 வரையிலான ஒவ்வொரு வினாவும் ஏதோவொரு காரணத்தால் ஏனையவற்றுடன் பொருந்தாது. அவ்வாறு பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. வத்சராஜன் 2. டிராவன் 3. நாகபட்டா
    4. ஹர்ஷவர்தனன் 5. தர்மபாலன் (...........)

02. 1. நாலந்தா 2. விக்ரமஷீலா 3. ஜகத்தலா
    4. சோமநாத் 5. ஒதத்தபுரி (...........)

**இலக்கம் 03 - 06 வரையிலான வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

03. இராஷ்டிரகூடர்களின் தலைநகர் எது?
    1. மான்யகேதம் 2. மதுரை 3. வாதாபி
    4. தஞ்சாவூர் 5. காவேரி (...........)

04. ஹர்ஷவர்த்தனரின் ஆட்சிக்காலத்தைப் பற்றி அறிய உதவும் மூலாதாரம் எது?
    1. சூரிய சித்தாந்தம் 2. மத்த விலாச பிரஹசன 3. முத்ரா ராக்ஷச
    4. ஹர்ஷ சரிதம் 5. விபாஷ சூத்ர (...........)

05. கூர்ஜர பிரதிகாரரின் ஆரம்ப ஆட்சியாளன் யார்?
    1. முதலாம் நாகபட்டா 2. ஹரிச்சந்தர பிராமணன் 3. மகேந்திரபாலன்
    4. மஹிபாலன் 5. திரிலோச்சனபாலன் (...........)

06. பாலரது காலத்தில் சிற்பக்கலையின் தாக்கம்இலங்கைக்கும் கிடைத்தமையை உறுதி செய்யும் நிர்மாணம் பின்வருவனவற்றில் எது?
    1. அவுக்கண சிலை 2. அபயகிரி சமாதி சிலை
    3. மனிதனும் குதிரைத்தலையும் 4. புதுருவல அவலோகிதேஸ்வர சிலை
    5. கல்விகாரையின் அமர்ந்த சிலை (...........)

**இலக்கம் 07 - 10 வரையிலான வினாக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள (A), (B), (C), (D) ஆகிய விடைகளில் ஒன்றோ அதற்கு மேற்பட்டவையோ சரியானது, சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்க.**

(A) யும் (B) யும் சரியாயின் .................. 1 எனவும்,
(B) யும் (C) யும் சரியாயின் .................. 2 எனவும்,
(C) யும் (D) யும் சரியாயின் .................. 3 எனவும்,
(A) யும் (C) யும் சரியாயின் .................. 4 எனவும்,
ஒரு விடையோ இரண்டிற்கு மேற்பட்ட விடைகளோ சரியாயின் 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.

07. புஷ்யபூதி அரசவம்சம்
   A. ஆரம்ப ஆட்சியாளன் ராஜ்யவர்தன மன்னன்.
   B. வலிமையான மன்னன் ஹர்ஷவர்த்தனன் ஆவான்.
   C. ஆரம்ப யுகத்தில் நிருவாக மத்திய நிலையம் தானேஸ்வரமாகும்.
   D. இறுதி ஆட்சியாளன் பிரபாகரவர்த்தனன் ஆவான்.

(...........)

08. கூர்ஜதா பிரதிகாரர்
   A. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வட இந்தியாவை முஸ்லிம்களின் ஆக்கரமிப்பி லிருந்து பாதுகாத்தமை
   B. திரிலோச்சனபாலன் இந்த வம்சத்தின் இறுதி ஆட்சியாளனாவான்.
   C. பௌத்த கல்வி நிறுவனங்கள் பல கட்டியெழுப்பப்பட்டமை.
   D. சமஸ்கிருத இலக்கிய வளர்ச்சிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை.

(...........)

09. பால அரசவம்சம்
   A. கோபாலன் ஆரம்ப ஆட்சியாளானாக இருந்தமை.
   B. பௌத்த கல்வி நிலையங்கள் அழிக்கப்பட்டன.
   C. தர்மபால மன்னன் பலம் வாய்ந்த ஆட்சியாளனாவான்.
   D. ஐந்தாம் அமோகவர்ஷனின் பின்னர் இந்த அரசவம்சம் அழிவுற்றது.

(...........)

10. பாலரது ஆட்சிக்காலத்தின் பண்பாட்டு முக்கியத்துவம்
   A. விக்ரமஷீலா பல்கலைக்கழகம் இக்காலத்தில் ஆரம்பமானது.
   B. மகாயான பௌத்தத்தில் பாரிய முன்னேற்றம் காணப்பட்டது.
   C. பிரயாகையில் சமய மகாநாடு நடாத்தப்பட்டது.
   D. வங்காளமொழி சிறப்புப் பெற்றது.

(...........)

## கணிப்பீடு 2

• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

01. குப்தர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வட இந்தியாவில் நிலவிய அரசியல் நிலையில் துல்லியமாகத் தெரியும் இயல்புகளைப் பரிசீலனை செய்க.

02. ''ஹர்ஷவர்த்தன மன்னன் யுத்தத்திலும், சமாதானத்திலும் சிரேஷ்டமானவனாக விளங்கினான்.''

(i) ஹர்ஷவர்த்தனரின் அரச வம்சத்தைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

(ii) ஹர்ஷவர்த்தனரின் பின்னர் ஆட்சிக்கு வந்தவர் யார்?. (01 புள்ளி)

(iii) ஹர்ஷவர்த்தன மன்னர் தொடர்பான விபரங்களைக் கற்றறிவதற்குரிய இரண்டு மூலாதாரங்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iv) மேற்கூறப்பட்ட கூற்றினைக் கவனத்திற்கொண்டு ஹர்ஷவர்த்தனரின் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட அரசியல், பண்பாட்டு முக்கியத்துவத்தினை முன்வைக்குக. (10 புள்ளிகள்)

03. புஷ்யபூதி அரச பரம்பரையின் கீழ் கன்னோஜியின் அதிகார வளர்ச்சியின் பிரதான கட்டங்களைப் பரிசீலிக்குக. (14 புள்ளிகள்)

04. ஹர்ஷவர்த்தன ஆட்சிக்காலத்தின் பின்னர் வட இந்தியாவில் ஆட்சிக்கு வந்த அரச வம்சம் தொடர்பாக விமர்சிக்குக. (14 புள்ளிகள்)

05. பால அரச வம்சத்தின் பண்பாட்டு முக்கியத்துவத்தினைப் பின்வரும் தலைப்புக்களின் கீழ் பரிசீலிக்குக.
   i. மகாயான பௌத்தத்தின் பரவல்
   ii. கல்வி, இலக்கிய வளர்ச்சி
   iii. கட்டிடக்கலையின் முன்னேற்றம்

(14 புள்ளிகள்)

## கணிப்பீடு 3

பின்வரும் இடங்களை இந்தியப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

| | | |
|---|---|---|
| i. கன்னோஜி | ii. புருஷபுரம் | iii. ஐகோலே |
| iv. நர்மதாநதி | v. இந்திரப்பிரஸ்தம் | vi. தானேஸ்வரம் |
| vii. உஜ்ஜேனி | viii. மால்வா | ix. பிரயாகை |
| x. பாருகச்ச | | |

(18 புள்ளிகள்)

# 10. அராபிய துருக்கிய ஆக்கிரமிப்பும் இந்திய அரசியல் நிலைமையும்

## அறிமுகம்

கி.பி. எட்டாம் நூற்றாண்டு வரை அராபியர்கள் வர்த்தக இடைத்தரகர்ளாக இந்தியாவுடன் சமாதான தொடர்பினைக் கட்டியெழுப்பியிருந்தனர். எனினும் முஹம்மது நபியின் பின்னர் இஸ்லாத்தினதும் முஸ்லிம் பேரரசுகளினதும் பாதுகாவலர்களாக விளங்கிய கலிபாக்கள், சிரியா, ஈராக், எகிப்து, பாரசீகம், கொரோசா, அனடோலியா வரை தமது ஆட்சியைப் பரப்பினர். கி.பி. 8 ஆம் நூற்றாண்டாகும்போது அவர்களது ஆட்சி மேலும் பரவலடைந்து வட ஆபிரிக்கா, ஸ்பானியா, துருக்கி வரை பரவி பாரிய பேரரசாக மாறியது. அதன் விளைவாக அராபியரால் இந்தியாமீது ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டது. மதீனாவின் இரண்டாவது கலிபாவான உமரின் காலத்தில் முதலாவது இந்திய ஆக்கிரமிப்பு நடைபெற்றது.

**தேர்ச்சி** : • இந்தியாவின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாகப் புரிந்துணர்வுடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 10.1 முஸ்லிம் ஆக்கிரமிப்புக்கு அடிப்படை அமைக்கப்பட்ட விதத்தினை விபரிப்பார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- இந்தியாமீது மேற்கொள்ளப்பட்ட அராபிய துருக்கிய ஆக்கிரமிப்புக் களை விளக்குவார்.
- அராபிய துருக்கிய ஆக்கிரமிப்பின் மூலம் இந்திய வரலாற்றில் ஏற்பட்ட தாக்கத்தினை எடுத்துக் காட்டுவார்.
- அராபியரும் துருக்கியரும் கைப்பற்றிய பிரதேசங்களை இந்தியப் படத்தில் குறித்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## இந்தியா மீது மேற்கொள்ளப்பட்ட அராபிய, துருக்கிய ஆக்கிரமிப்புக்களுக் கான காரணங்கள்

- ஆரம்பத்தில் அராபியர் மேற்கு - கிழக்கு வர்த்தகத்தில் இடைத்தரகர்களாக நின்று செயற்பட்டமை.
- இஸ்லாம் மதத்தின் தோற்றத்தின் பின்னர் அதன் பரவலின் பொருட்டு செயற்பட்டு அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டமை.
- மதீனாவின் இரண்டாம் கலிபாவான உமரின் காலத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து, இந்தியாமீது மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புக்குப் பிரதான காரணங்கள் சில உள.
  - தேபால் அரசனை வெற்றிகொள்ளல்.
  - வர்த்தக நடவடிக்கைகளின் தேவை
  - கலிபாக்களின் அரசியல் செயற்பாடு
  - இந்தியாவின் செல்வங்களைப் பெற்றுக்கொள்ளல்.
- அக்காலத்தில் இந்தியாவில் நிலவிய பலவீனமான அரசியல்நிலை அராபிய ஆக்கிரமிப்பாளர் களுக்குச் சாதகமாக அமைந்தமை.
- கடற்கொள்ளையரிடமிருந்து தமது மக்களை மீட்டெடுப்பதற்காகவே ஈராக்கின் ஆட்சியாளர் படையெடுத்ததாக கி.பி. 735 இல் எழுதப்பட்ட ‘சாஹ்நாமா’ எனும் நூலில் கூறப்பட்டுள்ளது.

- இந்துக்களிடையே நிலவிய நம்பிக்கைகளும் பழக்கவழக்கங்களும் அவர்களின் அரசியல் ஆதிக்கத்தை நலிவடையச் செய்தமை பின்வரும் கூற்றின் மூலம் உறுதி செய்யப்படுகிறது:
  ''அவர்களது நாட்டைப் போன்ற நாடோ, அவர்களது அரசரைப் போன்ற அரசரோ, அவர்களது விஞ்ஞானத்தைப் போன்ற விஞ்ஞானமோ வேறு எங்கும் இல்லை என இந்துக்கள் நினைக்கின்றனர்.''
  - அல்புறூனி

## சமகால இந்தியாவின் அரசியல் நிலை

- 11 ஆம் நூற்றாண்டாகும்போது இந்தியா பல சிறு அரசுகளாகப் சிதறுண்டு காணப்பட்டது. (காபூல், பெஷாவார், காஷ்மீர், லாஹோர், முல்தான், தில்லி, கன்னோசி, உஜ்ஜெயினி, பத்டெல்கான்ட், வங்காளம், குஜராத், சிந்து)
- இதனால் நலிவுற்றுப் பலவீனமடைந்த அரசியல் நிலை காணப்பட்டமை.
- கி.பி. எட்டாம் நூற்றாண்டில் ஈராக்கின் ஆட்சியாளனான அல் - ஹஜ்ஜாஜின் தலைமையில் முஹம்மது-இபின்-காசிம் சிந்துவையும் முல்தானையும் ஆக்கிரமிக்கும்போது அப்பிரதேசத்தை தாஹீர் எனும் பிராமண அரசனொருவன் ஆட்சி செய்தமை.
- கங்கைச் சமவெளியில் கன்னோசியை மையமாகக் கொண்டு கூர்ஜர - பிரதிகாரர் ஆட்சியைப் பரவலடையச் செய்தமை.
- சிந்து கங்கைப் பிரதேசம் இஹத்தாவ ஷாஹி எனும் இந்து அரசனால் நிருவகிக்கப்பட்டமை.
- முஸ்லிம்களின் ஆட்சி கைபர் கணவாயைத் தாண்டிப் பரவுவதைத் தடுக்க ஷாஹிகள் கோட்டைகள் அமைத்தமை.
- ஷாஹி வம்சத்தின் ஜயபாலன் வட இந்தியாவின் ஏனைய முஸ்லிம் எதிர்ப்பு அரசர்களின் துணையுடன் அரசியல் குழுவைக் கட்டியெழுப்பியமை.
- ஷாஹிகளின் அரசுக்கு வடக்கில் அமைந்த காஷ்மீரில் லோரி எனும் அரசர்கள் சில சந்தர்ப்பங்களில் அராபியருக்குச் சார்பாக செயற்பட்டமை.
- சமகால வட இந்தியாவின் அரசியலில் முக்கிய சக்தியாக இருந்த இராஜபுத்திர வம்சத்தினரிடையேயும் ஒற்றுமையின்மை காரணமாக சில சந்தர்ப்பங்களில் அராபியருக்கு உதவியமை.

## இந்தியாவுக்கு ஏற்பட்ட அராபிய, துருக்கிய ஆக்கிரமிப்புக்கள்

- கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் அராபியர், இந்தியா மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்புத் தோல்வியடைந்தமை.

  உதாரணம்:
  - கி.பி. 637 ஆம் ஆண்டு அராபியர் பம்பாய், பின்னர் புரோச் தெபால்மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்புத் தோல்வியடைந்தமை.
  - அந்த அபகீர்த்தியை நீக்கும்பொருட்டு தரை வழியில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புத் தோல்வியடைந்தமை.
  - கி.பி. 660-750 இற்கும் இடைப்பட்ட காலத்தில் காபூலின் செல்வத்தைச் சூறையாட மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புத் தோல்வியடைந்தமை.
- கி.பி. 8 ஆம் நூற்றாண்டு மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புத் தோல்விகண்டமை.
- டமஸ்கசைத் தலைநகராகக் கொண்ட உமையாக் கலிபாக்கங்கள் இந்தியாவைப் பல முறை ஆக்கிரமித்தமை.
- இவை தவிர கஸ்னி முஹம்மது தனது 25 வருட ஆட்சிக்காலத்தில் 17 முறை இந்தியாவை ஆக்கிரமித்தமை.
- இந்த ஆக்கிரமிப்பின் நோக்கம் இந்தியாவைக் கைப்பற்ற வேண்டுமென்பது அல்ல. மாறாக செல்வத்தை சூறையாடிக் கோயில்களை அழித்து இஸ்லாம் மதத்தைப் பரப்ப வேண்டும் என்பதாகும்.
- கி.பி. 1000. கி.பி. 1001 ஆகிய ஆண்டுகளில் பெஷாவார் மீது இரு ஆக்கிரமிப்புக்களை மேற்கொண்டு ஷாஹியின் தலைநகரான வாஹின்ட்டை தன்னடிப்படுத்தியமை.

- கி.பி. 1011 ஆம் ஆண்டு தானேஸ்வரத்தைக் கைப்பற்றி பஞ்சாபைத் தன்னடிப்படுத்தி அதனை முஸ்லிம்களின் மத்திய நிலையமாக்கியமை.
- கி.பி. 1025 ஆம் ஆண்டு சோமநாத் ஆலயத்தைச் சூறையாடியதுடன் 1027 ஆம் ஆண்டு முல்தானை ஆக்கிரமித்து முஸ்லிம் ஆட்சியை நிறுவியமை.
- கஸ்னி முஹம்மதுவின் ஆக்கிரமிப்பின் 15 ஆண்டுகளுக்குப் பின்னர் கோரி முஹம்மது கங்கை நதி வரை ஆக்கிரமிப்பை மேற்கொள்ளல்.
- கி.பி. 1192 ஆம் ஆண்டு 2 ஆம் தாராயின் போரில் பிரித்துவிராஜனைத் தோற்கடித்து அஜ்மீர், தில்லி என்பனவற்றைக் கைப்பற்றி வட இந்தியாவில் ஆட்சிப் பரவலை ஆரம்பித்தமை.
- இவை தவிர கன்னோஜி, குஜராத், புன்தெல்காண்ட், பிஹார் என்பனவற்றைக் கைப்பற்றியமை.
- கோரி முஹம்மது மத்திய ஆசியா மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பில் தோல்வியடைந்து 1206 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டமை.
- கி.பி. 1206 ஆம் ஆண்டு குத்புதீன் ஐபெக் எனும் அடிமை அரச வம்சம் தில்லியை மையமாகக்கொண்டு கட்டியெழுப்பப்பட்டமை.
- பின்னர் பாக்தாத்தின் கலிபா ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று இந்திய முஸ்லிம் ஆட்சி ஆரம்பமாகியமை. அது தில்லி சுல்தான் அரசு எனப்பட்டது.



**குத்துப் உத்தீன் ஐபெக்**

*(suorce:http://www.vivacepanorama.com)*

### அராபிய, துருக்கிய ஆக்கிரமிப்புக்களினால் இந்திய வரலாற்றில் ஏற்பட்ட தாக்கம்

- இஸ்லாம் மதம் பரவியமை.
- அராபிய அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் தாக்கத்திற்கு இந்தியா உள்ளானமை.
- இந்தியப் பண்பாடு அராபியப் பிரதேசங்களில் பரவியமை.
- கைபர் கணவாய் திறக்கப்பட்டமை.
- இந்தியாவில் பெரும்பான்மையான இந்துக்கள் அழிவுற்றமை.
- இந்தியப் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமை.

## கணிப்பீடு 01

- **பின்வரும் முறையில் பல்தேர்வு வினாக்களைத் தயாரித்துக் கணிப்பீடு செய்க.**

**முதலாம் வினாவில் கொடுக்கப்பட்டுள்ள ஐந்து பெயர்களில் பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. முஹம்மது பின் காசிம் 2. சபுக்திஜின் 3. அல்புறூனி
4. கஸ்னி முஹம்மது 5. கோரி முஹம்மது (...........)

**இலக்கம் 02 - 03 வரையிலான வினாக்களுக்கான சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

02. கி.பி. 712 ஆம் ஆண்டு சிந்துவை ஆக்கிரமித்த முதலாவது அராபிய ஆக்கிரமிப்பாளன்
1. கஜ்ஜாஜ் இப்னு யூசுப் 2. முஹம்மது பின் காசிம் 3. கஸ்னி முஹம்மது
4. ஷிஹாப் உத்தின் 5. குத்புத்தீன் ஐபெக் (...........)

03. பக்தாத் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று, இந்தியாவில் முஸ்லிம் ஆட்சிக்கு அடித்தளமிடப் பட்ட ஆண்டு
1. கி.பி. 712 2. கி.பி. 997 3. கி.பி. 1176
4. கி.பி. 1206 5. கி.பி. 1208 (...........)

**04 ஆம் 05 ஆம் வினாக்களில் ஒவ்வொரு தலைப்பின் கீழும் முறையே ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்று தலைப்புடன் பொருந்தாது. அதனைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

04. இந்தியா மீதான அராபிய ஆக்கிரமிப்பு
1. முதலாவது ஆக்கிரமிப்பு கி.பி. 637 ஆம் ஆண்டு நடைபெற்றது.
2. அவர்களது முதல் முயற்சி காபூலையும் சிந்துவையும் வெற்றி கொள்வதாகும்.
3. செல்வத்தைச் சூறையாடுவதே ஆக்கிரமிப்பாளர்களின் நோக்கமாகும்.
4. அவர்கள் முதலில் சிந்து தேசத்தைக் கைப்பற்றினர்.
5. சோழர்களது உதவி கிடைக்காமையாலேயே இந்தியர்கள் தோல்வியடைந்தனர்.
(...........)

05. கோரி முஹம்மதுவின் ஆக்கிரமிப்பு
1. கஸ்னி முஹம்மதுவின் மரணத்தின் பின்னர் அவன் கோரியின் ஆட்சியாளனாதல்.
2. கி.பி. 1182 ஆம் ஆண்டளவில் சிந்துவின் ஆட்சியாளனாதல்.
3. வெற்றிக்கு வாஹமானர்களின் உதவி துணை புரிந்தமை.
4. செல்வத்தைக் கொள்ளையிடுவதும் பிரதேசங்களைக் கைப்பற்றுவதுமே ஆக்கிரமிப்பின் முக்கிய நோக்கமாகும்.
5. அவனது ஆக்கிரமிப்பு தில்லியில் சுயாதீன முஸ்லிம் அரசொன்று தோன்றுவதற்கு வழிவகுத்தது.
(...........)

**இலக்கம் 6 - 10 வரையுள்ள வினாக்களில் இரண்டு கூற்றுக்கள் வீதம் தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினா தொடர்பாகவும் உள்ள கூற்றுச் சோடிக்குக் கீழே உள்ள அட்டவணையில் காணப்படும் 1, 2, 3, 4, 5 என்பனவற்றில் மிகவும் பொருந்துவது எதுவென்பதைத் தெரிந்து, அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| 1. | சரியானது | பிழையானது |
| 2. | சரியானது | சரியானது |
| 3. | பிழையானது | பிழையானது |
| 4. | பிழையானது | சரியானது |
| 5. | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதலாவதை மேலும் தெளிவு படுத்துகிறது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று | |
|---|---|---|---|
| 6 | சிந்துவில் அராபியரது ஆட்சிக்காலத்தில் இந்து சமயம் தடை செய்யப்பட்டதுடன், இந்துக்கள் கட்டாயமாக இஸ்லாம் மதத் திற்கு மாற்றப்பட்டனர். | அராபியர் இந்தியாவில் வானியலையும், கணிதத்தையும் கற்றதுடன், சில இந்து சமய நூல்கள் அராபிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. | (.........) |
| 7 | சிந்துப் பிரதேசத்திற்கு அராபிய ஆக்கிர மிப்பு போலன் கணவாய் வழியாக நடை பெற்றது. | முதலாவது துருக்கிய ஆக்கிரமிப்பு முஹம்மது பின் காசிமினால் மேற்கொள் ளப்பட்டது. | (.........) |
| 8 | கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் முஹம்மது பின் காசிமின் தலைமையில் கீழ் வருகை தந்த அராபியர் சிந்து, முல்தான் என்பனவற்றைக் கைப்பற்றினர். | அராபியரது ஆட்சியின் காரணமாக அராபிய நாடுகளுடனான வர்த்தகம் வலிமை அடைந்தமை. அராபியர்களுக்கு இந்தியப் பிரதேசங்களில் குடியேறுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமை. வைத்தியம், சோதிடம் தொடர்பான இந்திய நூல்கள் அரபுமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. | (.........) |
| 9 | கஸ்னி முஹம்மது போலான் கணவாயை வெற்றி கொண்டமையானது முஸ்லிம் உலகிற்கு இந்தியாவின் கதவு திறக்கப் பட்டமையாகும். | குதுப்-உத்-தீன் ஐபெக் பக்தாத் ஆட்சியி லிருந்து விடுதலை பெற்று இந்தியாவில் சுயாதீன ஆட்சிக்கு அடித்தளம் அமைத்தார். | (.........) |
| 10 | பத்தாம் நூற்றாண்டு முதற்கொண்டு பதினொறாம் நூற்றாண்டு வரை தக்கணம் சாளுக்கியரின் ஆட்சியின் கீழ் இருந்தது. | அவர்கள் அராபியரின் இந்திய ஆக்கிர மிப்பைப் பின்தள்ளினர். | (.........) |

## கணிப்பீடு 2

• **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. கி.பி. 1206 ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்தியா மீது மேற்கொள்ளப்பட்ட துருக்கிய - ஆப்கானிஸ்தானிய ஆக்கிரமிப்பினைப் பரிசீலனை செய்க.

02. கஸ்னி முஹம்மதுவினதும் கோரி முஹம்மதுவினதும் ஆக்கிரமிப்புக்கள் வெற்றி பெற்றமைக்கான காரணங்களை விபரிக்குக.

03. சிந்து மீது அராபியர் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு தொடர்பான தகவல்களைப் பரிசீலனை செய்க.

04. கஸ்னி முஹம்மதுவின் ஆக்கிரமிப்பினை அண்டிய காலப்பகுதியில் வட இந்தியாவில் நிலவிய அரசியல் நிலமை பற்றிய விபரங்களை முன்வைக்குக.

05. தில்லி சுல்தான் பேரரசு அமைக்கும் வரையில் வட இந்தியா மீதான முஸ்லிம் ஆக்கிரமிப்பு தொடர்பாகப் பகுப்பாய்வு செய்க.

## கணிப்பீடு 3

பின்வரும் இடங்களை இந்தியப் படத்தில் குறித்துப் பெயரிட்டு, அவற்றில் இரண்டிற்கு வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

| | | |
|---|---|---|
| i. முல்தான் | ii. கஸ்னி | iii. கைபர் |
| iv. தில்லி | v. சோமநாத் | vi. பெஷாவார் |
| vii. சுலைமான் | viii. ஹேராத் | |

# 11. தென்னிந்திய அரசியல் பின்னணி

## அறிமுகம்

குப்தப் பேரரசின் வீழ்ச்சியுடன் கி.பி. ஆறாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தக்கணத்திலும், அதன் தெற்குப் பிரசேத்திலும் சுதந்திரமான அரசுகள் சில தோற்றம் பெற்றன. அவற்றில் காஞ்சியைத் தலைநகராகக்கொண்ட பல்லவ அரசு, வாதாபியைத் தலைநகராக் கொண்ட சாளுக்கிய அரசு, மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய அரசு என்பன முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. பிற்காலத்தில் அதாவது கி.பி. 820 ஆம் ஆண்டளவில் பாண்டியரின் கீழ் இருந்த தஞ்சாவூர் பல்லவனான விஜயாலயனால் கைப்பற்றப்பட்டதுடன் சோழப் பேரரசு ஆரம்பமானது.

இந்த அரச வம்சங்களில் பல்லவர்கள் தெற்கே ஆட்சியைப பரவச் செய்யும் பொருட்டுப் பாண்டிய, சாளுக்கிய அரசுகளுடன் போர் செய்தனர். பல்லவப் பண்பாடு இந்திய வரலாற்றில் பெரும் தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. இவ்விதமாகப் பல்லவர்கள் சமயம், பண்பாடு என்பனவற்றில் ஏற்படுத்திய மறுமலர்ச்சி தொடர்பான தகவல்களைக் கற்பது இப்பாட அலகில் எதிர்பார்க்கப்படுகிறது.

வாகடகர்களின் ஆட்சி நலிவுற்றதுடன் சாளுக்கியர் எனும் புதிய அரச வம்சம் எழுச்சியுற்றது. சாளுக்கியர், மேலைச் சாளுக்கியர், கீழைச் சாளுக்கியர் எனும் இரு பிரிவுகளாக எழுச்சியுற்றனர். வாதாபி எனும் பாதாமியைத் தலைநகராகக் கொண்ட சாளுக்கியரும் வேங்கியைத் தலைநகராகக் கொண்ட கீழைச் சாளுக்கியரும் தனித்தனியே அரசர்களின் கீழ் வலிமை பெற்றனர். பிற்காலத்தில் மேலைச் சாளுக்கியரிலிருந்து பிரிந்த தைலர் என்பவன் கல்யாணியைத் தலைமையமாகக் கொண்டு கல்யாணி அரசவம்சத்தை ஆரம்பித்தான். இவ்வாறு வலிமையுடன் இருந்த சாளுக்கிய அரசு, சோழர்களின் எழுச்சியுடன் வீழ்ச்சி அடைந்தது. இந்த அலகில் அதன் விபரம் முன்வைக்கப்படுகிறது.

பாண்டியர்களது வரலாறு மிக நீண்ட காலத்தினதாக இருந்தபொழுதிலும் தென்னிந்தியாவில் அவர்கள் பிரபல அரசாக எழுச்சி பெற்றது கி.பி. ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலாகும். அவர்களது அரசியல் வரலாறு இரு கட்டங்களின் கீழ் வளர்ச்சியுற்றது. கி.பி. 670-920 இற்கும் இடைப்பட்ட முதலாவது பாண்டியப் பேரரசு, கி.பி. 1216 - 1310 இற்கும் இடைப்பட்ட இரண்டாவது பாண்டியப் பேரரசு என்பனவே அவைகளாகும். சோழர்கள் தென்னிந்தியாவில் எழுச்சியுற்றதுடன் முதலாவது பாண்டியப் பேரரசு பலவீனமடைந்தது.

விஜயாலயனால் ஆரம்பிக்கப்பட்ட சோழ அரச வம்சம் பலம்வாய்ந்த அரசாக எழுந்தது முதலாவது ஆதித்தனது காலத்திலாகும். அதன் பின்னர் முதலாவது பராந்தகன் இரண்டாவது பராந்தகன் என்போர் ஆட்சிக்கு வந்தனர். சோழரது ஆட்சி இந்தியாவுக்கு வெளியிலும் பரவிப் பேரரசாக மாறியது முதலாவது இராஜராஜன் முதலாவது இராஜேந்திரன் ஆகியோரது காலத்திலாகும். இவ்வாறு வளர்ச்சி அடைந்த பலம்வாய்ந்த பேரரசினுள் பொருளாதாரம், சமூகப் பண்பாடு போன்ற துறைகளில் சிறப்பியல்பகளைக் காணக்கூடியதாக உள்ளது.

இப்பாட அலகில் தென்னிந்தியாவில் ஆட்சி செலத்திய மேற்கூறிய நான்கு அரச வம்சங்களைப் பற்றிய தகவல்கள் முன்வைக்கப்படுகிறது.

**தேர்ச்சி** : • இந்திய வரலாற்றின் வரலாற்று ரீதியான வளர்ச்சிப் போக்குகள் தொடர்பாகப் புரிந்துணர்வடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 11.1 தென்னிந்திய பிரதேச அரசுகள் இந்திய வரலாற்றில் செலுத்திய தாக்கத்தினைத் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 14

**கற்றற்பேறுகள்** :
- தென்னிந்திய தேச எல்லை மற்றும் பிரதேச அரசுகள் என்பனவற்றை தேசப்படத்தில் குறித்துக்காட்டுவார்.
- தென்னிந்திய அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு நிலையைத் தெளிவுபடுத்துவார்.
- தென்னிந்தியாவின் எழுச்சி, இந்திய வரலாற்றில் செலுத்தியுள்ள தாக்கத்தினை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள்:**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## பல்லவர்களின் அரசியல் நடவடிக்கைகள்

- பல்லவர்களது பண்பாடும் அதன் தாக்கமும்
- சாளுக்கிய ஆட்சியாளர்களின் அரசியல் நடவடிக்கை
- பாண்டியப் பேரரசின் வீழ்ச்சி
- பாண்டியப் பண்பாட்டின் தாக்கம்
- சோழப் பேரரசின் எழுச்சியும் வளர்ச்சியும்
- சோழப் பேரரசின் நிலைமை
- சோழர் கால பொருளாதார, சமூக, பண்பாட்டு நடவடிக்கை
- சோழப் பேரரசின் வீழ்ச்சி

## பல்லவ வம்ச சிறந்த அரசர்கள்

### சிவ ஸ்கந்தவர்மன்

- பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்த இவன், மகாராஜாதி ராஜா என்ற பட்டப் பெயரைப் பெற்ற முதல் மன்னனாவான்.
- விவசாய வளர்ச்சியின் பொருட்டுக் காடுகளை அழித்து, நாடாக்கி புதிய குடியேற்றங்களை நிறுவியமை.
- ராஜசூயம், அஸ்வமேதம் போன்ற வைதீக யாகங்கள் செய்தமை.
- கல்வெட்டுக்களுக்கு அமைய அவனது அரசு வடக்கே கிருஷ்ணா நதிக்கும், மேற்கே அராபிக் கடல் வரையிலும் பரவியிருந்தது.

### விஷ்ணுகோபன்

- சமுத்திரகுப்தனின் அலஹபாத்தூண் கல்வெட்டில் சமுத்திரகுப்தனால் தோற்கடிக்கப்பட்ட ஆட்சியாளனாகக் காஞ்சியின் விஷ்னுகோபன் குறிப்பிடப்படுகிறான்.
- சமுத்திரகுப்தனின் தெற்குத் திக் விஜயத்தைத் தடுப்பதில் இவன் பெரும் பங்களிப்புச் செய்தான்.

### சிம்மவிஷ்ணு

- பல்லவ வரலாற்றின் ஆரம்பத்தின் மிகச் சிறப்பு வாய்ந்த காலமெனக் கொள்ளலாம்.
- காவேரி நதியைச் சூழ்ந்த பிரதேசத்தையும் சேர, சோழ, பாண்டிய பிரதேசங்களையும் கைப்பற்றியமை.
- விஷ்ணு பக்தனான இவன் பகைவர்களுக்கு எதிராகப் பெற்ற வெற்றியின் காரணமாக அவனிசிங்க எனும் 'நிலத்துக்கு அதிபதியான சிங்கம்' எனப் பெயர் பெற்றமை.

## முதலாம் மகேந்திரவர்மன் (600 - 630)
- மத்தவிலாச, விச்சித்ரசித்த, குணஹார எனும் பட்டப் பெயர்களாலும் அறிமுகமாகியமை.
- சாளுக்கிய வம்ச புலகேசியுடன் நடைபெற்ற போரின் ஆரம்ப கட்டத்தில் தோல்வியடைந்த போதிலும் பின்னர் பெல்லிலூரில் படையைத் திரட்டி புலகேசியைத் தோற்கடித்தமை.
- மகேந்திர வர்மனின் ஆட்சிக்காலம் செழிப்பு நிறைந்த காலமாக இருந்தமையைக் கிடைக்கப்பெற்ற நாணயங்கள் உறுதி செய்கின்றமை.
- பல்லவக் கட்டிடக் கலையின் முதலாவது சிறப்பு வாய்ந்த காலமான இக்காலத்தில் பாறைகைளக் குடைந்து, கோயில் செய்யும் கலையம்சம் தென் இந்தியாவில் அறிமுகம் செய்யப்பட்டமை.

## நரசிங்கவர்மன் (கி.பி. 630-668)
- மாமல்லன் எனவும் அழைக்கப்படும் இவன் இந்த வம்சத்தின் சிறப்பு வாய்ந்த மன்னனாவான்.
- சாளுக்கிய மன்னன் புலகேசியுடன் இடைவிடாது போர் செய்து மணிமங்கலம் என்ற இடத்தில் அவனைத் தோற்கடித்தான்.
- சிம்மாசனப் போட்டி காரணமாக இலங்கையிலிருந்து வந்த மான இளவரசனதும் உதவியுடன் சாளுக்கியருக்கு எதிராகப் போர் செய்து, சாளுக்கிய அரசின் தலைநகரான கதாமியைக் கைப்பற்றியமை.
- இக்காலகட்டத்தில் இரண்டாம் புலகேசி கொல்லப்பட்டதுடன் நரசிங்கவர்மன் வாதாபி கொண்டா (வாதாபியின் வெற்றியாளன்) என்ற பட்டப்பெயரால் அறிமுகமானான்.
- அவ்வாறே தென் பாண்டியன், சேரன் முதலான பல ஆட்சியாளர்களை வெற்றி கொண்டமையால் 'சிறந்த போராளன்' என்ற கருத்துடைய மாமல்லன் என்ற பெயரால் அறிமுகமானமை.
- இவனால் மாமல்லபுரம் என்னும் மகாபலிபுரம் என்ற அழகிய நகரம் அமைக்கப்பட்டமை.
- அங்கு பாரிய துறைமுகம் ஒன்றினை அமைத்துக் கப்பற் படையை நிறுவியமை.
- இக்கால கட்டத்தில் பல்லவரது ஆட்சி தக்கணத்தின் கிழக்குப் பகுதிக்கும் மேற்கில் கொறமாண்டல் கரையோரத்துடன் (சோழ மண்டலக் கடற்கரையுடன்) கூடிய பாரிய பிரதேசத்திற்கும் வடக்கில் கிருஷ்ணா நதி வரையிலும் அதற்குத் தெற்கில் அனைத்துப் பிரதேசங்களுக்கும் பரவின.
- இவனுக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த இரண்டாம் மகேந்திர வர்மன் (668-670) முதலாம் பரமேஸ்வரன் (670-680) ஆகியோரது ஆட்சிக்காலத்தில் சாளுக்கியரின் சவால்களின் மத்தியில் பல்லவரது ஆட்சி பலவீனமடைந்தது.

## இரண்டாம் நரசிங்க வர்மன்
- வீழ்ச்சியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த அரசை ஓரளவிற்கு நல்ல நிலைக்குக் கொண்டு வந்தமை.
- ஓரளவு சமாதானம் நிலவிய காலப் பகுதியாகும்.
- கொங்ஜிவரம், துறைமுகம் மேற்குக் கிழக்குக் கடல் வழியில் கவர்ச்சிகரமான வர்த்தக மத்திய நிலையமாக வளர்ச்சியுற்றமை.
- பல்லவ, பண்பாடு, வர்த்தக நடவடிக்கைகள் ஊடாக இலங்கை, பர்மா, சீயம், யாவா, சுமத்திரா, கம்போடியா போன்ற நாடுகளுக்குப் பரவியமை.
- பல்லவ அரச சபையில் பணியாற்றிய மான இளவரசனுக்குப் பெற்றுக்கொடுத்த பல்லவப் படை காரணமாக அவன் ஹத்ததாட மன்னனை கி.பி. 684 ஆம் ஆண்டு தோற்கடித்து அனுராதபுரத்தின் அரசாக்கியமை.
- சாளுக்கியர் கங்கையரினதும் உதவியுடன் பல்லவரைத் தாக்கி இரண்டாம் நரசிங்க மன்னனைக் கொன்றதுடன் பல்லவரது ஆட்சியின் வீழ்ச்சி ஆரம்பமானமை.
- பின்னர் இரண்டாம் பரமேஸ்வரன், இரண்டாம் நந்திவர்மன், நந்திவர்மன், மூன்றாம் நந்திவர்மன், நிருபதுங்கவர்மன், அபராஜிதவர்மன் முதலான மன்னர்கள் ஆட்சிக்கு வந்தபோதிலும் பல்லவரது ஆட்சி படிப்படியே வீழ்ச்சியுற்றது.
- இறுதியாக சோழரது எழுச்சியுடன் பல்லவரது ஆட்சி முற்றிலும் மறைந்தமை.

## பல்லவரது பண்பாடு

### கட்டிடக்கலை

- தென்னிந்திய கட்டிடக்கலையின் மிக முக்கியமான காலகட்டமான இக்காலகட்டத்தில் அதன் வளர்ச்சி இரு கட்டமானது.
  01. ஏற்கனவே இருந்த கற்களில் செய்யப்பட்ட நிர்மாணம்
      உதாரணம்: முதலாம் மகேந்திரவர்மனது காலத்தில் இந்த மரபின் கீழ் தூண்களுடனான குகைக் கோயில்கள் அமைக்கப்பட்டமை.
      இரண்டாம் நரசிங்கவர்மனுடைய காலத்தில் பல்வேறு விதமான மண்டபம், இரதம் என்பன அமைக்கப்பட்டமை.

  02. அறுத்த கற்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நிர்மாணம் (கருங்கல்)
      உதாரணம்: மாறவர்மன் ராஜசிங்க சிலை - கைலாசநாத கோயில் வைகுந்தப் பெருமாள் கோயில்
      நந்திவர்மன் சிலை - காஞ்சிபுரம் மதங்கேஸ்வரர் கோயில், திருத்தணி வீரதானேஸ்வரர் கோயில்



கைலாசநாதர் ஆலயம்
*(source:https://commons.wikimedia.org)*



மதங்கேஸ்வரர் ஆலயம்
*(source:https://www.templepurohit.com)*

### சமயம்

- வைணவ ஆழ்வார்களும் சைவ நாயன்மார்களும் சமய நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
- ஹியூங்சாங்கின் பிரயாணக்குறிப்பின்படி பௌத்த, சமண சமய மத்திய நிலையங்களும் நல்ல நிலையில் இருந்ததாகக் கூறப்படுகின்றமை.

### இலக்கியம்

- காஞ்சி இந்தியாவின் முக்கிய கல்வி நிலையமாகியமை. (காஞ்சிக்கடிகை)
- இலக்கிய நடவடிக்கைகளுக்கும் புலவர்களுக்கும் அரச அனுசரணை குறைவின்றிக் கிடைத்தமை. (பாரவீ, தண்டின்)
- அரசர்களும் இலக்கிய நடவடிக்கைகளில் ஈடுபட்டமை.
  (மத்திவிலாச பிரகாசன - முதலாம் மகேந்திரவர்மன்)

### பல்லவரது வெளிநாட்டு உறவு

- இலங்கை, பர்மா, சீயம், யாவா, சுமாத்ரா, கம்போடியா, சீனா ஆகிய நாடுகளுடன் வர்த்தகப் பண்பாட்டுத் தொடர்பு நிலவியமை.
- மாமல்லபுரம், காஞ்சிபுரம் என்பன வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் மிக முக்கிய துறைமுகங்களாக விளங்கியமை.
- ஹத்ததாட மன்னனைத் தோற்கடித்து அரசைப் பெறுவதற்கு இலங்கையின் மான வர்மன் இளவரசனுக்குப் பல்லவப் படையின் உதவி கிடைத்தமை.
- வெளிநாட்டு வர்த்தகத்தின் மூலம் பல்லவப் பண்பாடு பல நாடுகளிலும் பரவியமை.
- பல்லவ கலைஅம்சங்களுடனான நிர்மாணங்கள் பல இலங்கையில் காணப்படுகின்றமை.
  உதாரணம்: நாலந்தா சிலைமனை, திரியாய வட்டதாகே, இசுருமுனியில் மனிதனும் குதிரையுமான சிற்பம்

### சாளுக்கியர்

- மௌரியர்களின் ஆட்சியின் பின்னர் தக்கணத்தின் ஆட்சியின் பொருட்டு ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்ட சிறு அரசுகள் பலவற்றைக் காணக்கூடியதாக இருந்தது.
  - கிழக்குத் தக்கணத்தில் காஞ்சிபுரத்தை மையமாகக் கொண்ட பல்லவர்கள்.
  - வட, தெற்குப் பிரதேசங்களில் காதம்பர்கள்
  - மைசூரை மையமாகக் கொண்ட கங்கர்கள்
- இந்த மூன்று அரச வம்சங்களிலும் முன்னிலையில் இருந்த வாகாடர்களிலும் வீழ்ச்சியின் பின்னர் சாளுக்கியர் ஆட்சிக்கு வந்தமை.
- மேற்கு அரச வம்சம், கிழக்கு அரச வம்சம் என சாளுக்கியர் முக்கிய இரு பிரிவுகளாகப் பரவியமை.
- பிற்காலத்தில் மேலை சாளுக்கிய பரம்பரையில் வந்த இரண்டாம் தைலர் என்பவர் கல்யாணி பிரதேசத்தைத் தலைமையாகக் கொண்டு கல்யாணி இராசதானியைக் கட்டியெழுப்பியமை.

### மேலைச் சாளுக்கியர்

- மேலைச் சாளுக்கியர் இரு சந்தர்ப்பங்களில் மேற்குத் தக்கணத்தில் ஆட்சிக்கு வந்தமை.
- வாதாபியை (பாதாமி) தலைமையாகக்கொண்டு கட்டியெழுப்பப்பட்ட முதலாவது சாளுக்கிய அரசு முதலாம் ஜயசிங்கனால் ஆரம்பமானது.
- இப்பரம்பரையில் இரண்டாம் புலிகேசி, முதலாம் கீர்த்திவர்மன், இரண்டாம் புலிகேசி என்போர் முக்கிய ஆட்சியாளர்களாவர்.

### இரண்டாம் புலிகேசி

- சாளுக்கிய பேரரசின் சிரேஷ்ட ஆட்சியாளன்.
- உள்நாட்டுக் கலவரத்தை அடக்கி, திறமையாக அரசை விரிவடையச் செய்தமை.
- மேற்கு தக்கணத்தில் ஆட்சியை நிலைநிறுத்திக் கொண்டு கிழக்கு தக்கணத்தின் ஆட்சியை நிலைநிறுத்த முயன்றபோது பல்லவர்களோடு மோதல் ஏற்பட்டமை.
- வனவாஹெனியில் கதம்பா, தெற்கு கரைப்பிரதேசத்தில் ஆலுபா, கங்கையர் கையில் இருந்த மைசூர் பிரதேசம் என்பனவற்றைக் கைப்பற்றியமை.
- வட பகுதியில் கவனம் செலுத்தி புரி தீவினைத் தன்வசமாக்கியமை.
- வட இந்தியாவில் ஹர்ஷவர்த்தன மன்னனின் ஆக்கிரமிப்பைத் தடுத்து, குஜராத் ஆட்சியாளருடன் இணைந்து செயற்பட்டமை.
- இந்த வெற்றியின் காரணமாக அய்ஹோலே கல்வெட்டில் ‘பரமேஸ்வரன் என்ற பட்டப் பெயரால் அறிமுகமாகியமை.
- கிழக்கு தக்கணத்தில் கலிங்கம், தெற்கு நேபாளம், தற்போதைய கன்ஜட், விசாகபட்டணம், விஷிஷ்டபுரம், வேங்கி என்பனவற்றைக் கைப்பற்றியமை.

- தென்னிந்தியாவில் பேரரசைக் கட்டியெழுப்பிக் கொண்டிருந்த மகேந்திரவர்மன் எனும் பல்லவ மன்னனால் படுதோல்வி அடைதல்.
- மேற்காசியா, பாரசீகம் என்பனவற்றுடன் வர்த்தகத் தொடர்பைக் கட்டியெழுப்பியமை.
- ஆட்சிக்காலத்தின் இறுதியில் நரசிங்கவர்மன் என்ற பல்லவ மன்னால் கொல்லப்பட்டமை.
- இரண்டாம் புலிகேசி இறந்து பத்து ஆண்டுகள் அரசு ஒரே நிலையில் இருந்தமை. பின்னர் அடிமைப்பட்ட நாடுகள் சுயாதீனமடைதல், புத்திரர்களிடையே மோதல்கள் ஏற்பட்டமை.

### விக்ரமாதித்தன் (654 - 681)

- கங்கா துர்வீத்தனன் என்பவனின் துணையுடன் பல்லவ ஆக்கிரமிப்பைத் தடுத்தமை.
- தந்தையின் அரசின் ஒற்றுமையைப் பாதுகாத்தல்.
- நரசிங்கவர்மனை வாதாபியிலிருந்து கலைத்து, அரசைப் பகிர்ந்து கொள்ள ஆயத்தமாகிய சகோதரர்களையும் சாமந்தரையும் தோற்கடித்தல்.
- பாண்டியர்களதும் விக்கரமாதித்தனதும் புத்திரரான விநயாதித்தனதும் பேரரான விஜயாதித்தனதும் துணையுடன் இரண்டாம் புலிகேசியின் பின்னர் இழந்த பல பிரதேசங்களைக் கைப்பற்றல்.

### வினயாதித்தன்

- பல்லவர், சோழர், பாண்டியர், சேரர்,வடக்கில் ஹைகோளர், மாளவர் ஆகியோரைத் தோற்கடித்தமை.

### விஜயாதித்தன்

- வாதாபி அரச நிருவாகத்தில் நீண்ட காலப் பகுதியாக விளங்கியமை.
- அமைதியானதும் வளமிக்கதுமான காலப்பகுதியாக இருந்தமை.
- பட்டடக்கல்லிலுள்ள சங்கமேஷ்வர கோயில் முதலான நிர்மாணத்தின் மூலம் இக்காலத்தில் ஏற்பட்ட கட்டிட அமைப்பின் சிறப்பு வெளிப்படுகின்றமை.

### இரண்டாம் விக்கிரமாதித்தன்

- பல்லவ ஆக்கிரமிப்பை முறியடித்தல்.
- அராபிய ஆக்கிரமிப்பை முறியடித்தல்.

### இரண்டாம் கீர்த்திவர்மன்

- வாதாபியின் பலம்வாய்ந்த இறுதி மன்னனாவான்.
- பாண்டியர்களுக்கு எதிராக கங்கா சாமந்தனான ஸ்ரீ புருஷனுடன் இணைந்து மேற்கொண்டு செய்த போரில் தோல்வியடைந்தமை.
- பாண்டிய மன்னனின் மகனுக்கு கங்கா இளவரசி ஒருத்தியை மணம்முடித்துக் கொடுத்ததன் மூலம் இரு பிரிவினருக்குமிடையே சமாதானம் ஏற்படல்.

### கீழைச் சாளுக்கியர்

- முதலாம் விஷ்ணுவர்மன் ஆரம்ப ஆட்சியாளனாவான்.
- மேலும் நரேந்திர வர்கராஜா ஆட்சிக்கு வந்தமை.
- பொகி பிரதேசத்தைத் தலைமையாகக் கொண்டு கீழைச் சாளுக்கிய அரச வம்சத்தைக் கட்டியெழுப்பியமை.

### பீமன்

- இராஷ்டிரகூடருடன் மோதல் ஏற்படல்.

- பீமனின் பின்னர் அரசுரிமை தொடர்பாக குழப்பம் ஏற்படல்.
- பன்னிரெண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கீழைச் சாளுக்கிய அரசு சோழர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டமை.

### கல்யாணிச் சாளுக்கியர்

- பத்தாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் மேற்கு சாளுக்கிய பரம்பரையைச் சேர்ந்த முதலாம் தைலர் என்பவரால் கல்யாணியைத் தலைமையகமாகக் கொண்டு கல்யாண சாளுக்கிய அரசு கட்டி எழுப்பப்பட்டது.
- முதலாம் தைலர், இரண்டாம் தைலர், முதலாம் சோமேஸ்வரர், விக்கிரமாதித்தன் என்போர் இந்த வம்சத்தைச் சேர்ந்தவர்களாவர்.
- 12 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் கல்யாண சாளுக்கிய அரசு அழிவுற்றது.

### பாண்டியப் பேரரசின் அரசியல் நடவடிக்கை

- பாண்டியர்கள் தொடர்பாகப் பண்டைய காலம் முதற்கொண்டு பல்வேறு மூலாதாரங்களில் தகவல்கள் காணப்படுகின்றமை.

  உதாரணம்:
  - மகாவம்சத்திற்கு அமைய விஜயனுக்கும் அவனது தோழர்களுக்கும் திருமணத்தின் பொருட்டுப் பாண்டிய நாட்டிலிருந்து பெண்கள் வரவழைக்கப் பட்டமை.
  - கி.மு. 49-43 வரை இலங்கை பாண்டியரது ஆக்கிரமிப்புக்கு உள்ளானமை.
  - தமிழ்ச்சங்க இலக்கியம், மெகஸ்தனீசின் இண்டிகா, கௌடில்லியரின் அர்த்தசாஸ்திரம் என்பனவற்றில் பாண்டியர் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றமை.
  - அசோகரது கல்வெட்டுக்களில் பாண்டிய அரசு தமது பேரரசின் எல்லைக்கு வெளியே அமைந்திருப்பதாகக் குறிப்பிடப்படல்.
  - இந்த அரசைப் பெண்களும் ஆட்சி செய்ததாக ஜலினி குறிப்பிடுகின்றமை.

- ஆறாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பாண்டிய அரசு தென்னிந்தியாவில் பிரபல அரசாக விளங்கியமை.
- பாண்டிய அரசியல் வரலாற்றில் பிரதான இரண்டு கட்டங்கள் உள்ளன.

  முதலராவது பாண்டியப் பேரரசு (கி.பி. 670-920)
  இரண்டாவது பாண்டியப் பேரரசு (கி.பி. 1210 - 1310)

### முதலாவது பாண்டியப் பேரரசு

- தற்போதைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டம், திருவாங்கூர் பிரதேசத்தின் தெற்குப் பகுதி என்பன இதில் அடங்கும்.
- தலைநகர் மதுராபுரியாகும்.
- ஆரம்ப ஆட்சியாளன் கடுங்கோன் என்பவனாவான்.
- மாறவர்மன் அவனிசூளாமணி, சேந்தன், அரிகேசரி மாறவர்மன், கோச்சடையன், முதலாம் ராஜசிங்க மாறவர்மன் முதலானோர் ஆட்சி செலுத்தியமை.

### முதலாம் வரகுண பாண்டிய மகாராஜா (ஜட்டில பராந்தகன்)

- பாண்டிய அரசைப் பேரரசாக மாற்ற அடிப்படையாக இருந்தவன்.
- அரசு தஞ்சாவூர், கோயம்புத்தூர் பிரதேசங்களில் விரிவடைந்தமை.

### ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன்

- கங்கர், பல்லவ, சோழ, காலிங்க என்னும் பாண்டிய அரசைச் சூழ இருந்த நான்கு அரசுகளை வெற்றி கொண்டமை.

- பரசக்ரகோலஹால (பகைவரை ஆச்சரியத்தில் ஆழ்ந்துபவர்) என்னும் பட்டப் பெயரைப் பயன்படுத்தி முன்னெடுத்துச் சென்ற யுத்தம் காரணமாக அரசுகள் எதிரிகளானமை.
- அவனுக்கு எதிராக வந்த கங்கர், பல்லவர், சோழர், காலிங்க அரசுகளின் கூட்டணியை கும்பகோணத்தில்தோற்கடித்தமை.
- தென்னிந்தியாவுக்கு வெளியே ஆட்சியை விரிவாக்கி, முதலாம் சேன மன்னனின் காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்தமை.
- கி.பி. 850 ஆம் ஆண்டு துப்பதுங்கன் எனும் பல்லவ மன்னன் அரிஷில் நதியின் அருகில் செய்த போரில் ஸ்ரீ மாறனைத் தோற்கடித்மை.
- அரிஷில் போர் நடைபெற்ற பொழுதிலும் இலங்கையில் சேன மன்னன் வேறொரு பாண்டிய இளவரசனின் உதவிக்கு அனுப்பிய படையை மதுரையில் அழித்து ஸ்ரீ வல்லப மன்னனைக் காயப்படுத்தியமை.

### இரண்டாம் வரகுணவர்மன்

- அரசைப் பெறுவதற்கு இலங்கையின் இரண்டாம் சேன மன்னனின் உதவியைப் பெற்றுக் கொண்டமை.
- மீண்டும் பாண்டிய ஆட்சியைக் கட்டியெழுப்ப முயன்ற பொழுதிலும் பல்லவ, சோழ, கங்கா அரசுகள் இணைந்து மேற்கொண்ட திருப்புறம்பியப் போர் போரில் (880) ஆட்சி வீழ்ச்சியடைந்தமை.

### பராந்தக வீரநாயன்

- பாண்டிய வலிமைக்கு மேலாக சோழரது வலிமை மேலோங்கியமை.

### இரண்டாம் இராஜசிங்க மாறவர்மன்

- எழுச்சியுற்று வந்த சோழரது ஆட்சிக்கு எதிராக இலங்கை அரசர்களது உதவியைப் பெற்றுக் கொண்டமை.
- ஐந்தாம் காசியப்ப மன்னன் சக்க சேனாதிபதியின் கீழ் சிங்கள படையொன்றைப் பெற்றுக் கொடுத்தமை.
- சிங்கள-பாண்டிய கூட்டுப்படை முதலாம் பராந்தக சோழப் பேரரசனால் தோற்கடிக்கப்பட்டமை.
- பாண்டிய மன்னன் முடிசூட்டுப் பொருட்களுடன் பாதுகாப்புக்கருதி இலங்கையை அடைந்தமை.
- பாண்டிய அரசு 10 ஆம் நூற்றாண்டின் இறுதியில் சோழரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டமை.
- அதன் பின்னர் இரு நூற்றாண்டுகள் சோழப் பேரரசின் ஒரு பிராந்தியமாக இருந்தமை.

### இரண்டாம் பாண்டியப் பேரரசு

- 12 ஆம் நூற்றாண்டில் சோழ சிம்மாசனத்தின் பொருட்டு ஏற்பட்ட உள்நாட்டுப் பூசல் காரணமாக மீண்டும் பாண்டியரின் வலிமை ஓங்கியமை.
- ஜடாவர்மன் குலசேகரன் பாண்டியன் ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த முன்னின்றமை.
- ஆட்சிக்கு வந்த மானவர்மன் சுந்தர பாண்டியன் சோழ அரசை ஆக்கிரமித்து தஞ்சாவூர் உறையூர், நகர் என்பனவற்றைக் கொள்ளையடித்து அங்கு முடிசூடியமை.

### ஜடாவர்மன் சுந்தர பாண்டியன்

- கி.பி. 1251 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த இவன் இரண்டாம் பாண்டிய பேரரசின் சிரேஷ்ட ஆட்சியாளனாவான்.
- பாண்டிய ஆட்சியை வேறு பிரதேசங்களிலும் பரவலடையச் செய்தமை.

  உதாரணம்:
  - ஹொய்சாளரை மைசூர் பிரதேசத்தில் கட்டுப்படுத்தி, சேர, சோழ ஆட்சியாளரைத் தம்மடிப்படுத்தியமை.
  - இலங்கையில் சந்திரபானுவை வெளியேற்ற சிங்கள ஆட்சியாளருக்கு உதவியமை.

- சேந்தன் மங்களம் கோட்டையைத் தாக்கியமை.
- பல்லவர்களின் காஞ்சி நகரை ஆக்கிரமித்து அதனைக் கைப்பற்றிக் கொண்டமை.
- ஆக்கிரமிப்புக்களில் பெற்ற செல்வத்தை சமய வழிபாட்டு நிலையங்களைக் கட்டியெழுப்பவும், அவற்றைப் பராமரிக்கவும் பயன்படுத்தியமை.

**முதலாம் மாறவர்மன் குலசேகரன்**
- திக் விஜயக் கொள்கையைப் பின்பற்றியமை.
- அவனுக்குப் பின்னர் உள்நாட்டுப் பூசல் ஏற்பட்டமையால் அரசு பலவீனமடைதல்.
- தில்லி சுல்தான் அரசு எழுச்சி பெற்றமையும் விஜயநகரப் பேரரசு வலிமையடைந்தமையும் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிகோலியமை.

**சோழப் பேரரசின் எழுச்சியும், வளர்ச்சியும்**
- பல்லவ அரசின் கீழ் திறையரசனான விஜயாலயனால் (கி.பி. 846 - 781) சோழ அரச வம்சம் ஆரம்பமாமகியமை.
- சோழப் பேரரசின் வளர்ச்சிக்கும் பரவலுக்கும் பல ஆட்சியாளர்கள் பங்களிப்புச் செய்துள்ளமை.
- முதலாம் ஆதித்தன், முதலம் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்தின், முதலாம் குலோதுங்கன்.

**முதலாம் ஆதித்தியன்**
- பாண்டியருக்கும் பல்லவருக்கும் இடையே நடைபெற்ற திருப்பறம்பப் போரில் பல்லவரது வெற்றிக்கு உதவிய முதலாம் ஆதித்திய மன்னனுக்குப் பல்லவரால் தஞ்சாவூருக்கு அருகிலுள்ள பிரதேசம் வழங்கப்பட்டமை.
- பின்னர் பல்லவ மன்னனைத் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றியமை.
- கொங்கு தேசம் மேற்கு கங்கையரின் தலைநகரான தலகாட் நகரம் என்பனவற்றையும் கைப்பற்றியமை.
- சோழ அரசை வலிமை மிக்க அரசாக மாற்றிய பெருமை முதலாம் ஆதித்ய மன்னனைச் சாரும்.

**முதலாம் பராந்தகன் (கி.பி. 907 - 955)**
- இவன் கங்கா, சேர, கொயிம்பமோர் தலைவர்களின் மதிப்பைப் பெற்று சோழ அரசை உறுதிசெய்து கொண்டமை.
- பாண்டியரது தலைநகரான மதுரையை வென்றமையானது இவன் பெற்ற பெரும் வெற்றியாகும்.
- இந்த வெற்றியின் பின்னர் 'மதுரை கொண்ட' எனும் பட்டப் பெயரைப் பெற்றமை.
- கி.பி. 920 ஆம் ஆண்டளவில் மூன்றாம் முறையாகப் பாண்டிய அரசு மீது மேற்கொண்ட ஆக்கிரமிப்பில் இரண்டாம் இராஜசிம்மன் என்ற பாண்டிய அசனைத் தோற்கடித்தமை.
- பாண்டிய அரசு முடிசூட்டுப் பொருட்களுடன் இரண்டாம் இராஜசிம்மன் மன்னன் இலங்கைக்குத் தப்பிச் சென்றதால் நான்காம் உதயனின் காலத்தில் இலங்கையை ஆக்கிரமித்து, மதுரையும் ஈழமும் கொண்ட என்ற விருது சூடியமை.
- வல்லம் என்னுமிடத்தில் செய்த போரில் பல்லவர்களைத் தோற்கடித்து முதலாம் பராந்தகனால் வடக்கில் வேலூர் வரை சோழ அரசை விரிவடையச் செய்தமை.

**முதலாம் ராஜராஜன் (கி.பி. 985-1014)**
- திரிவெந்தாம் போரில் பாஸ்கரவர்மனின் கீழிருந்த காந்தளூர்ச்சாலை சேர கப்பற்படையை அழித்தமை.
- மதுரையைக் கைப்பற்றி அமரபுஜங்க எனும் பாண்டிய அரசனைப் பிடித்தமை.

- பாண்டிய, சேர வலிமையை ஒடுக்கும் நோக்கில் உதகைக்கோட்டையைக் கைப்பற்றியமை.
- இலங்கையை ஆக்கிரமித்து, அநுராதபுரத்தைக் கைப்பற்றியமை.
- கங்கை அரசில் கங்கவாடி, தடிகைபாடி, குடமலை நாடு, கொல்லம் முதலான பிரதேசங்களைத் கைப்பற்றியமை.
- கி.பி. 1007 ஆம் ஆண்டளவில் மேலைச் சாளுக்கிய அரசை ஆக்கிரமித்து செல்வத்தை சூறையாடியமை.
- கீழைச் சாளுக்கிய மன்னனுக்கு சிங்காசனத்தைப் பெற உதவிய இவன், அவர்களுடன் நட்புறவுடன் இருந்தமை.
- கலிங்கத்தையும் பழந்தீவு பன்னீராயிரம் தீவுகளையும் (மாலைதீவையும்) தம்மடிப்படுத்தியமை.
- பாண்டி நாட்டையும் ஈழத்தையும் (அனுராதபுரத்தின் வடக்குப் பக்கம்) வெற்றி கொண்டு, மும்முடிச் சோழன் என்ற விருதினைச் சூடிக்கொண்டமை. (ஈழமான மும்முடிச் சோழ மண்டலம்)



***உதகைக் கோட்டை***

## முதலாம் இராஜேந்திரன் (கி.பி. 1014-1024)

- திருவாலங்காடு செப்பேடு, திருமலை குன்றுக்கல்வெட்டு ஆகிய மூலாதாரங்களில் இவன் பெற்ற வெற்றிகள் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- சிறு பராயம் முதற்கொண்டு தன் தந்தையின் கீழ் ஆட்சியில் பங்கு கொண்டு அனுபவமும், பயிற்சியும் பெற்றுக்கொண்டமை.
- பல்லவ அரசைத் தன்னடிப்படுத்தித் தொண்டை மண்டலத்தில் சோழர் ஆட்சியை வளர்ச்சியுறச் செய்தமை.
- காலங்கம், லக்ஸதீவு, மாலைதீவு, இலங்கை என்பனவற்றைக் கைப்பற்றியமை.
- கி.பி. 1017 ஆம் ஆண்டு இலங்கை முழுவதையும் கைப்பற்றி, 77 ஆண்டுகள் ஒன்பதாவது சோழ மண்டலமாக இலங்கையை இணைத்துக் கொண்டமை. பொலன்னறுவை தலைநகராக்கப் பட்டமை.
- துங்கபத்ராவுக்கு வடக்கேயுள்ள வங்காளம், பிகார், ஒரிசா முதலான பிரதேசங்களை வெற்றி கொண்ட போதிலும் பேரரசுடன் இணைக்கவில்லை.
- இந்த வெற்றியை நினைவுகூரும் முகமாக கும்பகோணத்தில் கங்கைகொண்ட சோழபுரம் அமைக்கப்பட்டமை.

- இக்காலகட்டத்தில் வளர்ச்சி பெற்று வந்த கப்பற் படையால் தென்கிழக்கு ஆசியாவில் சுமாத்திராவை அண்மித்த அரசுகள் பலவற்றை வெற்றி கொண்டமை. (ஜாவா, சுமாத்திரா, மலாயக் குடா நாடு, நிக்கோபார், இஸ்முஸ்)
- கி.பி. 1021 ஆம் ஆண்டு மேற்கு சாளுக்கிய ஆட்சியாளனான ஜெயசிங்கை தோற்கடித்தமை.

## முதலாம் இராஜாதிராஜன் (கி.பி. 1044-1052)

- இக்கால கட்டத்தில் இலங்கையில் சோழரது ஆட்சி நிலவிய பிரதேசங்களில் ஏற்பட்ட சுதந்திரப் போராட்டம் வளர்ச்சியடைதல்.
- சோழ - சாளுக்கிய போராட்டம் தொடர்ந்து நிலவியமை.

## சோழப் பேரரசின் தளர்ச்சியின்போது இருந்த ஆட்சியாளர்கள்

- இரண்டாம் இராஜேந்திர மன்னன் சாளுக்கிய சோமேஸ்வரனுக்கு எதிராகப் போரிட்டு அவரைத் தோற்கடித்தமை.
- அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த இரண்டாம் சோமஸ்வரருடன் மோதலை ஏற்படுத்துதல்.
- இலங்கையில் சோழர் ஆட்சிக்கு எதிராக எழுந்த கிளர்ச்சியொன்று வீர இராஜேந்திரனால் அடக்கப்பட்டமை.
- அதிராஜேந்திர மன்னனுடன் விஜயாலய அரச வம்சம் முடிவுற்றமை.
- அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த முதலாம் குலோத்துங்கனால் சோழப் பேரரசுக்கு எதிரான அணிகளை அடக்குவதற்கான நடவடிக்கை எடுத்தமை.
- எனினும் முதலாம் குலோத்துங்கனின் காலத்தில் சமுத்திரத்தை அண்மித்த அரசுகளை சோழப் பேரரசு இழந்தமை.
- இலங்கை முதலாம் விஜயபாகு மன்னனால் சோழர் ஆட்சியில் இருந்து விடுவிக்கப்பட்டமை.

## சோழரது நிர்வாக முறை

- சோழரது நிர்வாகம் தொடர்பான தகவல்களை மெய்க்கீர்த்திச் சாசனங்கள், கல்வெட்டுக்கள். செப்பேடுகள், தமிழ் இலக்கணங்கள் என்பனவற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளமை.
- 400 ஆண்டுகள் அளவில் தென்னிந்தியாவில் முறையான முடியாட்சியாக வளர்ச்சி பெற்றமை.
- மத்திய நிர்வாகம், மாகாண நிர்வாகம், கிராம நிர்வாகம் என மூன்று பிரிவுகள் இருந்தமை.

## மத்திய நிர்வாகம்

- மன்னனைச் சூழ்ந்து முடியாட்சி முறையிலான நிர்வாகம் நிலவியமை.
- பொதுவான சம்பிரதாயத்திற்கு அமைய மன்னனின் பதிலாளியாகவும் பிரதான உதவியாளனாகவும் விளங்கும் யுவராஜா பதவிக்கு மன்னனின் மூத்த மகன் நியமிக்கப்பட்டமை.
- ஆண்வழிவந்த வாரிசு உரிமை முறை, அரச உரிமை முறையாகக் கொள்ளப்பட்டமை.
- பிரதான படைத்தளபதியாக மன்னனுடைய குடும்ப உறுப்பினர் பதவி வகித்தமை.
- மன்னனைக் கடவுளாகக் கருதியமையை அரசர்களது இறந்த சரீரங்களை வைத்துக் கோயில்கள் அமைத்து பூஜைகள் செய்ததிலிருந்து உறுதி செய்யப்படுகின்றமை. (பள்ளிப்படைக் கோயில்கள்)
- மன்னனிடம் இருந்த அதிகாரங்கள் சர்வாதிகார சாயலைக் கொண்டிருந்தாலும் ஆட்சி முறையில் சர்வாதிகாரியாக செயற்பட முடியாமை.
- உடன்கூட்டம் எனும் அலுவலர் குழுவின் ஆலோசனைப்படி அரசனால் நீதி வழங்கப்பட்டமை.
- அரசனுக்கு உதவிபுரிய இராஜ சபை எனப்படும் அமைச்சர்குழு இருந்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- எனினும் நிலையான அமைச்சர் குழு இருக்கவில்லை என ரொமிலா தாபர் கூறுகிறார்.
- பெருந்தனம் - உயர் அதிகாரிகள்
- சிறுதனம் - கீழ்மட்ட அதிகாரிகள்
- சோழ நிருவாகம் தொடர்பாக அதிகாரிகள் பிரிக்கப்பட்டிருந்தமை.

### பிரதேச நிருவாகம்

- பிரதேச நிருவாகத்தில் சோழப் பேரரசு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டமை. (சோழ, பாண்டிய, கங்கா, வெங்கி, சேர, மும்முடி சோழ)
- சோழ பிரதி அரசனின் கீழ் இப்பிரதேச மண்டலங்கள் நிருவகிக்கப்பட்டன.
- துறைமுக அதிகாரியின் கீழ் யுத்த, சிவில் நடவடிக்கைகளும் அதிகாரிகளும் கீழ் போர்ப்படை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.
- மும்முடிச் சோழ மண்டலத்தில் (இலங்கையில் சோழரது பிரதேசம்) இருந்து பெற்ற வரிப்பணம் தொடர்பாகத் தஞ்சைப் பெருங்கோயில் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கிராம நிருவாகம்

- ஊர், வளநாடு, நாடு, கூற்றம் என நிருவாக அமைப்புப் பிரிக்கப்பட்டிருந்தமை.
- கிராம நிருவாகத்தில் ஊர், நாடு என்பன முக்கியத்துவம் பெறுகின்றமை.
- ஊர் சபையில் பிரதிநிதிகளைக் கொண்டு வாரியம் சபை, தர்ம சபை என்றிருந்தமை.
- நீர்ப்பாசனம் தொடர்பான அணைகள் அமைத்தல், பயிர்ச்செய்தல், வரி அறவிடுதல் என்பன வாரியங்களால் மேற்கொள்ளப்பட்டமை.
- தர்ம சபைக் குழுவால் கோயில் பரிபாலனம், கல்வி மத்திய நிலையங்கள் நடாத்துதல், கிராம நலனோம்பல் செயற்பாடுகளை முன்னேற்றுதல் என்பன நடைபெற்றமை.
- நீதிமன்றக் குழுவால் கிராமத்தில் வழக்குகளுக்குத் தீர்வு வழங்கியதுடன் அதன் பொருட்டுத் தற்போதைய ஜூரி முறைக்கு சமமான 'பஞ்சாயத்து முறை' செயற்படுத்தப்பட்டமை.
- சோழ கிராமிய நிருவாகத்தின் சிறிய அலகு கூற்றம் ஆகும்.
- பல கூற்றங்கள் ஒன்றிணைந்து நாடு எனும் அலகும், நாடு பல இணைந்து வளநாடு எனும் அலகும் இருந்தமை.
- சோழ கிராம நிர்வாகம் ஜனநாயக இயல்புகளைக் கொண்டிருந்தமை.

### சோழர் கால பொருளாதார, சமூக, பண்பாட்டு நடவடிக்கைகள்

- சோழர் கால சமுதாயம் பாரம்பரிய தொழிலை அடிப்படையாகக் கொண்ட சாதி முறையில் சமூக நிலைமை ஒழுங்கமைக்கப்பட்டமை.
- விவசாயம் பிரதான வாழ்வாதாரமாக இருந்தமை.
- சமுதாயத்தில் உயர் நிலையில் இருந்த பிராமணர்கள்
  கல்வி, சமயம், இலக்கியம் என்பனவற்றிலிருந்து விலகி, வர்த்தகம், போர்ப்பணி, வேறு உயர் அரச சேவைகள் என்பனவற்றில் ஈடுபட்டிருந்தமை.
- இக்காலத்தில் தென்னிந்திய சாதி முறை வட இந்திய நான்கு வர்ணக்குல முறையைப் பெரிதும் ஒத்ததாக இருந்தமை.
- சமுதாயத்தில் தலைமைத்துவம் ஆண்களுக்குக் கிடைத்த பொழுதிலும் பெண்களும் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். நில உரிமையுடைய பெண்கள் இருந்தமையானது இதனை உறுதி செய்கின்றது.
- தென்னிந்தியாவில் தேவரடியர் முறை (தேவதாசி முறை) நடைமுறையில் இருந்தமை.

### பொருளாதா நிலைமை

- கிராமிய விவசாயப் பொருளாதாரம் நிலவியமை.
- வர்த்தகமும், பல்வேறு பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்ட தொழிற்துறைகளும் காணப்பட்டமை.
- கிராமத்தின் நிருவாக உரிமம் நில உரிமையை அடிப்படையாகக் கொண்ட உரிமையானமை.
- தனிப்பட்ட நில உரிமம் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், நில உரிமையாளருக்குத் தாம் விரும்பியவாறு தமது நிலங்களைப் பிறருக்கு உரிமையாக்கக்கூடியதாக இருந்தமை.
- இக்காலத்தில் மூன்று விதமான நிலம் அனுபவிக்கும் முறை செயற்படுத்தப்பட்டமை. அவையாவன:
  1. கிராமத்தவரின் தனிப்பட்ட நிலங்கள்
  2. பல்வேறு சேவைகளுக்காக வழங்கப்பட்ட நிலங்கள்
  3. சமய நிலையங்களுக்கு தேவதானமாக வழங்கப்பட்ட நிலங்கள்

- விவசாயத்திற்கு நீர் வழங்கும் பொருட்டு நீர்ப்பாசன நடவடிக்கைகள் முறையாக செயற்படுத்தப்பட்டமை.
- விலங்கு வளர்ப்பும் பொருளாதாரத்தில் முக்கிய இடத்தினைப் பெற்றமை.
- பண்டைக் காலம் தொடக்கம் இந்து சமுத்திரத்தின் கிழக்கு, மேற்கு பிரதேசத்துடன் வர்த்தகம் செய்தமை.
- உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட வாணிகக் குழுக்களின் முறையில் செயற்பட்டமை.
- உள்நாட்டின் தேவையை அடிப்படையாகக் கொண்டு பல குடிசைக் கைத்தொழில்கள் முன்னேற்றமடைந்தமை. (நெசவுத் தொழில் உலோகப் பொருட்கள் செய்தல், பொன், வெள்ளி, இரத்தினம் என்பனவற்றில் ஆபரணங்கள் செய்தல்.)
- கோயில்கள் பண்பாட்டுப் பொருளாதார மத்திய நிலையமாக செயற்பட்டமை.
- சுங்கவரி, விழா வரி, துறைமுகவரி, கடவை வரி, அகழ்வு வரி, உப்பளங்கள், பல்வேறு தொழில்கள் என்பனவற்றின் மூலம் அரசாங்கம் வருமானத்தைப் பெற்றமை.

## சமயநிலை

- சோழ மன்னர்கள் அனைவரும் இந்து சமயத்தவர்களாவர்.
- எனினும் ஆரம்பகாலத்தில் ஏனைய சமயங்கள் மீது சமயப் பொறையைக் கடைப்பிடித்ததுடன் பிற சமயக் குழுக்களை மதித்தமை.
- முதலாம் ராஜராஜ மன்னனின் தங்கையான குந்தவை இளவரசி ஒரே இடத்தில் சிவன் கோயில், விஷ்னு கோயில் என்பவற்றுடன் சமண சமயத் தலமொன்றையும் அமைந்தமை.
- சோழப் பேரரசுக்குரிய இந்தியா நிலப்பரப்பிற்குள்ளும், அதற்கு வெளியேயும் சிவாலயங்கள் நிறுவப்பட்டமை.
- முதலாம் இராஜ இராஜ சோழனால் தஞ்சாவூரில் கட்டப்பட்ட இராஜ இராஜேஸ்வரர் ஆலயம் சிறந்த நிர்மாணமாகும்.
- முதலாம் இராஜேந்திர மன்னன், சோழபுரத்தில் நிறுவிய சிவாலயம் உயர் நிர்மாணமாகும்.
- முதலாம் இராஜ இராஜன் இலங்கையில் உள்ள ஓர் ஊரின் வருமானத்தை தஞ்சாவூரின் கோயில் பராமரிப்புக்கு வழங்கினான்.
- முதலாம் குலோத்துங்கனும் சமய வளர்ச்சிக்காகச் செயற்பட்டமை.
- கோயில்கள் அமைத்ததுடன் சிவன் - பார்வதி சிலைகளை வடித்தல் பெரும்பாலும் இக்காலத்தில் இடம்பெற்றமை.

## மொழியும் இலக்கியமும்

- பல்லவர், பாண்டியரின் கீழ் வளர்ச்சியடைந்து வந்த தமிழ்ப்பண்பாடு, இலக்கியம் என்பன இக்காலத்தில் மேலும் முன்னேற்றமடைந்தமை.
- கன்னடம், தமிழ், தெலுங்கு மொழிகள் தென்னிந்தியாவில் முக்கிய மொழிகளாக வளர்ச்சியுற்றமை.
- பௌத்த பிக்குகளால் எழுதப்பட்ட பாளி பௌத்த நூல்கள் சில பற்றித் தகவல்கள் கிடைத்துள்ளமை.
- மகாபாரதம், இராமாயணம் என்பன இக்காலத்தில் தெலுங்கு மொழியில் மொழி பெயர்க்கப்பட்டமை.
- கோயில்களை அண்மித்த உயர்கல்வி நிலையங்களில் சமஸ்கிருத மொழி வழக்கில் இருந்தமை.
- முதலாம் குலோதுங்கன் முதலான மன்னர்கள் சமஸ்கிருத இலக்கிய வளர்ச்சிக்கு உதவுதல்.
- சங்கராச்சாரியார் என்பவரால் சமஸ்கிருத தர்மநூல்களைக் கற்கும் பொருட்டு ஆச்சிரமங்கள் நிறுவப்பட்டமை.
- வேங்கட மாதவனால் வேதத்தைத் தெளிவுபடுத்துவதற்கு ரிகர்த பிரதிப்பிக்கால எனும் நூல் எழுதப்பட்டது.
- பர்கவத் புராணம் எனும் சமய நூல் பத்தாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டதாகும்.

- இக்காலத்தில் திருத்ததக்க தேவர், ஐயங்கொண்டார், கம்பர், ஒட்டக்கூத்தர், நம்பியாண்டார் நம்பி, சேக்கிளார், நாகமுனி முதலான புகழ்வாய்ந்த இலக்கியவாதிகள் வாழ்ந்தமை.
- பதினொரு திருமுறைகளைக் கொண்ட தேவாரங்கள் அடங்கும் நூல் நம்பியாண்டார் நம்பி என்வரால் எழுதப்பட்டதாகும்.

**கட்டடக்கலை**

- பல்லவர் காலந்தொடக்கம் எழுச்சி பெற்று வந்த திராவிடக் கட்டடக்கலைகள் இக்காலத்தில் உச்சக் கட்டத்தை அடைந்தமை.
- கி.பி. 10 ஆம் நூற்றாண்டுவரை சிறு அளவில் கோயில்கள் கட்டடங்கள் கட்டப்பட்ட பொழுதிலும் பின்னர் நுண்ணிய வேலைப்பாடுகளுடனான பாரிய கோயில்கள் கட்டப்பட்டமை.
- இவ்வாறு சோழரது மரபுக்கு அமையக் கட்டப்பட்ட பல கோயில்கள் பேரரசு முழுவதும் காணப்பட்டமை. (இராஜ இராஜேஸ்வர கோயில்)
  - கங்கை கொண்ட சோழபுர கோயில்
  - குரங்கநாதர் கோயில்
  - கைலாசநாதர் கோயில்



**கங்கை கொண்ட சோழபுர ஆலயம** *(source: https://www.wikipedia.org)*



**பிருஹதீஸ்வரர் எனப்படும் இராஜ ராஜேஸ்வர சிவன் கோயில்**
*(source:http://indiaopines.com)*



**குரங்கநாதர் ஆலயம்**

*(source:http://tamilnadu-favtourism.blogspot.com)*

- சோழர் கால கோயில் அமைப்பில் கற்களும் கற்றூண்களும் பயன்படுத்தப்பட்டமை.
- சதுரவடிவில் கோயில்கள் அமைக்கப்பட்டிருந்தமை.
- பிரதான கோயிலின் முக்கிய அங்கமாக விளங்கியது கருவறை ஆகும்.
- கருவறையின் மேல், ஒன்றிலிருந்து ஒன்ற சிறிய அளவில் மேல் நோக்கி எழும் பல தட்டுக்களைக் கொண்ட பிரமிட் வடிவில் விமானங்கள் இருந்தமை.
- கோயிலின் உட்புறத்தைப் போன்று வெளிப்புறமும் சித்திரம், சிற்பம், செதுக்கல் என்பனவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தமை.
- ஆலய வளாகத்தைச் சுற்றிலும் அமைக்கப்பட்ட மதில்களில் ஆலயத்தினுள் செல்லும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ள துவாரகை (கோபுரம்) பாண்டியர்களின் கோயில் கட்டிட நிர்மாணத்துறையின் விசேட இயல்பாகும்.

## சிற்பக்கலை

- தஞ்சாவூர் கோயிலின் கருவறையின் கதவுகள் பாரிய காவற்சிலை இரண்டினால் அலங்கரிக்கப் பட்டமை.
- கும்ப கோண நாகேஸ்வர கோயிலின் சுவர்களின் வெளியே தேவ உருவங்களும் பெண்களின் உருவங்களும் செதுக்கப்பட்டமை.
- முதலாம் பராந்தகனால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீனிவாச நல்லூரில் குரங்கநாதர் கோயிலில் சிங்கம் முதலான மிருகங்களுடனான விஷ்ணு, பிரம்மா முதலான கடவுளரின் சிலைகள் பல கிடைக்கப்பட்டுள்ளமை.
- சிவன், விஷ்ணு, பிரம்மா, பார்வதி, இலக்குமி, சைவ நாயன்மார்,, வைணவ ஆள்வார்கள், இராமன், சீதை என்போரின் வெண்கலச் சிலைகள் பலவற்றைக் காணக்கூடியதாக உள்ளமை.

## சித்திரக்கலை

- நாரதமலையில் விஜயாலய சோழேஸ்வர கோயிலின் சிவன், சிவ நடராஜ மகாகுலன் ஆகியோரின் பாரிய அளவிலான சித்திரங்கள் வரையப்பட்டுள்ளமை.
- இங்கு சிறிய அளவில் தனிநபர்களின் சித்திரங்கள் பல கிடைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு குறிப்பிடப்பட்டுள்ள தேவி சித்திரத்தில் சமகால சிகை அலங்காரம், பல்வேறு ஆடை அணிகள் என்பன பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெற்றமை.

- தஞ்சாவூரில் பிருஹரீஸ்வரர் ஆலயத்தின் சுவர்களில் சிவ பெருமான் கைலாசத்திலிருந்து இறங்குவது போன்ற சித்திரங்கள் வரையப்பட்டுள்ளமை.



பிருஹரீஸ்வர ஆலய ஓவியங்கள்
*(source:http://tamilnation.com)*

**சோழப் பேரரசின் வீழ்ச்சி**

- இந்தியாவிலும் இந்தியாவுக்கு வெளியிலும் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால யுத்தங்களுக்கு நிறைய செலவு செய்யப்பட்டமையால் சோழரது பொருளாதாரம் தளர்ச்சியடைந்தது.
- சோழர்களுக்கு எதிராகப் பாண்டியர், சாளுக்கியர், சேரர், கலிங்கர், பல்லவர் என்போர் கிளர்ந்தெழுந்தமை.
- பலவீனமான ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வந்தமை. (இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாவது இராஜாதிராஜன்)
- இந்த ஆட்சியாளர்கள் இந்து சமயத்தின் ஒரு பிரிவான வைணவத்தின் வளர்ச்சிக்கு உதவியமை யால் ஏற்பட்ட எதிர்ப்பு.
- பாண்டிய சிங்காசனத்தின் பொருட்டு சோழ, சிங்கள ஆட்சியாளர்களிடையிலான மோதல் பாண்டியரது வலிமை உயர்ந்திடக் காரணமாக அமைந்தமை.
- சோழரது ஆட்சிமுறையின் பிரதேச நிர்வாக அலகுகளுக்குச் சுயாதீனமாக செயற்படக்கூடிய நிலைமை இருந்ததால் பிரதேச அரசுகள் பலமுடையதாகியமை.

**தேர்ச்சி மட்டம்** : 11.2 தென்னிந்திய அரசியல் நிலைமைகள் இலங்கை மீது செலுத்திய விதத்தினைப் பகுப்பாய்வார்.

**பாடவேளைகள்** : 06

**கற்றற்பேறுகள்** :
- தென்னிந்தியா இலங்கைமீது தாக்கம் செலுத்துவதற்கான காரணங் களை அறிவர்.
- இலங்கைமீது தாக்கம் செலுத்திய அரசுகளையும் அவற்றின் தாக்கங் களையும் விபரிப்பர்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

- இலங்கை மீது தாக்கம் செலுத்திய தென்னிந்திய அரசுகள்
- இலங்கை மீது தென்னிந்தியா தாக்கம் ஏற்படுதவற்கான காரணங்கள்
- இலங்கை மீதான தென்னிந்திய தாக்கங்களின் இயல்புகள்
- இலங்கை மீதான தென்னிந்திய தாக்கங்களின் விளைவுகள்

## இலங்கைமீது தாக்கம் செலுத்திய தென்னிந்திய அரசுகள்
- பல்லவ, பாண்டிய, சோழ, சாளுக்கிய விஜயநகர் அரசுகள்

## இலங்கை மீதான தென்னிந்திய தாக்கங்களுக்கான காரணங்கள்

### புவியியல் காரணிகள்
- இலங்கை இந்தியாவுக்கு அண்மையில் அமைந்திருத்தல்.
- இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருத்தல்.
- இங்கையின் ஆரம்ப இராசதானிகளில் புவியியல் ரீதியான பாதுகாப்பு குறைவாகக் காணப்பட்டமை. (அனுராதபுரம், பொலன்னறுவை)

### அரசியல் காரணிகள்
- பல்வேறு குடிப்பெயர்வுக் குழுக்களால் குடியேற்றங்களை அமைக்கக்கூடியதாக இருந்தமை.
- பல்வேறு ஆக்கிரமிப்புக் குழுக்கள் தமது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளக்கூடியதாக இருந்தமை.
- உள்நாட்டுப் பூசல்களின்போது உதவி பெறக்கூடியதாக இருந்தமை.
- அரசியல் நோக்குடன் விவாகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்தமை.

### பொருளாதாரக் காரணிகள்
- இந்து சமுத்திர வலயத்தில் அதிகாரத்தை நிலைநாட்டிக்கொள்வதில் இலங்கை முக்கிய இடத்தினைப் பெற்றமை.
- பெறுமதியான பல வர்த்தகப் பொருட்களை இலங்கையில் இருந்து பெறக்கூடியதாக இருந்தமை.
- நீர்ப்பாசன நாகரிகத்தின் வளர்ச்சியுடன் அடைந்த பொருளாதார வளர்ச்சி.

### சமூகப் பண்பாட்டுத்தாக்கம்
- விவாக உறவுகளை ஏற்படுத்திக்கொண்டதன் அடிப்படை
- சமய கட்டமைப்பு விரிவாக்கத்தின் அடிப்படை
- கட்டிடக்கலை, ஏனைய கலை மரபுகளின் பரவலுக்கான அடிப்படை

## இலங்கை மீதான தென்னிந்தியச் செல்வாக்கு

### அரசியல் செல்வாக்கு

- திராவிடக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டமை.
- பண்டைக் காலந்தொடக்கம் தென்னிந்திய வர்த்தகர்கள் வருகை தந்தமை.
- மதுரையிலிருந்து விஜயனது முடிசூட்டுக்கு இளவரசி வரவழைக்கப்பட்டமை.
- இலங்கையின் மேற்குக் கரையில் கல்யாணி குடியேற்றம் இந்தியாவின் கல்யாணி பிரதேசத்திலிருந்து வந்தவர்களால் நிறுவப்பட்டதாகக் கருதப்படுகின்றமை.
- இடையிடையே ஆட்சி அடிப்படையிலான ஆக்கிரமிப்புக்கள் மேற்கொள்ளப்படல்.
  - கி.மு. 3ஆம் நூற்றாண்டு சேனன் - குத்திகன் ஆக்கிரமிப்பு - சூரதிஸ்ஸ மன்னன் காலம்
  - கி.மு. 205 எல்லாளனின் ஆக்கிரமிப்பு - அசேல மன்னன் காலம்
  - கி.மு. 103 ஏழு தமிழர்களின் ஆக்கிரமிப்பு - வலகம்பா மன்னன் காலம்
  - கி.மு. 432 ஆறு தமிழர்களின் ஆக்கிரமிப்பு - மித்தசேன மன்னன் காலம்
  - ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் - முதலாம் சேன மன்னன் காலம்
  - முதலாம் இராஜ இராஜன் இரண்டாம் இராஜேந்திரன் - 5ஆம் மகிந்த மன்னன் காலம்
- உதவிப் படைகளைப் பெற்றுக்கொண்டமை
  - பாண்டிய மன்னன் வரகுண வர்மன் இரண்டாம் சேனனின் உதவியை நாடல்.
  - இரண்டாம் இராஜசிம்மன் மாறவர்மன் (பாண்டிய மன்னன்) ஐந்தாம் காசியப்ப மன்னனின் உதவியை நாடியமை.
  - இராஜசிம்மன், பராக்கிரம பாண்டியன் ஆகிய மன்னர்கள் முதலாம் பாராக்கிரமபாகு மன்னனின் உதவியை நாடியமை.
- அரசியல் நோக்குடன் திருமண உறவுகளை ஏற்படுத்தியமை.
  - விஜயனும் அவனது தோழர்களும் மதுரையிலிருந்து அரசகுலப் பெண்களை வரவழைத்தமை
  - மகாநாம, சந்த முகசிவன் என்போர் தென்னிந்தியப் பெண்களைத் திருமணம் செய்தமை.
  - பாண்டிய இளவரசன் ஒருவனுக்கு முதலாம் விஜயபாகு மன்னனின் தங்கையான மித்தா விவாகம் செய்து கொடுக்கப்பட்டமை.
- அரச நிர்வாக நடவடிக்கைகளில் ஏற்பட்ட தாக்கம்
  - பல்வேறு இந்திய உத்தியோகபூர்வப் பெயர்கள் பயன்படுத்தப்பட்டமை. மெய்க்காப்பார், உள்வாடி, கணக்கர், வனுடீன், மேலாட்சி, பெரநாட்டியம், கோல்பாட்டி

### பொருளாதாரத்தாக்கம்

- இலங்கையில் ஆரம்பக் குடியேற்றங்களை அமைப்பதற்கு வர்த்தகர்களின் பங்களிப்புப் பெருமளவில் இருந்ததாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகின்றமை.
  நானாதேசி, வலஞ்சியார், ஐநூற்றுவர் முதலான தென்னிந்திய வர்த்தகப் பிரிவுகள் பற்றி இலங்கையின் மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளமை.
- வர்தகர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின்படி தென்னிந்திய ஆக்கிரமிப்பாளர்கள் இலங்கையை ஆக்கிரமித்தல் (1ஆம் இராஜராஜன்)
- விஜயன் உள்ளிட்ட அமைச்சர்கள் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு மதுரையிலிருந்து வரவைழைக்கப்பட்ட பெண்களுடன் பதினெட்டு வகை சாதியினரைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்கள் வந்தமை.

**சமூக, பண்பாட்டுத் தாக்கம்**

- சிங்களவர், தமிழர், கன்னடா, மலையாளிகள், தெலுங்கர், கொங்கர் என இலங்கைச் சமூகம், பன்மைச் சமூகமாக மாற்றப்பட்டமை.
- தென்னிந்தியாவில் நிலவிய சாதிமுறை, இந்து பண்பாட்டு முறை இலங்கை சமூகத்துடன் இணைந்தமை.

- பல்லவ, பாண்டிய, சோழ கட்டிடக்கலை மற்றும் ஏனைய பண்பாட்டு மரபுகளின் தாக்கம் நிகழ்ந்தமை.

  உதாரணம்:
  - பொலன்னறுவை இலக்கம் 01 , 03 சிவ ஆலயம் - பாண்டியர்கலைப்பாணி
  - சோழ கட்டிடக்கலை (திராவிடர் பாணிக்கலை)
  - நாலந்தா சிலைமனை - பல்லவ கட்டிடக்கலை
  - கடலாதெனிய விகாரை - விஜயநகர் கட்டிட நிர்மாணம்
  - யாப்பகூவ அரண்மனை - யாவா / பாண்டியர் மரபு

## இலங்கை மீதான தென் இந்தியத் தாக்கங்களின் விளைவுகள்

- இலங்கையின் வட பகுதியில் தமிழ் அரசு ஒன்று கட்டியெழுப்பப்பட்டமை.
- தமிழ்மொழியும், இந்து நாகரிகமும் இலங்கை சமூகத்தில் இணைந்தமை.
- தாதுசேன மன்னனின் பின்னர் இலங்கை மீதான ஆக்கிரமிப்புக் காரணமாகச் செல்வங்கள் சூறையாடப்பட்டமை, குளங்கள், அணைகள் அழிக்கப்பட்டமை என்பன காரணமாக வீழ்ச்சி ஏற்பட்டமை.
- சிங்கள, தமிழ்ப் பண்பாடுகள் கலந்தமை.
- இந்து சமய வழிபாடுகள் பௌத்த வழிபாடுகளுடன் கலந்தமை.
  (விகாரைகளில் கோயில்கள் அமைக்கப்படல்)
- பண்டைய இந்துக் கோயில்கள் பல தற்காலம் வரையில் சிறப்புற்றுக் காணப்படல் (கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், திருக்கேதீஸ்வரம்)

## கணிப்பீடு 01

- **பின்வரும் முறையில் பல்தேர்வு வினாக்களைத் தயாரித்துக் கணிப்பீடு செய்க.**

**முதலாம், இரண்டாம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அவ் ஐந்தினுள் ஒன்று மற்றவையோடு பொருந்தாது. பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. சோழ 2. சேர 3. பாண்டிய 4. வாகாட 5. பல்லவ (...........)

02. 1. இரஷ்டிர 2. வளநாடு 3. மண்டலம் 4. நாடு 5. கூற்றம் (...........)

**இலக்கம் (03), (04) ஆகிய வினாக்களுக்கு x, y என்னும் நிரல்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை y நிரலில் உள்ளவற்றை x நிரலிற்கேற்பச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது ஒன்று சரியானதாகும். சரியான சேர்மானத்தைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

03.

| x | y |
|---|---|
| i. கடுங்கோலன் | A - பல்லவ |
| ii முதலாம் புலகேசி | B - இராஷ்டிரகூட |
| iii. மூன்றாம் கோவிந்தன் | C - சாளுக்கிய |
| iv. சிம்மவிஷ்ணு | D - சோழ |
| v விஜயாலயன் | E - பாண்டிய |

1. ADCBE  2. BEDCA  3. CAEDB  4. DBAEC  5. ECBAD

(...........)

04.

| x | y |
|---|---|
| i. தஞ்சாவூரில் பிருகதீஸ்வரக் கோயில் | A - ஹொய்சாளர் |
| ii எல்லோராவில் கைலாசநாதர் கோயில் | B - சாளுக்கியர் |
| iii. பதாமியில் விஷ்ணு மகா கோயில் | C - இராஷ்டிரகூடர் |
| iv. பேலூர்லில் சென்னகேஷவ கோயில் | D - பல்லவர் |
| v மகாபலிபுரத்தில் இவரலே கோயில் | E - சோழர் |

1. ADCBE  2. BEDCA  3. CAEDB  4. DBAEC  5. ECBAD

(...........)

**இலக்கம் 05 - 07 வரையிலான வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

05. ‘மதுரை’ கொண்ட என்ற பட்டப் பெயரைக் கொண்ட சோழ ஆட்சியாளன்?
1. விஜயாலன்  2. முதலாம் இராஜராஜன்  3. முதலாம் இராஜேந்திரன்
4. முதலாம் ஆதித்தன்  5. முதலாம் பராந்தகன்  (...........)

06. தென் இந்தியாவுக்கு ஆரிய பண்பாட்டைக் கொண்டு சென்ற முனிவர்?
1. வால்மீகி  2. விஸ்வாமித்திரர்  3. வசுபந்து
4. பரதன்  5. அகத்தியர்

(...........)

07. ‘மும்முடிச் சோழன்’ என்ற விருதினைப் பயன்படுத்திய மன்னன்
1. முதலாம் ஆதித்தன்  2. முதலாம் பராந்தகன்  3. முதலாம் இராஜராஜன்
4. முதலாம் இராஜேந்திரன்  5. முதலாம் குலோத்துங்கன்  (...........)

**இலக்கம் 08 - 09 ஆகிய வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் முறையே ஐந்து விடயங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று உரிய தலைப்பிற்குப் பொருத்தமற்றதாகும். அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

08. சோழ நிருவாகம்
   1. சோழரது நிருவாகத்தில் முக்கிய இயல்பு மாகாண ஆட்சி முறையாகும்.
   2. சோழ நகராட்சி தொடர்பாகப் பெறுமதி வாய்ந்த தகவல்கள் சங்க இலக்கியத்தில் காணப்படுகின்றது.
   3. சோழரது நிருவாகத்தில் மன்னனே முக்கிய இடத்தினைப் பெற்றான்.
   4. மன்னனின் ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசம் மண்டலம் எனப் பிரிக்கப்பட்டிருந்தது. (...........)

09. பல்லவரது கட்டிடக்கலை
   1. கடினமான பாறைகளைக் குடைந்து கோயில்கள் அமைத்தமை.
   2. தனிக் கருங்கல் வெட்டி இரதங்கள் நிர்மாணித்தமை.
   3. சில கோயில்கள் மன்னர்களதும் அரசிகளினதும் உருவச் சிலைகளால் அலங்கரிக்கப் பட்டிருந்தது.
   4. பிரபல்யம் வாய்ந்த பிருகதீஷ்வரர் ஆலயம் பல்லவர்களால் அமைக்கப்பட்டதாகும்.
   5. பல்லவர்களின் கீழ் நடைபெற்ற சமய மறுமலர்ச்சி அவர்களது கட்டிடக்கலை நடவடிக்கை களுக்கு உயிரளிப்பதாக இருந்தமை.

(...........)

- **இலக்கம் 10 - 12 வரையிலான வினாக்களுக்கு A, B, C, D என நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. அவைகளில் ஒன்றோ பலவோ சரியானவையாகும். சரியான விடையை அல்லது விடைகளைத் தெரிவு செய்து A யும் B யும் சரியாயின் (1) எனவும், B யும் C யும் சரியாயின் (2) எனவும், C யும் D யும் சரியாயின் (3) எனவும், A யும் C யும் சரியாயின் (4) எனவும், ஒரு விடையோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் (5) எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

10. முதலாம் இராஜராஜன்
   A. அவனால் இலங்கை கைப்பற்றப்பட்டது.
   B. தென்னிந்தியாவில் பலம்வாய்ந்த கடற்படையை அமைத்து சேர அரசின் கடற் படையை அழித்தான்.
   C. மதுரையை வெற்றி கொண்ட அவனால் பாண்டிய நாடும் கைப்பற்றப்பட்டது.
   D. தனது வங்காள வெற்றியை நினைவுகூரும் முகமாக அவனால் புதிய தலைநகரம் அமைக்கப்பட்டது.

(...............)

11. சாளுக்கியர்
   A. சாளுக்கிய வம்சத்தின் ஆரம்ப அரசன் முதலாவது கீர்த்திவர்மன் ஆவான்.
   B. வாதாபிச் சாளுக்கியர், கல்யாணி சாளுக்கியர், வேங்கிச் சாளுக்கியர் என மூன்று பிரிவினையுடையோராவர்.
   C. மதுரையை வெற்றி கொண்ட கீர்த்தி வர்மனால் பாண்டிய அரசு கைப்பற்றப்பட்டமை.
   D. தனது வங்காள வெற்றியை நினைவுகூரும் பொருட்டு அவனால் புதிய தலைநகரம் ஒன்று அமைக்கப்பட்டமை.

(...............)

12. சோழ நிருவாகம்
   A. இராசதானியின் சில பிரதேசங்கள் நேரடியாக மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது.
   B. இராசதானியின் சில பிரதேசங்கள் சோழ ஆட்சியை ஏற்றுக்கொண்ட ஆட்சியாளர் களால் நிருவகிக்கப்பட்டது.
   C. மன்னனுக்கு நிருவாகத்தில் உதவிட மந்திரி பரிஷத் எனும் ஆலோசனை சபை இருந்தது.
   D. இந்துக்களான பக்தர்களான சோழர்கள் தமது அரசில் ஏனைய சமயங்களை வழிபட அனுமதி வழங்கவில்லை.

(...............)

## கணிப்பீடு 2

• **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. சோழரது நிருவாகத்தில் காணப்பட்ட அடிப்படை இயல்புகளைப் பரிசீலனை செய்க.
(14 புள்ளிகள்)

02. முதலாம் இராஜேந்திர சோழ மன்னனில் விசேட கவனம் செலுத்தி சோழர்களின் போர் வெற்றிகளைக் கலந்துரையாடுக. (14 புள்ளிகள்)

03. சோழர்களின் கீழ் தென்னிந்தியாவில் ஏற்பட்ட பண்பாட்டு எழுச்சியைப் பின்வரும் தலைப்பின் கீழ் விபரிக்குக.
   1. சமயம் 2. கட்டிடக்கலை (7 x 2 = 14 புள்ளிகள்)


04. A அல்லது B பிரிவுக்கு விடை எழுதுக.
   A - சோழரது பிரதேச நிருவாகத்தினதும் கிராம நிர்வாகத்தினதும் அடிப்படை இயல்பு களைப் பரிசீலிக்குக.
   B - வங்காளத்தில் பாலர்களின் அரசியல், பண்பாட்டு செயற்பாடுகளை விபரிக்குக.
(14 புள்ளிகள்)

05. தென்னிந்திய திராவிடப் பண்பாட்டு வளர்ச்சிக்கட்டம் பல்லவர் காலத்தில் தோற்றம் பெற்றது.
   (i) பல்லவக் கட்டிடக் கலை மரபுடன் தொடர்புடைய பிரதான மத்திய நிலையமொன்றினைப் பெயரிடுக.
   (01 புள்ளி)
   (ii) பல்லவரது பண்பாட்டு வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த ஆட்சியாளர்கள் இருவரின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (02 புள்ளிகள்)
   (iii) பல்லவர் கலை, கட்டிட மரபுகளின் பிரதான இயல்புகளைச் சுருக்கமாகத் தெளிவுபடுத்துக. (04 புள்ளிகள்)
   (iv) மேற்கூறப்பட்ட கூற்றினைத் தொல்பொருள் ஆதாரங்களுடன் பரிசீலணை செய்க.
   (07 புள்ளிகள்)

## கணிப்பீடு 3

06. பின்வரும் இடங்களை இந்தியப் படத்தில் குறித்து, அவற்றில் இரண்டு இடங்களைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

   காஞ்சி, பாதாமி, மகாபலிபுரம், கன்னோசி, காவேரி நதி, மதுரா, கங்கைகொண்ட சோழபுரம், மாமல்லபுரம்


ஐரோப்பி வரலாறு

# 8. நெப்போலியன் பொனபாட்டும் அவனுடைய பேரரசும்

## அறிமுகம்

பல்லாண்டுகளாக நிலவி வந்த பிரச்சினைகள் மலிந்த பிரான்சை அதிலிருந்து மீட்டு, மீண்டும் அதனைச் சாதாரண நிலைக்குக் கொண்டுவந்த 'பிரான்சியப் புரட்சியின் குழந்தை' எனப்படும் நெப்போலியன் பொனபாட் அதனைப் பலம்மிக்க அரசாக்குவதற்குத் தொடரான சீர்திருத்தங்கள் பலவற்றையும் செயற்படுத்தினான். அதன் மூலம் பிரான்சு பொருளாதார, நிர்வாகத் துறைகளில் அபிவிருத்தியுற்ற நாடொன்றானதுடன் கலாசாரத் துறையிலும் முன்னேற்றமடைந்தது. பிரான்சை மீண்டும் கட்டியெழுப்பிய நெப்போலியன் பொனபாட் ஏனைய ஐரோப்பிய நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு பரந்த பேரரசொன்றை உருவாக்கிக் கொண்டான். நெப்போலியன் பொனபாட்டின் பேரரசுவாதக் கொள்கையால் இறுதியாக அவனுக்கு எதிரான ஐரோப்பிய நாடுகள் ஒன்றுபட்டு, 1815 இல் புரிந்து வோட்டர்லு யுத்தத்தில் நெப்போலியனை அவை தோற்கடித்தன. இவ்வாறு நெப்போலியன் பேரரசொன்றைக் கட்டியெழுப்பிய முறையையும் பிரான்சை புகழ்பெற்ற அரசொன்றாக் குவதற்கு மேற்கொண்ட தேசிய சீர்திருத்தங்களையும் அவ்விராச்சியம் வீழ்ச்சியுற்றமைக்கான காரணங்களையும் கலந்துரையாடுதல் இவ்வலகின் நோக்கமாகும்.

**தேர்ச்சி** : • புகழ்பெற்ற நபர்களின் வீரதீரச் செயல்கள் வரலாற்றை உருவாக்குவதில் பங்களிப்புச் செய்த விதத்தை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 8.1 நெப்போலியனின் சீர்திருத்தங்கள் பிரான்சில் தேசியவாதத்தைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களித்த விதத்தை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- நெப்போலியன் பலம்வாய்ந்த பேரரசை உருவாக்கிய விதத்தை விவரிப்பார்.
- பலம்வாய்ந்த பேரரசொன்று தோல்வியுறுவதற்கான காரணங்களை முன்வைப்பார்.
- நெப்போலியனின் பேரரசுக்குட்பட்ட இடங்களைப் புறவுருவப் படமொன்றில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## நெப்போலியன் பலமடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள்

- பிரான்சியப் புரட்சியின் பின்னர் நாட்டில் ஏற்பட்ட அரசியல் உறுதியற்ற நிலைமையால் பலம் பொருந்திய ஆட்சி ஒன்றின் தேவை ஏற்பட்டமை.
- நெப்போலியனிடம் இயற்கையாகவே காணப்பட்ட தைரியம், செயற்றிறன், இலக்கை அடையும் ஆற்றல் போன்ற பண்புகள்.
- தலைவன் என்ற வகையில் பொதுமக்கள் நெப்போலியனை ஏற்றுக்கொண்டமை.

## நெப்போலியனின் எழுச்சி

- 1769 இல் கோசிக்கா தீவின் எஜோசியோவில் பிறந்த நெப்போலியன் பாரிசுக்கு வந்து, அங்கு கல்வி கற்று, பீரங்கிப் படை வீரனாகப் பிரான்சிய இராணுவத்தில் இணைந்து கொண்டமை.
- 1793 இல் இங்கிலாந்தின் படையைத் தாக்கி டுலோங் துறைமுகத்தை விடுவித்துக் கொண்டமை. இது நெப்போலியனின் எழுச்சிக்கான ஆரம்ப சம்பவமாகும்.
- 1795 இல் பணிப்பாளர் சபைக்கு எதிராக எழுச்சியுற்ற மக்கள் கிளர்ச்சியை அடங்கியமை.

- 1796 இல் இத்தாலிக்கு எதிராக ஏவப்பட்ட படையின் தலைமைத்துவத்தை ஏற்று, அதனை ஆக்கிரமித்தமை. ஆஸ்திரியாவைத் தோற்கடித்து, அதன் ஆட்சிக்குட்பட்டிருந்த இத்தாலி நாட்டை சுதந்திரமடையச் செய்தமை.
- ஆஸ்திரியாவுடன் 'கெம்போ போமியோ' ஒப்பந்தத்தைச் செய்துகொண்டு, வட இத்தாலியைத் தமதாக்கிக் கொண்டமை.
- மோல்டாவைக் கைப்பற்றிக் கொள்ளல்.
- எகிப்தை ஆக்கிரமித்தல்.
- 1797 இல் பணிப்பாளர் சபையை அதிகாரத்திலிருந்து அகற்றிவிட்டு கொன்ஸல் முறை ஒன்றை ஏற்படுத்தியமை. மூவருடன் கூடிய கொன்சல் சபையில் நெப்போலியனும் கான்ஸல் ஒருவர் ஆனமை.
- 1799 இல் பிரதம கொன்ஸல் ஆனமை.
- 1802 இல் ஆயுள் கால கொன்ஸல் ஆனமை.
- 1804 இல் பிரான்சியப் பேரரசனாக முடிசூட்டப்பட்டமை.
- பொதுசன அபிப்பராயத்தின் மூலம் பேரரசன் பதவியை உறுதிப்படுத்திக் கொண்டமை.



***நெப்போலியன் பொனபாட்***

*(source:http://deadliestfiction.wikia.com/wiki/Napoleon_Bonaparte)*

## நெப்போலியனின் தேசியப் புனரமைப்பு

- பிரான்சில் பொனபாட் வாதத்தை உறுதிப்படுத்தல்.
- ஜனநாயக வாதத்திற்கு ஓரளவுக்கு இடமளிக்கப்பட்டமை.
- சர்வாதிகார ஆட்சியாளனாக இருந்தாலும் தேர்தல்கள் நடத்தப்பட்டமை.
- தகுதிக்கேற்ற முறையில் பதவிகளில் அமர முடிந்தமை.
- நிர்வாகப் புனரமைப்பை மேற்கொண்டமை.
- மத்தியமயப்படுத்தப்பட்ட ஆட்சியை உருவாக்கியமை.
- பிராந்திய ஆட்சி நடவடிக்கைகளுக்காக பிரபெக்ட்மார் நியமிக்கப்பட்டமை.
- பேரரசால் பல்கலைக்கழகங்கள் நிர்வகிக்கப்பட்டமை.

## கல்வி

- இடைநிலைக்கல்வியை முறைமைப்படுத்துவதற்காக 'லைசீஸ்' எனும் கல்வித்தாபனம் ஒன்றை உருவாக்குதல்.
- பல்கலைக்கழக நிர்வாகம், சர்வாதிகாரப் போக்கிற்கு வளைந்து கொடுத்தல்.
- சர்வாதிகார ஆட்சியை உறுதிப்படுத்திக் கொள்வதற்குக் கல்வியைக் கருவியாக்கிக் கொண்டமை.

- இயற்கை விஞ்ஞானத்தைக் கற்பதனை ஊக்குவித்தல்.
- விஞ்ஞான, கணித பாடங்களைப் பாடசாலையில் கற்பிப்பதில் கவனஞ் செலுத்தல்.
- வரலாறு, அரசியல் போன்ற பாடங்களைப் பாடசாலை பாடத்திலிருந்து ஒதுக்குதல்.

**சமயம்**

- சமய தாபனங்களை அரசின் கீழ் கொண்டுவரல்.
- 1801 இல் பாப்பாண்டவருடன் கொன்கோடாட் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளல்.
- ரோமன் கத்தோலிக்க சமயத்தை அரச சமயமாக ஏற்றுக்கொண்டமை.
- ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளித்தமை.

**நீதிமன்ற நடவடிக்கைகள்**

- முழு நாட்டிற்கும் பொதுவான நீதி முறைமையை ஏற்படுத்தல்.
- நெப்போலியனின் சட்டத் தொகுதி என்ற பெயரில் பொதுவான சட்டமுறை ஒன்று வகுக்கப்பட்டமை.
- பிரதம கொன்ஸலால் நீதிபதிகள் நியமிக்கப்பட்டமை.
- அரச உத்தியோகத்தர்களுக்காக நிர்வாக நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டமை.
- 'லேத்ராதி கெச்சே' எனும் பிடியாணை முறையை மீளவும் உருவாக்கியமை.
- தனிநபர் சுதந்திரம் வரையறுக்கப்பட்டமை.
- புத்தகங்கள், பத்திரிகைகளின் சுதந்திரம் வரையறுக்கப்பட்டமை.

**பொருளாதாரக் கொள்கைகள்**

- ஒருமுகப்படுத்தப்பட்ட நாணய முறையும் வங்கி முறையும் ஏற்படுத்தப்பட்டமை.
- இறக்குமதிப் பொருட்கள் மீது அதிக தீர்வை விதிக்கப்பட்டமை.
- பிரான்சில் விவசாயத்தையும் கைத்தொழிலையும் அபிவிருத்தி அடையச் செய்தல். பீட்றூட் கிழங்கு உற்பத்தியும் அதன் மூலம் சீனிக் கைத்தாழில் மேற்கொள்ளப்பட்டமையும்.
- உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தல்.
- 1800 இல் பிரான்சின் மத்திய வங்கி நிறுவப்பட்டமை.
- விவசாயிகளுக்குச் சட்டரீதியாக நிலங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டமை.
- செயற்றிறன் மிக்க வரி முறைமை ஒன்று உருவாக்கப்பட்டமை.
- பிரான்ஸ் கைத்தொழில்களில் முன்னேற்றம் அடைந்தமை.

**பொதுமக்களுக்கான தேவைகள்**

- லூவர் அருங்காட்சியகம் கட்டப்பட்டமை.
- பெருந்தெருக்களும் கால்வாய்களும் விருத்தியடைந்தமை.
- பொதுமக்களுக்கான பூங்காவனங்கள் ஏற்படுத்தப்பட்டமை.
- பிரான்சிய மக்களிடையே தேசிய உணர்வை வளர்ச்சியடையச் செய்தல்.




***நெப்போலியனால் வெளியிடப்பட்ட நாணயக்குற்றிகள்***

(source:https://en.wikipedia.org/wiki/Napol%C3%A9on_(coin))

•



***லூவர் அருங்காட்சியகம்*** *(source:https://www.britannica.com/topic/Louvre-Museum)*





***நெப்போலியனால் உருவாக்கப்பட்ட பெருந்தெருக்கள்***
*(source:https://www.france-voyage.com/tourism/napoleon-road-1451.htm)*

## நெப்போலியனின் வெளிநாட்டுக் கொள்கை

- ஆஸ்திரிய இராணுவத்தைத் தோற்கடித்து, அந்நாட்டுடன் கெம்போபோமியோ ஒப்பந்தத்தைச் செய்துகொண்டமை.
- 1800 இல் ஆஸ்திரியாவுடன் லுனோவில் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளல். இதனால் சீசெல்பைன், லிகுரியன், நெல்வெடிகஹா, பத்தேவியா குடியரசுகளுக்கு பிரான்சின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்பட்டமை.

- பிரான்சுக்கு எதிராக ஆஸ்திரியா, ரஷ்யா, இங்கிலாந்து நாடுகள் ஒன்றுபட்டு, கூட்டணியை ஏற்படுத்திக்கொண்டமை.
- 1802 இல் இங்கிலாந்துடன் ஏமியன்ஸ் ஒப்பந்தத்தைச் செய்துகொள்ளல்.
- 1805 இல் டிரபல்கார் யுத்தத்தில் ஆங்கிலேயரால் நெப்போலியன் தோற்கடிக்கப்படல்.
- 1805 இல் ஒஸ்டலிஸ்ட் யுத்தத்தில் ஆஸ்திரிய, ரஷ்ய கூட்டு இராணுவம் தோற்கடிக்கப்பட்டமை. ஆஸ்திரியாவுடன் பிரஸ்பர்க் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படல்.
- ஆஸ்திரியாவின் பெருமளவு பிரதேசத்தை ஒன்றுபடுத்தி ரைன் சமஷ்டி உருவாக்கப்பட்டமை. இதனால் இதுவரை இருந்துவந்த புனித ரோமப் பேரரசு முடிவுற்றமை.
- 1806 இல் ஜெனா (ஜினா) யுத்தத்தில் பிரஷ்யாவைத் தோற்கடித்தமை.
- 1806 இல் பர்ளின், மிலான் கட்டளைகள் மூலம் கண்டத்துக்கான தீர்வைச் செயற்படுத்தியமை.
- 1807 இல் பிரீட்லண்ட யுத்தல் ரஷ்யாவைத் தோற்கடித்து, அதனுடன் டில்சிட் ஒப்பந்தத்தைச் செய்துகொண்டமை.
- பிரஷ்யாவின் பல பிரதேங்களையம் ஒன்றிணைந்து வெஸ்ட்பேலியா அரசை உருவாக்கியமை.
- போலந்தின் பரந்த பிரதேசம் ஒன்றை ஒன்றிணைத்து வோர்ஸோ இளவரசர் ஆட்சிப் பகுதியை உருவாக்கியமை.
- தான் கைப்பற்றிய பிரதேசங்களில் குடியாட்சிகளைத் தோற்றுவித்து அவற்றின் ஆட்சியாளர்களாகத் தமது உறவினர்களை அமர்த்தியமை.



***ஆஸ்திரிய-ரஷ்ய கூட்டுப் படையை தோல்வியுறச் செய்தமையைச் சித்திரிக்கும் ஓவியம்***
*(source: https://en.wikipedia.org/wiki/Napoleonic_Wars)*

## நெப்போலியனின் தோல்விக்கான காரணங்கள்

- கண்டத்துக்கான தீர்வைச் செயற்படுத்தியமையால் ஐரோப்பிய நாடுகள் பிரான்சின் எதிரிகளானமை.
- நெப்போலியனால் உருவாக்கப்பட்ட தேசியவாதக் கருத்துக்கள் அவனது எழுச்சிக்குப் போன்றே வீழ்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தமை.
- நெப்போலியனின் கீழிருந்த பேரரசு பரந்துபட்டிருந்தமையால் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்டமை.
- தாம் கைப்பற்றிய பிரதேசங்களின் ஆட்சியாளர்களாக தமது உறவினர்களை நியமித்தமை.
- பிற்காலத்தில் இராணுவத்தினரின் ஈடுபாடும் உத்வேகமும் குறைந்து சென்றமையும் அவர்களிடையே மோதல்கள் ஏற்பட்டமையும்.
- குடாநாட்டுக்கான யுத்தத்தில் ஸ்பானியாவுடன் மேற்கொண்ட போரின்போது, அவர்களுக்கு ஆங்கிலேயரின் உதவி கிட்டியமையால் பிரான்ஸ் தோல்வியுற்றமை.

- ஐரோப்பா எங்கும் தாராண்மைவாத (லிபரல்) கருத்துக்கள் பரவியமை.
- பிரித்தானிய கடற்படைப் பலத்திற்கு முகங்கொடுக்க பிரான்சியக் கடற்படையால் இயலாமை.
- ரஷ்ய ஆகிரமிப்பின்போது நெப்போலியன் படுதோல்வி அடைந்தமை.
- ஐரோப்பியப் பலசாலிகள் ஒன்றுபட்டு, நெப்போலியனுக்கு எதிராக ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்கிக் கொண்டமை.
- நட்பு நாடுகள் ஒன்று சேர்ந்து லிப்சிக் யுத்தத்தில் நெப்போலியனைத் தோற்கடித்தமை.
- பிரான்சிய செனட் சபை, நெப்போலியனைப் பேரரசுப் பதவியில் இருந்து விலக்கி, எல்பா தீவிற்கு நாடுகடத்தியமை.
- நெப்போலியன் மீண்டும் பிரான்சை வந்தடைதலும் பிரான்சியர் அவனை ஆதரவுடன் வரவேற்றமை.
- நட்பு அணியினருடன் தனித்தனியாகச் செய்த யுத்தங்கள் பலவற்றில் நெப்போலியன் வெற்றிபெற்றாலும் நட்பு நாடுகள் ஒன்றுபட்டு மேற்கொண்ட போரில் அவன் தோல்வியுற்றமை.
- சென் ஹெலெனா தீவிற்கு நாடுகடத்தப்படல்.
- சென் ஹெலெனா தீவில் (1812 இல்) நெப்போலியன் இறத்தல்.



நெப்போலியனின் ரஷ்ய ஆக்கிரமிப்பு
(source:https://en.wikipedia.org/wiki/French_invasion_of_Russia)



சென் ஹெலெனா தீவின் இன்றைய தோற்றம்
*(source: http://www.cruisemapper.com/ports/saint-helena-island-port-588)*

## கணிப்பீடு 01

- **கீழ்வரும் வினாக்களுக்கு ஐவைந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதாவது ஒரு காரணத்திற்காக அடுத்த சொற்களுடன் பொருந்தாதுள்ளது. அவ்வாறான பொருத்தப்பாடற்ற பெயரைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. நெல் யுத்தம் 2. டிரபல்கார் யுத்தம் 3. செடேன் யுத்தம்
4. வோட்டர்லு யுத்தம் 5. ஒஸ்டர்லிஸ்ட் யுத்தம் (...........)

02. 1. ஜோஸப் பொனபாட் 2. லுவீ பொனபாட் 3. எலிஸே பொனபாட்
4. ஜோகிம் முறாட் 5. லுவீ நெப்போலியன் (...........)

03. 1. நிமோன் ஒப்பந்தம் 2. ஏமியன்ஸ் ஒப்பந்தம் 3. லுனெவில் ஒப்பந்தம்
4. டில்சிட் ஒப்பந்தம் 5. கெம்போபோமியா ஒப்பந்தம் (...........)

04. 1. ஆஸ்திரியா 2. பிரஷ்யா 3. சுவீடன்
4. ரஷ்யா 5. ஸ்பானியா (...........)

- **கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் விடயங்கள் ஐந்து தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தலைப்புக்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

05. நெப்போலியனின் வெளிநாட்டுத் தொடர்புகள்
1. 1802 இல் ஏமியன்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் இங்கிலாந்தை அடிமைப்படுத்தல்.
2. ரஷ்யாவுடன் டில்சிட் ஒப்பந்தத்தில் கையொப்பமிடல்.
3. பர்ஸின் கட்டளைப்படி கண்டத்துக்கான தீர்வை ஆரம்பித்தல்.
4. 1812 ஆம் ஆண்டில் மாஸ்கோ ஆக்கிரமிப்பு.
5. பிரஷ்யாவுடன் ஜேனாவில் போரிடல்.

(...........)

# கணிப்பீடு 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. ''நெப்போலியன் பொனபாட் பிரான்சிய சமூகத்தில் நிரந்தரமான செல்வாக்கைக் கொண்டுள்ளான்.''

    (i) நெப்போலியனின் பிறப்பிடத்தைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

    (ii) பிரான்சிய இராணுவம் முதல் முறையாக நெப்போலியனின் தலைமையில் ஆக்கிரமித்த நாடு எது? (01 புள்ளி)

    (iii) நெப்போலியன் பிரான்சின் ஆட்சியாளனாக வந்த விதத்தைச் சுருக்கமாகக் கூறவும். (04 புள்ளிகள்)

    (iv) அவனுடைய தேசியக் கொள்கைகளை வைத்து, மேலே தரபபட்டுள்ள கூற்றை விமர்சன ரீதியாக ஆராய்க. (08 புள்ளிகள்)

02. நெப்போலியன் கையாண்ட உள்நாட்டுக் கொள்கைகளைப் பரிசீலிக்குக. (14 புள்ளிகள்)

03. நெப்போலியன் பொனபாட் ஐரோப்பாவின் சிரேஷ்டமான இராஜதந்திரி எனக் கருதப்படுகிறான். கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் அவனுடைய சிரேஷ்டத்துவத்தை மதிப்பிடுக.

    (i) தேசிய புனரமைப்பு
    (ii) கொள்கைகளும் செயற்பாடுகளும்
    (iii) ஐரோப்பாவின் மீது ஏற்படுத்திய தாக்கம்

    (14 புள்ளிகள்)

# 9. வியன்னா மகாநாடு

## அறிமுகம்

1799 ஆம் ஆண்டில் பிரான்சின் பிரதம கொன்சலர் பதவிக்கு வந்த நெப்போலியன் பொனபாட், 1807 ஆம் ஆண்டளவில் முழு ஐரோப்பாவிலும் பரந்த பிரதேசத்தில் தமது ஆட்சியை உருவாக்கிக் கொண்டிருந்தான். 1815 இல் இங்கிலாந்து உட்பட முக்கியமான இராச்சியங்கள் ஒன்றுபட்டு நெப்போலியனுக்கு எதிராக மேற்கொண்ட வோட்டர்லு யுதத்தில் அவனைத் தோல்வியுறச் செய்து, சென் ஹலெனா தீவில் சிறைவைத்ததுடன், ஐரோப்பாவில் நெப்போலிய யுகம் ஒரு முடிவுக்கு வந்தது. ஒன்றைப் பதிற்றுக் காலமாக நெப்பாலியனால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் குழம்பிக் கிடந்த ஐரோப்பிய வரைபடத்தை மாற்றியமைக்க வேண்டியிருந்தது. ஐரோப்பாவில் சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் பலம்வாய்ந்த நாடுகளின் தலைவர்கள் 1814 -15 இல் ஆஸ்திரியாவின் தலைநகரான வியன்னாவில் ஒன்று கூடினர்.

வியன்னா மகாநாட்டைக் கூட்டுதவற்கான காரணங்கள் அதற்குச் சமூகமளித்த நாடுகள், ஐரோப்பாவில் சமாதானத்தைப் பேணுவதற்காக மேற்கொண்ட கொள்கைகளும் செயற்பாடுகளும் அது எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியமானது என்பது பற்றியும் ஆராய்ந்து பார்ப்பது இவ்வலகின் நோக்கமாகும்.

**தேர்ச்சி** : • ஐரோப்பாவின் பாதுகாப்பைப் பேணிக் கொள்வதற்காகத் தேசங்களிடையே ஒற்றுமையான செயற்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.1 பல்வேறு குழுக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாகச் செயற்படுவதின் முக்கியத்துவத்தை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :
- ஐரோப்பாவில் சமாதானத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக வியன்னா மகாநாடு மேற்கொண்ட செயற்பாடுகளை விளக்குவார்.
- சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மகாநாட்டு முறைமையின் முக்கியத்துவத்தை விமர்சன ரீதியாக விளக்குவார்.
- வியன்னா மகாநாட்டின் பின்னரான ஐரோப்பாவை புறவுருப் படமொன்றில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### வியன்னா மகாநாடு

பிரான்சியப் புரட்சியினாலும் நெப்போலிய யுத்தங்களாலும் சிக்கலடைந்திருந்த ஐரோப்பாவை மீண்டும் சுமுக நிலைக்குக் கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுப்பதும் அவ்வாறு ஏற்படுத்தப்பட்ட சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகவும் 1814-15 இல் பலம்வாய்ந்த ஐரோப்பிய நாடுகளின் தலைவர்கள் ஆஸ்திரியாவின் தலைநகரில் ஒன்றுகூடி நடத்திய மகாநாடு வியன்னா மகாநாடு என அழைக்கப்படுகின்றது.

### வியன்னா மகாநாட்டிற்குச் சமூகமளித்த நாடுகளும் அதன் தலைவர்களும்

- பிரித்தானியா - காசல்ரீ
- ஆஸ்திரியா - மெடர்நிக்
- ரஷ்யா - சார் அலெக்ஸாண்டர்

- பிரஷ்யா - iii ஆம் பிறெட்றிக் வில்லியம்
- பிரான்சு - சாள்ஸ் டெலிரென்ட்
- மெடர்நிக் மகாநாட்டின் தலைவனாகச் செயற்பட்டான்.

### வியன்னா மகாநாடு கூட்டப்பட்டதற்கான காரணங்கள்

- ஐரோப்பாவில் யுத்தங்களை முடிவுகட்டல்.
- சமாதானத்தை உருவாக்குதலும் உருவாக்கப்பட்ட சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்ளலும்.
- பிரான்சியப் புரட்சியினாலும் நெப்போலிய யுத்தங்களாலும் சிக்கலுற்றிருந்த ஐரோப்பிய வரைபடத்தை மீளவும் சீரமைத்துக் கொள்ளல.
- பிரான்சில் உள்ளக நிலைகளில் மாற்றங்களை ஏற்படுத்தல்.
  - பிரான்சில் எவ்வாறான ஆட்சிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்?
  - பிரான்சின் எல்லைகள் எவ்வாறு மாற்றியமைக்கப்பட வேண்டும்?
  - மீண்டும் பிரான்சு பலப்படுவதை எவ்வாறு தடுப்பது?
  - பிரான்சை ஆக்கிரமிப்பாளனாகக் கருதி அதற்கு வழங்கப்பட வேண்டிய தண்டனைகள் யாவை?

  மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சித்தல்.

### மகாநாட்டினர் முகங்கொடுக்க நேர்ந்த பிரச்சினைகள்


- நெப்போலியனின் நடவடிக்கைகளால் சிக்கலுற்றுள்ள ஐரோப்பாவை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரல்.
- பிரான்சு மீண்டும் பலமடைவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தீர்மானித்தல்.
- பிரான்சியப் புரட்சியின் கோட்பாடுகள் எதிர்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் பரவிச் செல்வதற்கிருந்த வாய்ப்பு வசதிகளைத் தடுத்தல்.
- ஐரோப்பாவின் அனைத்து நாடுகளிலும் உறுதியான அரசாங்கங்களைத் தோற்றுவித்தல்.

### வியன்னா மகாநாடு மேற்கொண்ட செயற்பாடுகள்

- நிரந்தர வம்ச முறையை ஏற்றுக்கொள்ளல் (பழைய அரசவம்சங்களினதும் பேரரசுகளினதும் உரிமைகளை ஏற்றுக்கொள்ளல்)
- பிரான்சில் மீண்டும் முடியாட்சியை உருவாக்குதல். இதற்கமைய பூர்போன் வம்சத்தின் பதினெட்டாம் லூயியை பிரான்சின் மன்னராக்குதல்.
- பிரான்சை 1792 இல் காணப்பட்ட தேச எல்லைக்குள் முடக்குதல்.
- பிரான்சின் கட்டுப்பாட்டில் இருந்த சில பிரதேசங்களை ஏனைய நாடுகளுக்குப் பகிர்ந்தளித்தல். பார்மா, மொடேனா, தஸ்கனி பிரதேசங்களை ஹப்ஸ்பர்க் மன்னர்களிடம் வழங்குதல்.
- மோல்டா தீவு, நன்னம்பிக்கைமுனை என்பவற்றைப் பிரித்தானியாவுக்கு வழங்குதல்.
- பிரான்சை சூழ தடை அரசுகளை உருவாக்குதல்.

  உதாரணம்:
  - பெல்ஜியத்தை ஆஸ்திரியாவிடமிருந்து விடுவித்த, ஒல்லாந்தரிடம் ஒப்படைத்து ஒரே அரசாக்குதல்.
  - வெனிஸ், லொம்பாடி எனும் இத்தாலியப் பிரதேசங்களை ஆஸ்திரியாவுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
  - பியட்மன் - சாடினிய அரசைப் பலப்படுத்தல்.
- பிரஷ்யாவைப் பலப்படுத்துவதற்கு அதற்குப் பல புதிய பிரதேசங்களை வழங்குதல்.
  - ஜேர்மனியில் ரைன் நதி அருகிலிருந்த சிற்றரசுகள் பலவற்றையும் செக்சனியின் ஒரு பகுதியையும் வெஸ்ட் பாலியா, பொமரேனியாவையும் பிரஷ்யாவுக்கு வழங்குதல்.
- நோர்வேயையும் சுவீடனையும் ஒன்றிணைத்தல்.
- சுவிட்சர்லாந்தை சுதந்திர அரசொன்றாக அங்கீகரித்தல்.
- பின்லாந்தை ரஷ்யாவுக்கு வழங்கல்.
- பிரான்சுக்குத் தண்டனை விதித்தல்.
  - 500 மில்லியன் பிராங்கை யுத்த இழப்பீடாக வழங்குதல்.

- 5 வருடங்களுக்கு வெற்றியீட்டிய நாடுகளின் படைகள் பிரான்சில் தங்கியிருக்கும்.
- இப்படைகளுக்கான செலவீனத்தை பிரான்சு பொறுப்பேற்க வேண்டும்.
- பிரான்சு கவர்ந்து சென்ற கலைப்பொருட்களை மீண்டும் அந்தந்த நாடுகளிடம் திருப்பி வழங்க வேண்டும்




***வியன்னா சம்மேளனத்தின் பின் ஐரோப்பா***

### வியன்னா மகாநாட்டின் விளைவுகள்

- ஐரோப்பிய நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்வதற்கு மகாநாட்டு முறைமையைக் கையாளல்.
  - 1818 - ஐலாசபேல் மகாநாடு
  - 1820 - டிரபோவ் மகாநாடு
  - 1821 - லைபேக் மகாநாடு
  - 1822 - வெரோனா மகாநாடு
- தோல்வியடைந்த அணிகளுக்குக் கடுந்தண்டனை விதிக்காமை.
- பிரஷ்யா பலப்படுதல்.
- பிரான்சிய ஆக்கிரமிப்பிலிருந்து ஐரோப்பாவைப் பாதுகாப்பதற்காக பிரஷ்யாவுக்கு சிற்சில பிரதேசங்களை வழங்கியதன் மூலம் பிரஷ்யா பலமடையத் தொடங்கியதோடு இதனை அடுத்து ஐரோப்பியருக்கு பிரஷ்யாவிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான வழிமுறைகளைத் தேட வேண்டி ஏற்பட்டமை.
- பெரும்பான்மை இனத்தவர்களால் சிறுபான்மையோர் புறக்கணிக்கப்பட்டமை.
- பெரும்பான்மையோர் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்டமை.
- தாராண்மை வாதக் கொள்கைகள் அடக்கப்பட்டமை. ஆஸ்திரியாவில் மட்டர்நிக் தாராண்மைவாதக் கொள்கையை அடக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- தேசியவாதம் வளர்ச்சியடைவதற்கு வழிபிறந்தமை. இத்தாலியில் தேசிய உணர்வு வளர்ச்சி யுற்றமை.
- ஐரோப்பாவில் 40 ஆண்டுகள்வரை சமாதானம் நிலவியமை. (திரும்பவும் சர்வதேசப் போர் ஒன்று ஏற்பட்டது. 1854 இல் கிரிமியாவில் ஆகும்.)
- பிற்காலத்தில் நாடுகளிடையே ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கான முன்னனுபவ மாக இது அமைந்தமை. 1919 இல் சர்வதேசச் சங்கம் உருவாக்கப்பட்டமை.. 1945 இல் ஐக்கிய நாடுகள் சபை உருவாக்கப்பட்டமைக்கும் இதுவே வழிகாட்டியது.

### மகாநாட்டு முறைமை தோல்வியடைந்தமைக்கான காரணங்கள்

- ஐரோப்பிய வல்லரசுகளிடையே ஒற்றுமை நிலவாமை.
- நாடுகளிடையே ஏற்பட்ட பிரச்சினைகளின்போது, இங்கிலாந்தும் பிரான்சும் ஓர் அபிப்பிராயத்தை கொண்டிருக்க ஆஸ்திரியாவும் ரஷ்யாவும் அவற்றிற்கு மாற்றான கருத்துக்களைக் கொண்டிருந்தமை.
- ஒவ்வொரு நாட்டிலும் காணப்பட்ட ஆட்சிமுறை வேறுபட்டவையானபடியால் அவ்வரசாங்கங்கள் பிரச்சினைகளில் கொண்டிருந்த கொள்கைகள் ஒன்றிற்கு ஒன்று வேறுபட்டிருந்தமை.
- மகாநாடுகளுக்குப் பெருமளவில் அழைக்கப்பட்டது வல்லரசுகள் மட்டுமேயாயிருந்தமை.
- மகாநாட்டு முறைமையின் நோக்கம் நிச்சயமானதாகும் விளக்கமானதாகவம் இராமை.

வியன்னா மகாநாட்டைச் சித்திரிக்கும் படம்



*( source: https://www.britannica.com/event/Congress-of-Vienna)*

## கணிப்பீடு 01

- **கீழ்வரும் வினாக்களுக்கு ஐவைந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதாவது ஒரு காரணத்திற்காக அடுத்த சொற்களுடன் பொருந்தாதுள்ளது. அவ்வாறான பொருத்தப்பாடற்ற பெயரைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. ஐலாசபேல் 2. வெரோனா 3. ஜெனா
4. லைபேக் 5. டிரப்போவ் (...........)

02. 1. காசல்ரீ 2. மெடர்நிக் 3. டலிரெண்ட்
4. பிஸ்மாக் 5. சார் அலெக் (...........)

03. 1. இங்கிலாந்து 2. போர்த்துக்கல் 3. பிரான்சு
4. ஆஸ்திரியா 5. ரஷ்யா (...........)

- **பொருந்தாத கூற்றைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

04. 1815 வியன்னா மாகாநாடு
1. ஐரோப்பிய வல்லரசுகளின் தலைமையில் ஆரம்பமானது.
2. மெட்டர்நிக் அதன் தலைமைப் பதவியை வகித்தான்.
3. ஐரோப்பாவில் சமாதானத்தைப் பேணுதல் அதன் பிரதான நோக்கமாயிருந்தது.
4. அடிமை வர்த்தகம் தொடர்பாகவும் கடற்கொள்ளை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.
(...........)

05. ஐரோப்பிய மகாநாட்டு முறைமையின் கீழ் கூட்டப்பட்ட சம்மேளனங்கள்
1. ஐலாசபேல் 2. டிரபோவ் 3. லயிபேக்
4. பர்ளின் 5. வெரோனர்
(...........)

- **06 ஆம் 07 ஆம் வினாக்களுக்கு A, B, C, D எனக் கொடுக்கப்பட்டுள்ள விடைகளில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட விடைகளோ சரியானவை. சரியான விடையை அல்லது விடைகளையோ தெரிவு செய்து, A யும் B யும் சரியாயின் 1 எனவும், B யும் C யும் சரியாயின் 2 எனவும் C யும் D யும் சரியாயின் 3 எனவும், A யும் C யும் மாத்திரம் சரியாயின் 4 எனவும் ஒன்றோ அல்லது இரண்டிற்கு மேற்பட்ட விடைகள் சரியாயின் 5 எனவும் அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

06. கீழ்வரும் கூற்றுக்களுள் வியன்னா மகாநாட்டுடன் சம்பந்தப்பட்டவை எவை?
A - வியன்னா மகாநாட்டு முறையில் செல்வாக்குச் செலுத்திய அடிப்படை அம்சங்களில் நிரந்தர வம்ச முறைமையும் ஒன்றாகும்.
B - பிரான்சின் எல்லைகள் 1792 இல் காணப்பட்ட நிலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.
C - மகாநாட்டின் தலைமைப் பதவி பிரான்சுக்கு வழங்கப்பட்டது.
D - மகாநாட்டின் விளைவால் ஆஸ்திரியா பலமுற்றது.
(...........)

07. கீழ்வரும் தலைவர்களில் வியன்னா மகாநாட்டில் கலந்துகொண்டோர் யார் யார்?
A - டெலிரென்ட் B - காசல்ரீ C - 17ஆம் லுயி D - லுவீ நெப்போலியன்
(...........)

08. கீழ்வருவனவற்றுள் வியன்னா மகாநாடு கையாண்ட கொள்கைகள் எவை?
A - புரட்சிகரமான கொள்கைகளைச் செயற்படுத்தல்.
B - அதிகார சமனிலைக் கோட்பாட்டைச் செயற்படுத்தல்.
C - ஐரோப்பாவில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மகாநாட்டு முறைமையை அறிமுகப் படுத்தல்.
D - ஜேர்மனியை ஐக்கியப்படுத்துதல்.
(...........)

09. வியன்னா மகாநாட்டின் விளைவுகள் யாவை?
A - பிரஷ்யா கைத்தொழில் துறையில் பலம்பொருந்திய நாடாதல்.
B - சுவிட்சர்லாந்தைச் சுதந்திரமான நாடாக ஏற்றுக்கொள்ளல்.
C - பிரான்சுக்கு அல்சேஸ் - லோரைன் பிரதேசம் உரிமையாதல்.
D - நெதர்லாந்தும் பெல்ஜியமும் ஒன்றுபடுதல்.
(...........)

## கணிப்பீடு 2

• **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. (i) வியன்னா மகாநாட்டின் முக்கியமான நோக்கம் யாதென்று விளக்குக.
(06 புள்ளிகள்)

(ii) நவீன ஐரோப்பிய வரலாற்றில் வியன்னா மகாநாட்டின் முக்கியத்துவத்தை உதாரணங் களுடன் பரிசீலனை செய்க. (08 புள்ளிகள்)

02. கீழ்வரும் விடயங்கள் மீது அவதானத்தைச் செலுத்தி, ஐரோப்பாவுக்குச் சமாதானத்தைப் பெற்றுக் கொடுத்ததில் 1815 வியன்னா மகாநாடு எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியமானது என்பதைப் பற்றிக் கருத்துரைக்க.
(i) வியன்னா மகாநாட்டினால் தீர்த்து வைக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சினைகள்
(ii) மகாநாட்டால் கைக்கொள்ளப்பட்ட கொள்கைகள்
(iii) மகாநாட்டின் வெற்றி (14 புள்ளிகள்)

03. ‘‘பிரான்சில் புரட்சி இடம்பெறுவதற்கு முன்னர் காணப்பட்ட பண்புகள் பலவற்றையும் மீண்டும் உருவாக்கிக் கொள்வதற்கு வியன்னா மகாநாடு முயற்சித்தது.’’
(i) வியன்னா மகாநாட்டில் முக்கிய பங்களிப்பைச் செய்த ஆஸ்திரியாவின் பிரதமரின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)
(ii) வியன்னா மகாநாட்டில் பங்குபற்றிய வேறு இரு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
(02 புள்ளிகள்)
(iii) வியன்னா மகாநாட்டின் முக்கிய நோக்கத்தைத் தெளிவாகக் குறிப்பிடுக.
(04 புள்ளிகள்)
(iv) வியன்னா மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் கவனத்தைச் செலுத்தி, மேலே தரப்பட்டுள்ள கூற்றை விமர்சன ரீதியாக ஆராய்க. (07 புள்ளிகள்)

# லிபரல்வாத தேசியவாதக் கொள்கைகளின் வளர்ச்சி

## அறிமுகம்

சுதந்திரத்தையும் நாட்டுப் பற்றையும் முன்வைத்துப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் லிபரல்வாதமும் தேசியவாதமும் ஐரோப்பிய அரசியலில் அதிக தாக்கம் செலுத்தின. சிறு நாடுகளாகப் பிரிந்திருந்த பல ஐரோப்பிய நாடுக்ள இவ்விரு கொள்கைகளால் பெரிய, பலவந்த நாடுகளாயின. இத்தாலியும் ஜேர்மனியும் இவற்றில் முக்கியமானவையாகும். லிபரல்வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் வளர்ச்சி அவை நடைமுறையில் செயற்பட்ட விதம் என்பன பற்றி இந்த அலகில் கவனம் செலுத்தப்படுகிறது.

**தேர்ச்சி** : • பல்வேறு அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் செயற்படுத்தப்பட்ட முறை பற்றிப் பரிசீலிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 10.1 லிபர்வாதத்தினதும் தேசிய வாதத்தினதும் சிந்தனைகளின் வளர்ச்சி பற்றியும் அவை நடைமுறையில் செயற்படுத்தப்பட்ட முறை பற்றியும் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 25

**கற்றற்பேறுகள்** :
- அரசியல் சிந்தனைகளின் வளர்ச்சியுடன் புரட்சி அணிகள் தோற்றம் பெற்ற விதத்தினை விபரிப்பார்.
- லிபரல்வாத, தேசியவாத அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் செயற்படுத்தப்பட்ட விதத்தை எடுத்துக்காட்டுவார்.
- இத்தாலிய ஐக்கியம், ஜேர்மனிய ஐக்கியம் என்பனவற்றைத் தேசப்படத்தில் குறித்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### லிபரல்வாதம்

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் செயற்பட்ட பிரதான சிந்தனையாகும்.
- பொதுமக்களின் பிரதிநிதிகளின் சபையின் உதவியுடன் ஒழுங்கமைக்கப்பட்ட சட்டரீதியான அரசியல் திட்டத்தின் மூலம், மக்களுக்குத் திருப்திகரமான ஆட்சிமுறையைப் பெற்றுக்கொடுப்பதே இதன் நோக்கமாகும்.
- அரச தலையீடின்றிச் செயற்படுத்தப்படும் சுதந்திர பொருளாதார சமூக முறையைக் கட்டியெழுப்புவதே இதன் முக்கிய இயல்பாகும்.

### தேசியவாதம்

- குறிப்பிட்ட புவியியற் பிரதேசத்தினுள் வாழும் மக்கள் பிரிவினர் தமது பொதுத்தன்மையை அடிப்படையாகக் கொண்டு தமது தனித்துவத்தைக் கட்டியெழுப்பும்போது அனைத்து மக்களையும் ஒரே தேசியத்துக்குள் இணைப்பது இதன் நோக்கமாகும்.
- இன, மொழி, சமய, பழக்க வழக்கங்களின் பொதுத்தன்மை பொது உரிமை எனப்படுகிறது.
- இந்தப் பொது உணர்வினால் மக்களின் சுதந்திரத்தை வளர்துக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றமை.

## 1815 ஆம் ஆண்டின் பின்னர் ஐரோப்பாவில் லிபரல்வாத, தேசியவாத இயக்கங்களின் வளர்ச்சி

- ஸ்பானியாவில் லிபரல்வாதமும் தேசியவாதமும் எழுச்சி பெற்றமையும் அவை ஒடுக்கப்பட்டமையும்.
- ரஷ்யாவில் லிபரல்வாத வேண்டுகோள்களும் அவை ஒடுக்கப்பட்டமையும்
- 1820 - 21 இத்தாலியில் நேப்பிள்ஸ், மீட்மன்ட ஆகிய பிரதேசங்களில் ஏற்பட்ட கிளர்ச்சி
- 1821 - 1829 வரை கிரேக்கம், துருக்கிய ஆதிக்கத்திலிருந்து விடுதலையடையும் பொருட்டு போராடியமை. 1829 ஆம் ஆண்டு ஆஸ்த்திரியாநோபல் உடன்படிக்கை மூலம் கிரேக்கம் விடுதலை பெறுதல்.
- கிரேக்கம் சுதந்திரம் பெற்றமை தேசியவாதம் பெற்ற வெற்றியாகும்.
- 1814 - 1848 வரை பிரான்சில் அரசியல் சமநிலையை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும், அவற்றுக்கு எதிரான சவால்களும்
- அக்காலகட்டத்தில் ஐரோப்பாவில் தேசியவாத புரட்சிகள் ஏற்பட்டமை (ஒல்லாந்து, பெல்ஜியம், இத்தாலி, ஜேர்மன்)
- இவ்வாறு ஐரோப்பிய சமுதாயத்தில் 1815 - 1848 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட பிரதான இயல்புகளாவன.
  - பிரபுத்துவ அரசியல் முறையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, ஏற்கனவே நிலவிய அரசியல் கட்டமைப்பைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென எண்ணிய பிரிவினர்
  - மத்திய தொழிலாள வர்க்கத்தினைப் பிரதிநிதித்துவ்படுத்தி பழைய ஐரோப்பாவை மாற்றியமைத்து லிபரல்வாதம், தேசியவாதம் எனும் சீர்திருத்தங்களின் மூலும் முன்னோக்கிச் செல்லும் எண்ணத்தினையுடைய பிரிவினர் மேற்கொண்ட போராட்டம்

## 1848 ஆம் ஆண்டு புரட்சி

- 1848 ஆம் ஆண்டளவில் ஐரோப்பா முழுவதும் கிளர்ச்சிகரமான பின்னணி தோன்றியிருந்தமை
- பிரான்சில் ஏற்பட்ட குழப்பத்தின் விளைவாக லூயி நெப்போலியன் ஆட்சிக்கு வந்தமை
- இத்தாலியில் தேசியவாத, லிபரல்வாத செயற்பாடுகள்
- 1848 ஆம் ஆண்டு ஜேர்மனியில் செயற்பட்ட தேசியவாத, லிபரல்வாத அணிகள்
- பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மன் ஆகிய நாடுகள் தவிர்ந்த பல ஐரோப்பிய நாடுகளில் தேசியவாதமும் லிபரல்வாதமும் தோல்வியடைந்தமை
- பிரித்தானியா மாத்திரம் புரட்சிகளின்றிச் சீர்திருத்தத்தை அறிமுகம் செய்தமை
- இத்தாலிய ஐக்கியம்
  - இத்தாலியின் ஐக்கியத்திற்கு முன்னர் அங்கிருந்த நிலைமை
  - இத்தாலியில் நிலவிய அரசியல் பிளவுகள்
    - நேப்பிள்ஸ், சிசிலித் தீவகள் என்பன ஸ்பானிய பூர்போன் அரச பரம்பரையால் ஆட்சி செய்யப்பட்டமை
    - உரோம், மத்திய இத்தாலி என்பன பாப்பரசரால் ஆட்சி செய்யப்பட்டமை
    - பார்மா, மெடோனா, டஸ்கனி என்பன ஆஸ்திரிய அரச பரம்பரையால் ஆட்சி செய்யப்பட்டமை.
    - வெனிஸ், லொம்பாடி ஆகிய பிரதேசங்கள் ஆஸ்திரிய பேரரசின் கீழ் ஆட்சி செய்யப்பட்டமை.
    - பீட்மன்ட், சாடீனியா உட்பட பிரதேசங்கள் இத்தாலிய சவோய் அரச பரம்பரையின் கீழ் இருந்தமை.
    - நெப்போலியனது ஆட்சியின் விளைவாக இத்தாலிய மக்களிடையே ஒற்றுமை தொடர்பாக உணர்வு ஏற்பட்டமை.
    - தேசிய உணர்வு வளர்ச்சியடைந்தமை

## இத்தாலிய ஐக்கியத்திற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளும் அவற்றுடன் தொடர்புடைய இயக்கங்களும்

- இத்தாலியின் தேசியவாதம் எழுச்சியுறல்
- காபோனாரி இயக்கம்

– காபோனாரி இயக்கத்தினால் ஆஸ்திரிய ஆதிக்கத்துக்கு எதிராகச் சுதந்திரப்போர் ஆரம்பமாகியமை.

- மாசினியின் இளம் இத்தாலிய இயக்கம்
- ஜியோபர்டியின் தலைமையின்கீழ் புதிய இயக்கம் ஆரம்பமாகியமை.
- ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் லிபர்வாத அரசியல் சீர்திருத்தத்தை முன்வைத்தல்.
- 1848 ஆம் ஆண்டு இத்தாலியின் விடுதலைப்போர்.
- எதிர்ப்புக்கள் எழுந்தமையும் இவ்வியக்கம் தோல்வியடைந்தமையும்.

## இத்தாலிய ஐக்கியத்திற்கு உதவியோர்

- கவுன்ட் கவூர், பீட்மன்ட் அரசின் பிரதமராகியமை.
- இத்தாலி பொருளாதாரத்தில் முன்னேற்றமடைந்தமை.
- லிபர்வாதிகளின் உதவியைப் பெற்று இத்தாலியில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.
- இத்தாலி ஐக்கியமாகும் செயற்பாட்டின் தலைமைத்துவம் பீட்மன்ட் அரசுக்கு உரியதாகுதல்.
- கிரிமியன் போரில் சம்பந்தப்படுதல்
- இத்தாலிய ஐக்கியத்திற்குப் பிரான்சினதும் பிரித்தானியரதும் உதவியைப் பெற்றுக்கொள்ளல்.
- கவுன்ட் கவூர், பிரான்சின் மூன்றாம் நெப்போலியன் ஆகியோர் புலொம்பியாஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திடல்.

## கரிபால்டி

- இத்தாலிய மக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தல்.
- கரிபால்டியின் செஞ்சட்டை வீரர்களால் தென் இத்தாலியப் பிரதேசம் கைப்பற்றப்பட்டு பீட்மன்ட் அரசனிடம் கொடுக்கப்பட்டமை
  – உரோமைத் தவிர்ந்த பப்பரசரின் அனைத்துப் பிரதேசங்களும் கைப்பற்றப்படல்.
  – 1866 ஆம் ஆண்டு வெனிஸ் இணைக்கப்படல்.
  – 1870 ஆம் ஆண்டு உரோம் இணைக்கப்பட்டதுடன் இத்தாலியின் ஐக்கியம் நிறைவுற்றமை.

## ஜேர்மனியின் ஐக்கியம்

- ஜேர்மனிய ஐக்கியத்திற்கு முன்னர் நிலைவிய அரசியல் நிலைமை
  – 1648 ஆம் ஆண்டு வெஸ்ட்பாலியா உடன்படிக்கையின் விளைவாக ஜேர்மனி பல அரசுகளாகப் பிளவுபடல்.
  – நெப்போலியன் பொனபாட் ஜேர்மன் பிரதேசத்தை ஆக்கிரமித்து றைன் சங்கத்தை அமைத்தல்.
  – லியன்னா மகாநாட்டின் பின்னர் நெப்போலியனின் முயற்சி வீழ்ச்சியடைதல்.
  – சொல்வரையின் சங்கத்தின் கீழ் ஜேர்மனியில் பொருளியல் ஒருமைப்பாடு ஏற்படல்.
  – ஆஸ்திரியாவின் சான்சலர் மெட்டர்நிக்கால் லிபரல்வாதக் கருத்துக்கள் கட்டுப்படுத்தபடல். உதாரணம்: கால்ஸ்பாட் ஆணை
  – 1830 - 1848 ஆம் ஆண்டு போராட்டங்களும் அவைகளின் தோல்வியும்
  – 1848 பிராங்பாடம் பாராளுமன்றமும் 1848 புரட்சியின் தோல்வியும்

## ஜேர்மனியின் ஐக்கியத்தில் பிஸ்மார்க்கின் பங்கு

- ஒட்டோவன் பிஸ்மார்க் பற்றிய அறிமுகம்.
- ஜேர்மனியின் ஐக்கியத்திற்குத் தலைமை தாங்கத் தகுதியுடையதாகும்படி பிரஷ்யாவின் பொருளதாரத்தையும் அரசியலையும் பலப்படுத்துவதற்குச் செயற்பட்ட விதம்
- பிஸ்மார்க்கின் இராஜதந்திர உபாயம், 'இரத்தமும் இரும்பும்' என்ற கொள்கை பிரஷ்யாவின் போர்ப்படையை வலுப்படுத்தியமை.
- ஷெல்ஸ்விக் ஹோல்ஸ்டைன் பிரச்சினை. ஷெல்ஸ்விக் இணைக்கப்படல்.
- 1866 ஆம் ஆண்டுப் போரில் ஆஸ்திரியா தோல்வியடைந்தமை.
- 1871 ஆம் ஆண்டு பிரான்சைத் தோற்கடித்ததன் மூலம் பிரஷ்யாவின் தலைமையின் கீழ் ஐக்கிய ஜேர்மனி தோற்றம் பெறுதல்.

# இத்தாலிய ஐக்கியப்படுத்தல்



## ஜேர்மனியை ஐக்கியப்படுத்தல்



## மதிப்பீடு 1

- **பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) 1. தேசியவாதம் 2. கோர்சிக்கா 3. ஸ்பானியா
4. கிரேக்கம் 5. ரொடீஷயா (...............)

(2) 1. காபொனாரி இயக்கம் 2. இளம் இத்தாலிய இயக்கம்
3. கரியரிப்போர் இயக்கம் 4. தாஸ்கெப்பிட்டல் இயக்கம்
5. தேசிய இயக்கம் (...............)

(3) 1. லூயி நெப்போலியன் 2. ஒட்டூாவன் கரிபால்டி 3. ஜோசப் மசினி
4. கெமிலோ கவூர் 5. குசெப் கரிபால்டி
(...............)

(4) 1. லொம்பார்டி 2. தாஸ்கனி 3. வைமார்
4. பீட்மன்ட் 5. நேப்பிள்ஸ்
(...............)

(5) 1. ஜேர்மன் ஒன்றிணைப்பு 2. றைன் சங்கம் 3. சொல்வரைன் சங்கம்
4. கேஸ்டியன் மகாநாடு 5. பிலடெல்பியா மகாநாடு
(...............)

(6) பொருத்தமற்ற சோடியைத் தெரிவுசெய்க.
1. மசினி - இளம் இத்தாலிய இயக்கம்
2. கரிபோல்டி - செஞ்சட்டைப் படை
3. சார்டினியா - சவோய் அரச பரம்பரை
4. கெரன்ஸ்கி - செஞ்சட்டைப் படை
5. சொல்வரைன் உடன்படிக்கை - பொருளாதார சங்கம்
(...............)

(7) X யையும் Y யையும் இணைக்கும்போது பொருத்தமாக அமையும் விடையைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| (i) மெட்டனிக் | (A) லிபரல் சீர்திருத்தத்தைச் செயற்படுத்துதல் |
| (ii) பிஸ்மார்க் | (B) தென் இத்தாலியைக் கைப்பற்றுதல் |
| (iii) ஒன்பதாம் பியுஸ் பாப்பரசர் | (C) ஐக்கிய இத்தாலியின் மன்னனாக முடிசூடுதல் |
| (iv) கரிபால்டி | (D) இரத்தமும் இரும்பும் கொள்கை |
| (iv) விக்டர் இம்மானுவேல் | (E) லிபரல் கருத்துக்களைக் கட்டுப்படுத்துதல் |

1. EDABC 2. ACDBE 3. DECBA 4. ADBCE 5. EABDC
(...............)

- **தலைப்புக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(8) 1. நெப்போலியன் பொனபாட்டின் கொள்கைகள், இத்தாலியில் தேசிய வாதத்தை எழுச்சிபெறச் செய்வதில் முக்கிய காரணமாக அமைந்தது.
2. இத்தாலியில் நிலவிய ஆஸ்திரிய ஆதிக்கம் இத்தாலியின் ஐக்கியத்தில் பிரதான தடையாக விளங்கியது.
3. இத்தாலிய ஐக்கியத்தின் முக்கிய பங்காளி கவூர் ஆவார்.
4. கொல்வரீன் சாடீனியத் தலைமைத்துவத்தின் கீழ் நிறுவப்பட்டது.
5. இத்தாலிய ஐக்கியம் 1870 ஆம் ஆண்டு உறுதிப்படுத்தப்பட்டது.

(...............)

(9) ஜேர்மன் ஐக்கியமடைதல்
1. கவுன்ட் கவூர் புலோம்பியர்ஸ் உடன்படிக்கையில் கைச்சாத்திடல்
2. பிஸ்மார்க் இராஜதந்திர உபாயங்களைக் கடைப்பிடித்தல்
3. பிரஷ்யாவின் தலைமையில் ஐக்கிய ஜேர்மனி உருவாகுதல்
4. ஷெல்விக் இணைக்கப்படல்
5. சொல்வரின் சங்கத்தின் கீழ் பொருளாதார இணைப்பை ஏற்படுத்துதல்

(...............)

(10) ஜேர்மனை இணைக்கும் முன்னர்
1. ஜேர்மனி மூன்று முக்கிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தமை
2. றைன் சங்கத்தை நிறுவியமை
3. சொல்வரைன் சங்கத்தின் கீழ் பொருளாதார இணைப்பை ஏற்படுத்தியமை
4. கால்ஸ்பட் ஆணை
5. பிரன்க்பர்ட் பாராளுமன்றம் தோல்வியுற்றமை

(...............)

## மதிப்பீடு 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. (i) லிபரல் வாதத்தையும் தேசிய வாதத்தையும் தெளிவுபடுத்துக.
(ii) ஐரோப்பாவில் லிபரல்வாதத்தினதும் தேசியவாதத்தினதும் வளர்ச்சியினை விளக்குக.

02. ''இத்தாலிய ஐக்கியத்தில் லிபரல்வாதமும் தேசியவாதமும் நடைமுறையில் செயற்பட்டதைக் காணக்கூடியதாக உள்ளது.'' இதனைப் பரிசீலிக்குக.

03. ''இரத்தத்தினாலும் இரும்பினாலும் மாத்திரமே ஜேர்மனியை இணைக்க முடியும் எனப் பிஸ்மார்க் நம்பினான்'' ஜேர்மனியை ஐக்கியப்படுத்துவதில் பிஸ்மார் பின்பற்றிய செயல்முறைகள் இக்கூற்றுடன் பொருந்தும் முறையைப் பரிசீலனை செய்க.

04. பின்வரும் இடங்களை ஐரோப்பியப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
மிலான், ஜெனோவா, வெனிஸ், பொலொஞ்ஞா, உரோம், நெப்பிள்ஸ், அந்தியாட்டிக்கடல், சாடீனியா, கோசிக்கா, சிசிலி, அயோனியன் கடல், றைன் நதி, எல்பநதி, டான்யுப் நதி, போ நதி, விஸ்டுவா நதி, பால்டிக் கடல், பெல்ஜியம், லக்சம்பார்க், பவேரியா, சைவேஷியா, பேர்லின், டான்சிக், பிரன்டன்பேர்க்

# முதலாம் உலக யுத்தம்

## அறிமுகம்

1871 ஆம் ஆண்டு ஜேர்மனி ஐக்கியமடைந்த பின்னர் ஐரோப்பாவில் பிரனர்ஸ் பெற்றிருந்த இடத்தை இழந்ததுடன் அந்த இடத்தை ஜேர்மனி பெற்றுக்கொண்டது. அதன் பின்னர் ஜேர்மனி படிப்படியே ஐரோப்பாவில் முன்னிலைக்கு வந்ததுடன் பிரான்சுக்கும் ஜேர்மனிக்குமிடையே போட்டி ஏற்பட்டது. பலம்வாய்நத நாடுகளிடையே நட்பினை ஏற்படுத்துவதன் மூலம் கூடிய அளவில் பிரான்சை ஐரோப்பாவில் தனிப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை ஜேர்மனி பின்பற்றியது. இதன் விளைவாக ஐரோப்பா படிப்படியாக இரு அணிகளாகப் பிரிந்தது. இவ்வாறு இரு அணிகள் பிரிந்தமை, பல ஆண்டுகளாக ஐரோப்பாவில் நிலவிய ஏனைய பிரச்சினைகள் என்பன காரணமாக 1914 ஆம் ஆண்டு முதலாம் உலக யுத்தம் ஆரம்பமானது. பெருந்தொகை உயிர்ச் சேதத்தையும் பொருட் சேதத்தையும் ஏற்படுத்தி உலகம் முழுவதிலும் நடைபெற்ற இப்பயங்கர யுத்தத்துக்கான காரணங்கள் யுத்தத்தின் பிரதான கட்டங்கள். யுத்தத்தின் விளைவுகள் என்பனவற்றைக் கலந்துரையாடுவதும் யுத்தத்தின் கொடூரத்தையும் சமாதானத்தைப் பேணுவதன் அவசியம் பற்றிக் கவனம் செலுத்துவதும் இந்த அலகில் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி** : • அதிகாரம் தொடர்பாக ஏற்படும் மோதல்களின் அழிவினைப் புரிந்து கொண்டு சமாதானத்தைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 11.1 முதலாம் உலக யுத்தத்தின் அழிவு பற்றி எடுத்துக் கூறுவார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- உலக யுத்தம் ஏற்பட்ட விதத்தைத் தெளிவுபடுத்துவார்.
- உலக யுத்தத்தின் விளைவுகளை எடுத்துக்காட்டுவார்.
- உலக யுத்தம் தொடர்பான இடங்கள், நாடுகள் என்பனவற்றை உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### முதலாம் உலக யுத்தம்

- 1914 - 1919 வரை உலகம் முழுவதிலும் நடைபெற்ற யுத்தம் முதலாம் உலக யுத்தம் எனப்படும்.

### யுத்தம் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்திய வரலாற்றுப் பின்னணி

- பொருளாதாரம், படைப்பலம், கடற்படை வலிமை என்பனவற்றில் ஐரோப்பாவின் ஏனைய நாடுகளை விடப் பிரித்தானிய முன்னணியில் இருந்தமை.
- இதுவரை ஐரோப்பாவில் ஆதிக்கமிகுந்த நாடாக விளங்கி பிரித்தானியாவுக்கும் மத்திய ஐரோப்பாவில் ஆதிக்கமிக்க நாடாக எழுச்சி பெற்றுக்கொண்டிருந்த ஜேர்மனிக்கும் இடையே நிலவி வந்த போட்டி நட்புறவில் விரிசல் ஏற்பட்டதன் மூலும் இரு நாடுகளுக்குமிடையே போட்டி மனப்பான்மை ஏற்படல் (கடற்பனடை வலிமை தொடர்பாக)
- குடியேற்றவாதத்தின் பிரதான வலிமைவாய்ந்த நாடான பிரித்தானியாவுக்கும் மேலாகப் பிரான்ஸ், வடக்கு கிழக்கு, மேற்கு ஆபிரிக்கப் பிரதேசத்திலும் தென் கிழக்கு ஆசியாவின் பெரும் பகுதியிலும் தனது அதிகாரத்தை நிலைநாட்டியமை

- 20 ஆம் நூற்றாண்டாகும்பொழுது ஜப்பான் வட பசுபிக் வலயத்தில் பலம்வாய்ந்த நடாக எழுச்சி பெற்றதுடன் ஆசியாவில் பல நாடுகளில் தனது ஆட்சியை நிறுவி இருந்தமை.
- மேற்கு வல்லரசுகளைப் போன்று ஜப்பானும் ரஷ்யாவும் சீனா மீது தமது கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்ததுடன் சீனாவானது ரஷ்யா, ஜப்பான், மேற்கு நாடுகள் என்பனவற்றின் நெருக்குதலுக்கு உட்பட்டமை.
- விவசாயத்திலும் கைத்தொழிலிலும் முன்னேற்றமடைந்திருந்த அமெரிக்கா மேற்கு அரைக்கோளத்தில் பலமிக்கதாக விளங்கியமை.

## முதலாம் உலக யுத்தத்திற்கான காரணங்கள்

### புதிய பேரரசுக் கொள்கை

- ஜேர்மனி, இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகள் புதிய வல்லரசுகளாக எழுச்சி பெற்று வந்தமை
- கைத்தொழிற்புரட்சியின் காரணமாகப் பிரதான ஐரோப்பிய நாடுகள் பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைந்து வந்தமை.
- உற்பத்தியின் பொருட்டு மூலப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளல், பாரிய அளவில் உற்பத்தியை விநியோகம் செய்தல், மேலதிக மூலதனத்தை முதலீடு செய்யும் பொருட்டுச் சந்தைகளைப் பெற்றுக் கொள்ளல் என்பன புதிய பேரரசுவாதத்தின் நோக்கமாக இருந்தமை.
- பிரான்ஸ், பிரித்தானியா, போர்த்துக்கல், ஸ்பானியா, ஒல்லாந்து, இத்தாலி, பெல்ஜியம், ஜேர்மனி ஆகிய நாடுகள் குடியேற்றவாதப் போட்டியில் ஈடுபட்டமை.

### ஆபிரிக்கா தொடர்பான போட்டி

- 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஐரோப்பியர் ஆபிரிக்கா மீது கவனம் செலுத்தியமை
- ஆபிரிக்காவிலிருந்த கனிப்பொருட்களைப் பெறுவதே ஐரோப்பியரின் நோக்கமாக இருந்தமை
- பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, ஸ்பானியா, போர்த்துக்கல், இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகள் ஆபிரிக்காக் கண்டத்தைப் பங்கிட்டுக் கொண்டமை.

### போல்கன் பிரச்சினை

- 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் துருக்கியப் பேரரசு வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. துருக்கியப் பேரரசின் கீழ் இருந்த கிறிஸ்தவர்கள் துருக்கிய பேரரசுக்கு எதிராக எழும்புதல்.
- துருக்கிப் பேரரசை அழித்துவிட்டு அப்பிரதேசத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட ரஷ்யா முயன்றமை.
- பிரித்தானியா, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகள் அதற்கு எதிராக இருந்ததுடன் துருக்கிய பேரரசைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தமை.
- ஆஸ்திரியா துருக்கிக்குச் சொந்தமான பொஸ்னியா - ஹர்சிகோவினா பிரதேசத்தை இணைத்துக் கொண்டமை.
- முதலாம் உலக யுத்தத்திற்கு அண்மிய காரணமாக விளங்கியது போல்கன் பிரதேசத்தில் ஏற்பட்ட சிக்கலாகும். சரஜிவோ சம்பவம்.



***பர்டினன்ட் தம்பதியினர் சரஜிவோ தலைநகரில் கொலைசெய்யப்படுவதற்கு முன்***
*(source:https:// commons.wikimedia.orgwikiFile:The_Assassination_of_Archduke_Franz_Ferdinand,_June_1914)*

## ஐரோப்பா இரு அணிகளாகப் பிரிதல்

- பிரான்சுக்குச் சொந்தமான கனிப்பொருள் வளமிக்க அல்சேஸ்- லெரேன் பிரதேசம் 1871 ஆம் ஆண்டு ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டமையால் இரு நாட்டினருக்குமிடையே பகைமை ஏற்படல்.
- ஐரோப்பாவில் பிரான்சைத் தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் பிஸ்மார்க் ஐரோப்பாவில் நட்புக்கூட்டுறவு முறையை ஆரம்பித்தல்.
- பிஸ்மார்க்கிற்குப் பின்னர் ஜேர்மனின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றமடைதல்.
- ஐரோப்பிய நாடுகள் ஒன்றுக்கொன்று எதிராக இரு அணிகளாகப் பிரிந்தமை.
- ஆரம்பத்தில் நிலவிய பிரான்சிய - இங்கிலாந்து நட்பு, ரஷ்ய நட்பு என்பன ஜேர்மனிக்கு எதிராகக் கூட்டுச் சேர்ந்தமை (1927)
- 1908 ஆம் ஆண்டில் ஜேர்மனி - ஆஸ்திரியா, இத்தாலி ஒன்று சேருதல் (கடைசி நேரத்தில் இத்தாலி ஜேர்மனியிலிருந்து விலகி இங்கிலாந்துடன் இணைந்தமை)
- பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, இத்தாலி, அமெரிக்க ஐக்கிய நாடுகள் என்பன நேச நாடுகள் எனவும், ஜேர்மனி, ஆஸ்திரியா, ஹங்கேரி, துருக்கி, பல்கேரியா என்பன அச்சு நாடுகள் எனவும் அழைக்கப்பட்டமை.

## போரின் பிரதான கட்டங்கள்

- 1914 ஆம் ஆண்ட ஜுன் மாதம் 28 ஆந் திகதி ஆஸ்திரிய முடிக்குருிய இளவரசன் பிரான்ஸிஸ் பேர்டிளன்டும் அவனது மனைவியும் சரோஜிவாவில் சர்பிய இனத்தவன் ஒருவனால் கொல்லப்பட்டமையால் ஆஸ்திரியா சேர்பியாவுக்கு எதிராக யுத்தப் பிரகடனம் செய்தல்.
- ரஷ்யா சேர்பியாவுக்கு உதவ முன் வந்தமையால், ரஷ்யாவுக்கு எதிராக ஜேர்மனி யுத்தப் பிரகடனம் செய்தல்.
- இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் ஆஸ்திரியாவுக்கு எதிராக அணி வகுத்ததுடன் துருக்கி, பல்கேரியா, ஹங்கேரியா என்பன ஆஸ்திரியாவுக்குச் சார்பாக யுத்தத்தில் இறங்கியமை.
- போர் நடைபெற்ற முனைகள்
  - மேற்கு முனை
  - கிழக்கு முனை
  - தென்கிழக்கு முனை
  - ஆபிரிக்க முனை
  - கடற்போர்
  - அமெரிக்க ஐக்கிய நாடுகள் போரில் பங்கேற்றமை



போரின் ஒரு கட்டம் *(sourse:http://spiritualpilgrim.net/03_World-War-One/02a_1914.htm)*

**போரின் விளைவுகள்**

- பெருமளவிலான உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் ஏற்படல்
- ஊழல் நிறைந்த முடியரசுகள் வீழ்ச்சியுற்றமை.
  உதாரணம்: ஆஸ்திரியப் பேரரசு, ஹங்கேரியப் பேரரசு, துருக்கிய பேரரசு
- அமெரிக்கா உலக வல்லரசாக எழுச்சியுறல்.

**வர்சேல்உடன்படிக்கை**


- குற்றவாளியெனக் கூறி இவ்வுடன்படிக்கையின் மூலம் ஜேர்மனிக்குக் கடுமையான தண்டனை வழங்கப்படல்.
- அல்சேஸ் - லொரேன் பிரதேசமும் சார் பள்ளத்தாக்கு என்பனவும் பிரான்சுக்கும் ஷெல்சவிஸ் பிரதேசம் டென்மார்க்கிற்கும் வழங்கப்படல்.
- ஜேர்மனியின் அனைத்துக் குடியேற்றங்களும் வெற்றிபெற்ற அணி நாடுகளிடையே பகிர்ந்தளிக்கப் படல்.
- ஜேர்மனியின் படைவீரர்களின் எண்ணிக்கையை ஒரு இலட்சம் என வரையறுத்தல் கட்டாய யுத்த சேவையைத் தடை செய்தல்.
- ஜேர்மனியின் கடற்படை வலிமையைக் கட்டுப்படுத்தி, போர்க்கப்பல், நீர் மூழ்கி உற்பத்தியைத் தடை செய்தல்.
- வெற்றியடைந்த நாடுகளுக்குப் பெருந்தொகையான பணத்தை நஷ்டஈடாக செலுத்தும்படி ஜேர்மனிக்கு விதிக்கப்படல்.



வளமான அல்சேஸ் லோறேன் பிரதேசம் ***( source: https://destinationeuropeonline.com/blog/the-alsace-lorraine-region-is-a-wonderful-mix-of-french-and-german-culture-and-charm/)***

## ஐரோப்பிய தேசப்படம் மாற்றியமைக்கப்படல்

- துருக்கிய பேரரசின் கீழ் இருந்த நாடுகள் சிலவற்றை இணைத்து யூகோஸ்லேவியா என்ற பெயரில் புதிய அரசைத் தோற்றுவித்தல்.
- மொரேலியா, சுடேன்டன்லாந்து ஆகிய அரசுகளை இணைத்து செக்கோஸ்சலேவேக்சியா என்ற நாட்டைத் தோற்றுவித்ததல்.
- போலாந்துக்கு டன்சிக் துறைமுகத்தையும் அங்கு செல்வதற்கான நிலப்பகுதி ஒன்றையும் பெற்றுக்கொடுத்து சுதந்திர நடாகியமை. இதனால் கிழக்கு, மேற்கு என்று ஜேர்மனி இரண்டாகப் பிளவுபட்டமை.
- ருமேனியா, பல்கேரியா என்பன புதிய அரசுகளாகத் தோற்றம் பெற்றதுடன் துருக்கி ஐரோப்பாவிலிருந்து விலக்கி வைக்கப்பட்டது.
- பின்லாந்து, லத்துவியா ஆகிய நாடுகளின் சுதந்திரத்தை ஏற்றமை.



முதலாம் உலகப் போரின் பின்னர் ஐரோப்பா

### சர்வதேச சங்கம் நிறுவப்படல்

- உலகில் சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்கும் பொருட்டு சரவதேச சங்கம் நிறுவப்பட்டமை.
- முதலாம் உலகப் போரின் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி வுட்ரோ வில்சனின் எண்ணக்கருவுக்கு அமைய சர்வதேச சங்கம் நிறுவப்படல்.

### ஆரம்பம்

- நாடுகளிடையே ஏற்படும் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலும் சமாதானமாகத் தீர்த்தல்.
- சிறு அரசுகளின் சுதந்திரத்தையும் இறைமையையும் பாதுகாத்தல்.
- உலகளாவிய ஒற்றுமையின் மூலம் உலக சமாதானத்தைப் பாதுகாத்தல்.
- நாடுகளுக்கிடையே புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் மேம்படச் செய்தல்.
- மனித இனத்தின் சமாதான நிலைப்பாட்டிற்குத் தேவையான வேறு நடவடிக்கைகளை எடுத்தல்.

### சர்வதேச சங்கத்தின் நல்ல பண்புகள்

- பொது அமைப்பு எண்ணக்கரு தோற்றம் பெறுதல்.
- சர்வதேச அமைப்புக்கள் கட்டியெழுப்பப்படல்.
  உதாரணம்: நீதிமன்றம், சுகாதாரம், தொழிலாளர் அமைப்புக்கள்
- சர்வதேச மோதல்கள் தீர்த்து வைக்கப்படல்
  உதாரணம்: 1921 ஆம் ஆண்டு ஜேர்மனிக்கும், தேபிள்ஸ்க்கும் இடையே சைலீசியா தொடர்பாக ஏற்பட்ட மோதல் தீர்த்து வைக்கப்பட்டமை.
  1925 ஆம் ஆண்டு கிரேக்கம், பல்கேரியா ஆகிய நாடுகளுக்கிடையிலான மோதல்.
  1926 ஆம் ஆண்டு மொசுல் எண்ணெய் நிலம் தொடர்பாக ஈராக், துருக்கி என்ப வற்றுகிடையிலான மோதல்
- மனித உரிமைகள் உறுதிசெய்யப்படல்
  உதாரணம்: அகதிகளைப் புனர்வாழ்வளித்தல், அடிமை வியாபாரம், போதைப்பொருள் வியாபாரம் என்பனவற்றைத் தடை செய்தல், நோய்களைக் கட்டுப்படுத்துதல்.

### சர்வதேச சங்கம் தோல்வியுற்றமைக்கான காரணங்கள்

- பலம்வாய்ந்த நாடுகள் சங்கத்திலிருந்து விலகியமை.
  உதாரணம்: ஐக்கிய அமெரிக்கா சங்கத்தில் அங்கத்துவம் பெறாமை.
- தோல்வியடைந்த நாடுகள் புறக்கணிக்கப்பட்டமை.
  உதாரணம்: முதலாம் உலக யுத்தத்தின் குற்றவாளிகளான ஜேர்மன், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் கிடைக்காமை.
- வல்லரசுகளிடையே உடன்பாடின்மை
- சங்கத்துக்கென சர்வதேச போர்ப்படை இல்லாமை.
- நிராயுத கொள்கை பின்பற்றப்பட வேண்டுமெனக் கூறப்பட்ட பொழுதிலும் அதற்கென நிராயுதக் குழு நியமிக்கப்பட்டாமை.
- உலக சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கம் வீழ்ச்சியுற்றமை.
  உதாரணம்: 1931 ஜப்பான், மக்சூரியாவை ஆக்கிரமித்தல்.
  1931 இத்தாலி, அபிசீனியாவை ஆக்கிரமித்தல்.
  1938 ஜேர்மன் றைன்லாந்தையும் செக்கோசெலவேக்சியாவை இணைத்துக் கொண்டமை போன்ற சநதர்ப்பங்களில் சர்வதேச மன்றத்தால் அதனைத் தடை செய்ய முடியாது போனமை.
- 1933 - 1938 காலப்பகுதியில் ஜேர்மனி, இத்தாலி, யப்பான் ஆகிய நாடுகள் சர்வதேச சங்கத்தி லிருந்து விலகியமை.

## மதிப்பீடு 1

- **இலக்கம் 01 - 05 வரையிலான வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்று ஏனையற்றுடன் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) 1. ஜேர்மன் 2. ஆஸ்திரியா 3. இங்கிலாந்து 4. துருக்கி 5. பல்கேரியா (...............)

(2) 1. லொயிட் ஜோர்ஸ் 2. வில்ஸ்டன் சேர்ச்சில் 3. ஒலென்டோ 4. கிளமென்சோ 5. வுட்ரோ வில்சன் (...............)

(3) 1. வேர்சேல்ஸ் 2. சென்ட்ஜேர்மன் 3. நியுலி 4. ஷெல்ஸ்விக் 5. லொசன்தே (...............)

(4) X யையும் Y யையும் இணைக்கும்போது பொருத்தமாக அமையும் விடையைத் தெரிவு செய்க.

| X | Y |
|---|---|
| (i) யுகோஸ்லேவியா | (A) வோர்சோ |
| (ii) செக்கொஸ்லவேக்சியா | (B) புக்கரெஸ்ட் |
| (iii) போலாந்து | (C) பெல்கிரேட் |
| (iv) ருமேனியா | (D) சேர்பியா |
| (iv) பல்கேரியா | (E) பிராக் |

1. BACDE 2. EDCBA 3. CEABD 4. DECAB 5. EDACB (...............)

- **சர்வதேச சங்கம் தொடர்பாகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(5) 1. முதலாம் உலகப்போரின் பின்னர் சமாதானத்தைப் பாதுகாக்கும் பொருட்டு நிறுவப்பட்டது.
2. அது வூட்ரோ வில்சனின் ஆலோசனைப்படி நிறுவப்பட்டது.
3. பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, ரஷ்யா, ஜேர்மன் என்பன ஆரம்ப அங்கத்துவ நாடுகளாகும்.
4. எதிர்காலத்தில் உலகப்போர் ஏற்படாதிருப்பதைத் தடுப்பதில் சர்வதேச சங்கம் வெற்றி கண்டது.
5. சர்வதேச சங்கத்தை அமைப்பதற்கு முன்னின்ற பொழுதிலும் அமெரிக்க அதில் பங்கு கொள்ளவில்லை. (...............)

## மதிப்பீடு 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. முதலாம் உலகப் போருக்கான காரணங்கள் யாவை?
02. முதலாம் உலகப் போரின் விளைவுகளை விளக்குக.
03. ‘‘1919 ஆம் ஆண்டு வேர்சேல்ஸ் உடன்படிக்கை பழிவாங்குவதை நோக்கமாக ஏற்படுத்தப்பட்ட சாசனமாகும்.’’
    1. முதலாம் உலகப் போருக்கான அண்மிய (உடனடி) காரணம் யாது?
    2. முதலாம் உலகப் போரில் பிரதான அணிகளைச் சேர்ந்த நாடுகளைக் குறிப்பிடுக.
    3. முதலாம் உலகப் போரில் தாக்கம் செலுத்திய மூன்று காரணிகளைச் சுருக்கமாக விபரிக்குக.
    4. வேர்சேல்ஸ் உடன்படிக்கையின் சரத்தினை அடிப்படையாகக் கொண்டு மேலேயுள்ள கூற்றினைக் கலந்துரையாடுக.
04. சர்வதேச சங்கத்தின் வெற்றியையும் தோல்வியையும் கலந்துரையாடுக.
05. முதலாம் உலகப்போருடன் தொடர்புடைய நாடுகளை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

# ரஷ்யப் புரட்சி

## அறிமுகம்

இருபதாம் நூற்றாண்டில் முதல் இரு தசாப்தங்களில் ரஷ்யாவில் நிலவிய சர்வாதிகார மானியமுறையிலான சார் மன்னர்களின் ஆட்சிக்கு எதிராக விவசாய, தொழிலாளர் மத்திய வகுப்பினர் எழுச்சியுற்றமையும் இறுதியாக ரஷ்யாவில் சமவுடைமை ஆட்சி முறை ஏற்படுத்தப்பட்டமையும் ரஷ்யப் புரட்சி எனப்படுகிறது. இப்புரட்சியின் மூலும் ரஷ்யாவில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள், அம்மாற்றங்கள் ஏனைய நாடுகளில் பரவிய விதம், சமவுடைமைவாதம் புது அணியாகச் செயற்பட்ட முறை என்பனவற்றை விபரிப்பதே இப்பாடத்தின் அடிப்படை நோக்கமாகும்.

**தேர்ச்சி** : • நவீன உலகில் பல்வேறு அரசியல் சிந்தனைகள் நடைமுறையில் செயற்பாடாக மாறிய விதத்தைப் பரிசீலிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 12.1 ரஷ்யப் புரட்சி உலக சக்தியாக மாறிய விதத்தினைத் தெளிவு படுத்துவார்.

**பாடவேளைகள்** : 15

**கற்றற்பேறுகள்** :
- ரஷ்யப் புரட்சியை விபரிப்பார்.
- புரட்சியில் வெற்றிகொண்ட சமவுடைமை எண்ணக்கருவைத் தெளிவு படுத்துவார்.
- சமவுடைமைவாதம் உலகின் பலம்வாய்ந்த சக்தியாக அமைந்ததை எடுத்துக்காட்டுவார்.
- சமவுடைமை பரவலடைந்த நாடுகளை உலகப் படத்தில் குறித்துப் பெயரிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### ரஷ்யப் புரட்சி

- ரஷ்யப் புரட்சியை அறிமுகம் செய்தல்.
- புரட்சி மூன்று கட்டங்களில் செயற்படல்.
  - 1905 புரட்சி
  - 1917 மார்ச் புரட்சி
  - 1917 ஒக்டோபர் புரட்சி

### ரஷ்யப் புரட்சிக்கான காரணங்கள்

- மேற்கு ஐரோப்பிய நாடுகளான இங்கிலாந்து, பிரான்ஸ் என்பனவற்றுடன் ஒப்பிடுகையில் ரஷ்யா எல்லாத் துறைகளிலும் பின்தங்கி இருந்தமை.
- 19ஆம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கும்போது ரஷ்யாவில் பல மாற்றங்கள் ஏற்பட்டமை, மகா பீற்றர், மகா கெத்தரின் ஆகியோரின் ஆட்சிக்காலம்.
- சமூக, பண்பாட்டு வேறுபாடுகளைக் கொண்ட பாரிய அரசை ஆட்சி செய்வது கடினமாக இருந்தமையால் சார் மன்னர்கள் சர்வாதிகார முறையில் செயற்படல்.
- சர்வாதிகார ஆட்சிக்குச் சார்பான அதிகாரிகள் சிலரின் நிருவாகம் பெரும் ஊழல் நிறைந்ததாகக் காணப்பட்டமை.
- நிலமானிய அடிமைகளைப் போன்று விவசாயிகளும் சமுதாயத்தில் பெரும் அநீதிக்கு உள்ளாகியமை.
- வர்த்தகத்தை மையமாகக் கொண்ட பல நகரங்கள் வளர்ச்சியடைந்ததுடன் வெளிநாடுகளின் முதலீடு அதிகரித்தமை.

- நாட்டின் வருமானத்தின் பெரும்பகுதி உயர் அதிகாரிகளின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டமை.
- 19ஆம் நூற்றாண்டின் சீர்திருத்த இயக்கங்கள் - நில அடிமை விடுதலைச் சட்டம்.
- ரஷ்யாவினுள் சமூக சீர்திருத்த இயக்கங்கள் படிப்படியே வலுவடைதல்.
- சமவுடைமை சிந்தனையின் வளர்ச்சி
- சமவுடைமைக் கட்சிகளின் வளர்ச்சி

## புரட்சியின் அண்மிய காலத்தில் ரஷ்யாவில் நிலவிய அரசியல், பொருளாதார, சமூக நிலைமை

**அரசியல்**

- இரண்டாம் நிக்கலஸ் மன்னனின் ஊழல் நிறைந்த முடியாட்சி
- 1905 ஆம் ஆண்டு ரஷ்ய - ஜப்பான் யுத்தத்தில் ரஷ்ய தோற்கடிக்கப்பட்டமை.
- 1905 ஆம் ஆண்டு பாரிய வேலை நிறுத்தம்.
- 1905 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட டுமோ தோல்வியுறல்.



***வேலைநிறுத்தம்***

*(source; https://en.wikipedia.org/wiki/Russian_Revolution)*

**பொருளாதாரம்**

- மானியப் பொருளாதார முறை பலவீனமடைதல்.
- மக்கள் தொகை அதிகரித்தலும், வேலையின்மை, ஏழ்மை நிலை அதிகரித்தமையும்
- வெளிநாட்டு முதலீட்டின் மூலம் உழைப்பைச் சுரண்டியமை.
- விவசாய, தொழிலாள, மத்திய வகுப்பினரின் பெருந்தொகையானோர் இன்னல்களுக்கு உள்ளானமை.
- ரஷ்ய திறைசேரி வெறுமையுற்றமை.

**சமூகம்**

- பிரபலமான மத்திய வகுப்பினர் காணப்படாமை.
- உணவுப் பிரச்சினை அதிகரித்தலும் பொருட்களின் விலை உயர்வடைதலும்

**புரட்சி ஏற்பட்ட முறை**

- 1917 மார்ச் புரட்சி
- கொன்ஸ்கியின் மென்ஷெலிக் அரசாங்கம் வெற்றியடையாமை.
- 1917 அக்டோபர் புரட்சி
- பொல்ஷெலிக்குகள் ஆட்சிக்கு வருதலும் சோவியத் சமவுடைமை அரசாங்கம் நிறுவப்படுதலும்.




ரஷ்சியர் பாதையிறங்கி போராட்டம்



ரஷ்சியர் போராட்டத்தை அடக்குதல்
*(source; https://en.wikipedia.org/wiki/Russian_Revolution)*

## புரட்சியின் வெற்றியும் அதன் தாக்கமும்

- சர்வதிகார மானியமுறை சார் அரசர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றமை.
- லெனினின் தலைமையில் புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகம் செய்யப்படல்.
- பொதுமக்களும் நிருவாகத்தில் தொடர்புகொள்ள வாய்ப்பளிக்கப்பட்டமை.
- ஜோசப் ஸ்டாலினின் காலத்தில் ரஷ்யா பிரபல நாடாகியமை.
- சமவுடைமைக் கருத்துக்களும், ஆட்சி முறையும் கிழக்கு ஐரோப்பாவில் இருந்து ஏனைய கண்டங்களுக்கும் பரவியமை.
  – சமவுடைமை நாடுகள் - சீனா, கியுபா, வட கொரியா, வியட்னாம்.



சார் மன்னனின் குடும்பம் *( source **http://www.townandcountrymag.com/society/news/a3786/czar-nicholas-ii-exhumed/)***



தலைமைதாங்கிய லெனின் *( source:Phttps://www.britannica.com/event/Russian-Revolution-of-1917 )*

## மதிப்பீடு 1

- **இலக்கம் 01, 02 என்பனவற்றின் தலைப்புக்களின் கீழ் முறையே ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு விடை தலைப்புக்குப் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(1) ரஷ்யப் போர் ஏற்படுவதற்கான காரணம்

1. சார் மன்னர்கள் சர்வாதிகார முறையில் ஆட்சி செலுத்தியமை.
2. நிருவாக அதிகாரிகளின் செயல்கள் ஊழல்கள் நிறைந்ததாக இருந்தமை.
3. நிலமானிய சமூக, பொருளாதார முறை தொடர்ந்தும் நிலைத்திருந்தமை.
4. கைத்தொழிற் புரட்சியின் தாக்கம் நாடு முழுவதும் செயற்பட்டமை.
5. சமவுடைமைக் கருத்துக்களின் வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருந்தமை.

(...............)

(2) ரஷ்யாவை ஆட்சி செய்த மன்னர்கள்

1. முதலாம் அலெக்சாண்டர் சார் மன்னன்
2. இரண்டாம் அலக்சாண்டர் சார் மன்னன்
3. மகா பீற்றர் மன்னன்
4. ஏழாம் ஹென்ரி மன்னன்
5. முதலாம் நிக்கலஸ் மன்னன்

(...............)

- **மூன்றாம் நான்காம் வினாக்களுக்கு சோடிப் பதங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடி ஒன்றுடன் ஒன்று பொருந்தாது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

(3)

1. இரண்டாம் அலெக்சாண்டர் (சார்) மன்னன் - நில அடிமைகளை விடுதலை செய்தல்.
2. இரண்டாம் நிக்கலஸ் (சார்) மன்னன் - ஜப்பானுடனான யுத்தத்தில் தோல்வியடைந்தமை.
3. கெரன்ஸ்கி - மென்சிலிக் கட்சி
4. வீ.ஐ. லெனின் - பொல்ஷெலிக் கட்சி
5. ஜோசப் ஸ்டாலின் - டுரொட்சியுடனான மோதலில் தோல்வியுற்றமை.

(...............)

(4)

1. ரஷ்ய யுத்தம் - 1905
2. பொல் ஷெலிக் புரட்சி - 1917 அக்டோபர்
3. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் - ரஷ்யப் புரட்சி
4. வீ.ஐ. லெனினின் மரணம் - 1924
5. ஜோசப் ஸ்டாலின் - ஐந்தாண்டுத் திட்டம்

(...............)

## மதிப்பீடு 2

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. ‘‘போல்ஷெலிக் புரட்சி சமவுடைமைக் கருத்துக்களின் குறிப்பிடத்தக்க வெற்றியாகும்.’’
   (i) போல்ஷலிக் புரட்சி ஏற்பட்ட ஆண்டினைத் தருக.
   (01 புள்ளி)
   (ii) இப்புரட்சிக்குத் தலைமை வகித்த இருவரின் பெயர்களை எழுதுக.
   (02 புள்ளிகள்)
   (iii) புரட்சியின்போது மக்களால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்கள் யாவை?
   (03 புள்ளிகள்)
   (iv) மேலே கூறப்பட்டுள்ள கூற்றினைப் போல்ஷலிக் புரட்சியின் விளைவுகளின் அடிப்படையில் கலந்துரையாடுக.
   (08 புள்ளிகள்)

02. (i) 1917 போல்ஷலிக் புரட்சி ஏற்படுவதற்கான காரணங்களைப் பரிசீலிக்குக.
   (06 புள்ளிகள்)
   (ii) அப்புரட்சியினால் ஏற்பட்ட விளைவுகளைப் பகுத்தாய்க.
   (08 புள்ளிகள்)

03. உலகப் படத்தில் பின்வரும் சமவுடைமை நாடுகளைக் குறித்துப் பெயரிட்டு, அவைகளில் இரண்டு நாடுகளைப் பற்றி வரலாற்றுக் குறிப்பு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| 1. ரஷ்யா | 2. போலாந்து | 3. ஹங்கேரி | 4. பல்கேரியா |
| 5. கியுபா | 6. கீனா | 7. வியட்நாம் | 8. வடகொரியா |

(சரியாகக் குறிப்பிட்டவைகளுக்கு 01 புள்ளி வீதம் 08 புள்ளிகள்
வரலாற்றுக் குறிப்புக்கு 05 பள்ளிகள் வீதம் 10 புள்ளிகள்)

# 13. இரண்டாம் உலகப் பெரும்போர்

**அறிமுகம்**

முதலாம் உலகப் பெரும் போரால் உலகின் பெரும்பாலான நாடுகளும் பேரழிவுகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமையால் மீண்டும் அவ்வாறான ஒருநிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் சிறிது காலம் செல்வதற்கிடையில் ஜேர்மனியில் நாசித் தலைவர் அடோல்ப் ஹிட்லரின் செயற்பாடுகளின் பிரதிபலனாக 1939 இல் இரண்டாம் உலகப் பெரும்போர் ஆரம்பமானது.

முதலாம் உலகப் போரின் இறுதியில் செய்து கொள்ளப்பட்ட வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் ஜேர்மனிக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளால் பிற்காலத்தில் ஹிட்லர் போன்ற ஒரு தலைவன் அந்நாட்டின் தலைமைப் பதவிக்கு வரமுடியுமாயிருந்தது. ஹிட்லர் 1933 இல் ஜெர்மனியின் ஆட்சியாளனானதைத் தொடர்ந்து அவனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் 1939 செப்டெம்பர் முதலாந் திகதி இரண்டாவது உலகப் போர் ஆரம்பமானது. இவைதவிர உலக சமாதானத்தை மேற்கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் பலவீனமும் இத்தாலியில் முசோலினியின் நடவடிக்கைகளும் ஜப்பான் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் இரண்டாவது உலகப் போர் ஏற்படுவதற்குப் பெருமளவுக்குக் காரணமாயிருந்தன.

இரண்டாம் உலகப் போர் பல கண்டங்களிலும் பரவிச் சென்றதோடு பிரித்தானியா போருக்கு வந்ததுடன் அதன் குடியேற்றங்கள் எங்கும் போர் விரிவடைந்து சென்றது. ஜப்பான், ஐக்கிய அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியதனால் அந்நாடும் யுத்தத்தில் பிரவேசித்தது. ஐக்கிய அமெரிக்கா ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களுக்கு அணுகுண்டுகளை இட்டதுடன் ஜப்பான் தோல்வியுற்றது பேரளவு உயிர், உடைமைச் சேதங்களுடன் இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது.

இந்நிலைமை தொடர்பாக உலக வல்லரசுகளின் கவனம் ஈர்க்கப்பட்டமையால் 1945 இல் அந்நாடுகளின் தலைவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் சென் பிரன்சிஸ்கோ நகரில் கூடி நிறைவேற்றிக் கொண்ட தீர்மானத்திற்கேற்ப உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபையைத் தோற்றுவித்தனர். பல்வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்ட போதிலும் உலக சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் இதுவரை முக்கியமான சேவைகள் ஆற்றப்பட்டுள்ளன.

இரண்டாவது உலகப் போருக்கான காரணங்கள், அதன் தன்மை அதன் விளைவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு, அதனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் ஆகியவற்றைப் பற்றிக் கவனஞ் செலுத்துவது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுபவையாகும்.

**தேர்ச்சி** : • அதிகாரத்திற்காக மேற்கொள்ளப்படும் மோதல்களினால் ஏற்படும் பேரழிவுகளை விளங்கிக்கொண்டு சமாதானத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 13.1 இரண்டாம் உலகப் போரின் பேரழிவுகளைத் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 28

**கற்றற்பேறுகள்** :
- இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தையும் பரவலையும் விளக்குவார்.
- இரண்டாவது உலகப்போரின் விளைவுகளை விளக்குவார்.
- இரண்டாவது உலகப் போரின்போதும் அதன் பின்னரும் சம்பந்தப்பட்ட இடங்களை உலப் புறவுருப் படம் ஒன்றில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## இரண்டாவது உலக யுத்தம்

1939 செப்டெம்பர் 1 ஆந் திகதி அடோல்ப் ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்ததுடன் இரண்டாவது உலகப் போர் ஆரம்பமானது.

## இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

- ஜேர்மனியின் வைமார் குடியரசின் பலவீனம்
  - அரசியல் உறுதிவாய்ந்த அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள முடியாமை.
  - அரசியல் உறுதியின்மை
  - பணவீக்கம்
  - வேலைவாய்ப்பின்மை
  - உணவுத் தட்டுப்பாடு
  - சர்வாதிகாரி ஒருவன் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவானமை.
  - ஹிட்லர் ஆட்சிக்குவரல்.
  - ஜேர்மனி மீண்டும் கட்டியெழுப்பப்பட்டமை.
- வேர்சயில்ஸ் ஒப்பந்தத்தின் பலவீனம்
  - ஜேர்மனிக்கு நியாமற்ற முறையில் கடுந்தண்டனை வழங்கப்பட்டமை.
  - ஜேர்மனியிடமிருந்து நியாமற்ற முறையில் நட்டஈடு பெறப்பட்டமை.
  - ஜேர்மனிக்கு சொந்தமாகவிருந்த குடியேற்றங்கள் பறிக்கப்பட்டமை.
- பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சியடைந்தமை.
  - ஹிட்லர் - முசோலினியின் நட்பு
  - பொருளாதாரம், போர் உதவிகளின் ஒத்துழைப்பு
- இத்தாலியில் முசோலினியின் செயற்பாடுகள்
  - முசோலினி இத்தாலியில் ஆட்சிக்கு வரல்.
  - பாசிஸக் கட்சியைத் தவிர, ஏனைய அனைத்துக் கட்சிகளுக்கும் தடைவிதித்தல்.
  - கடுமையான பத்திரிகைத் தணிக்கை.
  - கல்வியைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியதுடன், பாசிஸவாதத்தைப் போதிப்பதற்கு அதனைப் பயன்படுத்தல்.
  - தொழிற்சங்கங்களைப் பாசிஸ நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரல்.
  - பாப்பாண்டவருடன் ஒப்பந்தமொன்று செய்துகொள்ளல்.
  - அபீசீனியாவை ஆக்கிரமித்தல்.
- ஜப்பான் கிழக்குலகின் வல்லரசாக எழுச்சியுறல்
  - 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜப்பான் உலகின் முன்னேற்றகரமான நாடொன்றாக மாறுதல்.
  - ஜப்பானில் ஏற்பட்ட துரித பொருளாதார முன்னேற்றம்.
    - முதலாளித்துவப் பொருளாதார முறை
    - கைத்தொழில் அதீத முன்னேற்றம்
    - தொழினுட்ப அபிவிருத்தி
  - ஜப்பான் ஆசியாவின் வல்லரசாகத் தன்னைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கான முயற்சிகள்

    உதாரணம்:
    - கொரியா தொடர்பான சீன-ஜப்பானிய மேதல்.
    - ரஷ்யாவை 1905 இல் ஜப்பான் தோற்கடித்தல்.
    - ஐக்கிய அமெரிக்காவுக்குச் சொந்தமாக இருந்த ஆசிய-பசுபிக் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொள்ளல்.

- ஜப்பானின் போர் வெற்றிகளையும் அதன் பரம்பலையும் தடுப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

- ஹிட்லரின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள்
  - மைன் காம்ப் (எனது போராட்டங்கள்) எனும் நூலை வெளியீடு செய்தமை.
  - ஹிட்லர் ஜேர்மனியின் பிரதம (சான்சலர்) ஆனமை.
  - ஜனாதிபதி ஹின்டன்பார்க் மரணமுற்றதன் பின்னர் ஹிட்லர் அப்பதவியையும் தனதாக்கிக் கொண்டமை.
  - எதிரானவர்களை அழித்தொழித்தல். படையணிகளை உருவாக்கிக் கொண்டு எதிராளிக் குழுக்களை அடக்கி ஒடுக்குதல்.
  - குடியியல் உரிமைகளை இல்லாமலாக்குதல்.
  - கருத்து வெளியிடும் உரிமையை ஒழித்தல்.
  - கல்வி நிர்வாகத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரல்.
  - யூதர்களுக்குக் கொடிய தண்டனைகள் வழங்குதல்.
  - தொழிற்சங்கங்களுக்குத் தடைவிதித்தல்.
  - ஜேர்மனியின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்தல்.
  - போக்குவரத்துச் சேவைகளை முன்னேற்றமடையச் செய்தல்.
  - கட்டாய இராணுவ சேவையை ஆரம்பித்து போர்ப் படையை வலிமையூட்டல்.
  - ஜேர்மனியை ஆயுதபாணியாக்குதல்.
  - வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தினை மீறி தேச எல்லைகளை விரிவுபடுத்தல்.
  - ரைன்லாந்தை இணைத்துகொள்ளுதல்.
  - சுடேட்டன்லாந்தை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.
  - செக்கோஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தல்.
  - ஆஸ்திரியாவைக் கைப்பற்றிக்கொள்ளல்.



***ஹிட்லர் ஆட்சியில் ஜேர்மனியில் பாதை அபிவிருத்தி***

*( Source: http://weimarandnazigermany.co.uk/autobahn/#.WmW0AYVOKUk )*




ஹிட்லர் ஆட்சியில் இராணுவத்தினரின் தேவைக்காகத் தயாரிக்கப்பட்ட வொக்ஸ் வொகன் கார்
(*source: http://warfarehistorynetwork.com/daily/wwii/the-nazi-porsche-adolf-hitler-and-the-volkswagen-beetle/)*



பேர்ள் துறைமுகம் ஜப்பானால் தாக்கப்படுவதற்கு முன்னர்
*( Source:http://worldwar2headquarters.com/HTML/PearlHarbor/us-consequences.html)*

ஜப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்குதல்



- யுத்தத்தின் ஆரம்பம்
    - 1939 செப்டெம்பர் 1 ஆம் திகதி ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தல்.
    - அதற்கு எதிராக பிரிததானியாவும் பிரான்சும் ஜேர்மனிக்கு விரோதமாக யுத்தப் பிரகடனஞ் செய்தல்.
    - ஐரோப்பாவினுள் மூன்று அணிகள் தோற்றம் பெற்றமையும் அவர்களிடையே காணப்பட்ட சந்தேகமும்
        - ஜேர்மனியும் இத்தாலியும்
        - பிரித்தானியாவும் பிரான்சும்
        - ரஷ்யா
    - நாசி - கம்யூனிஸ சமாதான ஒப்பந்தம்
    - சர்வதேச சங்கத்தின் பலவீனம்
    - கிட்டிய காரணி : ஹிட்லரினால் போலந்து ஆக்கிரமிக்கப்படல்.
    - ஜப்பான் பேர்ல் துறைமுகத்தைத் தாக்கியதோடு, ஐக்கிய அமெரிக்கா நட்பு அணியுடன் சேர்ந்து போரில் பிரவேசித்தல்.
    - அணிகள்:

      நட்பு : இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா

      அச்சு : ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான்
- யுத்தத்தின் பரம்பல்
    - ஐரோப்பிய வல்லரசுகள் அணிகளைச் சேர்த்துக் கொண்டு இராணுவத்தை வலுப்படுத்தல்.
    - யுத்தத்தின் பிரதான அணிகளும் போர்முனைகளும்
    - ஹிட்லர் புதிய யுத்த உபாயங்களைக் கையாளல்.
    - ‘பிலிட்ஸ்கிரிக்’ முறை அல்லது சுயமாகத் தாக்குதல் மேற்கொள்ளல்.
    - முன்னேற்றகரமாகத் தாங்கிகள் பாவிக்கப்பட்டமை.
    - தாக்குதலுக்கு விமானங்களைப் பயன்படுத்தல்.
    - சுறுசுறுப்பான இராணுவ அணிகள்
    - 1940 இல் ஹிட்லர் நோர்வே, சுவீடன்மீது போர்தொடுத்து அவற்றை ஆக்கிரமித்துக் கொள்ளல்.
    - ஒல்லாந்தையும் பெல்ஜியத்தையும் கைப்பற்றுதல்.
    - பிரான்சைத் தோற்கடித்தல்.
    - பிரித்தானியாவுக்கு எதிரான போர்கள்
    - போல்கன் பிரதேசத்தைக் கைப்பறிக்கொள்ளல்.
    - சோவியத் ரஷ்யாவை ஆக்கிரமித்தல்.
    - ஐக்கிய அமெரிக்காவும் ஜப்பானும் மோதிக்கொள்ளல்.

*(SOURCE: HTTP://WWW.ALAMY.COM/STOCK-PHOTO-NAZI-LEADER-ADOLF-HITLERS-ARMY-IN-1945-69276282.HTML)*



### ஹிட்லரின் போர்ப்படை

- யுத்தத்தின் முடிவு
  - சோவியத்தின் இராணுவத்திடம் ஜேர்மனி தோல்வியுறல்.
  - பிரித்தானிய, ஐக்கிய அமெரிக்கப் படைகளின் ஒன்றிணைந்த தாக்குதலால் ஜேர்மனி தோல்வி யுற்றமை.
  - அணுகுண்டுத் தாக்குதலால் நிலைகுலைந்த ஜப்பான் தோல்வியை ஒப்புக்கொள்ளல்.

- யுத்தத்தின் விளைவுகள்
  - இதுவரை உலகில் இடம்பெற்ற போர்களில் மிகக் கொடூரமானதாக இருந்தமை. முழு உலகிலும் மனித வளமும் பொருளாதார வளமும் பேரளவில் அழிவுற்றமை.
  - அணுகுண்டால் ஹிரோஷிமாவும் நாகசாகியும் முற்றாக அழிவுற்றமை. அதன் பாதிப்புகள் அடுத்த தலைமுறையிடமும் காணப்பட்டமை.
  - ஜேர்மனி நாசமாக்கப்பட்டமை
  - ஜேர்மனி கிழக்கு, மேற்காக இரு நாடுகளாகப் பிளவுபட்டமை.
  - இதுவரை வலரசுகளாகத்திகழ்ந்த பிரித்தானியாவும் பிரான்சும் அவ்விடத்தை இழந்தமை.
  - ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் முதல்தர வல்லரசுகளானமை.
  - ஐக்கிய அமரிக்கா ஜனநாயகத்தின் பாதுகாவலனாக முன்வரல்.
  - பிரித்தானியா, பிரான்சு, பெல்ஜியம், ஒல்லாந்து, மேற்கு ஜேர்மனி ஆகிய முதலாளித்துவப் பொருளாதார நாடுகள் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒரே அணியில் சேர்ந்துகொள்ளல்.
  - சோவியத் ரஷ்யாவின் தலைமையில் கம்யூனிஸ அணி ஒன்று தோன்றுதல். போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, பல்கேரியா, யூகோஸ்லேவியா, கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் இவ்வணியில் சேர்ந்துகொள்ளல்.
  - அழிவுற்ற நட்பு நாடுகளையும் தோல்வியுற்ற (மேற்கு ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி) நாடு களையும் முன்னேற்றமடையச் செய்வதற்கு ஐக்கிய அமெரிக்காவால் மார்ஷல் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.
  - பிரித்தானிய, பிரான்சியக் குடியேற்றங்கள் சுதந்திரமடையப் பெற்றமை.
  - உலக சமாதானத்தைப் பேணவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டமை.



***யுத்தத்தின் அழிவு***
(Source: http://www.ncregister.com/blog/sbeale/can-the-hiroshima-bombing-be-morally-justified)



*(Source: h ttps://www.defensemedianetwork.com/stories/operation-pied-piper-the-evacuation-of-english-children- during-world-war-ii/)*



## கணிப்பீடு 01

- **கீழ்வரும் வினாக்களுக்கு ஐவைந்து பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதாவது ஒரு காரணத்திற்காக அடுத்த சொற்களுடன் பொருந்தாதுள்ளது. அவ்வாறான பொருத்தப்பாடற்ற பெயரைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. அடோல்ப் ஹிட்லர் 2. பெனிடோ முசோலினி 3. விக்டோரியா ஒர்லென்டோ
4. வின்ஸ்டன் சர்ச்சில் 5. பிராங்ளின் ரூஸ்வெல்ட் (...........)

02. 1. ஜேர்மனி 2. இத்தாலி 3. ஜப்பான்
4. ஹங்கேரி 5. பிரான்சு (...........)

03. 1. கோரிங் 2. கோயாபெல்ஸ் 3. வொன் மோல்க்
4. டோனிட்ஸ் 5. ரிபன்திரோப் (...........)

04. 1. ரைன்லாந்து 2. அபீசீனியா 3. சுடேட்டன்லாந்து
4. செக்கோஸ்லோவேக்கியா 5. ஆஸ்திரியா (...........)

05. 1. பிரான்சு 2. இங்கிலாந்து 3. ரஷ்யா
4. ஐக்கிய அமெரிக்கா 5. இத்தாலி (...........)

- **கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் விடயங்கள் ஐந்து தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தலைப்புக்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

06. இரண்டாம் உலகப் பெரும்போர்
1. 1939 இல் ஆரம்பமானது.
2. யுத்தம் மூள்வதற்கான கிட்டிய காரணி, ஆஸ்திரியாவின் இளவரசான பிரன்சிஸ் பேடினன் கொலை செய்யப்பட்டமை.
3. ஐரோப்பாவில் சர்வாதிகார ஆட்சிகள் எழுச்சியுற்ற வந்தமையால் யுத்தம் மூள்வதைத் தவிர்க்க முடியாதிருந்தது.
4. ஜப்பான தோல்வியுற்றதுடன் போர் முடிவுற்றது.
5. யுத்தத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது.

(...........)

07. இரண்டாம் உலக மகாயுத்தம்
1. 1939 இல் ஜேர்மனி போலந்தைக் கைப்பற்றியது.
2. 1940 இல் இத்தாலி போரில் சம்பந்தப்பட்டது.
3. 1941 இல் ஜப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியது.
4. 1945 இல் ஜப்பான் யுத்தத்தில் வெற்றிபெற்றது.
5. 1945 இல் ஜேர்மனி நிபந்தனையற்ற விதத்தில் சரணடைந்தது.

(...........)

08. இரண்டாம் உலகப் போர் நிகழாமல் தடுத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள்.
1. 1919 இல் சர்வதேச சங்கம் அமைத்துக்கொள்ளப்பட்டமை.
2. 1925 இல் லோகார்னோ ஒப்பந்தம் கையெழுத்திடல்.
3. 1932 இல் ஆயுதப் பரிகரண மகாநாடு
4. 1933 இல் ஹிட்லரால் ஜேர்மனியில் ஜனநாயகம் நிலைநாட்டப்படல்.
5. 1938 இல் மியுனிக் உடன்பாடு

(...........)

## கணிப்பீடு 2

• **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. இரணடாம் உலகப் போர் ஏற்படுவதற்கான காரணிகளை விமர்சன ரீதியில் ஆராய்க.
(14 புள்ளிகள்)

02. ''இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாவதற்கு வித்து, முதலாம் உலகப் போரின் விளைவுகளில் கருக்கொண்டிருந்தது.'' இதனையிட்டு விளக்கமளிக்குக.
(14 புள்ளிகள்)

03. இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட விளைவுகளை விமர்சன ரீதியாக ஆராய்க.
(14 புள்ளிகள்)

04. இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்த காரணிகளைப் பரிசீலிக்குக.
(14 புள்ளிகள்)

## கணிப்பீடு 3

01. இரண்டாம் உலகப் போரின் நட்புநாடுகளையும் அச்சு நாடுகளையும் வேறுபடுத்தி, துலக்கமாக உலகப் புறவுருப்படமொன்றில் குறிக்குக.

**தேர்ச்சி** : • அதிகாரத்திற்காக மேற்கொள்ளப்படும் மோதல்களினால் ஏற்படும் பேரழிவுகளை விளங்கிக்கொண்டு சமாதானத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 13.2 உலக சமாதானத்தைத் தோற்றுவித்துக் கொள்வதற்காக ஒன்றுபட்டு இயங்குவதின் முக்கியத்துவத்தை பரிசீலிப்பார்.

**பாடவேளைகள்** : 7

**கற்றற்பேறுகள்** :
- ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கத்தை விளக்குவார்.
- இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் உலக சமாதானத்தை பேணிப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட எத்தனங்களை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

**ஐக்கிய நாடுகள் சபை**

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்றதன் பின்னர் உலக சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைத்துக் கொள்ளப்பட்ட சர்வதேச அமைப்பை அறிமுகப்படுத்தல்.

### ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்பம்

- சர்வதேச சங்கத்தைவிட மிகவும் சக்திவாய்ந்த அமைப்பொன்றின் தேவை ஒன்று ஏற்பட்டமை.
- ஒவ்வொருவரினதும் சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் மதிப்பளிக்கும் உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் சர்வதேச அமைப்பொன்று அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருந்தமை.
- 1941 - அத்திலாந்திக் சாசனம்
  - அடிமைப்பட்டவர்களுக்குச் சுதந்திரம் வழங்குதல்.
  - சுயமாகத் தீர்மானிக்கும் உரிமையைப் பெற்றுக்கொடுத்தல்.
  - ஆயுதப் பரிகரணம்
- 1943 இல் டெஹ்ரான் நகரில் ஒன்றுகூடிய உலக வல்லரசுகளின் தலைவர்களான பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட், சோவியத் ரஷ்யாவின் தலைவர் ஜோஸப் ஸ்டாலின் ஆகியோர் உலக சமாதானத்தை முன்னிறுத்தி சர்வதேச சங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானித்தமை.
- 1945 இல் சென் பிரன்சிஸ்கோ நகரில் நடத்தப்பட்ட ஒன்றுகூடலில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் தயாரிக்கப்பட்டது.
- உலக வல்லரசுகள் ஐந்து உட்பட 51 நாடுகள் இப்பிரகடனத்தில் கையொப்பமிட்டன.
- 1945 ஒக்டோபர் 24ஆம் திகதி உத்தியோகபூர்வமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.

### ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள்

- சர்வதேச பாதுகாப்பையும் சமாதானத்தையும் ஒத்துழைப்பையும் முன்னெடுத்துச் செல்லல்.
- நிற, பால், மொழி, சமய பேதங்களைப் பாராது மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, அவற்றைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்.
- பொருளாதார, சமூக, கலாசார விருத்திக்கும் நலன்களுக்கும் பாடுபடல்.
- மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் உறுதிப்படுத்துவதில் சர்வதேச உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக்கொள்ளல்.

- இப்பொதுவான நோக்கங்களை அடைந்துகௌள்வதற்காகச் சர்வதேசத்தினதும் தலைமை நிலையமாகச் செயற்படல்.

## ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு

- பிரதான அங்கங்கள் ஆறைக் கொண்டுள்ளன.
  - பொதுச் சபை
  - பாதுகாப்புச் சபை
  - நம்பிக்கைப் பொறுப்புச் சபை
  - பொருளாதார, சமூக சபை
  - சர்வதேச நீதிமன்றம்
  - பொதுச் செயலகம் (அமைப்பு, நோக்கம், அங்கத்தவர் தொகை, பொறுப்புகள், முக்கியத்துவம்)

## ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனங்கள்

- இரண்டாம் உலகப் போரால் நலிவடைந்த நாடுகளின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபையும் அதன் இணை நிறுவனங்களும் பெருஞ் சேவைகளை ஆற்றுகின்றமை.

| | | |
|---|---|---|
| உதாரணம்: | ILO | : சர்வதேச தொழிலாளர் அமையம் |
| | FAO | : உணவு, விவசாயத்தாபனம் |
| | UNESCO | : ஐக்கிய நாடுகளின் கல்வி, கலாசார, விஞ்ஞான அமையம் |
| | IMF | : சர்வதேச நாணய நிதியம் |
| | WHO | : உலக சுகாதர நிறுவனம் |
| | UNICEF | : ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் |

இத்தாபனங்களைப் பற்றிக் கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் விடயங்களைச் சேகரிக்கவும்.
- அமைப்பு
- அங்கத்தவர் தொகை
- நோக்கம்
- பொறுப்புக்களும் முக்கியத்துவமும்

## ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியத்துவம்

- உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்குப் பாடுபடல்.

  உதாரணமாக: இந்தோனேஷியாவிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
  அரபு - இஸ்ரவேல் மோதல்கள்.
  கொரிய யுத்தம்
  சுயெஸ் நெருக்கடி
  ஹங்கேரியாவின் எழுச்சி
  பெல்ஜிய கொங்கோ உள்நாட்டு யுத்தம்
  சைப்ரஸ் நெருக்கடி
  காஷ்மீர் நெருக்கடி
  செக்கோஸ்லோவேக்கிய நெருக்கடி
  தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்தமை.
  ரொடீசியாவிற்குப் பொருளாதாரத் தடைவிதிதத்தல்.
- ஆயுதப் பரிகரணச் செயற்பாடுகள்
- தேசங்களுக்கிடையே எழும் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளும் முயற்சி.
- சர்வதேச ஒத்துழைப்பும் அபிவிருத்தியும் கருதி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளும்.
- சர்வதேச அனர்த்தங்களின்போது உதவி ஒத்தாசை புரிதல்.
  (வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புவிச்சரிவு, சுனாமி)
- எதிர்காலச் சந்ததியினரை யுத்தப் பீதியிலிருந்து விடுவித்தல்.

## ஐக்கிய நாடுகள் சபை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள்

- நாடுகள் அணி சேர்ந்து கொண்டு செயற்படுதல்.
- அணுவாயுதக் கட்டுப்பாடு.
- பணத்தட்டுப்பாடு.

## கணிப்பீடு 01

- **கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் விடயங்கள் ஐந்து தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தலைப்புக்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

01. ஐக்கிய நாடுகள் சபை
    1. இரண்டாம் உலகப் போரின் பின்னர் தோற்றுவிக்கப்பட்டது.
    2. அதன் பிரதான நோக்கம் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.
    3. பொதுச் செயலாளர் அதன் பிரதான நிர்வாகியாவார்.
    4. பாதுகாப்புச் சபையில் அனைத்து அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும்.
    5. நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு இரத்து அதிகாரமுண்டு.

(...........)

02. ஐக்கிய நாடுகள் சபை
    1. இரண்டாம் உலக யுத்தத்தின் நேரடி விளைவாக ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது.
    2. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியமான நோக்கம் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணிக் கொள்வதாகும்.
    3. பொதுச்சபை அனைத்து நாடுகளினதும் பிரதிநிதிகளைக் கொண்டதாகும்.
    4. பொதுச் செயலகம் அந்நிறுவனத்தின் நிர்வாக மையமாகும்.
    5. பொதுச் செயலகம் சர்வதேச நீதிமன்றம் என்றும் குறிப்பிடப்படும்.

(...........)

## கணிப்பீடு 2

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. (i) ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னரான முதலிரு பதிற்றுகளிலும் உலக சமாதானத்தைப் பேணுவதில் அந்நிறுவனம் மேற்கொண்ட செயற்பாடுகளை விளக்குக. (07 புள்ளிகள்)

    (ii) இன்றைய உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற் கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக. (07 புள்ளிகள்)

02. (i) 1965 ஆம் ஆண்டுவரை ஐக்கிய நாடுகள் சபை சமாதானத்தைப் பேணுவதற்கு அது மேற்கொண்ட பிரதானமான சர்வதேசப் பிரச்சினைகள் பற்றி விளக்குக. (07 புள்ளிகள்)

    (ii) அவற்றைத் தீர்த்து வைப்பதில் ஐக்கிய நாடுகள் சபை எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதைப் பரிசீலிக்குக. (07 புள்ளிகள்)

# 14. இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னரான உலகம்

## அறிமுகம்

யுத்தத்தில் பங்குபற்றிய அனைத்து நாடுகளுக்கும் பேரழிவை விளைவித்துக் கொண்டும், உலகம் பூராவும் கொடூர விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டும் இரண்டாம் உலகப் போர் முடிவுற்றது. அதுவரை உலகில் பலம்வாய்ந்த நாடுகளாகத் திகழ்ந்த பிரித்தானியாவையும் பிரான்சையும் பின்தள்ளிவிட்டு, ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் உலக வல்லரசுகளாக எழுச்சியுற்றன. ஐக்கிய அமெரிக்கா ஜனநாயக அரசியல் முறையையும் முதலாளித்துவப் பொருளாதார முறையையும் பின்பற்றியதோடு, பிரித்தானியாவும் பிரான்சும் இதனோடு சேர்ந்துகொண்டு ஒரே அணியாகச் செயற்பட ஆரம்பித்தன. மார்ஷல் திட்டத்தை முன்வைத்து, யுத்தத்தால் அழிவுற்ற மேற்கு ஐரோப்பாவைக் கட்டியெழுப்புவதற்கு ஐக்கிய அமெரிக்கா செயற்பட்டது. சோவியத் நாடு பொதுவுடைமை அரசியல், பொருளியல் முறைகளைப் பின்பற்றிப் போலந்து, கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லோவாக்கியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளை ஒன்றிணைத்துக் கொண்டு கிழக்கு ஐரோப்பாவில் பொது உடைமை அணி ஒன்றைத் தோற்றுவித்துக் கொண்டது.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாம் அரைப்பகுதியின் ஆரம்பத்திலிருந்து இறுதிப் பகுதிவரை உலக ஆதிக்கத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இவ்வணிகள் இரண்டிற்கும் இடையே ஏற்பட்ட அதிகாரப் போட்டி ‘பனிப் போர்’ எனும் பெயரால் குறிப்பிடப்பட்டது. முதலாளித்துவ அணி நேட்டோ அமைப்பையும் பொது உடைமை அணி வோர்சோ அமைப்பையும் உருவாக்கிக் கொண்டு தத்தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டன. மட்டுப்படுத்தப்பட்ட ஆயுதப் போராட்டத்துடன் நான்கு பதிற்றுகளாக நிகழ்ந்த இக்கொள்கைப் போராட்டம் பின்னர் எட்டாம் தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியுடன் முடிவுற்றதோடு, ஐக்கிய அமெரிக்கா உலகின் முதன்மையான வல்லரசானது.

ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் உலக வல்லரசுகளாக எழுச்சியுற்ற விதத்தையும் அவ்விரு நாடுகளுக்கிடையேயும் ஏற்பட்ட போராட்டங்களையும் இறுதியில் சோவியத் அரசு வீழ்ச்சியுற்ற விதத்தையும் இவ்விரு அணிகளிலும் சம்பந்தப்படாத நாடுகள் ஒன்று சேர்ந்து அணிசாரா இயக்கத்தை ஆரம்பித்துக் கொண்டமை பற்றிய விடயங்களையும் இப்பாடத்தின் மூலம் கற்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி** : • அதிகாரத்திற்காக இடம்பெறும் மோதல்களின் அழிவுகளை விளங்கிக் கொண்டு சமாதானத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 14.1 ஆதிக்க அணிகள் உலக அரசியலில் ஏற்படுத்திய செல்வாக்கை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 18

**கற்றற்பேறுகள்** :
- இன்றைய அரசியல் நிலையில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் குறிப்பிடுவார்.
- அதிகார அணிகளின் பொருளாதார, அரசியல் போக்குகளை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னரான உலகம்

### உலகம் அதிகார அணிகளாகப் பிளவுண்டு செல்லல்

- இரண்டாம் உலகப் போரின் முடிவுடன் இதுவரை ஐரோப்பாவில் புகழ் பெற்றிருந்த நாடுகள் அதிகாரத்தை இழத்தல்.
- ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் பொருளாதார இராணுவ ரீதியில் வீழ்ச்சியுறல்.
- ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் முதலாளித்துவ, பொதுவுடைமைக் கொள்கைகளின் அடிப்படையில் ஈரணிகளாக முன்னணிக்கு வரல்.
- அதுவரை கிழக்குலகில் குடியேற்றவாதப் பேரரசைக் கொண்டிருந்த பிரித்தானியாவும் பிரான்சும் அவற்றை இழத்தல்.
- அடிமைத்துவத்திலிருந்து மீண்டு சுதந்திரமடைந்த பெரும்பாலான நாடுகள், தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அணிசாரா அமைப்பாகச் செயற்படல்.
- இப்பின்னணியில் உலகத் தலைமையில் மாற்றங்கள் ஏற்படல்.

### முதலாளித்துவ அதிகார அணியின் வளர்ச்சி

- மூன்று நூற்றாண்டுகளைக் கொண்ட ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் வரலாற்றில், அது 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்தே உலக அரசியல் நடவடிக்கைகளில் தலையிடத் தொடங்கியது.
- இருபதாம் நூற்றாண்டாகும்போது உலக அரசியல் நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகளை அடிப்படையாகக் கொண்டே செயற்படல்.
- முதலாம் உலகப் போரில் பிரித்தானியாவும் பிரான்சும் ஐக்கிய அமெரிக்காவும் ஒன்றுபட்ட மேலைத்தேய நட்பு அணி வெற்றிபெற்றதன் பின்னர் ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் தோற்றப்பாடு உலகில் முன்னணிக்கு வரல்.
- முதலாம் உலகப் போரின் பின்னர் உலக சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைத்துக்கொள்ளப்பட்ட சர்வதேசச் சங்கத்தை உருவாக்கிக் கொள்ளும் ஆலோசனையை முன்வைத்தது ஐக்கிய அமெரிக்காவாகும்.
- ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய நடவடிக்கைகளில் சம்பந்தப்படுவதனை செனட் சபை எதிர்த்ததனால் அந்நாடு சர்வதச சங்கத்தில் அங்கத்துவம் பெறவில்லை.
- சர்வதேசச் சங்கம் வீழ்ச்சியுற்றதுடன் இரண்டாம் உலகப் போர் ஆரம்பமானது. ஐக்கிய அமெரிக்கா நட்பு நாடுகளின் அணியுடன் சேர்ந்து யுத்தத்தில் பிரவேசித்தமையும் 1945 இல் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகர்களுக்கு அணுகுண்டை இட்டதன் மூலம் ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகியவற்றைக் கொண்ட அச்சு நாடுகளின் எழுச்சியை அடக்குவதற்கும் அதனால் முடியுமாயிருந்தமை. இதனோடு ஐக்கிய அமெரிக்கா உலகில் முக்கியத்துவமான நிலைக்கு உயர்ந்தமை.
- 1945 இல் சென் பிரான்சிஸ்கோ நகரில் கூடிய ஐந்து வல்லரசுகளின் மகாநாட்டில் ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகள் வகுத்துக் கொள்ளப்பட்டமை. இதில் ஐக்கிய அமரிக்கா முக்கியத்துவமான பங்களிப்பைச் செய்தமை.
- 1945 ஒக்டோபர் 24 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபை செயற்படத் தொடங்கியதிலிருந்து ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, பிரித்தானியா, பிரான்சு, சீனா என்பவை அதன் நிரந்தர உறுப்பினர் அந்தஸ்தைப் பெற்றுக்கொண்டமை. இந்நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் இரத்து அதிகாரத்தைக் கொண்ட ஐம்பெரும் வல்லரசுகளானமை.
- அதிலிருந்தே சோவியத் ரஷ்யாவின் தலைமையில் செயற்பட்ட பொதுவுடைமை நாடுகளின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் ஐக்கிய அமெரிக்கா, முன்னணியிலிருந்து செயற்பட்டமை.

- நட்சத்திர யுத்த செயற்பாடுகளின் மூலம் சமூக உடைமை அணிக்குக் கடுமையான எச்சரிக்கையை விடுக்க ஐக்கிய அமெரிக்காவால் முடியுமாயிருந்தமை.
- எண்பதாம் ஆண்டுகளில் ரஷ்யாவில் மேற்காள்ளப்பட்ட கிளாஸ்நொஸ்ட், பெரஸ்ரொய்கா சீர்திருத்தங்களைத் தொடர்ந்து சோவியத் ரஷ்யா வீழ்ச்சியுற்றதன் பின்னர் ஐக்கிய அமெரிக்கா, உலக நடவடிக்கைகளின் தலைமை நாடானமை.

**ஐக்கிய அமெரிக்கா முதலாளித்துவ நாடுகளின் தலைமைத்துவத்தை அடைதல்**

- முதலாம் உலகப் போருடன் வல்லரசு அந்தஸ்த்தைப் பெற்றுக் கொண்டமை.
- 1917 ஒக்டோபர் புரட்சியுடன் பொதுவுடைமை சோவியத் ரஷ்யா தோற்றம் பெற்றமை. அதிலிருந்து இக்கொள்கை பரவ ஆரம்பித்தமை. கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் சீனா, கியூபா போன்ற நாடுகளும் பொதுவுடைமை நாடுகளானமை.
- சோவியத் ரஷ்யா ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்பினரான படியால், பொதுவுடைமை நாடுகளைப் பாதிக்கும் விடயங்களில் இரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றைப் பாதுகாக்க முன்வந்தமை.
- பொதுவுடைமை அணிக்கு எதிராக, முதலாளித்துவ அணியின் தலைமைத்துவத்தை ஐக்கிய அமெரிக்கா ஏற்றிருந்தது.
- சமூகவுடைமை அணி பொது உடைமைப் பொருளாதாரத்தையம் கம்யூனிச ஆட்சி முறையையும் பரவலடையச் செய்ய முயற்ச்சித்ததோடு, முதலாளித்துவ அணி தனி உடைமைப் பொருளாதாரத் தையும் ஜனநாயக தனி உடைமைப் பொருளாதாரத்தையும் ஜனநாயக ஆட்சி முறையையும் பரப்புவதற்கு முயற்சிகளை மேற்கொண்டமை.
- முதலாளித்துவ அணியின் தலைமை நாடு என்ற முறையில் அதனைப் பலப்படுத்திக் கொள்வதற்கு 1949 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா NATO இராணுவ அணியை உருவாக்கிக் கொண்டமை.
- மேற்கு ஜேர்மனி, இத்தாலி, போர்த்துக்கல், நெதர்லாந்து, கிரேக்கம் போன்ற 16 நாடுகள் நேட்டோவில் அங்கத்துவம் பெற்றதோடு, அந்நாடுகளுக்கு எதிராக ஐரோப்பாவிலோ அமெரிக்காவிலோ ஆயுத மோதலொன்று இடம்பெற்றால் அது தமது அனைத்து நாடுகள் மீதும் புரியப்பட்டதாகக் கருதிச் செயற்படுவதற்கு முடிவெடுக்கப்பட்டமை.
- முதலாளித்துவ நாடுகளுக்கு உதவி புரிதல்: உதாரணமாக 1948 இல் கொரியக் குடாநாடு வடக்கு - தெற்கு எனப் பிரிந்த பின்னர் முதலாளித்துவக் கொள்கைக்குச் சார்பான தென் கொரியாவுக்குப் படையுதவி புரிந்தமை. 1948 இல் பெர்லின் நகர் பிரிக்கப்பட்டபோது, முதலாளித்துவ அணியைச் சேர்ந்த மேற்கு ஜேர்மனிக்கு ஆதரவு வழங்கியமை.



பெர்லின் சுவர்

(Source : https://tammytourguide.wordpress.com/2014/11/05/the-berlin-wall-25th-anniversary-tour/)

- சமூக உடைமை நாடுகளை வீழ்த்துவதற்கு ஐக்கிய அமெரிக்கா செயற்பட்டமை: உதாரணமாக கியூபாப் புரட்சியின்போது தப்பியோடியவர்களையும் நாடுகடத்தப்பட்டவர்களையும் கொண்டு படையணி ஒன்றை உருவாக்கி, அதற்குப் பயிற்சியளித்து 1969 இல் அப்படை பிடெல் கஸ்திரோவிற்கு எதிராகப் போரிடத் தூண்டுதலளித்தமை. கியூபாவிற்கு சோவியத் ரஷ்ய உதவி கிடைத்தமையால் ஐக்கிய அமெரிக்காவின் எத்தனம் தோல்வியுற்றமை.
- ஜனநாயகத்திற்கு விரோதமாக இராணுவப் புரட்சியை மேற்கொண்ட மியன்மாருக்கு தனது அதிருப்தியைத் தெரிவித்த ஐக்கிய அமெரிக்கா, முதுலாளித்துவத்தை ஆதரிக்கும் பாகிஸ்தான் இராணுவ அரசுக்கு ஆதாரவளிக்கின்றமை.
- சர்வதேச மட்டத்தில் ஜனநாயகத்தை வளர்ச்சியடையச் செய்ய நடவடிக்கைகள் மேற்கொண்டமை. அதற்காகப் பிரித்தானியா, பிரான்சு நாடுகளின் குடியேற்றங்களுக்குச் சுதந்திரம் வழங்கும்படி கோரியமை.



கிழக்கு ஜேர்மனியிலிருந்து மேற்கு ஜேர்மனிக்குச் செல்வதற்குக் காத்திருக்கும் இலட்சக் கணக்கானோரில் ஒரு பகுதியினர்.
***(Source: http://edition.cnn.com/2014/01/16/world/europe/berlin-wall-secrets/index.html)***

- ஆபிரிக்காவில் கானா, நைஜீரியா, கென்யா உட்படப் பல நாடுகளுக்கும் சுதந்திரம் கிடைத்தமைக்கு ஐக்கிய அமெரிக்காவின் நிர்ப்பந்தமே காரணமாயிருந்தமை.
- சுதந்திரம் பெற்ற நாடுகளைத் தனது அணியில் சேர்த்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளில் பொது உடைமைவாதம் பரவுவதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தமை.
- இலத்தீன் அமெரிக்கா நாடுகளுக்கும் புதிதாகச் சுதந்திரம் பெற்ற ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கும் விவசாய, கல்வி, சுகாதாரத் துறைகளுக்கும் விசேட உதவிகளைப் புரிவதற்கு மார்ஷல் திட்டத்தைச் செயற்படுத்தியமை.
- ஐக்கிய அமெரிக்காவால், தமது கொள்கைக்கு எதிரான இயக்கங்களைக் கண்டறிவதற்கும் அவற்றை அடக்குவதற்கும் மத்திய உளவுச் சேவை (CIA) மூலம் நடவடிக்கைகளை மேற் கொண்டமை.

- இவ்வாறு முதலாளித்துவத்தையும் ஜனநாயகத்தையும் பரப்பும் செயற்பாட்டின் தலைமைத்துவம் ஐக்கிய அமெரிக்காவுக்கு வாய்க்கப்பெற்றமை.

### சமூக உடைமை அணியின் வளர்ச்சி

- திறமைமிக்க தலைவர்கள் தோன்றியமை: வி.ஐ. லெனின், ஜோஸப் ஸ்டாலின், நிகிதா குருஷேவ் போன்ற திறமைசாலிகளான தலைவர்கள் ஆட்சிக்கு வந்தமை.
- பொதுவுடைமைத் தத்துவப்படி பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியமை.
- ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- நவீன தொழினுட்பத்தின் மூலம் கைத்தொழில், விவசாயம் என்பன விருத்தியுற்றமை.



*ஸ்டாலின், லெனின் மற்றும் ரொஸ்கி*

Source: http://throughthelookingglass2488.blogspot.com/2016/10/lenin-trotsky-and-stalin-conscious.html



*நவீன தொழினுட்பத்துடனான விவசாய நடவடிக்கை*

Source: https://en.wikipedia.org/wiki/Agriculture_in_the_Soviet_Union

- 1953 இல் ஆட்சிக்கு வந்த குருஷேவ் சுறுசுறுப்பான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவத்றகாக பிராந்திய பொருளாதார அமைப்புகளை உருவாக்கியமை.
- விஞ்ஞானத்தையும் தொழினுட்பத்தையும் முன்னேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற் கொண்டமை. அதன் பிரதிபலனாக 1961 இல் யூரி ககாரின் என்ற ரஷ்யர் முதன்முதலில் விண்வெளிக்குப் பயணம் செய்தமை.
- விளையாட்டுத் துறையில் முன்னேற்றமடைந்தமை




The Huntsville Times

Man Enters Space

'So Close, Yet So Far,' Sighs Cape

U.S. Had Hoped For Own Launch

Hobbs Admits 1944

Soviet Officer Orbits Globe In 5-Ton Ship

Maximum Height Reached Reported As 188 Miles

To Keep Up, U.S.A. Must Run Like Hell'

***யூரி ககாரினும் அவர் பற்றிய செய்தியும்***

***(Source: https://en.wikipedia.org/wiki/Yuri_Gagarin https://www.nasa.gov/mission_pages/shuttle/sts1/gagarin_anniversary.html)***

- சோவியத் ரஷ்யாவின் தலைமையில் சமூக உடைமை நாடுகளின் அணி பலப்படல்.
- சோவியத் நாடு அடையப்பெற்ற அரசியல், பொருளியல் சக்தியால் பொது உடைமைக் கோட்பாட்டை உலகம் முழுவதிலும் பிரசாரப்படுத்துவதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாய் இருந்தமை.
- கிழக்குப் போலந்து, எஸ்தோனியா, லத்வியா, லிதுவேனியா போன்ற நாடுகளை ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்ளல்.
- கிழக்கு ஜேர்மனி, ரூமேனியா, பல்கேரியா, பின்லாந்து போன்ற அரசுகள் சோவியத் ரஷ்யாவின் ஆதிக்கத்திற்குப் பணிந்து சென்றமை.
- சீனாவில் கம்யூனிச சூழல் ஒன்று உருவானமையும் சீனப் புரட்சியின் மூலம் கம்யூனிசம் உறுதியடைந்தமையும்.
- ஹங்கேரி, போலந்து, பல்கேரியா போன்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் வட கொரியாவும் ரஷ்யத் தலைமைத்துவத்திற்குட்பட்டமை.
- சமஉடைமை நாடுகளுக்கு எதிராக ஐக்கிய அமெரிக்காவின் தலைமையில் உருவாக்கப்பட்ட நேட்டோ அணிக்கு எதிராக கம்யூனிச நாடுகள் 1955 இல் வோர்ஷோ அணியைத் தோற்றுவித்துக் கொண்டமை.
- வோர்ஷோ அணியின் தலைமைத்துவம் சோவியத் ரஷ்யா வசமானமை.
- சம உடைமை நாடுகளின் பாதுகாப்பிற்காக KGB எனும் உளவுச் சேவை உருவாக்கப்பட்டமை.
- சம உடைமை நாடுகளிடைய பொருளாதார வகையிலும் இராணுவ வகையிலும் கலாசார வகையிலும் நெருக்கமான உறவுகளை மேற்கொண்டமை.

## அணிசாரா நாடுகளின் அமைப்பு

- இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகில் தோன்றிய பொது உடைமை, தனி உடைமை ஆதிக்க அணிகள் இரண்டில் ஒன்றிலும் சாராத நாடுகளால் கைக்கொள்ளப்பட்ட கொள்கை அணிசாராமை (Non Alignment) எனப்பட்டது.

- இரண்டாம் உலகப் போரின் முடிவில் மேற்கத்திய வல்லரசுகளிடமிருந்து சுதந்திரம் பெற்ற மூன்றாம் உலக நாடுகள் எனக் குறிப்பிடப்படும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுள் பெரும்பாலான வையும் அணிசாரா இயக்கத்தில் அங்கத்துவம் பெற்றன.
- அமெரிக்க, சோவியத் அணிகளின் தலைவர்கள் புதிய சுதந்திர நாடுகளை இயன்றளவுக்குத் தமது அணியில் சேர்த்துக்கொள்ள முயற்சிக்கையில் நீண்ட காலமாக ஏகாதிபத்திய வாதத்திற்குட்பட்டிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளுக்குத் தேவைப்பட்டது, தமது சுதந்திரத்தைக் காப்பாற்றிக் கொண்டு, எந்த வல்லரசுகளிடமும் தலைசாய்க்காமல் சுதந்திரமான கொள்கையைக் கடைப்பிடிப்பதாகும். அதற்கமைய அணிசாரா அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.
- அணிசாரா அமைப்பின் தோற்றுவிப்பாளர்களாக இந்தியாவின் பிரதமர் ஜவஹர்லால் நேரு, இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்னோ, எகிப்திய ஜனாதிபதி அப்துல் கமால் நசார், யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டீட்டோ, கானாவின் குவாமி நிக்ரூமா என்போர் செயற்பட்டனர்.




***அணிசாரா அமைப்பின் தோற்றுவிப்பாளர்கள்***

*(Source: http://youspeakindia.org/2017/04/03/relevance-of-the-non-aligned-movement-in-the-21st-century)*

## அணிசாரா அமைப்பின் கொள்கைகள்

- ஆதிக்க அணிகளைச் சாராமல் தத்தமது நாடுகளின் நலனுக்குப் பொருத்தமான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்.
- சுதந்திரம், பாதுகாப்பு, சமாதானம், ஒத்துழைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கொள்கை ஒன்றை வகுத்துக் கொள்ளல்.
- இராணுவ ஒப்பந்தங்களுக்கு எதிர்ப்பைத் தெரிவித்தல்.
- ஏகாதிபத்திய வாதத்தை நிராகரித்தல்.
- சமாதானத்திற்காக முன்வருதல்.
- அணிசாரா அமைப்பு உலகின் பலம்வாய்ந்த சமாதான அமைப்புகளில் ஒன்றாயிருத்தல்.

- 1955 இல் ஜவஹர்லால் நேரு முன்வைத்த பஞ்சசீலக் கோட்பாடு, அணிசாரா இயக்கத்தின் அடிப்படையாதல். இதற்கு முன்னர் சீனப் பிரதமர் சௌ என் லாய் அவர்களாலும் இதே போன்றதொரு கோட்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது.

**பஞ்சசீலக் கொள்கை**

- சமாதானமும் சகஜீவனமும்
- அந்நியோன்னியமான சமூக நலனும் சமத்துவமும்
- ஒரு நாட்டின் உள்நாட்டு விடயங்களில் தலையிடாமை.
- எந்தவொரு நாட்டையும் ஆக்கிரமிக்காதிருத்தல்.
- ஒரு நாட்டின் ஆள்பலத்தையும் இறைமையும் மதித்தல்.



அணிசாரா அமைப்பின் ஆரம்ப அமர்வு

*(Source: http://kappajrgamer.blogspot.com/2015/04/asian-african-conference.html)*

- 1955 இல் இந்துனேஷியாவின் பாண்டுங் நகரில் முதலாவது அணிசாரா அமைப்பின் மகாநாடு கூட்டப்பட்டது.
- இக்கூட்டத்திற்கமைவாக ஆசிய, ஆபிரிக்க நாட்டவர் தமது நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கையைப் பிரகடனஞ் செய்தனர்.
- முதலாவது அணிசாரா மகாநாடு 1961 இல் யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேடில், அந்நாட்டு ஜனாதிபதி மார்ஷல் டீட்டோவின் தலைமையில் கூடியது.
- முதலாவது அணிசாரா மகாநாட்டில் ஆசியாவின் 23 நாடுகளும் ஆபிரிக்காவின் 7 நாடுகளும் ஐரோப்பாவின் 1 நாடும் கலந்துகொண்டன. படிப்படியாக இத்தொகை அதிகரித்து, இன்று 118 நாடுகள் அங்கத்துவம் பெற்றுள்ளன.

- அணிசாரா அமைப்பின் மகாநாடுகள் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை கூடும்.
- இதன் 5ஆவது பொதுக்கூட்டம் 1976 இல் இலங்கையில் கூடியது.
- அப்பொதுக்கூட்டத்தில் உலகின் ஏழை நாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்கும் இடையே நிலவும் இடைவெளியைக் குறைப்பதற்கான சர்வதேச பொருளாதாரக் கொள்கை ஒன்று தொடர்பாகக் கவனஞ் செலுத்தியது.
- தற்போது உலகில் இரண்டு அதிகார அணிகள் இல்லாதபடியால் அங்கத்துவ நாடுகளிடையே ஒத்துழைப்பைப் பேணிக்கொள்வது பிரதான நோக்கமாயுள்ளது.
- பயங்கரவாதத்திற்கு எதிராகவும் போரைப் பொருட்களுக்கு எதிராகவும் செயற்படுவது இன்னொரு நோக்காய் உள்ளது.

## கணிப்பீடு 01

- **இலக்கம் 1, 2 வினாக்களில் A நாடுகளுடன் B தலைவர்களைப் பொருத்தும்போது சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**

01.

| A | B |
|---|---|
| 1. யூகோஸ்லாவியா | A. சுகர்ணோ |
| 2. எகிப்து | B. ஜவஹர்லால் நேரு |
| 3. இந்தியா | C. மார்ஷல் டீட்டோ |
| 4. இந்துனேஷியா | D. நிகிதா குருஷேவ் |
| 5. ரஷ்யா | E. அப்துல் கமால் நசார் |

1. EBCAD 2.BDCAE 3. CEBAD 4. DECBA 5. ADBCE

(...........)

02.

| A | B |
|---|---|
| 1. ஐக்கிய அமெரிக்கா | A. பிதெல் கஸ்திரோ |
| 2. வியட்னாம் | B. பொரிஸ் யெல்ட்சின் |
| 3. கம்பூச்சியா | C. ஹோ சி மின் |
| 4. ரஷ்யா | D. ட்றூமன் |
| 5. கியூபா | E. சிஹானுக் இளவரசன் |

1. BAEDC 2.ABCDE 3. BCDEA 4. CDBAE 5. DCEBA

(...........)

- **பொருத்தமற்ற பெயரைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

03. 1. பல்கேரியா 2. ஹங்கேரி 3. பிரான்சு
4. சோவியத் நாடு 5. போலந்து (...........)

04. 1. ஐக்கிய அமெரிக்கக் குடியரசு 2. போர்த்துக்கல் 3. நெதர்லாந்து
4. செக்கோஸ்லவாக்கியா 5. இத்தாலி (...........)

05. அணிசாரா அமைப்பின் 5ஆவது மகாநாடு கூடியது?
1. யூகோஸ்லேவியாவில் 2. இலங்கையில் 3. இந்தியாவில்
4. எகிப்தில் 5. பர்மாவில்

(...........)

06. நேட்டோ அமைப்பைத் தோற்றுவித்ததன் நோக்கம் யாது?
1. கம்யூனிச கோட்பாட்டைப் பரப்புதல்.
2. கிழக்கு ஐரோப்பாவில் பொது உடைமை அணியைப் பாதுகாத்தல்.
3. மேற்கு ஐரோப்பாவில் முதலாளித்துவ அணியைப் பாதுகாத்தல்.
4. கத்தோலிக்க சமயத்தைப் பரப்புதல்.
5. பொது உடைமையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பல்.

(...........)

07. நேட்டோ அமைப்பைச் சேர்ந்த நாடுகளால் ஏற்படும் பேராபத்துக்களுக்கு முகங்கொடுப்பதற்காக கம்யூனிஸ நாடுகள் ஒன்று சேர்ந்து உருவாக்கிக் கொண்ட பாதுகாப்பு அமைப்பு எது?
1. மத்திய ஒப்பந்த அமைப்பு
2. வோர்ஸோ அமைப்பு
3. மத்திய இரகசிய உளவுச்சேவை
4. தேசிய பாதுகாப்புக்குழு
5. யுனெஸ்கோ தாபனம்

(...........)

## கணிப்பீடு 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து ஐக்கிய அமெரிக்கக் குடியரசு உலகின் வல்லரசாக எழுச்சியுற்ற விதத்தை விளக்குக.

(14 புள்ளிகள்)

02. 1980 இன் பதிற்றுகளில் சோவியத் நாடு உலகின் வல்லரசாக எழுச்சிபெற்ற விதத்தை விளக்குக.

(14 புள்ளிகள்)

03. ரஷ்யா வல்லரசாக எழுச்சியுறுவதற்குப் பங்களித்த லெனின், திரொஸ்கி, ஸ்டாலின், நிகிடா குருஷேவ் ஆகியோரின் பங்களிப்பை மதிப்பீடு செய்க.

(14 புள்ளிகள்)

04. 1. அணிசாரா அமைப்பைப் பற்றி விளக்குக.
2. அணிசாரா அமைப்பின் நோக்கத்தை விளக்கிக் கூறுக.

(14 புள்ளிகள்)

**தேர்ச்சி மட்டம்** : 14.2 பனிப் போர் காலததில் அதிகார அணிகளின் மோதல்களை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 7

**கற்றற்பேறுகள்** :
- பனிப் போரைப் பற்றி விளக்குவார்.
- தத்தமது அணிகளைப் பலப்படுத்திக் கொள்வதற்காக அவற்றின் நடவடிக்கைமகளை விளக்குவார்.
- உலக நாடுகள் அணிகளாகப் பிரிந்து சென்ற விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.


**பனிப்போர்**

- ஆயுதமற்ற போர், கெடுபிடிப் போர் என்றும் இது குறிப்பிடப்படும்.
- இரண்டாம் உலகப் போரின் பின்னர், உலகம் இரு அணிகளாகப் பிரிந்து ஆயுதமேந்தாவிடினும் தமது அணியை வெற்றிபெறச் செய்வதற்காகப் பல்வேறு உபாயங்களைக் கையாண்டு மேற் கொண்ட யுத்தம் அல்லது போராட்டம் பனிப்போர் எனப்படுகின்றது.
- இரண்டாவது உலகப் போரின் பின்னர் நான்கு பதிற்றுகள் வரை இவ்வணிகளுக்கிடையே அதிகாரப் போராட்டம் இடம்பெற்றது.
- ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டால் ஆயுத மோதல் ஏற்படாமல் காப்பாற்றப்பட்டது.
- இரு அணிகளுக்கிடையேயும் சமாதானம் போன்றே யுத்தமும் ஏற்படாமற் போனது.
- கொள்கைப் போராட்டம்.
- ஐக்கிய அமெரிக்கா, முதலாளித்துவ நாடுகளின் தலைமையை ஏற்று, தமது அணியைப் பலப்படுத்திக் கொள்வதற்காக வட அத்திலாந்திக் பாதுகாப்பு அமைப்பை (நேட்டோ) அமைத்துக் கொண்டமை.
- நேட்டோ அமைப்பிற்கு எதிராக பொது உடைமை அணி வார்சோ அமைப்பைத் தோற்றுவித்துக் கொண்டமை.
- நேட்டோ அமைப்பின் தலைமைத்துவத்தை ஐக்கிய அமெரிக்காவும் வோர்சோ அமைப்பின் தலைமைத்துவத்தை சோவியத் ரஷ்யாவும் வகித்தமை.
- சோவியத் நாடு, ஐக்கிய அமெரிக்கா மீது கொண்ட சந்தேகத்தால் கியூபாவில் ஏவுகனைகளைப் பொருத்தியமை. அதற்குப் பதிலாக ஐக்கிய அமெரிக்கா, சோவியத் நாட்டை இலக்குவைத்து துருக்கியில் ஏவுகணைகளைப் பொருத்தியமை.

  உதாரணமாக:
  - சோவியத் ரஷ்யாவின் உதவியைப் பெற்ற கியூபா 1969 இல் பொதுவுடைமை அரசாக மாறியமை.
  - கொரியாவில் ஐக்கிய அமெரிக்கா கையாண்ட நடவடிக்கைகள் காரணமாக
  - தென்கொரியா முதலாளித்துவ அணியில் சேர்ந்தமை. வட கொரியா பொது உடைமை அணியில் சேர்ந்தமை.
  - ஹங்கேரியப் பிரச்சினை
  - செக்கோஸ்லோவாக்கியாவில் சோவியத்தின் தலையீடு.
  - வியட்னாமிய யுத்தம்
  - மத்திய கிழக்குப் பிரச்சினையில் தலையீடு செய்தல்.

**அதிகார அணிகள் சிதைவடைதல்**

- 1985 ஆம் ஆண்டின் பின்னர் சோவியத் நாடு பொருளாதார சீர்திருத்தத்தை (பெரஸ்ரோய்கா) மேற்கொள்ளப்போய், அது வீழ்ச்சியுற்றமை.
- இதன் விளைவாக நாடுகள் பலவும் சோவியத்திலிருந்து விலகி சுதந்திர நாடுகளானமை. உதாரணமாக: கசகஸ்தான், யுக்ரேன், உஸ்பெகிஸ்தான்.
- ரஷ்யாவும் பெலோ ரஷ்யாவும் ஒன்றுபட்டு சமஷ்டி அரசொன்றைத் தோற்றுவித்துக்கொள்ளல்.
- அதிகார அணிகள் இரண்டினதும் போராட்டம் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியுடன் முற்றுப் பெற்றமை.
- வோர்சோ அணி கலைந்து சென்றமை.
- இரண்டாம் உலகப் போரின் பின்னர் பிரதானமான இரண்டு அணிகளுக்கும் இடையே ஏற்படவிருந்த ஆயுத மோதல்களைத் தீர்த்து வைப்பதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்புச் செயற்பட்டமை.




ஐக்கிய அமெரிக்காவினதும் கியூபாவினதும் அமைவிடம்




கியூபாவிலிருந்து ஐக்கிய அமெரிக்காவைத் தாக்குவதற்கு சோவியத் ரஷ்யா தயாராயிருந்த விதம்.

***Source :https://rarehistoricalphotos.com/cuban-missile-crisis-in-pictures-1962/***




சோவியத் ரஷ்யாவினதும் துருக்கியினதும் அமைவிடம

*(Source: https://en.wikipedia.org/wiki/Soviet_territorial_claims_against_Turkey*

http://apjjf.org/-Stephen-F.-Cohen/2283/article.html)



முதலாளித்துவ அணி தேவை ஏற்படும்போது தாக்குதலை மேற்கொள்ளத் தயாராயிருந்த நிலை

*(Source: https://en.wikipedia.org/wiki/Soviet_territorial_claims_against_Turkey*
http://apjjf.org/-Stephen-F.-Cohen/2283/article.html)

## கணிப்பீடு 01

- **கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. பனிப்போருடன் சம்பந்தப்படாத மோதல் ஒன்று எது?
    1. வட - தென் கொரியாக்கள்
    2. ஐக்கிய அமெரிக்கா - கியூபா
    3. சீனா - இந்தியா
    4. வட - தென் வியட்னாம்கள்
    5. அரபு - இஸ்ரவேல் (...........)

02. சோவியத் நாடு வீழ்ச்சியுற்றமையால் ஏற்பட்ட விளைவுகளுள் உலகை மிகவும் பாதித்த விடயம் எது?
    1. வோர்ஸோ அணி கலைந்து சென்றமை.
    2. பொதுஉடைமை அணியின் வீழ்ச்சி
    3. சமூக உடைமை நாடுகளின் உதவி கிட்டாமற் போனமை.
    4. உலக அதிகார சமநிலை பாதிப்புற்றமை.
    5. சீனா பலமடைந்தமை. (...........)

03. பனிப்போர் காலத்தில்
    1. அதிகார அணிகளுக்குிடையே ஆயுத போராட்டங்கள் வளர்ச்சியுற்றமை.
    2. உலகில் சமாதானம் நிலவியமை.
    3. அணிசாரா அமைப்பின் செல்வாக்குக் கூடிச் சென்றமை.
    4. அதிகார அணிகளுக்கிடையே யுத்தமோ சமாதானமோ ஏற்படாமை.
    5. கொள்கைப் போர் ஆயுதப்போராக மாறியமை. (...........)

## கணிப்பீடு 2

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. ''பனிப்போர் காலத்தில் உலகில் யுத்தமோ சமாதானமோ ஏற்படவில்லை.''
    i. பனிப்போர் என்றால் என்ன?
    ii. பனிப்போர் காலத்தில் உலகில் சமாதானமோ யுத்தமோ ஏற்படாமைக்கான காரணங்களை விளக்கிக் கூறுக.

(14 புள்ளிகள்)

02. i. முதலாளித்துவ அணியைப் பலப்படுத்திக் கொள்வதற்காக ஐக்கிய அமெரிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை விளக்குக.

(07 புள்ளிகள்)

ii. பொதுஉடைமை அணியைப் பலப்படுத்திக்கொள்வதற்காகச் சோவியத் ரஷ்யா செயற்பட்ட விதத்தை விளக்குக.

(07 புள்ளிகள்)


உலக வரலாறு

# 8. உலகப் போரிடைக் காலம்

## அறிமுகம்

முதலாவது உலகப் பெரும் போர் முடிவடைந்ததிலிருந்து இரண்டாவது உலகப் பெரும் போர் ஆரம்பமாகும் காலம் வரையிலான இடைக்காலத்தில் உலகில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. 1929 இல் ஐக்கிய அமெரிக்காவில் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டதோடு, அவை அந்நாட்டில் மட்டுமன்றி, உலகின் பல்வேறு நாடுகளிலும் மோசமான பாதிப்புக்களைத் தோற்றுவித்தன. இக்கால அரசியலில் இத்தாலியில் பாசிஸவாதத்தின் எழுச்சிக்கும், ஜேர்மனியில் நாசிஸவாதத்தின் வளர்ச்சிக்கும் இப்பிரச்சினைகள் நேரடியாகப் பங்களிப்புச் செய்தன. இக்காலகட்டத்தில் ஆசிய நாடான ஜப்பானும் உலக வல்லரசாக எழுச்சியுற்றது. இப்போரிடைக் காலத்தில் நாடுகள் பலவும் கைக்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளின் விளைவாக உலக சமாதானத்தைப் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட சர்வதேச சங்கம் படிப்படியாக வீழ்ச்சியுற்றுச் செல்வதைக் காணக்கூடியதாயிருந்ததும் இன்னொரு பண்பாகும்.

1929 இல் ஏற்பட்ட உலக பொருளாதார மந்தத்தினால் ஐரோப்பாவில் ஏற்பட்ட தாக்கம், இதனால் அக்காலகட்டத்தில் அங்கு ஏற்பட்ட மாற்றங்கள், பாசிஸ, நாசிஸவாத சக்திகளின் எழுச்சியும் அவை உலக வரலாற்றில் கொண்டிருந்த செல்வாக்கும் ஜப்பான் முதலாவது உலகப் போரின் பின்னர் எழுச்சியுற்ற விதமும், சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள் போன்ற விடயங்களை விபரிப்பதே இவ்வலகின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி** : • பிரச்சினையான தன்மைகளின் மூலம் உருவாகும் புதிய போக்குகளையிட்டுப் புரிந்துணர்வுடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 8.1 முதலாவது உலகப் போரின் பின்னர் தோன்றிய புதிய போக்குகளை விளக்குவார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- போரிடைக் காலத்தைப் பற்றி விளக்குவார்.
- பிரச்சினையான தன்மைகளின் மூலம் உருவாகும் புதிய போக்குகளின் செல்வாக்கை இனங்காண்பார்.
- பிரச்சினையான தன்மைகளின் மூலம் உருவாகும் புதிய போக்குகளின் செல்வாக்கை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

- போரிடைக் காலம்
- முதலாவது உலகப் போர் முடிவடைந்த 1919 ஆம் ஆண்டிலிருந்து, இரண்டாவது உலகப் போர் ஆரம்பமான 1939 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரையான காலகட்டம் போரிடைக்காலம் எனப்படுகிறது.
- உலகப் பொருளாதாரப் பெருமந்தம்
  - 1929 இலிருந்து 1933 வரையிலான காலம்வரை பொருளாதார பெருமந்தம் நிலவியமை.
  - ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தம்.
  - 1929 ஒக்டோபர் மாதத்தில் பங்குச் சந்தையில் ஏற்பட்ட பலத்த போட்டியினால் பங்குகளின் விலை அசாதாரணமான முறையில் உயர்ந்து சென்றதுடன், பின்னர் திடீரெனப் பங்குச்சந்தை வீழ்ச்சியுற்றமை.

- நியூயோர்க் நகர செல்வந்தரிடையே பெரும் குழப்பகரமான நிலை ஒன்று ஏற்பட்டதோடு, அதிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் தன்னிறைவான அரசியல் பொருளாதார நிலை வீழ்ச்சியுற்றதோடு அது உலகின் ஏனைய நாடுகளையும் பாதித்தது.
- ஐக்கிய அமெரிக்காவின் கைத்தொழில், வர்த்தகமும் சீர்குலைவுற்று அது முழு உலகிலும் பரவியமை.
- முழு உலகிலும் பொருட்களின் விலைகள் குறைந்துசென்று வர்த்தகம் வீழ்ச்சியுற்றமை.
- விவசாய உற்பத்திகளின் விலை வேகமாகக் குறைந்துசென்றமை.
- தொழிற்சாலைகள் மூடப்பட்டமையால் பொருட்களுக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டமை.
- கைத்தொழில் நாடுகளைப் போன்றே மூலப் பொருட்களையும் விவசாய உற்பத்திகளையும் உலகச் சந்தைக்கு வழங்கிய விவசாய நாடுகளும் பரிப்புற்றமை.
- உலக நாடுகளிடையே நிலவிய அந்நியோன்யத் தொடர்புகளால் பொருளாதார சீர்குலைவு அவை அனைத்து நாடுகளிலும் பரவிச் சென்றமை.
- ஐக்கிய அமெரிக்காவின் வங்கிகள் வங்குரோத்து நிலையை அடைந்தமை.
- பணப் பற்றாக்குறையினால் ஐக்கிய அமெரிக்காவில் பொருட் பரிவர்த்தனையும் சேவைப் பரிவர்த்தனையும் குறைந்து போனமை.
- விவசாயக் காணிகளை உடைய மத்தியதர வகுப்பு விவசாயிகள், சிறு நில உரிமையாளர் களான விவசாயிகளின் நிலைக்குத் தாழ்ந்து போனமை.
- ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்குலைவால் அந்நாட்டிடமிருந்து கடனுதவிகள் பெற்றுவந்த நாடுகளுக்கு அக்கடனுதவி நிறுத்தப்பட்டமை.
- ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து கடனுதவி பெற்றுவந்த நாடுகள் மிகவும் மோசமான பாதிப்புக்கு முகம்கொடுத்தமை.

## போரிடைக் காலத்தில் ஐரோப்பிய நாடுகளின் நிலைமையும் பொருளாதார சீர்குலைவு அந்நாடுகளுக்கு ஏற்படுத்திய பாதிப்புகளும்

### இத்தாலி

- முதலாவது உலகப் பெரும் போரின் பின்னர் இத்தாலி பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டமை. (வறுமை, வேலையின்மை, உணவுத்தட்டுப்பாடு, நோய்கள் பெருகியமை.)
- கலவரங்கள், வேலைநிறுத்தங்கள், சதிநடவடிக்கைகள் என்பன சர்வசாதாரணமாக நிகழ்ந்தமை.
- நாட்டில் சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாப்பதற்கு இத்தாலியப் பாராளுமன்றத்தால் இயலாமல் போனமை.
- 1920 - 22 காலகட்டத்தில் இத்தாலி மோசமான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருந்த வேளையில், பாசிஸக் கட்சியின் தலைவனான பெனிடோ முசோலினி ஆட்சிக்கு வந்தமை.
- முசோலினியின் தலைமையில் இத்தாலி வேகமாக சர்வாதிகாரம் நோக்கிச் சென்றமை.
- 1929 இல் ஏற்பட்ட பெரும் பொருளாதார மந்தத்தால் பாதிப்புற்றிருந்த இத்தாலியின் பொருளாதாரம் மேலும் சீர்குலைந்தமை.
- முசோலினியின் தலைமைத்துவத்தின் கீழ் 1935 ஆம் ஆண்டாகும்போது, இத்தாலியின் உள்நாட்டு அரசியல் நிலைமை சர்வாதிகார அடிப்படையில் நிலைநிறுத்தப்பட்டது.
- 1938 இல் இத்தாலி அபீசீனியாவை (எத்தியோப்பியா) ஆக்கிரமித்துக் கொண்டமை.
- 1939 இல் இத்தாலி அல்பேனியாவை ஆக்கிரமித்துக் கொண்டமை.

### பிரான்ஸ்

- பிரதமர் பொயின்கெயார், வெளிநாட்டமைச்சர் பிரயன்ட் என்போரின் கீழ் 1929 இல் பொருளாதார நிலையில் வியத்தகு முன்னேற்றத்தைப் பிரான்ஸ் அடையப்பெற்றிருந்தமை.

- எனினும் 1929 இல் பெரும் பொருளாதார மந்தத்தால் பிரான்ஸ் மோசமாகப் பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அதன் விளைவாக பிரான்ஸில் இடதுசாரி அரசாங்கம் 1932 தேர்தலில் பதவிக்கு வந்தமை.
- அவர்களாலும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாமற் போனமை.
- இதன் பின் இடதுசாரிகளும் வலதுசாரிகளும் ஒன்றிணைந்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைத்துக் கொண்டமை. அவர்களாலும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாதுபோனமை.
- அரசியல் நிலையில் பிரான்ஸ் பெரும் குழப்பகரமான நிலைக்கு ஆளானமை.
- 1935 இல் இடதுசாரி சோஷலிச அமைப்பொன்றால் உருவாக்கிக்கொள்ளப்பட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி ஒன்று பிரான்சில் ஆட்சிக்குவரல். (லியோன் புளும் பிரதமரானமை)
- இடதுசாரி அரசாங்கத்தால் சோஷலிச வேலைத்திட்டங்கள் முன்வைக்கப்பட்டாலும் பிரான்சின் பொருளாதார, அரசியல் அமைப்புகள் சீர்குலைந்தமை.
- இரண்டாவது உலகப் போர் அண்மிக்கும்போது பிரான்ஸின் அரசியல் நிலைமை மிகவும் பலவீனமுற்றுக் காணப்பட்டமை.

### இங்கிலாந்து

- முதலாவது உலகப் போரின் பின்னர் இங்கிலாந்து அமைதியான கொள்கை ஒன்றைக் கையாண்டமை.
- பொருளாதாரச் சீர்குலைவின் விளைவாக ஐக்கிய அமெரிக்காவின் கடனுதவி கிட்டாமற் போனமையால் அது பிரித்தானியாவையும் மிகமோசமாகப் பாதித்தது.
- இதனால் இங்கிலாந்தின் அரசியல் நிலைமை சிக்கலடைந்தமை.
- 1931 இல் மன்னரின் தலையீட்டால் தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்பட்டது.
- வர்த்தக நடவடிக்கைகளின் வீழ்ச்சியில் இருந்து மீள்வதற்காகக் கடுமையான பொருளாதாரக் கொள்கை ஒன்றைக் கையாண்டமையால், 1933 ஆம் ஆண்டாகும்போது பொருளாதாரச் சீர்குலைவிலிருந்து மீள்வதற்கு இங்கிலாந்தால் முடியுமாயிருந்தது.
- 1935 இன் பின்னர் இங்கிலாந்து, ஐரோப்பிய அரசியலில் கவனஞ் செலுத்தத் தொடங்கியது.
- ஜேர்மனியின் ஆயுத உற்பத்தி நடவடிக்கைகள் குறிப்பாக கடற்படை, விமானப்படை என்பவற்றின் அதீதவளர்ச்சியால் எச்சரிக்கை அடைந்த இங்கிலாந்து சர்வதேச கூட்டமைப்பு ஒன்றில் சேர்ந்துகொண்டு தமது ஆயுத பலத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

### ஜேர்மனி

- முதலாவது உலகப் போரின் பின்னர் ஜேர்மனி மிகவும் மோசமான பணவீக்கத்திற்கு ஆட்பட்டிருந்தமை.
- ஐக்கிய அமெரிக்க நிதி உதவியால் ஜேர்மனியின் பொருளாதார நிலை சுமுக நிலைக்குத் திரும்பியமை.
- 1932 ஆம் ஆண்டாகும்போது ஜனாதிபதி ஏடிரொஸ்மானின் முயற்சியால் ஜேர்மனி வேகமான பொருளாதார முன்னேற்றத்தை அடைந்தது.
- எனினும் 1929 இல் ஐக்கிய அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியால் அதனுதவியைப் பெற்றுவந்த ஐரோப்பிய நாடுகளிலும் அது பரவிச் சென்றமையால் ஜேர்மனும் பயங்கரமான பொருளாதாரப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிட்டது.
- ஐக்கிய அமெரிக்கா ஜேர்மனிக்குக் கடனுதவி வழங்குவதை நிறுத்திக் கொண்டமை.
- ஜேர்மனியில் வேலையில்லாப் பிரச்சினை உக்கிரமடைந்து, உணவுத்தட்டுப்பாடு, வேலை நிறுத்தங்கள் போன்ற சமூகப் பிரச்சினைகளும் ஏற்பட்டமையால் அவற்றைத் தீர்ப்பதற்கு மத்திய அரசாங்கத்தால் இயலாமலிருந்தது.
- அரசிடம் காணப்பட்ட தீவிரமான சர்வாதிகார நடவடிக்கை.
- அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டமை.

- குடிமக்களின் சகல உரிமைகளும் நிராகரிக்கப்பட்டதோடு, அவர்களுடைய கடமைகளில் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டமை.
- அரசின் மீதும் ஆட்சியாளர் மீதும் பொதுமக்கள் எந்நேரமும் விசுவாசமாக இருக்க வேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

### பாசிஸ வாதத்தின் எழுச்சி

- முதலாவது உலக மகா யுத்தத்தில் இத்தாலியின் எதிர்பார்க்கைகள் கைகூடாமற் போனமை.
- இத்தாலி, அரசியல், பொருளியல், சமூகம் சார்ந்த சகல துறைகளிலும் மிகவும் மோசமான வீழ்ச்சி நிலையை அடைந்திருந்தமை.
- அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பாராளுமன்ற ஆட்சிமுறையால் இயலாமற் போனமை.
- 1922 இல் பெனிடோ முசோலினி பாசிச பலத்தை (அதிகாரத்தை) உருவாக்கியமை.
- III ஆம் விக்டர் இமானுவேல் மன்னனின் ஆதரவுடன் இத்தாலியின் பிரதமரான முசோலினி, சர்வாதிகார ஆட்சி ஒன்றை உருவாக்கிக்கொண்டமை.
- கட்டாய இராணுவ சேவையைப் பிறப்பித்தமை.
- இத்தாலியைப் பொருளாதாரத்தில் வளர்ச்சியடையச் செய்தமை.



*பொது மக்களிடையே முசோலினி*

***(Source: https://www.understandingitaly.com/people/mussolini.html)***

### ஜேர்மனியின் நாசிஸ வாதத்தின் எழுச்சி

- 1919 இல் அடோல்ப் ஹிட்லர் நாசிஸக் கட்சியை ஆரம்பித்தமை.
- சர்வதிகார ஆட்சி
- அடிப்படை இனவாதத்தை முதன்மைப்படுத்தல்.
- ஜேர்மனியர்களே உலகின் சிறந்த இனத்தவர்கள் எனக் கூறியமை.
- ஜேர்மனியர்கள் தூய ஆரிய இனத்திலிருந்தே தோன்றியவர் என்றமை.
- முதலாவது உலகப் போரின் விளைவால் பிரிவுற்றுச் சென்றிருந்த ஜேர்மனியர்களை ஒன்று சேர்ப்பது ஹிட்லரின் குறிக்கோளாயிருந்தது.
- வெளிநாட்டவர்களையும், பலாத்காரமாக ஜேர்மனியினுள் பிரவேசித்தவர்கள் என்று யூதர்களையும் அழித்தொழித்தமை.

- 1929 இல் ஏற்பட்ட பொருளாதாரச் சீரழிவால் ஜேர்மனியர் துன்புற்றிருந்த வேளையில் மக்களின் வெறுப்புக்கு ஆளாயிருந்த நாசிக்கட்சி, வேகமாக மக்களின் விருப்புக்குரிய ஒன்றானது.
- அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பலம்வாய்ந்த அரசொன்றைத் தோற்றுவிப்பதில் அந்நாட்டிலிருந்த ஜனநாயக ஆட்சி (வைமார் கூட்டாட்சி) தோல்வியுற்றமையே நாசிக்கட்சியினதும் ஹிட்லரினதும் எழுச்சிக்கு வழிவகுத்தது.

### சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சி

- சர்வதேச சங்கத்தின் ஆரம்பம்
  - 1919 வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் உறுப்புரை ஒன்றிற்கமையவும் தேசங்களுக்கிடையே ஏற்படும் சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணிக் கொள்வதற்காக சர்வதேச அமைப் பொன்றை உருவாக்கிக்கொள்ளும் நோக்குடனும் சர்வதேச சங்கம் ஆரம்பிக்கப்பட்டமை.
  - நாடுகளுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்வதால் யுத்தங்கள் மூள்வதைத் தடுத்துக் கொள்வதே சர்வதேச சங்கத்தின் நோக்கமாகும்.
  - சர்வதேச புரிந்துணர்வையும் ஒத்துழைப்பையும் வளர்த்துக் கொள்வதும் சிறிய நாடுகளின் சுதந்திரத்தையும் சுயாதிபத்தியத்தையும் பாதுகாத்துக் கொள்வதும் சர்வதேச சங்கத்தின் இன்னொரு நோக்கமாகும்.

### சர்வதேச சங்கத்தின் செயற்பாடுகள்

- 1919-1939 காலகட்டத்தில் செயற்பட்டச் சங்கம் 1929 இல் ஏற்பட்ட பொருளாதாரப் பெருமந்தத்துடன் அதன் வீழ்ச்சி ஆரம்பமானது.
- 1929 வரை உலகில் தோன்றிய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க சர்வதேச சங்கத்தால் இயலுமாயிருந்தது.

### சர்வதேச சங்கத்தின் வீழ்ச்சிக்குரிய காரணங்கள்

- ஆரம்ப காலத்தில் நாடுகளிடையே காணப்பட்ட பிரச்சினைகளை அதனால் தீர்த்துக்கொள்ள முடிந்தாலும் பிற்காலத்தில் அவ்வாறு செய்துகொள்ள இயலாமற் போனமை.
- சர்வதேச சங்கத்தை உருவாக்குவதில் முன்னின்று செயற்பட்ட ஐக்கிய அமெரிக்கா, அதன் செனட் சபையின் தீர்மானத்தின்படி அங்கத்துவம் பெறாமற் போனமை.
- முதலாம் உலகப் போரின் குற்றவாளியான ஜேர்மனிக்கு அச்சபையில் ஆரம்பத்தில் அங்கத்துவம் கிட்டாமை. (தோல்வியுற்றவர்களைப் புறக்கணித்தமை)
- ரஷ்யா சர்வதேச சங்கத்தில், ஆரம்பத்தில் அங்கத்துவம் பெறாதிருந்தமை.
- வல்லரசுகளிடையே ஒற்றுமை நிலவாமை. சங்கத்தின் யாப்புக்கு அமைய ஏதாவதொரு பிரச்சினையத் தீர்ப்பதற்கு நிர்வாகக் குழுவின் அனைவரதும் அனுமதி தேவையாய் இருந்த வேளையில், வல்லரசுகளிடையே ஏகமனதான அபிப்பிராயம் நிலவாமற் போனமை. பிரித்தானியா பெரும்பாலான சந்தர்ப்பங்களில் வெளிப் பிரச்சினைகளில் தலையிட விரும்பாமல் விலகியிருந்தமை.
- தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு சர்வதேச சங்கத்திற்கு உத்தியோகபூர்வமான இராணுவப் படை ஒன்று இல்லாதிருந்தமை. இதனால் அங்கத்துவ நாடுகள் ஆக்கிரமிப்பில் ஈடுபடாமல் தடுப்பதற்குச் சங்கத்தால் இயலாதிருந்தமை.
- சர்வதேச இராணுவப் படை ஒன்றை உருவாக்கிக் கொள்வதற்கு ஆலோசிக்கப்பட்டிருந்தாலும் பிரித்தானியா விடமிருந்து எழுந்த எதிர்ப்பால் அது செயற்படுத்தப்படாமற் போனமை.
- நிராயுதக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என ஆலோசிக்கப்பட்டாலும் அதற்கான அமைப்பொன்றை உருவாக்காமை.
- ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச ஒற்றுமையைத் தொடர்ந்தும் செயற்படுத்துவது சாத்தியமற்ற தாயிருந்தமை.

- உலக சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்கம் தோல்வியுற்றமை.
  உதாரணமாக: 1931 இல் ஜப்பானால் மஞ்சூரியா ஆக்கிரமிக்கப்பட்டபோது, அங்கிருந்து ஜப்பான் வெளியேற வேண்டும் எனச் சங்கம் கட்டளையிட்ட போதும் அதனை ஜப்பான ஏற்றுக்கொள்ளாமல், சர்வதேச சங்கத்திலிருந்து விலகிக் கொண்டமை. ஜப்பான் ஆக்கிரமிப்புச் செய்த பிரதேசங்களிலிருந்து அதனை அகற்றுவதற்குச் சங்கத்தால் இயலாமற் போனமை.
- ஜேர்மனி சர்வதேச சங்கத்திலிருந்து விலகியமை.
- 1935 இல் அபீசீனியாவை இத்தாலி ஆக்கிரமித்தபோது அதைத் தடுக்கச் சங்கத்தால் இயலாமற் போனமை.
- ஜேர்மனி, வேர்சயில்ஸ் (எதியோப்பியா) ஒப்பந்தத்தின் தீர்மானத்தை மீறி ஆயுதபாணியானபோதும் சங்கம் மௌனமாயிருந்தமை.
- 1936 இல் ஹிட்லர், ரைன்லாந்தைத் தன்னுடன் இணைத்துக்கொண்டபோது, அதனைத் தடுப்பதற்குச் சங்கத்தால் இயலாமற்போனமை.
- 1938 இல் ஜேர்மனி ஆஸ்திரியாவையும் செக்கோஸ்லோவாக்கியாவில் பெரும்பான்மையான ஜேர்மனியர் வாழ்ந்த சுடேட்டன்லாந்தையும் ஆக்கிரமித்த போதும் அதற்கு எதிராகச் செயற்படச் சங்கத்தால் இயலாமலிருந்தமை.
- 1939 இல் செக்கோஸ்லோவாக்கியா நாடு முழுவதையும் ஜேர்மனி ஆக்கிரமித்தபோதும் அதற்கு எதிராகச் சங்கத்தால் நடவடிக்கையேதும் எடுக்க இயலாமலிருந்தது.
- இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பமானபோது சர்வதேசச் சங்கம் முற்றாகச் செயலிழந்து காணப்பட்டமை.

## மதிப்பீடு 01

01. பாசிஸவாத இயக்கத்தை இத்தாலியில் செயற்படுத்திய தலைவன் யார்?
    1. அடோல்ப் ஹிட்லர்
    2. பெனிடோ முசோலினி
    4. ஜோஸப் மெசினி
    4. கரிபால்டி
    5. நெப்போலியன் பொனபாட் (...........)

02. ஆயுதமேந்திய போராட்டத்தை அடிப்படை இயல்பாகக் கொண்ட இரு வாதங்களும் எவை?
    1. பாசிஸ வாதமும் தாராண்மை வாதமும்
    2. மார்கஸிய வாதமும் தாராண்மைவாதமும்
    3. தாராண்மைவாதமும் கம்யூனிஸ வாதமும்
    4. நாசிஸ வாதமும் மார்க்ஸிய வாதமும்
    5. நாசிஸ வாதமும் பாசிஸ வாதமும் (...........).

03. A நிரலுடன் B நிரலைப் பொருத்தும்போது பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| A | | B |
|---|---|---|
| 1. வின்ஸ்டன் சேர்ச்சில் | A | இத்தாலி |
| 2. சார்ள்ஸ் டிகோல் | B | ரஷ்யா |
| 3. ஹின்டன் பேர்க் | C | இங்கிலாந்து |
| 4. ஜோசப் ஸ்டாலின் | D | பிரான்ஸ் |
| 5. பெனிடோ முசோலினி | E | ஜேர்மனி |

1. ABCDE 2. CDEBA 3. DEBAC 4. EBACD 5. BACDE

(...........)

04.

| A | | B |
|---|---|---|
| 1. 1922 | A | ஹிட்லர் ஜேர்மனியின் சான்சிலராதல் |
| 2. 1929 | B | ஹிட்லர் சுடேட்டன்லாந்தை ஆக்கிரமித்தல் |
| 3. 1933 | C | இத்தாலியில் முசோலினி ஆட்சிக்குவரல் |
| 4. 1936 | D | உலகப் பொருளாதாரப் பெருமந்தம் |
| 5. 1938 | E | ஹிட்லர் ரைன்லாந்தை ஜேர்மனுடன் இணைத்துக் கொள்ளல் |

1. DAEBC 2. AEBCD 3. EBCDA 4. CDAEB 5. BCDAE

(...........)

**கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு தலைப்பின் கீழும் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று, தலைப்புடன் பொருந்தாதுள்ளது. அதனைத் தேர்ந்தெடுக்குக.**

05. இத்தாலியில் பாசிஸவாதம்
    1. வைமார் கூட்டாட்சியின் பலவீனமே இத்தாலியில் பாசிஸவாதம் தோன்றுவதற்கு வழிவகுத்தது.
    2. பெனிடோ முசோலினி இத்தாலியின் பாசிஸவாதத் தலைவனாவான்.
    3. 1922 இல் முசோலினி இத்தாலியின் ஆட்சியைப் பெற்றுக் கொண்டமை.
    4. முசோலினி பாப்பாண்டவருடன் இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டான்.
    5. பாசிஸவாத இத்தாலி 1935 இல் எதியோப்பியாவை ஆக்கிரமித்தது.

(...........)

06. ஜேர்மனியில் நாசிஸவாதம் எழுச்சியுற்றமை
1. ஹிட்லரின் சிறந்த தலைமைத்துவம்
2. மத்தியதர வர்க்கத்தினரும் பணக்காரரும் நாசிக் கட்சியை ஆதரித்தமை.
3. வைமார் கூட்டாட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டமை.
4. ஜேர்மனியைத் தாக்கிய பொருளாதார பெருமந்தம்.
5. ஹிட்லருக்கு மட்டும் இரண்டாவதான உதவியாளர்கள் குழு ஒன்று காணப்பட்டமை.

(...........)

07. உலகப் போரிடைக் காலத்தில் சமாதானத்திற்காக மேற்கொள்ளப்பட்ட எத்தனங்களாவன:
1. 1919 இல் சர்வதேச சங்கம் தோற்றுவிக்கப்பட்டமை.
2. 1925 லோகார்னோ ஒப்பந்தம்
3. ..... ஆயுதப் பரிகரண மகாநாடு
4. 1933 இல் ஹிட்லரால் ஜேர்மனியில் ஜனநாயகம் நிலை நிறுத்தப்படல்
5. 1938 மியுனிக் ஒப்பந்தம்

(...........)

08. சர்வதேச சங்கம் தோல்வி அடைவதில் செல்வாக்குச் செலுத்திய காரணங்களாவன:
1. ஐக்கிய அமெரிக்கா, சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் பெறாமை.
2. வல்லரசுகளிடையே ஒருமைப்பாடின்மை.
3. ரஷ்யாவுக்குச் சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் கிட்டாமை.
4. இத்தாலி 1935 இல் சர்வதேச சங்கத்திலிருந்து விலகுதல்.
5. சர்வதேச சங்கத்திற்கென்று இராணுவம் ஒன்றில்லாமை.

09. சர்வதேச சங்கத்தின் நோக்கங்கள் தோல்வியுற்ற சந்தர்ப்பங்கள்
1. 1931 இல் ஜப்பானால் மஞ்சூரியா ஆக்கிரமிக்கப்படல்.
2. 1935 இல் அபீசீனியாவை இத்தாலி ஆக்கிரமித்தல்.
3. 1956 இல் இங்கிலாந்தும் பிரான்சும் ஒன்றாக இணைந்து எகிப்தை ஆக்கிரமித்தல்.
4. வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் விதிகளை மீறி, ஜேர்மனி மீண்டும் ஆயுதபாணியாதல்.
5. 1939 இல் ஹிட்லர் முழு செக்கோஸ்லாவாக்கியாவையும் ஆக்கிரமித்துக் கொள்ளல்.

(...........)

10. சர்வதேச சங்கத்தைத் தோற்றுவிப்பதற்குக் காரணமான ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி யார்?
1. தோமஸ் ஜெபர்ஸன் 2. அண்ட்றூ ஜெக்ஸன் 3. ஹெரிட்றூமன்
4. தியோடர் றூஸ்வெல்ட் 5. வூட்றோ வில்ஸன்

(...........)

## பகுதி 2

1. 1. 1929 இல் ஏற்பட்ட உலகப் பொருளதார பெருமந்தம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.
(02 புள்ளிகள்)
2. உலகப் பொருளாதார பெருமந்தம் ஐக்கிய அமெரிக்க அரசுகளைப் பாதித்த விதத்தை விளக்குக.
(06 புள்ளிகள்)
3. இப்பொருளாதார பெருமந்தம் ஐரோப்பிய நாடுகளில் ஏற்படுத்திய விளைவுகளைச் சுருக்க மாக விளக்குக.
(06 புள்ளிகள்)

2. இத்தாலியில் பாசிஸ வாதமும் ஜேர்மனியில் நாசிஸ வாதமும் எழுச்சியடைவதற்கு வழிவகுத்த காரணிகளை நடுநிலையிலிருந்து விமர்சிக்குக.
(14 புள்ளிகள்)

3. ‘‘சர்வதேச சங்கம் உலகிற்கு நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது.’’
   1. சர்வதேச சங்கத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயமைந்த ஒப்பந்தம் எது? (01 புள்ளி)
   2. சர்வதேச சங்கத்தின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் இரண்டைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
   3. சர்வதேச சங்கத்தின் பிரதான நோக்கம் யாதெனச் சிறுவிளக்கத்துடன் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   4. சர்வதேச சங்கம் இரண்டாவது உலகப் போரைத் தவிர்ப்பதில் தோல்வியுற்றமை தொடர்பாக விசேட கவனத்தைச் செலுத்தி, மேலே வாசகத்தில் தரப்பட்டுள்ள கருத்தைக் கலந்தாய்வு செய்க. (08 புள்ளிகள்)

4. ‘‘சில பிரச்சினைகளுக்கேனும் உலக சமாதானத்தைப் பாதுகாக்கச் சர்வதேச சங்கத்தால் முடியுமாயிருந்தது.’’
   1. சர்வதேச சங்கத்தின் ஆரம்ப அங்கத்துவ நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
   2. அதன் அமைப்பைச் சுருக்கமாகக் கூறுக. (03 புள்ளிகள்)
   3. உலக சமாதானத்தைப் பேணிப் பாதுகாப்பதற்குச் சர்வதேச சங்கம் மேற்கொண்ட பிரயத்தனங்களை மேலே தரப்பட்டுள்ள எடுகோளை வைத்துக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

# 9. இரண்டாம் உலகப் பெரும்போர்

**அறிமுகம்**

முதலாம் உலகப் பெரும் போரால் உலகின் பெரும்பாலான நாடுகளும் பேரழிவுகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்தமையால் மீண்டும் அவ்வாறான ஒருநிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக உலகத் தலைவர்கள் ஒன்றுகூடிப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் சிறிது காலம் செல்வதற்கிடையில் ஜேர்மனியில் நாசித் தலைவர் அடோல்ப் ஹிட்லரின் செயற்பாடுகளின் பிரதிபலனாக 1939 இல் இரண்டாம் உலகப் பெரும்போர் ஆரம்பமானது.

முதலாம் உலகப் போரின் இறுதியில் செய்து கொள்ளப்பட்ட வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தின் மூலம் ஜேர்மனிக்கு விதிக்கப்பட்ட தண்டனைகளால் பிற்காலத்தில் ஹிட்லர் அந்நாட்டின் தலைமைப் பதவிக்கு வரமுடியுமாயிருந்தது. ஹிட்லர் 1933 இல் ஜேர்மனியின் ஆட்சியாளனானதைத் தொடர்ந்து அவனால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளால் 1939 செப்டெம்பர் முதலாந் திகதி இரண்டாவது உலகப் போர் ஆரம்பமானது. இவைதவிர உலக சமாதானத்தை மேற்கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் பலவீனமும் இத்தாலியில் முசோலினியின் நடவடிக்கைகளும் ஜப்பான் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளும் இரண்டாவது உலகப் போர் ஏற்படுவதற்குப் பெருமளவுக்குக் காரணமாயிருந்தன.

இரண்டாம் உலகப் போர் பல கண்டங்களிலும் பரவிச் சென்றதோடு பிரித்தானியா போருக்குள் பிரவேசித்ததுடன் அதன் குடியேற்றங்கள் எங்கும் போர் விரிவடைந்து சென்றது. ஜப்பான், ஐக்கிய அமெரிக்காவின் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியதனால் ஐக்கிய அமெரிக்காவும் யுத்தத்தில் பிரவேசித்தது. ஐக்கிய அமெரிக்கா ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களுக்கு அணுகுண்டுகளை வீசியதுடன் ஜப்பான் தோல்வியுற்றது அதிகளவான உயிர், உடைமைச் சேதங்களுடன் இரண்டாம் உலகப் போர் முடிவடைந்தது.

இந்நிலைமை தொடர்பாக உலக வல்லரசுகளின் கவனம் ஈர்க்கப்பட்டமையால் 1945 இல் அந்நாடுகளின் தலைவர்கள் ஐக்கிய அமெரிக்காவின் சான் பிரன்சிஸ்கோ நகரில் கூடி நிறைவேற்றிக் கொண்ட தீர்மானத்திற்கேற்ப உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஐக்கிய நாடுகள் சபையைத் தோற்றுவித்தனர். பல்வேறு இடையூறுகள் ஏற்பட்ட போதிலும் உலக சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் இற்றைவரை முக்கியமான சேவைகள் ஆற்றப்பட்டுள்ளன.

இரண்டாவது உலகப் போருக்கான காரணங்கள், அதன் தன்மை அதன் விளைவுகள், ஐக்கிய நாடுகள் சபையின் கட்டமைப்பு, அதனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகள் ஆகியவற்றைப் பற்றிக் கவனஞ் செலுத்துவது இப்பாடத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுபவையாகும்.

**தேர்ச்சி** : • அதிகாரத்திற்காக மேற்கொள்ளப்படும் மோதல்களினால் ஏற்படும் பேரழிவுகளை விளங்கிக்கொண்டு சமாதானத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.1 இரண்டாம் உலகப் போரின் பேரழிவுகளைத் தெளிவுபடுத்துவார்.

**பாடவேளைகள்** : 28

**கற்றற்பேறுகள்** :
- இரண்டாம் உலகப் போரின் ஆரம்பத்தையும் பரவலையும் விளக்குவார்.
- இரண்டாவது உலகப்போரின் விளைவுகளை விளக்குவார்.
- இரண்டாவது உலகப் போரின்போதும் அதன் பின்னரும் தொடர்புபட்ட இடங்களை உலகப் புறவுருப் படம் ஒன்றில் குறித்துக் காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.


## இரண்டாவது உலக யுத்தம்

1939 செப்டெம்பர் 1 ஆந் திகதி அடோல்ப் ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்ததுடன் இரண்டாவது உலகப் போர் ஆரம்பமானது.

## இரண்டாவது உலகப்போர் ஏற்பட்டதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்

- ஜேர்மனியின் வைமார் குடியரசின் பலவீனம்
  - அரசியல் உறுதிவாய்ந்த அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள முடியாமை.
  - அரசியல் உறுதியின்மை
  - பணவீக்கம்
  - வேலைவில்லாப் பிரச்சினை
  - உணவுத் தட்டுப்பாடு
  - சர்வாதிகாரி ஒருவன் தோன்றுவதற்கான சூழ்நிலை உருவானமை.
  - ஹிட்லர் ஆட்சிக்குவரல்.
  - ஜேர்மனி மீண்டும் கட்டியெழுப்பப்பட்டமை.
- வேர்சேயில்ஸ் ஒப்பந்தத்தின் பலவீனம்
  - ஜேர்மனிக்கு நியாமற்ற முறையில் கடுந்தண்டனைகள் வழங்கப்பட்டமை.
  - ஜேர்மனியிடமிருந்து நியாமற்ற முறையில் நட்டஈடு பெறப்பட்டமை.
  - ஜேர்மனிக்கு சொந்தமாகவிருந்த குடியேற்றங்கள் பறிக்கப்பட்டமை.
- இத்தாலியில் முசோலினியின் செயற்பாடுகள்
  - முசோலினி இத்தாலியில் ஆட்சிக்கு வரல்.
  - பாசிஸக் கட்சியைத் தவிர, ஏனைய அனைத்துக் கட்சிகளுக்கும் தடைவிதித்தல்.
  - கடுமையான பத்திரிகைத் தணிக்கை.
  - கல்வியைக் கடுமையாகக் கட்டுப்படுத்தியதுடன், பாசிஸவாதத்தைப் போதிப்பதற்கு அதனைப் பயன்படுத்தல்.
  - தொழிற்சங்கங்களைப் பாசிஸ நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரல்.
  - போப்பாண்டவருடன் ஒப்பந்தமொன்று செய்துகொள்ளல்.
  - அபீசீனியாவை ஆக்கிரமித்தல்.
- ஜப்பான் கிழக்குலகின் வல்லரசாக எழுச்சியுறல்
  - 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜப்பான் உலகின் முன்னேற்றகரமான நாடொன்றாக மாறுதல்.
  - ஜப்பானில் ஏற்பட்ட துரித பொருளாதார முன்னேற்றம்.
    - முதலாளித்துவப் பொருளாதார முறை
    - கைத்தொழிலில் அதீத முன்னேற்றம்
    - தொழினுட்ப அபிவிருத்தி
  - ஜப்பான் ஆசியாவின் வல்லரசாகத் தன்னைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்கான முயற்சிகள்
    உதாரணம்:
    - கொரியா தொடர்பான சீன-ஜப்பானிய மோதல்.
    - ரஷ்யாவை 1905 இல் ஜப்பான் தோற்கடித்தல்.
    - ஐக்கிய அமெரிக்காவுக்குச் சொந்தமாக இருந்த ஆசிய-பசுபிக் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொள்ளல்.
  - ஜப்பானின் போர் வெற்றிகளையும் அதன் பரம்பலையும் தடுப்பதற்கு ஐக்கிய அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- ஹிட்லரின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கைகள்
  - மெயின் காம்ப் (எனது போராட்டம்) எனும் நூலை வெளியிட்டமை.
  - ஹிட்லர் ஜேர்மனியின் பிரதம சான்சலர் ஆனமை.
  - ஜனாதிபதி ஹிடன்பார்க் மரணமுற்றதன் பின்னர் ஹிட்லர் அப்பதவியையும் தனதாக்கிக் கொண்டமை.

- எதிரானவர்களை அழித்தொழித்தல். படையணிகளை உருவாக்கிக் கொண்டு எதிராளிக் குழுக்களை அடக்கி ஒடுக்குதல்.
- குடியியல் உரிமைகளை இல்லாமலாக்குதல்.
- கருத்து வெளியிடும் உரிமையை ஒழித்தல்.
- கல்வி நிர்வாகத்தைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டுவரல்.
- யூதர்களுக்குக் கொடிய தண்டனைகள் வழங்குதல்.
- தொழிற்சங்கங்களுக்குத் தடைவிதித்தல்.
- ஜேர்மனியின் பொருளாதாரத்தை மேம்பாடடையச் செய்தல்.
- போக்குவரத்துச் சேவைகளை முன்னேற்றமடையச் செய்தல்.
- கட்டாய இராணுவ சேவையை ஆரம்பித்துப் போர்ப் படையை வலிமையூட்டல்.
- ஜேர்மனியை ஆயுதபாணியாக்குதல்.
- வேர்செயில்ஸ் ஒப்பந்தத்தினை மீறி தேச எல்லைகளை விரிவுபடுத்தல்.
- ரைன்லாந்தை இணைத்துக்கொள்ளுதல்.
- சுடேட்டன்லாந்தை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.
- செக்கோஸ்லோவாக்கியாவை ஆக்கிரமித்தல்.
- ஆஸ்திரியாவைக் கைப்பற்றிக்கொள்ளல்.



*ஹிட்லரின் தலைமையில் பாதையமைப்புத் திட்டம்*

*( Source: http://weimarandnazigermany.co.uk/autobahn/#.WmW0AYVOKUk )*



*ஹிட்லரின் காலத்தில் யுத்தத் தேவைக்காக அமைக்கப்பட்ட வொக்சவகன் வாகனம்*

(*source: http://warfarehistory network.com)*



அமெரிக்காவிலுள்ள பேர்ள் துறைமுகத்தின் ஒரு காட்சி
*( Source:http://worldwar2headquarters.com/HTML/PearlHarbor/us-consequences.html)*




ஜப்பான் பேர்ள் துறைமுகத்தில் தாக்குதல்களை நிகழ்த்துதல்
( source: ***https://www.britannica.com/event/Pearl-Harbor-attack)***

- யுத்தத்தின் ஆரம்பம்
  - 1939 செப்டெம்பர் 1 ஆம் திகதி ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தல்.
  - அதற்கு எதிராகப் பிரிததானியாவும் பிரான்சும் ஜேர்மனிக்கு விரோதமாக யுத்தப் பிரகடனஞ் செய்தல்.
  - ஐரோப்பாவினுள் மூன்று அணிகள் தோற்றம் பெற்றமையும் அவர்களிடையே காணப்பட்ட சந்தேகமும்
    - ஜேர்மனியும் இத்தாலியும்
    - பிரித்தானியாவும் பிரான்சும்
    - ரஷ்யா
  - நாசி - கம்யூனிஸ சமாதான ஒப்பந்தம்
  - சர்வதேச சங்கத்தின் பலவீனம்
  - உடனடிக் காரணி : ஹிட்லரினால் போலந்து ஆக்கிரமிக்கப்படல்.
  - ஜப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியதால், ஐக்கிய அமெரிக்கா நட்பு அணியுடன் சேர்ந்து உலகப் போரில் பிரவேசித்தல்.
  - அணிகள்:

    நட்பு : இங்கிலாந்து, பிரான்சு, ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா

    அச்சு : ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான்
- யுத்தத்தின் பரவல்
  - ஐரோப்பிய வல்லரசுகள் அணிகளைச் சேர்த்துக் கொண்டு இராணுவத்தை வலுப்படுத்தல்.
  - யுத்தத்தின் பிரதான அணிகளும் போர்முனைகளும்
  - ஹிட்லர் புதிய யுத்த உபாயங்களைக் கையாளல்.
  - ‘பிலிட்ஸ்கிரிக்’ முறை அல்லது சுயமாகத் தாக்குதல் மேற்கொள்ளல்.
  - நவீன யுத்த தாங்கிகள் பாவிக்கப்பட்டமை.
  - தாக்குதலுக்கு விமானங்களைப் பயன்படுத்தல்.
  - சுறுசுறுப்பான இராணுவ அணிகள்
  - 1940 இல் ஹிட்லர் நோர்வே, சுவீடன்மீது போர்தொடுத்து அவற்றை ஆக்கிரமித்துக் கொள்ளல்.
  - ஒல்லாந்தையும் பெல்ஜியத்தையும் கைப்பற்றுதல்.
  - பிரான்சைத் தோற்கடித்தல்.
  - பிரித்தானியாவுக்கு எதிரான போர்கள்
  - போல்கன் பிரதேசத்தைக் கைப்பறிக்கொள்ளல்.
  - சோவியத் ரஷ்யாவை ஆக்கிரமித்தல்.
  - ஐக்கிய அமெரிக்காவும் ஜப்பானும் மோதிக்கொள்ளல்.



ஹிட்லரின் போர்ப்படை

*(SOURCE: HTTP://WWW.ALAMY.COM/STOCK-PHOTO-NAZI-LEADER-ADOLF-HITLERS-ARMY-IN-1945-69276282.HTML)*

- யுத்தத்தின் முடிவு
  - சோவியத்தின் இராணுவத்திடம் ஜேர்மனி தோல்வியுறல்.
  - பிரித்தானிய, ஐக்கிய அமெரிக்கப் படைகளின் ஒன்றிணைந்த தாக்குதலால் ஜேர்மனி தோல்வி யுற்றமை.
  - அமெரிக்காவின் அணுகுண்டுத் தாக்குதலால் நிலைகுலைந்த ஜப்பான் தோல்வியை ஒப்புக்கொள்ளல்.

- யுத்தத்தின் விளைவுகள்
  - இதுவரை உலகில் இடம்பெற்ற போர்களில் மிகக் கொடூரமானதாக இருந்தமை. முழு உலகின் மனித வளமும் பொருளாதார வளமும் பேரளவில் அழிவுற்றமை.
  - அணுகுண்டால் ஹிரோஷிமாவும் நாகசாகியும் முற்றாக அழிவுற்றமை. அதன் பாதிப்புகள் அடுத்த தலைமுறையையும் பாதித்தமை.
  - ஜேர்மனி நாசமாக்கப்பட்டமை
  - ஜேர்மனி கிழக்கு, மேற்காக இரு நாடுகளாகப் பிளவுபட்டமை.
  - இதுவரை வல்லரசுகளாகத்திகழ்ந்த பிரித்தானியாவும் பிரான்சும் அவ்விடத்தை இழந்தமை.
  - ஐக்கிய அமெரிக்காவும் சோவியத் ரஷ்யாவும் முதல்தர வல்லரசுகளானமை.
  - ஐக்கிய அமரிக்கா ஜனநாயகத்தின் பாதுகாவலனாக முன்வரல்.
  - பிரித்தானியா, பிரான்சு, பெல்ஜியம், ஒல்லாந்து, மேற்கு ஜேர்மனி ஆகிய முதலாளித்துவப் பொருளாதார நாடுகள் ஐக்கிய அமெரிக்காவுடன் ஒரே அணியில் சேர்ந்துகொள்ளல்.
  - சோவியத் ரஷ்யாவின் தலைமையில் கம்யூனிஸ அணி தோன்றுதல். போலந்து, செக்கோஸ்லோவாக்கியா, பல்கேரியா, யூகோஸ்லாவியா, கிழக்கு ஜேர்மனி ஆகிய நாடுகள் இவ்வணியில் சேர்ந்துகொள்ளல்.
  - அழிவுற்ற நட்பு நாடுகளையும் தோல்வியுற்ற (மேற்கு ஜேர்மனி, ஜப்பான், இத்தாலி) நாடு களையும் முன்னேற்றமடையச் செய்வதற்கு ஐக்கிய அமெரிக்காவால் மார்ஷல் திட்டத்தை அறிமுகப்படுத்தல்.
  - பிரித்தானிய, பிரான்சியக் குடியேற்றங்கள் சுதந்திரமடையப் பெற்றமை.
  - உலக சமாதானத்தைப் பேணவும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டமை.



யுத்தத்தின் அழிவு

(Source: http://www.ncregister.com/blog/sbeale/can-the-hiroshima-bombing-be-morally-justified)



யுத்த அகதிகள (Source: h ttps://www.defensemedianetwork.com)




(SOURCE: HTTPS://SINGULARTHINGS.WORDPRESS.COM/TAG/IMAGE-OF-THE-REFUGEE/)

## கணிப்பீடு 01

- **கீழ்வரும் வினாக்களில் ஐந்து சொற்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று ஏதாவது ஒரு காரணத்திற்காக அடுத்த சொற்களுடன் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

01. 1. அடோல்ப் ஹிட்லர் 2. பெனிடோ முசோலினி 3. விக்டோரியா ஒர்லென்டோ 4. வின்ஸ்டன் சர்ச்சில் 5. பிராங்ளின் ரூஸ்வெல்ட் (...........)

02. 1. ஜேர்மனி 2. இத்தாலி 3. ஜப்பான் 4. ஹங்கேரி 5. பிரான்சு (...........)

03. 1. கோரிங் 2. கோயாபெல்ஸ் 3. வொன் மோல்க் 4. டோனிட்ஸ் 5. ரிபன்திரோப் (...........)

04. 1. பிரான்சு 2. இங்கிலாந்து 3. ரஷ்யா 4. ஐக்கிய அமெரிக்கா 5. இத்தாலி (...........)

- **கீழ்வருவனவற்றில் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தலைப்புக்குப் பொருந்தாதுள்ளது. அதனைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

06. இரண்டாம் உலகப் பெரும்போர்
    1. 1939 இல் ஆரம்பமானது.
    2. யுத்தம் மூள்வதற்கான கிட்டிய காரணி, ஆஸ்திரியாவின் இளவரசான பிரன்சிஸ் பேடினன் கொலை செய்யப்பட்டமை.
    3. ஐரோப்பாவில் சர்வாதிகார ஆட்சிகள் எழுச்சியுற்று வந்தமையால் யுத்தம் மூள்வதைத் தவிர்க்க முடியாதிருந்தது.
    4. ஜப்பான் தோல்வியுற்றதுடன் போர் முடிவுற்றது.
    5. யுத்தத்தின் முடிவில் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. (...........)

07. இரண்டாம் உலக மகாயுத்தம்
    1. 1939 இல் ஜேர்மனி போலந்தைக் கைப்பற்றியது.
    2. 1940 இல் இத்தாலி போரில் சம்பந்தப்பட்டது.
    3. 1941 இல் ஜப்பான் பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியது.
    4. 1945 இல் ஜப்பான் யுத்தத்தில் வெற்றிபெற்றது.
    5. 1945 இல் ஜேர்மனி நிபந்தனையற்ற விதத்தில் சரணடைந்தது. (...........)

08. இரண்டாம் உலகப் போர் நிகழாமல் தடுத்துக்கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட பிரயத்தனங்கள்.
    1. 1919 இல் சர்வதேச சங்கம் அமைத்துக்கொள்ளப்பட்டமை.
    2. 1925 இல் லோகார்னோ ஒப்பந்தம் கையெழுத்திடல்.
    3. 1932 இல் ஆயுதப் பரிகரண மகாநாடு
    4. 1933 இல் ஹிட்லரால் ஜேர்மனியில் ஜனநாயகம் நிலைநாட்டப்படல்.
    5. 1938 இல் மியூனிக் உடன்பாடு

(...........)

## கணிப்பீடு 2

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. இரணடாம் உலகப் போர் ஏற்படுவதற்கான காரணிகளை விமர்சன ரீதியில் ஆராய்க.
(14 புள்ளிகள்)

02. ''இரண்டாம் உலகப் போர் ஆரம்பமாவதற்குக் காரணமான வித்து, முதலாம் உலகப் போரின் விளைவுகளில் கருக்கொண்டிருந்தது.'' இதனையிட்டு விளக்கமளிக்குக.
(14 புள்ளிகள்)

03. இரண்டாம் உலகப் போரினால் ஏற்பட்ட விளைவுகளை விமர்சன ரீதியாக ஆராய்க.
(14 புள்ளிகள்)

04. இரண்டாம் உலகப் போருக்கு வழிவகுத்த காரணிகளைப் பரிசீலிக்குக.
(14 புள்ளிகள்)

## கணிப்பீடு 3

01. இரண்டாம் உலகப் போரின் நட்புநாடுகளையும் அச்சு நாடுகளையும் வேறுபடுத்தி, அவற்றைத் தெளிவாக உலகப் புறவுருப்படமொன்றில் குறிக்குக.

**தேர்ச்சி** : • அதிகாரத்திற்காக மேற்கொள்ளப்படும் மோதல்களினால் ஏற்படும் பேரழிவுகளை விளங்கிக்கொண்டு சமாதானத்தைப் பேணிப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.2 உலக சமாதானத்தைத் தோற்றுவித்துக் கொள்வதற்காக ஒன்றுபட்டு இயங்குவதின் முக்கியத்துவத்தை பரிசீலிப்பார்.

**பாடவேளைகள்** : 7

**கற்றற்பேறுகள்** :
- ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கத்தை விளக்குவார்.
- இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் உலக சமாதானத்தை பேணிப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை விவரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

**ஐக்கிய நாடுகள் சபை**

இரண்டாம் உலக மகாயுத்தம் முடிவுற்றதன் பின்னர் உலக சமாதானத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைத்துக் கொள்ளப்பட்ட சர்வதேச அமைப்பை அறிமுகப்படுத்தல்.

### ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்பம்

- சர்வதேச சங்கத்தைவிட மிகவும் சக்திவாய்ந்த அமைப்பொன்றின் தேவை ஒன்று ஏற்பட்டமை.
- ஒவ்வொருவரினதும் சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் மதிப்பளிக்கும் வகையில் உலக சமாதானத்திற்கும் பாதுகாப்பிற்கும் சர்வதேச அமைப்பொன்று அமைக்கப்பட வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டிருந்தமை.
- 1941 - அத்திலாந்திக் சாசனம்
  - அடிமைகளுக்குச் சுதந்திரம் வழங்குதல்.
  - சுயமாகத் தீர்மானிக்கும் உரிமையைப் பெற்றுக்கொடுத்தல்.
  - ஆயுதப் பரிகரணம்
- 1943 இல் டெஹ்ரான் நகரில் ஒன்றுகூடிய உலக வல்லரசுகளின் தலைவர்களான பிரித்தானியப் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில், ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட், சோவியத் ரஷ்யாவின் தலைவர் ஜோஸப் ஸ்டாலின் ஆகியோர் உலக சமாதானத்தை முன்னிறுத்தி சர்வதேச சங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானித்தமை.
- 1945 இல் சான் பிரன்சிஸ்கோ நகரில் நடத்தப்பட்ட ஒன்றுகூடலில் ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனம் தயாரிக்கப்பட்டது.
- ஐந்து உலக வல்லரசுகள் உட்பட 51 நாடுகள் இப்பிரகடனத்தில் கையொப்பமிட்டன.
- 1945 ஒக்டோபர் 24ஆம் திகதி உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

### ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள்

- சர்வதேச பாதுகாப்பையும் சமாதானத்தையும் ஒத்துழைப்பையும் முன்னெடுத்துச் செல்லல்.
- நிற, பால், மொழி, சமய பேதங்களைப் பாராது மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, அவற்றைப் பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- நாடுகளிடையே நட்புறவை வளர்த்தல்.
- பொருளாதார, சமூக, கலாசார விருத்திக்கும் நலன்களுக்கும் பாடுபடல்.
- மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் உறுதிப்படுத்துவதில் சர்வதேச உதவி ஒத்தாசைகளைப் பெற்றுக்கொள்ளல்.

- இப்பொதுவான நோக்கங்களை அடைந்துகொள்வதற்காகச் சர்வதேசத்தின் தலைமை நிலையமாகச் செயற்படல்.

**ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு**

- பிரதான அங்கங்கள் ஆறைக் கொண்டுள்ளன.
  - பொதுச் சபை
  - பாதுகாப்புச் சபை
  - நம்பிக்கைப் பொறுப்புச் சபை
  - பொருளாதார, சமூக சபை
  - சர்வதேச நீதிமன்றம்
  - பொதுச் செயலகம் (அமைப்பு, நோக்கம், அங்கத்தவர் தொகை, பொறுப்புகள், முக்கியத்துவம்)

**ஐக்கிய நாடுகள் சபையின் இணை நிறுவனங்கள்**

- இரண்டாம் உலகப் போரால் நலிவடைந்த நாடுகளின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகள் சபையும் அதன் இணை நிறுவனங்களும் பெருஞ் சேவைகளை ஆற்றுகின்றமை.

| | | |
|---|---|---|
| உதாரணம்: | ILO | : சர்வதேச தொழிலாளர் அமையம் |
| | FAO | : உணவு, விவசாயத்தாபனம் |
| | UNESCO | : ஐக்கிய நாடுகளின் கல்வி, கலாசார, விஞ்ஞான அமையம் |
| | IMF | : சர்வதேச நாணய நிதியம் |
| | WHO | : உலக சுகாதர நிறுவனம் |
| | UNICEF | : ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நிதியம் |

இத்தாபனங்களைப் பற்றிக் கீழே தரப்பட்டுள்ள தலைப்புகளின் கீழ் விடயங்களைச் சேகரிக்கவும்.
  - அமைப்பு
  - அங்கத்தவர் தொகை
  - நோக்கம்
  - பொறுப்புக்களும் முக்கியத்துவமும்

**ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியத்துவம்**

- உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்குப் பாடுபடல்.

உதாரணமாக:
இந்தோனேஷியாவிற்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்தல்.
அரபு - இஸ்ரவேல் மோதல்கள்.
கொரிய யுத்தம்
சுயெஸ் நெருக்கடி
ஹங்கேரியாவின் எழுச்சி
பெல்ஜிய கொங்கோ உள்நாட்டு யுத்தம்
சைப்ரஸ் நெருக்கடி
காஷ்மீர் நெருக்கடி
செக்கோஸ்லோவேக்கிய நெருக்கடி
தென்னாபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையைக் கண்டித்தமை.
ரொடீசியாவிற்குப் பொருளாதாரத் தடைவிதிதத்தல்.

- ஆயுதப் பரிகரணச் செயற்பாடுகள்:
- தேசங்களுக்கிடையே எழும் பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ளும் முயற்சி.
- சர்வதேச ஒத்துழைப்பும் அபிவிருத்தியும் கருதி மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளும் மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளும்.
- சர்வதேச அனர்த்தங்களின்போது உதவி ஒத்தாசை புரிதல்.
  (வெள்ளப்பெருக்கு, சூறாவளி, புவிச்சரிவு, சுனாமி)
- எதிர்காலச் சந்ததியினரை யுத்தப் பீதியிலிருந்து விடுவித்தல்.

**ஐக்கிய நாடுகள் சபை எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள்**

- நாடுகள் அணி சேர்ந்து கொண்டு செயற்படுதல்
- அணுவாயுதக் கட்டுப்பாடு
- பணத்தட்டுப்பாடு

## கணிப்பீடு 01

- **கீழ்வரும் வினாக்களில் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று தலைப்புக்குப் பொருந்தாதுள்ளது. அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் இடுக.**

01. ஐக்கிய நாடுகள் சபை
    1. இரண்டாம் உலகப் போரின் பின்னர் தோற்றுவிக்கப்பட்டது.
    2. அதன் பிரதான நோக்கம் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணுதல்.
    3. பொதுச் செயலாளர் அதன் பிரதான நிர்வாகியாவார்.
    4. பாதுகாப்புச் சபையில் அனைத்து அங்கத்துவ நாடுகளும் இடம்பெறும்.
    5. நிரந்தர அங்கத்துவ நாடுகளுக்கு இரத்து அதிகாரமுண்டு.

(...........)

02. ஐக்கிய நாடுகள் சபை
    1. இரண்டாம் உலக யுத்தத்தின் நேரடி விளைவாக ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது.
    2. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கியமான நோக்கம் சர்வதேச சமாதானத்தையும் பாதுகாப்பையும் பேணிக் கொள்வதாகும்.
    3. பொதுச்சபை அனைத்து நாடுகளினதும் பிரதிநிதிகளைக் கொண்டதாகும்.
    4. பொதுச் செயலகம் அந்நிறுவனத்தின் நிர்வாக மையமாகும்.
    5. பொதுச் செயலகம் சர்வதேச நீதிமன்றம் என்றும் குறிப்பிடப்படும்.

(...........)

## கணிப்பீடு 2

- **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. (i) ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டதன் பின்னரான இரு தசாப்தங்களிலும் உலக சமாதானத்தைப் பேணுவதில் அந்நிறுவனம் மேற்கொண்ட செயற்பாடுகளை விளக்குக. (07 புள்ளிகள்)

    (ii) இன்றைய உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக. (07 புள்ளிகள்)

02. (i) ஐக்கிய நாடுகள் சபை 1965 ஆம் ஆண்டுவரை உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அது மேற்கொண்ட பிரதானமான நடவடிக்கைகள் பற்றி விளக்குக. (07 புள்ளிகள்)

    (ii) ஐக்கிய நாடுகள் சபை அவற்றைத் தீர்த்து வைப்பதில் எந்தளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதைப் பரிசீலிக்குக. (07 புள்ளிகள்)

# 10. குடியேற்ற மயமாதல்

## அறிமுகம்

15ஆம் நூற்றாண்டிலிருந்து ஐரோப்பியர் கீழைத் தேசங்களுடன் தொடர்புகொள்ளும் நோக்குடன் ஆரம்பித்த நாடுகாண் பயணங்களின் விளைவாக புதிய கடல்வழிகள், சமுத்திரங்கள், கண்டங்கள், நாடுகளைக் கண்டறிந்துகொள்ள முடிந்தது. பிற்காலத்தில் இவ்வாறு கண்டறியப்பட்ட பிரதேசங்களையும், நாடுகளையும் ஆயுத பலத்தால் கைப்பற்றிக் கொண்டதோடு, அதன் விளைவாக ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்கக் கண்டங்களில் குடியேற்றங்களை உருவாக்கிக் கொள்ளவும் முடிந்தது.

சில நூற்றாண்டுகளாக ஐரோப்பியரின் ஆதிக்கத்திற்கு ஆட்பட்டிருந்த இக்குடியேற்றங்கள், ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் அடைவதற்காக மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக 20ஆம் நூற்றாண்டில் ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் போராட்டங்கள் உருவாகத் தொடங்கின. அக்குடியேற்றங்களில் மேற்கொள்ளப்பட்ட ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்ட இயக்கங்களைப்பற்றி ஆராய்ந்து, அவை உலக அரசியலில் கொண்டிருந்த செல்வாக்குப் பற்றி அறிந்துகொள்வது இவ்வலகின் எதிர்பார்ப்பாகும்.

**தேர்ச்சி** : • சுதந்திரமாக வாழ்வதன் பெறுமதியைப் புரிந்துகொண்டு தேசத்தின் பாரம்பரியத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் வண்ணம் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 10.1 சுதந்திரத்தை அடைந்துகொள்வதற்காக ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் உள்ள நாடுகள் செயற்பட்ட விதத்தை அறிந்து கொள்வார்.

**பாடவேளைகள்** : 40

**கற்றற்பேறுகள்** :
- ஆசிய, ஆபிரிக்கக் கண்டங்களில் இருந்த குடியேற்றங்களை உலகப் புறவுருப் படமொன்றில் குறித்துக் காட்டுவார்.
- ஆசிய - ஆபிரிக்க நாடுகள் சுதந்திரம் பெறுவதற்காக மேற்கொண்ட போராட்டங்களை விவரிப்பார்.
- இந்நாடுகளின் சுதந்திரத்தை அடைந்துகொள்வதற்குப் பாடுபட்ட தலைவர்களை கௌரவிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

### ஆசியாவில் போராட்ட இயக்கங்கள்

- தென் ஆசியா: இந்தியா, இலங்கை
  தென்கிழக்காசியா: பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, பர்மா

### இந்தியா

- இந்தியாவின் பல பிரதேசங்கள் சுதேச மன்னர்களின் ஆட்சியின் கீழிருந்ததோடு அவற்றுள் பெரும்பாலான பிரதேசங்கள் பிரித்தானியரது ஆட்சிக்குட்பட்ட பின்னர் அவற்றை நிர்வகித்த ஆங்கில கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனிக்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டமை.
- 1806, 1844, 1849, 1850, 1852 ஆம் ஆண்டுகளில் வர்த்தகக் கம்பனிக்கு எதிராகக் கிளர்ச்சிகள் ஏற்பட்டபோது அவை அடக்கப்பட்டன.
- 1857 சிப்பாய் கலவரம்
- சிப்பாய் கலகத்திற்கான காரணங்கள்: அரசியல், சமூக, சமய, ஏனைய காரணிகளின் செல்வாக்கு.

- கலவரத் தலைவர்கள்: நானா சாகிப், காந்தியா கோபீ, லக்ஷ்மி பாய்
- பிரித்தானியரால் கலவரம் கொடூரமாக அடக்கப்பட்டமை.
- 1857 கலவரத்தின் பின்னர் வர்த்தகக் கம்பனியின் கீழிருந்த சகல இந்தியப் பிரதேசங்களும் பிரித்தானிய முடியின் கீழ் கொண்டுவரப்பட்டமை.
- 1857 கலவரத்தின் காரணமாக இந்தியர்களிடையே சுதந்திரம் தொடர்பான உணர்வு வளர்ச்சியுற்றமை.
- சுதந்திரம் கோரி இந்தியர்கள் பல்வேறு இடங்களிலும் போராட்டங்களை மேற்கொண்டமை.
- கலவரங்களின் மூலம் சுதந்திரத்தை ஈட்டிக்கொள்ள முடியாது என்பதை விளங்கிக்கொண்ட இந்தியத் தலைவர்கள் 19ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து சமாதானமான முறையில் அதனை அடைந்து கொள்வதில் கவனஞ் செலுத்தத் தொடங்கியமை.
- 1876 இல் சுரேந்திரநாத் பானர்ஜி அவர்களால் 'கல்கத்தா இந்தியர் சங்கம்' உருவாக்கப்பட்டது.
- 1855 இல் இந்திய தேசிய காங்கிரஸ் உருவானமை.
- இந்திய தேசிய காங்கிரஸின் தலைமைத்துவம் மிதவாதிகள், தீவிரவாதிகள் என்று பிளவுண்டமை.
- 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மிதவாதிகளின் செயற்பாடுகள்.
- தீவரவாதத் தலைவர்கள் வெற்றிகள் பலவற்றை அடைந்துகொள்ளல்.
    - சுதந்திரப் போராட்ட இயக்கத்திற்குப் பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ளல்.
    - அறிஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்போரைச் சுதந்திரப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளல்.
    - டொமினியன் அந்தஸ்திலான சுதந்திரம் அல்ல, பூரணமான சுதந்திரத்திற்காகப் போராடல்.
    - வெளிநாட்டுப் பொருட்களின் உபயோகத்தை நிராகரித்தல்.
    - பத்திரிகைகள் மூலம் தேசிய உணர்வை உருவாக்குதல்.
- **தேசிய காங்கிரஸின் தலைமைத்துவத்திற்கு மகாத்மா காந்தி வரல்.**
    - மகாத்மா காந்தியால் ஒத்துழையாமை, சிவில் சட்டத்தை மீறுதல், வெள்ளையனே வெளியேறு, பொருட்கள் பகிஷ்கரிப்பு போன்ற இயக்கங்கள் மூலம் பிரித்தானிய அரசை சங்கடத்தில் ஆழ்த்தியது.
    - தண்டி பாத யாத்திரையில் காந்தி உட்பட பல்லாயிரக்கணக்கானோர் சிறையிடப்பட்டமை.
    - இவ்வியக்கத்தால் தேசியப் போராட்டத்தில் பொதுமக்களின் பங்களிப்பு அதிகரித்துச் சென்றமை.
    - அஹிம்சைக் கோட்பாட்டால் காந்தி பிரபல்யமடைந்தமை.



தண்டி பாத யாத்திரை

***Source: https://www.tes.com/lessons/-NohKMluo1Xi_w/ghandi-s-salt-march-1930***

- 1935 இல் இந்திய அரசியல் யாப்புச் சட்டத்தின் மூலம் அரசொன்றைத் தோற்றுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை.
- தேசிய காங்கிரஸ் இந்தியச் சட்டம் தொடர்பாகத் திருப்திப்படாமை.

- இந்திய பிரித்தானியரின் தூண்டுதலால் உருவான முஸ்லிம் லீக் தனிநாடொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சித்தமையால் இந்தியா இரு நாடுகளாகப் பிரிக்கப்பட வேண்டிய நிலைக்காளானமை.
- முஹம்ட் அலி ஜின்னா முஸ்லிம்களுக்கான அரசாங்கத்தை (பாகிஸ்தான்) நிறுவுவுதற்கான இயக்கத்திற்குத் தலைமைதாங்கிச் செயற்பட்டமை.
- மௌண்ட் பேட்டன் பிரபுவால் முன்வைக்கப்பட்ட அரசியல் தீர்வுக்கமைய இந்தியா இரண்டாகப் பிரிவுற்றமை.
- 1947 இல் இந்தியாவில் புதிய அரசியல் யாப்புச் சட்டம் செயற்படுத்தப்பட்டமை. அதிலிருந்து இந்தியா சுயாதிபத்தியமுள்ள ஜனநாயகக் கூட்டரசொன்றானமை.
- தனி நாடாகப் பாகிஸ்தான் உருவானமை.

**பர்மா**

- பிரித்தானியர் பர்மாவை ஒன்றுக்கு மேற்பட்ட பல சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டமை.
- பர்மிய அரசர் அப்பிரதேசங்களுக்கு உரிமை கோரியதால் 1824 இல் முதலாவது பிரித்தானிய - பர்மியப் போர் இடம்பெற்றது.
  - பர்மிய ஆட்சியாளர் பிரித்தானிய வர்த்தகர்களுக்கு இடைஞ்சல் விளைவித்தமையால் 1852 இல் இரண்டாவது பர்மியப் போர் மூண்டமை.
  - கீழ் பர்மாவை (பேகு பிரதேசம்) பிரித்தானியர் பொறுப்பேற்றல் - பர்மியப் போர் 1855 இல் இடம்பெற்றமை.
  - இந்த யுத்தங்களின் பின்னர் 1886 ஜனவரி 1 ஆந் திகதிய பிரகடனம் ஒன்றின்படி அப்பிரதேசம் பிரித்தானிய இந்தியப் பேரரசுடன் இணைத்துக் கொள்ளப்பட்டமை.
  - பர்மிய பிரதேசத்தை நிர்வகிக்க பிரித்தானிய இராணுவ ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டமை.
  - 1935 இல் பர்மாவை இந்தியாவிலிருந்து பிரித்தல்.
  - இரண்டாம் உலகப் போரின்போது ஜப்பானிய ஆதரவு பெற்ற அவுங்சானின் தலைமையில் தேசப்பற்றாளர் குழு ஒன்று உருவானமை.
  - ஜப்பானின் ஆதரவைப் பெற்று, பிரித்தானியரை பர்மாவிலிருந்து துரத்திவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டமை.
  - இரண்டாம் உலகப் போரின்போது, ஜப்பானால் பர்மா வெற்றிகொள்ளப்பட்ட வேளையில் அவுங்சானிடம் யுத்த நடவடிக்கை தொடர்பான அமைச்சு வழங்கப்பட்டமை.
  - இரண்டாம் உலகப் போரில் ஜப்பானின் தோல்வியுடன் மீண்டும் பர்மா பிரித்தானியர் வசமானமை.
  - 1948 இல் பர்மா சுதந்திரமடைந்து முடியரசொன்றானமை.

*source :https://en.wikipedia.org/wiki/British_rule_in_Burma*



*பர்மாவில் பிரித்தானிய இராணுவம்*

**இலங்கை**

- இலங்கை வரலாறு தேசிய இயக்கத்துடன் தொடர்பானவை.

**பிலிப்பைன்ஸ்**

- முதன் முதலில் உலகை வலம்வந்தவர் எனக் கருதப்படும் பேர்டினன் மகலனால் பிலிப்பைன்ஸ் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் அது ஸ்பானியாவின் குடியேற்றமானது.
- 1898 ஸ்பானிய - ஐக்கிய அமெரிக்க யுத்தத்தின் பின்னர் பிலிப்பைன்ஸ் ஐக்கிய அமெரிக்க ஆதிக்கத்திற்குட்பட்டது.
- பிலிப்பைன்ஸில் அந்நிய ஆதிக்கத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டமை.
- சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்வதற்குப் பொருத்தப்பாடு அடையும் வரை பிலிப்பைன்ஸ் ஐக்கிய அமெரிக்க ஆட்சியின் கீழிருந்தமை.
- 1934 இல் இயற்றப்பட்ட பிலிப்பைன்ஸின் சுதந்திரச்சட்டப்படி சுய ஆட்சி அதிகாரம் கிடைக்கப் பெற்றமை.
- இச்சட்டத்தின்படி பிலிப்பைன்ஸ் பொதுநலவாய அமைப்பின் அரசொன்றானமை.
- அதன் முதலாவது ஜனாதிபதியாக மனுவேல் குவோஜோன் பதவியேற்றமை.
- இரண்டாவது உலகப் போரின்போது ஜப்பான், பிலிப்பைன்ஸைக் கைப்பற்றிக் கொண்டமை.
- ஐக்கிய அமெரிக்க படைத் தளபதி மெக் ஆதர் அவர்களால், பிலிப்பைன்ஸ் ஜப்பானிடமிருந்து மீட்கப்பட்டமை.
- 1946 ஜுலை 4 ஆம் திகதி பிலிப்பைன்ஸ் சுதந்திரம் பெற்று குடியரசொன்றானமை.

**தாய்லாந்து**

- மொங்கட், சுலாலோங்கோரன் எனும் ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நவீனமயமாக்கல் நடவடிக்கைகள்
- 19ஆம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியில் பிரான்சினதும் பிரித்தானியரதும் செல்வாக்கிற்குட் படல்.
- இரண்டாம் உலக யுத்தத்தின்போது ஜப்பானால் தாய்லாந்து கைப்பற்றப்படல்.
- யுத்தத்தின் பின்னர் தாய்லாந்து சுதந்திர அரசொன்றாதல்.
- 1946 இல் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடாதல்.
- அயலிலுள்ள சீனாவும் வியட்னாமும் கம்யூனிஸ நாடுகளானபடியால் தாய்லாந்து ஐக்கிய அமெரிக்காவைச் சார்ந்து நின்றமை.

**மலேசியா**

- மலாய், சீன, இந்திய மக்களைக் கொண்ட நாடு. பெரும்பான்மையானோர் முஸ்லிம்களாவர்.
- மலேசியாவில் வெள்ளீயமும் (டின்னும்) இறப்பரும் பெருமளவில் கிடைப்பதால் ஆங்கிலேயரின் வர்த்தக நடவடிக்கைகள் இங்கு பரந்துபட்டுள்ளன.
- இரண்டாம் உலகப் போரின்போது மலேசியாவை ஜப்பான் ஆக்கிரமித்துக் கொண்டாலும் யுத்தத்தின் முடிவில் மீண்டும் பிரித்தானியர் வசமானது.
- 1946 இல் மலேசியாவையும் சிங்கப்பூரையும் வேறுபடுத்தி அவற்றிற்கு சுயாட்சி வழங்கப்பட்டமை.
- 1948 இல் கம்யூனிஸ்களான சீனர்கள், பிரித்தானியாவுக்கு எதிராகப் போராட்டத்தை மேற் கொண்டமை.
- துங்கு அப்துல் ரஹ்மான் மலேசியாவில் பொதுத் தேர்தலில் வென்று 1957 இல் அந்நாட்டின் பிரதமராதல்.
- சிங்கப்பூருக்கு புதிய அரசியல் யாப்பு முறை ஒன்றை அறிமுகப்படுத்தல்.
- அவ்வரசியல் யாப்பின்படி நடத்தப்பட்ட தேர்தலில் லீவான் யூ பிரதமர் பதவிக்கு வரல்.

- மலேசியாவைப் பிரித்து வேறுபடுத்தப்பட்டதை விரும்பாத துங்கு அப்துல் ரஹ்மான் பிரித்தானிய குடியேற்றப் பிரதேசங்களை ஒன்றிணைத்துக் கூட்டமைப்பொன்றை அமைக்குமாறு ஆலோசனை தெரிவித்தல்.
- அதற்கமைய பிரித்தானியரின் ஆதிக்கத்கத்தின் கீழிருந்த மலேசியா, சிங்கப்பூர், வடக்கு போர்னியோ, சரவாக் பிரதேசங்களை ஒன்றிணைத்து 1963 இல் மலேசியக் கூட்டமைப்பை உருவாக்கியமை.
- 1965 இல் சிங்கப்பூர் சுதந்திர நாடானமை.



( Source: https://www.wsj.com)


## இந்தோனேஷியா

- ஒல்லாந்தரின் குடியேற்றமாயிருந்தமை.
- இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜப்பானின் உதவியுடன் சுதந்திரத்தைப் பிரகடனஞ் செய்து, ஜனாதிபதி ஒருவரை நியமித்துக் கொண்டமை.
- சுகர்ணோ ஜனாதிபதியானமை.
- அப்பிரதேசத்தை மீளவும் தமதாக்கிக்கொள்ள ஒல்லாந்தர் முயற்சித்தமை.
- இந்தோனேஷிய மக்கள் அதை எதிர்த்தமை.
- பிரச்சினையை சமாதானப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டமை. அது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடத்த ஐக்கிய நாடுகள் சபை குழுவொன்றை நியமித்தல்.
- இந்தோனேஷியாவிற்கு ஒல்லாந்த முடியின் கீழ் ஆணிலப்பத (டொமினியன்) அந்தஸ்தை வழங்க ஒல்லாந்தர் தயாராக இருந்தாலும் இந்தோனேஷியா அதனை ஏற்றுக்கொள்ளாமை.
- 1949 டிசம்பர் 27 ஆம் திகதி இந்தோனேஷியா தமது சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- இந்தோனேஷியக் குடியரசை நிறுவிக் கொண்டமை.
- நியூகினியாவின் மேற்குப் பிரதேசத்தை ஒல்லாந்தரின் கீழ் வைத்துக் கொண்டாலும் இரு தசாப்தக் காலம் ஒல்லாந்தருக்கும் இந்தோனேஷியாவுக்கும் இடையே அபிப்பிராய பேதங்களும் மோதல்களும் ஏற்பட்டமை.
- 1963 இல் ஒல்லாந்தர் அப்பிரதேசத்தை இந்தோனேஷியாவிடம் ஒப்படைத்தல்.

## ஆபிரிக்கா

- உலகின் பரப்பளவில் இரண்டாவது இடத்தை ஆபிரிக்கக் கண்டம் வகிக்கிறது.
- வைரம், தங்கம், செம்பு, இரும்பு போன்ற கனிய வளங்கள் மிக்க கண்டமாகும்.

- 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே போர்த்துக்கேயரால் ஆபிரிக்காவின் பல்வேறு பிரதேசங்கள் கைப்பற்றிக் கொள்ளப்பட்டன.
- பின்னர் படிப்படியாக ஐரோப்பியர் குடியேற்றங்களை அமைத்துக் கொள்ளும் போட்டித் தளமாக ஆபிரிக்காவை ஆக்கிக் கொண்டமை.
- போர்த்துக்கேயர், ஸ்பானியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், பிரான்சியர், பெல்ஜியத்தவர், இத்தாலியர், ஜேர்மனியர் ஆகியோரால் ஆபிரிக்கப் பிரதேசங்கள் ஆக்கிரமிக்கப்பட்டமை.



*பிறந்த மண்ணில் அடிமைகளாக்கப்பட்ட அமெரிக்கர்*
*(Source: http://exhibitions.nypl.org/africanaage/essay-colonization-of-africa.html)*

**வட ஆபிரிக்கா**

**டியூனீசியா**

- பிரான்சின் கீழ்ப்பட்ட பிரதேசம்
- 1881 இல் இவ்விராச்சியம் பிரான்சின் பாதுகாப்பைப்பெற்ற பிரதேசமானமை.
- 1922 இல் டியூனீசியாவுக்கு ஆலோசனைச் சபை வடிவிலான அரசியல் அந்தஸ்து கிடைக்கப் பெற்றமை.
- சுதேச மக்கள் அதற்கு எதிராக ஹபீப் போர்கிபாவின் தலைமையில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டமை.
- ஆர்ப்பாட்டங்கள் உக்கிரமடைந்துபோது, பிரான்ஸ் போர்கிபாவை நாடுகடத்தி, அவரது கட்சிக்குத் தடைவிதித்தமை.
- இரண்டாவது உலகப் போரின் பின்னர் 1952 இல் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டால் இருதரப்புப் பேச்சுவார்த்தை இடம்பெற்றமை.
- 1954 இல் டியூனிசிய தேசியவாதிகளுக்கும் பிரான்சிய பிரதமர் பியரே மென்டெஸ் பிரான்சுக்கும் இடையே பேச்சுவார்த்தை இடம்பெற்றது.
- 1955 இல் டியூனீசியாவுக்கு சுயாட்சி வழங்கப்பட்டமை.
- 1956 இல் டியூனீசியாவுக்குச் சுதந்திரம் வழங்கப்பட்ட போதிலும் பிசார்டே எனும் கடற்படைத் தளத்தைத் தொடர்ந்தும் பிரான்ஸ் வைத்திருந்தமை.
- டியூனிசியாவின் புதிய ஜனாதிபதி ஹபீப் போர்கிபா, அக்கடற்படைத் தளத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட போதிலும் அது கைகூடிவரவில்லை.
- இதற்காக போர்கிபா ஆயுதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டமை.
- தமது நாட்டுக்கு நட்டஈடு தரப்பட்டால் அங்கிருந்து விலகிச் செல்வதற்கு பிரான்ஸ் இணங்கியமை.
- 1963 இல் பிரான்ஸிடமிருந்து பியர்டே பிரதேசத்தை விடுவித்துக்கொண்டதன் மூலம் டியூனீசியா தமது சுதந்திரத்தை உறுதிப்படுத்திக் கொண்டமை.



*வி.வி. பேர்கிபாவின் தலைமையின்கீழ் டியூசீனியாவின் சுதந்திரம்*
***(Source: https://en.wikipedia.org/wiki/Habib_Bourguiba)***

## மொரொக்கோ

- பிரித்தானியாவுடனும் ஜேர்மனியுடனும் மேற்கொண்ட பெரும் போராட்டத்தின் பின்னர் 1912 இல் பிரான்ஸ் மொராக்கோவைத் தமது பாதுகாப்புப் பிரதேசமாக்கிக் கொண்டமை.
- மொரொக்கோவின் வட பிரதேசத்தில் ஒடுங்கிய நிலப்பரப்பொன்று ஸ்பானியாவுக்குரியதாயிருத்தல்.
- இரண்டாம் உலகப் போரின் முடிவில் வட ஆபிரிக்கா எங்கும் தேசாபிமான உணர்வு எழுச்சியுற்றமை.
- இஸ்டிக்லல் எனும் தேசப்பற்றாளர் கட்சிக்கு சுல்தானின் (மன்னரின்) பூரண ஆதரவு கிடைக்கப் பெற்றமை.
- 1952 இல் ஏற்பட்ட வேலைநிறுத்தமும் அரசியல் எதிர்ப்பும்.
- பிரான்சிய ஆட்சியாளர்கள் அடக்குமுறை ஆட்சியைச் சற்றுத் தளர்த்தியதோடு, தேசிய எழுச்சிக்கு சார்பாகச் செயற்பட்ட மன்னனை நாடுகடத்தல்.
- பிரான்சிய ஆட்சியாளர்கள் பலவீனமான நபர் ஒருவரை (மன்னரின் மாமன்மாருள் ஒருவரை) ஆட்சியாளராக்கியமை.
- நாட்டில் பிரான்சுக்கு எதிரான உணர்வு பலமடைந்தமை.
- ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டின் பின் பதவியிலிருந்து அகற்றப்பட்ட பென்யூசுப் எனும் மன்னரை 1953 இல் மீண்டும் அதிகாரத்தில் அமர்த்துதல்.
- 1956 இல் பிரான்ஸ், மொரொக்கோவுக்குச் சுதந்திரம் வழங்கியமை.
- ஸ்பானிய ஆட்சியாளரான ஜெனரல் பிராங்கோவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, ஸ்பானியா வசமிருந்த மொரொக்கோ பிரதேசங்களுக்கும் சுதந்திரம் கிடைத்தமை.

## அல்ஜீரியா

- 1870-1914 வரை பிரான்சியப் பிரஜைகள் பெரும் தொகையினர் அல்ஜீரியாவில் குடியேறியமை.
- பிரான்ஸ் வசமிருந்த அல்ஜீரிய சுதேச முஸ்லிம்களுக்கு ஓரளவுக்கு சுயாதீன அதிகாரங்களை வழங்கியமை.
- இதனால் திருப்தியடையாத அவர்கள், 1954 இல் பிரான்சுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தமை.
- இதனால் ஆட்சி நடவடிக்கைகள் செயலிழந்து சென்றமை.
- அல்ஜீரியாவில் வாழ்ந்த பிரான்சியர்கள் சுதேசிகளுக்கு சுதந்திரம் வழங்குவதை எதிர்த்தமை.
- பிரான்சிய ஆட்சிக்கு எதிராக பரந்துபட்ட தேசிய இயக்கம் ஒன்று உருவானமை.
- கிளர்ச்சியை அடக்குவதற்காக பிரான்சிய ஆட்சியாளர் பலமிக்க இராணுப் படையை நிலை கொள்ளச் செய்தமை.
- அல்ஜீரியாவுக்கு சுதந்திரம் வழங்கப்பட்டுவிடும் என அஞ்சிய பிரான்சிய குடியேற்றவாசிகளும் பிரான்சிய இராணுவத்தின் ஒரு பகுதியினரும் பிரான்சிய ஆட்சியாளருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தமை.
- இதனால் அல்ஜீரியாவுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ள முடியாமற்போனது.
- 1958 இல் பிரதமர் பதவிக்கு வந்த சார்ள்ஸ் டிகோல், பிரான்சியருக்கும் அல்ஜீரியர்களுக்கும் சமத்துவ அந்தஸ்தை வழங்க முன்வந்தமை.
- 1957 இல் அல்ஜீரியா பிரான்சிய ஆட்சியிலிருந்து விடுதலைபெற்று குடியரசொன்றானது.
- பொன்பெல்லா அதன் ஜனாதிபதியானார்.

### மேற்கு ஆபிரிக்கா

- 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மன் நாடுகளால் மேற்கு ஆபிரிக்கா பங்கீடு செய்து கொள்ளப்பட்டமை.

### கானா

- கோல்ட் கோட்ஸ் (தங்கக் கடற்கரை) எனும் நாடே இன்று கானா எனப்படுகின்றது.
- இப்பிரதேசம் பிரித்தானியக் குடியேற்றமாதல்.
- 1951 ஆம் ஆண்டளவில் இப்பிரதேசத்திற்கு ஓரளவு சுயாட்சி முறை வழங்கப்பட்டது.
- இதனால் திருப்தியுறாத தேசியவாதிகள் குவாமி என் குருமாவின் தலைமையில் எழுச்சியடைதல்.
- 1957 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெறல்.
- 1957 இல் பொதுநலவாய அமைப்பில் அங்கத்துவம்பெறல்.



*குவாமி என் குருமா*
*(source: https://en.wikipedia.org)*

### நைஜீரியா

- 1960 இல் பிரித்தானிய ஆட்சியாளரிடமிருந்து சுதந்திரம் பெறல்.
- 1961 இல் சியாராலியோன், 1975 இல் நமீபியா ஆகியன சுதந்திரம் பெறல்.

### மத்திய ஆபிரிக்கா

- 1953 இல் பிரித்தானியாவால் தென் ரொடீசியா, வட ரொடீசியா, நியாஸிலாந்து எனும் மூன்று பிரதேசங்களை இணைத்து ஆபிரிக்க ஒன்றியத்தை உருவாக்குதல்.
- இப்பிரதேசம் வெள்ளையரால் ஆளப்பட்டமை.




(source: https://www.bing.com)

- அரசியல் அதிகாரத்தை இழந்த சுதேசிகள் அதனை எதிர்த்துப் பிரித்தானிய ஆட்சியாளருக்கு எதிராக கலாநிதி ஹெஸ்டில்ஸ் பாண்டாவின் தலைமையில் கிளர்ச்சியிலீடுபட்டமை.
- இப்பிரதேசங்களுக்குச் சுயாட்சியை வழங்கும்படி பிரித்தானியரை நிர்ப்பந்தித்தமை.
- 1964 ல் நியாஸிலாந்து சுதந்திரமடைந்தமை.
- பின்னர் அந்நாடு மலாவி என அழைக்கப்பட்டமை.
- கனிய வளங்கள் நிரம்பப்பெற்ற வட ரொடீசியாவுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதை வெள்ளையின குடியேற்றவாசிகள் எதிர்த்தமை.
- கென்னத் கௌண்டாவின் தலைமையில் தேசிய வாதிகள் சுதந்திரப் போராட்டத்தை மேற்கொள்ளல்.
- 1964 இல் வட ரொடீசியா சுதந்திரம் பெற்று, செம்பியா எனும் நாடானமை.
- 1953 இல் உருவாக்கப்பட்ட ஆபிரிக்க ஒன்றியம் வீழ்ச்சியுற்றதோடு தென் ரொடீசியா தனிப்பட்டுப் போனமை.
- பிரித்தானியர்கள் அக்குடியேற்றத்திற்கு ஓரளவு சுயாட்சியை வழங்கியமை.
- தென் ரொடீசியாவில் வாழ்ந்த பெரும்பான்மைக் கறுப்பினத் தினருக்கு அரசியல் அதிகாரம் அற்றுப் போனமை.
- பிரித்தானிய அரசாங்கம் அவ்விராச்சியத்திற்குச் சுதந்திரம் வழங்க முன்வந்தாலும் சிறுபான்மை வெள்ளையர்கள் அதனை ஆட்சேபித்தமை.
- இயன் ஸ்மித் என்ற வெள்ளையர் பிரதமராதல்.
- இயன் ஸ்மித் தன்னிச்சையாக 1965 இல் சுதந்திரப் பிரகடனத்தை மேற்கொண்டமை.
- பிரித்தானியா உட்பட ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய நாடுகள் அதற்கு எதிர்ப்பினைத் தெரிவித்து பொருளாதாரத் தடை விதித்தமை.
- சுதேசிகளின் எதிர்ப்பும் அவர்களிடையே பல்வேறு இயக்கங்கள் உருவானமையும் கெரில்லாப் போராட்டம் ஆரம்பமானமையும்.
- 1980 இல் சுதந்திர சிம்பாப்வே அரசு உருவானமை.

### கொங்கோ

- கொங்கோ பெல்ஜியத்தின் குடியேற்ற மாயிருந்தது.
- 1908 இல் பெல்ஜியத்தின் லியோபோல்ட் மன்னர் கொங்கோவை ஆள்வதற்கரிய அதிகாரத்தை பெல்ஜியப் பாராளுமன்றம் வழங்கியது.
- கொங்கோ சுதேசிகளுக்கு சுய ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொடுக்க பெல்ஜியம் விரும்பாமை.
- 1960 இல் பெல்ஜியம் கொங்கோவுக்குச் சுதந்திரம் வழங்கியமை.
- பெட்றிஸ் லுமும்பா பிரதமரானார்.
- நாட்டினுள் பிரச்சினைகளும் மோதல்களும் உருவானமை. (கோத்திர மோதல், இராணுவ சதி) பெட்றிஸ் லுமும்பா கொலை செய்யப்பட்டமை.
- ஐக்கிய நாடுகள் சபை தலையீடு செய்தமை.

## கிழக்கு ஆபிரிக்கா

### கென்யா

- 1885 இலிருந்து வெள்ளையர்கள் ஐரோப்பாவை ஆண்டமை.
- 1895 இல் பிரித்தானியா, கென்யாவை தனது பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தியமை. அது கிழக்கு ஆபிரிக்கா எனப்பட்டமை.
- பிரித்தானியர்கள் வெள்ளை இன குடியேறிகளின் எதிர்ப்பினால் கென்யாவின் சுதேசிகளுக்குச் சதந்திரம் கிட்டாதிருந்தமை.
- சுதேச மக்கள் சுதந்திரம் கோரி ஜோமோ கென்யாட்டாவின் தலைமையில் ‘மௌமௌ’ எனும் இரகசிய இயக்கத்தைத் தோற்றுவித்துக் கொண்டமை.

- பிரித்தானியா ஜோமோ கென்யாட்டாவை சிறைப்படுத்தியமை.
- கென்யாவின் ஆபிரிக்கா தேசிய காங்கிரஸ் மூலம் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தால் அதற்குச் சுதந்திரம் கிட்டியமை.
- பிரித்தானியா 1963 இல் பிரித்தானியா கென்யாவுக்குச் சுதந்திரம் வழங்கியது. சிறையிலிருந்து மீண்ட ஜோமோ கென்யாட்டா, அந்நாட்டின் முதலாவது பிரதமரானமை.

### தன்சானியா

- கிழக்கு ஆபிரிக்கா எனப்பட்ட இப்பிரதேசம் 1890 களில் ஜேர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்டது.
- முதலாவது உலகப் போரின் பின்னர் இப்பிரதேசம் (தங்கனீகா) பிரித்தானியரின் பொறுப்பில் விடப்பட்டது.
- ஜூலியஸ் நைரேரேயின் தலைமையில் உருவாக்கிக்கொள்ளப்பட்ட தங்கனீகா, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மூலம் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்தமை.
- 1961 இல் பிரித்தானியாவிடமிருந்து அந்நாடு சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டமை.
- நீக்ரோக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட சன்சிபார் அரசு, 19ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலம்வரை அராபியர்களால் ஆளப்பட்டு வந்தது.
- பிரித்தானியர்களால் அப்பிரதேசம் கைப்பற்றிக் கொள்ளப்பட்டதுடன் அராபியரின் ஆதிக்கம் முற்றுப் பெற்றது.
- 1963 இல் சன்சிபாருக்கு பிரித்தானியா சுதந்திரம் வழங்கியமை.
- சிறுபான்மை அராபியர்களால் பெரும்பான்மையின நீக்ரோக்கள் ஆளப்படுகின்ற ஆட்சிமுறை ஒன்று அமையப்பெற்றது.
- சதிப்புரட்சி மூலம் அரசைக் கைப்பற்றிக் கொண்ட நீக்ரோ இனத்தவர், சுல்தானை (அரசனை) பதவியிலிருந்து இறக்கி, ஒபீட்கருமேயின் தலைமையில் புரட்சிகரமான ஆட்சியை உருவாக்கிக் கொண்டமை.
- அவர் ஜூலியஸ் நைரேரோ உடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளல்.
- அதன் பலனாக 1964 இல் தங்கனீகா, சன்சிபார் அரசுகள் ஒன்றிணைக் கப்பட்டமை.
- புதிய நாடு தன்சானியா எனும் பெயரைப் பெற்றமை.

### சோமாலியா

- சோமாலிலாந்தின் ஒருபகுதி பிரிததானியாவினதும் ஏனைய பகுதி இத்தாலியினதும் குடியேற்றமாக இருந்தமை.
- இரண்டாம் உலகப் போரின்போது பிரித்தானியா சோமாலிலாந்தைத் தனதாக்கிக் கொண்டமை.
- யுத்தத்தின் பின்னர் பிரித்தானியா, அப்பிரதேசத்தை மீளவும் இத்தாலியிடம் ஒப்படைத்தமை.
- 1960 ஜூலை 1 ஆந் திகதி இத்தாலியிடமிருந்து சோமாலிலாந்து சுதந்திரம் பெற்றமை.
- பிரித்தானிய சோமாலிலாந்தைத் தொடர்ந்தும் அது தமது பாதுகாப்புப் பிரதேசமாக கொண்டிருந்தமை.

### பிரித்தானியா

- பிரித்தானிய - சோமாலிலாந்தின் தேசாபிமானிகள், அதனைச் சுதந்திர சோமாலிலாந்துடன் ஒன்றிணைப்பதற்கு விரும்பியமை.
- பொதுத் தேர்தலின் பின்னர் சோமாலிலாந்தின் இணைப்புக்குப் பிரித்தானியா இணங்கியமை.
- சோமாலிலாந்துக்குச் சுதந்திரம் கிட்டியமை.
- ஐக்கிய சோமாலிலாந்து, சோமாலியா எனப் பெயரிடப்பட்டமை.

### மடகஸ்கார்

- பிரான்சின் குடியேற்றமாகத் திகழ்ந்தமை.
- இரண்டாம் உலகப் போரின்போது போர் நடவடிக்கைகளின் முக்கியத்துவம் கருதிப் பிரித்தானியாவின் கீழ் மடகஸ்கார் இணைத்துக் கொள்ளப்பட்டது.
- பின்னர் பிரித்தானியா அப்பிரதேசத்தை மீளவும் பிரான்சிடம் ஒப்படைத்தமை.

- சுதந்திரம் கோரி தேசியத் தலைவர்கள் மேற்கொண்ட போராட்டத்தைப் பிரான்சியர் கடுமையாக அடக்கி ஒடுக்கியமை.
- நடுநிலையான கொள்கையினையுடைய தேசியத் தலைவரான பிலிபர்ட் இக்சிரநாதாவால் உருவாக்கப்பட்ட அரசியல் கட்சி, தேர்தலில் பெருந்தொகையான ஆசனங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றமை.
- 1960 ஜூன் மாதத்தில் பிரான்ஸ், மடகஸ்காருக்குச் சுதந்திரம் வழங்கியமை.
- 1960 இல் இக்சிரநாதா ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டமை.
- மடகாஸ்கார், மலகாசிக் குடியரசானமை.



***https://www.joburgpost.co.za/2017/02/17/the-greatest-african-leaders-jomo-kenyatta/***

***பிலிபர்ட் இக்சிரநாதா***



***இரண்டாம் உலகப் போரின்போது மடகஸ்கார்***

*https://en.wikipedia.org/wiki/Battle_of_Madagascar*

## மதிப்பீடு

**கீழுள்ள வினாக்களில் A, B, C, D என நான்கு கூற்றுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று அல்லது சில சரியானவையாகும். அக் கூற்றுக்களைத் தெரிவு செய்க. A, B சரியாயின் (1) எனவும், B, C சரியாயின் (2) எனவும், C, D சரியாயின் (3) எனவும் A, D சரியாயின் (4) எனவும் ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கூற்றுக்கள் சரியாயின் (5) எனவும் அடைப்பினுள் எழுதுக.**

01. ஆசியாவில் குடியேற்றவாதம் தொடர்பாகக் கீழ்வரும் கூற்றுக்களுள் எது சரியானதாகும்?
    - A பிலிப்பைன்ஸ், கீழைத்தேய பிரித்தானிய பேரரசின் பிரதானமான மத்திய நிலையமாகும்.
    - B டச்சு கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனியின் கீழைத்தேய தலைமையகம் அமைந்திருந்த பத்தேவியாவாகும்.
    - C கர்நாடக யுத்தங்களில் அடையப் பெற்ற வெற்றி இந்தியாவில் ஆங்கிலேயரின் ஆட்சியை ஏற்படுத்துவதில் தீர்க்கமான காரணியாயிருந்தது.
    - D 19ஆம் நூற்றாண்டில் பர்மா, பிரான்சிய ஆதிபத்தியத்திற்கு உட்பட்டது.

    (...........)

02. கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களில் எது/எவை சரியானவையாகும்?
    - A 1946 ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ்சுக்கு சுதந்திரம் கிடைத்ததோடு அந்நாட்டு மக்கள் குடியாட்சி முறையிலான யாப்பை விரும்பினர்.
    - B 1957 இல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற துங்கு அப்துல் ரஹ்மான் மலேசியாவின் பிரதமர் பதவிக்கு வந்தார்.
    - C பிரான்சியரால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்த இந்தோசீன பிரதேசத்தை சுதந்திரம் அடையச் செய்வதற்கு ஹோசி மின் அவர்களின் தலைமையில் தேசிய இயக்கம் ஒன்று ஆரம்பிக்கப் பட்டது.
    - D இரண்டாவது உலகப் போரின்போது, ஆங்கிலேயரால் தாய்லாந்து கைப்பற்றப்பட்டது.

    (...........)

03. இந்திய தேசிய காங்கிரசின் தீவிரவாதத் தலைவர்கள் யாவர்?
    - A பால கங்காதர திலகர்
    - B கோபால கிருஷ்ண கோகலே
    - C சுரேந்திரநாத் பாணர்ஜி
    - D பிபின் சந்திரபோல்

    (...........)

04. இந்திய தேசிய காங்கிரசில் காணப்பட்ட பலவீனமான பிரதான அம்சம் எது?
    1. இந்திய தேசிய காங்கிரசில் வைத்தியர்கள், பொறியியலாளர்கள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் போன்ற அறிஞர்கள் அங்கத்துவம் பெறாமை.
    2. இந்திய தேசிய காங்கிரஸால் வருடாந்த மகாநாடுகளை பிரதான நகரங்களில் நடத்தாமை.
    3. இந்தியாவின் சகல பிரதேசங்களில் இருந்தும் பிரதிநிதிகளை அதில் சேர்த்துக் கொள்ளாமை.
    4. இந்திய தேசிய காங்கிரஸில் பொதுமக்களின் பிரதிநிதிகள் இடம்பெறாமையால், அதன் தலைவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையேயான தொடர்புகள் விலகிச் சென்றமை.
    5. நாட்டில் பொதுமக்களின் அபிப்பிராயத்தை நிறுவனமயப்படுத்தாமை.

    (...........)

05. இந்திய தேசியப் போராட்டத்தின் தந்தையாகக் கருதப்படுபவர் யார்?
    1. மகாத்மா காந்தி அவர்கள்
    2. மோதிலால் நேரு அவர்கள்
    3. எஸ்.எஸ். தாஸ் அவர்கள்
    4. சுரேந்திரநாத் பானர்ஜி அவர்கள்
    5. சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள்

    (...........)

06. A நிரலுடன் B நிரலைப் பொருத்தும்போது பெறப்படும் சரியான விடையைத் தெரிவு செய்க.

| A | | B |
|---|---|---|
| 1. ஹபீப் போர்கியா | A | மொறொக்கோ |
| 2. பென் யூசுப் | B | கானா |
| 3. பென்பெல்லா | C | டியூனீசியா |
| 4. குவாமே நிக்ரூமா | D | கொங்கோ |
| 5. பெட்றிஸ் லுமும்பா | E | அல்ஜீரியா |

1. AEBDC 2. CAEBD 3. EBDCA 4. BDCAE 5. DCAEB

(...........)

07.

| A | | B |
|---|---|---|
| 1. தன்சானியா | A | ஜோமோ கென்யாட்டா |
| 2. செம்பியா | B | ஜேஸப் மொபுடு |
| 3. உகண்டா | C | கெனத் கவுண்டா |
| 4. கென்யா | D | ஜூலியஸ் நைரேரே |
| 5. கொங்கோ | E | மில்டன் ஒபேடோ |

1. CEABD 2. EABDC 3. ABDCE 4. BDCEA 5. DCEAB

(...........)

08.

| A | | B |
|---|---|---|
| 1. ஹேஸ்டிங்ஸ் பண்டா | A | சுதந்திர மடகஸ்கார் நாட்டின் ஜனாதிபதியானார். |
| 2. சுபாஸ் சந்திரபோஸ் | B | 1959 இல் ரொடீசியாவில் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தவர். |
| 3. திசிர நாதா | C | பர்மிய தேசியவாத இயக்கத்தின் தலைமைத்துவத்தை ஏற்றுச் செயற்பட்டவர். |
| 4. ஷியாங்-கை-ஷேக் | D | 1925 இல் சுன்-யாத்-சென் அவர்களுக்குப் பிறகு சீனாவின் தலைமைப் பதவிக்கு வந்தவர். |
| 5. அவுங் சாங் | E | பிரித்தானியரின் சந்தேகத்திற்கு உட்பட்டமையால், இந்தியாவை விட்டுத் தப்பிச் சென்று விமான விபத்தொன்றில் காலமானவர். |

1. EADCB 2. ADCBE 3. BEADC 4. DCBEA 5. CBEAD

(...........)

09. கீழ்வரும் வினாக்களுக்கு ஒரு தலைப்பின் கீழ் பல விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றுள் தலைப்பிற்குப் பொருந்தாத விடயத்தைத் தெரிவு செய்க.

1. 1955 இல் பிரான்சினால் டியூனீஷியாவின் சுதந்திரம் பிரகடனப்படுத்தப்பட்டது.
2. முதலாவது உலக மகா யுத்தத்தின் பின்னர் ஜேர்மனியின் கீழிருந்த டோகோ, கமரூன் ஆகிய குடியற்றங்களை அது இழந்தது.
3. 1965 இல் இயன் சிமித் ஒரு தலைப்பட்சமாக ரொடீஷியாவின் சுதந்திரத்தைப் பிரகடனஞ் செய்தார்.
4. அலி ஜின்னாவின் தலைமைத்துவத்தின் கீழ் 1947 ஆகஸ்ட் 14 ஆம் திகதி பாகிஸ்தான் உதயமானது.
5. தேசிய காங்கிரஸின் ஆதரவுடன் 1920 இல் மோதிலால் நேரு, டீ.ஆர்.தாஸ் போன்றோர் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தனர்.

(...........)

10. ஆசியாவின் குடியேற்றமயமாதல்
    1. 1946 இல் சுதந்திரம் அடைந்த பின்னர் ஜனாதிபதி ரமோன் மெக்சேசே அவர்கள் பிலிப்பைன்சில் பலமான ஆட்சியைக் கட்டியெழுப்பினார்.
    2. 1957 இல் லீ குவான் யு மலேசியாவின் பிரதமரானார்.
    3. ஊ-நு அவர்கள் சுதந்திர பர்மிய குடியரசின் முதலாவது பிரதமர் பதவியை அடைந்ததோடு, அவருக்கு கம்யூனிச வாதிகளினதும் பயங்கரவாதிகளினதும் அச்சுறுத்தல்களுக்கு முகங் கொடுக்க நேர்ந்தது.
    4. பிரான்சிய ஆட்சியின் கீழ் செயற்பட்ட பொம்மை ஆட்சியை வீழ்த்திய ஹோ-சி-மின் அவர்கள் வியட்னாமில் சுதந்திரக் குடியரசு ஒன்றை உருவாக்கினார்.
    5. தேசிய உணர்வைக் கட்டியெழுப்புவதற்காக ‘லோகமான்ய’ பால கங்காதர திலகர் ‘கேசரி’ எனும் பெயரில் பத்திரிகை ஒன்றை வெளியிட்டார்.

(...........)

## பகுதி 2

1. 1. ஆபிரிக்காவில் குடியேற்றங்களை அமைத்துக்கொண்ட ஐரோப்பிய நாடுகள் மூன்றைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
    2. அந்நாட்டினரால் ஆபிரிக்காவில் உருவாக்கிக்கொள்ளப்பட்ட குடியற்ற நாடுகள் ஒவ்வான்றை ஒழுங்கில் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)
    3. ஐரோப்பியரிடமிருந்து சுதந்திரத்தை அடைந்துகொள்வதற்காக ஆபிரிக்கக் குடியேற்றங்ள இரண்டினால் மேற்கொள்ளப்பட்ட போராட்ட இயக்கங்களைப் பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

2. இந்திய சுதந்திரப் போராட்ட இயக்கத்தில் மகாத்மா காந்தி அடிகளாரின் பங்களிப்பை அவரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்வரும் நடவடிக்கைகளின் ஊடாகக் கலந்துரையாடுக.
    1. ஒத்துழையாமை இயக்கம்
    2. சமூக சட்டங்களை மீறும் செயற்பாடு
    3. ‘இந்தியாவிலிருந்து வெளியேறு’ இயக்கம் (14 புள்ளிகள்)

3. ஐரோப்பியரால் ஆபிரிக்காவில் அமைத்துக்கொள்ளப்பட்ட குடியேற்றங்களை ஆபிரிக்கப் படம் ஒன்றில் குறித்துக் காட்டுக.

4. ஆசியப்படம் ஒன்றில், ஐரோப்பியரால் அமைத்துக்கொள்ளப்பட்ட குடியேற்றங்களைக் குறித்துப் பெயரிடுக.

# 11. உலகம் இரு அணிகளாகப் பிரிதல்

## அறிமுகம்

இரண்டாம் உலகப் போரின் பின்னர் இதுவரை ஐரோப்பாவில் பலம் பெற்றிருந்த பிரித்தானியா, பிரான்ஸ் நாடுகளைப் பின் தள்ளிவிட்டு உருவான ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா எனும் புதிய வல்லரசுககளை அடிப்படையாகக் கொண்டு உலகம் இரண்டு அதிகார அணிகளாகப் பிரிவுற்றது. ஐக்கிய அமெரிக்கா ஜனநாயக அரசியல் கொள்கைகளையும் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையையும் கடைப்பிடித்ததுடன் பிரித்தானியா, பிரான்ஸ் முதலிய நாடுகள் அவ்வணியில் இணைந்தமையால் ஐக்கிய அமெரிக்கா தலைமையில் முதலாளித்துவ அணி உருவானது. சோவியத் ரஷ்யா சமவுடைமைப் பொருளதாரக் கொள்கையைப் பின்பற்றியதுடன் போலாந்து, கிழக்கு ஜேர்மனி, செக்கோஸ்லாவாக்கியா, யூகோஸ்லேவியா முதலிய நாடுகள் சோவியத் ரஷ்யாவின் தலைமையை ஏற்றமையால் அதன் தலைமையில் சோவியத் அணி உருவானது. அவற்றிடையே அக்காலப் பகுதியில் முதலாளித்துவ அணியிலோ சோசலிச, கொமியூனிச அணியிலோ சேராத நாடுகள் ஒன்றிணைந்து அணிசாரா நாடுகளின் அமைப்பு(கூட்டுச்சேரா நாடுகளின் மகாநாடு) எனும் பெயரில் அமைப்பொன்றை ஏற்படுத்திக் கெணர்டன.

முதலாளித்துவ அணி நேட்டோ பாதுகாப்புப் படையையும், சோசலிச அணி வோற்சோ ஒப்பந்தம் எனும் பாதுகாப்புப் படையையும் உருவாக்கித் தத்தமது அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட்டன. இருபதாம் நூற்றாண்டின் இறுதி அரைப்பகுதியின் ஆரம்பம் முதல் உலகில் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்காக இவ்விரு முதலாளித்துவ. கொமியூனிச அதிகாரப் போட்டியொன்று ஏற்பட்டதுடன் அது ‘பனிப்போர்’ எனப்பட்டது.

மூன்று தசாப்த காலமாக ஆயுதமேந்தாத கொள்கைப் போராட்டமானது 1980 தசாப்தத்தின் இறுதியில் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியுடன் முடிவுற்றதுடன் ஐக்கிய அமெரமிக்கா உலகின் ஏக வல்லரசு நிலையை அடைந்தது.

உலக அதிகார அணிகளிடையிலான பனிப்போர் பற்றியும் அதன் முடிவில் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி பற்றியும் அணிசாரா நாடுகளின் அமைப்புப் பற்றியும் கற்பது இவ்வலகின் நோக்கமாகும்.

**தேர்ச்சி** : • இன்றைய உலகின் போக்கு மற்றும் அதன் செல்வாக்கு பற்றிப் புரிந்துணர்வுடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 11.1 :** இன்றைய உலகின் நடைமுறை அரசியல் அதிகாரம் பற்றி விளக்குவார்.

**பாடவேளைகள்** : 30

**கற்றற்பேறுகள்** :
- உலகம் அதிகார அணிகளிரண்டாகப் பிரிந்து சென்ற விதத்தை விளக்குவார்.
- சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சியுடன் ஏற்பட்ட நிலையை விளக்குவார்.
- உலக அதிகார அணிகளுக்குரிய நாடுகளை உகலப்படத்தில் குறிப்பார்.

பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

**பனிப்போர்**

- கெடுபிடிப்போர், ஆயுதமற்ற போர் எனவும் குறிப்பிடப்படும்.
- இரண்டாம் உலகப்போரின் பின்னர் உலகம் இரு அணிகளாகப் பிரிந்து ஆயுதமேந்தாது தமது அணியை வெற்றியீட்டுவதற்காகப் பல்வேறு தந்திரங்களையும் கையாண்டு மேற்கொண்ட போராட்டம் அல்லது கிளர்ச்சியே பனிப்போர் எனப்படும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டால் ஆயுதப் போராட்டம் தவிர்க்கப்பட்டமை.
- அதிகார அணிகள் இரண்டிடையேயும் சமாதானமோ போரோ ஏற்படாத நிலைமை.
- முதலாளித்துவ நாடுகளின் தலைமை நாடாக ஐக்கிய அமெரிக்கா தனது அணியை வலுப்படுத்துவதற்காக ‘‘வடக்கு அத்திலாந்திக் பாதுகாப்பு ஒப்பந்தம் (NATO)’’ அமைப்பை ஏற்படுத்திக் கொண்டமை.
- ‘நேட்டோ’ அமைப்புக்குப் பதிலாக சமவுடைமை சோசலிச அணி ‘வோர் சோ’ அமைப்பை ஏற்படுத்திக் கொண்டமை.
- ‘நேட்டோ’ அமைப்பின் தலைமை ஐக்கிய அமெரிக்காவிற்கும் ‘வோர்சோ’ அமைப்பின் தலைமை சோவியத் ரஷ்யாவுக்கும் உரித்தானமை.
- இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா எனும் நாடுகளின் தலைமையில் முதலாளித்துவ, சோசலிச அணிகளின் அதிகாரம் பரவலாக்கப்பட்டபோது ஏற்பட்ட முரண்பாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் தலையீட்டால் ஆயுதப் போராகாமல் தவிர்க்கப்பட்டமை.
  உதாரணம்:
  - 1962 ஐக்கிய அமெரிக்காவை நோக்கிச் சோவியத் ரஷ்யா, கியூபாவில் ஏவுகனைகளை வைத்தமை. அதற்குப் பதிலாக ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யாவை நோக்கித் துருக்கியில் ஏவுகணைகளை வைத்தமை. இந்நிலையில் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி ஜோன் கெனடி அவர்களுடனும் சோவியத் ரஷ்ய ஜனாதிபதி நிகிடா குருஷோவ் அவர்களுடனும் கலந்துரையாடி இப்பிரச்சினையைத் தீர்த்து வைத்தார். சோவியத் ரஷ்யாவின் அனுசரணையுடன் கியூபா 1969 இல் பொதுவுடமை நாடொன்றாக மாறியது.
  - எகிப்து ஜனாதிபதி கமால் அப்துல் நாசர் அவர்களால் சுயஸ் கால்வாய் தேசிய மயப்படுத்தப் பட்டபோது பிரித்தானியா, பிரான்ஸ், இஸ்ரவேல் முதலிய நாடுகள் இணைந்து எகிப்துக்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தபோது ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் படை அனுப்பப்பட்டுப் போர் தவிர்க்கப்பட்டமை.
  - கொரியாவினுள் ஐக்கிய அமெரிக்காவின் செயற்பாடு காரணமாக தென் கொரியா முதலாளித்துவ அணியிலும் வட கொரியா சோசலிச அணியிலும் இணைந்தமை.
  - ஹங்கேரியப் பிரச்சினை.
  - செக்கஸ்லோவாக்கியாவில் சோவியத் ரஷ்யா தலையீடு.
  - வியட்நாம் யுத்தம்.
  - மத்திய கிழக்கு நாடுகளின் மத்தியஸ்தம்
- ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதக் கட்டுப்பாடு மற்றும் நிராயுதபாணி ஒப்பந்தங்கள் மூலம் ஆயுதப் பாவனைக்கான சந்தர்ப்பங்கள் குறைக்கப்பட்டன. அதன் மூலம் ஆயுத மோதல்கள் தவிர்க்கப்பட்டன.
  உதாரணம்:
  - 1959 இல் கைச்சாத்திடப்பட்ட அந்தாட்டிகா ஒப்பந்தம் மூலம் அணுவாயுதப் பரிசோதனைக்காக அந்தாட்டிக்காவை பயன்படுத்தாமைக்கு இரு அணிகளும் உடன்பட்டமை.

- 1963 இல் கைச்சாத்திடப்பட்ட விண்வெளியிலோ, புவி மேற்பரப்பிலோ, நீருக்கடியிலோ வளிமண்டலத்திலோ அணுவாயுதம் வைத்திருப்பதற்கான தடை ஒப்பந்தம் மூலம் அணுவாயுதப் பாவனை தவிர்க்கப்பட்டமை.
- 1974 இல் சோல்ட் 1 மற்றும் சோல்ட் 2 ஒப்பந்தங்கள் (Stategic Arms Limitation Talk) மூலமும் ஆயுதப் பாவனை வரையறுக்கப்பட்டமை.

### அணிசாரா நாடுகள்

- இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலகில் தோற்றம் பெற்ற முதலாளித்துவ, சோசலிச அதிகார அணிகள் இரண்டினுள் எந்தவொரு அணியிலும் இணையாத நாடுகள் ஒன்றிணைந்து ஏற்படுத்திக்கொண்ட அமைப்பே அணிசாரா நாடுகள் எனப்பட்டமை.
- இரண்டாம் உலகப் போரின் பின்னர் மேலைத்தேச பேரரசுகளிடைமிருந்து சுதந்திரமடைந்த மூன்றாம் உலக நாடுகளாகக் கருதப்படும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளுள் அதிகமானவை அணிசாரா நாடுகளில் அங்கம் வகித்தமை.
- முதலாளித்துவ, சோசலிச அதிகார அணிகள் இரண்டினதும் தலைவர்கள் புதிதாய் சுதந்திரம் பெற்ற நாடுகளைத் தமதணியில் சேர்த்துக் கொள்வதற்கு இயன்றளவு முயற்சித்தபோதிலும் நீண்ட காலம் குடியேற்றவாதத்திற்கு அடிமைப்பட்டிருந்து சுதந்திரமடைந்த நாடுகளுக்குத் தேவையாயிருந்தது யாதெனில் தமது சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டு வல்லரசொன்றுக்கு அடிபணியாது சுயாதீனமாகச் செயற்படுவதாகும். அதனூடாக அணிசாரா நாடுகள் அமைப்பு உருவானமை.
- அணிசாரா நாடுகள் அமைப்பின் ஆரம்பகர்த்தாக்களாக சுதந்திர இந்தியாவின் முதலா பிரமரான ஜவஹர்லால் நேரு, இந்தோனேஷிய ஜனாதிபதி சுகர்ளோ, எகிப்து ஜனாதிபதி அப்துல் கமால் நசார், யூகோஸ்லேவிய ஜனாதிபதி மார்ஷல் டிட்டோ, கானாவின் ஜனாதிபதி திகூர்மா முதலிய தலைவர்கள் செயற்பட்டமை.

### அணிசாரா நாடுகளின் கொள்கை

- அதிகார அணிகளுக்கு அமையாகாமல் தமது நாடுகளின் நலனுக்கான கொள்கைகளைக் கடைப்பிடித்தல்.
- சுதந்திரம், பாதுகாப்பு, சமாதானம், இணக்கப்பாடு என்பவற்றை அடிப்படையாகக்கொண்ட கொள்கையொன்றை ஏற்படுத்திக் கொள்ளல்.
- யுத்த உடன்படிக்கைகளை எதிர்த்தல்.
- பேரரசுக் கொள்கையைப் புறக்கணித்தல்.
- சமாதானத்திற்காக முன்வருதல்.
- அணிசாரா நாடுகளின் அமைப்பு உலகின் பலம் வாய்ந்த சமாதான அமைப்புகளின் ஒன்றாகத் திகழ்ந்தமை.
- 1954 இல் ஜவஹர்லால் நேரு அவர்களால் முன்வைக்கப்பட்ட பஞ்சசீலக் கொள்கை அணிசாரா நாடுகள் அமைப்பின் அடிப்படையாக அமைந்தமை. அதற்கு முன்னர் சீனப் பிரதமர் சென்-என்-லார் அவர்களாலும் இக்கருத்து தெரிவிக்கப்பட்டிருந்தது.

### பஞ்சசீலக் கொள்கை

- சமாதான சகவாழ்வு
- அந்நியோனிய நலன்பரியும் சமத்துவமும்
- ஒரு நாடு அடுத்த நாட்டின் உளளக விடயங்களில் தலையிடாதிருத்தல்.
- ஒரு நாடு மற்றொரு நாட்டை ஆக்கிரமிக்காதிருத்தல்.
- ஒரு நாடு மற்றைய நாட்டின் புவியியல் எல்லையையும் சுயாதீனத்தையும் மதித்தல்.

- 1955 இல் இந்தோனேஷியாவின் பாங்டுங் நகரில் அணிசாரா நாடுகளின் முதலாவது கூட்டம் கூடியமை.
- அதன்படி ஆசிய, ஆபிரிக்க நாடுகள் தமது நடுநிலைக் கொள்கையை வெளியிட்டமை.
- அணிசாரா நாடுகளின் முதலாவது மமாநாடு 1961 ஆம் ஆண்டு யூகோஸ்லேவியாவின் பெல் கிரேட் நகரில் மார்ஷல் டிட்டோவின் தலைமையில் நடைபெற்றமை.
- முதலாவது மாநாட்டில் 23 ஆசிய நாடுகளும் 07 ஆபிரிக்க நாடுகளும் பங்கேற்றதுடன் அங்கத்துவம் அதிகரித்து இன்று 118 நாடுகள் அங்கம் வகிக்கின்றமை.
- அணிசாரா நாடுகளின் மாநாடு 3 அல்லது 4 வருடங்களுக்கொரு முறை நடைபெறுகின்றமை.
- 1976 ஆம் ஆண்டு ஐந்தாவது உச்சி மாநாடு கொழும்பில் நடைபெற்றமை.
- அம்மாநாடு உலகின் ஏழை நாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்கும் புதிய சர்வதேச பொருளாதாரக் கொள்கையின் பக்கம் கவனத்தை ஈர்த்தமை.
- இன்றைய உலகில் இரண்டு அதிகார அணிகள் இன்மையால் அங்கத்துவ நாடுகளிடையே ஒத்துழைப்பைப் பாதுகாத்தல் பிரதான நோக்கமா மாறியுள்ளமை.
- பயங்கரவாதத்திற்கு எதிராகச் செயற்படுகின்றமையும் போதைப்பொருள் எதிர்ப்பும்.

### சோவியத் ரஷ்யா வீழ்ச்சியடைதல்.

- ஆசிய, ஐரோப்பிய கண்டங்களில் பாரிய நிலப்பிரதேசத்தில் பரந்திருந்த சோவியத் ரஷ்யா ஆரம்பத்தில் கடும்போக்குத் தன்மையுடனான நிர்வாகத்தைக் கொண்டிருந்தது.
- பிற்காலத்தில் அப்பாரிய நாட்டை ஆட்சி செய்வது கடினமானமை.
- பொருத்தமான அரசியல் இயந்திரம் செயறபட்ட போதிலும் விவசாயம், கைத்தொழில் எனும் இரு துறைகளும் பலவீனமடைந்தமை.
- எனவே பதிய அரசியல், பொருளாதார சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்த வேண்டியேற்பட்டமை.
- 1980 தசாப்தத்தின் இறுதியில் சோவியத் ரஷ்ய ஜனாதிபதி, மிகாயல், கொர்பச்சேவ் அவர்களால் ‘பெரெஸ்ரொயிகா’ (பொருளாதார மறுசீரமைப்பு) மற்றும் ‘கிளஸ்நொட்ஸ்’ (வெளிப்படையான தன்மை) எனும் சீர்திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை.

### சீர்திருத்தங்களுக்கு ஏதுவான காரணங்கள்

- அதிகாரவாதமும் நிர்வாக முறையின் குறைபாடுகளும்.
- சமவுடமை பொருளாதாரக் கொள்கை காரணமாக போட்டி ரீதியான உற்பத்தி தடைப்பட்டமை.
- புதிய உற்பத்திகள் மேற்கொள்ளப்படாமையும் போட்டி ரீதியான விலைப் பொறிமுறை இன்மையும்.
- சந்தையில் தேவையறியாது உற்பத்தி மேற்கொள்ளப்பட்டமை.
- தேவைக்கதிகமான பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுக் களஞ்சியப்படுத்தப்பட்டமை.
- அவ்வுற்பத்திகளுக்கான நட்டத்தை அரசு பொறுப்பேற்க வேண்டியிருந்தமை.
- அளவுக்கதிகமான போர்ச் செலவுகள்.
- சமவுடைமைக் கொள்கையைப் பரப்புவதற்காக அதிகளவில் செலவிட்டமை.
- சுதந்திர பொருளாதார முறை தொடர்பில் புதிய தலைமுறையினரின் எதிர்பார்ப்பு.
- ஐக்கிய அமெரிக்காவின் இரகசிய உணவுச் சேவை (CIA) யின் செயற்பாடு.
- மிகாயல் கோர்பச்சேவ் அமுல்படுத்திய பொருளாதார சீர்திருத்தங்கள் சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சிக்குக் காரணமாயமைந்தமை.
- கோர்பச்சேவை பின்பற்றி அடுத்துவந்த ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சிங் தொடர்ந்தும் அச்சீர்திருத்தங்களை முன்னெடுத்தமை.
- சோவியத் ரஷ்யா வீழ்ச்சியடைந்தமையால் ஏற்பட்ட விளைவுகள் (சர்வதேச ரீதியாக)
  - சமவுடைமை அதிகார அணி இல்லாமலானமை.
  - முதலாளித்துவ அணியின் தலைமையை ஏற்றிருந்த ஐக்கிய அமெரிக்கா போட்டியின்றி உலகின் ஏக வல்லரசானமை.

- சமவுடமைக் கொள்கை பரவுவதற்கு இருந்த சந்தர்ப்பம் குறைவடைந்தமை.
- அணுவாயுதத் தொழில்நுட்பம் ஏனைய நாடுகளுக்கும் பரவியமை.
  உதாரணம்: இந்தியா, ஈரான், வடகொரியா
- ‘பனிப்போர்’ முடிவுற்றமை.
- ஆயுதப் போட்டியும் முடிவுக்குவர வழிபிறந்தமை.
- வோர்சோ அமைப்புக் கலைக்கப்பட்டமை.
- கிழக்கு, மேற்கு ஜேர்மனிகள் ஒன்றிணைந்தமை.

### தேசிய ரீதியிலான விளைவுகள்

- சோசலிச ஆட்சிக்குப் பதிலாக பல கட்சி ரீதியான ஜனநாயக ஆட்சி முறை ரஷ்யாவிலும் நிலைபெற்றமை.
- ரஷ்யா கொமியூனிசப் பொருளாதாரக் கொள்கையிலிருந்து விலகி சுதந்திர பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றும் நாடானமை.
- அரச முயற்சாயாண்மைக்குப் பதிலாகத் தனியார் முயற்சியாண்மை ஏற்பட்டமை.
- ஏற்றுமதி, இறக்குமதி வரையறைகள் இல்லாமலானமை.
- ஓரேயடியாகப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமையால் நாட்டில் பணவீக்கம் ஏற்பட்டமை.
- வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்டமை.
- உஸ்பெகிஸ்தான், பெலோ ரஷ்யா, விதுவேனியா, முதலிய மாநிலங்கள் தனிநாடுகளாக மாறியமை.
- பின்னர் ரஷ்யா, பெலோ ரஷ்யா என்பவற்றுடன் சில அரசுகள் இணைந்து ரஷ்யா சமஷ்டிக் கூட்டாட்சியை ஏற்படுத்தியமை.
- யூகோஸ்லேவியா, போலாந்து முதலிய நாடுகள் பல சிற்றரசுகளாகப் பிளவுற்றமை.
- கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சமவுடமைக் கொள்கையைக் கைவிட்டு முதலாளித்துவ ஜனநாயக அரசியல் கொள்கையைப் பின்பற்ற ஆரம்பித்தமை.
- உலகில் சமவுடமைக் கொள்கையின் பரவல் வரையறுக்கப்பட்டமை.
- உலகின் அதிகார அணிகளின் அதிகரத்திற்கான போராட்டம் முடிவுக்கு வந்தமை.

## மதிப்பீடு

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

01. மிகாயில் கொர்பச்சேவின் ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற அரசியல் நிகழ்வு
    1. அமெரிக்காவின் பொருளாதார வீழ்ச்சி
    2. போல்சவிக் புரட்சி
    3. சீனாவில் கொமியூனிச ஆட்சியின் வீழ்ச்சி
    4. சோவியத் ரஷ்யாவின் வீழ்ச்சி
    5. ஜப்பானின் முடியாட்சி முடிவுறல்

(...........)

02. முதலாளித்துவ மற்றும் கொமியூனிச நாடுகளின் அணிகளுக்கிடையிலான அதிகாரப் போராட்டம்
    1. ஒபெக் பிரச்சினை
    2. அணுவாயுதப் பிரச்சினை
    3. பனிப்போர்
    4. வளைகுடா நெருக்கடி
    5. மூன்றாம் உலக மகாயுத்தம் (...........)

**பின்வரும் வினாக்களில் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அதில் ஒன்று தலைப்பிற்குப் பொருந்தாது. அதனைத் தெரிவு செய்து அவ்விலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

03. இரண்டாம் உலகப் போரின் பின்னர் சோவியத் ரஷ்யா
    1. ஜோசப் ஸ்டாலின் புதிய பொருளாதாரக் கொள்கையை அறிமுகம் செய்தமை.
    2. நிகிடா குருஷேவ், ஸ்டாலினின் கொள்கைகளைப் புறக்கணித்தமை.
    3. மிகாயில் கொர்பச்சேவ் ‘பெரெஸ்ரொயிகா’ எனும் பொருளாதார சீர்திருத்தத்தை அறிமுகப் படுத்தியமை.
    4. கொர்பச்சேவ் ‘கிளாஸ்நொட்ஸ்’ எனம் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியமை.
    5. கொர்பச்சேவின் கொள்கைகள் பனிப்போர் இல்லாமலாவதற்குக் காரணமாயின.

(...........)

04. பனிப்போர் என்பது
    1. ஐக்கிய அமெரிக்க அணிக்கும் சோவியத் ரஷ்ய அணிக்கும் இடையிலான அதிகாரப் போராட்டமாகும்.
    2. வுட்றோ வில்சனால் 14 விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டமை பனிப்போர் ஆரம்பித்ததின் அடையாளமாகும்.
    3. ஐக்கிய அமெரிக்காவின் தலைமையின் 1949 இல் வட அத்திலாந்திக் நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம் (NATO) உருவானது.
    4. 1955 இல் சோவியத் ரஷ்யா தலைமையில் வோர்ச்சோ ஒப்பந்தம் உருவானது.
    5. கொர்பச்சேவின் ஆட்சிக் காலத்தில் இரு அணிகளுக்குமிடயிலான முரண்பாடுகள் குறைவடைந்தமை. (...........)

05. சோவியத் ரஸ்யா வீழ்ச்சியடைந்ததால் ஏற்பட்ட விளைவுகள்
1. வோர்சோ அமைப்புக் கலைக்கப்பட்டமை.
2. சமவுடைமை சோசலிச அணி பலமடைந்தமை.
3. முதலாளித்துவ அணியின் தலைமை நாடான ஐக்கிய அமெரிக்க போட்டியின்றி உலகின் ஏக வல்லரசானமை.
4. பனிப்போர் முடிவடைந்தமை.
5. உலக அதிகாரச் சமநிலை அற்றுப்போனமை.

(...........)

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக.**

06. 1961 செப்டெம்பர் 01 ஆம் திகதி யூகோஸ்லேவியாவின் பெல்கிரேட் நகரில் இடம்பெற்ற அணிசாரா நாடுகளின் முதலாவது உச்சி மாநாட்டில் கலந்துகொண்ட நாடுகள்.
1. இலங்கை, ஜப்பான், இந்தியா, பிரான்ஸ், பாகிஸ்தான்
2. தாய்லாந்து, இந்தியா, ஜேர்மன், அந்தோனேஷியா, பெரிய பிரித்தானியா
3. இலங்கை, இந்தியா, யூகோஸ்லேவியா, எகிப்து, இந்தோனேஷியா
4. எகிப்து, இலங்கை, யூகோஸ்லேவியா, பாகிஸ்தான், சீனா
5. எகிப்து, பிரான்ஸ், இந்தியா, ஆஸ்திரியா, ஜேர்மனி

(...........)

## பகுதி 2

• **பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

01. இரண்டாம் உலகப் போரின் பின்னர் உலக நாடுகள் அதிகார அணிகள் இரண்டாகப் பிரிந்து சென்ற விதத்தை விளக்குக.

(14 புள்ளிகள்)

02. இரண்டாம் உலகப் போரின் பின்னர் ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ரஷ்யா எனும் நாடுகள் வல்லரசுகளாக எழுச்சியடைந்தமை உலக அரசியலில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை விளக்குக.

(14 புள்ளிகள்)

03. (i) ‘பனிப்போர்’ என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக எழுதுக.

(05 புள்ளிகள்)

(ii) 1986 வரை அது உலக அரசியலில் செல்வாக்குச் செலுத்திய விதத்தை விளக்குக.

(09 புள்ளிகள்)

04. ''நாடுகளின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், பொருளாதார நலனை அடிப்படையாகக் கொள்ளல், நாடுகளிடையே நட்புறவு, சமாதான சகவாழ்வு என்பவற்றை ஏற்படுத்தல் எனும் நோக்கங்களுக் காக அணிசாரா நாடுகள் அமைப்பு உருவாக்கப்பட்டது.''

1. அணிசாரா நாடுகளின் முதல் மாநாடு எப்போது, எங்கு கூடியது? (02 புள்ளிகள்)

2. அதன் முதல் மூன்று உறுப்பு நாடுகளைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

3. அதன் ஆரம்ப கர்த்தாக்கள் மூவரைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

4. அணிசாரா நாடுகளின் கொள்கை பற்றி அவதானம் செலுத்தி மேற்படி கூற்றுப் பற்றிக் கலந்துரையாடுக. (06 புள்ளிகள்)

05. (i) மிகாயில் கொர்பச்சேவின் பொருளாதார சீர்திருத்தங்களுக்கான காரணங்களை விளக்குக. (07 புள்ளிகள்)

(ii) சேவியத் ரஷ்யா வீழ்ச்சியடைந்ததன் விளைவுகள் பற்றிக் கலந்துரையாடுக. (07 புள்ளிகள்)

# 12. இருபதாம் நூற்றாண்டில் ஆசிய நாடுகளின் எழுச்சி

## அறிமுகம்

சீனாவும் ஜப்பானும் ஒன்றுபட்ட சமூக, கலாசார பண்புகளைக் கொண்டதும் அருகருகே அமைந்துள்ள இரு கிழக்காசிய நாடுகளும் ஆகும். இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளைப் போன்று பிரித்தானியப் பேரரசுக்கோ, ஏனைய வல்லரசுகளுக்கோ அவை ஒருபோதும் நேரடியாக அடிமைப்பட்டிருக்கவில்லை. ஆதிக்க நாடுகள் செலுத்திய பல்வேறு நெருக்குதல்களிலிருந்து தம்மைக் காத்துக்கொண்டு, இருபதாம் நூற்றாண்டில் பலம்பொருந்திய நாடுகளாக அவை எழுச்சியுற்றன.

இரு சந்தர்ப்பங்களில் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்து பின்னர் எழுச்சியுற்று இன்றைய உலகப் பொருளாதாரத்தில் அவை மிகவும் பலம்வாய்ந்த நாடாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது. மேற்கத்திய நாடுகளுக்கு வெளியில் உயர்ந்த பொருளாதார அடைவைப் பெற்ற முதலாவது நாடும் ஜப்பானாகும் என அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். இரண்டாம் உலகப் பெரும் போரின்போது அணுகுண்டுத் தாக்குதலால் பேரழிவுக்கு முகங்கொடுத்தாலும் ஜப்பான் தொழினுட்ப, பொருளாதார, சமூகத் துறைகள் யாவற்றிலும் மிகவும் குறுகிய காலத்தில் உலகின் முன்னணி நாடாக மாற அதனால் முடிந்துள்ளது.

நெப்போலியன் பொனபாட் ஒருமுறை ''சீனா ஓர் இராட்சதன்; அவன் தூங்குகிறான்; அவனைத் தூங்க அனுமதியுங்கள்; அவன் எழுந்தால் முழு உலகையும் உலுக்கிவிடுவான்.'' என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூற்று இன்று உண்மையாகியுள்ளது. சீனா எதிர்கால உலக வல்லரசாக வேகமாக வளர்ந்துகொண்டுள்ளது. சீன ஜனாதிபதி இக்ஷின் ஜின் பின்னால் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள ''ஒரே கரையோரம் ஒரே பெருந்தெரு'' (One Belt- One Road) எனும் எண்ணக்கரு நடைமுறையில் செயற்பட்டுக் கொண்டிருப்பது, அதன் எதிர்கால நடவடிக்கைகளுக்கான பின்புலத்தை உருவாக்கிக் கொள்வதற்காகும். மத்திய கால உலகில் காணப்பட்ட 'பட்டுப்பாதை'யை மனங்கொண்டு மீண்டும் ஐரோப்பிய - ஆசிய நாடுகளுடன் தரைவழி, கடல்வழித் தொடர்புகளை உருவாக்குவதே அதன் நோக்கமும் இலக்குமாகும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விதமாக அந்நாடுகள் எழுச்சியுற்று வருகின்றமை சிறியதோர் ஆசிய நாடான இலங்கைக்கும் சிறந்ததொரு முன்மாதிரியாகும். பிரித்தானியப் பேரரசுக்கு அடிமைப்பட்டிருந்து 1948 இல் சுதந்திரத்தை அடையப் பெற்றாலும் இன்றுவரை இலங்கை தேசிய அபிவிருத்தியை அடைந்துகொள்ள முடியாத நிலையிலுள்ளது. சுதந்திரத்தை அடையும்போது இலங்கை, இவ்விரு அரசுகளை விட பொருளியல் சமூகத் துறையில் முன்னிலையில் இருந்தது. ஆகையால் சீனாவும் ஜப்பானும் இருபதாம் நூற்றாண்டில் தாம் எழுச்சியடைவதற்குக் கையாண்ட அரசியல், பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகளையும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஏற்பட்ட பல்வேறு சவால்களுக்கு முகம்கொடுத்த விதத்தையும் விளங்கிக் கொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய படிப்பினைகளை விளக்குவது இவ்வலகின் நோக்கமாகும்.

**தேர்ச்சி** : • பல்வேறு சவால்களுக்கிடையே நாடுகள் முன்னேறிச் சென்ற வழிமுறைகளை முன்மாதிரியாகக் கொண்டு தாமும் வளர்ச்சி அடையும் வண்ணம் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 12.1 இருபதாம் நூற்றாண்டில் வேகமான முன்னேற்றத்தை அடையப் பெற்ற ஆசிய நாடுகளைப் பற்றி விளக்குவார்.

**பாடவேளைகள்** : 20

**கற்றற்பேறுகள்** :
- ஜப்பானும் சீனாவும் உலகின் வெற்றிகரமான நாடுகளான விதத்தை விளக்குவார்.
- சீனாவிடமும் ஜப்பானிடமும் பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் குறிப்பிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்குரிய அறிவுறுத்தல்கள் :**
பின்வரும் பாட விடயங்களின் அடிப்படையில் பாடத்தைத் திட்டமிடவும்.

## ஜப்பானின் எழுச்சி

- 20 ஆம் நூற்றாண்டில் ஜப்பானின் எழுச்சியை கீழ்வரும் இரு கட்டங்களுக்கூடாகக் கலந்துரையாட முடியும்.
  1. இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஜப்பானின் எழுச்சி
  2. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னரான ஜப்பானின் எழுச்சி

## இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் ஜப்பானின் எழுச்சி

### டொகுகாவா காலகட்டம்

- ஜப்பான் நவீன அரசொன்றாக அபிவிருத்தியடைவதற்கான பின்புலம் டொகுகாவா காலத்திலேயே உருவாக்கப்பட்டது.
- 1603-1868 வரையான காலகட்டம் ஜப்பானிய வரலாற்றில் டொகுகாவா யுகம் எனப்படுகிறது. ஆட்சியதிகாரம் டொகுகாவா ஷோகுன்களிடம் காணப்பட்டதோடு பேரரசர் பெயரளவு நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருந்தார். இக்காலகட்டத்தில் விவசாய அபிவிருத்தி மற்றும் கைத்தொழில் விருத்தியைப் போன்றே நீண்டகாலமாக உள்நாட்டில் சமாதானமும் அரசியல் ஒழுங்கும் உறுதிப்படுத்தப்பட்டிருந்தமை நாட்டின் அபிவிருத்திக்கு ஏதுவான காரணிகளாயின.
- டொகுகாவா காலத்தில் அரசியல் ஒற்றுமையை உறுதிப்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை யாக வெளிநாட்டுத் தொடர்புகள் முற்றாகத் தடைப்படுத்தப்பட்டிருந்தன. அது செயற்பட்ட விதம் வருமாறு:

  உதாரணம்:
  - கி.பி. 1636 ஆம் ஆண்டில் வெளிநாட்டார் ஜப்பானுக்கு வருவதும் ஜப்பானியர் வெளிநாடு செல்வதும் தடுக்கப்பட்டிருந்தது. (இச்சட்டம் ஒல்லாந்தருக்கு மட்டுமே தளர்த்தப்பட்டிருந்தது.)
  - வெளிநாட்டு வர்த்தகத்திற்குப் பொருத்தமான கப்பல்கள் கட்டப்படுவது தடுக்கப்பட்டிருந்தது.
- ஜப்பானிய டொகுகாவா காலத்தில் கையாளப்பட்ட தனித்திருக்கும் கொள்கையால் யுத்த நடவடிக்கைகள் அற்ற நாடாக அது காணப்பட்டது.
- இதனால் சாமுறாய்கள் கல்வியில் கூடிய கவனம் செலுத்தியமை.
- இதனால் சாமுராய்கள் நிர்வாக நடவடிக்கைகள் மாற்று ஆலோசனை நடவடிக்கைகளில் ஈடுபடல்.
- சமூக நிலையில் கீழ்மட்டத்திற்கு வீழ்ச்சியுற்ற அவர்கள், பெருமையை மட்டும் கொண்ட, உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடாத ஏழ்மையுற்றவர்களாகக் காணப்பட்டனர்.
- இக்கொள்கைகளின் பலனாக ஜப்பான் இருபதாம் நூற்றாண்டில் எழுச்சியுற்ற நாடாக மாறியது,
- வீதித் தொகுதியின் மூலமும் நீர்வழிகளின் மூலமும் ஜப்பானின் அனைத்துப் பிரதேசங்களிலும் போக்குவரத்து வசதி திருப்திகரமான நிலையிலிருந்தது.
- இதனூடாகக் கைத்தொழில், விவசாய உற்பத்திகள் வேகமாகப் பரிமாறப்பட்டமையால் பணப் புழக்கம் அதிகரித்துவந்தமை காரணமாக முதலாளித்துவப் பொருளாதார முறை வளர்ச்சியுற்றது.
- சமூகத்தின் அடிமட்டத்திலிருந்த வியாபாரிகள் செல்வத்தைத் திரட்டிக்கொண்டு, சமூகத்தின் பொருளாதார நிலையில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய குழுவினராயினர்.
- நாட்டின் மத்திய பிரதேசத்தில் நகரங்கள் விருத்தியுற்றன.

- 18ஆம் நூற்றாண்டு முடிவடையும்போது ஒரு மில்லியன் சனத்தொகையைக் கொண்ட டோக்கியோ அக்கால நகர்களுள் முதலாமிடத்திலிருந்தது.
- தொலைத் தொடர்பு கட்டமைப்பு விருத்தியுற்றது. கல்வியும் வேகமாக மாற்றமுற்று வந்தது.
- தொழிநுட்பத்திலும் ஜப்பானியர் மேல் நாட்டவர்களைவிடத் தாழ்வாகவே இருந்துவந்தனர்.
- வெளிநாட்டு வர்த்தகம், வர்த்தகக் கப்பல்களைக் கட்டுதல், புதிய வர்த்தக சந்தைகளைக் கண்டறிதல் போன்ற நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு ஜப்பானின் ஒதுங்கியிருத்தல் கொள்கையைக் கைவிடல் வேண்டும் என்பது பெரும்பாலானோரின் கருத்தாக அமைந்தமை.
- 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜப்பான் மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிநாடுகளுக்குத் திறந்துவிடப்படல்.
- ஜப்பானின் கதவுகளை வெளிநாட்டினருக்குத் திறந்துவிட்டபடியால் டொகுவாக்களின் ஆட்சியதிகாரம் இல்லாமற் போனமை குறிப்பிடத்தக்க விளைவாகும்.

### மேஜி யுகம்

- 1868 - 1912 வரையான காலம், ஜப்பானிய வரலாற்றில் மேஜி யுகம் எனப்படுகிறது.
- ஜப்பானின் 122 ஆவது பேரரசரான முத்அஹிதோ நவீன ஜப்பானின் பிதாவாகக் கருதப்படுகிறார்.
- இவரது காலத்தில் ஜப்பான் மேற்கத்திய வல்லரசுகளுக்கு இணையான நவீன தேசிய அரசொன்றாக எழுச்சியுற்றது.
- அவ்வாறானதொரு நிலையை அடையப்பெற்றதற்குக் காரணம் மேற்கத்திய மயமாதலை அது ஏற்றுக் கொண்டமையாகும்.

### மேஜி நிர்வாக காலத்தில் அரசியல், பொருளியல், சமூக மாற்றங்கள்

- பொதுமக்களுக்கு ஆட்சியில் பங்குபெறக்கூடிய விதமான ஜனநாயக ஆட்சி முறை ஒன்றை அறிமுகம் செய்தனர்.
- விவசாயிகள் விரும்பிய விதமாகப் பயிர்செய்வதற்கும் அறுவடையை விற்பனை செய்வதற்கும் அனுமதி வழங்கப்பட்டதோடு, விளை நிலங்களை விற்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையையும் 1872 இல் நீக்கினார்.
- மக்கள் விருப்பப்படி வர்த்தக, கைத்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அனுமதியளித்தார்.
- மேலைத்தேய தொழினுட்ப முறைகளை அறிமுகம் செய்தல்.
- மேலைத்தேய நாடுகளிலிருந்து ஆலோசகர்களை நூற்றுக்கணக்கில் தருவித்து, கல்வி, சுரங்கத் தொழில், வங்கி, சட்டம், படை, போக்குவரத்து ஆகிய துறைகளை அவர்களின் அறிவின் மூலம் விருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



(source:https://en.wikipedia.org/wiki/Meiji_period) **மேஜி பேரரசன்**

- திறமையும் அறிவும் மிக்க மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களை மேலைத்தேய நாடுகளுக்கு அனுப்பி, விஞ்ஞான, தொழினுட்ப அறிவைப் பெற்றுக் கொடுத்தல்.
- 1882 இல் ஜப்பானிய மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டமை.
- வங்கிகளை அமைக்கும் சட்டம் தளர்த்தப்பட்டமையால் வணிக வங்கிகள் பலவும் ஆரம்பிக்கப் பட்டன.
- மெய்ஜி சீர்திருத்தத்தின் மூலம் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவமளிக்கப் பட்டது. கைத்தொழில் துறையை முன்னேற்றுவதற்காக, தனியார் துறைக்கு உதவிகள் வழங்கப்பட்டமை.
- மிட்சுயி சீமெந்து, மிட்சுபிஷி மோட்டார் வண்டி கம்பனிகள் போன்ற பிரமாண்டமான நிறுவனங்கள் தொடங்கப்பட்டன.
- உற்பத்தித் துறையின் விருத்தியோடு, வெளிநாட்டு வியாபார விருத்திக்கான தேவைகள் ஏற்பட்டன.
- ஜப்பானியர் நேரடியாக வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கு வசதியாக தமது முகவர் நிலையங்களை உருவாக்கிக் கொள்வதற்கு உதவிகள் புரியப்பட்டன.

## மெய்ஜி ஆட்சியின் கீழ் ஜப்பானின் விஸ்தரிப்பு

- அவர்களுடைய இன்னொரு நோக்கமாக, பலம்வாய்ந்த படைத்துறையைக் கட்டியெழுப்புதல் அமைந்தது. அதற்காகப் பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டது. அதன்படி பிரித்தானிய முறையிலான கடற்படையையும் ஜேர்மனிய முறையின்படி தரைப்படையையும் அமைத்துக் கொள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.
- ஜப்பான் வேறு பிரதேசங்களை ஆக்கிரமித்து இணைத்துக்கொள்ளும் வல்லமை பெற்றமை.
- மேலும், மெய்ஜி நிர்வாகத்தின் கீழ் ஜப்பானில் உருவாக்கப்பட்ட கைத்தொழில் விருத்தி மேலைத்தேய நாடுகளைவிடப் பல்வேறு விடயங்களிலும் வேறுபட்டமையாயிருந்தன. உற்பத்தி வேகம் ஒரு பரம்பரைக்குள் பெருந்தொகையான மிகை உற்பத்தியை மேற்கொள்ளக் கூடியதாயிருந்தது.
- இதனால் ஏனைய ஏகாதிபத்திய நாடுகளைப் போன்று குடியேற்றங்களை நிறுவிக்கொள்ளும் தேவை அதற்கு ஏற்பட்டது.
- ஆசியாவில் பேரரசை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ஆசியாவில் பேரரசை கட்டியெழுப்பும் நோக்கில் ஜப்பான் பிரித்தானியாவுடன் சேர்ந்து முதலாவது உலக யுத்தத்தில் பிரவேசித்தது.
- அப்போது ஜேர்மனியப் படையைத் தாக்கி, ஜப்பான் ஈட்டிய வெற்றி, அது வல்லரசென்ற நிலையை உலகத்துக்குக் காண்பித்த சிறந்ததொரு சந்தர்ப்பமாகும்.
- முன்பு ஜேர்மனிக்குச் சொந்தமாக இருந்த சீனாவின் பிரதேசங்களையும் மேலும் பல தீவுகளையும் ஜப்பானுக்கு வழங்கியமையால் அது முதலாவது உலகப் போரின் பின்னர் ...........
- இது தவிர ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கான ஆயுத விற்பனையின் மூலம் அதிக வருவாயை ஈட்டிய ஜப்பானின் பொருளாதாரம் வேகமாக வளர்ச்சியடைந்தது,

## இரண்டாம் உலகப் போரும் ஜப்பான் தோல்வியுறலும்

- இரண்டாவது உலகப் போரில் ஐக்கிய அமெரிக்கா நட்பு நாடுகளின் அணியிலும் ஜப்பான் அச்சு அணியிலும் சேர்ந்து எதிர் அணிகளாகப் போருக்கு வந்தமை விசேட பண்பாகும். அப்போது பேரரசராயிருந்தவர் ஷோவ அல்லது ஹிரோ ஹிதோ (1926-89) ஆவார்.
- இரண்டாம் உலகப் போரின்போது அதாவது 1940 ஏப்ரல் மாதத்தில் ஐக்கிய அமெரிக்கா, தனது கடற்படைத் தலைமையகத்தை சந்தியாகோ தீவிலிருந்து அகற்றி, பசுபிக் சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்த பேர்ள் துறைகத்திற்குக் கொண்டு சென்றிருந்தது.
- ஜப்பான் இதனைத் தனக்கான பயமுறுத்தல் எனக் கருதி, 1941 டிசம்பர் 7 ஆந் திகதி பேர்ள் துறைமுகத்தைத் தாக்கியது.

- அவ்வாறு உலக யுத்தத்தில் பிரவேசித்த, முதல் மூன்று மாதங்களிலும் ஆச்சரியப்படத்தக்க வெற்றிகள் பலவற்றை ஈட்டிக் கொண்ட ஜப்பான் ஐக்கிய அமெரிக்கா வசமிருந்த குவாம் படைத்தளம், தாய்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் என்பவற்றைக் கைப்பற்றிக் கொண்டு, பசிபிக் சமுத்திரத்தல் நிலைகொண்டிருந்த பிரின்ஸ் ஒப் வேல்ஸ், ரிபல்ஸ் எனும் இரு யுத்தக் கப்பல்களையும் சிங்கப்பூருக்கு அருகில் வைத்து மூழ்கடித்தது. அதன் பின்னர் பிரித்தானியாவுக்கும் ஒல்லாந்தருக்கும் சொந்தமாயிருந்த கிழக்கு இந்தியத் தீவுகள் பலவற்றையும் கைப்பற்றிக் கொண்டு, அவுஸ்திரேலியாவைத் தாக்குவதற்கு முயற்சித்துக் கொண்டிருந்தது.
- கடலிலிருந்தும் வானிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களால் ஜப்பானின் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு ஐக்கிய அமெரிக்கத் தளபதி மெக் ஆதர் என்பவரால் முடிந்தது.
- 1945 பெப்ரவரி மாதத்தில் அமெரிக்கப் படை ஜப்பானை சுற்றி வளைத்து, சரணடையும்படி இறுதி எச்சரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் ஜப்பான் அதனை நிராகரித்தது.
- இதன் பின்னர் 1945 ஆகஸ்ட் 6ஆந் திகதி ஜப்பானின் ஹிரோஷிமாவும், 1945 ஆகஸ்ட் 9 ஆந் திகதி நாகசாகியும் அணுகுண்டுத் தாக்குதலால் அழித்தொழிக்கப்பட்டன.
- ஜப்பானியப் பேரரசரின் சலுகைகள் இரத்துச் செய்யப்படமாட்டாது எனும் உறுதிமொழியின் மீது, ஆகஸ்ட் 14 ஆம் திகதி நள்ளிரவில் ஜப்பான் கீழ்ப்படிவதாக அறிவித்தது.
- ஹிரோஷிமா நகரில் இடப்பட்ட அணுகுண்டால் ஒரு லட்சம் பேர் இறந்ததோடு முழு நகருமே அழிந்தொழிந்தது.
- யுத்தத்தின் விளைவாக 1945 ஆம் ஆண்டாகும்போது ஜப்பானின் உற்பத்திகள் 60 வீதமாக வீழ்ச்சியுற்றன. யுத்தத்தின் விளைவாகக் கீழ் கட்டமைப்புகள், துறைமுகங்கள், போக்குவரத்துப் பாதைகள், பாலங்கள், பிரதான கட்டடங்கள் அனைத்திலும் 25 வீதம் அழிவுற்றன. பொருளாதார அழிவால் கூடிய பணவீக்கமும் வேலையின்மையும் ஏற்பட்டன.



**அணுக்குண்டு வீசப்பட்ட ஹிரோசிமா**

https://www.theatlantic.com/photo/2016/05/hiroshima-before-and-after-the-atomic-bombing/482526/

### இரண்டாம் உலகப் போரின் பின்னரான காலத்தில் ஜப்பானின் முன்னேற்றம்

- 1945 டிசம்பர் 2 ஆம் திகதி மிசோரி எனும் யுத்தக் கப்பலில் வைத்து ஜப்பான் சரணடைவதற்கான ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.
- அதன் பின்னர் ஜப்பான் ஆறரை வருடங்கள் செல்லும்வரை (1952) அமெரிக்காவின் கீழ் இருப்பதற்கு நேர்ந்தது.
- தோல்வியின் பின்னர் சரணடைந்த ஜப்பானிடமிருந்து எதிர்ப்பு நடவடிக்கை எழும் எனத் தீர்மானிக்கப்பட்டாலும் அவ்வாறு நடைபெறவில்லை.





*ஜப்பான் சரணடைதல்*

*(source:https://www.pri.org/stories)*

### வெளியாட்சியாளர்களால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பு

- தளபதி மெக் ஆதரின் மேற்பார்வையில் மேற்கொள்ளப்பட்டதோடு 1947 மே 3 ஆந் திகதியிலிருந்து செயற்படுத்தப்பட்டது.
- அதன்படி ஜப்பானின் சுயாதிபத்தியம் பொதுமக்களின் கைகளிலேயே ஒப்படைக்கப்பட்டது.
- உயர் நிர்வாக அதிகாரம் எதுவும் பேரரசருக்கு வழங்கப்படவில்லை.
- அரசின் அதிகாரமும் பொறுப்பும் ‘டயட்’ எனப்படும் பராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது.
- சகல நிறைவேற்று அதிகாரங்களும் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையையே சாரும்.
- அமைச்சர்களின் தொகை 18 இற்கு மேற்படாதிருப்பதோடு, அவர்கள் அனைவரும் கூட்டாக டயட் சபைக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும்.
- 9ஆம் உறுப்புரையின்படி ஜப்பான் வேறொரு நாட்டுடன் போருக்குச் செல்லும் உரிமை மறுதலிக்கப்பட்டது. ஜப்பானுக்கு உள்நாட்டு, வெளிநாட்டு பிரச்சினைகள் பலவற்றிற்கும் முகங்கொடுக்க நேர்ந்தமை. எவ்வாறாயினும் அதிக காலம், செல்லும் முன் ஜப்பான் பொருளாதாரத் துறையில் முன்னணி வல்லரசாதல்.
- ஜப்பானின் இப் பொருளாதார எழுச்சி 1960 ஆம் ஆண்டாகும்போது துலக்கமாகத் தெரிய ஆரம்பித்தது.
- கி.பி. 1964 இல் ஒலிம்பிக் விழா டோக்கியோவில் இடம்பெற்றமை இம்முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் சிறந்த காரணியாகும்.




***ஜப்பானின் நடைபெற்ற ஒலிம்பிக் நிகழ்ச்சி***
*(source: https://www.japantimes.co.)*

## வெளிநாட்டுறவு

- ஜப்பானிய வெளிநாட்டுக் கொள்கையின் முக்கியமான இலக்காக இருந்தது. தேசிய மட்டத்தில் சமாதானத்தையும் தன்னிறைவையும் சுதந்திரத்தையும் பெற்றுக்கொள்வதோடு, உலக சமாதானம், மனிதவர்கத்தின் நலனோம்பு விடயங்களில் பங்களிப்புச் செய்தலுமாகும்.
- 1951 இல் ஜப்பானும் அமெரிக்காவும் பாதுகாப்பு, ஒத்துழைப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டமையும் 1960 இல் திருத்தப்பட்ட அவ்வொப்பந்தத்திற்கமைய ஐக்கிய அமெரிக்க இராணுவத்திற்கு ஜப்பானில் தங்கியிருக்க அனுமதி வழங்கப்பட்டது.
- 1952 ஆம் ஆண்டில் ஜப்பான் - சோவியத் ரஷ்யாவுக்கிடையில் நெருங்கி உறவு ஏற்பட்டது.
- 1956 இல் ஜப்பான் ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் பெற்று அதன் சுறுசுறுப்பான செயற்பாட்டாளரானது.
- ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளுடன் பொருளாதார ஒத்துழைப்பை வளர்க்கும் வண்ணம் செயற்படல்.
- 1965 இல் ஜப்பான் அபிவிருத்தியடந்துவரும் நாடுகளுக்கு வழங்கிய உதவித் தொகையின் அளவு 485 மில்லியன் டொலர்களாகும்.
- வறிய நாடுகளுக்குத் தொழினுட்ப அறிவைப் பெற்றுக் கொடுப்பதற்காக பயிற்சி நிலையங்களை ஆரம்பித்தமை. 1966 ஆம் ஆண்டாகும்போது 18 நாடுகளில் இவ்வாறான பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளன.

## பொருளாதார அபிவிருத்தி

- யுத்தத்தால் அழிவுற்ற ஜப்பானுக்கு மார்ஷல் திட்டத்தின் மூலம் உதவி கிட்டியமை.
- 1945-52 காலகட்டத்தில் கிடைக்கப்பெற்ற உதவிகளின் பெறுமானம் 1.9 மில்லியன் டொலர்களாகும். அவ்வுதவியின் 59% உணவுப் பொருட்களுக்காகவும் 15% மூலப்பொருட்களுக்காகவும் 12% போக்குவரத்து உபகரணங்களுக்காகவும் கிடைக்கப்பெற்றது.

- ஜப்பானின் கைத்தொழில் முன்னேற்றத்திற்கு முக்கிய காரணியாக அமைந்தது மின்சார சக்தியாகும்.
- 1981 ஆகும்போது 21 அணுமின் உலைகள் செயற்பட்டமை.
- அவை 1985 இல் நாட்டின் மின்சார உற்பத்தியின் 30 வீதத்தை வழங்கும் நோக்கில் திட்டமிடப் பட்டிருந்தன.
- ஜப்பானில் கனிய எண்ணெய்ப் படிவுகள் மிகவும் குறைவாகும்.
- 90 வீதத்திற்கும் அதிக தொகை மூலப்பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நேர்ந்தமை.

## ஜப்பானின் கைத்தொழில் வெற்றியளித்தமைக்கான காரணிகள்

- ஜப்பானிய தொழிலாளர்களின் ஆழ்ந்த ஈடுபாடும் ஒழுக்கப் பண்பும்.
- ஊழிய உற்பத்தித் திறனின் வளர்ச்சி
- நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்துதல்.
- பயிற்றப்பட்ட தொழிலாளர்களையும் தொழினுட்ப நிபுணர்களையும் தோற்றுவிக்கும் நோக்குடன் கல்விமுறை மறுசீரமைக்கப்பட்டமை.
- தொழினுட்பத் துறையில் புதிய கண்டுபிடிப்புகளுக்கான அதீத நாட்டத்தைக் கொண்டிருத்தல்.
- போக்குவரத்துச் சேவையினைத் துரிதப்படுத்தல்.
- உலகம் முழுவதிலும் வர்த்தக கண்காட்சிக் கூடங்களை அமைத்தல்.

## ஜப்பானின் புகழ்பெற்ற கைத்தொழில்கள்

- 1956 இலிருந்து கப்பல்கட்டும் நாடானமை.
- 1960 ஆம் ஆண்டுகளில் துருப்பிடிக்காத எஃகு உற்பத்தியில் உலகின் மூன்றாம் இடத்தைப் பெற்றது.
- 1960 ஆம் ஆண்டுகளில் நோகஇதோ எனும் அதிவேக புகையிரத எஞ்சின்களை உற்பத்தி செய்து ஆர்ஜன்டீனா, ரஷ்யா, சவூதிஅரேபியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தமை.
- 1966 ஆம் ஆண்டில் மோட்டார் வண்டிகளை உற்பத்தி செய்யும் உலகின் இரண்டாவது நாடானமை.
- 1970 ஆம் ஆண்டில் ஜப்பான் உற்பத்தி செய்த தொலைக்காட்சி, வானொலி, குளிரூட்டிகள், புகைப்படப் பொருட்கள், நுண்ணள வீட்டுக் கருவிகள், தொலைத் தொடர்பு சாதனங்கள், கணினி என்பவற்றை எந்தவொரு நாட்டிலும் காணக்கூடியதாயிருந்தமை.

## சமூகநிலை

- கைத்தொழில் துறையில் நாட்டம் கொண்டமையால் பெரும்பாலானோர் நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்தனர். இதனால் 1960 களில் ஜப்பான் நகரங்களைப் பெருமளவில் கொண்ட நாடுகளில் ஒன்றானமை.
- வீடுகளுக்கு நவீன உபகரணங்கள் பாவனைக்கு வந்தமையால் வீட்டுவேலைகள் குறைந்து ஜப்பானியப் பெண்கள் சுதந்திரத்தை அனுபவிக்கத் தொடங்கினர்.
- ஜப்பானியப் பெண்கள் உற்பத்தித் துறையில் ஈடுபடத் தொடங்கினர்.
- வறுமைச் சட்டம், குழந்தை நலச்சட்டம், தொழிலில் ஈடுபட்டுள்ளோரின் காப்புறுதிச் சட்டம், பொதுமக்களின் சுகாதாரக் காப்புறுதிச் சட்டம், நலனோம்பல், ஓய்வுநிலைக் காப்புறுதி, தாய்-சேய் நலக்காப்புறுதி, வயோதிபர்களின் நலனோம்புச் சட்டம் போன்ற பல சட்டதிட்டங்களும் 1950 ஆம் பதிற்றுகளில் அறிமுகப்படுத்தப்பட்டன.

### சீனாவின் எழுச்சி

- 20 ஆம் நூற்றாண்டில் சீனாவின் எழுச்சியைக் கீழ்வரும் இரண்டு காலகட்டங்களினூடாகக் கலந்துரையாட முடியும்.
    மக்கள் சீனக் கூட்டாட்சி உருவாக்கப்படுவதற்கு முன்னரான காலம்
    மக்கள் சீனக் கூட்டாட்சி உருவாக்கப்பட்ட் பின்னரான நிகழ்காலம்

### மக்கள் சீனக் கூட்டாட்சி உருவாக்கப்படுவதற்கு முன்னரான காலம்

- சீனாவின் கடைசி அரச வம்சம் சிங் ஆகும்.
- ஏகாதிபத்தியவாதிகளின் அச்சுறுத்தலாலும் உள்வாரியாக ஏற்பட்ட பலவீனர்களாலும் சிங் (மஞ்சு) அரசவம்சம் 1840 இன் பின்னர் வீழ்ச்சியுற்றது.

### யுவான் ஷி காயியின் குடியாட்சி நிர்வாகம்

- சிங் வம்ச ஆட்சி முடிவுற்றதன் பின்னர் நாட்டின் அரசியல் ஐக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக சுன் யாத் சென்னின் உதவியால் சீனக் குடியரசின் முதலாவது ஜனாதிபதியாக பலம்வாய்ந்த சீனப் பிரபுத்துவ வம்சத்தைச் சேர்ந்த யுவான் ஷி காயியைத் தெரிவு செய்து கொண்டனர்.
- 1913 ஆம் ஆண்டாகும்போது குடியரசின் சகல அதிகாரங்களையும் தமது கைவசப்படுத்திக் கொண்டு சர்வாதிகாரிபோல செயற்படத் தொடங்கினார்.
- இவ்வாறு யுவான் ஷி காயி 1911 இன் புரட்சியின் எதிர்பார்ப்புகளைக் காட்டிக்கொடுப்பதைக் கண்ட முற்போக்கான தேசாபிமானிகள் சுன்யாத் சென் அவர்களின் தலைமையில் 1913 இல் கிளர்ச்சி ஒன்றை ஏற்படுத்தினர்.
- கிளர்ச்சி தோல்வியுறல் சுன்யாத் சென் ஜப்பானுக்கு தப்பியோடல்
  இதனிடையே சீனா, நட்பு நாடுகளுடன் சேர்ந்து முதலாவது உலக மகாயுத்தத்தில் ஈடுபட்டது.
- இதற்கு சீன மக்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தபோதிலும் இறுதியில் ஜனாதிபதி யுவான் ஷி காயி கோரிக்கைகள் பலவற்றிற்கும் இணக்கத்தைத் தெரிவித்தார்.
- 1916 ஜூன் 6 ஆம் திகதி யுவான் ஷி காயி காலமானமை.
- அப்போது அரசாங்கம் என்று குறிப்பிடத்தக்க நிர்வாக அமைப்பொன்றும் காணப்படவில்லை. இதனால் நாடு பிளவுற்ற நிலையில் காணப்பட்டது.

### டாக்டர் சுன்யாத் சென்

- 1912 கோமிங்டான் தேசிய கட்சியை ஆரம்பித்தார்.
- அவர் முதலாவது உலக மகாயுத்தத்தின் பின்னர் மீளவும் சீனாவுக்கு வந்தார்.
- 1917 ரஷ்யப் புரட்சியின் பின்னர் அவருக்கு அந்நாட்டின் உதவி கிடைக்கப் பெற்றமை.
- ரஷ்ய ஆலோசகர்கள் சுன் யாத் சென்னுக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் தலைமைத்துவத்தை அடைந்து கொள்வது தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கியமை.
- 1925 ஆம் ஆண்டாகும்போது சிறியதாக இருந்தாலும் சுன் யாத் சென்னின் தலைமையில் கென்டன் பலம்வாய்ந்த அரசானமை.
- எனினும் வல்லரசுகள் கென்டன் அரசை சட்டரீதியான அரசாக அங்கீகரிக்கவில்லை.
- எப்போதும் பீகிங் அரசை வீழ்த்துவதற்கு சுன் யாத் சென்னுக்குத் தொடர்ந்தும் ஆதரவளித்து வந்த சோவியத் ரஷ்யாவும் சீனாவின் உத்தியோகபூர்வ அரசாக பீகிங்கையே ஏற்றிருந்தனர்.

## சீன தேசிய அரசு

- சீனாவின் நான் கிங் நகரத்தைத் தலைநகராகக் கொண்டு 1928 இலிருந்து 1937 வரை சீனரில் செயற்பட்ட இவ்வாட்சி சீன தேசிய காங்கிரஸ் (குவாமிங்டான்) கட்சியின் தனியான அதிகாரத்தில் செயற்பட்டு வந்தது.
- தமது திட்டம் நிறைவடைவதற்குள் 1925 இல் சுன் யாத் சென் காலமானார்.
- சியங் காய் ஷெக் (1888 - 1975) தலைமைப் பதவியை ஏற்றார்.
- அவர் சுன் யாத் சென்னின் ஆட்சியில் இராணுவத்தின் பிரதான ஆணையிடும் அலுவலராகப் பணியாற்றி வந்தார். மொஸ்கோவிலும் பயிற்சி பெற்றிருந்த அவர், அரசியல் அறிவும் நிரம்பப் பெற்றவராவார். தலைவர்களுக்கு சவால் விடும் அளவுக்குப் பலமடைந்திருந்தமை.
- 1926 இல் சியங் கை ஷெக் 50,000 பேர் கொண்ட இராணுவத்துடன் மூன்று பாதைகளின் வழியே வடக்கின் மீது தாக்குதலை ஆரம்பித்தமை.
- குறுகிய காலத்தில் சியங் கை ஷெக் வெற்றியீட்டல்.
- 1927 இல் நான் கிங் நகரத்தைக் கைப்பற்றிய சியங் கை ஷெக், கம்யூனிஸ்டுகளுக்கு எதிரான சதி ஒன்றை மேற்கொண்டமை.
- இதில் பெருமளவில் உயிர் சேதம் ஏற்பட்டன.
- இதனிடையே 1928 ஒக்டோபர் மாதத்தில் பெய் ஜிங் (பீகிங்) நகரத்தை சியங் கை ஷெக் கைப்பற்றிக் கொண்டார்.
- அவர் நான் கிங் நகரை மையமாகக் கொண்டு, சீன தேசிய அரசைப் பிரகடனம் செய்தார்.
- 1928 நவம்பர் மாதத்தில் ஐக்கிய அமெரிக்கா, சீன தேசிய அரசைச் சட்டபூர்வ அரசாங்கமாக அங்கீகரித்தது.
- டிசம்பர் மாதம் பிரான்சும் பிரித்தானியாவும் அங்கீகரித்தன.

## சியங் கை ஷெக்கின் கம்யூனிச விரோத செயற்பாடு

- சியங் கை ஷெக்கின் தலைமையில் செயற்பட்ட தேசியக் கட்சியின் கம்யூனிச விரோத செயற்பாட்டை பொறுத்துக்கொள்ள முடியாத அக்கட்சி, 1927 ஆகஸ்ட் 1 ஆந்திகதி ஆயுத போராட்டம் ஒன்றை மேற்கொண்டது.
- '1927 - புரட்சி' எனப்பட்ட இதற்கு சோவியத் நாட்டின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றது.
- மிகவும் குறுகிய காலத்தில் இக்கிளர்ச்சியை அடக்கிவிடுவதற்கு தேசியக் கட்சியின் அரசாங்கத்தால் இயலுமாயிருந்தது.
- புரட்சி தோல்வியுற்றதன் பின்னர், சியங் கை ஷெக் நான்கின் அரசுக்கு எதிராக, கியங்சி பிரதேசத்தில் சோவியத் முறையிலான பதில் அரசாங்கம் ஒன்றைக் கம்யூனிஸ்டுகள் அமைத்துக் கொண்டனர்.
- விவசாயிகளை இணைத்து 'செம்படை' எனும் இராணுவத்தை மாஓ சே. துங் கட்டியெழுப்பினார்.

## நீண்ட பாத யாத்திரை

- மாஓ சே துங் தலைமையில் கியாங்சி பிரதேசத்தில் அமைத்துக்கொள்ளப்பட்ட பொது உடைமை அரசை ஒழித்துக்கட்டுவதற்கு சியங் கை ஷெக் 1930 ஆம் ஆண்டிலிருந்து தொடர் தாக்குதல்களை மேற்கொண்டு வந்தார்.
- ஓராண்டாக இடம்பெற்ற இப்போராட்டத்தின் விளைவாக செம்படை தாங்கிக்கொள்ள முடியாத இழப்பீடுகளை சந்தித்தது.
- கியாங்சி பிரதேசத்தின் ஆட்சியைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியாது என்பதை விளங்கிக்கொண்ட மா ஓ சே தூங்கும் அவரது சகாக்களும் அப்பிரதேசத்தைத் துறந்து அதைவிடப் பலம் வாய்ந்த இடமான வடக்கு சீனாவில் உள்ள சான்-ஷீ பிரதேசத்தில் யோனானுக்குப் பின் வாங்குவதற்கு முடிவு செய்தனர்.

- 1934 ஒக்டோபார் மாதம் தொடங்கிய இப்பயணம் கம்யூனிஸ்டுகளின் வரலாற்றில் 'பெரும் பயணம்' அல்லது 'நீண்ட பாத யாத்திரை' (Long March) எனக் குறிப்பிடப்படுகிறது.
- செம்படையின் இப்பாத யாத்திரை உண்மையிலேயே கம்பயூனிஸ்டுகள் அடையப்பெற்ற மாபெரும் வெற்றியாகும்.
    - கம்யூனிஸ்ட் கட்சிக்கு சீனாவின் புரட்சிக்குப் பெரும் பங்களிப்பை வழங்க முடியும் என சீன மக்கள் விளங்கிக் கொண்டமை.
- இப்பாத யாத்திரையால், மா ஓ சே துங் சீனக் கம்யூனிஸக் கட்சியின் தன்னிகரில்லாத் தலைவனானமை.
- 1931 இலிருந்து எழுச்சியுற்றுவந்த ஜப்பானியப் பேரரசு, சீனாவை முற்றாகத் தமது ஆதிக்கத்திற் குட்படுத்திக் கொள்ள முயற்சித்தமை.
- 1937 ஜூலை 7 ஆந் திகதி, ஜப்பான் சீனாவை முழுமையாக ஆக்கிரமித்துக் கொள்ளும் நோக்குடன் பீகிங் நகருக்கு அருகிலுள்ள மார்கோ-போலோ பாலம் அமைந்திருக்கும் இடத்திலிருந்து பெருந் தாக்குதில் ஒன்றை மேற்கொண்டமை.
- 1937 இல் இடம்பெற்ற இவ்வாக்கிரமிப்பால் கேவாமிங்டான்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் ஒன்றுபட்டு ஜப்பானுக்கு எதிராக ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்துக்கொள்ள சந்தர்ப்பம் கிட்டினாலும் அது நீண்ட காலத்திற்கு நிலைக்காமல் போனது.
- இரண்டாவது உலகப் போரின் முடிவில் அந்த ஐக்கியம் முற்றாக மறைந்தது.
- சீனாவின் பெருவாரியான நகரங்களைக் கைப்பற்றிக்கொள்வதில் சியாங்-கை-ஷெக் வெற்றி பெற்றார்.
- நாட்டின் உட்பகுதியிலிருந்த கிராமப் பிரதேசங்களில் பெருவாரியானவை கம்யூனிஸ்டுகளின் கட்டுப்பாட்டினுள் வந்தன.
- ஜப்பானியரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்கள், இரு சாராரினதும் இராணுவ சக்தியை மேம்படுத்தின.







மா ஓ சேதுங் (https://www.bing.com)

சியங் கை ஷெக் (http://totalwar-ar.wikia.com)

கலாநிதி சுன் யாத் சென் (https://www.bing.com)

**சீனப் புரட்சி - 1949**

- இரண்டாவது உலகப் போரின் இறுதியில் உலகின் பெரும்பாலான நாடுகளில் சமாதானம் ஏற்பட்டாலும் சீனாவின் நிலையோ இதற்கு முற்றிலும் மாறுபட்டிருந்தது.
- தேசியவாதிகளும் கம்யூனிஸவாதிகளும் நான்காண்டுகளாக (1945-1949) மோதிக் கொண்டனர்.
- மா ஓ சேதுங்கின் தலைமையில் செயற்பட்ட கம்யூனிஸ்டுகளுக்கு சோவியத் ரஷ்யாவின் ஆயுத, பொருளாதார உதவிகள் கிட்டின. சியாங்-கை-ஷெக்கின் தலைமையில் செயற்பட்ட தேசியவாதிகளுக்கு ஐக்கிய அமெரிக்காவின் உதவி ஒத்தாசைகள் கிட்டின.
- இந்த உள்நாட்டு யுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் சியங் கை ஷெக், தமது இராணுவ பலத்தைப் பயன்படுத்திக் கம்யூனிஸ்டுகளைத் தோல்வியுறச் செய்தார்.
- 1947 ஆம் ஆண்டின் பிற்பாதியிலிருந்து மீளவும் தம்மைக் கட்டமைத்துக் கொண்ட கொம்யூனிஸ்டுகள் கோமிங் டானியர்களுக்கு எதிராகத் தகுதல்களை ஆரம்பித்தனர்.

- 1949 ஆகஸ்ட் மாதத்தில் தேசியவாதிகளின் தலைமையகமான நான் கின் நகரையும் கம்யூனிஸ்டுகள் கைப்பற்றிக் கொண்டனர்.
- இம்முரண்பாடுகளின் இறுதி விளைவானது மா ஓ சேதுங் தலைமையிலான கம்யூனிஸ்டுகள் வெற்றிபெற்றமையாகும்.
- 1949 அக்டோபர் 1 ஆந் திகதி சீன மக்கள் குடியரசு தோற்றுவிக்கப்பட்டதுடன் அதன் தலைநகரம் பீகிங் (பீஜிங்) என்றும் பிரகடனப்படுத்தப்பட்டது.
- சியங் கை ஷெக் தமது சகாக்களுடன் தாய்வானுக்குத் தப்பி ஓடி (1949 டிசம்பர்) ஐக்கிய அமெரிக்காவின் உதவியுடன் அங்கு அரசொன்றை (தேசிய சீனா) உருவாக்கிக் கொண்டார்.



*மா ஓ சேதுங்*

*(source: https://www.bing.com/images)*

**மக்கள் சீனக் குடியரசு அமைத்துக்கொள்ளப்பட்ட பின்னரான காலகட்டம்**

- சீன மக்கள் குடியரசு தோற்றுவிக்கப்பட்ட பின்னர் அரசியல், பொருளியல், கலாசார மறுசீரமைப்புகள் பலவும் மேற்கொள்ளப்பட்டன.
- அரசின் அதிகாரத்திற்கு ஆட்படாதவர்கள் தொடர்பாக தண்டனை வழங்கக்கூடிய சட்டதிட்டங்கள் பலவும் பிறப்பிக்கப்பட்டன.
- சுன் யாத் சென்னை மதித்த, கம்யூனிஸ்டுகள் அவரது மனைவியை சீனப் பொதுவுடைமை அரசாங்கத்தின் உப தலைவியாக்கினர்.
- நிலச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டமை.
- 1950 நிலச் சீர்திருத்தச் சட்டம் இந்நோக்கத்திற்காகப் பிறப்பிக்கப்பட்டதாகும். இதனை எதிர்த்த நிலச் சுவாந்தர்களைக் கொன்ற சம்பவங்களும் இடம்பெற்றன.
- 1950 பெப்ரவரி 14 ஆம் திகதி கையொப்பமிடப்பட்ட சீன- சோவியத் ஒப்பந்தத்தால் இரு நாட்டு உறவுகளும் பலமுற்றன.
- 1954 இல் சீனாவின் புதிய அரசியல் யாப்புப் பிரகடனப்படுத்தப்பட்டது. அது சோவியத் ரஷ்யாவின் யாப்பை ஒத்ததாயிருந்தது.
- 1953 - 1957 வரை முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் செயற்படுத்தப்பட்டன.
- இத்திட்டத்தின் முக்கிய நடவடிக்கையாக அமைந்தது, கூட்டுறவு விவசாயப் பண்ணைகளைத் தோற்றுவித்தமையாகும்.
- 1957 இன் இறுதிப் பகுதியில் சோவியத் ரஷ்யா, சீனாவுக்கு அணுவாயுத தொழினுட்பத்தையும் பெற்றுக் கொடுத்தது.

### முன்னோக்கிய பெரும் பாய்ச்சல்

- 1957 இல் சீன சமூகத்தில் பெரும் மாற்றத்தைத் தோற்றுவிப்பதற்காக முன்னோக்கிய பெரும் பாய்ச்சல் (Great Leao Forward) எனும் வேலைத்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.
- குறிப்பாக இயற்கை அனர்த்தங்கள் காரணமாக முன்னோகிய பெரும் பாய்ச்சல் தோல்வியுற்றது.
- மா ஓ சேதுங்கின் 1959 இல் தலைவர் பதவியைக் கைவிடல்.
- 1959 இல் திபெத் நாட்டை சீனா கைப்பற்றிக் கொண்டது.

### கலாசாரப் புரட்சி

- நவீன சீன வரலாற்றில் மாபெரும் குழப்பகரமான சூழலை உருவாக்கிய கலாசாரப் புரட்சி எனக் குறிப்பிடப்படும் சம்பவம் 1966-76 காலகட்டத்தில் முன்னணிக்கு வந்தது.
- கம்யூனிஸ்ட் விரோதிகள் தமது செயற்பாடுககளை முன்னெடுக்க விடாத முறையில் புரட்சிச் செயற்பாடுகளுக்கு உந்துதல் அளித்து, அதனைக் காப்பாற்றிக் கொள்வது நோக்கமாகும்.
- சீன, செம்படையும் மா-ஓ-சேதுங்க்கு ஆதரவானவர்களும் இதன் தலைமையை ஏற்று செயற்படுத்தியமை.
- கலாசாரப் புரட்சி ஆரம்பமானதுடன் பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் அரச உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டனர். மற்றுஞ் சிலரை பதவி இறக்கம் செய்தனர். இதற்கு கம்யூனிஸ்டுகள் கூறிய காரணங்கள், மறுசீரமைப்பு, கட்சிக்கு எதிரான செயற்பாடுகள், முதலாளித்துப் போக்கில் செயற்படல் போன்றவையாகும்.
- இவற்றிற்கும் மேலாக, முதலாளித்தவப் போக்கினர் எனக்கண்டறியப்பட்ட அறிவாளிகளை விமர்சனத்துக்குள்ளாக்கும் அமைப்பு ரீதியான அறிவார்ந்த தாக்குதலை மேற்கொள்வதாகும்.
- கலாசாரப் புரட்சிக்குக் கடுங் கண்டனம் எழுந்தபோது மா-ஓ வாலிபர்கள் பக்கம் திரும்பினார். ''புரட்சியைக் கற்றுக் கொள்ளுங்கள்; புரட்சி செய்வதன் மூலம் அதனைக் கற்றுக் கொள்ளுங்கள்.'' என்று அவர்களுக்குக் கூறினர்.
- இப்புரட்சியினால் உயர்கல்வி நிலையங்களும் பல்கலைக்கழகங்களும் மூடப்பட்டன.
- நாட்டினுள் பொருளாதார, சமூக கொந்தளிப்பொன்று உருவானது. முக்கியமான தொழிற்சாலை களில் வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. போக்குவரத்துக்கள் பெரும் சிக்கலுற்றன.
- சீனா இராஜதந்திரத் தொடர்புகளிலிருந்து தனிமைப்படுத்தப்பட்டது. கம்யூனிஸ நாடுகள் கூட சீனாவுடன் இராஜதந்திரத் தொடர்புகளை வைத்திருக்கவில்லை.
- எவ்வாறாயினும் நான்காண்டுகளின் பின்னர் மா-ஓ தமது எதிரிகளை அடக்கி ஒடுக்கிய பின்னர் நாட்டை அமைதியான நிலைக்கு மீட்டுக் கொள்ள அவரால் இயலுமாயிருந்தது.
- கலாசாரப் புரட்சியின் பிரதான ஆலோசகரான லின்-பியா-ஓ, மா-ஓவை அடுத்தக் கட்சியின் தலைவராகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தாலும் இறுதியில் கலாசாரப் புரட்சியின் குற்றவாளி யானார். பின்னர், ரஷ்யாவுக்குத் தப்பிச் செல்கையில் அவர் பிரயாணம் செய்த விமானம் விபத்துக்குள்ளாகி மரணமானார்.

### கலாசாரப் புரட்சியின் விளைவு

- பல நூற்றாண்டுகளாக நிலையாக இருந்த சீன சமூகம், கலாசாரப் புரட்சியின் பின்னர் மாற்ற முற்றது.
  - துரிதமாகப் பெருகிவந்த குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன.
  - விவசாய, கைத்தொழில் துறைகளில் வேகமான அபிவிருத்தி ஏற்பட்டது.
  - மக்களின் வாழ்க்கைத் தரமும் உயர்வடைந்தது.

- ஆண்-பெண் சமத்துவம் ஏற்பட்டது.
- நவீன உலகத்திற்குப் பொருத்தமான விதத்தில் கல்வித் துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன.
- தேசியப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டதோடு, உலகின் ஏனைய நாடுகளுடன் வர்த்தகத் தொடர்புகளையும் ஏனைய தொடர்புகளையும் உருவாக்கிக் கொண்டது.
- 1972 இல் ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதி றிச்சர் எம். நிக்சன், சீன விஜயத்தின்போது கையெழுத்திட்ட ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் மூலம் சீனாவுக்கு மேற்கத்திய நாடுகளுடனான தொடர்புகளுக்கு வழி பிறந்தது.
- சீன அரிச்சுவடி மிகவும் விரிவானபடியால், இலகுவாகக் கையாளக்கூடிய விதமாக அது மாற்றியமைத்துக்கொள்ளப்பட்டது.
- 1971 இல் மக்கள் சீனாவுக்கு ஐக்கிய நாடுகள் சபையில் அங்கத்துவம் வழங்கப்பட்டு, பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடு என்ற அந்தஸ்து அதற்குக் கிடைத்தது. (இதற்கு முன்னர் தேசிய சீனாவே இவ்விடத்தை வகித்துவந்தது.
- டென் சியாவோ பிங் அவர்களின் தலைமையில் தனியார்துறை முயற்சியாளர்களுக்கும் இடமளிக்கப்பட்டமையால் சீனா உலகத்திற்குத் திறந்துவிடப்பட்டது.
- அனைத்துத் துறைகளிலும் அபிவிருத்தியுற்ற சீனா இன்றைய உலகின் வல்லரசு என்ற அந்தஸ்தை அடையப் பெற்றுள்ளது.
- 2008 ஆம் ஆண்டில் பெய் ஜிங்கில் ஒலிம்பிக் போட்டியை நடாத்தி, தாம் அடையப் பெற்றுள்ள பொருளாதார தொழினுட்ப முன்னேற்றத்தை அதனூடாகக் காட்சிப்படுத்தியது.

## மதிப்பீடு

**கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று பொருத்தமற்றதாயுள்ளது. அதனைத் தெரிவு செய்து உரிய இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.**

01. 1. பீகிங் 2. நான்கின் 3. யோனான் 4. ஜென்டன் 5. ஈமோ (...........)

02. 1. சௌ என் லாய் 2. முட்சுஹாதோ 3. யோஷிஹிதோ 4. ஹிரோ ஹிதோ 5. அகிஹிதோ (...........)

**3 ஆம் வினா X, Y நிரல்களில் தரப்பட்டுள்ள பெயர்கள் ஏதாவதொருவிதத்தில் ஒழுங்கு முறையில்லை. X நிரலுடன் Y நிரல் பொருந்தும் வண்ணம் மாற்றியமைக்கப்பட்டால் பெறப்படும் விடையின் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் இடுக.**

03.

| X | | Y |
|---|---|---|
| 1. போமோஸா | A | டோக்கியோ |
| 2. ஈடோ | B | பெய்ஜிங் |
| 3. பீகிங் | C | தாய்வான் |
| 4. குவன் டிரோவ் | D | கென்டன் |
| 5. நிபொன் | E | ஜப்பான் |

1. CABDE 2. CEBDA 3. CABED 4. CAEDB 5. ACBDE (...........)

04. மேஜி அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் இடுக.
1. டயட் எனப்பட்ட இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம் அமைக்கப்பட்டமை.
2. நிதி தொடர்பான குறிப்பிடத்தக்க அதிகாரம் பாராளுமன்றத்திற்கிருந்தது.
3. அடிப்படை உரிமைகள் தொடர்பான விதிகள் யாப்பில் சேர்க்கப்பட்டுள்ளமை.
4. நில உடைமையாளருக்கு மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டிருந்தது.
5. பேரரசின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தது.
(...........)

05. சீனக் கம்யூனிஸக் கட்சி தொடர்பான பொருத்தமற்ற விடையைத் தெரிவு செய்க.
1. 1921 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
2. மா ஓ சேதுங்கின் தலைமையில் சீன பொதுஉடைமை ஆட்சி 1948 இல் ஸ்தாபிக்கப்பட்டது.
3. 1934 இல் நீண்ட பாத யாத்திரை மேற்கொள்ளப்பட்டது.
4. கோமிங்டான்களுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் ஓயாச் சண்டை ஏற்பட்டது.
5. விவசாயிகள் பேராதரவை வழங்கினர். (...........)

## பகுதி 2

**• பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

06. ‘‘மேஜி சீர்திருத்தம் நவீன ஜப்பானிய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்.’’

(i) மேஜி சீர்திருத்தம் என்றால் என்னவென்று தெளிவாகக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

(ii) மேஜி சீர்திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தை விளக்குக.

(04 புள்ளிகள்)

(iii) மேஜி சீர்திருத்தத்தின் கீழ் ஜப்பான் வல்லரசொன்றாக எழுச்சியுற்ற விதத்தை ஆராய்க.

(08 புள்ளிகள்)

07. டாக்டர் சுன் யாத் சென் சீனப் புரட்சியின் தந்தையாகக் கருதப்படுவது எவ்வளவு தூரத்திற்குப் பொருத்தமானது என்பதை விமர்சன ரீதியாக விளக்குக.

(14 புள்ளிகள்)

08. உலகப் புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள நாடுகளையும் அல்லது இடங்களையும் குறித்துக்காட்டி, அவற்றுள் இரண்டிற்கு விளக்கக்குறிப்பு எழுதுக.

| | | |
|---|---|---|
| 1. ஹிரோஷிமா | 2. நாகஷாகி | 3. டோக்கியோ |
| 4. தாய்வான் | 5. கென்டன் | 6. பேர்ள் துறைமுகம் |
| 7. கொரியக் குடாநாடு | 8. ஹொக்கைடோ தீவு | |

(சரியான விடை ஒவ்வொன்றுக்கும் 1 புள்ளி வீதமும் விளக்கத்திற்கு 10 புள்ளிகளும்)